# The
# Indian Pilgrims'

—o—

# இந்திய ஸ்தல யாத்திரை மான்மியம்.

—o—

391

BY

**T. B. DAS ROW, B. A.,**

Tahsildar, Tanjore Dt.

—o—

## PART I.

---

தஞ்சாவூர் ஜில்லா, தாசில்தார்,

T. B. தாஸ் ராவ், B. A.,

இயற்றியது

—o—

முதற்பாகம்.

---

Printed by

**The Bharati Press, Mannargudi.**

---

**Price Rs. 1—4—0]** **1931** [விலை ரூ 1—4—0.

**(All Rights Reserved.)**



Dr. M. C. Nanjunda Row,
B. A; M. B. & C. M., F. C. S.
MYLAPORE.

To

**The revered memory of the late**

**Dr. M. C. NANJUNDA ROW,**

**(B.A., M.B. & C.M. F.C.S.)**

First Assistant Chemical Examiner to the Govt. of Madras and one of the most distinguished physicians in India; a master of the Allopathic the Ayurvedic and the Unani systems of medicine, a devoted disciple of the Great Rishi Swami Vivekananda, an ardent lover of music, painting, sculpture and other fine arts, a great philanthropist and an eminent scholar in many of the Indian languages,

This work is respectfully dedicated as a humble token of gratitude for all the help and encouragement the author received from him.

---

## படத்தில் காணப்படுகிற இலக்கங்களின் விபரம்.

1. இராமேஸ்வரம்
2. இராமநாதபுரம்
3. திருப்புல்லாணி
4. திருப்பூவணம்
5. மதுரை
6. விருதுநகர்
7. கோவிற்பட்டி
8. ஸ்ரீவில்லிபுத்தூர்
9. சங்கரநயினார்கோவில்
10. மணியாச்சி
11 தூத்துக்குடி
12. திருநெல்வேலி
13. ஆழ்வார்திருநகரி
14. திருச்செந்தூர்
15. அம்பாசமுத்திரம்
16. திருப்பாவநாசம்
17. தென்காசி
18. திருக்குற்றாலம்
19. நாங்கூனேரி
20. திருக்குறுங்குடி
21. கன்னியாகுமரி
22. சுசீந்திரம
23. திருவனந்தபுரம்
24. ஜனார்த்தனம்
25 கொல்லம்
26. ஆலப்புழை
27. வைக்கம்
28. எர்ணாகுளம்
29. காலடி
30. திருச்சூர்
31. குருவாயூர்
32. கள்ளிக்கோட்டை
33. தலைச்சேரி
34. கண்ணனூர்
35. மங்களூர்
36. உடுப்பி
37. கோகர்ணம்
38. அன்கோலா
39. ஹூப்ளி
40. தூத்சாகர் (Dudsagar)
41. மார்மகோவா
42. கோக்காக்
43. கோலாப்பூர்
44. ஸாத்தாராரோட்
45. ஸாத்தாரா
46. ஸஜ்ஜன்கட்
47. வத்தார்
48. பாஞ்ச்கனி
49. மஹாபலேஸ்வரம்
50. ஜெஜூரி
51. பூனாபட்டினம்
52. பண்டரீபுரம்.


BOMBAY
DHOND
LATUR
KURDVADI
G.I.P.RY.
MIRAJ
RAICHUR
M&S
LONDA
GUNTAKKAL
M&S.M.RY.
ARABIAN SEA
BAY OF BENGAL
ARKONAM
MADRAS
S.I.RY.
ERODE
SHORANUR
PALNI
TANJORE

# விஷய சூசிகை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | சாற்றுக்கவிகள் | (1)—(2) |
| 2. | முன்னுரை | (3)—(4) |
| 3. | முகவுரை | (5)-(10) |
| 4. | பிழை திருத்தம் | (11)-(13) |
| 5. | முதலாவது அத்தியாயம்:—இராமேஸ்வரம் முதல் மதுரை வரை | 1—17 |
| 6. | இரண்டாவது அத்தியாயம்:—மதுரை முதல் திருநெல்வேலி வரை | 18—35 |
| 7. | மூன்ருவது அத்தியாயம்:—திருநெல்வேலி முதல் திருவனந்தபுரம் வரை | 35—55 |
| 8. | நான்காவது அத்தியாயம்:—திருவனந்தபுரம் முதல் திருச்சூர் வரை | 55—75 |
| 9. | ஐந்தாவது அத்தியாயம்:—திருச்சூர் முதல் உடுப்பி வரை | 75—95 |
| 10. | ஆருவது அத்தியாயம்:—உடுப்பி முதல் கோகர்ணம் வரை | 95—121 |
| 11. | ஏழாவது அத்தியாயம்:—கோகர்ணம் முதல் கோலாப்பூர் வரை | 121—149 |
| 12. | எட்டாவது அத்தியாயம்:—கோலாப்பூர் முதல் ஸாத்தாரா வரை | 150—182 |
| 13. | ஒன்பதாவது அத்தியாயம்:—ஸாத்தாரா முதல் பண்டரிபுரம் வரை | 183—203 |
| 14. | பத்தாவது அத்தியாயம்:—பண்டரிபுர வருணனை | 203—246 |
| 15. | ஸ்தல விவர அட்டவணை | i—vii |

உ

# சாற்றுக்கவிகள்.

## சிறப்புப் பாயிரம்.

மன்னார்குடித் தமிழ்ப்புலவர் நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்
இயற்றியது.

### ஆசிரிய விருத்தம்.

தார்கொண்ட கொன்றையணி சடிலத்தோன் சீகாழித் தலத்திற் பூசை
நீர்கொண்ட கங்கையினால் முடியாத குறையதனை நிரப்ப நீண்ட
பேர்கொண்ட குறுமுனிவன் கரகநீர் ஐங்கரனால் பெருகி வந்து
ஏர்கொண்ட தாய்முலையின் உலகூட்டும் காவிரியென் றிசைக்கும் ஆறே. (1)

திருவுடைய மார்புடையான் தென்னரங்கம் கண்வளரத் தேசார் மோலி
மருவுடைய மாலையென வளைந்துபுயல் மாறினும்நீர் மாறா தெங்கள்
கருவுடைய வந்தருள்சுந் தரன்கவியால் அன்றிநிலை காணா தேகி
உருவுடைய பெரும்பதங்கள் எலும்பின்றிப் படிந்தாருக் குதவு மாறே. (2)

உரைமேவும் அந்நதியின் வளங்கொண்ட திருநாடு உயர்சோ ணாடு
பரைமேவும் பங்கனும்பாற் கடலானும் நெடுவேளும் பரிந்து வைகும்
நிரைமேவும் தலங்கள்ஒரு கூப்பீட்டின் எல்லைக்குள் நிலைகொள் நாடு
விரைமேவும் மலர்க்குழலப் புவிமங்கை தனதுமிளிர் முகமே போலும். (3)

வஞ்சியவள் முகதிலகம் போலுமொரு வரைவிழித்த வாயில் நான்கும்
கஞ்சமலர் அகழிசூழ் கடிமதிலும் கழைமலர்ந்த கான்யா றென்ன
விஞ்சியகன் கொடிமாட நெடுக்தெருவும் மெய்யன்பும் மேவு நல்லூர்
தஞ்சமென அடைந்தாரைப் புறம்போக விடாதநகர் தஞ்சா வூரே. (4)

ஒப்பரிய அந்நகரில் வீற்றிருந்தே அறம்வளர ஒருகோ லோச்சி
வைப்பரிய வேலேந்தும் சிவாசி மன்னர்குலம் வயங்க வந்தோன்
செப்பரிய குணக்குன்றம் தெய்வத்தை மறவாத சிந்தை வாய்ந்தோன்
தப்பரிய சொல்லுடையோன் பாப்புரா வெனும்பெரியோன் தவத்தாற்
பெற்றோன். (5)

பாலேந்தும் தமிழ்ப்பரவை நிலைகண்டோன் வடமொழிகள் பலவும் தேர்ந்தோன்
கோலேந்தும் அரசர்மொழிக் குட்டமதனையுங்கடந்தோன் கூர்மை வாய்ந்த
சேலேந்தும் விழிமடவார் இடையினுணுகிய அறிவும் சேரப் பெற்றோன்
வேலேந்தும் அரசுரிமைத் தாசில்தார் எனும்பதவி மேவப் பெற்றோன். (6)

சத்தியமும் தவறாதான் தாஸரா வெனும்பெயரான் தயையி னீங்கான்
நித்தியமும் அநித்தியமும் நெறியுணர்ந்தான் நாவலநீள் ஞாலம் தன்னில்
எத்தலமும் தீர்த்தமுஞ்சேர்ந் தெய்தினான் இறைவனருட் செல்வ வின்பம்
கைத்தலமார் நெல்லியென எல்லாரும் அதுவெய்தக் கருத்துட் கொண்டான்(7)

விருந்தின்றி உண்பாரோ மேலோரிற் புறத்தேயவ் விருந்தை வைத்து
மருந்தேனும் அருந்துவரோ வாய்த்தவவர் பெருஞ்செல்வம் மன்னுயிர்க்கே
மருந்தாகித் தப்பாத மரமன்றோ பூவலத்தின் மகிமை யாரும்
தெரிந்துய்ய யாத்திரைமான் மியமெனவோர் அருமந்த நூல்செய் தானே. (8)

சொன்னடையும் பொருட்செறிவும் அணியழகும் பொருந்திசங்கத் தொன்மை
தன்னிகரில் சேக்கிழார் கம்பர்நூல் மேற்கோளும் சான்று போக்கி [நூலும்
பன்னியவந் நூலுள்ள கதைப்பூட்டைத் திறந்துமெய்ம்மைப் பத்தி தன்னை
இன்னதெனக் காட்டுமிந்நூற் கிணையில்லை யென்றுலகம் இசைக்கும் அன்றே. (9)

---

## இராமனாதபுரம் சமஸ்தான வித்வானும்
## அண்ணாமலை சர்வ கலாசாலைத் தமிழாசிரியருமாகிய,
## திருவாளர் சர்க்கரை இராமசாமிப் புலவர் அவர்கள்
## இயற்றியது.

---

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

—(o)—

மூர்த்திதலந் தீர்த்தமுறை யாற்றொடங்கிற் சற்குரவன் முன்னேவந் தோர்
வார்த்தைசொலு மெனத்தாயு மானவர்சொற் றேந்துதிரைவாரி யாதி
தீர்த்தமெலாம் படிந்திந்து தேசதல யாத்திரையைச் சிரத்தை யோடு
பூர்த்திசெய்த பயனாலவ் வியாத்திரையின் மான்மியநூல் புகன்றான் மன்னோ.

அன்னவன்யா ரெனிற்றஞ்சை யரசர்பிரான் மரபுதித்தோ னாங்கிலத் தோ
டின்னமுத மனையதமி ழிலக்கியமுன் னாகியநூ லெல்லா மோர்ந்தோன்
மன்னுபொறை தயையின் சொல் வாய்மையுள தாசிலென மதிக்கப் பெற்றோன்
என்னுயிர்நேர் தாஸரா வெனவுலகோர் கொண்டாடு மிசைமிக் கோனே.

---

## திருவிடைமருதூர் ஆதீன உயர்தரக்கல்விச்சாலைத் தமிழாசிரியர்
## திருவாளர் பாலசுப்பிரமணியக்கவிராயர் அவர்கள்
## இயற்றியது.

---

### நேரிசை வெண்பா.

—(o)—

மூர்த்திதலந் தீர்த்தம் மூன்றுங் கண்டாடற்கும்
சீர்த்திமிகு நற்றலங்கள் சேர்தற்கும்—ஆர்த்தியொடு
மாதலத்தில் வாழ்வார் வழக்கதலந் தீங்கறிய
ஈதலது வேறுநூ லில்.

---

# முன்னுரை.

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே."

இதன் கருத்தை உணர்ந்த நம் முந்தையோர் யாத்திரை செய்வதை ஒரு முக்கிய கடமையாய்க் கொண்டிருந்தனர். பண்டைக் காலத்தில் சங்கராச்சாரியர், ஆழ்வார்கள், நாயன்மார்கள், புத்தர், இயேசுகிறிஸ்து, பட்டணத்தடிகள், தாயுமானசுவாமிகள், இராமலிங்கசுவாமிகள் ஆகிய பெரியார்கள் முதற்கொண்டு நம் மூதாதைகள் அனைவரும் யாத்திரை செய்து கருணாநிதியாகிய எம் கடவுளார் பல திருக்கோலங்களோடு ஆங்காங்கு கோயில் கொண்டெழுந்தருளி யிருககும் தலங்கள்தோறும் சென்று தூய நற் காட்சிகளையும் அருள்களையும் பெற்றனர். அத்தகையினோரது சந்ததியிற் பிறந்தவர்களானப் பெருமைகொள்ளும் நாமும் அவர்களைப் பின்பற்றுதல் அவசியமாகும்.

"இந்திய தல யாத்திரை மான்மியம்" என்னும் இந்நூலில் இந்தியாவை இராமேசுவரத்திலிருந்து தொடங்கி முறையாக (இலங்கையுட்பட) திருச்சூர், மங்களூர், பம்பாய், இமயமலையுச்சி முதலிய வழியாக வலம் வந்து அதன்கண் உள்ள புண்ணிய நதிகளிலாடியும், ஆங்காங்கு உள்ள மூர்த்திகளைச் சேவித்தும், பயன் பெறவேண்டிய முறைப்படி எழுதப்பட்டிருப்பதால், யாத்திரை செய்பவர்க்கும் மற்றோருக்கும் மிகவும் பயன்படத்தக்க தொன்றாகும். மேலும் யாத்திரை செல்லும் வழிகளில் ஆங்காங்கு தங்குமிடங்கள், பாதைகளின் தன்மைகள், அதனதன் தூரங்கள், இருப்புப்பாதை வண்டிகள், மற்றும் வண்டிகள், மோட்டார் வண்டிகள் ஆகிய இவற்றின் வசதிகள் முற்றும் இதன்கண் கூறப்பட்டுள்ளன.

நாகரிகத்தின் வாய்ப்பட்டு யாதினும் ஐயமே கொள்ளும் மக்கள் பலர் வாழும் இக்காலத்தில், இந்நூல் நம் புராதனக் கொள்கைகளின் சிறப்பைப் புதிய முறையில் எடுத்தாளுவது வாசிப்போர் மனத்தே நேரிற் சென்று தரிசித்தாற்போன்று உரு வெழுதுகின்றது. இதன் ஆசிரியர் தாம் நேரிற் சென்று ஒவ் வொன்றையும் தரிசித்தும், நீராடியும், உள்ளவாறு எழுதியிருப் பது இந்நூலை வாசிப்பார்க்கு இனிது புலனாகும். இவர் மராட்டி, இந்தி, ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் புலமைவாய்ந்தவராத லின் வடதேசத்தேயுள்ள இதுவரை தமிழில் வெளிவராத அரிய பல சரிதங்களையும், ஆங்காங்கு இந்நூல் சம்பந்தப்பட்டவரை மிக ஆராய்ந்து சேர்த்துள்ளது இதற்கோர் அரும்பெரும் அணி கலன் ஆகின்றது.

தமிழ் மக்கள் இப்புதிய நூலை வழித்துணையாய்க்கொண்டு மலர்மிசையேகினான் மாணடிசேர்ந்து நிலமிசை நீடுவாழ்வாராக.

சுவாமி பரிபூரணனந்தா,
ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
மயிலாப்பூர், சென்னை.

---

# முகவுரை.

நீராடையுடுத்த இந்நிலமகட்கோர் திலகமாயும், இதை யொத்த புண்ணியபூமி வேறிலது என்னும் தனிப்பெரும் புகழைப்பெற்றும், அகண்ட கண்டங்கள் ஐந்தினும் உள்ள பல் வித இயற்கை விநோதங்களைத் தன்னிடம் குறைவற அமையப் பெற்றும், விளங்குவதான நம் இந்தியாவை முறைப்படி வலம் வந்து அதிலுள்ள புண்ணிய தீர்த்தங்களிலாடியும், எல்லாம்வல்ல இறைவன் இக்கலியுகத்திற் பிறந்துழன் றிறக்கும் அத்திமுத லெறும்பீருன உயிரத்தனையும் எளிதில் உய்தற்பொருட்டு, காட்சிக் கெளியனுய்ப் பலவித உருவங்களோடும் பலவிதக்கோலங்களோ டும் ஆங்காங்கு கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் திவ்விய க்ஷேத்திரங்களைத் தரிசித்தும், மூர்த்திகளைச் சேவித்தும் வர வேண்டுமென்ற பேரவா நெடுநாளாக என்மனத்திற் குடிகொண்டி ருந்து வருத்திவந்தது. ஆயினும் எண்சாணுடம்பில் ஒரு சாணள வேயிருப்பினும், ஒருநாளுணவை ஒழியாமலும், இருநாளுணவை ஏலாமலும், இந்நிலவுலக மாந்தர்களைப் பேரிடும்பையிலாழ்த்தித் துன்புறுத்திவரும் சோறிடும்பையாய பாழும் வயிற்றோடு வாழுங் கடமை எனக்கும் ஏற்பட்டிருந்தமையின், அரசாங்கப் பெருங் கடலில் அணுவளவாய நீர்த்திவலைபோன்றதும், ஊதியம் அற்ப மாயினும் போதிய அவகாசமில்லாததுமான ஓர் அற்ப உத்தியோ கத்திலமர்ந்து, அதன் வேலைத் தொல்லையாற் பிணிப்புண்டு, சற் றேனும் அங்குமிங்கும் அகலமுடியாது, எனது பேரவா வீணவா வாகும்படிக் காலங்கழித்து வந்தனன்.

இறுதியில், ஈசன் திருவருளைக்கொண்டு எவ்வகையினும் என் இச்சையைப் பூர்த்திசெய்துகொள்ளவிரும்பி, 1925-ம் வரு ஷத்தில் 4 மாதகாலம் உத்தரவுபெற்று, அவ்வருஷம் பிப்ரவரிமீ 25உ தஞ்சையினின்று புறப்பட்டு பழனி, மதுரை, இராமேஸ் வரம் முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு, பரமபவித் திரமான தனுக்கோடிதீர்த்தத்தின் மிருத்திகையைக் கைக்கொ ண்டு, கப்பலேறி இலங்கை சென்று, அவ்வழகிய தீவிலமைந் துள்ள சிவனடிபாதம் என்றும், சமந்தம் என்றும் வழங்குகிற

உயர்ந்த குன்றின் (Adam's Peak) மேலுள்ள *புத்தபாத பீடிகையுள்படப் பலதலங்களுக்குஞ் சென்று தரிசித்தானபிறகு கொழும்பிலிருந்து புகைக்கப்பலேறி, தூத்துக்குடி சென்று அங்கிருந்து தெற்கிலுள்ள ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு வடக்கேதிரும்பி, ஆலப்புழை, அம்பலப்புழை, வைக்கம், எர்ணு குளம், திருச்சூர் மார்க்கமாக மங்களூர் சென்று, அங்கு புகை வண்டியைவிட்டு மோட்டார்வண்டியிலேறி, உடுப்பி, கோகர்ணம் முதலிய திவ்விய க்ஷேத்திரங்களைத் தரிசித்துவிட்டு, ஹூப்ளியை அடைந்து மீண்டும் புகைவண்டியேறி, கோலாப்பூர், ஸாத்தாரா, பூனாமார்க்கமாகப் பண்டரீபுரம் சென்று, ஸ்ரீ பாண்டுரங்கன் திருவருள்பெற்று, நாசிக் பஞ்சவடி சேர்ந்து, அங்கிருந்தபடி வடக்குநோக்கிப் போகப் போதிய அவகாசமில்லாததாலும், மேலும் சிலமாதங்கட்கு உத்தரவுகேட்டும் கிடைக்காமையாலும், பஞ்சவடியினின்று கொஞ்சமும் வடக்கே போகவியலாமல், ஜப்பல்பூர், பிரயாகை, காசி, கயை, ஜகந்நாதம் முதலிய ஸ்தலங் களைத் தரிசித்துக்கொண்டு கீழ்கரையோடு தெற்குநோக்கித் திரும்பி பெஜவாடா இராஜமஹேந்திரபுரம் மார்க்கமாக இராமேஸ் வரம் சென்று, ஸ்ரீ ராமலிங்கத்திற்கும், பர்வதவர்த்தனியம்மைக் கும் கங்காபிஷேகம் செய்வித்து யாத்திரையை ஒருவாறு பூர்த்தி செய்துகொண்டனன்.

மீண்டும் 1926-ம் வருஷத்தில் 6 மாதங்கட்கு உத்தரவு பெற்றுக்கொண்டு, அவ்வருஷம் ஏப்ரல்மீ 26உ தஞ்சையை விட்டுப் புறப்பட்டு, சிதம்பரம், திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம்,

---

*குறிப்பு:— இதைச் சைவர்கள் பரமசிவன் திருப்பாதம் என்றும், முகமதியர்கள் **பாவா ஆதம்** என்னும் பெரியாரின் திருவடி என்றும், கிறிஸ்துவர்கள் மனிதசிருஷ்டியில் முதன் மனிதரான **ஆதாம்** என்பவ ரின் அடிச்சுவடு என்றும், புத்தர்கள் தாங்கள் வழிபடும் கடவுளாகிய **சமந்தபத்திரரின்** சரணகமலத்திருப்பாதம் என்றும், அவரவர்கள் மதத் திற்கேற்றவாறு சொல்லிக்கொள்ளுகின்றனர். ஆகவே இக்குன்றின் மேலிருக்கும் பாதத்தைக் கண்டு வணங்க, இந்துக்கள், புத்தர்கள் கிறிஸ்துவர்கள், முகமதியர்கள், ஆகிய எல்லாமதத்தினரும் கூட்டம் கூட்டமாகச் செல்கின்றனர். எம்மதமும் சம்மதமாகக் கொள்ளுந் தலம் இது ஒன்றேயாதலின் இதைத் தரிசித்தல் மிக்க விசேஷமெனக் கருதப்படுகின்றது.

திருத்தணிகை, கிஷ்கிந்தை (விரூபாட்சம்), பீஜாப்பூர், ஷோலாப்பூர், பண்டரீபுரம் மார்க்கமாக பம்பாய் சென்று, அங்கிருந்து புறப்பட்டு சூரத், ப்ரோச் (Broach), பரோடா, உஜ்ஜயின் (அவந்திகை), டில்லி, மீரத் (Meerut), மார்க்கமாக சுவர்க்கத் துவாரமெனப் புகழப்படும் ஹரித்துவாரம் சென்று, அங்கிருந்து சுவர்க்கபூமியாகக் கருதப்படும் இமயமலையின் மீதேறிக் கால் நடையாய் நடந்து பஞ்சபிரயாகைகள் எனப்பிரசித்திபெற்றவை களுள் தேவபிரயாகை, ருத்திரபிரயாகை, விஷ்ணுபிரயாகை என்னும் மூன்று பிரயாகைகளிலும் தீர்த்தமாடி, ஹரித்துவாரமிருந்து சுமார் 145 மைல் தூரத்தில் மந்தாகினி நதியின் உற்பத்தி ஸ்தானத்திலுள்ளதும், பஞ்சபாண்டவர்கள் சுவர்க்கத்திற்கேகினதாகக்கருதப்படுவதுமான திருக்கேதாரக்ஷேத்திரத்தையும், ஷை ஹரித்துவாரமிருந்து 183 மைல் தூரத்திலுள்ளதும், அளகாபுரியென்று சொல்லப்படும் திவ்விய பிரதேசத்தின் இடையில், அளகேசன் மகளாகக் கருதப்படும் அளகநந்தை, (Alaknanda) யென்னும் விஷ்ணுகங்கையின் உற்பத்தி ஸ்தானத்திற்கருகிலுள்ளதுமான பதரிகாசிரமத்தையும் தரிசித்து, பதரிகாசிரமத்திற்கருகிலுள்ள பிரமகபாலமென்னும் பாமபவித்திரமான குன்றின்மேல் பிதுர்க்கடன்களை முடித்துக்கொண்டு, திருக்கைலாயத்திலுள்ள மானஸ ஸரோவரம் என்னும் தெய்வீகத் தடாகத்தினின்று இழிந்து வருவதாகக் கருதப்படும் வசுதாரை என்னும் மகத்தான புண்ணிய தீர்த்தத்தில் மூழ்கி, திரும்பும் வழியிலுள்ள கர்ணபிரயாகை, நந்தபிரயாகை என்னும் இரண்டு பிரயாகைகளிலும் ஸ்நானஞ் செய்துகொண்டு ராணிகேத் (Ranikhet), நைனிட்டால் (Nainital) மார்க்கமாகக் காத்கோடம் (Khatgodam) என்னும் ஸ்டேஷன் வந்து சேர்ந்து, சுமார் இரண்டு மாதங்கட்குமுன் விட்டு விலகின இருப்புப்பாதையைக் கண்டுபிடித்து அதிலேறி சீதாப்பூர், மிஸ்ரிக், நைமிசாரணியம், இலட்சுமணபுரி (Lucknow) அயோத்தி, நந்திக்கிராமம் முதலிய புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டு, மீண்டும் காசிப்பட்டினம் சேர்ந்து, கங்கையில் தீர்த்தமாடி விஸ்வேஸ்வரரைச் சேவித்துக்கொண்டு, விந்தியாவாஸினியம்மை உறைவிடமாகக் கொண்டிருக்கும் மிர்ஜாபூர், அலகாபாத் மார்க்கமாக மதுரா (Muttra) சென்று, அங்கும் அதற்கருகிலுள்ள கோகுலம், பிருந்தாவனம், கோவர்த்தனம், இராதாகுண்

டம் என்னும் க்ஷேத்திரங்களிலும், அத்தலங்களின் இடையில் ஓடும் பரமபவித்திரமான யமுனைநதியின் இருகரைகளிலும் கிருஷ்ணபரமாத்மாவினுற் செய்யப்பட்ட அனேக லீலாவிநோதங்கள் நடந்த இடங்களைக் கண்ணுற்று, தெற்குநோக்கித் திரும்பி, அஜ்மீருக்கடுத்த புஷ்காதீர்த்தத்தில் ஸநானத்தை முடித்துக்கொண்டு, அங்குக் கோவில்கொண்டுறையும் பிரமதேவரைப் பூசித்து, கதியவார் (Kathiawar) தீபகற்பத்திலுள்ள துவாரகாபுரி, ஸோமநாதபட்டினம் (பிரபாஸக்ஷேத்திரம்) முதலிய புண்ணியக்ஷேத்திரங்களையும் அங்கெழுந்தருளியிருக்கும் துவாரகாபதியையும் ஸோமநாதனையும் தரிசித்தானபிறகு, பம்பாய் மார்க்கமாகத் திரும்பி, வழியிலுள்ள திருக்காளத்தி திருவேங்கடம் திருவண்ணமலை திருக்கோவலூர், முதலிய திவ்விய க்ஷேத்திரங்களைத் தரிசித்து, மீண்டும் இராமேஸ்வரம் சென்று, முன்சொல்லியபடி பர்வதவர்த்தனி சமேத இராமநாதசுவாமிக்கு ஹரித்துவாரமிருந்தும், பதரிகேதாரங்களிலிருந்தும் எடுத்துவந்த கங்கையினுல் அபிஷேகம் செய்வித்து யாத்திரையை முடித்தனன்.

ஆகவே, யான் ஒரு கர்ப்பவாசகாலமாகிய 10 மாதகாலம் இந்தியா முழுவதும் இமஸேதுபரியந்தம் சுற்றிக் கூடியவரையில் காசி, காஞ்சி, மாயா, மதுரா, அயோத்தி, அவந்திகை, துவாரகை ஆகிய சப்த மோட்சபுரிகள் உட்பட நமது புராணங்களின் வாயிலாகப் புண்ணியக்ஷேத்திரங்களெனத் தெரிந்துகொண்டவைகள் எல்லாவற்றையும் தரிசித்துவிட்டு, ஆங்காங்கு பேசும் மொழிகளையும், பார்க்கவேண்டிய விசேஷங்களையும், மற்றும் என்கண்களுக்குப் புலப்பட்ட அரிய விஷயங்களையும் அப்போதுக்கப்போதே ஒரு புத்தகத்திற் குறித்துக்கொண்டுவந்திருந்ததைக் கண்ணுற்ற என் நண்பர்களிற் பலரின் வேண்டுகோட்கிணங்கியும், இன்றிருந்த ஊரில் நாளையிராமலும், இருக்க இடமின்றியும், உண்ணவுணவின்றியும் வருந்திச் சேகரித்த விஷயங்களை என் சகோதர சகோதரிகளான தமிழ்த்தாய்மக்கட்குதவநினைத்தும், இப்புத்தகத்தைப் "பஞ்சுபடா நூலையும் பலர் நெருடாப் பாவையும், கீண்டெஞ்சியழுக்கேருக் கலையையும், சொல்லேருழவாகம் தீயாது சொல்வினையும் செய்யுளையும்" கொண்ட அமிழ்தினுமினிய தமிழ் மொழியில் வெளியிடத் துணிந்தனன்.

தவிர இந்நூலில் எழுதியிருக்கும் விஷயங்களை யான் யாத்திரை சென்றபோது இருந்தவண்ணமும் கண்டவண்ணமும் வரைந்திருப்பதால், அப்போது மட்சாலையாயிருந்தது இப்போது கற்சாலையாகவும், கற்சாலை இருப்புப்பாதையாகவும் மாறியிருக்கலாம். அப்போது மாட்டுவண்டியிலும் குதிரைவண்டியிலும் போகவேண்டியிருந்த தலங்கட்கு, இப்போது மோட்டார் வண்டியிலும் ரயில் வண்டியிலும் போகக்கூடிய வசதிகள் ஏற்பட்டிருக்கலாம். அப்போதிருந்த சத்திரங்களும் தர்மசாலைகளும் இப்போது இல்லாது ஏடுபட்டிருக்கலாம். அப்போதில்லாத இடங்களிற் புதிதாக சத்திரங்களும் தர்மசாலைகளும் ஏற்பட்டிருக்கலாம். ஆதலின் யாத்ரீகர்கள் இத்தகைய மாறுபாடுகளைக் கண்டவுடன் இப்புத்தகத்திற் காணும் விஷயங்கள் தவறாயிருத்தல்வேண்டுமென்று எண்ணுதிருக்கவேண்டுகின்றேன்.

மேற்சொல்லியவாறு, இந்நூல் எழுதியதன் கருத்து நம் தமிழ்நாட்டிலிருந்து வடநாட்டிற்கு யாத்திரை போகும் தமிழ்த் தாய் மக்கட்கு ஓர் வழிகாட்டிபோல் உதவல்கூடும் என்பது ஒன்றே தவிர, என் தமிழ்ப்பயிற்சி, புராணஇதிகாச உணர்ச்சி, பக்தி முதிர்ச்சி ஆகிய இவைகளைக் காட்டவல்ல என்பதை இதைப் படிக்கும் பெரியோர்கள் மனதிற் கொள்ளல்வேண்டும் என்று பன்முறையும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மேலும் யான் தமிழ்த்தாயின் உதரத்திற் பிறக்கும் பெரும்பேற்றைப் பெற்றவனல்லன். தமிழிற் சிறிதேனும் பயிற்சியுடையவனுமல்லன். "வேற்றுமொழிபேசுவோரே தமிழில் நூல் எழுதப்புகுந்திருக்கும்போது நாம் நம் தாய்மொழியாய தமிழைப் புறக்கணிப்பது தர்மமன்று" என்னும் ஓர்வித உணர்ச்சி தமிழ்த் தாய்மக்களின் மனத்தில் உதிக்கும் பொருட்டே யான் இந்நூலைத் தமிழில் எழுதத்துணிந்தது. ஆதலின் இந்நூலில் கணக்கற்ற குறைகளும் வழுக்களும் காணப்படுவது இயற்கையே. அவ்வாறு தென்படும் குறைகளையும் வழுக்களையும் முற்றுங்கற்ற மூதறிவுடையோர் எனக்குத் தெளிவுறக்காட்டி, மறுபதிப்பிலாவது திருத்தி வெளியிடுமாறு உதவிபுரிய வேண்டுகின்றனன்.

இராமேசுவரமிருந்து புறப்பட்டு இந்தியாவை வலமாகச் சுற்றிவரும்வழியிலும், உமாதேவியைத் தன் புத்திரியாகவும், எல்லாம்வல்ல இறைவனை கைலாசபதியைத் தன் மருமகனுகவும் பெற்று, குபேரபட்டினமாகிய, அளகாபுரி முதலிய தேவ நகரங்களையும், தேவதாரு முதலிய வானுலகவிருட்சங்களையும், கண்டகி, கௌசிகி, கோமதி, கங்கை, யமுனை, ஸரஸ்வதி, *அளகநந்தை,

குறிப்பு:— *அளகநந்தை = குபேரன்மகள்.

சுவர்க்கத்துவாரி முதலிய சுவர்க்கலோக நதிகளையும், மானஸ ஸரோவரம் முதலிய தெய்வீகதடாகங்களையும், ஜோசிமடம், *துலிம்மடம் (Tulim Math) முதலிய பிரபலமானமடங்களை யும், தன்னுள் ஐக்கியம் செய்துகொண்டிருக்கும் சுமேரு, பொன்மலை, பர்வதராஜன், ஹேமகூடம் என்னும் பல திருநாமங் களையுடைய இமயமலையின்பேரிலும், பதரி, கேதாரம் போகும் மார்க்கத்திலும், மற்றும் இந்தியாவின் பலபாகங்களிலும் உள்ள தீர்த்த க்ஷேத்திரங்களைப் பற்றி எனக்கெட்டினமட்டில் விரித்துக் கூறப்புகுந்தேனாதலின், ஓரேபுத்தகத்தில் எழுதிமுடிக்க இடங் கொடுக்கவில்லை. இதையொத்த மற்றும் சிலபாகங்கள் கூடிய சீக் கிரம் வெளிவரும். அவைகளையும் ஆஸ்திக நண்பர்கள் அனைவரும் அன்புடன் ஆதரிப்பார்களென நம்புகின்றனன்.

இப்புத்தகத்தை இயற்றுமாறு என்னை அடிக்கடி தூண்டி, எனக்குப் போதிய ஊக்கமளித்துவந்த கும்பகோணம் பட்டினம் உயர்தரக் கல்விச்சாலை (The Town High School) தலைமைத் தமிழ்ப் பண்டிதர் திருவாளர் பாலசுப்பிரமணியபிள்ளை அவர்கள், கும்பகோணத்திற்கடுத்த கொண்டாங்குடி திருவாளர் இராச மாணிக்கம் பிள்ளை அவர்கள், மன்னார்குடி தமிழ்ப் பண்டிதர் திருவாளர் ம. நா. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள், இப்புத்த கத்தை அச்சிட்டு வரும்போது அச்சுப் பிழைகளை ஆய்ந்து திருத்திக் கொடுப்பதில் எனக்குப் பேருதவி புரிந்து வந்த தஞ்சை திருவாளர் கனகசபாபதிபிள்ளை அவர்கள் ஆகிய இவர்கட்கும், பேரன்போடு இப்புத்தகத்திற்கு முன்னுரை உதவியவரும், இந் நிலவுலகில் வாழும் ஜீவகோடிகளின் உபகாரார்த்தமாய், "பரோப காரம் ஹிதம் சரீரம்" என்னும் ஆன்றோர் மொழிக்கிணங்கத் "தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்" வாழ்ந்துவரும் சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்துத் தொண்டர்களுட் சிறந்த தமிழறிஞருமான ஸ்ரீபரிபூரணானந்த சுவாமிகட்கும், மற்றும் பொதுவாய் இப்புத்தகத்தை எழுதி அச்சிட்டு வெளியிடுவதில் எனக்குப் பல்வகையானும் ஊக்கமூட்டி வந்த என் அன்புள்ள நண்பர்கள் அனைவருக்கும் யான் சொல்லாற் சொல்லொணாக் கடமைப்பட்டுள்ளேன்.

இங்ஙனம்,
T. B. தாஸ் ராவ்.

---

குறிப்பு:— *துலிம்மடம் என்பது திபேத்தேசத்திலுள்ள மடங்க ளுள் முதன்மையானது.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 2 | கிளர்ந்த | கிளந்த |
| 2 | 33 | மார்க்கத்தைச் | மார்க்கம் |
| 3 | 23 | கும்பகர்ணாதிகளை | கும்பகர்ணாதிகளை |
| | 25 | அதைக் | அதைப் |
| 5 | 22 | நீங்கினது | நீங்கின |
| 10 | 13 | கெளுநர் | கெளிறு |
| 11 | 13 | ஒரு | ஒரு |
| 14 | 21 | ஒருவனுமான | ஒருவனுமான |
| 15 | 5 | ஒறுக்க | ஒறுக்க |
| | 30 | ஒளித்து | ஒளித்து |
| 16 | 3—4 | நிறைந்தும | நிறைந்தும் |
| 17 | 33 | பதிகங்கள் | பதிகங்களும் |
| 19 | 8 | கருதலாற் | தர்லாற் |
| | 27 | மனைவியரான | மனைவியாரான |
| | 28 | முதிற்சி | முதிர்ச்சி |
| | | திருஞானசம்பந்த | திருஞானசம்பந்த |
| 21 | 19 | ஒன்றில் | ஒன்றில் |
| 23 | 11 | ஒரு | ஒரு |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 24 | 29 | கோபுரத்திற்கு | கோபுரத்திற்கு |
| | 32 | ஒரு | ஒரு |
| 29 | 7 | ஒரு | ஒரு |
| 31 | 14 | ஒட்டப்பிடாரம் | ஒட்டப்பிடாரம் |
| 32 | 1 | திருச்செந்திற்கலம்பகத் [திற் | திருச்செந்திலந்தாதி [யிற் |
| | 18 | குன்றக்குடியில் | குன்றக்குடியிலும் திருமயிலாடியிலும் |
| | 19 | மயிலத்திலும் திருமயிலாடியிலும் | மயிலத்தில் |
| 33 | 19 | அதில் | அது |
| 35 | 11 | மிக்க | மிக |
| 36 | 7 | ஓதுவித்து | ஓதுவித்து |
| | 25 | ஒரு | ஒரு |
| 37 | 20 | ஒய்வில்லா | ஓய்வில்லா |
| 44 | 30 | சாளக் | சாலக் |
| 47 | 8 | ஒரு | ஒரு |
| 48 | 14 | பினபு | பின்பு |
| 50 | 27 | தம | தம் |
| 55 | 8 | தாணு | தாணு |
| 61 | 7 | ஒரு | ஒரு |
| | 26 | போடபட்டிருக்கிற | போடப்பட்டிருக்கிற |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 63 | 15 | தெரியாமவிருப்பது | தெரியாமலிருப்பது |
| 64 | 11 | இதைவியாககிராலயம் | இதுவியாக்கிராலயம் |
| 75 | 9 | ஒரு | ஓர் |
| 78 | 28 | சிற்றா றில் | சிற்றாரில் |
| 83 | 12 | படடாளம் | பட்டாளம் |
| 96 | 14 | சக்ஷஷ்மதி | சக்ஷுஷ்மதி |
| 114 | 24 | விசேஷ | விசேஷம் |
| 120 | 29 | துரை | துறை |
| 127 | 13 | செருக்கடைந்த | செருக்கடந்த |
| 151 | 21 | வருங்கறு | வருங்கரு |
| 154 | 29 | சுத்யுமன | சுத்யும்ன |
| 160 | 26 | ஒரு | ஓரு |
| 161 | 18 | மனமத | மன்மத |
| 166 | 11 | ரதஞபாண | ரத்ஞபாண |
| | 18 | தௌத | கௌ (gh) க (gh) |
| | 19 | ஸ்வகோசரே | க (kh) கோசரே |
| 189 | 25 | இக்குன்றிமேல் | இக்குன்றின்மேல் |

# இந்திய ஸ்தல யாத்திரை மான்மியம்.

——(o)——

## அத்தியாயம். 1.

தமிழ்த்தெய்வ வணக்கம்.

"மறைமுதற் கிளர்ந்தவாயான் மதிமுகிழ் முடித்தவேணி
இறைவர்தம் பெயரைநாட்டி யிலக்கணஞ் செய்யப்பெற்றே
அறைகடல் வரைப்பிற்பாடை யனைத்தும்வென் றாரியத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய்வத்தை யுண்ணினைந் தேத்தல்செய்வாம்."

இவ்வுலகில் கிருதயுகத்தில் முழுதும் புண்ணியமே நிறைந்திருந்ததாகவும், திரேதாயுகத்தில் புண்ணியம் மூன்று பங்கும் பாவம் ஒரு பங்கும் கலந்திருந்ததாகவும், துவாபரயுகத்தில் இரண்டும் சமமாக இருந்ததாகவும், நாம் பிறந்து இருந்து இறக்குமிக் கலியுகத்தின்கண் பின்னது மூன்று பங்கும் முன்னது ஒரு பங்குமேயிருந்து வருவதாகவும் சொல்லக் கேட்டிருக்கின்றோம். இக்கொள்கை சற்றேனும் தவறன்றென்பதை விளக்க பசுவாலீர்க்கப்பட்டு அசைந்தபோதுதவிர மற்றைக்காலங்களில் அசையாத ஆராய்ச்சிமணி தொங்குவதையும் அறியாது, ஜனங்களின்புற்று வாழ்ந்திருந்த இச்சோழநாட்டின்கண் இப்போதூர்தோறும் ஏற்பட்டிருக்கிற எண்ணிறந்த சிவில் கிரிமினல் கோர்ட்டுகளே போதிய சான்றாகும்.

இக்கொடுமையான கலியுகத்தின்கண் அரிதிலுமரிதான மானிடப்பிறவியை அடைந்திருக்கிற நாம் சுகதுக்கங்களாகிய அலைகளையுடைய இப்பவக்கடலைக் கடந்து, முத்தியங்கரையைச் சேர்வதற்கு எல்லாம்வல்ல இறைவனிடத்தில் ஒருமனதோடு செலுத்துகின்ற பத்தியொன்றே ஒப்பற்ற தெப்பமாக நமக்குதவுமென்பது எல்லோரும் நன்கறிந்த விஷயம்.

அப்படிப்பத்தி செலுத்துவதும் இரண்டுவகையாகும். அவையாவன:- சிறுத்தொண்டர் காரைக்காலம்மையார் இவர்கள்

போன்று தமது பத்திமேலீட்டினால் காந்தம் இரும்பூசியை தன்னிடம் இழுப்பதுபோல் அவ்விறைவனை நம்மிடமிழுக்கும் பத்தி ஒன்று. கண்ணப்பநாயனார் திருநாளைப்போவார் இவர்களைப் போன்று பத்தி பரவசர்களாய், தழைத்துச் செழித்து வளரும் ஒரு பூங்கொடியானது தனக்காதாரவாக ஒருமரத்தைத் தேடி அடைந்து அதைச் சுற்றிக்கொள்ளுவதுபோலவும், இளம்பசுங் கன்றானது தன் தாயைத் தேடியடைவதுபோலவும், அவ்விறைவனைத்தேடிச் சென்றடையும் பத்தி ஒன்று.

இவ்வித பத்திகளைச் செலுத்துதற்கெளிதாக ஆக்கல், காத்தல், அழித்தல், என்னுமுத்தொழில்களுக்கும் இறைவனான எம்பெருமான், பிரமன், திருமால், உருத்திரன் என்ற திருவுருவங்களோடு புண்ணிய பூமியாகிய இவ்விந்தியாவின்கண் அநேகவிடங்களில் திருக்கோயில்கொண்டெழுந்தருளி சிற்றறிவினர்களான நமக்குச்சேவை சாதிக்கிறானென்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. அத்திருப்பதிகளைத் தெரிசிக்க இத்தமிழ் நாட்டிலிருந்து புறப்படுபவர்கள் முதலில் இராமேசுவரம் சென்று, இராமநாதரைத் தெரிசித்து, அவ்விடமிருந்து தனுக்கோடி சென்று சேதுஸ்நானம் செய்து, ஸ்நானகட்டத்தின் மணலை எடுத்துக்கொண்டு, மீண்டும் இராமேசுவரம் சென்று கோடிதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, சேதுமாதவர் அனுமதியோடு இந்தியாவை வலமாகச்சுற்றி சப்த புண்ணிய நதிகளான கங்கை யமுனை ஸரஸ்வதி கோதாவிரி நர்மதை சிந்து காவிரி இவைகளில் முதன் மூன்றும் வந்து ஒருங்கே சேரப்பெற்றதும், தீர்த்தங்களுக்கெல்லாம் ராஜாவாக விளங்குவதால் "பிரயாக்ராஜ்" என்னும் பேர்பெற்றதுமான பிரயாகை (அலகாபாத்) க்ஷேத்திரத்தில் அட்சயவடத்திற்கெதிரில் திருவேணிசங்கமத்திலிட்டு அங்கிருந்து கங்காதீர்த்தம் எடுத்துக்கொண்டு அங்கெழுந்தருளி இருக்கும் வேணிமாதவரின் அனுமதிபெற்று காசி கயை ஜகந்நாதம் முதலிய க்ஷேத்திரங்களைத் தெரிசித்துக்கொண்டு, திரும்பவும் இராமேசுவரம் சென்று பர்வதவர்த்தனி சமேத இராமலிங்கத்திற்குக் கங்காபிஷேகம் செய்வித்து யாத்திரையை முடித்துக்கொள்ளுதல் முறையாதலால், இப்புத்தகத்திலும் இராமேசுவரத்தை முதலில் வைத்து அதினின்று புறப்பட்டு பூவலம் வரும் மார்க்கத்தைச் சொல்லப்பட்டுள்ளது.

## இராமேசுவரம்.

(இராமநாதர் பர்வதவர்த்தனியம்மை)

உலகெலாம் படைத்துக் காத்திட் டொடுக்கிமுச்செயற்குஞ் சான்றாய்த்
திலகநான் மறைநூ லாறுஞ் செப்பருங் கருணைத் தேசாய்
அலகிலாச் சித்தி முத்தி யடியருக் கருள்வ தாகி
இலகிடு மிராம நாத னெழிற்பதம் போற்றி செய்வாம்.

இவ்வரும் பெருந்தலத்தின் மகிமை உலகப்பிரசித்தம். இது நம்மிந்தியர்களால் மிகச்சிறந்தவைகளாகப் போற்றப்பட்ட *பன்னிரண்டு ஜோதிலிங்கங்களி லொன்றென்பது யாவருக்குந் தெரியலாம். தவிர நம் வடஇந்திய சகோதரர்களால் மிகவும் சிறந்தவைகளாகக் கருதப்படுகிற (வடக்கில் பதரிநாதம் கிழக்கில் ஜகந்நாதம் தெற்கில் இராமநாதம் மேற்கில் துவாரகாநாதம்) நான்கு க்ஷேத்திரங்களில் நமது தமிழ் நாட்டிலிருப்பது இதுவொன்றேயாகையாலும், அந்நான்கில் இது ஒன்றே சிவக்ஷேத்திரமாகையாலும், இதுவும் கூடியவரையில் நமது தேசத்தின் தெற்குக்கோடியிலிருப்பதாலும் நம் தமிழ் நாட்டின் வழியாக நமது வடஇந்திய சகோதரர்கள் திரள்திரளாகப் போவதைக் காண்கின்றோம். இவ்வொருக்ஷேத்திரம் இங்கில்லாவிடில் நமது வடஇந்திய சகோதரர்கள் எவ்விதத் தோற்றத்துடனிருக்கின்றார்கள், என்ன உடை உடுக்கின்றார்கள், என்ன மொழி பேசுகின்றார்கள் என்பது நம்மில் அநேகருக்குத் தெரியாமலே இருக்கக்கூடும்.

சக்கரவர்த்தித் திருமகனாகிய ஸ்ரீராமர் இலங்கைக்குச் சென்று, இராவண கும்பகர்ணாதிகளைக் கொன்று திரும்புகையில் அவர்களிடம் பிரமாம்சம் இருந்தமையால் பிரமஹத்தி இராமரைப் பின்பற்றிவர, அதைக் போக்குவதற்காகப் பரமசிவனைப் பூசிக்க யாது தக்கஇடம் என்று ஆராயும்போது, அங்கிருந்த முனிவர்கள் இத்தலத்தைவிட மேலான இடமில்லை என்று சொல்ல, அவர்களாணையைச் சிரமேற்கொண்டு அங்கு தன் பூசையை நடத்தக்கருதியவராய், காசியிலிருந்து இலிங்கங்கொண்டு வரும்படி அனுமாரை யனுப்பினாரென்பதும், காசிக்குச்சென்ற

*பன்னிரண்டு ஜோதிலிங்கங்களாவன:— (1) ஓங்காரேசர் (2) சோமநாதர் (3) திரியம்பகநாதர் (4) மல்லிகார்ச்சுனர் (5) நாகநாதர் (6) வைத்தியநாதர் (7) காசி விசுவநாதர் (8) பீமேசர் (9) கேதாரேசர் (10) மகாகாளேசுவரர் (11) குஸ்ருணேசர் (12) இராமநாதர்

அனுமார் அங்கே காலபைரவரிடத்தில் *யுத்தம் செய்ய நேரிட்டதால், திரும்பி வருவதற்குக் காலதாமதம் ஏற்பட அதற்குள் குறிப்பிட்ட முகூர்த்தம் நெருங்கிவிட்டபடியால் சீதாபிராட்டியாரால் மணலாற் செய்யப்பட்ட இலிங்கத்தை பிரதிஷ்டை செய்து பூசை செய்தார் என்பதும், பிறகு வந்த அனுமார் தாம் கொணர்ந்த இலிங்கம் பிரதிஷ்டை செய்யப்படவில்லையே என்று கவலையுற தயாநிதியாகிய ஸ்ரீராமபிரான் தாம் அதை மற்ருேரிடத்தில் வைத்துப் பூசிப்பதாகச் சொல்லியும் கேளாததால் தம் ஆத்மநேசரான ஆஞ்சனேயருக்குச் சிற்சில சமயங்களில் எழும் மனக்கொதிப்பை அடக்கக்கருதி அம்மணல் இலிங்கத்தைப் பேர்த்து எடுத்துவிட்டால் தாம் அதே இடத்தில் அவர் கொணர்ந்த இலிங்கத்தை வைத்துப் பூசிப்பதாகச் சொல்ல ஸ்ரீ ராமரைத் தவிர வேருெரு கடவுளையுமறியாத மாருதி உடனே தம்வாலால் ஸ்ரீராமலிங்கத்தைப் பற்றியிழுக்க தம் வால் அறுபட்டு ஊருக்கு வெளியில் போய் விழுந்து மூர்ச்சையாய்விட்டாரென்பதும் நாம் புராணவாயிலாக அறிந்திருக்கிருேம். இதெல்லாம் புராண கதையல்ல, உண்மையாகவே நடந்திருக்கவேண்டும் என்பதற்கறிகுறியாக இப்போதும் அனுமார் விழுந்ததாகச்சொல்லப்படுகிற இடத்தில் அனுமாருக்கோர் கோவிலும் அனுமதீர்த்தம் என்ருெரு தீர்த்தமும் இருப்பதுந்தவிர எங்கும் வெண்மையாக இருக்கிற மணலானது அவ்விடத்தில் மாத்திரம் இரத்தக்கறை பட்டதுபோற் சிவந்திருப்பதை இப்போதும் பிரத்தியட்சமாகக் காணலாம். பிறகு அனுமார் வாலறுப்புண்டு விழுந்ததற்காகச் சீதாதேவியும் ஸ்ரீராமரும் மிக்க மனவருத்தமுற்று சிவபூசையால் அவரை எழுப்பி அவர் கொணர்ந்த இலிங்கத்தை ஸ்ரீ ராமநாதருக்கு வடபாலாக ஸ்தாபித்துப் பூசை செய்து அவரையொருவாறு தேற்றினர்களென்று தெரிகிறது. இராமலிங்கத்தில் அனுமார் வாலைச் சுற்றி இழுத்ததற்கடையாளமாக இப்பொழுதும் மூன்று சுற்றுரேகைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

முன்ஞெரு காலத்தில் கடவுள் பத்தியிற் சிறந்தவனை சுந்தரபாண்டியனுக்கு மகளாக இலட்சுமிதேவியே அவதரித்து வளர்ந்துவருங்கால் மகாவிஷ்ணுவானவர் ஒரு மறையவர் வேடம்

*இதைப்பற்றிய விவரம் காசிப்பட்டின அத்தியாயத்திற் காண்க.

பூண்டுவந்து அப்பெண்மணியைப் பூங்காவனத்தில் வலிந்திற்பற்றி யிழுக்க அவள் போட்ட சத்தங்கேட்ட பாண்டியன் அம் மறையவரைப் பிடித்துப்போய், ஸ்ரீ ராமநாதாலயத்தில் ஒரு மண்டபத்தில் விட்டு விலங்கிட்டுச் சிறைப்படுத்தியிருந்தான். அன்றிரவே மகாவிஷ்ணுவானவர் பாண்டியனுக்குக் கனவிலும் நனவிலுந்தோன்றி உண்மையைப் புலப்படுத்த, அரசன் தான் செய்த அபசாரத்தை மன்னித்துத் தன்மகளைமணந்து அத்தலத்திலேயே தங்கியிருந்து தம்மை நாடிவரும் பக்தகோடிகளுக்குச் சேவை சாதித்தருளும்படி வேண்ட, அவரும் அவன் வேண்டுகோளுக் கிணங்கி அவ்விடத்திலேயே சேதுமாதவராக எழுந்தருளியிருக் கின்றார்.

இந்த க்ஷேத்திரத்திலும் இதற்கருகிலும் இருக்கின்ற தீர்த்தங்களாவன:—

இராமேசுவரத்திற்கு யாத்திரை செல்பவர்கள் முதலில் உப்பூர்சென்று அங்கிருந்து அடியிற்கண்ட வரிசைப்படி தீர்த்த மாடி தெரிசனம் செய்துவருவது விசேஷம்.

1. உப்பூர் விக்கினேசுவரர் தெரிசனம். இதனால் சர்வ விக்கினங்களும் நிவர்த்தி. இது இராமநாதபுரத்திலிருந்து 11 மைலிலிருக்கிற தேவிபட்டினத்திலிருந்து 10 மைல் வடக்கி லிருக்கிறது.

2. க்ஷீரகுண்டம் (திருப்பாற்கடல்). இதில் பஞ்சமாபாதக மும், சத்துருமோசம் பண்ணினபாவமும் நீங்கினது. இதிலிருந்து தனது சத்துருவையும் மோசஞ்செய்வது தகுதியன்றென்று நன்கு புலப்படுகிறது. இது உப்பூரிலிருந்து தேவிபட்டினம் போகிற வழியில் திருப்பாலக்குடிக்கருகிலிருக்கிறது.

3. தேவிபட்டினம் (நவபாஷாணம்) நவக்கிரகபூஜைக்குரிய இடம். கிரகதோஷ நிவாரணம். நவக்கிரகங்களும் சமுத்திரவோரத் தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. சிலமாதங்களில் அவைகள் இருக்குமிடத்தில் இரண்டு மூன்றடி ஜலமிருக்கும்.

4. ஷையூரில் சக்கரதீர்த்தம். சக்கரத்தாழ்வார் சாபவிமோ சனம். காலவமுனிவர் தவஞ்செய்தவிடம். இது திருக்குளமாக இருக்கிறது.

5. வேதாளவரததீர்த்தம்:- சுதரிசனனென்னும் கந்தருவன் சாபவிமோசனம். இதுவெற்றிலை மண்டபத்திலிருக்கிறது. அதாவது மண்டபம் ஸ்டேஷனிலிறங்கிப் போகவேண்டியது.

6. பாபநாசதீர்த்தம்:- மகாபாதகம் செய்தவர்களான பிராமணனுக்கும் பிராமணனல்லாத ஒருவனுக்கும் மோட்சம் கொடுத்தது. இதற்கும் மண்டபம் ஸ்டேஷனில் இறங்கிப்போக வேண்டியது.

7. பைரவதீர்த்தம்:— பிரமஹத்திதோஷநிவாரணம். இது பாம்பனிலிருக்கிறது. பாம்பன்ஸ்டேஷனில் இறங்கவேண்டும்

8. கபிதீர்த்தம்:— அரம்பை சாபவிமோசனம். இதுவும் பாம்பனிலிருக்கிறது. பாம்பன் ஸ்டேஷனில் இறங்கி வண்டி வைத்துக்கொண்டு சாலைமார்க்கமாக இராமேசுவரம் போனால் எல்லாத்தீர்த்தங்களிலும் சுலபமாக ஸ்நானஞ்செய்து இராமேசுவரம் போகலாம்.

9. சீதாகுண்டம்:— இந்திரன் பிரமஹத்தி நீங்கினது. இது தங்கச்சிமடம் ஸ்டேஷனுக்கு வடக்கிலும் கபிதீர்த்தத்திற்குக் கிழக்கிலுமிருக்கிறது.

10. மங்களதீர்த்தம்:— மனோஜலராஜன் ராஜ்யம்பெற்றது. இது சீதாகுண்டத்திற்குக் கிழக்கில் இரண்டுபர்லாங்கு தூரத்திலிருக்கிறது.

11. அமிர்தவாபி:— அகஸ்தியர் சகோதரர் முத்தியடைந்தது. இது மங்களதீர்த்தத்திற்குக் கிழக்கிலிருக்கிற ஏகாந்தராம சுவாமி கோவிலுக்குள்ளிருக்கிற கிணறு.

12. இரணவிமோசன தீர்த்தம்:— சமஸ்த இரணங்களும் நிவாரணம். இதுவும் ஏகாந்தராமசுவாமி கோவிலுக்கருகில் சாலைக்கு வடக்கிலிருக்கிறது.

13. வில்லூருணி:— சமஸ்தபாவ நிவாரணம். இது ஸ்ரீ ராமருடைய வில்லால் பூமியைக் கீறினவிடத்திலுண்டானது. இது தெய்வீக தீர்த்தம் என்பதற்கு அறிகுறியாகச் சமுத்திர

ஜலத்திற்கருகிலும், சிலசமயங்களில் சமுத்திரஜலத்தின் மத்தியிலும், சுத்தஜலமாக விளங்குகிறது. இது இரணவிமோசன தீர்த்தத்தின் வடக்கில் சுமார் கால்மைல் தூரத்தில் சமுத்திரக்கரையிலிருக்கிறது. ஷெ இரணவிமோசன தீர்த்தத்தின் மேல்கரையை ஒட்டி வண்டிப்பாதைபோகிறது. முழுவதும் மணலானதால் வண்டிகள் போவது கஷ்டம்.

14. ஏகாந்தராமசுவாமிகோவில்:- ஸ்ரீராமர் தெரிசனம்.

15. காட்டுப்பிள்ளையார்கோவில்:- சர்வவிக்கினங்களும் நிவாரணம். இது ஏகாந்தராமசுவாமி கோவிலுக்குக் கிழக்கில் சாலைக்கு வடபுறமிருக்கிறது.

16. இலட்சுமணதீர்த்தம்:— இலட்சுமணரானவர் தனித்துச் சிவபூசை செய்யக்கருதி ஸ்ரீ ராமராலயத்திற்கு மேற்பாகத்தில் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து அச்சிவலிங்கத்திற்குத் திருமஞ்சனம் செய்விக்க ஏற்படுத்தியது. பலராமருக்கு பிரமஹத்தி நீங்கினது. இது இராமேசுவரத்தின் எல்லைக்குள் மேலைக்கடைசியில் சாலையோரத்திலிருக்கிறது. இங்கே வபனம் செய்துகொள்ள நாவிதர்கள் கிடைப்பார்கள்.

17. ஸ்ரீராமதீர்த்தம்:— யுதிஷ்டிரர் பொய்புரைத்த பாபவிமோசனம். இலட்சுமணதீர்த்தத்திற்குக் கிழக்கிலிருக்கிறது. மேல்கரையில் புராதனமான ஸ்ரீராமர் கோவிலிருக்கின்றது. மூர்த்திகள் பார்ப்பதற்கு அழகாக இருக்கின்றன.

18. சுக்கிரீவதீர்த்தம்:— ஸ்நானத்தால் பூர்வஞானத்தையும் சூரியலோகத்தையும் அடைவார்கள்.

19. அங்கதீர்த்தம்:— தேவேந்திரப்பதவி கிடைக்கும்.

20. ஜாம்புவதீர்த்தம்:— ஆயுள்விருத்தி. இந்த மூன்று தீர்த்தங்களும் இராமேசுவரம் வடக்குவீதியிலிருந்து வடக்கே கந்தமாதனபர்வதம்போகிற பாதையிலிருக்கின்றன.

21. கந்தமாதனபர்வதம்:— ஸ்ரீராமபாத தெரிசனம்.

22. தருமதீர்த்தம்.
23. பீமதீர்த்தம்.
24. அர்ச்சுனதீர்த்தம். } ஸர்வாபீஷ்ட சித்தி.
25. நகுலதீர்த்தம்.
26. சகாதேவதீர்த்தம்.

27. திரௌபதி தீர்த்தம்:— ஸ்திரீபுருஷர்கள் அன்னியோன் னியமாக இருப்பார்கள்.

28. பிரமதீர்த்தம்:— பிரமதேவன் சிவபிரானுடைய திருமுடியைக் கண்டதாகப் பொய்யுரைத்ததனுலேற்பட்ட சாப நிவிர்த்தி.

29. இலங்கைமாகாளி தீர்த்தம்.

30. ஹனுமதீர்த்தம்:— கேகயதேசத்தையாண்ட மசகனெனுமரசன் புத்திரப்பேறு பெற்றது.

(குறிப்பு) 22 முதல் 30 முடிய இவ்வொன்பது தீர்த்தங்களும் கந்தமாதன பர்வதத்தைப் பிரதக்ஷிணம் செய்து இராமேசுவரம் வருகிற கீழண்டைச்சாலையில் இருக்கின்றன. இலங்கைமாகாளி தீர்த்தம் மட்டும் காளிகோவிலுக்குள்ளிருக்கிறது.

31. அக்கினி தீர்த்தம்:— துஷ்பண்ணியனுக்குப் பைசாசப்பாதை நிவிர்த்தி. இதுதான் சமுத்திரம். இராமநாதராலயம் கீழகோபுர வாயிலுக்கு நேராக சந்நிதித்தெருவுக்குக் கிழக்கில் ஸ்நானகட்டம்.

32. அகஸ்தியதீர்த்தம்:— இது அக்கினிதீர்த்தத்தின் வடக்கில் ஐம்பதுகெஜ தூரத்திலிருக்கிறது. கீபரனெனும் வேதியன் புண்ணியவதியெனும் அரசகுமாரியை மணந்து மோக்ஷமடைந்தது.

33. நாகதீர்த்தம்:— கங்கை முதலிய எல்லாத்தீர்த்தங்களும் தங்கள் தங்கள் பாவங்களைப் போக்கிக்கொள்ள எப்போதும் இதில் வசிப்பதாகச் சொல்லப்படுகிறது. சர்வபாபவிமோசனம். இது இராமேசுவரம் கீழவீதியிலிருக்கிற தேவஸ்தானம் பங்களாவின் தோட்டத்திற்குள்ளிருக்கிறது. இது பங்களாதோட்டத்திற்குள்ளிருப்பதால் யாத்திரைக்காரர்கள் பங்களா காவல்காரன்

தயவின்றி இதில் ஸ்நானம் செய்ய முடிகிறதில்லே. இதில் யாரும் எக்காலத்திலும் தாராளமாய் ஸ்நானம்செய்யும்படி தேவஸ்தான அதிகாரிகள் ஏற்பாடு செய்தால் நலம்.

34. மகாலட்சுமி தீர்த்தம்:— சர்வைசுவரியசித்தி. இது இராமநாதர்கோவில் கீழக்கோபுரவாயிலுக்கருகில் இருக்கிறது.

35. காயத்திரிதீர்த்தம்.
36. ஸாவித்திரிதீர்த்தம்.
37. சரசுவதிதீர்த்தம்.
38. சக்கரதீர்த்தம்.
39. சேதுமாதவதீர்த்தம்.

ஸர்வபாபவிமோசனம். இவ்வைந்தும் கோவிலுக்குள் இருக்கின்றன. இவைகளில் சேதுமாதவ தீர்த்தம் மேலக்கோபுர வாசலருகிலிருக்கிற பெரிய குளம். மற்றவை கிணறுகள்.

40. நளதீர்த்தம்.
41. நீலதீர்த்தம்.
42. கவாயதீர்த்தம்.
43. கவாட்சதீர்த்தம்.
44. கந்தமாதனதீர்த்தம்.

இவ்வைந்து தீர்த்தங்களும் சேதுமாதவர் பிரகாரத்தில் இருக்கின்றன. இராம இராவண யுத்தத்தில் சுக்கிரீவன் சேனையில் படைத்தலைவர்களாக இருந்த வானரவீரர்களின் பேரால் ஏற்பட்டவைகள். சூரிய தேஜசு அடையலாம்.

45. பிரமஹத்திவிமோசன தீர்த்தம்.
46. சூரியதீர்த்தம்.
47. சந்திரதீர்த்தம்.
48. கெங்கை.
49. யமுனே.
50. கயாதீர்த்தம்.
51. சங்கதீர்த்தம்.

இவ்வேழு தீர்த்தங்களும் கோவில் பிரகாரத்தில் இருக்கின்றன. பிரமஹத்தி, செய்நன்றி மறத்தல் முதலிய கொடுமையான பாவங்கள் நிவிர்த்தி.

52. சிவதீர்த்தம்:— பைரவர் பிரமஹத்தி நிவிர்த்தி. இது கோவிலுக்குள் சுவாமி அம்மன் சந்நிதிகளுக்கிடையில் தேவஸ்தானம் ஆபீசுக்கருகிலிருக்கிற குளம்.

53. சாத்தியாமிர்ததீர்த்தம்:— புரூரவச் சக்கரவர்த்திக்குத் தும்புரு சாபம் நீங்கினது. இது அம்மன் சந்நிதிக்கு எதிரிலிருக்கிற கிணறு.

54. சர்வதீர்த்தம்:— சுதரிசனனென்னும் மறையவனுக்காக சிவபிரான் பூமியில் உள்ள எல்லா தீர்த்தங்களேயும் வரவழைக்க, அவைகள் ஒன்றுகூடிவந்து நந்தி எம்பெருமான் தன் குளம்புகளாலாக்கப்பட்ட பள்ளத்தில் தங்கின்மையாலுண்டான தீர்த்தம்.

இது சுவாமி கோவில் உட்பிரகாரத்தில் அக்கினி மூலேயில் இருக்கிற கிணறு.

55. தேவதீர்த்தம்:— அசுரர்களைக் கோறகடிக்க இந்திரன் யாகம் செய்தது. இது ஊருக்குத் தெற்கில் ஜடாயு தீர்த்தத்திற்குப் போகிற வழியில் இருந்திருக்கிறதாகத் தெரிகிறது. இப்போது சொரூபத்திலில்லே.

56. ஜடாயு தீர்த்தம்:— துருவாசர், சுகர் முதலிய மஹரிஷிகள் சித்தசுத்தியடைந்தது. இது ஊருக்குத் தெற்கில் சுமார் மூன்று மைல் தூரத்திலிருக்கிறது. இராமேசுரமிருந்து தனுக்கோடிக்குப் போகிற சாலேயோடு கிழக்கே நோக்கிக்கொண்டு போனல் இது தென்படும். மணலதிகமானதால் வண்டிகள் போவது கஷ்டம். இந்தத் தீர்த்தம் தெளிவாகவும் ஸ்நானம் செய்வதற்கேற்றதாகவும் இருக்கிறது. இதில் ஏராளமாக "கெளுத்தி" அல்லது "கெளுர்" என்று சொல்லப்படும் மீன்களிருக்கின்றன. ஆகையாலிந்தத் தீர்த்தத்திற்குப் போகிறவர்கள் கொஞ்சம் பொரி அல்லது கடலே கொண்டுபோவதவசியம். அவைகளேப் போட்டவுடன் அந்த மீன்கள் வந்து விளேயாடுவது நேத்திரானந்தத்தைத் தருகிறது.

| | |
|---|---|
| 57. கஜதீர்த்தம்.<br>58. சரப தீர்த்தம்.<br>59. குமுததீர்த்தம்.<br>60. ஹரதீர்த்தம்.<br>61. பனசதீர்த்தம். | சமஸ்த பாவங்களும் நிவிர்த்தி. இவைகள் இப்போது சொரூபத்திலில்லே. |

62. விபீஷண தீர்த்தம்:— சமஸ்தரோக நிவிர்த்தி. இதுவும் சொரூபத்திலில்லே.

63. கோடிதீர்த்தம்:— கிருஷ்ணபரமாத்மா தன் மாமனை கம்சனைக் கொன்ற பாபம் நிவிர்த்தியானது. இதுதான் எல்லாத் தீர்த்தங்களிலும் மேலானது. இதில் ஸ்நானஞ் செய்தபிறகு இந்த க்ஷேத்திரத்தில் மல மூத்திராதிகள் கழிக்காமல் அதை விட்டுப் புறப்பட்டுவிடுவது நலம். இந்தத் தீர்த்தத்தைத்தான் யாத்திரைக்காரர்கள் கலசங்களிற் கொண்டுபோவது. இதில் பிராமணரல்லாதவர்களைத் தீர்த்தமெடுத்து ஸ்நானம்செய்ய விடுவதில்லே.

கோவிலில் வேலை செய்யும் பிராமணர்களுக்கு ஒரு குடத்திற்கு ஒரு அணாவீதம் கொடுத்தால் எடுத்துக் கொடுக்கிறார்கள்.

64. தனுக்கோடி என்ற ஸ்ரீராமசேது:—அசுவத்தாமா தூங்கினவர்களைக் கொன்ற பாபமும், தர்மகுப்தன் பைத்தியமும், பராவசு தன் தகப்பனைக் கொன்ற மஹாதோஷமும், சுமதியன் மஹா பாதகமும் நிவிர்த்தி. இது இராமேசுரத்திற்குத் தெற்கில் சுமார் 14 மைல் தூரத்திலிருக்கிறது. ஸ்டேஷனிலிருந்து சுமார் இரண்டரைமைல் தூரம் நடந்து போகவேண்டியது. வண்டிகளிலும் போகலாம். இந்த ஸ்நானகட்டம் இரத்நாகரம் மஹோததி என்று சொல்லப்படும் இரண்டு கடல்களும் சேருகிறவிடத்தில் இருக்கிறது. இராமேசுரமிருந்து தனுக்கோடிக்குப் போகிறவழியில் கோதண்டராமசுவாமிகோவில் என்னும் திவ்விய க்ஷேத்திரம் இருக்கிறது. இதற்காக ஒரு ஸ்டேஷனும் ஏற்பட்டிருக்கிறது. சேதுக்கரையிலிருந்து தனுக்கோடி ஸ்டேஷனுக்கு வருகிறவழியில் வடஇந்திய சாதுக்கள் ஒரு கொட்டகையில் சாளக்கிராமங்களையும் இராமர் லெட்சுமணர் சீதை இவர்களின் மூர்த்திகளையும் வைத்துப் பூஜைசெய்கின்றனர். தெரிசனம் விசேஷம்.

இராமேசுரத்தில் யாத்திரைக்காரர்கள் தங்குவதற்கு அநேக சத்திரங்கள் இருக்கின்றன. இவைகளைத்தவிர ஸ்டேஷனுக்கருகில் புதிதாக கட்டப்பட்டிருக்கிற மோஹாபீர் தர்மசாலை என்னும் பெரிய கட்டிடமிருக்கிறது. இதில் ஏக காலததில் 20 முதல் 24 வரை குடும்பங்கள் தாராளமாகத் தங்கியிருக்கலாம். ஜலவசதியுண்டு. பின்பக்கத்தில் கிணறும், முன்பக்கத்தில் குழாயும் இருக்கின்றன. புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் தனித்தனியாகக் கக்கூஸ்கள் கட்டப்பட்டிருக்கின்றன. தனுக்கோடியில் யாத்திரைக்காரர்கள் தங்குவதற்குச் சத்திரங்களுண்டு.

இராமேசுரம், தனுக்கோடி இவ்விரண்டிடங்களிலும் பிராமணர்கள் சாப்பாட்டுக்கடைகள் இருக்கின்றன. காப்பி, பலகாரங்கள் முதலியன கிடைக்கும்.

இராமேசுரத்தில் நல்லதண்ணீர்க் குழாயிருக்கிறது. தனுக்கோடியில் கிணற்றுஜலம் அநேகமாக உப்புஜலமாக இருந்தாலும் சிற்சில கிணறுகளில் நல்லஜலம் கிடைக்கிறது.

இராமேசுரத்தில் ஸ்ரீராமநாதர் ஆலயத்தில் நகரத்தார் திருப்பணிக்குப் பிறகு கோவில் முழுவதும் மின்சார வெளிச்சம் (Electric light) போடப்பட்டிருக்கிறது. வெள்ளிக்கிழமைகளிலும், மற்றவிசேஷதினங்களிலும் கோவில்முழுவதும் இத்தீபங்களால் அலங்கரிக்கப்படுகிறது.

64 தீர்த்தங்களையும், இராமநாத சேதுமாதவ தெரிசனங்களையும், அடையப்பெற்ற இந்த க்ஷேத்திரத்தின் மகிமையையும் பெருமையையும் விரிவாகச் சேதுபுராணத்தில் காணலாம். இந்த க்ஷேத்திரம் தீர்த்தவிசேஷம், மூர்த்திவிசேஷம் இரண்டையும் ஒருங்கே அமையப்பெற்றிருக்கிறது. இங்கே யாத்திரைக்காரர்கள் பிதுர்க்கடன்களை முடிப்பார்கள். மக்கட்பேறற்றவர்கள் நாகப் பிரதிஷ்டை செய்வார்கள். இங்கே புரோகிதர்கள் அநேகர் இருக்கின்றார்கள். இராமநாதபுரம் வரையில் வந்து யாத்திரைக்காரர்களை அழைத்துச்செல்கின்றனர்.

ஸ்ரீராமநாதருக்கு எந்த நாளிலும் எந்தக்காலத்திலும் கங்காபிஷேகம் செய்விக்கலாம். அம்மனுக்குக் கங்காபிஷேகம் செய்வதாயிருந்தால் பகற்கால அபிஷேக சமயத்திற்றான் செய்யலாம். மற்றைக்காலங்களில் செய்வதில்லை. கோவிலிலேயே கங்கா ஜலத்தை வரவழைத்து வைத்துக்கொண்டு விலைக்கு விற்கிறார்கள். இராமநாதருக்காவது அம்மனுக்காவது கங்காபிஷேகம் செய்வதாயிருந்தால் தேவஸ்தானம் ஆபீசில் ரூ 2- செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளல்வேண்டும். தவிர கங்கை கொண்டுபோகிற கலசங்களைக் கோவிலார் திருப்பிக் கொடுப்பதில்லை. அவைகளைக் கோவிலில் சேர்த்துவைத்துக்கொண்டு பிறகு விற்றுவிடுகிறார்கள். அர்ச்சனைக்கு 5-அணவும் கர்ப்பூரம் செய்ய ஒரு அணவும் வசூல் செய்கிறார்கள். மற்றக் கட்டணங்களைக் கோவிலுக்குள் இருக்கிற தேவஸ்தானக் கச்சேரியில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

## திருப்புல்லாணி (தருப்பைசயனம்)

தெய்வச்சிலையார். கல்யாணஜகந்நாதர். தெய்வச்சிலைநாச்சியார். கல்யாணவல்லித்தாயார். கல்யாணவிமானம். ஏமபுஷ்கரணி சக்கரதீர்த்தம். அசுவத்தவிருட்சம். புல்லாரணியம். கிழக்கே திருமுகமண்டலம். தருப்பையில் சயனத்திருக்கோலம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

இராமேசுரத்தில் செய்யவேண்டிய காரியங்களைச் செய்து முடித்துக்கொண்டு புகைவண்டியேறி இராமநாதபுரம் சென்றிறங்கி மட்சாலை வழியாகத் தெற்கே ஆறுமைல்போனால் இத்தலம் சேரலாம். முழுதும் மணற்பாதையானதால் இரட்டை மாட்டுக் கட்டை வண்டிகள்தான் கிடைக்கும். போய்வர வாடகை 3 அல்லது 4 ரூ. கேட்பார்கள். இத்தலத்தில் கல்யாணஜகந்நாதர் சந்நிதியும், ஸ்ரீராமபிரானுக்கு நின்றதிருக்கோலமும், சயனத் திருக்கோலமுமாக இரண்டு சந்நிதிகளும், ஸ்ரீ ஆண்டாளுக்கொரு சந்நிதியும் இருக்கின்றன. காலவ, கண்ணுவ ரிஷிகட்குப் பிரத்தியட்சம்.

ஸ்ரீராமர் தம் எழுபது வெள்ளம் வானர சேனைகளோடு இலங்கையை அடையவேண்டி கடலில் அணைகட்ட நினைத்துக் கடலரசனான வருணனைத் திருப்புல்லணையிற்கிடந்து வேண்ட நாள் ஏழாகியும் வருணன் வாராமையால், தாம் தமக்குரிய நாடு நகரங்களை இழந்து, வழியில் மனைவியையும் இழந்து, ஓர் அரசிளங்குமரன் அணியவேண்டிய ஆடையாபரணாதிகளின்றி மரவுரி கிருஷ்ணாஜினதாரியாய்த் தவவேடம் பூண்டு வந்திருக்கின்றமை யற்றித் தம்மை அவமதித்து விட்டானென்று கருதி, வருணன் மேல் சீற்றங்கொண்டு தம் கோதண்டத்தை வளைத்து நாணேற்றி அஸ்திரப்பிரயோகம் செய்யவே, அவ்விராமபாணத்தை எதிட்டுப் பார்க்கவும் வலியற்ற வருணன் நடுநடுங்கி ஓடோடியும்வந்து, ஸ்ரீராமரைப் பலவாறு துதித்துச் சரண்புக, அறவோராயினும், மறவோராயினும், மித்துருவாயினும், சத்துருவாயினும் தம்மைச் சரணடைந்தோரைக் காக்கக் கங்கணங்கட்டிக்கொண்டு புறப்பட்ட இராமபிரான், வருணனுக்கு அபயமளித்ததும், அவ்வருணன் மேலேவிய அம்பை அவனது வேண்டுகோட்கிணங்கி மருகாந்தாரத்தீவில் கொலைத்தொழிலிலும் புலைத்தொழிலிலும் மூழ்கிக்கிடந்த நூறுகோடிக்கு மேற்பட்ட கொடிய அரக்கர்களின்மேல் ஏவி அவர்களை வேரோடழித்ததும் இராமாயணவாயிலாகத் தெரிந்த விஷயங்கள்.

தருண மங்கையை மீட்பதோர் நெறிதரு கென்னும்
பொருளையந்து நன்னூனெறி யடுக்கிய புல்லில்
கருணை யங்கட லுயின்றனன் கருங்கட னோக்கி
வருண மந்திர மெண்ணினன் விதிமுறை வணங்கி.

பூழி சென்று தன்றிருவுருப் பொருந்தவும் பொறைதீர்
வாழி வெங்கதிர் மணிமுகம் வருடவும் வளர்ந்தான்.
ஊழி சென்றன வொப்பன வொருபக லவையோர்
ஏழு சென்றன வத்தில னெறிகடற் கிறைவன்.

ஒன்று வேண்டல ராயினு மொருவர்பா லொருவர்
சென்று வேண்டுவ ரேலவர் சிறுமையிற் றீரார்.
இன்று வேண்டிய தெறிகட னெறிதனை மறுத்தான்.
நன்று நன்றெனா நகையொடும் புகையுக நக்கான்.

பார நீங்கிய சிலையினன் னிராவணன் பறிப்பத்
தார நீங்கிய தன்மைய னுதலிற் றகைசால்
வீர நீங்கிய மனிசனென் றிகழ்ச்சி மேல்விளைய
ஈர நீங்கிய தெறிகட லாமென விசைத்தான்.

மறுமை கண்டமெய்ஞ் ஞானியர் ஞாலத்து வரினும்
வெறுமை கண்டபின் யாவரும் யாரென விரும்பார்.
குறுமை கண்டவர் கொழுங்கன லென்னினுங் கூசார்.
சிறுமை கண்டவர் பெருமை கண்டல்லது தேறார்.

(கம்பராமாயணம், வருணனை வழிவேண்டு படலம்)

இச்சிறு சம்பவத்திலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் பலவுள. சர்வலோக இரட்சகனான ஸ்ரீமந் நாராயணனே ஸ்ரீராமராக அவதரித்திருந்தும், தமக்கு எவ்வளவோ கீழ்ப்பட்டவனும், தமது ஏவலாளர்களில் ஒருவனுமான வருணனை தருப்பை சயனத்தின்மேலிருந்து வழிவேண்டினரென்றால், நாம் நமக்குக் கீழ்ப்பட்டவர்களாயினும், அவர்கள் வீட்டிற்குள்ளோ, அவர்கள் அதிகார வரம்புக்குட்பட்ட எல்லைக்குள்ளோ பிரவேசிப்பதற்குமுன், அவர்களிடம் தெரிவித்து, அவர்கள் அனுமதி பெறுதலவசியம் என்று தெரிகிறது. இந்நற் பழக்கம் இக்காலத்தில் நாம் மேல்நாட்டாருடன் பழகிய பிறகு தான் நம்முளிருக்கிறது, அதற்குமுன் இருந்ததில்லை என்று நினைப்பார்கட்கும், சொல்லுவார்கட்கும், அவர்கள் நினைப்பும் சொல்லும் தவறு என்பதற்கும், இவ்வரிய பழக்கம் நம் இந்திய நாட்டில் இராமர்காலம் முதலிருந்துவருகிறது என்பதற்கும் இது ஒரு மறுக்கத்தகாத சான்றாகும். தவிர தனக்கு மேலானவர் களாயினும், தன்னிடத்தில் வந்திருந்து தன் அனுமதியை எதிர்

பார்க்கும்படி நேர்ந்துவிட்டதன்றோவென, அகந்தை மிகுந்து வாளாவிருத்தல் தவறென்பதிலும் அவ்வாறிருப்பரேல் அத்தகைய புல்லியோர் வருணன் துன்புற்றதுபோல் துன்புறுவர் என்பதிலும் சற்றேனுமையமின்று. மற்றும் தம்மைக் கேட்போர் யாரும் இல ரென்றெண்ணிக் கொடுஞ்செயல்புரிவோர், இறுதியில் ஒறுக்கப் படாதொழியார் என்பதற்குத் தீச்செயல்களில் மூழ்கிக்கிடந்த மருகாந்தாரத்தீவாரை இராமபாணம் சென்றழித்து வந்ததே போதிய சான்ருகும். இதைப்பற்றிப் பெரிதும் எழுதின் விரியு மென்றஞ்சி விடப்பட்டது.

சந்நிதிக்கெதிரில் கீழவீதியில் லோகல்பண்டு (Local Fund) சத்திரம் ஒன்று பெரிதாகவும் சுத்தமாகவும் இருக்கின்றது. உட்பக்கத்திலேயே நல்ல தண்ணீர்க் கிணறென்று இருக்கிறது. யாத்திரைக்காரர்கள் சமைத்துச் சாப்பிடுவதற்குத் தனித்தனியான அறைகளிருக்கின்றன. சத்திரத்தில் பாத்திரங்கள் கொடுக்கின்ற னர். இதில் துவாதசிதோறும் 50 பிராமணர்களுக்குக் குறைவின்றி அன்னமளிக்கின்றனர்கள். தவிர, கோவிலுக்குள்ளிருக்கும் சத்தி ரத்தில் தினந்தோறும் பகலில் எத்தனை பிராமணர்கள் வரினும் சாப்பாடு போடுவதற்குத் திருவாங்கூர் அரசர் ஏற்பாடுசெய்திருக் கின்றனர். மூன்ருவது சத்திரமாகிய புருஷோத்தம பண்டிதர் சத்திரத்தில் இரவில் வருகிற பிராமணர்களுக்கெல்லாம் சாப்பாடு போடுகிறர்கள். ஆகவே இரவு பகல் இருவேளையும் பிராமணர் கட்குச் சாப்பாடுண்டு. பிராமணரல்லாதாரில் ஒருவருக்கு ஒரு வேளைக்காயினும் சாப்பாட்டுக்கு வழியில்லை. ஆனல் யாத்திரை செய்பவர்கள் பெரும்பாலோர் பின்வருப்பாரே.

ஊருக்கு வடகிழக்கில் இருபத்தோராண்மனை யென்னு மொரு புராதனக்கட்டிடம் இருக்கிறது. மைசூரில் அரசாண்டி ருந்த ஹைதர், அவர் குமாரர் திப்புசுல்தான் இவர்கள் காலத்தில் முகமதியர்கட்குப் பயந்து அப்போதிருந்த இராமநாதபுரம் ஜமீன் தார் தம்முடைய 21 மனைவிகளையும் தனிமையான இக்கட்டிடத் தில் கொண்டுபோய் ஒளித்து வைத்திருந்ததாகச் சொல்லப்படு கிறது. இப்போது அதில் 32 அறைகளிருக்கின்றன. அதிலிருந்த கதவு பலகணி முதலிய மர இரும்பு சாமான்களைப் பிற்காலத்திலி ருந்த ஜமீன்தாரொருவர் தம் சொந்த உபயோகத்திற்காகக்

கொண்டுபோய்விட்டனரென்று தெரிகிறது. தற்காலத்தில் இந்தக் கட்டிடமானது அநேக இராஜாங்கங்களிலிருக்கின்ற பழைய கட்டிடங்களைப்போலவே மரங்கள் வளர்ந்தும், செடிகள் நிறைந்தும இருப்பதும் தவிர ஆடுமாடுகளடைவதற்கு உபயோகப்படுகின்றது.

ஊருக்கு வடக்கில், சுமார் ஒருமைல் தூரத்தில், தனிமையான ஓரிடத்தில் புல்லாணியம்மன் கோவிலிருக்கிறது. தஞ்சை செங்காளிநாச்சியாரம்மன், வல்லம் ஏகேரியம்மன், பட்டுக்கோட்டை நாடியம்மன், ஓட்டப்பிடாரம் உலகம்மன் இவைகள் போன்று, இவ்வம்மனும் இவ்வூருக்குப் பிரத்தியட்சக் காப்புத் தெய்வமாக விளங்குகிறது. இவ்வம்மன்பேர்பற்றியே இவ்வூருக்குப் புல்லாணியென்று பெயர் உண்டாயிற்று என்று சொல்லுவாருமுளர். ஆனாலிது இராமர் புல்லணையிற் கிடந்து வருணணை வழிவேண்டிய தலமாதலாலும், இது ஒரு சிறந்த விஷ்ணுஸ்தலமாக விளங்குவதாலும் திருப்புல்லணை யென்னும் பேரிநந்து திருப்புல்லாணியென வழக்கில் மருவியிருத்தல்வேண்டும் என்பதுதான் பொருத்தமாகத் தோற்றுகிறது. இத்தலத்தில் ஆடிமாதத்தில் பிரமோற்சவமும் சித்திரைமாதத்தில் சைத்ரோற்சவமும் நடக்கின்றன.

திருப்புல்லாணியிலிருந்து தென்கிழக்கில் சுமார் 3மைல் தூரத்தில் சமுத்திரமிருக்கிறது. அங்கும் சேது என்ற ஸ்நான கட்டம் இருக்கிறது. அந்த சேதுக்கரையில் மதுரை சீனிவாச ராயர் சத்திரம் ஒன்றிருக்கிறது. அதிலும் பிராமணர்களுக்கு இனமாக அன்னமளிக்கின்றனர். அச்சமுத்திரத்தினருகில் ஒரு கிணறு இருக்கிறது. அதில் விழுப்பு ஸ்நானம் செய்துவிட்டு சேதுஸ்நானம் செய்தல் வேண்டும். திருப்புல்லாணியிலிருந்து சேதுக்கரை போகிறவழியில் அகத்தியர்கோவில் ஒன்று இருக்கிறது அது பார்க்கத்தகுந்தது. வட இந்தியாவில் உள்ளவை போல் வெள்ளைச்சலவைக்கல்லினால் செய்யப்பட்டுத் தூவெண்மையான நிறத்தோடு ஒளிர்கின்றது. இதைத்தவிர தென்னாட்டில் அகத்தியருக்கு வேதாரண்ணியத்திற் கருகிலுள்ள அகத்தியான் பள்ளியிலும் திருநெல்வேலி ஜில்லா பாபநாசத்திற்கடுத்த பொதியமலையிலும், கோவில்களிருக்கின்றன. திருப்புல்லாணியில் புரோ

கிதர்கள் கிடைப்பார்கள். சேதுக்கரையில் கிடைப்பதருமை. போகும்போது அழைத்துச் செல்லல் உசிதம்.

இராமநாதபுரம்:—திருப்புல்லாணியிலிருந்து திரும்பி இராமநாதபுரம் போய்த்தான் ரயிலேறவேண்டும். இராமநாதபுரம் ஒரு சிறு பட்டினமாக இருக்கிறது. இவ்விடத்தில் சேதுபதியென்று அழைக்கப்படுகிற இராமநாதபுரம் ராஜா வசிக்கின்றார். இராமேசுரம் போய் வருவோர் இவரைத் தெரிசித்தல் விசேஷம் என்று சொல்லப்படுகிறது. இவ்விடமிருந்து திருக்கோட்டியூர், திருமெய்யம் முதலிய விஷ்ணு க்ஷேத்திரங்கட்கும், திருக்கானப்பேர், (காளையார்கோவில்) திருவாடானை, உத்தரகோசமங்கை முதலிய சிவக்ஷேத்திரங்கட்கும், குன்றக்குடி முதலிய சுப்பிரமணிய க்ஷேத்திரங்கட்கும் போகலாம்.

திருப்பூவணம் (திருபுவனம்):—திருப்பூவண நாதர்—மின்னும்பிகை—வைகைநதி தீர்த்தம்.

பொன்னனையாள் எனும் உருத்திர கணிகையார் ஒருவர் சிவ விக்கிரகமொன்று செய்வதற்குவேண்டிய பொன் சேமிக்கக் கருதியிருக்க, அவ்வம்மையாரின் வருவாய் சிவனடியார்கட்கு மகேசுரபூசை செய்துவைப்பதற்கே சரியாக இருந்தமையால் பெரிதும் மனம் வருந்துவதைக் காணப்பொறாத கருணையங்கடலாகிய கங்காதரன் இரசவாதியாய் வந்து தம் வாத வித்தையால் பொன் செய்து கொடுக்க, அப்பொன்னால் விக்கிரகம் செய்து அதன் அளவற்ற அழகை ஆர்வத்தோடு நோக்கி "அச்சோ என் அழகிய பிரானே" என்று சொல்லிக்கொண்டு, அத்திருவுருவத்தின் வலது கன்னத்தைக் கிள்ளி முத்தமிட, அக்கிள்ளலினாலாய குறியை இக்காலத்திலும் அணியப்பெற்றவராய் அடியார்கட்குக் காட்சி கொடுத்தருளுந்தலம். இக்காரணம்பற்றியே அப்பெருமானுக்கு "அச்சோ அழகு" என்ற திருநாமம் வழங்கி வருகிறது.

பப்புருவ மகரிஷி, சேர, சோழ, பாண்டியர்கள் பூசித்து முத்தியடைந்த தலம். சுந்தரமூர்த்திசுவாமிகட்குத் திருக்கோலம் காட்டிய தலம்.

கருவூர்த்தேவரால் திருவிசைப்பாப் பாடலும், ஆசிரியர்கள் மூவராலும் பதிகங்கள் பெற்ற தலம்.

## அத்தியாயம் 2.

கண்டிகை திருநீ றிட்டுக் கருத்திலஞ் செழுத்தை யுன்னி
தெண்டனிட் டால வாயன் சேவடி தனியெந் நாளுந்
தண்டமி ழலங்கல் சூட்டிச் சாந்தமுற் றிருப்பா ராகில்
சண்டனு மணுகா னின்பஞ் சார்ந்திடற் கைய முண்டோ.

மதுரை (திருக்கூடல், திருவாலவாய்):—சமட்டிவிச்சா புரம், நான்மாடக்கூடல், கடம்பவனம், துவாதசாந்தத்தலம் எனப் பல பெயருடைத்து.

சொக்கநாதர், மீனாட்சியம்மை, வைகைநதி, எழுகடல், புறத்தொட்டி, பொற்றாமரை முதலிய சைவமத சம்பந்தமான வைகளும், கூடலழகர், வகுளவல்லி நாச்சியார், மாகதவல்லி, வரகுணவல்லி, மதுரைவல்லி, அஷ்டாங்கவிமானம், ஏமபுஷ்கரணி, சக்கரதீர்த்தம் முதலிய வைணவ மத சம்பந்தமானவைகளும் உள்ளன.

இத்திருப் பெருந்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானுக்குச் சொக்கநாதர் என்பது சாதாரணமாக வழங்கும் பெயர். அவருக்கே ஆலவாய்ச் சுந்தரர், கடம்பவன சுந்தரர், கல்யாண சுந்தரர், கற்பூர சுந்தரர், சண்பக சுந்தரர், சோமசுந்தரர், பழிக்கஞ்சிய சுந்தரர், மீனாட்சி சுந்தரர், சுந்தரேசர் எனப் பலபேர்களுள. திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள் இவர்களால் பதிகம் பெற்றது.

விஷ்ணு ஆலயம்:—திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், ஆண்டாள் இவர்களால் மங்களாசாசனஞ் செய்யப் பெற்றுளது.

இப்பட்டினமானது பண்டைக் காலத்தில், சிவனடியார்களான பாண்டியர்கட்கு உறைவிடமாயிருந்து சிவபிரான் 64 திருவிளையாடல்கள் செய்தருளிய தலம். அவற்றில் 8-வது திருவிளையாடலாகக் குண்டோதரனைத் திருப்தி செய்விக்க அன்னக் குழியையும், வைகை நதியையும் அழைத்தபோது, பரமசிவன் குண்டோதரனை நோக்கி, "இதோ ஆறு பெருக்கெடுத்து வருகிறது. உன் பெருந் தாகத்தைத் தணித்துக்கொள். வைகை." என்று சொன்னதாகவும், அக்காரணம்பற்றியே அந்நதிக்கு வைகை எனப் பெயர் வழங்குவதாகவும் சொல்லப்படுகிறது. இந்நதியில்

தான், சைவந் தழைக்கவும், சமணந் தாழ்க்கவும், திருஞான சம்பந்த சுவாமிகளால் இடப்பெற்ற திருநள்ளாற்றுப் பதிகமுள்ள திருவேடு எதிர் சென்றது. இந்நதிக்குச் சிவகங்கை, சிவஞான தீர்த்தம், வேகவதி, கிருதமாலை, வைகை எனப் பல நாமங்களுள வென்பதும், அவை வந்த காரணமும், இந்நதியின் அளவற்ற பெருமையையும் பின்வரும் செய்யுள்களாற் காண்க.

தீர்த்த னிதழிச் சடை நின்று மிழிந்து வரலாற் சிவகங்கை
தீர்த்த னுருவந் தெளிவோர்க்கு ஞானந் தருதலாற் சிவஞான
தீர்த்தங் காலிற் கடுகி வருஞ் செய்தியாலே வேகவதி
தீர்த்தங் கிருத மாலையென வைகை நாமஞ் செப்புவரால்.

கல்லார் கவிபோற் கலங்கிக் கலை மாண்ட கேள்வி
வல்லார் கவிபோற் பலவான் றுறை தோன்ற வாய்த்துச்
செல்லாறு தோறும் பொரு ளாழ்ந்து தெளிந்து தேயத்
தெல்லாரும் வீழ்ந்து பயன் கொள்ள விறுத்த தன்றே.

இத்தலம், மூர்த்திநாயனுர் அவதரித்துச் சிவபெருமானுக்கு நாடோறுந் தவருது சந்தனமிழைத்து உதவி வந்த திருப்பணியி லீடுபட்டிருந்து ஒருநாள் அத்திருப்பணிக்குச் சமண மதத்தனான அரசனால் இடையூறு நேரிட, தமது கையைச் சந்தனக் கல்லில் என்பு தேயத் தேய்த்துச் சிவனருள் பெற்று, இறுதியில் அப் பாண்டி நாட்டிற்கரசனுகி சமணமழியச் சைவமோங்கத் திருநீறே அபிஷேகத் திரவியமாகவும், உருத்திராக்கமே திருவாபரணமாக வும், சடைமுடியே கிரீடமாகவும் கொண்டு சிவநெறி வழாமலும், சிவபத்தி குறையாமலும், மனுநெறி தவருமலும், ஆண்டுவந்தமை யாலே "மும்மையாலுலகாண்ட மூர்த்தி" எனப் புகழப் பெற்றுச் சிவபதமடைந்த சிறப்புடைத்தாயது. தவிர, கூன்பாண்டிய னுக்கு அமைச்சராக இருந்த குலச்சிறை நாயனுரும், அப்பாண்டி யனது மனைவியான மங்கையர்க்கரசி யம்மையாரும், சிவபத்தி யின் முதிர்ச்சியாலும், திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளின் திருவருளாலும், முத்தி பெற்றதும், அந்தக் கூன்பாண்டியனும் சுவாமிகள் திருக்கரத்தால் தீண்டித் திருநீறணியப்பெற்ற மகிமை யால் சமணமதத்தை விட்டு, சைவமதத்தைத் தழுவி முத்தி யடைந்ததும் "கூடலாலவாய்க்கோனை விடைகொண்டு—வாடன் மேனி யமணரை வாட்டிட—மாடக்காழிச் சம்பந்தன் மதித்தது" மான இவ்வரும் பெரும் தலத்தின் மகிமையையும், பெருமையை

யும் விரிப்பின் பெருகுமென்றஞ்சி விடப்பட்டது. சுருங்கச் சொல்லின் மூர்த்தி, தலம், தீர்த்தமென்னும் மூவகையானுஞ் சிறந்த தலங்களில் இதற்கொப்புயர்வான தலம் வேறு இல்லையென்றே கூறலாம்.

திருவால வாய்க்கிணையா மொருதலமுந் தெய்வ மணஞ் செய்யப்பூத்த
மருவார்பொற் கமலநிகர் தீர்த்தமு மத்தீர்த்தத்தின் மருங்கின் ஞான
வுருவாகி யுறைசோம சுந்தரன்போ லிகபரந்தந் துலவா வீடு
தருவானு முப்புவனத் தினுமில்லை உண்மையிது சாற்றின்மன்னே.

தமிழ்த்தாய் மக்களுக்கிது மிகவும் அருமையான தலம். இவ்வூரில், ஆதிகாலத்திலிருந்த முச்சங்கங்களிற் சிறந்ததான கடைச்சங்கம் நிறுவப் பெற்றிருந்து, அரசர் முதலிய பலருந் தமிழை ஆதரித்து வந்தமைபற்றி, இதற்குத் "தேன் இந்திய ஏதென்ஸ் நகரம்" (South Indian Athens) எனும் பெயர் வந்துளது.

தமிழ் என்னும் இனிமைப் பொருளளிக்கும் பேர்பெற்ற பெரும்பேறடைந்தும், நீர் சூழ்ந்த இந்நிலவுலகில் வழங்கும் நூற்றுக் கணக்கான மொழிகளில் ஒன்றிலாயினும் காணப்பெறாத "ழகர" ஒற்றையுடைத்தாயதால் தமிழ் (தமி+ழ்) எனும் காரணப் பெயர் புனைந்ததுமான நம் தமிழ்மொழி "பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத் திருப்பிலே இருந்து வைகையேட்டிலே தவழ்ந்த பேதை" என்னும் ஆன்றோர் மொழிக்கிணங்க இத்தலத்தில் கடைச்சங்கப் புலவர்கள் எனும் காராளரால் போற்றப்பட்டு செழித்து வளர்ந்து வந்ததென்பதும், இக்கடைச்சங்கமிருந்திராவிடில் நமக்கு இக்காலத்திற் கிடைத்துள்ள அநேக அரிய பெரிய சங்க நூல்கள் கிடைத்திராவென்பதும், அவைகளின்றேல் அக்காலத்தில் நம் தமிழ்மொழி பெற்றிருந்த அதி மேம்பாடான நிலையும், நம்முன்னோர்களால் அனுஷ்டிக்கப் பட்டுவந்த பழக்கவழக்கங்களும் நமக்குத் தெரியாமலே மறைந்து போயிருக்கும் என்பதும், யாவரும் நன்கு அறிவார்கள்.

இவ்வூரில் பார்க்கவேண்டிய கட்டிடங்கள் மீனாட்சி சுந்தரேசுரர் கோவில், பெருமாள் கோவில், திருமலை நாயக்கர் மஹால் என்று சொல்லப்படும் அருமையான கட்டிடம், வண்டியூர்த்தெப்பக்குளம், பெரிய ஆலமரம், மாதா கோவில்கள் முதலியன.

இவைகளில் மீனாட்சி சுந்தரேசர் ஆலயமானது சுமார் 300 கஜம் நீளமும் 250 கஜம் அகலமுமுள்ளது. 9 கோபுரங்களுண்டு. அவைகளிலுயர்ந்தது சுமார் 150 அடிக்குமேல் 160அடி வரையில் இருக்கலாம். கோவிலிலுள்ள பொற்றாமரைக் குளத்தில் இக்காலத்திலும் மீன்கள் உயிர் வாழ்வதில்லை. கோவில் திருக்குளம் எல்லாம் நகரத்துச் செட்டிமார்களால் திருப்பணி செய்யப்பெற்று மின்சார விளக்குகளுடன் பிரகாசிக்கின்றது. கறுப்புச் சலவைக்கல்லினால் அற்புதமான வேலை செய்திருக்கிறார்கள். இக்கோவிலில் செய்திருக்கும் சிற்ப வேலைகளோ மிகச் சிறந்தவை. சிலைகளெல்லாம் உயிருடன் எட்டிப் பார்ப்பதுபோல் காணப்படுகின்றன.

திருமலை நாயக்கர் மஹால் ஊருக்கு நடு நாயகமாக விளங்கிவருகிறது. விசித்திரமான வேலைப்பாடுள்ள பழமையான கட்டிடங்களில் இதை முதன்மையானதாகச் சொல்லலாம். இதன் நடுவில் இருக்கிற பெரிய மண்டபமும், அதற்காக நிறுத்தியிருக்கும் பருத்த தூண்களும் பார்க்கத் தகுந்தவை. இம்மண்டபம் சுமார் 61 அடி குறுக்களவும், 73 அடி உயரமுமுள்ளது. இக்கட்டிடத்தில் சுமார் 120 தூண்கள் வரையில் இருப்பினும் அவைகளில் செய்திருக்கும் சிற்ப வேலையானது ஒன்றில் இருப்பது போல் மற்றொன்றில் இல்லை. ஒன்றிற்கொன்று விசித்திரமாகவும், புதிதாகவும் காணப்படுகிறது. இப்பெரும் கட்டிடத்தில் ஜில்லா கோர்ட்டு, சப் கோர்ட்டுகள், ரிஜிஸ்தர் ஆபீசுகள் முதலிய கச்சேரிகள் இருக்கின்றன. ஊருக்குக் கிழக்கில், சுமார் 2 மைல் தூரத்திலிருக்கிற வண்டியூர்த் தெப்பக்குளம் 1000 அடி சதுரமுள்ளதாகவும், பார்ப்பதற்கு இரமணியமாகவுமிருக்கிறது. இதையும் திருமலை நாயக்கரே வெட்டியதாகச் சொல்லப்படுகிறது. இது சதுரமாகவும், சுற்றிலும் கைப்பிடிச் சுவர்கள் அமைக்கப்பெற்றுமிருக்கிறது. நடுவிலிருக்கிற நீராழி மண்டபமும், அதிலிருக்கிற அடர்ந்த மரங்களும், அவைகளுக்கு நடுவிலிருக்கிற கோபுரமும், பார்வைக்கு வெகு அழகாக இருக்கின்றன. ஒவ்வொரு வருஷமும் தைப்பூசத்தில் சுற்றிலும் தீபங்கள் போட்டுத் தெப்போற்சவம் நடைபெறுகிறது. இந்தக் குளத்திற்குப்போகிற வழியில்தான் ஒரு பெரிய ஆலமரம் இருக்கிறது. பார்க்கத் தகுந்தது. இவ்வாலமரத்தின் அடிப்பாகத்தின் சுற்றளவு சுமார் 70அடி.

அம்மரத்தின் நிழல்கொண்ட பாகத்தின் குறுக்களவு எப்படி அளந்தாலும் சுமார் 180 அடிவரையில் இருக்கிறது. இவ்வூரில் மாதந் தவருமல் உற்சவங்கள் நடக்கின்றன. அவைகளில் சித்திரைத் திருவிழா மிகவும் சிறந்தது.

இவ்வூரினின்றும் போய்ப் பார்க்கவேண்டிய தலங்களில் முக்கியமானவை:—1. திருமாலிருஞ்சோலை. 2. திருப்பரங்குன்றம். 3. திருப்புத்தூர். இவைகளைத் தவிர பசுமலை சென்று அங்கிருக்கும் கலாசாலைகளைப் பார்ப்பதுடன், ஆனைமலை சென்று அதிலிருக்கும் குகைகளையும், அவற்றுள் ஒன்றில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் நரசிம்ம சுவாமியையும் தெரிசிக்கலாம்.

திருமாலிருஞ்சோலை (சோலைமலை, அழகர்கோவில்):—மாலலங்காரர். சௌந்தர ராஜர் (அழகர்). கல்யாணவல்லித்தாயார். பூதேவி. சோமசுந்தர விமானம். சிலம்பாறு (நூபுரகங்கை). ரிஷபகிரி. சந்தன விருட்சம். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். மலையத்துவச பாண்டியனுக்கும், தருமதேவதைக்கும் பிரத்தியட்சம். நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், திருமங்கை மன்னன், ஆண்டாள் மங்களாசாசனம்.

இக்கோவிலில் ஸ்ரீ ஆண்டாளுக்கொரு சந்நிதி இருக்கிறது. இத்தலம் மதுரைக்கு வடகிழக்கில் 12 மைல் தூரத்திலிருக்கிறது. குதிரை வண்டிகள், மோட்டார் வண்டிகள் வாடகைக்குக் கிடைக்கும். சாலை நன்றாக இருக்கிறது. இங்கிருக்கும் பெருமாள் கோவில் பெரிதாகவும், அழகாகவும் அமைந்திருக்கிறது. எதிரிலிருக்கும் மண்டபத் தூண்களில் செய்திருக்கும் சிற்பவேலைகள் பார்க்கத்தக்கன. ஆனால் யாது காரணம்பற்றியோ அத்தூண்களிற் செதுக்கப்பட்டிருக்கிற கற்சிலைகளுக்கெல்லாம் ஏதாவது ஒரு அவயவம் பின்னமாயிருக்கிறது. இக்கோவில் மண்டபம், வடக்கில் இருக்கும் திருக்குளம் எல்லாவற்றிற்கும் மின்சார விளக்குகள் போட்டு நட்சத்திர மண்டலம் பூமியில் இழிந்து தவழ்வது போல் பிரகாசிக்கின்றது. கோவிலுக்கு வட பக்கத்தில் மலையின் மேலுள்ள நூபுர கங்கைக்குப் போகப் பாதை இருக்கிறது. நூபுர கங்கையென்பது ஒரு சிறிய நீர் வீழ்ச்சி. இதில் ஸ்நானம் செய்தல் மிக்க விசேஷம். கோவிலின் விமானம் முழுவதும் தங்கத் தகட்டினால் மூடப்பட்டிருக்கிறது. இதை மேலே ஏறிப் பார்ப்ப

தற்கு வழியிருக்கிறது. கோவிலில் அநேக தங்க வாகனங்கள் இருக்கின்றன. கோவிலின் வெளிக் கோபுரத்துக்கருகில் சில கோவில்களிருக்கின்றன. ஸ்ரீரங்கத்திலுள்ள மொட்டைக் கோபுர வாயில்போன்ற ஒரு பெரிய வாயிலிருக்கிறது. அதன் கதவு எப்போதும் மூடியிருக்கும் என்றும், அக்கதவு இருக்குமிடத்திற்குப் போவதற்குள் 18 படிகள் ஏறிப் போகவேண்டுமென்றும், அது பதினெட்டாம்படிக் கறுப்பென்னும் தேவதைக்கு இருப்பிடமென்றும் சொல்லப்படுகிறது. இங்கு எல்லாப் பூசையும் அந்தக் கதவிற்குத்தான் செய்கிறார்கள். இச்சந்நிதியில் ஜனங்கள் தங்கள் தங்களுக்கிருக்கிற வழக்குகளை வந்து சொல்லிக்கொள்ளுகிறதென்றும், யாரொருவன் அப்பதினெட்டுப் படிகளிலும் ஒரு முறை ஏறி யிறங்குகிறானோ, அவன் கொடுமையான பிரமாணம் செய்தவனாக ஒப்புக்கொள்ளப்படுகிறானென்றும், பொய்ச் சத்தியம் செய்கிறவனுக்கு பெருந்தீங்கு உடனே உண்டாகிறதென்றும் தெரிகிறது. இப்படிப் பிராது சொல்லுகிறவர்களும், பிரமாணம் செய்கிறவர்களும், கோவிலுக்கு 3 ரூபாய் கட்டணம் செலுத்தவேண்டும். இது முற்காலத்தில் மிகப் பிரபல ஸ்தலமாகவும், இக்கோவிலைச் சுற்றிப் பெரிய பட்டினம் இருந்ததாகவும் தெரிகிறது. யாது காரணம்பற்றியோ அப்பட்டினமுமழிந்து கோவிலில் செய்திருக்கும் சிற்பவேலைகளும் செதுக்குண்டு பின்னமடைந்திருப்பதும் தவிர, தற்காலத்திலிது குளிர் காய்ச்சலுள்ள பிரதேசமாயிருக்கிறது. ஆகையால் கோவிலைச் சுற்றி 4 மைல் வரையில் ஜனங்கள் வசிக்க அஞ்சுகிறார்கள். இங்கு ஒருவரும் இரவில் தங்குவதில்லை. யாத்ரீகர்கள் தங்கள் சாப்பாட்டிற்காகத் தகுந்த ஏற்பாட்டோடு போகவேண்டும். ஆனால் கோவிலில் பிரசாதம் கிடைக்கும். தங்குவதற்கோ ஏராளமாக இடமிருக்கிறது. இது முருக்க் கடவுளுடைய ஆறு படை வீடுகளில் ஒன்றான பழமுதிர்சோலை என்று கருதப்படுகிறபடியால் இருசமயத்தாரும் சென்று வணங்கும் சிறப்பினையுடைய தலமாக இருக்கிறது.

இத்தலம் சுப்பிரமணியத் தலமாக இருந்து, பின்பு சில வைணவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, விஷ்ணுத் தலமாக மாறியிருக்கவேண்டுமென்பதற்கு ஆதாரங்கள்:—இத்தலம் சைவ சமயத்தவர்களான நக்கீரர், அருணகிரிநாதர் இவர்களால் பாடல் பெற்றிருக்கிறது. மேலும் இத்தலத்தில் அமைந்துள்ளபடி சுவாமி

இருபக்கத்திலும் இரு தேவிமாருடன் நின்ற திருக்கோலமாகக் காட்சியளிக்கும் நிலே, முருகக்கடவுள் ஆலயங்களிலன்றி விஷ்ணு ஆலயங்களில் எங்கும் காணப்படவில்லே. இத்தலத்திற்குக் காவலாளராகவீரவாகு தேவர் அமைந்திருப்பதும், வாயிலில் பதினெட்டாம்படிக் கறுப்பின் கோவில் இருப்பதும் யாவராலும் மறுக்கக் கூடாத அறிகுறிகள். இத்தலத்தில் சுப்பிரமணியமூர்த்தியை மாற்றி பெருமாளாகக் கொண்டாடுதல்பற்றியே இவ்வூர் வாசத்துக்குத் தகுதியில்லாமல் போய்விட்டதென்று சொல்லுவாருமுளர்.

திருப்பரங்குன்றம் (திருப்பரங்கிரி, கந்தமாதனம்.):—பரங்குன்றேசர். ஆவுடைநாயகியம்மை. பிரமகூபம். சத்தியகூபம். சரவண தீர்த்தம். திருஞானசம்பந்த சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவர்களால் பதிகம் பெற்றுள்ளது.

சிபிச் சக்கரவர்த்தியிடம் பரமசிவன் ஒரு மறையவராய் வந்து தானம் பெற்று, சக்கரவர்த்தியின் மனக்குறை தீர்த்தருளிய தலம். இத்தலத்தில், முருகக்கடவுள் பராசருடைய புத்திரர்களேக் காப்பாற்றியதாகவும், சூரபத்மாவைக் கொன்று வாகை சூடி இந்திரன் மகளான தெய்வயானே யம்மைக்கு மணமாலே சூட்டியதாகவும் தெரிகிறது.

முற்காலத்தில், பிரகலாதாழ்வார் தன்னே ஈன்ற தந்தையான இரணியகசிபின் நாமத்தைச் சொல்ல மறுத்து, ஸ்ரீமந்நாராயணனுடைய திருநாமத்தையே சொல்லிவந்ததுபோல், ஒரு பெண் தன் கணவன் பெயரைக் கூறுமல் முருகக்கடவுளின் பெயரையே எப்போதும் சொல்லிவந்த காரணத்தால், அவள் கணவன் அவள் கரங்களில் ஒன்றை வெட்டி வீழ்த்த, அது முருகன் திருவருளால் மீண்டும் முன்போல் வளரப்பெற்ற தலம். அரிச்சந்திரன் [illegible]த் தன் பொய்யா விரதம் வழுவாமல் புகழ்பெற்ற தலம். இவ்வூர்க்கோவில் பெரிதாகவும அழகாகவும் கட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கோவில் மலேயடிவாரத்தில் இருக்கிறது ஸ்தம்பங்களில் சிற்ப வேலேகள் அதிகம். வெளிக் கோபுரத்திற்குச் சுமார் 50 கஜம் மேற்கில், மலேயின் மேலேறிப் போகப் பாதையிருக்கிறது. படிகள் நல்ல நிலேமையிலிருக்கின்றன. மலேயில் பாதி தூரம் ஏறிச்சென்றவுடன் ஒரு சிறு பரப்பு நிலமும் அதில் சில மரங்களும் ஒரு சிறு முகமதியப் பள்ளிவாசலும் இருக்கின்றன. அவ்விடத்திலிருந்து

மலையினுச்சிக்குப் போகிற பாதையொன்றும், மலையைச் சுற்றிக் கொண்டு மேற்கே போகிற பாதையொன்றும் தென்படுகின்றன. மலையின் உச்சிக்குப்போனால் அங்கே சிக்கந்தர் பாட்சா என்னும் பெரியாரின் சமாதி இருக்கின்றது. அங்கு ஒரு முகமதிய குடும்பத்தார் வசிக்கின்றார்கள். இம்மலையில் வந்து சமாதிபெற விரும்பிய முகமதியப் பெரியாரின் பெயரும் மகாதேஜஸ்வியான கந்தர் எனவும், பார்வதி நந்தனனான கந்தர் எனவும் பொருள்படுகின்ற *பெயராக அமைந்திருப்பதை நோக்கில் அக்கந்தவேளுடைய மகிமை நன்கு விளங்கும். மற்றப்பாதைவழியே சென்றால் மலையின் மேற்பாகத்தில் ஒரு பிளவில் இருக்கின்ற ஸ்ரீ காசி விசுவநாதர் ஆலயத்திற்குச் செல்லலாம். இவ்வாலயத்திற் கெதிரில் இரண்டு நீர்ச்சுனைகள் இருக்கின்றன. இவைகளில் தங்கமீன், வெள்ளிமீன் என்று சொல்லத்தகுந்ததும், மீன் என்னும் சொல்லிற்கு நட்சத்திரம் என்று இம்மீன்களின் ஒளியைக்கொண்டுதான் பொருள் ஏற்பட்டதோவென ஐயுறக்கூடிய ஒளிபொருந்தியதுமான, மஞ்சள்நிற மீன்களும், வெண்மைநிற மீன்களும் இருக்கின்றன. அவைகளுக்குக் கடலை, அவல், பொரி முதலிய தின்பண்டங்களைப் போட்டு யாத்ரீகர்கள் போற்றிவருகின்றனர். அவைகள் எல்லாம் சிவனடியார்கள் என்று கருதப்படுகின்றன. சுனைக் கரையில் இருந்துகொண்டு நமசிவாயா! காசிவிசுவநாதா! காலபைரவா! என்று கூவியழைத்தால் அம்மீன்கள் தாமாகவே மேலே வந்து உலாவும் என்று சொல்லப்படுகிறது. அவரவர்கள் சக்திக்குத் தகுந்த வேலைசெய்து அதன் வருவாய்கொண்டு வயிறுவளர்க்க அவசியமான கைகால்களையும் அவயவங்களையும் போதுமான பகுத்தறிவையும் கடவுளால் அளிக்கப்பெற்ற மானிடர்களே, வேலைசெய்தால் மெய்வருந்துமென்று பயந்து சோம்பேறிகளாய்த்திரிந்து, பசிவந்திடிற் பத்தும் பறந்துபோம் என்பதற்கிணங்க, பசிப்பிணிதீர்க்கப் பத்துக்காதமாயினும் பொருட்படுத்தாது நடந்துசெல்கிறார்களென்றால், ஒருவித உணவும் கிட்டாத

*குறிப்பு:— சீகந்தர் என்பது மூதற்குறைந்து, சிக்கந்தர் எனத் திரிந்ததாகக்கொண்டு, சீகந்தர் என்னும் மொழி (சீ + கந்தர்) காந்தி அல்லது பிரகாசம் பொருந்திய கந்தர் எனவும், பார்வதிபுத்திரனான கந்தர் எனவும் பொருள்படுதல் உணர்க. (சீ = காந்தி; பிரகாசம்; பார்வதி.)

மலைச்சுனையிலுள்ள மீன்கள் உணவு கிடைக்குமென்று தெரிந்தால் ஆவலோடு வெளிவருவது வியப்பாகாது.

இது முருகக்கடவுளுடைய ஆறு படைவீடுகளில் ஒன்றனதால் கார்த்திகைதோறும் ஏராளமான ஜனங்கள் வருகின்றார்கள். சந்தை கூடுகிறது. ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்தில் திருவிழா நடக்கிறது. இத்தலத்திலிருக்கும் சுப்பிரமணியமூர்த்தி மற்ற தலங்களில் இருப்பது போலன்றி மலையிலேயே செதுக்கப்பட்டிருக்கிறது. இந்த க்ஷேத்திரம் பிருதிவி க்ஷேத்திரமாகக் கருதப்படுகிறதாலும், மூர்த்தி பிருதிவிமயமாக இருப்பதாலும் ஜலத்தினால் அபிஷேகம் செய்வதில்லை. ஆண்டுக்கிருமுறை புனுகுசட்டஞ் சேர்ந்த குழம்பினால் அபிஷேகம் நடக்கிறதாகத் தெரிகிறது. இத்தலம் மதுரைக்குத் தென்மேற்கே சுமார் $3\frac{1}{2}$ மைல் தூரத்திலிருக்கிறது. ரயில் வழியாகவும் சாலைவழியாகவும் போகலாம். போகும் வழியில் பசுமலைக்குன்று பார்த்துப்போகலாம்.

திருப்புத்தூர்:—திருப்புத்தூரீசர். சிவகாமியம்மை. அற்புத கங்கை.

உமாதேவியார், தேவேந்திரன், தேவகன்னிகை முதலியோர் பூசித்துத் தங்கள் தங்கள் இஷ்ட சித்திகளைப்பெற்ற தலம். திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள் இவர்களாற் பதிகம்பெற்ற தலம்.

மேற்கூறிய தலங்களைத் தெரிசித்துவிட்டு மதுரைக்கே திரும்பிவிடலாம். மதுரையில் யாத்ரீகர்கள் தங்குவதற்கு ரெயில் வேஸ்டேஷனுக்கு எதிரில், மங்கம்மாள் சத்திரம், குன்னத்தூர் சத்திரம், கோமுட்டி சத்திரம், லாலா சத்திரம், கருப்பட்டி சத்திரம், குள்ளப்ப நாயக்கர் சத்திரம், வேங்கடசாமி நாயக்கர் சத்திரம், மலையாளத்தான் சத்திரம் என்னும் அநேக சத்திரங்கள் இருப்பதும் தவிர, ரெயில்வேஸ்டேஷனுக்கு அருகிலிருக்கிற எண்ணிறந்த சாப்பாட்டுக் கடைகளில் (Hotels) வாடகைக்கு அறைகள் கொடுக்கிறார்கள். திருப்பரங்குன்றத்திலும், சத்திரங்களிருக்கின்றன.

விருதுநகர்:—இந்நகர் விருதுப்பட்டி என்ற பெயரோடிருந்து, சமீபத்தில் சென்னையில் முதன்மந்திரியாகவிருந்த கனம்

பனகால் அரசர் அவர்களால் விருதுநகர் என்று மாற்றப்பட்டது. இது பெரிய வியாபார ஸ்தலம். மிளகாய், கொத்தமல்லி, பஞ்சு, பருத்திவிதை முதலியவைகள் ஏற்றுமதியாகின்றன. ஜலக்கஷ்ட மிருந்தாலும், இவ்வூர் வியாபாரிகள் தருமத்திற்காகப் பெருங் கிணறுகளை வெட்டி வைத்திருக்கிறார்கள். தங்குவதற்குச் சத் திரங்களுண்டு.

திருத்தண்காலூர்:—தண்காலப்பன். அப்பன். அன்னி நாயகி. அனந்த நாயகி. சதுமாது. தேவசந்திர விமானம். பாப நாச தீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம்.

சல்லிய பாண்டியனுக்கும், ஸ்ரீவல்லபனுக்கும் பிரத்தியட் சம். திருமங்கைமன்னன் மங்களாசாசனம். இத்தலத்திற்குப் போக விரும்புவோர், சிவகாசி ரெயில்வே ஸ்டேஷனிலிறங்கி 3 மைல் போகவேண்டும். வாடகைக்கு மோட்டார்களும், வண் டிகளும் கிடைக்கும். சிவகாசி ஸ்டேஷன் விருதுநகர்—தென் காசிக் கிளைப்பாதையில் இருக்கிறது.

ஸ்ரீவில்லிபுத்தூர்:— வடபத்திரசயனர். அரங்கமன்னார். ஆண்டாள். கோதைநாச்சியார். சம்சனவிமானம். திருமுக்குளத் தீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம். வடபத்திரசயனம்.

பெரியாழ்வார், ஆண்டாள் இவர்கள் பிறந்த தலம். மண் டூக மகரிஷிக்கும் பெரியாழ்வாருக்கும் பிரத்தியட்சம். பெரி யாழ்வார், ஆண்டாள் மங்களாசாசனம்.

இது ஒரு முனிசிபல் பட்டினம். தங்குவதற்குச் சத்தி ரங்கள் உண்டு. இவ்வூருக்கருகில் மலையின்மேல் ஸ்ரீவெங்கடா சலபதியின் திருக்கோயில் இருக்கின்றது. அக்கோயிலில், திருப் பதியில் திருமலையின்மேல் நடக்கின்ற முறைப்படி பூஜை நடந்து வருகின்றது. திருப்பதியில் செலுத்தவேண்டிய காணிக்கைகளை இங்கு செலுத்தலாம். திருப்பதிக்குப் போகச் சத்தியற்றவர்கள் ஆங்காங்கே தங்கள் காணிக்கைகளைச் செலுத்துவதற்கு எளிதாக இத்தகைய திருக்கோயில்கள் அநேகமாய் ஜில்லாவுக்கு ஒன்றாக ஏற்பட்டிருக்கின்றன. திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் எலமனூர் ஸ்டேஷனுக்கு அருகிலுள்ள குணசேகரமும், முன் கோயம்புத்

தூர் ஜில்லாவிலிருந்து தற்காலத்தில் திருச்சிருப்பள்ளி ஜில்லாவிற்கு மாற்றப்பட்டிருக்கிற கருவூருக்கு வடக்கில் சுமார் 2 மைல் தூரத்தில் உள்ள தான்தோன்றிமலையும், தஞ்சாவூர் ஜில்லாவில் திருநாகேசுரம் ஸ்டேஷனுக்கு அடுத்த உப்பிலியப்பன்கோவிலும், தென்னார்க்காடு ஜில்லாவில் திருப்பாதிரிப்புலியூர் ஸ்டேஷனுக்கு மேற்கில் 3 மைல் தூரத்திலுள்ள திருவேந்திபுரமும் பிரசித்தமானவை.

இத்தலத்திலுள்ள தேர் மிகப் பெரியது. நல்ல வேலைப்பாடுள்ளது. சோழநாட்டில் திருவாரூரில் உள்ள தேர் ஒன்றே இதைவிடச் சற்று பெரிதென்று சொல்லலாம். அதையும் வீரவைணவர்கள் ஒப்பமாட்டார்கள். இங்கிருந்து சங்கரநயினார் கோவில் மார்க்கமாகத் தென்காசி போகலாம். ஆனால் இந்தியாவை வலம்வர விரும்புவோர் திரும்பவும் ரயில்மார்க்கமாக விருதுநகர், அல்லது சாலை மார்க்கமாகச் சாத்தூர் போவதுதான் நலம்.

திருமங்கைபுரம் (கோவிற்பட்டி):— பூவணலிங்கேசர். சண்பகவல்லியம்மை. திருக்கொண்டித் தீர்த்தம், திருக்குளத் தீர்த்தம்.

அகத்தியமுனிவர் கைலையிலிருந்து பரமசிவன் வேண்டுகோளின்படி தென்றிசைக்கு ஏகும்போது கபடத்துறவி வேடம் பூண்ட இல்வலன் என்னும் அசுரன் அகத்தியரைக் கொல்ல நினைத்து, தன் தம்பியாகிய வாதாபியை ஆடாக மாற்றி அறுத்துச் சமைத்து அகத்தியருக்கு விருந்திட, அம்முனிபுங்கவர் அவ்வசுரர்களுடைய சூழ்ச்சியைத் தெரிந்துகொண்டு, அவர்கள் கபடத்தாலேயே அவர்களை மாய்க்கக் கருதி ஒன்றும் தெரியாதவர் போல் அவ்விருந்தை வயிறாரப் புசித்த பின்னர், அவ்வில்வலன் தன் தம்பியைக் கூவியழைக்க, அவன் அம்முனிவருடைய வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளிவர எத்தனிக்க, உடனே அகத்தியர் தம்கையால் வயிற்றைத்தடவி "வாதாபே ஜீர்ணோபவ" என்றுரைத்து, அவ்வாதாபியைக் கொன்றார். அதை உணர்ந்த இல்வலன் சினந்து அவரை எதிர்க்க, அவனையும் மாய்த்துவிட்டு, பிரமாம்சம் இருந்த அவ்வரக்கர்களைக் கொன்ற தோஷத்தால் தன்னைப் பிடித்த பிரமஹத்தியை, இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும்

சிவபெருமானைப் பணிந்து போக்கிக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இவ்வூரில் ஒரு சிறு குன்றிருக்கின்றது. அதன் அடிவாரத்தில் உள்ள சிவலிங்கத்திற்கருகில் எப்போதும் ஜலம் வந்துகொண்டிருக்கின்றது. இதில் ஸ்நானம் செய்தல் விசேஷம். இத்தலம் விருதுநகரிலிருந்து திருநெல்வேலி போகிறவழியில் இருக்கிறது.

கழுகுமலை:—இது ஒரு பிரபலமான சுப்பிரமணிய க்ஷேத்திரம். திருப்பரங்குன்றில் இருப்பதுபோல இவ்வூரிலும் கோவில் மலையடிவாரத்தில் இருக்கின்றது. மலையின்மேல் பெரியோர்கள் தவஞ்செய்ததாகச் சொல்லப்படுகிற சில குகைகள் இருப்பதுடன் மலையிலிருந்தே செதுக்கப்பட்ட ஒரு கோவிலும் இருக்கிறது. வட இந்தியாவுக்குச் சென்று, எல்லோரா, அஜன்டா, (Ajanta), எலிபான்டா, (Elephanta) முதலிய இடங்களில் இருக்கிற செதுக்குக் கோவில்களைப் பார்க்கமுடியாதவர்கள், இக்கோவிலைப் பார்த்து, அக்கோவில்கள் எவ்வாறிருக்கும் என்பதை ஒருவாறு நிதானித்துக்கொள்ளலாம்.

இவ்வூர் கோவிற்பட்டியிலிருந்து மேற்கே சாலை மார்க்கமாக 12 மைல் தூரத்திலிருக்கிறது. மோட்டார்களும் வாடகை வண்டிகளும் கிடைக்கும். சத்திரங்கள் உண்டு.

சங்கரநயினார்கோவில்:—சங்கரலிங்கம். சங்கரநாராயணர். ஆவுடையம்மை. கோமதியம்மை. சக்கரக்குளத்தீர்த்தம்.

பிருகுமஹரிஷி விஷ்ணுவை மதியாமல் சிவபெருமானை மட்டும் பூசிக்க, அவரும் அவரைப்போன்ற இன்னும் அநேக வீரசைவர்களும் அவ்வாறு செய்வது தவறென்று நிரூபிக்க, அச்சிவபிரான், மஹாவிஷ்ணுவும் தன்னுடைய சத்திரூபமே தவிர வேறில்லையென்று தெரியும்படி, விஷ்ணு ரூபம் தன் பாதி தேகத்தில் வெளிப்படும்படி காட்சிதந்தருளிய தலம். கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பரும், இக்கருத்தேபற்றி,

"அரனதிகன் உலகளந்த அரியதிகன் என்றுரைக்கும் அறிவிலோர்க்குப்
பரகதிசென் றடைவரிய பரிசேபோற் புகலரிய பண்பிற் றாமால், [வாம்
சுரநதியினயலதுவான்றோய்குடுமிச் சுடர்த்தொகைய தொழுதோர்க்கெல்
வரனதிகம் தருந்தகைய அருந்ததியாம் நெடுமலையை வணங்கியப்பால்."

என்னும் செய்யுளால் சிவனும், விஷ்ணுவும் தம்முள் வேறல்லர் என்பதைக் குறிப்பிக்கும், அவ்வாறு வேறுகக்கருதுமறிவிலார்

பரகதி அடைவது அரிது என்பதை வற்புறுத்திக் காட்டியிரும் பதும் தவிர,

> "மண்ணுற விழுந்துநெடு வானுற எழுந்து
> கண்ணுதல் பொருந்தவரு கண்ணனில் வருங்கார்
> உண்ணிற நறும்பொடியை வீசியொரு பாகம்
> வெண்ணிற நறும்பொடி புனைந்த மதவேழம்".

என்னும் செய்யுளில், இத்திருக்கோலத்தை மிக அழகாகப்போற்றி யுள்ளார்.

> "ஒருபாதி மால்கொள மற்றொருபாதி உமையவள்கொண்டு
> இருபாதியாலும் இறந்தான் புராரி"

என்று நல்லிசைப் புலவர் ஒருவரும் இத்திருக்கோலத்தைக் குறித் துப் பாடியுள்ளார்.

இக்கோவிலின் மூலஸ்தானத்தில் ஒரு புற்றைத் தவிர வேறொன்றும் இல்லை. மேலே சொன்ன சங்கரநாராயண ரூபம் அடுத்த கோவிலில் காணலாம். இத்தலத்திற்றான் கோமதியம் மன் கடுந்தவம் புரிந்து சிவபெருமானை மணந்தது. ஒவ்வொரு ஆண்டிலும் ஆடிமாதத்தில் இத்திருவிழா வெகு சிறப்பாக நடக் கிறது.

இவ்வூர் கழுகுமலையிலிருந்து மேற்கே சாலை மார்க்கமாக 12 மைல் தூரத்தில் இருக்கிறது. வாடகை வண்டிகள் கிடைக் கும். தவிரவும், இவ்வூர் விருதுநகரிலிருந்து தென்காசிக்குப்போ கிற ரெயில்வே கிளைப்பாதையில் இருக்கிறது. தங்குவதற்குச் சத் திரங்கள் உண்டு. ஆயினும் இந்தியாவை வலம்வர விரும்புவோர் மீண்டும் விருதுநகருக்கோ, கோவிற்பட்டிக்கோ சென்று தங்கள் பிரயாணத்தைத் தொடருவது நலம்.

கோவிற்பட்டிக்குக் கிழக்கில் 9 மைலில் எட்டயபுரமும், அதற்குக் கிழக்கில் 12மைலில் விளாத்திக்குளமும் இருக்கின்றன. எட்டயபுரத்தில் ஜமீன்தாருடைய அரண்மனையும், ஜமீன் கச்சேரி களும் இருக்கின்றன. விளாத்திக்குளம் வைப்பாற்றங்கரையில் இருக்கின்ற ஒரு சிற்றூர். இவ்விடத்தில் மீனாட்சி சுந்தரேசுரர் ஆலயம் இருக்கின்றது. பிரயாணிகள் தங்குவதற்குச் சத்திரம் இருக்கின்றது.

தூத்துக்குடி:—இது பெரிய க்ஷேத்திரங்களுள் சேர்ந்த தன்றாயினும் ஒரு முக்கியமான துறைமுகப்பட்டினம். இங்கிருந்து கொளும்பிற்கு வாரத்திற்கு இருமுறை புகைக்கப்பல் போகின்றது. இது ஒரு முனிசிபல் பட்டினம். கீழூர் மேலூர் என்று இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கீழூரில் கடைத்தெருக்களும் பண்டகசாலைகளும் அதிகமான ஏற்றுமதியும் இருப்பதால் ஜனநெருக்கமுள்ளது. வாசத்திற்கு அவ்வளவு வசதியானதல்ல. குடிதண்ணீர் கிடைப்பதும் அருமை. மேலூர் வாசத்திற்குச் சௌகரியமானது. வெளியூரார் தங்குவதற்குச் சத்திரங்கள் உண்டு. நகரபரிபாலனசபையார் (Municipal council) ஒரு சிறு சத்திரம் கட்டி வைத்திருக்கின்றனர். சொற்ப வாடகை கொடுக்கும்படி நேரிடினும் தங்குவதற்கு நல்ல இடம். இவ்வூருக்குப்போகும் மார்க்கத்தில் இருக்கிற தட்டப்பாறை ஸ்டேஷனில் இறங்கி, வடக்கே 6 மைல் போனால் ஒட்டப்பிடாரம் இருக்கிறது. அவ்வூரில் கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் உலகம்மன் கோவில் இருக்கின்றது. தெரிசன விசேஷம். தங்குவதற்குச் சத்திரம் உண்டு. இதற்கு வடக்கில் சற்று தூரத்தில் கட்டைப்பொம்மு நாயக்கர் என்ற ஊமைத்துரை என்பார் அரசாண்டிருந்ததாகச் சொல்லப்படுகிற பாஞ்சாலங் குறிச்சி என்னும் சிற்றூர் இருக்கிறது.

தூத்துக்குடியினின்று சாலை வழியாகத் திருச்சோமேச்சுரம் என்னும் ஆற்றூர் சென்று, அங்கிருந்து திருச்செந்தூர் போகலாம். ஆனால் ரயில் மார்க்கமாகவே திரும்பி மணியாச்சி ஜங்ஷன் வழியாகச் செல்லுவதுதான் நலம்.

திருச்செந்தூர் (செந்தில். திருச்சீரலைவாய். சந்தனசைலம்.) சிவசுப்பிரமணியர். தெய்வயானையம்மை. வள்ளிநாயகி. கந்தபுஷ்கரணி. அகஸ்தியதீர்த்தம். தேவதீர்த்தம். மாதுர்பிதுர் தீர்த்தங்கள்.

கலியுகவரதனெனக்கருதப்படும் கந்தப்பெருமான் கோயில் கொண்டுள்ள திவ்விய ஸ்தலங்கள் பலவற்றுள்ளும் இயற்கை அழகிலும் இனிய காட்சியிலும் இணையற்று விளங்குவது திருச்செந்தூரேயாகும். "தாங்கம் நந்தாரல் நனியேற்றெழிற்செந்தில்"

என்று சிவப்பிரகாச சுவாமிகள் திருச்செந்திற்கலம்பகத்திற் புனைந்துரைத்துள்ளவாறு திரைகடல் மோதும் மதில்களுடனும், வதனாரம்பம் என்னும் ஸ்நானகட்டத்துடனும், பார்ப்போர் மனதைப் பற்றிக்கவரும் வனப்புடன் விளங்கும் ஷண்முகவிலாஸத்தையும், அடியார்கள் மனதில் பிரமிப்பும் பரவசமும் ஏககாலத்தில் தோன்றும்படி நித்திய ஜோதிமயமாகப் பிரகாசிக்கும் ஆறுமுகப்பெருமானது அழகிய திருவுருவத்தையும் காணப்பெறுக் கண்கள் புன்கண்களே.

நவவீரர்களும் பூதகணங்களும் புடைசூழச் சென்று, தாரகனையும் கிரௌஞ்சனையும் வென்று, இத்தலம் வந்து தேவர்கள் வேண்டுகோளுக்கிணங்கிச் சூரபத்மனெனும் கொடிய அரக்கனைக் கொன்று, மயில்வாகனமும் சேவற்கொடியும் பெற்று, தேவர்களைச் சிறைமீட்டுவந்து படைவீடுகொண்டு எழுந்தருளிய தலம்.

ஆதலின், திருப்பரங்கிரியில் தெய்வயானையம்மையையும், திருத்தணிகையில் வள்ளிதேவியையும் மணந்த மணக்கோலத்துடனும், திருவாவினன்குடியில் தண்டாயுதபாணியாகவும், சுவாமிமலையில் தம் தந்தைக்குப் பிரணவப்பொருளுரைத்த ஞான பண்டிதராகவும், குன்றக்குடியில் குழந்தைவடிவேலராகவும், சிக்கலிற் சிங்காரவடிவேலராகவும், மயிலத்திலும் திருமயிலாடியிலும் மயூரவாகனருடராகவும் விளங்கும் முருகபிரான் இத்திருச்செந்தின்மாநகரில் அசுரநிக்கிரக தேவானுக்கிரக விஜயபாலசுப்பிரமணியராக விளங்குகின்றனர்.

தொடுக்குங்கடவுட் பழம்பாடற் றொடையின்பயனே, நறைபழுத்த
துறைத்தீந்தமிழினொழுகு நறுஞ்சுவையே, அகந்தைக்கிழங்கையகழ்ந்
தெடுக்குந்தொழும்ப ருளக்கோயிற் கேற்றும் விளக்கே, வளர்சிமைய
இமயப்பொருப்பின் விளையாடு மிளமென்பிடியே, எறிதரங்கம்
உடுக்கும் புவனங்கடந்து நின்ற வொருவன்றிருவுள்ளத்திலழ
கொழுக வெழுதிப்பார்த்திருக்கு முயிரோவியமே, மதுகரம்வாய்
மடுக்குங் குழற்காடேந்து மிளவஞ்சிக்கொடியே, வருகவே!
மலையத்துவசன் பெற்ற பெருவாழ்வே, வருக! வருகவே!!

என்னும் மதுரகவியாய நறுந்தேனை மதுரை மீனாட்சியம்மை இருகாற்பருக அளித்தவரும், தாடகையென்னுஞ் சிவ

ணடியார் தம் நெகிழ்ந்த உடையை முழங்கையில் இடுக்கினவராய்ச் சாத்தின மாலையை, அளவற்ற கருணையோடு தலை குனித்தேற்ற சிவபிரான், இக்காலத்துஞ் சாய்ந்த திருமுடியோடு அடியார்கட்குக் காட்சி தந்தருளும் தலமாகிய திருப்பனந்தாளிலுள்ள காசிமடத்தை முதன்முதல் ஸ்தாபித்தவரும், காசிக்குச் சென்று உயிர்ச்சிங்கத்தை ஊர்தியாய்க்கொண்டு செலுத்தியும், அத்தலத்தெல்லையில் பறக்காக்கருடனைப் பறக்கச்செய்தும், சொல்லாப் பல்லியைச் சொல்லச் செய்தும், அந்நாட்டரசனிடம் இடம் பொருள் ஏவல் எல்லாம்பெற்று நம் தென்னாட்டினின்று காசிக்கேகும் யாத்திரைக்காரர்களுக்கு ஓர் தாய்வீடு போன்றுகவும் குமாரசாமிமடத்தைக் கட்டியும், அதற்கருகிலுள்ள கங்கையில் கேதாரகட்டம் என்னுமோர் ஸ்நானகட்டம் அமைத்தும், அதன் கரையில் திருக்கேதாரேச்சுரரைப் பிரதிஷ்டை செய்தும், என்றும் அழியாப்புகழ் பெற்றவருமான குமரகுருபரசுவாமிகளின் ஐந்து வயதளவில் தீராதிருந்த மூகைத்தன்மையைத் தீர்த்தருளிய தலம் இதுவே.

இத்தலம் கந்தவேளின் *ஆறுபடைவீடுகளில் ஒன்று. இவ்விடத்தில் நாழிக்கிணறு என்னும் அதிசயமான தீர்த்தம் ஒன்று இருக்கின்றது. அதில் ஒரு செம்பு ஜலம் எடுத்தநிமிஷமே அந்தஅளவே ஊறும்படியான மகிமையுடையது. தீர்த்தம் எடுக்காவிடினும் ஊறி வழிகிறதில்லை. இவ்வுலகப்பற்றை ஒழிக்கத்தக்க இலைவிபூதிப் பிரசாதமும் சந்தனப் பிரசாதமும் கிடைக்கும் தலம். இவ்வூரில் முருகக்கடவுளுக்குப் பூசைசெய்யும் போற்றிமார் என்போர் மிகவும் நியமத்தோடு இருக்கக்கூடியவர்கள்.

இதுவன்றியும், செந்திற்கோவிந்தப்பெருமாள் உபய நாச்சியாரோடு கிழக்குநோக்கிய திருமுகமண்டலத்துடன் சயனத் திருக்கோலமாகச் சேவை சாதிக்கின்றனர்.

---

குறிப்பு:— *ஆறுபடை வீடுகளாவன:— (1) திருப்பரங்குன்றம் (2) திருச்சீரலைவாய் (3) திருவாவினன்குடி (பழனி) (4) திருவேரகம் (இதைச் சுவாமிமலை என்று சிலரும், மலைநாட்டிலுள்ள சுப்பிரமணியம் என்னும் தலமென்று வேறு சிலருஞ் சொல்லுகின்றனர்) (5) குன்றுதோறாடல் (இதைப் பற்றிய விவரம் திருவள்ளியூர்த் தல விவரத்திற் காண்க) (6) பழமுதிர்சோலை (அழகர்கோவில்).

இங்கிருந்து திருக்குலசேகரன்பட்டினம், திருச்சேர்ந்த மங்கலம் போய்வரலாம். திருச்செந்தூரிலிருந்து திரும்பி ரயில் மார்க்கமாகத் திருநெல்வேலி போகும் வழியில் ஆழ்வார்திருநகரி, ஸ்ரீவைகுண்டம் என்னும் சிறந்த விஷ்ணு ஸ்தலங்கள் இருக்கின்றன.

ஆழ்வார்திருநகரி (திருக்குருகூர்). ஆதிநாதப்பெருமாள். ஆதிகேசவன். பொலிந்துநின்றபிரான். ஆதிநாதவல்லி. கோவிந்த விமானம். தாம்பிரவர்ணிநதி. பிரமதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம்.

இது நம்மாழ்வார் அவதரித்த தலம். நம்மாழ்வார் குழந்தையாகக் கிடந்த இடம் என்று சொல்லப்படுகிற புளியமரம் இன்றும் இவ்வாலயத்தில் அடியில் ஒருமரமாகவும் மேலே அனேகம் கிளைகளாகவும் இருக்கின்றது. இத்தலத்தில் வைகாசிமாதம் பூரத்தன்று (1) ஸ்ரீவைகுண்டம் (2) நத்தம் (3) வரகுணமங்கை (4) திருப்புளிங்குடி (5) திருத்தொலைவில்லிமங்கலம் (6) திருக்குழந்தை என்ற பெருங்குளம் (7) திருக்கோளூர் (8) தென்திருப்பேரை ஆகிய இவ்வெட்டுத் திருப்பதிகளிலிருந்தும், பெருமாள் கருடாரூடராக எழுந்தருளிச் சேவைசாதிக்கிறதைத் தெரிசித்தல் விசேஷம். இவ்வெட்டுத் திருப்பதிகளும் ஆழ்வார்திருநகரியுடன் சேர்ந்து நவதிருப்பதிகள் என்று வழங்குகின்றன.

இத்தலத்திற்குத் திருக்காந்தீச்சுரம் என்ற பெயரும் உண்டு. இதுசிவஸ்தலம். காந்தீச்சுரர். அறம்வளர்த்தநாயகி. அகத்தியர் முதலிய அனேக யோகிகள் முத்திபெற்றதும், கருவூர்த்தேவர் காட்சிபெற்றதுமான தலம். இதற்கு வடமேற்கில் தாம்பிரவர்ணியின் வடகரையில் ஸ்ரீவைகுண்டம் இருக்கிறது.

ஸ்ரீவைகுண்டம்:- வைகுந்தநாதன். கள்ளபிரான். மாமலராள். வைகுந்தவல்லிநாச்சியார். சந்திரவிமானம். தாம்பிரவர்ணிநதி. பிருதுதீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம். நின்றதிருக்கோலம் இந்திரனுக்கும் பிருது சக்கரவர்த்திக்கும் பிரத்தியட்சம்.

இவ்வூரில் தாம்பிரவர்ணி நதிக்கு ஒரு பெரிய அணைக்கட்டு இருக்கின்றது. இங்கு கோட்டை வேளாளர் என்ற ஒரு வகுப்

பார் இருக்கின்றனர். அவர்கள் இருக்கும் இடத்தைச் சுற்றி ஒரு மண்மதில் எழுப்பியிருக்கிறது. அவர்களில் பெண்பிள்ளைகள் எக்காரணம்பற்றியும் அக்கோட்டையை விட்டு வெளியில் வருகிறதில்லை. வெளியிலிருக்கிற மற்ற ஆண்பிள்ளைகளும் உள்ளேபோகலாகாது. கலியாணங்களெல்லாம் அவர்களுக்குள்ளேயே நடைபெறுகின்றன. மாப்பிள்ளைகள் கிடைக்காவிடில், ஒருவருக்கே இரண்டு மூன்று பெண்களைக் கலியாணம் செய்துவைக்கிறார்கள். அவர்களுக்குச் சுடுகாடும் உள்ளேதான் இருக்கிறது. சுருங்கச் சொல்லில் அந்த ஸ்திரீகளுக்கு உலகமே அந்தக் கோட்டைக்குள் தான். ரயில், மோட்டார் வண்டிகள் எப்படியிருக்குமென்று தெரியாது. இவர்கள் நிலை மிக்க இரங்கத்தக்கதே. ஆறுகடக்கலாகாது, கடல் கடக்கலாகாது என்னும் மதப்பேய் பிடித்தவர்களெல்லாம் அப்பேய்களை ஓட்டிவிட்டு நற்கதி அடைந்திருக்கிற இக்காலத்து, இக்கோட்டைப்பேய்ப் பிடிப்பிலிருந்து இன்னும் இவர்கள் விடுதலை அடையாமல் இருப்பது தொல்லைத் தீவினைக்கட்டின் பயனோ, அல்லது பெரியோர் இட்டசாபமோ அறியோம்.

இந்த க்ஷேத்திரத்தில் சிவபெருமானும் கோவில்கொண்டமர்ந்திருப்பதினால் இதற்குத் திருக்கைலாயபுரம் என்றும் பெயர் உண்டு. கைலாயநாதர். சிவகாமியம்மை. பாரத்துவாசர், பாராசரர் முதலியோருக்குத் திருக்கைலாயக் காட்சி அளித்த தலம்.

---

## அத்தியாயம் 3.

——(o)——

நிறையுளா னருமையுள்ளா னித்தமு மடியாருள்ளத்
துறையுளான் கருணையுள்ளா னுயர்வுளா னெச்சீவர்க்கும்
இறையுளா னினிமையுள்ளா னிகலுளான் மறைநூன்முற்றும்
அறையுளான் நெல்லைநாத னவன்பதம் போற்றிசெய்வாம்.

திருநெல்வேலி:– வேணுநாதர். நெல்லிற்கு வேலிகட்டும் நெல்வேலிநாதர். நெல்லையப்பர். சாலிவாடீசர். காந்திமதியம்மை. வடிவம்மை. தாம்பிரவர்ணிநதி. துர்க்காதீர்த்தம். கருமாறித்தீர்த்தம். பொற்றாமரை. வேய்விருட்சம். தாம்பிரசபை.

(1) வேதசர்மாவெனும் வேதியன் பஞ்சக்காலத்தில் ஐயம் ஏற்றுக்கொணர்ந்த நெல் மழையிற்போகாது வேலிகட்டிக்காத்தும்

(2) பார்வதிதேவியைத் திருமணஞ்செய்தும், (3)*ஆயன் கொண்டு வந்த பாலைக் கவிழ்த்துத் தனக்கு அபிஷேகம் செய்துகொண்டும், (4) *அவ்வாயன் வெட்டிய கோடரியாலாய வடுத்தாங்கியும், (5) பொற்றாமரையில் முழுகிய பெண்களுக்குச்சேலை கொடுத்தும், (6) கோவில் திருவிளக்குப் பார்த்த பிராமணனுக்கு விலை மகளுக்கீயப் பதக்கம் அளித்தும், (7) பிராமணப் பிள்ளைகளுக்கு வேதம் ஓதுவித்து விற்பன்னராக்கியும், (8) இந்நகரில் வாழ்ந்த பாடுவான்பிள்ளையைச்சிறையினின்றுமீட்டும், (9) காமவெறியால் கட்குடித்த வேதியனுக்கு ஏற்பட்ட கொடிய பாவத்தைப் பொற்றாமரை ஸ்நானத்தால் போக்கியும், (10) திருவிசைப்பா பாடிய கருவூர்த்தேவர் இத்தலத்திற்கு வந்து சிவபெருமானை அழைத்த பொழுது, காலைசந்திப்பூசை சமயமானதால் ஏனென்று கேளா திருக்க, சீற்றங்கொண்டு மானூருக்குச் சென்ற அக்கருவூர்த் தேவருக்குக் காட்சிகொடுத்து சமாதானம் செய்தும், (11) தாம் பிரசபையில் உமாதேவிக்காக ஆனந்த சௌந்தரியத் திருநடனம் செய்தும், (12) சப்தரிஷிகளுக்குக் காட்சியளித்தும் மற்றும் அனேக திருவிளையாடல்களைச் செய்தருளிய தலம். நின்றசீர் நெடுமாறநாயனார் பிறந்த தலம். திருஞானசம்பந்தசுவாமிகளால் திருப்பதிகம் பெற்றுள்ளது.

இவ்வூர், திருச்செந்தூருக்குப் போக வண்டிமாற்றக்கூடிய ஜங்ஷன். நெல்லையப்பர்கோவில் ஜங்ஷனிலிருந்து 2 மைல் தூரத்தில் இருக்கிறது. போக வண்டிகள் கிடைக்கும். ரெயில்வே ஸ்டேஷனுக்கு அருகிலும் ஊருக்குள்ளும் சத்திரங்கள் உண்டு. ஜங்ஷன் இருக்கிற இடத்திற்கு வீரராகவபுரம் என்று பெயர். திருநெல்வேலிடவுன் என்ற ஒரு ஸ்டேஷன் ஊருக்கு அருகில் இருந்தாலும், பிரயாணிகள் ஜங்ஷனில் இறங்குவது தான் நலம். டவுன் ஸ்டேஷனில் வண்டிகள் கிடைப்பது அருமை.

திருநெல்வேலிக்கு அருகில் பாளையங்கோட்டை என்ற ஒரு பெரிய முனிசிபல் பட்டினம் இருக்கிறது. அதற்குப் போகும் வழியில் சென்னை ராஜா ஸர் சவலை இராமசுவாமி முதலியாரவர்

*வேயீன்ற முத்தர்தமை வெட்டினு னேரிடையன், தாயீன்ற மேனி தயங்கவே — பேயாகேள், எத்தனைநாளென்றே இடறுவான் பாற்குடத்தை, அத்தனையும் வேண்டு மவற்கு. என்னும் இரட்டையர் பாடலில் இத்திருவிளையாடல்கள் குறிக்கப்பட்டிருத்தல் காண்க.

களால் ஏற்படுத்தப்பட்ட கோஷா ஆஸ்பத்திரி ஒன்றிருக்கிறது. இங்கிருந்து கொல்லம் போகிற ரயில் மார்க்கத்திலுள்ள சேரன்மா தேவி; திருக்களக்காடு, அம்பாசமுத்திரம், திருப்பாவநாசம், தென்காசி, திருக்குற்றாலம் முதலிய தலங்களுக்குச் சென்று தெரிசித்து மீளுதல் நலம்.

திருச்சேரன்மாதேவி:— வைத்தியநாதர். ஒப்பிலாநாயகி. அம்மைநாதர். சிவகாமி. தாம்பிரவர்ணிநதி. தெரிசன விசேஷம்.

திருக்களக்காடு:— சகலபுவனேசர். உமாதேவியம்மை. பச்சைநதி. சிவகங்கை. திருக்குளம்.

தெய்வந்தொழாள் கொழுநற் றொழுதெழுவாளாகிய நளாயினியம்மை முடவனான தனது கணவனைச் சுமந்து செல்லும் போது, அவ்வழியில் கழுவிற் குற்றுயிராயிருந்த மாண்டவிய மகரிஷியின் காலிற்றாக்க, அவர் அதனாலாய வலியினால் பெரிதும் துன்புற்றவராய், அவ்வம்மையின் மனத்தூய்மையை அறியாது "நீ சூரியோதயமாவதற்குள் உன் கணவனை யிழந்து துன்புறுவா யாக" எனச்சபிக்க, எக்காலத்தும் தற்காத்துத் தற்கொண்டார்ப் பேணும் திறனுள்ள அந்நளாயினியம்மை அச்சாபத்தைப் பொரு ட்படுத்தாது "சூரியன் கீழ்த்திசையில் உதியாதொழிவானாக" என்று மொழிந்து அச்சாபம் தன்னைத் தொடராவழி தேடிக் கொள்ள, எந்நாளும் ஒய்வில்லாக் கதிரவன் அந்நாள்முதற் பன்னாள் வரை பகலவனெனுந் தன் நாமத்தையும் மறந்து பகற்செய்யா தகன்றனன். அதுகண்ட தேவர்களும், முனிவர்களும் சென்று முறையிட்டதற்கிரங்கிச் சிவபெருமான் அவ்விருவர் சாபத்தை யும் நீக்கியருளியதலம். இவ்வூர் சேரன்மாதேவிக்குத் தெற்கில் சுமார் 10 மைல் தூரத்திலிருக்கின்றது. வாடகை வண்டிகளும் மோட்டார்களும் கிடைக்கும்.

அம்பாசமுத்திரம் (திருக்காசிபேச்சுரம்):— எரித்தாளுடை யார். சிவகாமியம்மை. தாம்பிரவர்ணிநதி. கூபதீர்த்தம்.

காசிபர், அகத்தியர் பூசித்ததலம். சிவசருமாவெனும் ஒரு கன்னடிய வேதியன் அகத்தியரைக் காணவிரும்பித் தன்கைப் பொருளைச் சாந்தன் என்பான் ஒரு அருச்சகனிடம் ஒப்புவித்துப் பொதியமலை சென்று அரும்பாடுபட்டு அகத்தியரைத் தெரிசித்து,

அவாருளும், இளமையும் பெற்று மீண்டுவந்து அவ்வருச்சகனிடம் தான் கொடுத்துப்போந்த பொருள் கேட்ப, அவன் தான் பொருள் வாங்கினதில்லை என்று சாதிக்க, அவ்வந்தணன் அருச்சகனைச் சத்தியத்திற்கழைக்க, அதற்கிணங்கிய சாந்தன் சிவபெருமானைத் தம்மிருப்பிடம் விட்டு நீங்கி ஓர் புளியமரத்திற் போயிருக்கும்படி வேண்ட, அவரும் அவ்வேண்டுகோளுக்கிணங்கிப் புளியமரத்திற்குச் சென்றபின் அச்சூதைச் சிவசருமாவுக்கு அறிவிக்க, அவன் அவ்வருச்சகனை அப்புளியமரத்தடியிலேயே சத்தியஞ் செய்யச் செய்து, அப்பொய்ச் சத்தியத்தின் பயனாக அருச்சகன் எரிந்து சாம்பலான தலம். இச்சம்பவம் திருவொற்றியூரில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சங்கிலிநாச்சியாரை மணப்பதற்குமுன் சத்தியம் செய்ய நேரிட, அவர் வேண்டிக்கொண்டபடி சிவபிரான் அங்கோர் மகிழமரத்தடியிற் சென்றிருந்துகொண்டு, அச்செய்தியைச் சங்கிலிநாச்சியாருக்கும் அறிவித்து, அம்மகிழடியிற்றானே சத்தியம் செய்விக்கும்படி செய்ததை நினைப்பூட்டுகின்றது.

பின்பு சிவசருமா சிவபிரான் திருவருளால் தன் பொருள் கிடைக்கப்பெற்று அதனால் அனேக தருமங்கள் செய்து ஒரு பெருங்கால்வாயும் அமைத்ததாகச் சொல்லப்படுகிறது. அக்காரணம் பற்றியே அச்சிவபிரானுக்கு "எரித்தாளுடையார்" என்ற திருநாமமும் அக்காலுக்குக் "கன்னடியன்கால்" என்ற பெயரும் வழங்கலாயிற்றென்று தெரிகிறது.

இத்தலத்தின் மற்றோர் பாகத்தில், மேலப்பாளையம் என்று தற்காலத்தில் சொல்லப்படும் திருமூலநகரம் இருக்கின்றது. திருமூலநாதர். உலகம்மை. அகத்தியதீர்த்தம் முதலியன. அகத்தியர், அரம்பைமாதர்கள், அநேகரிஷிகள் பூசித்து அநுக்கிரகம் பெற்ற தலம். இங்கிருந்து சுமார் இரண்டு மைலில் ஊர்க்காடு என்று வழங்கும் திருக்கோட்டீச்சுரமும், நான்கு மைலில் திருப்பாவநாசமும் இருக்கின்றன.

திருக்கோட்டீச்சுரம்:— கோட்டீச்சுரர். கொடியிடையாளம்மை, தாம்பிரவர்ணிநதி, திருவலஞ்சுழித்தீர்த்தம்.

அகத்தியர் சிவலிங்கபூசை செய்யக்கருதி இராமேசுரத்திற் சீதாதேவி அமைத்ததுபோல் தாமும் மணலால் இலிங்கமமைக்க

முயல, அவர் தம் முயற்சி சிறிதும் பயன்படாதொழிந்ததைக் கண்டு "ஈசனே! ஈதென்ன கோட்டி?" என்றிறைஞ்சலும் சிவபிரான் அருளினால் அவ்விலிங்கம் அம்முனிவர் விரற்றழும்போடும் அமைவுபெற்றமையால் கோட்டீச்சுரரென்ற திருநாமத்தோடு விளங்கும் தலம்.

திருப்பாவநாசம்:— பாவநாசேச்சுரர். உலகம்மை. தாம்பிரவர்ணிநதி, பாவநாசதீர்த்தம்.

அகத்தியர் முதலியோர் பூசித்ததலம். வடஇந்தியாவில் சுவர்க்கத்துவாரம், மாயாத்துவாரம், கங்காத்துவாரம் முதலிய பல திருநாமங்களுடன் விளங்கும் ஹரித்துவாரம் என்னும் புண்ணிய க்ஷேத்திரம், எங்ஙனம் கங்கை இமயமலையினின்றிழிந்து பூமியைப் பரிசிக்குமிடத்தில் இருக்கின்றதோ, அங்ஙனமே, இத்தலமும் தாம்பிரவர்ணிநதியானது பொதியமலையிலிருந்திறங்கி சமபூமியில் தவழ்ந்து செல்லுமிடத்தில் அமைந்திருக்கின்றது. கங்கை யமுனை காவிரி முதலிய புண்ணியநதிகள் தன்னிடம் வந்து மூழ்கித் தங்கள் பாவங்களைத் தொலைத்துப் போவதால், தான் சுமக்கநேரும் பாவமூட்டைகளைத் தாங்கமுடியாது, தாம்பிரவர்ணி என்பாள் சிவபிரானை அருச்சித்துப் புனிதையான தலம்.

ஒரு வணிகன் தன் சிறுவயதிற் பிரிந்த தாய் தங்கையரைப் புணர்ந்து மக்களைப் பெற்றபின், தாங்கள் செய்த மகாபாதகத்தையறிந்த அவர்கள் எல்லோருமாக இத்தலமடைந்து மலைமீதேறிக் குதித்து உயிர் துறக்க முயன்றவர்களைத் தடுத்தாட்கொண்டருளி, அவர்கள் பாவத்தை நாசம் செய்தமைபற்றி, சிவபிரான் பாவநாசர் என்ற திருநாமத்தோடு எழுந்தருளியிருக்கின்ற தலம்.

இங்கிருந்து மலைமேல் ஏறிச்சென்றால் சுமார் அரைமைல் தூரத்தில் அகத்தியர் கோவிலும், அவர் தவம் செய்த இடமும் இருக்கின்றன. அக்கோவிலுக்கெதிரில் அகத்திய குண்டமெனும் ஸ்நானகட்டமிருக்கின்றது. அவ்விடத்தில் யாவரும் ஸ்நானம் செய்வதற்குரிய ஒரு சிறிய நீர்வீழ்ச்சி இருக்கின்றது. ஸ்நானவிசேஷம். அதற்கப்பால் சென்றால் கலியாணி தீர்த்தமெனும் ஒரு பெரிய நீர்வீழ்ச்சி இருக்கின்றது. இது பார்க்கத் தகுந்தது.

அதற்குமேல் சுமார் 6 மைல் தூரத்திலிருக்கின்ற முண்டன்றுறையில் பாணதீர்த்தமெனும் அருமையான தீர்த்தம் இருக்கின்றது. இதற்குப் போகவிரும்புவோர் ஆடிமாதம் அமாவாசையன்று போதல் வேண்டும். அன்றுதான் திரள் திரளாக ஜனங்கள் போவார்கள். மற்றைக் காலங்களில் புலிமுதலிய மிருகங்களின் சஞ்சாரமுண்டு.

இவ்விடத்தில், நீர்வீழ்ச்சியாலுண்டாகிற மின்சாரசக்தியால் இயக்கப்பட்ட ஒரு பெரும்பருத்திநூற்சாலை இருக்கின்றது. இதில் பனிக்கட்டியும் (Ice) செய்கிறார்கள். மீண்டும் அம்பாசமுத்திரம் போய் ரயிலேறித் தென்காசி சென்று அங்கிருந்து தென்மேற்கில் 3 மைல் தூரத்திலுள்ள திருக்குற்றாலம் போதல் அவசியம்.

தென்காசி:— சுந்தரேசர். உலகம்மை. விசுவநாதர். அன்னபூரணி. சித்திரநதி. திருக்குளத்தீர்த்தம.

பிருகுமகரிஷி, கண்ணுவரிஷி முதலியோர் பூசித்துப் பேறு பெற்ற தலம். இது தென்னாட்டுக்காசியென மதிக்கப்படுகின்றது. இவ்வூர்க் கோவிலில் செய்திருக்கின்ற சிற்பவேலைகள் பார்க்கத் தகுந்தவை.

திருக்குற்றாலம்:— திரிகூடாசலம் முதலிய 21 திருநாமங்களுள்ளது. குற்றாலநாதர். குறும்பலாவீசர். குழல்வாய்மொழியம்மை. வடவருவி. பொங்குமாகடல். செண்பகாடவி. சிவமதுகங்கை. சித்திரநதி, சித்திரகுளம். திருஞானசம்பந்தசுவாமிகளால் திருப்பதிகம் பெற்றுள்ளது. அவரால் தனிப்பதிகம் பெற்றதும் வேதசொரூபமானதுமாய குறும்பலா விருட்சமும் சித்திரசபையும் பெற்றுள்ள தலம். இத்தலத்தில் அகத்தியர் முதலிய பல முனிவர்கள், வியத்திரி என்னும் வேதியன், மதயானை முதலியோர் முத்தியடைந்துள்ளார்கள்.

கண்டகசேதகன் என்னும் உலுத்த வணிகனொருவன் இத்தலத்தில் திருவிழாக்கடை வைத்து உயிர் வாழ்ந்து வந்தமையானும், புட்பகந்தனென்னுமொரு கொடிய பாவியைக் காலதூதர்கள் ஈர்த்துச் செல்லுங்கால், இத்தலத்தின் பேரைச்

சொல்லி அதன்வழியாக இப்பாவியுடன் செல்லலாகாது, என்று பேசிக்கொண்ட எமதூதர்கள்பால் இத்தலத்தின் பேரைக் கேட்ட மாத்திரத்தில், அக்கண்டகசேதகன் தன் பாவங்களெல்லாம் தொலையப் பெற்று நற்கதியடைந்த தலம்.

அகத்தியர் பொதியமலைக்குச் செல்லுங்கால் இத்தலம் வைணவதலமாக இருந்ததை உணராது அவ்வழியே செல்ல, அங்கிருந்த வீரவைணவர்கள் அவர் தரித்திருந்த சிவவேடத்தைக் கண்டு பழிக்க, அவர் உடனே ஊரைவிட்டு வெளிப்போந்து, வைணவ வேடம்பூண்டு, அதே வைணவர்களை ஏமாற்றி அவர்கள் அனுமதியுடன் கோவிலுக்குட்சென்று, அங்கிருந்த பெருமாளைத் தம் கையால் குழைவித்து சிவலிங்கமாக மாற்றி, சிவனும் விஷ்ணுவும் வேறல்லர் என்றறியாது அகந்தை கொண்டிருந்த அவ்வைணவர்கள் வெட்கித் தலைகுனியும்படிச் செய்தன ரென்றும், அந்நாளே அவ்வைணவர்கள் அத்தலம் விட்டகன்றனரென்றும் சொல்லப்படுகின்றது. விஷ்ணுவின் நாமமும் தன் காதிற்படாத்படி தன் இருசெவிகளையும் நீலகண்டாட்சமணி மாலைகளால் மறைத்துக்கொண்டு, எக்காலத்தும் சிவநாமத்தையே சொல்லித் திரிந்த, வீரசைவர்களில் கொடுஞ்சைவனான கண்டாகனன் என்பானையும் அளவற்ற கருணையோடு ஆட்கொண்டு தம் வைகுந்தபதவியை அளித்தவரும், விஷ்ணு ஸ்தலங்களில் மிகச்சிறந்ததும், ஆழ்வார்கள் பதின்மராலும் சூடிக்கொடுத்த நாச்சியாராலும் மங்களாசாசனம் பெற்ற தனிச்சிறப்பினையுடையதுமான திருவரங்கம் பெரியகோயிலில் பரிசாரகம் செய்திருந்ததையும் தாம் வைணவரென்பதையும் மறந்து, திருவானைக்காவிலுள்ள சிவன்கோவிலில் தூங்கிக்கொண்டிருந்தபோது முன்தவப்பயனாய் தம்முன் தோன்றின நாமகளின் அனுக்கிரகம் பெற்று வசைகவிபாடுதலிற் சிறந்து விளங்கின காரணத்தால், விஷ்ணுவை மதியாமலும், துதியாமலும், விஷ்ணுவாலயங்கள் இருக்கும் திக்குநோக்காமலும் இருந்த காளமேகப்புலவர் திருக்கண்ணபுரம் வந்தபோது, வருணனையேவி மழை பெய்யச் செய்து அவரைத் தம் கோவிலுக்குள் வலிதில் வருத்தி, அவரிடம் "கண்ணபுரமாலே கடவுளிலும் நீயதிகம்" என்னுமோர் அடிபெற்று அகமகிழ்ந்தவருமான, பரம கருணாமூர்த்தியாகிய மகாவிஷ்ணுவின் அடியார்களெனச் சொல்லிக்கொண்டு வீரவைணவர்களெனும் திருநாமத்தோடு வெளிவரு

வோர், தாம் வழிபடுங்கடவுளின் கருத்துக்கு முழுவதும் மாறுகச் சிவனையும், சிவச்சின்னங்களையும், சிவனடியார்களையும் வெறுப்பது யாது காரணம்பற்றியோ அறிகிலேம். காரணம் யாதாயினும் மதத்துவேஷமும், கடவுள் துவேஷமும் யாரிடத்திருப்பினும் வெறுக்கத்தக்கதே.

இத்தலம் கோடைக்கானல், உதகமண்டலம், கூனூர், ஏர்க்காடு முதலிய கோடைக்கால வாசஸ்தலங்களைப்போல் மலைமேலில்லாமல் அடிவாரத்தில் சமபூமியில் இருந்தபோதிலும், கோடைக்காலத்தில் சூரியவெப்பம் தெரியாமல் குளிர்ந்திருக்கும் அதிசயத்தையுடையது. இவ்வூரில் ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் அடிக்கடி குளிர்ந்த சாரல் பெய்வதால் சரீரத்திற்கு மிக்க ஆரோக்கியமாக இருக்கின்றது. இங்கிருக்கும் அற்புதமான நீர்வீழ்ச்சியில் ஸ்நானம் செய்வதால், உடலில் மின்சாரசக்தி ஊட்டப்பட்டு, தீபனம் அதிகரித்து, பசியுண்டாகி எல்லாப் பிணிகளும் சொல்லாதோடுகின்றன. அச்சாரலினால் உண்டாகும் இன்பமும், அவ்வருவியில் நீராடுதலினால் கிடைக்கும் சரீரசுகமும், அங்குச் சென்று அனுபவித்தார்க்குத் தெரியுமேயன்றி, எழுதித் தெரிவிக்கவாவது படித்துத் தெரிந்துகொள்ளவாவது கூடியதன்று.

அங்கிருந்து மலைமேல் ஏறிப்போகும் பாதை வழியாகச் சுமார் ஒரு மைல் போனால், செண்பகாடவி என்னும் நீர்வீழ்ச்சிக்கும், அதற்கருகில் இருக்கும் செண்பகதேவியம்மன் கோவிலுக்கும் போகலாம். அதைக் கடந்து ஒரு மைல் சென்றால், சிவமதுகங்கை எனப்படும் தேனருவியைக் காணலாம். அது ஒரு சிறந்த நீர்வீழ்ச்சி. சுமார் 50 அடி உயரத்திலிருந்து ஜலம் வீழ்கிறது. தேனருவி என்னும் பேருக்கு அறிகுறியாக, இக்காலத்தும் அம்மலைப் பிளவின் இருபக்கங்களிலும் பெரிய தேனடைகள் பல இருப்பதைக் காணலாம். ஊருக்கு மேற்கில் 2 மைல் தூரத்தில் ஐந்தருவிகள் சேர்ந்து ஒரே இடத்தில் விழுகின்றன. இடம் அதிரமணியமானது. இம்மலை பார்ப்போர் கண்களைக் கவரக்கூடிய அதியற்புதக் காட்சிகளையுடையது. இந்தியாவில் உள்ள எம்மலையும் இதற்கீடாகாது என்பது திண்ணம்.

இவ்வூரில் பிரயாணிகள் தங்குவதற்கு லோகல்பண்டு (Local Fund) சத்திரம் ஒன்று இருக்கின்றது. மூன்றுநாள்

வரையில் தங்கலாம். நாள் ஒன்றுக்கு அறை ஒன்றுக்கு நான்கணு வாடகை உண்டு. பிராமணர்கள் தங்குவதற்கு மௌனசுவாமிகள் மடம் வசதியானது. இவைகளைத் தவிர பங்களாக்கள் வாடகைக்குக் கிடைக்கும்.

மீண்டும் தென்காசி சென்று ரயிலேறி திருநெல்வேலிக்குப்போய் யாத்திரையைத் தொடருதல் நலம். தென்காசியிலிருந்து விருதுநகர் போகும் கிளைப்பாதையிலுள்ள சங்கரநாயினர் கோவில், திருக்கரிவலம்வந்தநல்லூர், கண்ணைப்பதி இவைகளைத் தெரிசித்து வரலாம்.

திருக்கரிவலம்வந்தநல்லூர்:— பால்வண்ணநாதர். ஒப்பிலம்பிகை. சிவகங்கை. பாலசுந்தரதீர்த்தம். களாவிருட்சம். திக்குப்பாலகர் பூசித்த தலம்.

முன்காலத்தில் இத்தலம் மாங்கள் அடர்ந்த வனமாயிருந்ததாகவும் குலசேகரபாண்டியன் என்னும் அரசன் அவ்வனத்தில் வேட்டையாடினபோது, அவன் வேட்டைக்குப் பயந்த யானை ஒன்று ஓடித்திரிந்து, அங்குள்ள ஓர் களாமரத்தின் கீழிருந்த புதரை வலமாகச்சுற்றினவுடன், தன் யானை உருவம் நீங்கப்பெற்று சிவகணமாக மாறி நின்றதாகவும், அதைக்கண்ட அரசன் அப்புதரைச் சோதித்துப் பார்க்க, அதில் பால்போன்று வெண்மையான ஓர் சிவலிங்கம் இருக்கக்கண்டு வியப்பெய்தி, அப்புதரிருந்த இடத்திலேயே அச்சிவலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து பூசித்ததாகவும் சொல்லப்படுகின்றது.

கண்ணைப்பதி (பறியாமருந்துப்பட்டி):- பறியாமருந்தீசர். பரஞ்சோதியம்மை. சர்வானந்ததீர்த்தம். மருதவிருட்சம். கூன் பாண்டியனுக்கிருந்த பிணியை மருந்துபறித்தூட்டாது அகற்றின தலம்.

திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரி போகும் வழியிலுள்ள நாங்கூனேரி, திருப்பணக்குடி, திருவள்ளியூர் முதலிய க்ஷேத்திரங்களைத் தெரிசித்துச் செல்லல் அவசியம்.

நாங்கூனேரி (ஸ்ரீவரமங்கை. வானமாமலை. தோத்தாத்திரி.):— தெய்வநாயகர். வான்மாமலைப்பெருமாள். ஸ்ரீவரமங்கை

நாச்சியார், பூதேவி, நீளாதேவி, நந்தனவர்த்தனவிமானம், இந்திர புஷ்கரணி, சேற்றுத்தாமரை, கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம்.

இது *அஷ்டசுயம்புத் தலங்களில் ஒன்று. தெரிசனம் மிக்க விசேஷம். இந்திரன், பிரமதேவன், உரோமரிஷி, பிருகுமகரிஷி, மார்க்கண்டேயர் இவர்களுக்குப் பிரத்தியட்சம். நம்மாழ்வார் மங்களாசாசனம்.

இத்தலத்திலுள்ள கோவில் பெரிதாகவும் அழகாகவும் அமைந்துள்ளது. செல்வத்திற் குறைவில்லாதது. அனேக தங்க வாகனங்கள் உள. இவ்வூரில் வானமாமலைஜீயர்சுவாமிகள் எனும் பெரிய மடாதிபதி வசிக்கின்றனர். கோவிலுக்குள் ஒரு எண்ணெய்க்கிணறு இருக்கின்றது. அதிலுள்ள எண்ணெய்யை எடுத்துக்கொண்டுபோய்க் கொடுத்தால், குன்மம் சூலை முதலிய கொடும்பிணிகளும் நீங்கும் என்று கருதப்படுகிறது. எண்ணெய்க் கிணறு உண்டானதற்குக் காரணம் பின்வருமாறு சொல்லப்படுகின்றது. முன்னொருகாலத்தில் பெருமாள்பூமியில் மறைந்திருந்ததாகவும், அவ்விடத்தில் கொத்திப் பயிரிடுவதற்காக ஒரு குடியானவன் மண்வெட்டியால் வெட்டினதாகவும், அம்மண்வெட்டி பெருமாள் சிரமேற்பட்டு இரத்தம் பீறிட்டடிக்க, அவன் அதைக் கண்டஞ்சி நடுங்கி அவ்வூராரை அழைத்துவந்து காண்பித்ததாகவும், அவர்கள் கண்டு பெரிதும் வியப்புற்று, அவ்விடத்தை மெதுவாக வெட்டிச் சோதித்தவளவில், பெருமாள் விக்கிரகத்தைத் தலையில் இரத்தக்காயத்துடன் கண்டதாகவும், அவ்வெட்டுக் காயத்தையாற்ற அவர்கள் எண்ணெய்க் காப்பிட்டதாகவும் சொல்லப்படுகின்றது. அதுகாரணம் பற்றியே அப்பெருமாளுக்கு அபிஷேகஞ்செய்ய நல்ல எண்ணெய்யாக ஆட்டி அநேக ஆடங்கள் கொண்டுவருகின்றார்கள். எவ்வளவு எண்ணெய் அபிஷேகம் செய்தாலும் அவ்வெண்ணெய் எல்லாம் கோமுகத்தின் வழியாக வெளியில் வரும்போது, இரத்தக்காயத்தில் தோய்ந்து வெளிப்

---

*அஷ்டசுயம்புத்தலங்களாவன:— (1) பதரியாசிரமம். (2) சாளக்கிராமம். (3) திருவேங்கடம் என்ற திருப்பதி. (4) நைமிசாரணியம். (5) ஸ்ரீரங்கம். (6) வானமாமலை. (7) புட்கரம். (8) ஸ்ரீமுஷ்ணம். இவற்றுள் கடைசி இரண்டும் ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெறாதவை.

படும் எண்ணெய் போலவே வெளிவருவதை இக்காலத்தும் கண் கூடாகக் காணலாம். அப்படி வெளிவரும் எண்ணெய்தனைக் குடங்களில் நிறைத்து, முன் சொன்ன எண்ணெய்க்கிணற்றில் பெய்து வைக்கின்றனர். இங்கிருந்து திருக்குறுங்குடி, திருவிஜய மாநகரம், திருவிராதாபுரம் முதலிய தலங்கள் சென்று தெரிசித்துத்திரும்புதல் நலம்.

திருக்குறுங்குடி:— வைணவநம்பி. மலைமேல்நம்பி. நின்றநம்பி. இருந்தநம்பி. கிடந்தநம்பி. திருப்பாற்கடல்நம்பி. குறுங்குடிவல்லிநாச்சியார். பஞ்சகேதகவிமானம். திருப்பாற்கடல். நம்பிநதி. பக்கத்தில் நின்ற சிவபிரானுக்குப் பிரத்தியட்சம். நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார் மங்களாசாசனம்.

இவ்வூர் அடர்ந்த தோப்புகளும் ஜலவசதியும் உள்ளது. இத்தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெருமாள் உருவத்தில் மிகப் பெரியவர். தென்னிந்தியாவில் திருக்கோவலூரைத்தவிர மற்ற ஸ்தலங்களில், நின்று சேவைசாதிக்கிற அவசரத்தில் இவ்வளவு பெரிய மூர்த்தி இருப்பதாகத்தெரியவில்லை. இவ்வூருக்கருகிலிருக்கின்ற மலையில் காட்டுப்பாதை வழியாக 5 மைல் நடந்து சென்றால், மலைமேல்நம்பி திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருப்பதைக் காணலாம். தெரிசன விசேஷம். அக்கோவிலின் பக்கத்தில் இருக்கும நம்பிநதியில் குளிர்ந்ததும், ஸ்படிகம்போல் தெளிந்ததும், ஸ்நானத்திற்கேற்றதுமான ஜலம் எக்காலத்திலும் ஓடுகின்றது. ஸ்நான விசேஷம். காட்சி கண்ணைப்பறிக்கின்றது. மேலே போனபிறகு கீழே இறங்க மனம் வருவதில்லை. ஆனால் திருடர்கள் பயமும் காட்டுமிருகங்களின் உபத்திரவமும் இருப்பதால் அங்கே தங்குவது உசிதமன்று.

இதே ஊரில் சிவாலயம் ஒன்றும் இருக்கின்றது. சட்டைநாதர். பாகம்பிரியாநாயகி. நம்பிநதி. திருக்குளம். வில்வவனம்.

பஸ்மாசுரன் என்னும் அசுரன் சிவபெருமானைக்குறித்துக் கடுந்தவம் புரிந்து அவரிடம் தன்கையை யார்சிரசில் வைத்தாலும், அவர் உடனே எரிந்து சாம்பலாய்ப்போகும்படி வரம்பெற்று, அவ்வரத்தின் மகிமையைப் பரிசோதிக்கக்கருதி அச்சிவபிரான் தலைமேலேயே தன்கையைவைக்க எத்தனிக்க, அவர் அவனுக்

கஞ்சி ஓடி ஐவேலிக்காயில் ஒளித்துகொண்டனர் என்பது புராண வாயிலாகத் தெரிந்தவிஷயம். இக்கதைக்கேற்பவே இன்றும் ஐவேலிக்காயை உரித்துப் பார்த்தால் அதில் சிவலிங்கவுருவமான விதை இருப்பதைக் காணலாம். சிவபிரான் ஐவேலிக்காயில் மறைந்ததும், அப்பஸ்மாசுரன் மற்றத் தேவர்களை வருத்தவே, அவர்கள் பயந்து மகாவிஷ்ணுவிடம் சென்று முறையிட, அவர் மோகினிவடிவம்பூண்டு அவன்முன் செல்ல, அவன் அம்மோகினியின் அழகில் ஈடுபட்டு மதிமயங்கி அருகிற்சென்றனன். அப்போது மோகினிவடிவங்கொண்ட பெருமாள் அவனை அவன் பெற்ற வரத்தினாலேயே மாய்க்கக்கருதி, தான் வேறு யாரையும் விரும்புவதில்லையென்று தன் தலையைத்தொட்டுச் சத்தியம்செய்தால் ஒருவாறு இசையக்கூடும் என்று சொல்ல, காமப்பித்துத் தலைக்கேறியிருந்த அவ்வசுரன் தான் பெற்றிருந்த வரத்தையும் மறந்து தன் தலையைத்தொட்டவுடன் எரிந்துபட்டான். அப்பெரும்பழியை நீக்கிக்கொள்ளவேண்டி, இத்தலத்தில் மகாவிஷ்ணுவானவர் சிவபெருமானைப் பூசித்து அப்பழிநீக்கமும் அனுக்கிரகமும் பெற்றதாகக் கூறப்படுகிறது. இதற்கறிகுறியாக சிவபெருமானுக்கெதிரில் மகாவிஷ்ணுவானவர் வில்வத்தால் அருச்சிக்கும் கரங்களுடன் எழுந்தருளியிருப்பதைக் காணலாம்.

இத்தலத்திலிருக்கும் வைணவச் சைவக்கோயில்களிலிருந்து நாம் அறிந்துகொள்ளவேண்டிய உண்மைகள் பல உள. சிவனே பெரியவர் என்றும், விஷ்ணுவே பெரியவர் என்றும், பெரிய கடவுள், சிறியகடவுள் என இரண்டு கடவுள்கள் இருக்கின்றனரென்றும் மூடநினைவுகொண்டு, வீண்விதண்டாவாதம் செய்து திரிகிற வீரசைவர்கள், வீரவைணவர்கள், இவர்களிருவருக்கும், சிவனும் பெரியவரல்லர், விஷ்ணுவும் பெரியவரல்லர், இவர்தானவர், அவர்தானிவர், என்று காட்டக்கூடிய இரண்டு கோவில்களும் ஒருங்கே அமையப்பெற்று, அவைகளில் வைணவநம்பி கோவிலில் மகாவிஷ்ணுவானவர் தம் பக்கத்தில் நிற்கிற சிவபிரானுக்குச் சேவைசாதித்து அனுக்கிரகம் செய்ததாகவும், அவ்வாறே சிவன்கோவிலில் சிவபெருமான் தம் பக்கத்தில் நிற்கிற மகாவிஷ்ணுவுக்குக் காட்சிகொடுத்தருளியதாகவும் ஏற்பட்டிருக்கிற அவ்விரண்டு மூர்த்திகளையும் தெரிசித்தபின்னும், எல்லாம்வல்ல இறைவன் ஒருவனே தன் அடியார்களை உய்விக்கும்பொருட்டு காட்சிக்

கினியனைப் பல உருவங்கள்கொண்டு சேவைசாதிக்கின்றனன் என்னும் நுட்பமான உண்மையை உணராதார் சைவருமல்லர், வைணவருமல்லர் என்பதிற் சற்றேனும் ஐயமின்று.

ஆனால் வீரவைணவர்கள் என்று சொல்லிக்கொள்ளுவோரிற் சிலர், தன்னிடமிருந்து வரம்பெற்ற பஸ்மாசுரனுக்குப் பயந்து ஐவேலிக்காயினுள் ஓடியொளித்த பரமசிவனா, அதே பஸ்மாசுரனை வென்று கொன்ற மகாவிஷ்ணுவுக்கு அனுக்கிரகஞ் செய்ய வல்லவன்; இது ஒரு பெருங் கட்டுக்கதையாகும் என்பாருமுளர். பஸ்மாசுரனைத் தண்டிக்கவல்ல சத்தி பரமசிவனுக்கு இருந்ததா இல்லையா என்பதையும், பரமசிவனாற் செய்யமுடியாத ஒரு பெருங்காரியத்தை மகாவிஷ்ணு செய்துமுடித்தாரா என்பதையும் ஆய்ந்தறியவேண்டிய அவசியமுமில்லை. அவ்வாறறிய நமக்குப் போதிய ஆற்றலுமில்லை. ஆனால் எல்லாம்வல்ல இறைவனாயினும், தாம் கொடுத்தகொடையைத் திரும்பப்பெறலாகாது; தாம் சொல்லிய சொல்லை மாற்றலாகாது; தம் கொடையினாலோ, தம் சொல்லினாலோ, பிறருக்குத் தீங்கு விளையும்போலிருந்தால், தமக்கு மேலானவராயினும் கீழானவராயினும் மற்றொருவரைக்கொண்டு, அத்தீங்கை நிவிர்த்திக்கவேண்டியதுதான் முறை, என்பதொன்றே இப்புராணக்கதையினின்று நாம் அறிந்து உணர்ந்துகொள்ள வேண்டிய விஷயம்.

திருவிஜயமாநகரம் (பிரமபுரி, நாராயணபுரி, விஜயநாராயணம்):— மனோன்மணீச்சுரர். சிவகாமியம்மை. சிவகங்கை. விஜயகுளம். பிரமதீர்த்தம். விஷ்ணுதீர்த்தம்.

பிரணவத்தின் பொருளறியாது முருகக்கடவுளாற் குட்டுண்டு சிறையிற் கிடந்த நான்முகனும், சயந்தன், வெள்ளையானை, இந்திராணி, காமதேனு, சரபங்கர், நாரதர், அகத்தியர், ஸ்ரீராமர், இலட்சுமணர், பரதர், சத்துருக்கனர் முதலியோரும் பூசித்த தலம்.

பாண்டவர்கள் துரோபதையை மணந்தகாலத்து ஒவ்வொருவரும் அவளோடு கூடியிருக்கும் காலத்தைக் குறிப்பிட்டு, அவளப்படியிருக்கும் நாளில் மற்றவர்களில் யாராவது ஒருவர் அவளைக்கண்ணுற்றால், அவர் ஒரு வருடம் தீர்த்தயாத்திரைசெய்து அத்தோஷத்தைப் போக்கிக்கொள்ளவேண்டும் என்று நாரதர்

கட்டளையிட்டிருக்க, ஓர் நாள் நள்ளிரவில் ஓர் வேதியன் தன் பசுவை யாரோ கள்வன் கவர்ந்து செல்வதாக அருச்சுனனிடம் முறையிட, அத்தனஞ்சயன் தன் காண்டீபத்தை எடுப்பதற்காக உட்சென்றபோது, துரோபதையுடன் தருமரிருந்ததைக் கண்ட தோஷத்தை நிவர்த்தி செய்துகொள்ளும்பொருட்டு தீர்த்தயாத்திரை புறப்பட்டு, பூமியை வலமாகச்சுற்றித் தென்னாட்டிலுள்ள தீர்த்தங்களிலாடி க்ஷேத்திரங்களைத் தெரிசித்து வருங்கால், இராமேசுரத்திற்கடுத்த கடற்கரையில் இராமத்தியானத்தில் ஈடுபட்டிருந்த வாயுபுத்திரனான அநுமாரைக் கண்டு, இராமர் மலைகளைக் கொண்டு சேதுபந்தனம் செய்தது வீணென்றும், தனக்கு அத்தகைய அவதி நேர்ந்திருப்பின் தான் தன் விற்றிறமையினால் சரவணைகட்டி அதன்வழியாக வானரசேனைகளை அழைத்துச்சென்றிருத்தல் கூடுமென்றும் வாதாடி முதலில் தோல்வியடைந்து, பின்பு துவாரகாபதியான கண்ணன் திருவருளால் அவரை எளிதில் வென்று, அக்கண்ணன் கருத்தின்படி, பின் நடக்கவிருக்கும் பாரதப்போரில் தன் தேரிலுள்ள கொடியில் தங்கியிருந்து தனக்குதவிசெய்யும்படி உறுதிமொழி பெற்றுக்கொண்டு, இறுதியாக இத்தலமுற்று விஜயகுளத்தீர்த்தத்தில் மூழ்கி, அத்தோஷரகிதனாய் மீண்டானென்று கூறப்படுகின்றது.

தவிர, கங்காகுலத்திற்கு அணிசெய்யப்பிறந்த மன்னமார்த்தாண்டரெனும், சிவபத்தியிற் சிறந்தாரொருவர் சிவனடியார்கட்கு ஊணுடையளிக்கும் திருத்தொண்டு மேற்கொண்டொழுகுங்கால், அந்நாட்டில் "மழை மறுத்து வெள்ளமருக வளங்குன்றி விளைவஃகிய" தோர் கடுங்கருப்புக் காலத்தில் தமக்குற்ற இலம்பாட்டை நினைத்து,

அத்தவுலகிலுயிர்க்குநீயல்லையோ, அவ்வுயிர்ப்பசியால்
எய்த்தவருத்தமடியேனைவருத்துமாறென், யானீட்டி
வைத்தபொருளுந்தருமத்தின்வழியேசென்றதினியடிகள்
சித்தமலர்ந்தென்னிடும்பைவினைதீரவருட்கண்செய்கவென,

வேண்டிநின்ற அடியவருக்கிரங்கி, ஓர் உலவாக்கோட்டையளித்து,

இந்தக்கோட்டையெத்துணைநெல்லெடுத்து வழங்குந்தொறுநாங்கள்
தந்தவளிற்குறையாததன்மைத்தாகுமிதுகொண்டு
வந்தவிலம்பாடகற்றென்றுகொடுத்துமன்னன்மனக்கவலை
சிந்தத்திருநீறதுசாத்திமறைந்தாரையர்திருவுருவம்.

அவ்வுலவாக் கோட்டையை அம்மன்னமார்த்தாண்டர் அதிமகிழ்வுடன் பெற்று முன்போல் அடியார் தொண்டிழைத்து வந்த தலம்.

மனோன்மணி யென்னும் வேதியமாது தீர்த்தயாத்திரை சென்ற விடத்துத் தன் கணவனை இழந்து இத்தலமுற்று பூசிக்க, சிவபெருமான் இங்கிருக்கும் சிவகங்கை தீர்த்தத்தினின்றும் அவள் கணவனை வரவழைத்து மனக்கவலை தீர்த்தருளிய தலம். இக்காரணம்பற்றியே இத்தலமோங்கும் சிவபிரானுக்கு மனோன் மணீச்சுரர் எனத் திருநாமம் வழங்குகின்றது. இத்தலத்திலேயே தெரிசிக்கவேண்டிய விஷ்ணுகோவிலும் ஒன்றிருக்கின்றது. அழகியமன்னார். மன்னாட்சித்தாயார். விஜயகோடிவிமானம். விஜய பெரியகுளத்தீர்த்தம். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக் கோலம். விஜயனுக்கும் தேவேந்திரனுக்கும் கௌதமருக்கும் பிரத்தியட்சம்.

திருவிராதாபுரம்:— வரகுணபாண்டியேச்சுரர். நித்திய கலியாணியம்மை. சிவகங்கைதீர்த்தம். வரகுணபாண்டியன் முத லாயினோர் பூசித்து அருள் பெற்ற தலம்.

திருப்பணக்குடி:— சொக்கேசர். சிவகாமியம்மை. சிவ கங்கை. அனுமதீர்த்தம். சிபிச்சக்கரவர்த்தி. தேவேந்திரன், அனு மார் முதலியோர் பூசித்ததலம்.

ஓர் வணிகன் தன் வாணிபத்தினால் பெருந்திரவியந்தேடித் திரும்புங்கால் அத்திரவியத்தைப்பறிக்க எண்ணங்கொண்ட ஓர் வேடன் அவனை வழிமறித்துக்கொள்ள, அவ்வணிகன் முறையிடற் கிரங்கிச் சிவபிரான் வேடனைக்கொன்று வணிகனைக்காத்த தலம்.

திருவள்ளியூர்:- முருகக்கடவுள். வள்ளிநாயகி. சரவணப் பொய்கை. இது முருகபிரானது *குன்றுதோறாடலில் ஒன்று. நாரதர் வள்ளிநாயகியைத் தினைப்புனத்திற் கண்ணுற்று அவாது

*குன்றுதோறாடலிற் சிறந்த தலங்கள்:— (1) கதிர்காமம். (2) திருவள்ளியூர். (3) வெண்ணெய்மலை. (4) சென்னிமலை. (5) சிவமலை. (6) மருதமலை. (7) திருவேங்கடம். (8) திருத்தணிகை. (9) திருச்செங் கோடு. (10) திருப்போரூர். (11) கழுகுமலை. (12) மயிலாசலம் (மயிலம்).

கண்கொள்ளா வனப்பை முருகக்கடவுளுக்கறிவிக்க, அவர் உடனே அத்தேவியாரைக் காணவிரும்பி எழுந்தருள, அச்சமயம் தோழிகளோடு நீராடிக்கொண்டிருந்த வள்ளிநாயகி, முருகக் கடவுளைக்கண்டதும் வெட்கி மறைந்து ஒளித்துக்கொண்ட தலம். இக்காரணம்பற்றி இந்நாட்டிற்கு "வள்ளியோளித்தவளநாடு" எனப் பேர் வழங்குகின்றதாகத் தெரிகிறது.

கன்னியாகுமரி.— குமரியம்மை. அலைவாய்த்தீர்த்தம். சங்கிலித்தீர்த்தம். பரசுராமர் தம்முடைய தந்தை சொல்லைக் காப்பாற்றும்பொருட்டுத் தம் தாயைக்கொன்ற பழியை நீக்கக்கருதி சிவபெருமானைப் பூசித்து, பரசுவென்னும் கோடரியை ஆயுதமாகப்பெற்று, அதனுல் சமுத்திரத்தில் ஒருதிடற்செய்து, அத்திடலைப் பரசுராமக்ஷேத்திரம் என்னும் மலைநாடாக்கியபொழுது, அவர் சிவசத்தியாகிய அம்மையைப் பிரதிஷ்டைசெய்து பூசித்த தலம். இத்தேவியார் மணவிருப்பத்தினுல் சிவபெருமானைக்குறித்துக் கடுந்தவம்புரிய, அச்சிவபெருமான் அவர் தவத்துக்கிரங்கி மணத்திற்காகிய அரிசி பருப்பு முதலியவைகளுடன் வந்தும், அவரிடம் மணம் செய்துகொள்ளும்படி வேண்டாததால், சிவபெருமான் சினந்து தாம் கொணர்ந்தவைகளைக் கல்லாயிருக்கச் செய்துவிட்டு எகும்போது, அவ்வம்மையார் தாழ்ந்து வணங்கித் தமக்கருள்புரியும்படி பிரார்த்திக்க, "நீ எக்காலத்தும் கன்னிகையாகவே இருந்து ஜீவகோடிகளுக்கு அனுக்கிரகம் செய்துவருவாயாக." என்று வரமருளிச் சென்றதாகக் கூறப்படுகின்றது. இக்கதை புராணவாயிலாகத் தெரிந்தது. இதைத் தவிர, அங்கிருப்பவர்கள் கர்ணபரம்பரையாகத் தெரிந்து பின்வருமாறு சொல்லுகின்றனர்.

மேலே சொல்லியபடி சிவபெருமான் திருமணத்திற்காக வேண்டிய எல்லாப்பொருள்களையும் சேகரித்துக்கொண்டு, தம பூதகணங்களோடு வந்து கலியாணம் முடிக்க எத்தனித்தபோது, அவ்வம்மையார் சிவபிரானேடு வந்திருந்த கணங்களை விளித்து, "இங்கு வந்திருக்கும் பொருள்களுள், காம்பில்லாத மாங்காய், கண்ணில்லாத தேங்காய், கணுவில்லாத கரும்பு இவைகள் இருக்கின்றனவோ?" என்று வினவியதாகவும், அவர்கள் அதைச் சிவபிரானுக்கறிவிக்க, அவர் "அவ்விந்தையான பொருள்கள்

இவ்விந்தியாவில் இருப்பதாகத் தெரியவில்லையாயினும், அவைகள் இருக்குமிடந்தேடிப் போய்க் கொண்டுவருவோம்; நாம் மீண்டு வருமளவும் இப்போது கொண்டுவந்திருக்கும் அரிசி முதலிய பொருள்கள் கல்லாய்ச்சமைந்திருக்க." என்றுரைத்துப் போனவர் இன்றுவரை திரும்பி வரவில்லையென்றும், அதனால் மணம் தடைப் பட்டிருப்பதாகவும் சொல்லுகிறார்கள்.

எக்கதை எவ்வாறாயினும், இத்தலத்தில் அம்பிகை கன்னிகையாக இருப்பதும், இங்கிருக்கும் மணல் அரிசிமணலாக இருப்பதும் இன்றும் காணலாம். இம்மணல் வெளியில் எடுத்துவந்தால் யாரும் மணல் என்று சொல்லார். இம்மணலுக்கும் அரிசிக்கும் சற்றேனும் பேதமில்லை. இத்தகைய மணல் இவ்வூருக்கிப்பாலுமில்லை; அப்பாலுமில்லை.

இங்கு இம்மணலிருப்பதுபோலவே, சக்கரவர்த்தித் திருமகனாரின் தருமபத்தினியான சீதாதேவியை இராவணன் அபகரித்துக் கொண்டுபோய் இலங்கையில் வைத்திருந்ததும், இராமர் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள கடலில் அணை கட்டி அதன்வழியாகத் தம் வானரசேனைகளுடன் இலங்கைக்குச் சென்று, அங்கு இராவணனுடன் பெரும்போர்புரிந்து, அவ்வரக்கனுடைய பத்துத்தலைகளையும் தம் பாணங்களால் அறுத்துத் தள்ளி அவனைக் கொன்று சீதையை மீட்டுவந்ததும், புராணக் கதைகளன்றி உண்மையில் நடந்திருக்கவேண்டும் என்பதைக் காட்டவல்ல அறிகுறிகள் இப்பாகத்திற் பலவுள. அவையாவன:- (1) பாம்பன்முதல் இலங்கைவரையில், மரக்கலங்கள் போய்வருவதற்கு இடையூறின்றி இருக்கவேண்டி ஸ்ரீராமர் திரும்புகாலில் தம் வில்நுனியால் கீறிவிட்டதாகச் சொல்லப்படுகிற பாகம் தவிர மற்றப்பாகங்களில் அணைபோட்டதுபோல் சிறு குன்றுகள் கடலுக்குள் வரிசையாக இருப்பது. (2) முதல் அத்தியாயத்திற் சொல்லியபடி இராமேசுரத்தில், ஸ்ரீஇராமரால் பூசிக்கப்பட்ட இராமநாதர் ஆலயமும், அதற்கருகில் அனுமார் வாலறுப்புண்டு வீழ்ந்த இடத்தில் செம்மணலும் இருப்பது. (3) இராவணன் தூக்கிக்கொண்டுபோன சீதாதேவி இலங்கை சேர்ந்ததும், தாம் மீண்டும் தம் பதியை அடையும்வரை தமக்கு மஞ்சள் குங்குமம் முதலியவை தேவையில்லையென்று கடலில் எறிந்துவிட்டதாகச்

சொல்வதற்குச் சான்ருக, தெற்கில் கன்னியாகுமரி முதல் வடக்கில் வேதாரணியத்திற்கு அடுத்த "திருக்கோடிக்குழகர்" என்னும் கோடியக்கரை வரையுள்ள கடற்கரையில், நிறத்திலும் உருவத்திலும் தோற்றத்திலும் மஞ்சள் போலவே காணப்படுவதும், மஞ்சள் கிளைத்திருப்பது போலவே சிறு கிளைகளுடன் கூடியிருப்பதுமான "சீதையின் மஞ்சள்" என்னும் பெயருள்ள கற்கள் அகப்படுவது. (4) குங்குமம் கலந்தாற்போல் சிவந்து பொன்வேலை செய்வோருக்கு உதவுகிற மெருகுமணல் என்னுஞ் சிவந்த மணல் இருப்பது. (5) இராவணன் போர்க்களத்தில் இராமபாணத்தால் அடிபட்டு இறந்து வீழ்ந்ததும், அவனுடைய பத்து முகங்களிலுள்ளதும் கூர்மையான ஈட்டிகள் போன்றதுமான மீசைமயிரை வானரங்கள் பறித்துக் கடலிலெறிய, அவை இக்காலத்தும் "இராவணன் மீசை" என்னும் பெயருடன் முட்போலக் குத்தித் துன்புறுத்துவதன்றி மற்றெவ்வாற்ருனும் பயன்படாத ஓர் வகைப் புல்லாக முளைத்திருப்பது. (6) அதேகாலத்தில், வானரவீரர்கள் இராவணன் சீதாதேவியைக் கண்டு காமுறும்படிச் செய்த கண்கள் இவையன்ரே எனக்கறுவி, அவன் இருபது கண்களையும் அகழ்ந்தெடுத்துக் கண்டதுண்டங்களாக்கி மீன்களுக்கிரையாம்படிக் கடலிலெறிய, அவைகளை அம்மீன்களும் வெறுத்து விழுங்காது விட்டமையால், கற்களாய்மாறிக் கிடக்கின்றன என்பதற்கிணங்க, இக்கடற்கரையில் "இராவணன்முழி" எனப்படும் கண்விழிகள் போன்ற சிறுகற்கள் அகப்படுவது. (7) இத்தகைய கற்களும் புல்லும் நம் இந்தியாவை மூன்றுபக்கங்களிலும் சூழ்ந்திருக்கும் கடற்கரையில் மற்றெப்பாகத்தும் காணுதிருப்பது. இவைகள்போன்ற மற்றும் பல சாட்சியங்கள் உள. அவைகளையும் எழுதப்புகின் நூல் விரியுமென்றஞ்சி விடப்பட்டது.

இத்தலத்துள்ள அம்மன்கோவில் வங்காளக்குடாக்கடல் என்னும் கீழ்கடலும் அரபிக்கடல் என்னும் மேல்கடலும் ஒன்றுசேருகிற முனையில் வெகு அழகாகக் கட்டப்பட்டிருக்கின்றது. கோவிலுக்கு எதிரில் சங்கிலித்தீர்த்தம் என்னும் குளம் இருக்கின்றது. அதன் மதில்களில் கடற்றிரைகள் வந்து மோதினும், ஜலம் கடல்நீரைப்போல் உவர்ப்பாயில்லை. இக்கோவிலின் அருகில் கடலோரத்திலுள்ள ஒரு பெரும்பாறையின்மேல் யாத்ரீகர்கள் தங்கள் பிதுர்க்கடன்களை முடிக்கின்றனர். இவ்வூர் கோடைக்காலவாசத்

திற்கு மிக்க எற்றது. கிழக்கு, தெற்கு, மேற்கு ஆக மூன்று திசைகளிலிருந்தும் கடற்காற்று வீசி வெப்பத்தைத் தணிக்கின்றது. ஊருக்கு மேற்கில் ஓர் உன்னதமான இடத்தில் திருவாங்கூர் அரசர் ஒரு சிறு மாளிகை கட்டியுள்ளார். ஊரில் பிரயாணிகள் தங்குவதற்கு வசதிகள் உண்டு. அங்கிருக்கும் அர்ச்சகர்களான போற்றிமார்களே தங்கள் வீடுகளில் தங்க இடம் கொடுக்கின்றனர். தெரிசனம் மிக்க விசேஷம். உண்மைப் பத்தியோடும் ஒருவழிப்பட்ட மனதோடும் தெரிசித்தால் உலகப்பற்றொழிந்து நற்கதியடைவது திண்ணம். பூசை காலந்தவறாமல் நடக்கின்றது.

கன்னியென்றும் குமரியென்றும் கன்னியாகுமரி யென்றும் சொல்லப்படுகின்ற இத்தலமானது, பண்டைக்காலத்தில் தமிழ்த்தெய்வமே இப்பூவுலகில் பல்வேறுருவங்களோடு வந்துலவினரோவென ஐயுறும்வண்ணம், கலைவாணியின் பூரணவருட்பிரகாசத்தோடு விளங்கின சங்கப்புலவர்களுடைய நாவிலே புகுந்து வெளிப்பட்டதான அதிமேம்பாடுடையது. அக்காலத்தில் மேற்கே நெடுந்தூரமிருந்து பெருக்கெடுத்து வந்து, இத்தலத்தருகில் கடலொடுகலந்த குமரியாற்றிற்கும், அதற்குப் பல்காதம் தெற்கில் ஓடின பஃறுளியாற்றிற்கும் இடையில் 49 தமிழ்நாடுகள் சிறப்புற்றோங்கியிருந்து, பிற்காலத்தில் கடல்கொள்ளப்பட்டனவென்று அனேக *சங்கநூல்களால் தெரிகின்றது. "வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்." என்னும் தொல்காப்பியச்சிறப்புப் பாயிரத்தில் இக்குமரியைத் தமிழ்நாட்டின் தெற்கெல்லையாகக் குறிப்பிட்டிருக்கின்றது.

இக்காலத்தும், தன் எல்லைக்குள் இறக்கும் ஊர்வன, பறப்பன, நடப்பன முதலிய எல்லாச்சீவகோடிகட்கும், அவை இறக்குந்தருவாயில் வலது செவியில் தாரகமந்திரோபதேசம் செய்து, பிணிசெய்பிறவி வேர்களைந்துப் பெருவாழ்வளிக்கும் தொழிலை மேற்கொண்டொழுகுபவரான ஸ்ரீவிசாலாட்சி சமேத விசுவநாதருக்கு உறைவிடமாயும், பகீரதச்சக்கரவர்த்தியின் பகீரதப்பிரயத்தனத்தால் தேவலோகத்திருந்து இப்பூவுலகிற்குக் கொண்டுவரப்

* "வடிவேலெறிந்த வான்பகை பொறாது பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல்கொள்ள." என்னும் சிலப்பதிகாரப் பகுதியைக் காண்க.

பட்ட பாகீரதி என்பாள், தன் இயற்கைக்கு மாறாய்த் தெற்கிலிருந்து வடக்குநோக்கி அதி பயபக்தியுடன் அடங்கி ஒடுங்கி உள்ளோட்டமாக ஓடிக்கொண்டிருக்கும் சிறப்பினையுடையதாயும், அக்கங்கைக்கரையில் அசிமுதல் வாருணையீறாக 64 ஸ்நான கட்டங்களோடும், இந்நாட்டில் உள்ள அனேக அரசர்களாலும் சீமான்களாலும் கட்டப்பட்டுள்ள கணக்கற்ற சிறந்த மாளிகைகளோடும் விளங்காநின்ற ஜீவன்முக்த க்ஷேத்திரமாகிய காசி க்ஷேத்திரத்தில் உயிர்வாழ்ந்திருந்தும், தான் தன் கணவனுக்குச் செய்த அபசாரத்தைத் தொலைக்கமுடியாத அபஞ்சிகன் என்னும் அந்தணன் மனைவியான சாலியென்பாள், இத்தலமுற்றுக் குமரி நீராடி, தன் பாவத்தைப் போக்கிக்கொண்டனள் என்றால், இத்தலத்தின் சிறப்பைப் பின்னும் கூறப்புகுவது மிகையாமன்றோ!

"குமரிபாதங் கொள்கையின் வணங்கி
தமரிற்றீர்ந்த சாலியென் போடனை
யாதுநின் னூ ரீங்கென்வரவென
மாமறையாட்டி வருதிறமுரைக்கும்
வாரணசியோர் மாமறைமுதல்வன்
ஆரண உவாத்தி யரும்பெறல்மனைவியான்
பார்ப்பார்க்கொவ்வாப் பண்பினொழுகிக்
காப்புக்கடைகழிந்து கணவனையிழந்தேன்
எறிபயமுடைமையி னிரியல்மாக்களொடு
தெற்கட்குமரி யாடியவருவேன்." (மணிமேகலை.)

பௌர்ணமியன்று மாலைநேரத்தில் கடற்கரையிலுள்ள குன்றுகளில் ஒன்றின்மீது நின்று வானத்தைப் பார்த்தால் கீழ்த்திசையில் உதித்து விளங்கும் பூரணச்சந்திரனையும், மேற்றிசையில், அன்றலருக்கிவார்த்த தங்கப் பதக்கம்போல் ஒளிர்த்து மறையுங் கதிரவனையும் ஏககாலத்தில் கண்டு மகிழலாம். அக்கினிப் பிழம்பு போல் பிரகாசிக்கும் உதயசந்திரன் அஸ்தமனசூரியன் ஆகிய இவ்விரு வட்டங்களையும் உற்றுநோக்கில், பரம கருணாநிதியாகிய மகாவிஷ்ணு தமக்கு எக்காலத்தும் கால்வருடும் ஊழியம் செய்துவருவதை நினைத்து மனமகிழ்ந்து, பூமிதேவிக்கு அவ்விரு தாடங்கங்களையும் அளித்து அணியச்செய்தனரோ என்று நினைக்கத்தக்கதாக இருக்கின்றது. இவ்வற்புதக் காட்சி நம் இந்தியாவில் வேறெங்கும் காணக் கிடைப்பதருமை. கன்னியாகுமரி நாங்கூ

னேரியிலிருந்து சுமார் 25 அல்லது 30 மைலிருக்கும். வாடகை வண்டிகளும் மோட்டார்களும் கிடைக்கும்.

இவ்வூரிலிருந்து புறப்பட்டு சுசீந்திரம் என்று வழங்கப்படும் சுவீந்திரம் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தைத் தெரிசித்து, நாகர்கோவில்வழியாகத் திருவனந்தபுரம் செல்லல்வேண்டும். மோட்டார்கள் போகின்றன. நாகர்கோவிலிலும் சுவீந்திரத்திலும் தங்குவதற்குச் சத்திரங்கள் உண்டு.

சுவீந்திரம்:- தாணுமாலயப்பெருமான். உமாதேவியம்மை. நெய்யாறு, திருக்குளத்தீர்த்தம். அசுவத்தவிருட்சம்.

பிரமதேவர் தமக்குக் கோவிலில்லாத தோஷத்தை நீக்க வெண்ணிச் சிவபிரானைப்பூசிக்க அவரப்பூசனைக்கிரங்கித் தம் பக்கலிலேயே கோவில்கொண்டெழுந்தருளி இருக்கும்படி வரமருளியதாகவும், பிரமதேவனும் சிவபிரானும் சேர்ந்து உறையும் தலத்தில் தாமுமிருக்க எண்ணி, மகாவிஷ்ணுவும் சிவபிரானைவேண்ட, அவர் அவ்வாறே இருக்க வரமளித்ததாகவும் சொல்லப்படுகிறது. இக்காரணம்பற்றியே இத்தலத்திலுறையும் சிவபெருமானுக்கு, சிவன் என்று பொருள்படும் தாணு, விஷ்ணுவென்று பொருள்படும் மால், பிரமனென்று பொருள்படும் அயன், ஆக இம்மூன்று நாமங்களும். சேர்ந்தொன்ருய தாணுமாலயப்பெருமான் என்ற காரணப்பெயருண்டாயது போலும்.

---

## அத்தியாயம் 4.

——(o)——

ஓசையூ றிரசங்கந்த முருவமென் றுரைக்குமைந்தின்
ஆசுறு நெறியிற்செல்லா தகமுக மாகிநின்று,
நேசமாம் பத்மநாப னின்மல வருள்பெற்றோங்கும்
தாசர்தா ணம்பினோர்க்குச் சஞ்சல மென்பதின்றே.

திருவனந்தபுரம்:— அனந்தபத்மநாபர், ஸ்ரீ ஹரிலட்சுமி நாச்சியார், பூதேவி, கனகசபை, ஏமகூடவிமானம், மச்சதீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், அனந்தசயனம்.

இது மலைநாட்டிலிருக்கின்ற வைணவக்ஷேத்திரங்களுள் முதன்மையானது. அனந்தபத்மநாபர் தம் வலதுகையை ஒரு சிவலிங்கத்தின்மேல் வைத்தும், பிரமதேவரை நாபிக்கமலத்தில் தாங்கியும், உபயநாச்சியாரும் கால்வருட, அரவணையின்மேல் தெற்குப்பக்கம் சிரசுடன், கிழக்குநோக்கி, யோகநித்திரை புரிகின்றனர். இங்கு நரசிம்மமூர்த்தியும், கண்ணனும் இருக்கின்றனர். இந்நகரில் ஒற்றைக்கால் மண்டப ஆலயமும், உமாபதீச்சுரர் ஆலயமும் இருக்கின்றன. அனந்ததீர்த்தம், பத்மதீர்த்தம், அக்கினி தீர்த்தம், சக்கரதீர்த்தம், சங்குதீர்த்தம் முதலிய தீர்த்தங்கள் இருக்கின்றன. உருத்திரன், இந்திரன், சந்திரன், அகத்தியர், மலையபர்வதம், மைத்திராவருணி, மகேந்திரபர்வதம், திரிகூடபர்வதம், தாம்பிரவர்ணி, முதலியோருக்குச் சேவைசாதித்தருளிய தலம். நம்மாழ்வார், பெரியாழ்வார் மங்களாசாசனம்.

துளுவகுலத்தில் அவதரித்த திவாகரர் என்னும் யதீந்திரர் பூசித்து முத்தியடைந்த தலம். ஷையதீந்திரர் சந்ததியார்களே இக்காலத்தும் பெருமாளுக்குப் பூசை செய்கிறார்களென்று சொல்லப்படுகிறது. அனந்தபத்மநாபவிரதம் என்னும் சிறந்த நோன்பை முறைப்படி அனுஷ்டித்தால் எல்லாப்பேறும் பெறுவது திண்ணம். இதைத்தவிர ஸ்ரீகண்டேசுரத்திலிருக்கும் சிவன்கோவிலும், ஸ்ரீவராகத்திலிருக்கும் விஷ்ணுகோவிலும் தெரிசிக்கத்தக்கவை.

இந்நாட்டை ஆண்டுவந்த அரசர்களுள் மார்த்தாண்டவர்மா என்பவர் தம் நாடு முழுவதையும் இக்கோவிலுக்கு அர்ப்பணஞ் செய்துவிட்டாரென்று சொல்லப்படுகிறது. சிறந்த ஆசாரிய புருடர்களான ராமானுஜர், மத்வாச்சாரியார், சைதன்யசுவாமிகள் முதலிய மகான்கள் இங்குவந்து, ஸ்ரீபத்மநாபரைச் சேவித்திருக்கிறதாகத் தெரிகிறது. பிரதி வருஷமும் ஐப்பசி பங்குனி மாதங்களில் பெருமாள் எழுந்தருளி, கடற்கரை சென்று தீர்த்தஞ் சாதித்தருளுகின்றார். ஆறாண்டுகளுக்கொருமுறை கோவில் முழுவதும் இலட்சதீபங்களால் அலங்கரிக்கப்படுகிறது. இவ்வுற்சவத்திற்கு அனேக இலட்சம் ரூபாய்கள் செலவழிக்கப்படுகிறது. இக்காலத்திற்றான், க்ஷத்திரியகுல திலகனாகிய கார்த்தவீரியார்ச்சுனனால் அனுஷ்டிக்கப்பட்டதும், வேதங்களால் போற்றப்பட்டுள்ளதுமான "முரஜபம்" என்னும் சிறந்த ஜபம் 56 நாட்கள் வரையில் நடைபெறுகின்றது.

இவ்வூர் திருவாங்கூர் நாட்டிற்குத் தலைநகர். இந்நாட்டரசர் கோவிலுக்கெதிரிலிருக்கிற அழகான சிறு அரண்மனையில் வசிக்கின்றார். இவ்வரசர் தவறாமல் தினந்தோறும் பெருமாளைச் சேவித்து வருகிறார். இந்நகர் விசாலமான வீதிகளுடனும், உன்னதமான கூடகோபுரங்களுடனும், அழகான மாளிகைகளுடனும், தென்னை, கமுகு, பலா, மா முதலிய பலவிருட்சங்களுடனும், அமரேசனுறையும் அமராவதியோவென ஐயுறும்வண்ணம் சிறந்து விளங்குகின்றது. இவ்வூரில் பார்க்கவேண்டிய கட்டிடங்களும் காட்சிகளும் அனேகம் உள. சட்டக்கல்விச்சாலை (Law College), தொழிற்கல்விச்சாலை (School of Arts), மராமத்து இலாகா கல்விச்சாலை (Engineering College), நகரசபை (Town Hall) முதலிய கட்டிடங்கள் பார்க்கத்தகுந்தவை. இவ்வூரிலிருக்கிற உயிர்ப்பிராணிகளின் தொகுதியும் (Zoo), இறந்த பிராணிகளின் சாலையும் (Museum) அவசியம் பார்க்கவேண்டியவை. உயிர்ப்பிராணிகளின்தொகுதி ஒருக்கால் மைசூரில் அதிகமாயிருக்கலாம் என்று சொல்லக்கூடுமாயினும், இறந்த பிராணிகளும் மற்றக் காட்சிக்குரிய பொருள்களும் வெகு அழகாக அமைத்திருக்கிற சாலைகளில் இதைச் சிறந்ததாகவே சொல்லலாம்.

இவ்வூர்க் கடற்கரை மிகவும் அழகானது. எத்தனை ஆயிரம் பேராயினும் ஒருவித இடுக்கணுமின்றி இருந்து தண்ணென வீசும் கடற்காற்றை அனுபவிக்கலாம். இங்கிருக்கும் ஜனங்கள் சுசியாகவும் அழகாகவும் இருக்கின்றார்கள். இவ்வூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கருகில் பிரயாணிகள் தங்குவதற்கு இந்நாட்டரசர் ஒரு பெரிய சத்திரம் கட்டியிருக்கின்றார். பிராமணர்களுக்கும் மற்றவர்களுக்கும் வேறு வேறு பாகங்களாகப் பிரித்துக் கட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் இச்சத்திரம் ஊருக்கு வெளியில் இருப்பதால் ஊருக்குள் போகவேண்டியிருந்தால் வண்டிவைத்துக்கொண்டு போகவேண்டியிருக்கும். வண்டிகள் ஏராளமாய்க் கிடைக்கும். இதைத்தவிர, புத்தன் சந்தைக்கருகிலிருக்கிற சத்திரத்திலும் தங்கலாம். இவ்வூரில் பிராமணர்கள் எத்தனைபேர் வரினும் எக்காலத்தும் அன்னமளிக்கப்படுகின்றது.

நாங்குனேரி, திருக்குறுங்குடி, கன்னியாகுமரி முதலிய தலங்களைப் பார்க்க விரும்பாதவர்கள், திருநெல்வேலியிலிருந்து தென்காசி, செங்கோட்டை, கொல்லம் மார்க்கமாக ரயிலிலேயே

இத்தலம் வரலாம். ஆனால் இந்தியாவை வலம் வர விரும்புவோர் முன் சொன்னபடி நாங்குனேரி, கன்னியாகுமரி, நாகர்கோவில் மார்க்கம் வருவதுதான் நலம். திருவனந்தபுரத்தில் ரயிலேறி ஜனார்த்தனம் செல்லல் வேண்டும்.

ஜனார்த்தனம் (வர்க்கலை):— ஜனார்த்தனப் பெருமாள். ஜனார்த்தன்தீர்த்தம், சக்கரதீர்த்தம் முதலிய 13 தீர்த்தங்கள் உள.

இராவண கும்பகர்ணாதியரக்கர்களைப் போரில் வென்று கொன்றதால் ஸ்ரீராமருக்கேற்பட்ட பிரமஹத்தியைப் போக்குதற் பொருட்டு பிரமதேவர் யாகஞ்செய்த தலம். நந்திக்கிராமத்தில் தம் வரவை எதிர்நோக்கியிருக்கும் பரதருக்குத் தாம் வருவதாகச் சொல்லிவந்த காலம் குறுகிவிட்டதால், வழியிற் காலந் தாழ்க்கவியலாத ஸ்ரீராமர் யாகத்திற்கு வராமல் அயோத்திக்கு நேராகச் சென்றமையாலும், ஸ்ரீராமர் பட்டாபிஷேகத்தைப் பார்த்தானந்திக்க மற்ற தேவர்கள் இருடிகள் முனிவர்கள் முதலிய எல்லோரும் அயோத்திக்குச் சென்றுவிட்டமையாலும், பிரமதேவர் காமதேனுவால் யாகசாலையிற் பாகஞ்செய்து வைத்திருந்த பர்வதாகாரமான அன்னத்தைப் புசிக்க ஒருவருமில்லையே என்று கவலையுற, மகாவிஷ்ணு ஜனார்த்தனன் என்னும் ஒரு சிறு பாலனாக வந்து, அவற்றையெல்லாம் புசித்துப் பிரமதேவருக்குக் காட்சி கொடுத்த தலம். மானிடரூபம் பெற்றிருந்த நவ பிரமாக்கள் அசுவத்தவிருக்ஷரூபமாயிருந்த மகாவிஷ்ணுவை வலம்வந்து முத்திபெற்ற தலம். இப்போதும் சந்நிதிக்கெதிரில் இருக்கின்ற பெரிய அரசமரத்தை வலம்வருதல் மிகவும் விசேஷமாகக் கருதப் படுகிறது. கோவிலுக்கடுத்த தென்புறத்தில் சக்கரதீர்த்தம் என்னும் திருக்குளம் இருக்கின்றது. இதன் தென்புற மதிலிலிருக்கிற கோமுகவழியாய் எக்காலத்திலும் நீர்த்தம் வந்து குளத்தில் வீழ்ந்துகொண்டிருக்கின்றது. இத்தீர்த்தம் எங்கிருந்து வருகிற தென்பதை யாவராலும் அறியக்கூடவில்லை. ஆனால் விசாரித்தவளவில் ஜனார்த்தனப்பெருமாளின் திருப்பாத தீர்த்தம் பூமிவழியாக வருகிறதாகச் சொல்லப்படுகிறது.

சுப்பிரயஜசு என்னும் அரசனைப் பிடித்திருந்த பிரமஹத்தியானது, இமசேது பரியந்தமுள்ள க்ஷேத்திரங்களில் ஒன்றிலாயினும் விலகாது இத்தலத்தில் விலகினதாகவும், அவ்வரசன் தவத்

திற்கிரங்கி பூர்வம் பிரமதேவருக்குச் சேவை சாதித்த ஜனார்த்தனப்பெருமாள் பிரசன்னமாகிக் காட்சிகொடுக்க, அவ்வரசன் அவரை ஆலிங்கனம் செய்துகொண்டு, சகல தேவர் முனிவர்கள் முன்னிலையில் விசுவகருமாவினால் நிருமிக்கப்பட்ட விமானத்தில் பிரகஸ்பதியால் பிரதிஷ்டை செய்வித்துத் தெரிசித்து விஷ்ணு பதவி அடைந்ததாகவும், விசுவாமித்திரர் பூசித்துப் பிராமணத்துவம் பெற்றதாகவும், வசிஷ்டர் ஆராதித்து புத்திரசோகம் நீக்கிக் கொண்டதாகவும் கூறப்படுகிறது. இச்சந்நிதிக்கெதிரில் க்ஷீராப்தி சயனராய் சேவைசாதிக்கும் ஒரு விஷ்ணு கோவிலும், அதற்குப் பின்புறத்தில் ஒரு சிவன் கோவிலும் இருக்கின்றன. ஜனார்த்தனர் கோவிலுக்கு மேற்கில் அரை மைலில் சமுத்திரமிருக்கின்றது. அங்கும் ஸ்நானவிசேஷம். சமுத்திரக்கரையோடு சற்றுதூரம் சென்றால் ஒரு சிறு நீர்வீழ்ச்சியைக் காணலாம். சமுத்திரக் கரையில் பிரயாணிகள் தங்க சத்திரம் இருக்கின்றது. இத்தலத்தில் பிதுர்க்கடன்முடித்தல் மிக்க விசேஷமாகக் கருதப்படுகிறது. அக்கடன்களை எத்தலத்தில் எவ்வகுப்பினர் செய்யினும், முடிவில் "ஸர்வம் ஜனார்த்தனப்ரீதி" என்று அக்கடன்களைச் செய்துவைக்கின்ற புரோகிதர்கள் சொல்லக் கேட்டிருக்கலாம். ஆகையால் அக்கடன்களை ஏற்றுகொள்ளுகிற பெருமானே அர்ச்சாவதாரராய் எழுந்தருளியிருக்கின்ற தலத்திற் செய்வது மிகச்சிறந்ததென்று சொல்லுவது மிகையாகும். இவ்வூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கருகில் பெட்டிகள், கூடைகள், தொட்டில்கள் முதலியவைகளை, பிரம்பால் மிக்க அழகாகவும் வேலைப்பாடாகவும் செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலை இருக்கின்றது. பார்க்கத்தகுந்தது.

கோல்லம்:— இது தெரிசிக்கவேண்டிய க்ஷேத்திரங்களுள் ஒன்றல்லவாயினும், தங்கிப் பார்க்கவேண்டிய ஊர்களில் ஒன்று. தவிர இவ்விடத்தில் புகைவண்டிப் பாதையை விட்டுப் புகைப்படகிலாவது மோட்டாரிலாவது பிரயாணத்தைத் தொடரவேண்டுமாதலால், இவ்விடம் தங்குவது அவசியமாக ஏற்படுகின்றது.

இவ்வூரிலிருக்கிற சிவன்கோவிலிலும் கண்ணன் கோவிலிலும் மார்ச்சு அல்லது ஏப்பிரல் மாதத்தில் உற்சவங்கள் நடக்கின்றன. இவ்வூரிலிருந்து சுமார் 5 மைல் தூரத்திலுள்ள முக்குத்தலை

என்னும் ஊரிலிருக்கிற விஷ்ணு கோவிலிலும் ஒரு உற்சவம் நடக்கின்றது. இவைகளைத்தவிர பங்குனி சித்திரை மாதங்களில் மூலங்கடவு, திருக்கடவூர் என்னும் ஊர்களில் 'குதிரைக்கட்டு' என்னும் திருவிழா நடக்கின்றது. இதற்காக ஏராளமான ஜனங்கள் கூடுகிறார்கள்.

இத்திருவிழாக் காலங்களில் கணக்கற்ற ஆடு கோழிகள் பலியிடப்படுகின்றன. கடவுள் பேரைச்சொல்லி நடந்துவருகிற இக்கொடிய வழக்கம் எக்காலத்தில் தொலையுமோ, அக்காலத்திற்றான் நம் இந்தியா முன்னேற்றம் அடையும் என்பது திண்ணம்.

ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து வடமேற்கில் சுமார் ஒருமையில் 'ஆசிரமம்' என்னும் இடத்தில் இருக்கின்ற ரேஸிடேன்ஸி (Residency) பங்களாவும், அதற்கு எதிரே இருக்கிற 'அஷ்டமுடி' என்னும் ஏரியின் கரையின்மேல் இருக்கின்ற 'தாவள்ளி' அரண்மனையும் பார்க்கத்தகுந்த கட்டிடங்கள். அவைகள் இருக்கும் இடம் கண்கொள்ளாக்காட்சி அளிக்கின்றது. ஸ்டேஷனிலிருந்து சுமார் 2 மைல் தூரத்தில் இருக்கிறதும் ஆங்கில அரசாங்கத்தைச் சேர்ந்ததுமான 'தங்கஸேரி' என்னும் ஒரு சிற்றூரில் விளக்குக் கூண்டும் (Light house) ஒரு இடிந்த பழங்கோட்டையும் இருக்கின்றன.

இவ்விடமிருந்து தினந்தோறும் காலை மாலை இரண்டு வேளையும், ஆலப்புழை, வைக்கம், எர்ணுகுளம் முதலிய இடங்களுக்கு உப்பங்கழி (Back Water) வழியே மோட்டார் படகுகளும் புகைப்படகுகளும் போவதுடன், கரைவழியாக மோட்டார் வண்டிகளும் போகின்றன.

இவ்வூரில் ரெயில்வேஸ்டேஷனுக்கு அருகில் பிரயாணிகள் தங்குவதற்காகக் கட்டப்பட்ட கட்டிடம் (Travellers' Bungalow) ஒன்றும், மகாராஜா சத்திரம் ஒன்றும் இருக்கின்றன. இவைகளைத் தவிர ஊருக்குள்ளும் சத்திரங்கள் இருக்கின்றன. அவைகளுள் ஒன்றில் பிராமணர்களுக்கு இனமாகச் சாப்பாடு போடுகிறார்கள். இவ்வூர் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து மேற்கில் சுமார் ஒரு மைல் தூரத்தில் கடற்கரை இருக்கின்றது. கடல்

ஆழமாகவும் கரையோரம் சற்று செங்குத்தாகவும் இருந்தாலும், நல்ல மணலாக இருப்பதால் உலாவுதற்கு ஏற்றதாயிருக்கின்றது. செம்படவர்கள் வீடுகள் அதிகம்.

இவ்வூரிலிருந்து மணியாச்சி போகிற ரயிலில் செங்கோட்டை வரையிலாவது போய்த்திரும்புதல் அவசியம். மேற்குத் தொடர்ச்சி மலையைக் கடந்து ரயில் வரும் வழியில் இருக்கும் காட்சி பார்க்கத் தகுந்தது. ஒரு பக்கத்தில் பெரிய பள்ளமாகவும், மற்றப் பக்கத்தில் உயர்ந்த மலையாகவும் பார்ப்போர் மனம் திகிலடையும்படி காணப்பட்டாலும், அம்மலைப்பாங்கரில் அடர்ந்து செழித்திருக்கும் மரங்களும் செடிகளும் கண்ணுக்கினிமையான காட்சியைக் கொடுக்கின்றன. இத்தகைய காட்சி தென்னிந்தியாவில் நீலகிரி ரயில் பாதையைத் தவிர வேறு எங்கும் கிடையாது. மேலும் இப்பாதையில் உள்ள பகவதிபுரம், ஆரியன்காவு இவ்விரண்டு ஸ்டேஷன்களுக்கிடையில், சுமார் ஏழு பர்லாங்கு தூரம் வரையில் மலையைக்குடைந்து ரயில் போட்டிருக்கிறார்கள். இதைப் பார்ப்பதவசியம். இக்குகைப்பாதையில் (Tunnel) வண்டி போகும் போது கதிரவன் ஒளிமறைந்து இருள் நிறைந்துவிடுவதால், பகலிலும் விளக்கு போடுகிறார்கள். சுவாசத்திற்கு நல்ல காற்று கிடைப்பதருமையாயினும், வண்டி போகும் வேகத்தால் வீசுகிற காற்று போதுமானதாக இருக்கிறது. இம்மாதிரி குகைப்பாதைகள் நீலகிரி ரயில் பாதையிலும், வடஇந்தியாவில் அனேக இடங்களிலும் இருக்கின்றன.

இதே பாதையிலிருக்கிற புனலூர் என்னும் ஸ்டேஷனுக்கருகில் தொங்குபாலம் (Suspension Bridge) ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. நடுவில் தூண்களாவது கால்களாவது இல்லாமல், இருகரைகளிலிருந்தும் போடப்பட்டிருக்கிற இருப்புச் சங்கிலிகளில் கம்பிகள் போட்டுத் தொங்கவிடப்பட்டிருக்கின்றது. இம்மாதிரி வாராவதிகள் இமயமலையின் பேரில் திருக்கேதாரம் பதரிநாதம் போகும் பாதையில் ஏராளமாகவும் இன்னும் பெரிதாகவும் இருக்கின்றன.

ஆலப்புழை (Alleppey):— இவ்வூரும் சுவாமி தெரிசனத்திற்குகந்த க்ஷேத்திரமல்லாவிடினும் பார்க்கத் தகுந்த ஒரு

சிறு பட்டினம் இது திருவாங்கூர் நாட்டைச் சேர்ந்த ஒரு ஜில்லாவின் தலைநகர். ஜனத்திரள் உள்ளதாகவும் கடைத்தெருக்கள் நிறைந்ததாகவும் இருக்கின்றது. கொல்லத்திலிருந்து காலை புறப்படுகிற படகுகள் இவ்வூருக்கு மாலையிலும், மாலை புறப்படுகிறவை காலையிலும் வந்து சேருகின்றன. ஒரு இரவு அல்லது ஒரு பகல் முழுவதும் படகில் கழிக்க வேண்டியிருக்கிறது. படகில் தூங்குவதற்குப் போதிய வசதிகள் இல்லாததாலும் அக்கம் பக்கங்களிலிருக்கின்ற தென்னஞ்சோலைகளின் காட்சி கண்டு களிக்கத் தகுந்ததாயிருப்பதாலும், பகலில் பிரயாணஞ் செய்தலே நலம். ஆனால் வழியில் எங்கும் ஆகாரம் கிடைப்பதரிதாதலால், பிரயாணிகள் தகுந்த ஏற்பாட்டுடன் புறப்படுதல் அவசியம். படகு போய்த் தங்கும் இடத்திலிருந்து சுமார் நூறுகஜ தூரத்தில் ஒரு பெரிய முனிசிபல் சத்திரமிருக்கின்றது. வாடகை சிறிது கொடுக்கும்படி நேரிடினும், தங்குவதற்கு எல்லா வசதிகளும் உண்டு. அதில் காவற்காரன் எப்போதும் இருந்துகொண்டு, பிரயாணிகளிடம் எதிர்பார்க்கும் சொற்ப ஊதியத்திற்காக அவர்களுக்கு வேண்டிய எல்லா வேலைகளையும் செய்கிறான். இச்சத்திரத்திற்கெதிரிலேயே எல்லாக்கச்சேரிகளும் கலாசாலைகளும் இருக்கின்றன. இவ்வூரிலுள்ள கத்திரிக்காய்கள் சிறு புடலம் பிஞ்சுகள்போன்று மெல்லியனவாயும் மிக்க நீளமாயும் இருப்பதால், கொடிபோல் துவளுகின்றன. எந்தக்கத்திரிக்காயும் சுமார் ஒருமுழ நீளத்திற்குக் குறைவில்லை. டில்லியில் கத்திரிக்காய்கள் உரிக்காத தேங்காயளவு பெரிதாய் இருக்கின்றன. உடுப்பியில் புடலங்காய்கள் மெலிந்து குறுகி இவ்வூர்க்கத்திரிக்காய்கள் போலவே இருக்கின்றன. தேசங்தோறும் பாஷைகளும் மனிதர்களும் வேறுவதுபோல், காய்கறிகளும் வேறுகின்றன.

இவ்வூர்க் கடற்கரை சத்திரத்திற்கு மேற்கில் சுமார் ஒரு மைல் தூரத்தில் இருக்கின்றது. கடற்கரைமணல் சுத்த வெண்மையாகச் சர்க்கரைபோல் இருக்கின்றது. ஒரு பெரிய விளக்குக்கூண்டு இருக்கின்றது. இவ்வூரில் தேங்காய்நார்க் கயிற்றால் செய்யப்படுகிற விரிப்புகள் (Carpets) மறைப்புகள் (Screens) முதலியவை மிக அழகாக இருக்கின்றன. தேங்காய்நாரினால் கயிறு திரிப்பதன்றி, அநேக விதமான சிறந்த பொருள்களையும் செய்து வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்.

ஏராளமான தேங்காய்கள் விளைகிற தஞ்சை முதலிய ஜில்லாக்களில் தேங்காய்களை மாத்திரம் ஏற்றுமதி செய்துவிட்டு, அவைகளின் மட்டைகளை அடுப்புக்கு விறகாக உபயோகித்து எரித்து சாம்பராக்கிவிட்டுத் தங்களுக்கு வேண்டிய கயிறு முதலிய பொருள்களை வெளியூர்களிலிருந்து வருத்திக்கொண்டிருப்பது, நாட்டின் முன்னேற்றத்திற்கு அறிகுறியன்று. கொல்லமிருந்து ஆலப்புழை போகிறவழியிலும், மலையாளத்தில் மற்றெந்த இடங்களிலும் ஏழை ஜனங்கள் தேங்காய்மட்டைகளிலிருந்து நார் எடுத்து அதைக் கைராட்டினங்களால் கயிறாகத் திரித்து விற்று, வயிறு வளர்க்கின்றனர். அப்படியிருக்க, தேங்காய் விளைவில் குறைவில்லாத இத்தமிழ்நாட்டில் ஒரு இடத்திலாவது இத்தொழிலை ஏற்படுத்தித் தீக்கிரையாகிற ஏராளமான தேங்காய் மட்டைகளைப் பண்படுத்தி ஏழை ஜனங்களுக்கு வயிற்றுப் பிழைப்பும், வியாபாரிகளுக்கு நல்ல வருமானமும் தேடிக்கொள்ள வழி தெரியாமலிருப்பது வருந்தத்தக்கதே. இனியாகிலும் தமிழ்நாட்டு வியாபாரிகள் மலையாளத்திலிருந்து இத்தொழிலில் தேர்ந்த சில குடும்பத்தாரை வரவழைத்து வைத்துக்கொண்டு, இப்பக்கத்திலும் இக்கைத்தொழிலைப் பரவச்செய்தல் நலம்.

அம்பலப்புழை:—ஆலப்புழைக்குத் தெற்கில் 8 மைலில் அம்பலப்புழை என்னும் பிரபலமான கிருஷ்ணக்ஷேத்திரம் இருக்கின்றது. மோட்டார் வண்டிகளும் இதர வண்டிகளும் வாடகைக்குக் கிடைக்கும். இக்கோவிலில் கிருஷ்ணவிக்கிரகம் வெகு அழகாக அமைந்திருக்கிறது. தங்கக் கவசஞ்சாத்தி அலங்காரம் செய்துவிட்டால் "நம்பியைக்காண நங்கைக்காயிரம் நயனம் வேண்டும்." என்றவாறு அக்கண்ணனைத் தெரிசிக்க நமக்கு ஆயிரம் கண்கள் வேண்டும். இக்கோவிலில் நிவேதனமாகிற பால்பாயசம் பேர்போனது. நல்ல பசும்பாலை ஏராளமாகச் சேர்த்துப் பாயசமாகச் செய்து நிவேதித்து வினியோகம் செய்கிறார்கள். கோவிலில் இதற்காகக் காத்திருக்கும் பிராமணர்கள் அதை வாங்கி மற்றவர்களுக்கு விற்கிறார்கள். பிராமணரல்லாதாருக்கு அதை வினியோகம் செய்வதில்லை. சொற்பத்துகைக்கு ஏராளமாய்ப் பாயசம் கிடைக்கிறது. சாப்பிடத் தேவாமிருதம் போல் இருக்கின்றது. இக்கோவிலுக்கு ஏராளமான பசுக்கள் இருக்கின்றன. பாம்புகளும் ஏராளமாயிருப்பதாகவும், அவற்றால்

மனிதர்களுக்கு எக்காலத்திலும் எவ்விதமான கெடுதலும் நேரிடு கிறதில்லை என்றும் சொல்லுகிறார்கள். குறிப்பிட்ட காலத்தில் பால்பாயசம் நிவேதனமாகாவிட்டால் தேவகிசுதன் அரையில் அணிந்திருக்கின்ற தங்கச்சதங்கை நிறைந்த அரைஞாண் நழுவு மென்றும், அப்படி நழுவினால், ரூபாய் இரண்டாயிரம் வரையில் செலவழித்துப் பிராயச்சித்தம் செய்யவேண்டுமென்றும் சொல் லிக்கொள்ளுகிறார்கள். கோவில் சிறிதாயினும் அழகாக அமைந் திருக்கிறது. தெரிசனம் செய்தல் அவசியம்.

வைக்கம்:—மீண்டும் ஆலப்புழை வந்து படகேறி வைக் கம் செல்லல்வேண்டும். இத்தலத்தில் வியாக்கிரபாத மகரிஷி இருந்ததால், இதை "வியாக்கிராலயம்" என்றும் கூறப்படுகிறது. இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானுக்கு "அன்னதான மகாதேவர்" என்ற திருநாமம் வழங்குகிறது. கரன் என்னும் அரக் கனால் கைலாயத்தினின்று கொண்டுவரப்பட்ட மூன்று சிவலிங்கங் களில் இவ்வூரில் ஒன்றும், இதற்கருகிலுள்ள ஏத்துவானூரில் ஒன் றும், கடுத்துருத்தியில் ஒன்றும் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. கோவில் கூடியவரையில் பெரிதாகவும் அழ காகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. கோவிலுக்கு வடக்கில் பிரயா ணிகள் தங்குவதற்கு வசதியான பெரிய சத்திரம் ஒன்று இருக் கிறது. இக்கோவிலில் இம்மலைநாட்டிலுள்ள மற்றெல்லாக்கோவில் களிலும் செய்வதுபோலவே, கோவில் அர்ச்சகர்கள் பிராமணர் களுக்கு மட்டும் கையில் தீர்த்தம் விபூதி முதலிய பிரசாதங்களைக் கொடுக்கிறார்களே தவிர, பிராமணரல்லாதாருக்கு அவ்விதம் கொடுப்பதில்லை. விபூதியாயிருந்தால் தண்ணீரில் நனைத்துப் பூமி யில் எறிகிறார்கள். அதை அவர்கள் பூமியிலிருந்து எடுத்துக் கொள்ளவேண்டியது. தீர்த்தத்திற்காக பாத்திரங்களை வைத்து விட்டு விலகிச்சென்றுவிட்டால், அவ்வர்ச்சகர்கள் அப்பாத்திரங் களில் தீர்த்தம் ஊற்றிவிட்டுப் போய்விடுகிறார்கள். பிறகு பிரா மணரல்லாதார்கள் போய் அவரவர்கள் பாத்திரங்களை எடுத்துக் கொள்ளவேண்டியது. கோவிலில் பூசை செய்யும் பிராமணர்கள் மற்ற பிராமணர்களுடன்கூடப் பேசுவதில்லை. யாருடனாவது பேசினாலும், யாரையாவது தீண்டினாலும், அக்கோவிலைவிட்டு வெளியிற்சென்றாலும், மறுபடியும் ஸ்நானம் செய்து மடியுடுத்திக் கொண்டுதான் உள்ளே செல்லல்வேண்டும். இதற்கு இப்பக்கங்

களில் உள்ளாசாரம் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். வெளியாசாரம் என்பது கோவில் கர்ப்பக்கிரகத்திற்கு வெளியிலிருந்து கொண்டு, உள்ளாசாரக்காரரிடமிருந்து விபூதி தீர்த்தம் புஷ்பம் முதலியவைகளைப் பெற்று, வெளியிலிருப்பவர்களுக்குக் கொடுப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் பிராமணர்களின் ஆசாரம். அவர்கள் எவ்வளவு சுத்தமாக இருந்தாலும், சுவாமி இருக்குமிடத்திற்குச் செல்லலாகாது. இக்கோவிலிலிருக்கும் சிவபெருமான் இலிங்கரூபமாயில்லாமல், ஐந்து உலோகங்களினாலும் செய்யப்பட்ட ஒரு அழகான விக்கிரக ரூபமாக இருக்கிறார். சுவாமிக்கு மேற்பக்கத்தில் அர்த்தசந்திரவடிவமான மூன்று தங்க வளைவுகள் இருக்கின்றன.

இக்கோவிலின் தெற்குப் பிரகாரத்தில் அநேகம் செடிகொடிகள் வளரப்பெற்ற ஒரு சிறு கோவிலில் ஒரு தலையற்ற விக்கிரகம் இருக்கின்றது. அதை எல்லோரும் மிக்க பயபத்தியுடன் வணங்குகிறார்கள். அது அம்மன் சந்நிதி என்று சொல்லப்படுகின்றது. உள்ளிருக்கும் விக்கிரகத்திற்கு தலையில்லாமற்போன காரணமும், அது தலையில்லாமலே பிரதிஷ்டை செய்யப்பட்டதா, அல்லது தலையிருந்து நடுவில் விக்கினமேற்பட்டதா என்றும், தலையில்லா விக்கிரகம் பூசைக்குரியதா என்றும், விசாரித்து அறிய முடியவில்லை. அதைப்பற்றிக் கேட்பதே பெரும் அபசாரமாக நினைக்கிறார்கள். இக்கோவிலில் பிரதிவருஷம் கார்த்திகை மாதம் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமி திதியில் நடைபெறுகிற உற்சவகாலத்தில் செய்யப்படுகிற பிராமண போஜனங்களில், பிராமணர்கள் சாப்பிடுவதற்குமுன் எத்தனை இலைகள் போடப்படுகின்றனவோ அவைகட்குமேல், எல்லாரும் சாப்பிட்டுமுடிந்தெடுக்கும்போது ஓரிலை அதிகமாக இருப்பதாகவும், அவ்விலை அக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் எல்லாப் பிராமணர்களுடனுமிருந்து சாப்பிட்ட இலை என்றும், இவ்வதிசயத்தை இக்காலத்தும் காணலாமென்றும் சொல்லப்படுகிறது. இக்காரணம்பற்றியே இவர் அன்னதானமகாதேவர் என்னும் சிறப்புப்பெயர் பெற்றார் போலும்.

எர்ணகுளம்:— இது கொச்சிநாட்டிற்குத் தலைநகர். இந்நாட்டரசர், கடற்கரையிலிருந்து சுமார் 6 மைல் தூரத்திலுள்ள

திருப்பணித்துறை என்னும் சிற்றூரில் வசிக்கின்றூர். எர்ணுகுளம் ஒரு சிறு அழகான பட்டினம். இவ்வூரிலுள்ள பெரிய கட்டிடங்கள் எல்லாம் கடற்கரையோரத்தில் ஒரே வரிசையாக வெகு அழகாகக் கட்டப்பட்டிருக்கின்றன. பிரதானகோர்ட்டு ( Chief Court), ஜில்லா மாஜிஸ்திரேட் கச்சேரி (District Magistrate's Office), அரசர் கல்லூரி (Rajah's College), பொது வைத்திய சாலை (General Hospital), கொலு மண்டபம் (Durbar Hall), குஷ்டரோக வைத்தியசாலை (Leper Hospital) முதலிய கட்டிடங்கள் பார்க்கத்தக்கவை. கடற்கரைக்கடுத்த பரப்புவெளியில் இப்போதிருக்கும் அரசருக்கு முந்தின அரசரின் உருவச்சிலை ஒன்று செய்து வைக்கப்பட்டிருக்கின்றது. அவர் தம் நாட்டை நீதிவழுவாமல் ஆண்டுவந்ததாக இந்நாட்டார் மிக்கப்புகழ்ந்து பேசுகின்றனர்.

இவ்வூருக்கு மேற்கில் உப்பங்கழியின் அக்கரையில் கோச்சிப்பட்டினம் ஒரு சிறு தீவாக இருக்கின்றது. இப்பட்டினம் ஜன நெருக்கமுள்ளதாகவும், ஆவணவீதிகளும், பண்டகசாலைகளும் நிறைந்ததாகவும் இருக்கின்றது. இந்நகரில் அநேகமாய் இந்தியாவிலுள்ள எல்லா ஜாதியாரும் வசிக்கின்றனர். கிரீக் தேசச் சக்கரவர்த்தியாகிய மகா அலெக்ஸாந்தர் என்பவர் இந்தியாவின்மேல் படையெடுத்து வந்து போர்புரிந்து மீண்டபின்பு, மேல்நாட்டார் முதன் முதலில் இக்கொச்சிநகரத்திற்றூன் கால் வைத்தனர் என்று சொல்லப்படுகின்றது. கி. பி. 1496ல் வாஸ்கோடிகாமா என்பவரின் தலைமையின்கீழ் போர்த்துகல் தேசத்தார் வந்திறங்கி, உடனே ஒரு சிறு கோட்டையையும் ஒரு மாதா கோவிலையும் கட்டினதாகத் தெரிகிறது. அக்கோட்டை இடிந்து போய், அதன் சின்னங்கள் கடற்கரையோரத்தில் மாத்திரம் சிற்சில் இருக்கின்றன. இங்கிருந்து காலஞ்சென்ற வாஸ்கோடிகாமாவின் சவப்பெட்டி இம்மாதா கோவிலிலேயே வைக்கப்பட்டிருந்து, இறுதியாகக் கோவா பட்டினத்திற்குக் கொண்டுபோகப் பட்டது. இங்கு ஒரு கலங்கரைவிளக்கு (Light-house) இருக்கின்றது.

இந்நகரம் மத்தன்சேரி, யூதநகரம், ஆங்கிலக்கொச்சி என மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் முன்

னிரண்டும் கொச்சிநாட்டைச் சேர்ந்தவை. மூன்றாவது ஆங்கில அரசாட்சிக்குட்பட்டது. மத்தன்சேரியில் கொச்சி அரசரின் பழைய அரண்மனை ஒன்றும் யூதநகரத்தில் யூதர்களின் வெகு புராதனமான கோவில் ஒன்றும் இருக்கின்றது. யூதர்கள் முதன் முதலில் கி. பி. 68-வது ஆண்டில் இந்தியாவுக்கு வந்ததாகவும், இவ்வாலயம் கி. பி. ஐந்தாவது நூற்றாண்டில் கட்டப்பட்டதாகவும் தெரிகிறது. கோவில் சிறிதாயிருப்பினும் வெகு அழகாகக் கட்டப்பட்டிருக்கின்றது. பளபளப்பான சதுரக்கற்கள் பதிக்கப்பெற்றிருக்கின்றது. இக்கற்களை அக்காலத்திலேயே சீன தேசத்தினின்று கொண்டுவந்து கட்டினதாகத் தெரிகிறது.

இப்பட்டினத்தில் இருவகைக்கொச்சிகள் (State Cochin and British Cochin) அடங்கியிருப்பது போல், கறுப்புயூதர்கள் (Black jews) வெள்ளையூதர்கள் (White jews) என இருவகை யூதர்கள் இருக்கின்றனர். ஆதியிலேயே இந்தியாவில் குடியேறி இந்தியர்களோடு இந்தியர்களாகக் கலந்து, இந்நாட்டுச் சீதோஷண நிலையால் தங்கள் இயற்கையான வெண்மைநிறம் மாறிக் கருநிறமடைந்தவர்கள் கறுப்பு யூதர்களாகவும், சமீபத்தில் குடியேறி தங்கள் இயற்கைநிறத்தோடு இருப்பவர்கள் வெள்ளை யூதர்களாகவும் இருந்து வருகின்றனர். இவ்விருவகுப்பினருடைய ஜாதியும் மதமும் ஒன்றாயினும், அவர்களுள் தொழிற்கூட்டுறவிருக்கின்றதே தவிர, ஜாதிக்கூட்டுறவில்லை. அவர்களிருவருக்கும் கோவில்களும் வேறாகவே இருக்கின்றன. நிற வேறுபாட்டினால் மட்டும், தம் ஜாதியாரையும் மதத்தினரையும் வெறுக்கக்கூடிய மனிதர்கள் இவ்விந்தியாவில் இருக்க, ஜாதி, மதம், நடை, உடை, ஆசாரம், உணவு முதலிய எல்லா வகையானும் வேறு பட்டிருக்கின்ற மேனாட்டார் நம்மை வெறுப்பதும், நாம் அவர்களை வெறுப்பதும் வியப்பாகாது.

இவ்யூதர்களிடம், மற்றெல்லாநாட்டினரும் ஜாதியாரும் மதத்தினரும் விரும்பத்தக்கதும் வெறுக்கத்தக்கதுமான சில பழக்கவழக்கங்கள் இருப்பதாகத் தெரிகின்றது. ஒருவனுடைய சொத்தை அவன் பிள்ளைகள், ஆண்களாயினும் பெண்களாயினும் சமபாகமாகப் பங்கிட்டுக்கொள்ளப் பாத்தியமுள்ளவர்களாக இருக்கின்றனர். நம்முள்ளும் இந்நல்வழக்கத்தை நிலைநாட்டு

தற்குச் சிலர் பாடுபடுவதாகத் தெரிகிறது. அவர்கள் பாடு நற்பாடாக ஈசன் அருள்புரிவாராக.

ஆனால் இந்நல்லொழுக்கமுள்ள யூதர்கள் தங்கள் ஜனக சகோதரிகளையே மணந்து கொள்ளுவதாகத் தெரிகிறது. இந்துக்களுள் அதிலும் நம் தென்னிந்தியாவில் வசிப்பவர்களுள், எவ்வாறு சகோதரிகளின் பெண்களையும், அத்தை அம்மான் பெண்களையும் மணப்பது சிறந்த முறைமணமாகக் கருதப்படுகின்றதோ அவ்வாறே இவ்யூதர்களுள்ளும் தங்கள் தங்கைகளை மணப்பதே மிகச் சிறந்த முறைக்கலியாணமாகக் கருதப்படுகின்றதென்றும், ஒரு குடும்பத்தில் சில ஆண்மக்களும் சில பெண்மக்களும் இருப்பின், மற்றவர்கள் அப்பெண்களை மணக்க முன்வாரார்கள் என்றும் சொல்லப்படுகின்றது.

இவ்வழக்கத்தை இதுகாறும் கேட்டிராதவர்கள் இதைப் படித்ததும், இத்தகைய மனிதரும் இந்நிலவுலகில் உளரோவென வியப்புறுவர் என்பதில் ஐயமில்லை. ஆயினும், நம்முள்ளிருக்கும், சகோதரிகள் பெண்களையும் அத்தை அம்மான் பெண்களையும் மணக்கும் வழக்கத்தையும், முகம்மதியர்களுள்ளிருக்கும், தந்தை கூடப்பிறந்த சகோதரர்களின் பெண்களை மணக்கும் வழக்கத்தையும் அனுசாரமென்றும், குழந்தைப்பெண்களை மணப்பதும், இளம் விதவைகளை மணக்காது விடுவதும் துராசாரமென்றும் கருதுவோர் அனேகர் இவ்வுலகில் உளர் என்பதை நோக்கில், ஒருவர் மற்றவர்களின் பழக்க வழக்கங்களை முழுவதும் வெறுத்தல் தகுதியன்று என்பது தெள்ளிதிற் புலப்படும். விருப்பும், வெறுப்பும், நல்வினையும், தீவினையும், அவரவர்கள் மனப்பாங்கைப் பொறுத்ததன்றோ!

ஆனால், ஆழ்ந்து யோசிக்குமிடத்து, இவ்வழக்கம் யூதர்களின் பிறவிக்குணமாகிய பேராசையை ஒட்டியே வந்திருக்கிறதாகக் கருதல்வேண்டியிருக்கிறது. ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் சரிபங்காகக் குடும்பச்சொத்தை அடைவதற்கு உரிமையுள்ளவர்களாக இருத்தல்பற்றி தங்கள் மூதாதைகள் உடையூணுறக்கமின்றிச் சேமித்துவைத்த குடும்பச்சொத்தில் ஒரு சிறிதளவேனும் பிறர்பாற் சேராதிருக்கவெண்ணி தங்கள் தங்கை

களைத் தாங்களே மணந்துகொள்ள உடன்பட்டொழுகுகின்றனர் போலும்.

இப்பட்டினத்தில் கொங்குநாட்டாரான கொங்கணியர்களுக்கு, இவ்விந்தியாவில் உள்ள கோவில்களிலெல்லாவற்றினும் பெரிதாகக் கருதப்படுகிற ஓர் கோவில் இருக்கின்றது. கொங்கணியரும் ஏராளமாக இருக்கின்றனர். கோவில் வெகு அழகாகக் கட்டப்பட்டிருக்கின்றது. பூசை திருவிழா முதலியவை சிறப்பாக நடைபெறுகின்றன.

எல்லாப் பெரிய பட்டினங்களிலும் இருப்பதுபோலவே, இப்பட்டினத்திலும் விலைமாதர்கள் நிறைந்த ஒரு தெருவிருக்கின்றது. அதில் வானாட்டு மாதரோமென ஐயுறத்தக்க வனப்போடு கூடிய மாதர்கள் அனேகர் நிறைந்து, "வரைவிலா மாணிழையார் மென்றோள், புரையிலாப் பூரியர்களாழும் அளறு" என்னும் தெய்வப்புலவர் திருமொழிக்கிணங்க, தாங்களும், தங்கள் வாணாள் முழுதும் பிணிவாய்ப்பட்டு வருந்துவதன்றி, மதிநலமில்லா வாலிபர்களில் அனேகரைத் தம் புன்னலத்திற்றோயும்படி செய்து, மீளா நோய்க்குட்படுத்தி, சாமளவும் துன்பக்கடலில் ஆழ்த்திவிடுகின்றனர். இந்தியாவெனும் கழனியிற் செழித்து வளர்கின்ற பயிரை அழிக்க முளைத்தெழுந்த களைபோன்று, இந்நாட்டு வாலிபர்களைக் கெடுக்கத்தோன்றியிருக்கின்ற இப்பொருட்பெண்டிர்க் கூட்டத்தார் திருந்தி, அருட்பெண்டிராகுங் காலந்தான் நம் நாடு நற்கதியடையும் காலம் என்பதற் கையமின்று. நம் இந்தியாவில் இருமனப் பெண்டிரும், கள்ளும், கவறும் இருந்துலவுமளவும், திருவும் நீங்கியிருப்பள் என்பது பொய்யாமொழியன்றோ. கவியரசராகிய கம்பரும் இக்கருத்தைப் பின்வரும் செய்யுளில் வெகு அழகாக அமைத்துள்ளார்.

தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வருங்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனும்
நாம மில்லை நரகமு மில்லையே.

எர்ணாகுளத்தில் பிரயாணிகள் விடுதி (Traveller's Bungalow) ஒன்று இருப்பதுடன், அநேக சத்திரங்களும் உண்டு. இப்பக்கத்திலிருக்கும் உப்பங்கழியில் மீன்பிடிப்பவர்கள் ஜலத்தில்

இறங்காமலே கரையிலிருந்து மீன் பிடிக்கக்கூடிய விசித்திர வேலைப்பாடுள்ள ஓர்வித வலைகளை உபயோகிக்கின்றனர். இவ் வலைகள் ஆதியில் இப்பட்டினத்திற் குடியேறி யிருந்த டச்சுக் காரர்களாற் கண்டுபிடிக்கப்பட்டவை என்றும், அவர்களிட மிருந்து மற்றவர்கள் கற்றுக்கொண்டு உபயோகிக்கின்றனர் என் றும் தெரிகிறது. இத்தகைய வலைகள் இவ்விந்தியாவில் வேறெங் கும் இருப்பதாகத் தெரியவில்லை. எர்ணுகுளமிருந்து 48 மைல் தூரத்திலுள்ள கோட்டயம் என்னும் ஊருக்கு நாள்தோறும் மோட்டார்கள் போகின்றன. எர்ணுகுளத்தில் தங்கிக்கொண்டு திருவஞ்சைக்களம், கோடிலிங்கபுரம் என்னும் கொடுங்கோளூர் முதலிய தலங்கள் சென்று தரிசித்து மீளுதல் நலம். போக விரும்புவோர் படகேறிக் கோட்டைபுரம் சென்று, அங்கிருந்து மட்சாலைவழி போதல்வேண்டும். கோட்டைபுரமிருந்து திரு வஞ்சைக்களம் ஒரு மைல். அங்கிருந்து கொடுங்கோளூர் ஒன் றரை மைல்.

திருவஞ்சைக்களம்:—அஞ்சைக்களத்தீசர். உமையம்மை. அலைவாய்த்தீர்த்தம். பரசுராமர் தம் தாயைக் கொன்ற பழி நீங் கும்பொருட்டுப் பூசித்துப் பேறுபெற்ற தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளால் திருப்பதிகம் பெற்றுள்ளது. நாயன்மார்களாற் பாடல்பெற்ற சிவதலங்கள் இருநூற்றெழுபத்து நான்கில் மலை நாட்டிலுள்ளது இதுவொன்றேயாகும். "ஒன்றெனினும் நன் றுயின் நன்று" என்றவாறு இத்தலம் ஒன்றுயினும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அவர் நண்பரான சேரமான்பெருமாளுயனாரும் ஊனுடலுடன் கஜதுரகாரூடர்களாய் இங்கிருந்து கைலைக்குச் சென்றனாாதலின் மிகச்சிறந்ததெனக் கொள்ளல்வேண்டும்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் இறுதியில் இத்தலம் சேர்ந்து, ஈங்குறையும் சிவபெருமானை வழிப்பட்டு "என்னையினிச் சேவடிக் கீழிருத்திடும்." என்னும் பதிகம்பாடவும், அப்பசுபதி அன்பு கூர்ந்து கைலையினின்று வெள்ளையானையை அனுப்ப, நாயனர் அதன்மேலேறிக்கொண்டு, கதிரவனொளிபோன்ற சோதிசொரூ பத்தோடு கைலைக்குச்சென்று, ஆடிமாதச் சுவாதி நாளில் முன் போலவே ஆலாலசுந்தரராய் அமர்ந்திருந்தனரெனச் சொல்லப்படு கின்றது.

சுந்தரமூர்த்திசுவாமிகள் கைலைக்குச் செல்வதைக் கேள்வி யுற்ற சேரமான்பெருமாணாயனாரும், தாயை இழந்த இளங்குழவி போல் தயங்கி, பின்பு சுந்தரர் அருளுள்ளளவும் சுணங்கக் காரணமின்றெனத் தெளிந்து, தம் குதிரையின் மீதேறிக்கொண்டு அக்குதிரையின் காதிற் பஞ்சாட்சரமோதிப் பறக்கவைத்து, ஆனைமீது சென்ற ஆலாலசுந்தரரை வலங்கொண்டு கைலைக்குச் சென்று, சிவகணங்கட்குத் தலைவராய் அமர்ந்திருந்தனர். அவரது பரிசனங்களும், அவரும் சுந்தரரும் கைலைக்குச் சென்றதைக் கண்ணுக்கெட்டின மட்டில் பார்த்திருந்து, பின்னர்த் தங்கள் சிரங்களை வாளாற்றுணித்து வீழ்த்தி, வீரசரீரத்துடன் கைலையை யடைந்தனரெனத் தெரிகிறது. இக்கோவில் கூடியவரையில் தமிழ்நாட்டுக் கோவில்கள்போற் கட்டப்பட்டுள்ளது.

கோடிலிங்கபுரம் (கொடுங்கோளூர்) (Cranganore):— ஆதியில் கேரளநாட்டை உண்டாக்கின பரசுராமர், தம் நாட்டில் குடியேறிய ஜனங்கள் பிணிவாய்ப்பட்டு வருந்துவது கண்டு துயருற்று, அவர்களிடம் இரக்கங்கொண்டு பரமசிவனை வழிபட, அவர் அத்தீங்கை அகற்ற பகவதியம்மையை ஏவினதாகவும், பரசுராமர் அவ்வம்மையை இத்தலத்திருந்து கேரளவாசிகளின் உடற்பிணி உயிர்ப்பிணியாதிய எல்லாப்பிணிகளையும் நீக்கும்படி வேண்டியதாகவும், அவர் வேண்டுதற்கிணங்கி, அவ்வம்மை இத் தலத்திற் கோயில் கொண்டெழுந்தருளியதாகவும் சொல்லப்படு கின்றது. ஆதலின் இவ்வம்மையைக் கேரளநாட்டார் விசேஷ பத்தியுடன் தங்கள் குலதெய்வமாகக் கொண்டாடுகின்றனர். "மலையாளபகவதி" என்ற பேரைக் கேட்டமாத்திரமே யாவருக் கும் மயிர்க்கூச்செறியலாம். இவ்வம்பிகைக்குக் கோவில்கள் அனேக இடங்களில் இருப்பினும், இக்கோவில்தான் எல்லாவற்றி னும் சிறந்தது. தெரிசனம் மிகவும் விசேஷம். இக்கோவிலிலும் இம்மலை நாட்டிலுள்ள மற்றக்கோவில்களிற் போலவே, இந் நாட்டாரைத்தவிர மற்றவர்கள் பிராமணரல்லாதாராயின் கோவி லுக்குள் விடுகின்றதில்லை. இந்நாட்டிலுள்ள பிராமணரல்லாதார் போகும் இடங்களுக்கும் மற்றவர்களை விடுவதில்லை. வெளியூர் களிலிருந்து வருபவர்களின் ஜாதிபேதங்களை இம்மலைநாட்டாரால் எளிதிற் கண்டுகொள்ள முடியவில்லையாதலின், அவர்கள் எல்லா ரையும் ஒரேவிதமாகப் பாவிக்கின்றனர். "என்னப்பனல்லவோ,

என்றுயுமல்லவோ, பொன்னப்பனல்லவோ, பொன்னம்பலத்தவன்." என்றபடி எல்லாச்சீவர்களுக்கும் தாய் தந்தையரான இருமுதுகுரவர்களும் அவ்வீசன் ஒருவனே என்பதையும், அத்திமுதலெறும்பீரான உயிரத்தனையும் அவனுடைய அன்பிற்குகந்த அருமைக்குழந்தைகள் என்பதையும், நம் இந்தியாவில் வடபாகத்தில் ஏற்றுக்கொள்ளுவதுபோல், தென்பாகத்திலும் ஒப்பும்வரையில், இக்கெட்டவழக்கம் இருந்தேதீரும்.

மேலும், *அத்தியுமெறும்பும், அரும்பாடுபட்டு, மெய்த்தவம்புரிந்து, அத்தன் திருவடியடைந்ததும் இத்தென்னிந்தியாவிலன்றோ! இத்தகைய அரிய பிரமாணங்கள் நம் அருகிலிருந்தும், நாம் அறியாதிருப்பது நம் தொல்லைத்தீவினையின் பயனேயாகும்.

போதநீற் றினைப்புனைந்துளோர் கண்டிகை பூண்டோர்
ஆதியாய பஞ்சாக்கர மோதுவோ ரறிவான்
மாதொர்பாகனைப் போற்றினோ ரிவர்க்கெலாம் வருண
பேதமில்லையென் றுரைப்பர்நூன் முறைதெரி பெரியோர்.

இப்பகவதியம்மன் கோவிலில் வருஷந்தோறும் பங்குனி மாதத்தில் பெருந்திருவிழா நடக்கின்றது. பரணிநாளோடு முடிவடைகின்றது. காலடிக்கும் ஆல்வாய்க்கும் போகவிரும்பாதோர் இங்கிருந்து 7 மைல் தூரத்திலுள்ள இருஞாலக்குடா சென்று ரயிலேறலாம்.

ஆல்வாய்:— இவ்வூர் கொச்சிநாட்டரசருக்குக் கோடைக்கால வாசஸ்தானம். இது எர்ணகுளமிருந்து காலடிக்குப் போகும் ரயில் பாதையில் இருக்கின்றது. இத்தலம் வடமுகியென்றும் பேரியாறு என்றும் சொல்லப்படும் ஆற்றின் கரையில் இருக்கின்றது. நர்மதை தப்தி முதலிய நதங்கள்போன்று, இவ்வாறும் கிழக்கிலிருந்து மேற்குநோக்கி ஓடுகின்றது. கேரளநாட்டாரால் கங்கையினும் சிறந்ததாகக் கருதப்படும் இந்நதியின் ஸ்நானத்தால், உடற்பிணி உயிர்ப்பிணி முதலிய எல்லாப்பிணிகளும் நீங்குமெனக் கருதப்படுகிறது. திருக்குற்றாலத்திலுள்ள அருவிஜலத்தைப்போல், இதில் எவ்வளவுநேரம் ஸ்நானம் செய்தாலும் சரீரசுகமும் மனோல்லாசமும் உண்டாவதன்றி சிறிதேனும் தீங்குநேருவதில்லை.

---

* அத்தியும் எறும்பும் முத்திபெற்ற விவரம் திருவானைக்கா, திருவெறும்பூர்த் தலபுராணங்களிற் காண்க.

இந்நதியின் மத்தியில் பரமசிவன் நித்திய தீர்த்தாடன மூர்த்தியாய் விளங்குகின்றனர். இங்குள்ளோர் இவரை ஜல தெய்வம் எனக் கருதுகின்றனர். வெள்ளக்காலங்களில் நதியின் நடுவிலுள்ள சிவலிங்கம் மறையுமளவு ஜலம் வந்து, அது மறைந்து போயினும், தோணியேறிச் சென்று பூசைசெய்வோர் அதற்குச் சாத்தும் பூமாலைகளை ஆற்றுஜலம் அடித்துச் செல்வதில்லையென்றும், அவைகளை மறுநாள்வரை அச்சிவலிங்கத்தின்மீதே காணலாம் என்றும் சொல்லப்படுகின்றது. சிவராத்திரியன்று தெரிசனம் விசேஷம். இவ்விடமிருந்து 22 மைல் தூரமுள்ள மூவாற்றுப்புழை சிவன்கோவிலில் மாசி மாதத்தில் உற்சவம் நடக்கின்றது. சிவபெருமான் நதியில் தீர்த்தம் கொடுக்கின்றார். ஏராளமான ஜனங்கள் கூடுகின்றனர்.

காலடி:— இத்தலம், எர்ணகுளத்திற்கும் திருச்சூருக்கும் இடையிலுள்ளதும், அங்கமாலி என்னும் பெயரோடிருந்து தற்காலத்தில் காலடிரோட் எனவழங்குவதுமான ஸ்டேஷனிலிருந்து கிழக்கில் 6 மைல் தூரத்திலிருக்கிறது. இதை இந்தியாவில் உள்ள மிகச்சிறந்த தலங்களுள் ஒன்றாகக் கருதல்வேண்டும். இவ்விந்தியாவில் ஆஸ்திகம் க்ஷீணித்து, நாஸ்திகம் விருத்தியடைந்த காலத்தில் அவதரித்து, புறமதங்களையோட்டி ஞானமதத்தை நாட்டினவரும், உபநிஷத்துக்களுக்கும் பிரமசூத்திரத்திற்கும் பாஷியங்கள் செய்தவரும், இமசேது பரியந்தம் ஜகத்குருவெனப் பேர் பெற்றவருமான ஆதிசங்கராசாரிய சுவாமிகள் தோன்றின புண்ணிய க்ஷேத்திரம் இதுவே. இவ்வூரில் ஓடுகின்ற வடமுகியாற்றங் கரையில் சுவாமிகளுக்காக ஒரு தனிக்கோவிலிருப்பதைத் தவிர, அவர் ஜீவியச லத்திற் பிரதிஷ்டைசெய்து பூசித்துவந்த ஸ்ரீ சந்திர மௌலீசுவ ஆலயமும் கௌரிதேவியின் ஆலயமும், இருக்கின்றன. அச் ாவில்களுக்கெதிரில் ஜனங்கள் ஸ்நானம் செய்வதற்காக அழ ஸ்நானக்கட்டமொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இந்நதியி ஸ்நானம் செய்து அம்பாள் கோவிலிற்புகுந்தவளவில் இம்மண்ணுலகிலிருப்பதே மறந்துபோகின்றது. கைலையங்கிரியில் சாட்சாத்து உமாதேவியின் சந்நிதியிலிருப்பதாகவே தோற்றுகின்றது. மே லும், சுவாமிகள் சிவபிரானிடம் பெற்ற ஐந்து இலிங்கங்களில் க்திலிங்கத்தைப் பதரிகாசிரமத்திலும், மோட்சலிங்கத்தைத் லையிலும், வரலிங்கத்தை நேபாளத்திலுள்ள நீலகண்ட

க்ஷேத்திரத்திலும், போகலிங்கத்தை சிருங்கேரியிலும், யோக லிங்கத்தைக் காஞ்சீபுரத்திலும் ஸ்தாபித்து, காஞ்சி, பூரி, (ஜகந்நாதம்), பதரி (Badrinath), சிருங்கேரி, துவாரகை, ஆகிய பஞ்ச பீடக்ஷேத்திரங்களிலும் முறையே காமகோடிபீடம், விமலாபீடம், ஜ்யோதிர்பீடம், சாரதாபீடம், காளிகாபீடம் ஆகிய மிகச் சிறந்த பீடங்களையும் ஏற்படுத்தி, ஸரஸ்வதி பட்டத்தையும், தேவேந்திர பட்டத்தையும் பெற்றனர் என்பது உலகப்பிரசித்தம்.

ஆனால், "அஹிம்ஸா பரமோதர்மம்" என்னும் பரமசாத்துவீகக் கொள்கையை மேற்கொண்டொழுகின புறமதங்களைக் குலைத்து, அநேக ஜாதிபேதங்களால் ஐக்கியபங்கம் ஏற்படக்கூடிய வருணாசிரமதருமத்தை நிலைக்கச்செய்ததால் நம் நாட்டின் முன்னேற்றத்திற்குத் தீங்கு விளைத்தனரேயன்றி நன்மை செய்திலர் என்றும், இவ்வருணாசிரமதருமம் என்னும் கொடிய விலங்கு இந்தியர்கள் காலில் மாட்டப்பட்டு அவர்கள் சுயேச்சை நாசமடையாதிருந்திருக்குமாயின், அவர்கள் தற்காலத்தடைந்திருக்கும் பரிதாபகரமான நிலையை அடைந்திரார்கள் என்றும், அக்காலம் முதல் இக்காலம்வரை, இவ்வருணாசிரமதருமமே இந்தியர்கள் என்னும் ஒருடலைக் கால்வேறு கைவேறு தலைவேறு முண்டம் வேறாகச் சின்னாபின்னமாகச் சிதைத்து, மீண்டும் உயிர்பெற்றெழாமற் செய்துகொண்டிருக்கிறதென்றும் நினைப்பாருமுளர். ஆனால், வருணாசிரமதருமத்தால்மட்டும் இக்கேடு முழுவதும் விளைந்ததென்று சொல்லுவது அவ்வளவு சரியன்று. தருமத்தைத் தருமமாகவே பரிபாலித்தால், அதனால் எக்காலத்தும் கேடுறாது என்பது யாவரானும் மறுக்கத்தகாத கோட்பாடாகும். ஆதலின், சுவாமிகள் ஏற்படுத்தின வருணாசிரமதருமத்தைப் பாதுகாக்கக் கடமைப்பட்டவர்களே, தங்கள் சுயநலத்தைக்கருதி, வேலி பயிரையழிப்பதுபோல் அழித்து, அதை வருணாசிரம அதர்மமாக்கி, மற்றவர்களை அடக்கியாளவேண்டுமென்ற துராசையால் ஏவப்பட்டு, அறியாதவர்களை மயக்கிக் கெடுக்கும் சகோதரர்களிற் சிலரைக் குறைகூறவேண்டுமேதவிர, வருணாசிரமதருமத்தைப் பழித்தல் தருமமன்று. பசும்பாலருந்துவது சரீரத்திற்குச் சுகமேயாயினும், அதேபாலை முறித்து, அது கெட்டுப்போனபின் அருந்தினால், அப்பாலே சரீரத்திற்குப் பெருங்கேட்டை விளைக்கும் என்பது யாம் கூறவேண்டியதில்லை.

இவ்வூரில் பிரயாணிகள் தங்குவதற்கு அனேக சத்திரங்கள் இருக்கின்றன. தவசிகளுக்கு ஏற்ற இடம். இதற்குக் கிழக்கில் சுமார் 5 மைல் தூரத்திலுள்ள மலையாட்டூர் என்னும் சிற்றூரில் இருக்கிற மலையின்மேல், ரோமன்கதோலிக் (Roman Catholic) மதத்தினருடைய வெகு பழமையான கோவில் ஒன்று இருக்கின்றது. ஏசுநாதர் பிறந்த 52வது ஆண்டில் அவருடைய 12 சீடர்களுள் ஒருவரான ஸேயின்ட் தாமஸ் (Saint Thomas) என்பவர் மலையாள தேசத்திற்கு வந்திருந்ததாகவும், அவர் இம் மலை மீதேறி ஒரு சிலுவையை நாட்டி ஜெபம் செய்ததாகவும், அச்சிலுவை இருந்தவிடத்தில் இக்கோவில் கட்டப்பட்டிருக்கிறதாகவும் சொல்லப்படுகின்றது.

கூடல் மாணிக்கம்:— இவ்வூர் காலடிரோட் ஸ்டேஷனுக்கும் திருச்சூருக்கும் இடையிலுள்ள இருஞாலக்குடா (இருஞாலக்கோட்டை) என்னும் ஊரிலிருந்து மேற்கில் 5 மைல் தூரத்தில் இருக்கின்றது. இத்தலத்தில் தருமத்தின் தெய்வமாகவும், செம்மையின் ஆணியாகவும் விளங்கினவரான பரதாழ்வாருக்குப் பரசுராமரால் அமைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிற ஓர் ஆலயமுள்ளது. இராமரோடு பகைமை பூண்டு போர்புரிந்த பரசுராமரே பரதருக்கு ஆலயம் அமைத்துப் பூசித்தனரெனின், பரதரின் பெருமை அளவிடற்பாலதோ! இங்குள்ள மச்சதீர்த்தத்தின் ஜலம் குலமகளிர் மெய்ப்போன்று குளிர்காலத்தில் உஷ்ணமாகவும், உஷ்ணகாலத்திற் குளிர்ந்தும் இருக்கும் சிறப்பையுடையது, ஸ்நான விசேஷம்.

---

## அத்தியாயம் 5

—(o)—

விரைசெய் நறும்பூந் தொடையிதழி வேணி யார்தங் கழல்பரவிப்
பரசு பெறுமா தவமுனிவன் பரசு ராமன் பெறுநாடு
திரைசெய் கடலின் பெருவளனுந் திருந்து நிலனின் செழுவளனும்
வரையின் வளனு முடன்பெருகி மல்கு நாடு மலைநாடு.

வாரி சொரியுங் கதிர்முத்தும் வயன்மென் கரும்பிற் படுமுத்தும்
வேரல் விளையுங் குளிர்முத்தும் வேழ மருப்பி னொளிர்முத்து
மூரன் முறுவல் வெண்முத்த நகையார் தெரிந்து முறைகோக்குஞ்
சேரர் திருநாட் டூர்களின்முன் சிறந்த மூதூர் செந்திருச்சூர்.

திருச்சூர்:— இவ்வூர் கொச்சி நாட்டிற்குப் பழமையான தலைநகர். இது அழகான பல தெருக்கள் நிறைந்த ஒரு சிறு பட்டினம். இவ்வூர் நடுவில் வடக்குநாதப்பெருமான் ஆலயமிருக்கின்றது. அதற்கு நான்கு திசைகளிலும் வாயில்கள் உண்டு. வடக்குவாயிலிற்கருகில் அக்கோவிலிற்பூசைசெய்யும் நம்பூதிரிப் பிராமணர்கள் வசிக்கின்றனர். அவர்கள் ஆயுள்வரையில் மணஞ் செய்துகொள்ளாமலும், அம்மாளிகைவிட்டு வெளிப்போகாமலும் இருக்கக்கடமைப்பட்டவர்கள். இவர்கள் கோவிற்பூசைக்குச் செல்லுங்கால் வெகுநியமத்துடன் யாருடனும் பேசாமல் போகின்றனர். யாருடனும் பேசினுல் மீண்டும் முழுகல்வேண்டும்.

இவ்வூர்க்கோவில் ஒரு சிறு மேட்டின்மேல் கட்டப்பட்டிருக்கின்றது. முற்காலத்தில் இராமராவண யுத்தத்தில் இளைய பெருமாள் மூர்ச்சித்து விழ, அவரை மூர்ச்சையினின்று எழுப்ப ஆஞ்சனேயர் சஞ்சீவிபர்வதத்தைக் கொண்டுவந்தபோது, அவர் வந்த வேகத்தால் அப்பர்வதத்தின் பல சிகரங்களுள் ஒன்று சிதறுண்டு இங்கு வந்து வீழ்ந்ததாகவும், அச்சிகரமே இக்கோவிலிருக்கும் மேடு என்றும் சொல்லப்படுகின்றது. இக்காரணம் பற்றி இத்தலத்துறையும் சிவபிரானுக்கு வடக்குக்குன்றுநாதர் எனும் பேருண்டு. திருப்பழனிமலை, திருக்கழுக்குன்றமலை, திருக்காளத்திமலை முதலியவைகளும், அதேகாலத்தில் கீழ்பாகத்திற் சிதறிவீழ்ந்த சஞ்சீவிமலைச்சிகரங்களெனக் கருதப்படுவதால், அத்தலங்களில் வசித்தோருக்கும், அம்மலைகளை வலம் வந்தோருக்கும், எல்லாப்பிணிகளும் எளிதிற்றீர்கின்றனவெனச் சொல்லப்படுகின்றது. இவ்வாறு பல சிகரங்கள் சிதறிவிழும்படி ஒரு பெரும் பர்வதத்தை இப்பாரதநாட்டின் வடகோடியினின்று தென்கோடிக்கு ஒருவர் எடுத்துச் செல்லவியலுமோவென, ஐயுறுபவருளரேல், தூக்கிச்சென்றவர் வாயுபுத்திரனை மாருதி என்பதை மனதிற்கொண்டால், அவர்கள் ஐயமுற்றும் நையுமென்பதில் ஐயமின்று.

இவ்வூரில் அழகிற்சிறந்த பெண்மணிகள் அதிகமெனும் காரணம்பற்றி, இவ்வூருக்கு "இந்திய ஜார்ஜியா" (Indian Georgia) என்னும் பெயர் வந்திருப்பதன் உண்மையைப் பிரதிதினம் பகல் 9 மணி முதல் 12 மணிவரை இக்கோவிலிலிருந்தால்,

உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்துகொள்ளலாம். வாங்கின காலம் முதல் பெண்களினிடையையும் பெட்டிகளினிடையையுமேயன்றி, ஜலத்தை ஒருக்காலும் கண்டிராத ஜரிகைப்பட்டுப் புடவைகளைக் கோவிலுக்குச் செல்லும்போது எடுத்து உடுத்திக் கொண்டும், தங்களுக்குப் போதிய நீளமுள்ள தலைமயிரில்லாவிடினும், உயிரினும் மானம் பெரிதெனவாழும் கவரிமான்களின் வான் மயிர்க்கற்றைகளைச் சேர்த்துச் சீவிச்சடையிட்டு அலங்கரித்துக் கொண்டும், தங்கள் வீட்டிலுள்ள அணிமணிகள் குறைவென்று கருதி அயல் வீடுகளில் இரவல் வாங்கி அணிந்துகொண்டும், கோவிலுக்குச்செல்லும் நம் தமிழ்நாட்டு மாதர்கள்போலன்றி, கோவிலுக்கடுத்த திருக்குளத்தில் நீராடி நீறுபுனைந்து, தூவெண்மையானதும் ஜலத்தில் நனைக்கப்பெற்றதுமான ஆடைகளை உடுத்திக்கொண்டும், இருண்டு நீண்டு சுருண்டு அழகுக்கோர் அழகு செய்யும் தங்கள் அளகபாரங்களை ஈரமுலர்த்தாது கோதி நுனியில் முடித்துத் தொங்கவிட்டுக் கொண்டும், கையிற் கடவுளாராதனைக்கு வேண்டிய பத்திரபுஷ்பாதிகளுடனும், திரள்திரளாக அன்னப்பேடுகளைப்போல் கோவிலுக்குச் செல்லும் இம்மலை நாட்டு மங்கையர்களைக் கண்ணுற்றோர் கருங்கல் நெஞ்சமும் அனலிடை மெழுகென உருகுமென்பதற்குச் சற்றேனும் ஐயமில்லை.

இக்கோவிலிலுள்ள சுவாமிக்கு ரிஷபக்குன்றுநாதர் என்னும் பேரும் வழங்குகின்றது இத்தலத்தைப் பரசுராம க்ஷேத்திரமென்றும், இக்கோவில் பரசுராமரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதென்றும், இவ்வூரிலேயே பரசுராமர் நெடுங்காலம் தவஞ்செய்தனர் என்றும் சொல்லப்படுகின்றது. இக்கோவிலின் கர்ப்பக்கிரகத்தில் சிவலிங்கமாவது மற்றெவ்விதவிக்கிரகமாவது காணப்படவில்லை. அங்கிருக்கும் இலிங்கம்போன்ற வடிவம், பரசுராமர் அபிஷேகஞ்செய்த நெய் உறைந்ததாலுண்டாயினதென்றும், அதில் ஒரு சிறிதளவேனும் உருகினால், வானத்தில் தோன்றும் தூமகேதுவைப்போல், நாட்டிற்குக் கேடுவிளைவிக்கும் அறிகுறியாமென்றும் கருதப்படுகின்றது. சிலவருஷங்களுக்கு முன்னர் இம்மலைநாட்டிலுள்ள ஆறுகளிலெல்லாம் பெருவெள்ளம் வந்து, இந்நாட்டைப் பாழாக்கிய காலத்தும், இந்நெய் உருகிவந்ததாகச் சொல்லப்படுகின்றது. இக்கோவிலில் சுவாமி சந்நிதி மேற்கு நோக்கியும்,

அம்மன் சந்நிதி கிழக்குநோக்கியும் இருக்கின்றது. இம்மாதிரி யாக திருவானைக்கா, திருப்பனந்தாள், திருக்கடவூர், செம்பொன் னார்கோவில் முதலிய சிற்சில தலங்களிற்றான் இருக்கின்றது. இக்கோவிலுக்குள் நரசிம்மமூர்த்திக்கும் கண்ணனுக்கும் சந்நிதி கள் இருக்கின்றன. இம்மலைநாட்டிலும் வடஇந்தியாவிலும் அனேகமாய் எல்லாப் பெரிய க்ஷேத்திரங்களிலும் ஒரே கோவி லுக்குள் மகாவிஷ்ணுவுக்கும் சிவபிரானுக்கும் கலந்தாற்போல் சந்நிதிகள் ஏற்பட்டிருப்பதைக்காணலாம்.

இவ்வூரிலும், இவ்வூருக்கருகிலிருக்கிற ஆராட்டுப்புழை, திருப்பிறையாறு முதலிய தலங்களிலும், குறிப்பிட்டமாதங்களில் நடக்கின்ற பூர உற்சவங்கள் பார்க்கத்தக்கவை. இவ்வூரில் சித் திரை மாதத்திலும், ஆராட்டுப்புழையில் பங்குனிமாதத்திலும், இவ்வுற்சவம் நடக்கின்றது. இவ்வுற்சவகாலங்களில் அக்கம்பக்க ங்களிலுள்ள ஊர்களிலிருந்தும் கோவில்களிலிருந்தும் வரும் ஆண்யானைக்கூட்டங்கள் தங்கமுகபடாங்களுடனும், சரிகை வேலைசெய்த மேற்போர்வைகளுடனும், தங்கக்கிம்புரி அணியப் பெற்ற நீண்ட தந்தங்களுடனும், அணியணியாய் நிற்பதைக் காண்பது, கண்ணுடையோர் காணுமலிருக்கவொண்ணுக் காட்சி யாகும்.

இவ்வூரில் பார்க்கவேண்டிய இடங்களுள், அரண்மனை, உயிர்ப்பிராணிகளின்தொகுதி (Menagerie), இறந்தபிராணிகளின் காட்சிச்சாலை (Museum), சீதாராம் நெசவுக்கைத்தொழிற்சாலை, சென்னைத் திருவாளர் நம்பெருமாள் செட்டியாரால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் மரப்பலகையறுக்குந் தொழிற்சாலை (Saw-mills), இவைகள் முக்கியமானவை. இவ்வூரைச் சுற்றிப் பழைமையான கோட்டை ஒன்று இருக்கின்றது.

இவ்வூரிலிருந்து வடகிழக்கில் சுமார் 6 மைல் தூரத்தில் உள்ள தானிக்கூடம் என்னும் சிற்றூரில் இருக்கிற பகவ... யம்மன்கோவில் தெரிசிக்கத்தகுந்தது. இக்கோவில் ஊ... வெளியில் தனிமையான ஓரிடத்தில் கட்டப்பட்டிருக்கி... கீழ்த்திசையில் சந்நிதிக்கு எதிரிலுள்ள ஒரு சிறுபாகம் தவிர, ... றெல்லாப் பக்கங்களிலும், கோவிலைச்சுற்றி ஒரு பூமாலை சூட் டியிருப்பதுபோல், ஒரு சிற்றாறு வளைந்து ஓடுகின்றது.

இவ்வூரின் வடமேற்குப் பாகத்திற்குப் புஷ்பக்குன்று என்றும் புஷ்பகிரி என்றும் பெயர் வழங்குகின்றது. அவ்வழகிய பெயருக்கேற்ப, அப்பாகம், தென்னை, கமுகு, மா, பலா, வாழை முதலிய மரங்கள் அடர்ந்த பொழில்கள் சூழ்ந்து, இலங்கையில் இராவணனால் நிருமிக்கப்பட்டிருந்த அசோகவனம் இதிலும் அழகினை உடையதாமோவென ஐயுறத்தக்கதாயிருக்கின்றது. சிந்தாமணி யென்னும் அருங்காவிய ஆசிரியராகிய திருத்தக்க தேவர் இவ்வூரைப் பார்த்துத்தான்,

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற் றிசைபோய துண்டே.

என்று மிக அழகாக வருணித்துக் கூறினார்போலும். அந்த வருணனையை உயர்வுநவிற்சி (Exaggeration) என்று நினைப்போர் உளரேல், அவர்கள் இம்மலைநாட்டை நேரில் பார்ப்பார்களானால், தாங்கள் நினைத்தது முற்றிலும் தவறென்று எளிதில் அறிந்துகொள்ளுவார்கள்.

திருச்சூரில் பிரயாணிகள் தங்குவதற்குப் பிரயாணிகள் விடுதி (Traveller's Bungalow) ஒன்றும்அனேக சத்திரங்களும் இருக்கின்றன. இவ்வூரிலிருந்து 14 மைல் தூரத்திலுள்ள திருப்பிறையாறு என்னும் சிறந்த இராமர் க்ஷேத்திரத்தைத் தரிசித்து மீளுதல் நலம். இங்கிருந்து 20 மைல் வடமேற்கிலுள்ள குருவாயூர் செல்லுதல் அவசியம். வாடகைமோட்டார்கள் போகின்றன.

குருவாயூர்:— இது இப்பங்களிலுள்ளவைகளுள் மிகச் சிறந்த கிருஷ்ண க்ஷேத்திரம். இவ்வூரிலிருந்த விஷ்ணு பக்தரான வேதியர் ஒருவருக்குக் கண்ணன் நேரில் காட்சிகொடுத்து வார்த்தையாடினதாகவும், அவருக்கிருந்த குஷ்டரோகத்தைத் தீர்த்தருளினதாகவும் சொல்லப்படுகின்றது. மக்கட் பேறற்றோருக்குக் கண்ணன் திருவருளால் குழந்தைகளுண்டானால், அவரவர்கள் சத்திக்கேற்ப, அக்குழந்தைகளின் நிறைக்குச் சரியான நிறையுள்ள பொருள்களைக் கண்ணனுக்குக் காணிக்கை செலுத்துகின்றனர். இளநீர், நெல், அரிசி, கம்பு, கேழ்வரகு, நவதானியங்கள், பஞ்சலோகங்கள், நவரத்தினங்கள் முதலிய எல்லாப்பொருள்

களையுஞ் சமர்ப்பிக்கின்றனர். ஆதிகாலத்திற் குசேலர் கிழிந்த ஆடையிற் கட்டிக்கொண்டுவந்த பழைய அவலை, எவ்வாறு அன்போடும் ஆர்வத்தோடும் வாங்கியுண்டனனோ, அவ்வாறே வறியோர் செலுத்தும் நெல், அரிசி, கம்பு, கேழ்வரகு முதலியவைகளையும், பொருளாளர்கள் செலுத்தும தங்கம், வெள்ளி, விலையுயர்ந்த மணிகள் முதலியவைகளையும், ஒன்றாகவே பாவித்து ஏற்றுக்கொள்ளுகின்றனனென்று கருதப்படுகின்றது. சிறியோர்க்குச் சிறியோனும், பெரியோர்க்குப் பெரியோனும், சகல ஐசுவரியங்களையும், எல்லாவித போகபோக்கியங்களையும் அளிக்க வல்ல மகாலட்சுமிக்கு உறைவிடமாயுள்ள திருமார்பையுடையவனும், சேதன அசேதனப் பொருள்கள் எல்லாவற்றினும் எக்காலத்தும் சர்வாந்தர்யாமியாயிருப்பவனுமான எம்பெருமான் வேண்டுதல் வேண்டாமையிலாதவனாதலின், தங்கமும் வங்கமும், நெல்லும் புல்லும், கரும்பும் துரும்பும், ஒன்றாகக்கருதுதல் இயல்பே! மேற்கூறியவாறு துலாபாரக் காணிக்கை செலுத்தும் வழக்கம் வடஇந்தியாவில் பரோடாவுக்கருகிலுள்ள தாக்கோர் (Dakhore) என்னும் தலத்திலும், துவாரகையிலும் இருந்து வருகின்றது.

இத்தகையை சிறந்த கோவிலின் கர்ப்பக்கிரக விமானத்தின் வெளிப்புறத்தில் மனிதர்கள் கொக்கோகலீலைகள் புரிகிற பாவனையாக பிம்பங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இத்தகையை உருவங்கள் நம் தமிழ்நாட்டிலும் சில வெளிக்கோபுரங்களிலும் சில தேர்களிலும் இருக்கக்காணலாம். அவை திருஷ்டி பரிகாரத்திற்காக அமைக்கப்பட்டிருக்கின்றனவென்று சொல்லப்படுகிறது. காரணம் யாதாயினும் இத்தகைய அருவருக்கத்தக்க பிம்பங்கள் கோவில்சம்பந்தமான எவ்விடத்திலும் இருத்தல் தகாது என்பது யாவரும் ஒப்பத்தக்கது. எல்லாம் வல்ல இறைவன் தன்னிருப்பிடத்தையோ, தான் ஊர்ந்து செல்லும் தேரையோ, திருஷ்டி தோஷத்தினின்று காத்துக்கொள்ள சக்தியற்றவனா என்பதை யோசித்தல்வேண்டும். அஃது எவ்வாறாயினும் ஆகுக. வெளிக்கோபுரத்திலும் தேரிலும் இருப்பதே தவறாக இருக்க, அவன் எக்காலத்தும் உறைவிடமாகக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகிற கர்ப்பக்கிரகவிமானத்தின் சுவரில் யாவருக்கும் எளிதாகக் காணப்படுமிடத்தில் சுரதலீலைப் பிம்பங்களிருப்பது

மிகவும் அருவருக்கத்தக்கதே! அநாகரீகமான இக்காட்சி இக்கோவிலைத்தவிர மற்றெக்கோவிலிலும் இப்பரிசுத்தமான பாகத்தில் இருப்பதாகத் தெரியவில்லை ஆடவரும், பெண்டிரும் பேதமின்றிக்கலந்து மனவொருமையோடு கடவுளை வழிபடச்செல்லுமிடத்து, இத்தகைய பிம்பங்களிருப்பின் அவைகளைக் கண்ணுற்றதும், அவர்கள் மனம் வேறுபடாதிருத்தல் இயற்கைக்கு முரண்பாடாகும். இக்கோவிலில் சிற்சில சமயங்களில் தெருக்கூத்துப் போன்ற ஓர்வகைக்கூத்துப்போட்டு ஆடுகின்றனர். ஆனால், அதில் நடிக்கும் நாடகபாத்திரர்கள், எதற்கும் ஜாடைகாண்பிப்பதைத் தவிர வாய்திறந்துபேசுவதில்லை. மேலும், நம் தமிழ் நாட்டில் முற்காலத்திலிருந்ததுபோல, இவர்கள் தரிக்கும் வேடங்கள் மிக்க விநோதமாக இருக்கின்றன. பிரமன் வேடந்தரிப்பவன் நான்கு முகங்களையுடைய ஒரு மரக்கவசத்தைத் தலையில் அணிந்துகொள்ளுகின்றனன். கருடனாக வருபவன் வானத்திற் பறக்கும் கருடப்பட்சியின் முகம்போன்ற ஒரு மரக்கவசத்தை அணிந்து கொள்ளுகின்றனன். இத்தகைய கோலங்கள் புராணங்களுக்கொத்திருப்பினும், பார்க்க விந்தையாயிருக்கின்றன.

இந்தக்கோவில் வைணவக் கோவிலாக இருப்பினும், வீரசைவர்களான நம்பூதிரிகளே பூசைசெய்கின்றனர். குழந்தைகளுடன் கூடிவிளையாடினவனும், மங்கையருடன் மாயலீலைகள் புரிந்தவனும், அரசர்களுக்கு அரசனாயிருந்தவனும், தவசிகளுக்குத் தருமசொரூபியாயினவனும், கிரீடிக்குக் கீதோபதேசம் செய்தவனும், கோவர்த்தனகிரியெடுத்துக் கோக்களைக்காத்தவனுமான கோபாலன், இப்பூசையையும் இனிதாகவே ஏற்றுக்கொள்ளுகின்றனனே தவிர, சைவர்கள் பூசையெனக்கருதித் தள்ளிவிடுவதாகத் தெரியவில்லை. இவ்வூரில் கோவிலுக்கருகில் பிரயாணிகள் தங்குவதற்குரிய எல்லா வசதிகளுமுள்ள ஒரு பெரிய லோக்கல்பண்டு (Local Fund) சத்திரம் இருக்கின்றது. அது ஒரு பெருந்தென்னந்தோப்பின் நடுவிலிருப்பதால் சூரியவெப்பம் தெரிவதில்லை. அதில் இரண்டு முதல் வகுப்பு விடுதிகளும், 12 இரண்டாவது வகுப்பு விடுதிகளும் இருக்கின்றன. முதல்வகுப்பு விடுதி என்பது ஒரு சிறு பங்களாவைப்போல் இருக்கின்றது. நாள் ஒன்றுக்கு வாடகை ரூ 1—8—0. இரண்டாவது வகுப்பு விடுதி என்பது நான்கு அறைகளுடன் ஒரு சிறு வீடு போலிருக்

கின்றது நாள் ஒன்றுக்கு வாடகை நான்கணு. பன்னிரண்டு மணி நேரத்திற்குள்ளிருந்தால், பாதி வாடகை தான் வாங்குகின்றனர். மற்றச்சத்திரங்களிற் செய்வதுபோல், காலை 6மணிமுதல் மறுநாட் காலை 6 மணிவரையில் ஒரு நாளெனக் கணக்கிடாமல், பிரயாணிகள் வந்திறங்கின மணிமுதல் 24 மணி கணக்கிட்டு வாடகை வசூலிக்கின்றனர். லோக்கல்பண்டு சத்திரங்களுள் இஃதொன்று தான் பிரயாணிகளின் வசதிகளை முதன்மையாக நினைத்துக் கட்டியிருப்பதாகத் தெரிகின்றது. சத்திரத்தின் காவற்காரன் சத்திரத்திலேயே ஒரு பாகத்தில் வசிப்பதால், பிரயாணிகள் எக்காலத்திலும் எந்நேரத்திலும் போய்த்தங்கலாம்.

இவ்வூரில் ஒரு சிவன்கோவிலும் இருக்கின்றது. வடக்குநாதர். உமையம்மை. சமுத்திரதீர்த்தம். சித்திரைப்பூரத்தன்று பல யானைகளுடன் திருவிழாநடப்பது பார்க்கத்தகுந்தது. இவ்வூரிலிருந்து வடக்கில் 4 மைலிலுள்ள திருளாமலை என்னும் விஷ்ணு க்ஷேத்திரத்தையும், அதினின்று ஒருமைல் தூரத்திலுள்ள கீழூர் என்னும் சிவஸ்தலத்தையும் தெரிசித்து மீளுதல் நலம். குருவாயூரிலிருந்து திரும்பும்போது, குன்னங்குளம் வழிசென்று பட்டாம்பியில் ரயிலேறிப் பிரயாணத்தைத்தொடருதல் நலம். வழியிலுள்ள கள்ளிக்கோட்டை தலைச்சேரி கண்ணனூர் முதலிய துறைமுகப் பட்டினங்களைப் பார்த்துக்கொண்டு மங்களூர் போகலாம்.

கள்ளிக்கோட்டை (கோழிக்கோடு):— இது தென்மலையாள ஜில்லாவின் தலைநகர். இவ்வூரில் சிவபிரானுக்கும் விஷ்ணுவுக்கும் பகவதியம்மைக்கும் கோவில்கள் இருக்கின்றன. இவ்வூர் ஜாமொரின் (Zamorin) அரண்மனை, சட்டைத்துணிகள் நெய்யப்படுகிற "காமன்வெல்த்" நெசவுச்சாலை (Common-Wealth Weaving Factory), ஜாமொரின் கல்லூரி (Zamorin College) முதலியன பார்க்கத்தக்க கட்டிடங்கள். ஊர் நடுவிலிருக்கிற கோமுட்டிச் சத்திரத்திலுள்ள கன்னிகாபரமேஸ்வரியின் ஆலயம் தரிசிக்கத்தக்கது. பிரயாணிகள் தங்க இடமுண்டு. இதைத்தவிர, பிராமணர்கள் தங்குவதற்கு ஏற்பட்ட சத்திரம் ஒன்றும் ரெயில்வே ஸ்டேஷனுக்கருகில் யாவரும் தங்கக்கூடிய சத்திரம் ஒன்றும் இருக்கின்றது. பொருளாளர்கள், நவீன இந்திய ஹோட்டல் (Modern Hindu Hotel) முதலிய சாப்பாட்டு விடுதிகளில்

சௌகரியமாய்த் தங்கலாம். இவ்வூரிலிருந்து மாஞ்சேரி, புதுப் பாடி, மேப்பாடி, நீலம்பூர் முதலிய ஊர்களுக்கு மோட்டார்வண்டி கள் போகின்றன.

பட்டாம்பியிலிருந்து இவ்வூர் வரும் வழியிலுள்ள பெராக் (Ferok) ஸ்டேஷனுக்கருகில், பேய்ப்பூர் (Beypore) நதியின் இருகிளைகளினிடையிலுள்ள ஒரு சிறு குன்றின்மேல், பெரக்க பாத் (Ferokabad) என்னும் பெரும்பட்டினமிருந்து அழிந்து போன அடையாளங்கள் இருக்கின்றன. இவ்வூரிலிருந்து சுமார் 2 மைல் தூரத்திலுள்ள சத்தம்பரம்பா (Chattamparamba) என்னும் குன்றில் அநேக பழைய சமாதிகள் இருக்கின்றன.

கள்ளிக்கோட்டைக்கு வடக்கிலிருக்கின்ற மேலக்குன்று (West Hill) என்னுமிடத்தில் படடாளமிருக்கின்றது. இவ்வூரிலுள்ள சிவன்கோவிலில் ஐப்பசிமாத அமாவாசையன்று ஒரு பெருந்திருவிழா நடக்கின்றது. கோவில் ஒரு சிறு குன்றின்மேல் கட்டப்பட்டிருக்கின்றது. இவ்வூரில் கள்ளிக்கோட்டை ஓடுகள் ஏராளமாய்ச் செய்யப்படுகின்றன.

தலைச்சேரி:— இது வடமலையாளம் ஜில்லாவின் தலைநகர். இது ஒரு முக்கியமான துறைமுகப்பட்டினம். கடற்கரையோரத்தில் ஒரு இடிந்த பழைய கோட்டை இருக்கின்றது. இவ்வூரில் சிவாலயம் ஒன்றும் இராமாலயம் ஒன்றும் இருக்கின்றது. இங்கிருந்து கண்ணனூர் போகும் வழியிலுள்ள இடைக்காடு (Etak-kot) என்னும் விஷ்ணு ஸ்தலத்தைத் தெரிசித்துச் செல்லல் நலம்.

கண்ணனூர்:— இது கடலோரத்தில் அமைந்துள்ள ஒரு அழகான பட்டினம். கடற்கரை விசாலமாகவும், மாலை நேரங்களில் உலாவுதற்கேற்றதாயும் இருக்கின்றது. கிணறுகளில் ஜலம் மிகவும் ஆழத்திலிருப்பதால் ஜல கஷ்டமுண்டு. ஆனால் கிணற்றுஜலம் உப்பாயில்லாமல் சுத்தமாயும் குளிர்ந்தும் இருக்கின்றது. இவ்வூரின் தென்மேற்குப்பாகத்தில் கடலுக்குள் நீட்டிக்கொண்டிருக்கின்ற ஒரு சிறு கற்பாறையின்மேல், "ஆஞ்சீலோக்கோட்டை" (Fort Angelo) என்னும் ஒரு பழமையான கோட்டை கட்டப்பட்டிருக்கின்றது. இக்கோட்டைக்கு மூன்றுபக்கத்திலும் கடலும், நான்காவது பக்கத்தில் ஒரு ஆழ்ந்த அகழியும் இருக்கின்றது.

இவ்வகழிக்கு ஒரு சிறு பாலம் போடப்பட்டிருக்கின்றது. இப்பாலத்தின் வாயிலே அடைத்துவிட்டால் கோட்டைக்குள் போக முடியாது. இக்கோட்டைக்கருகிலுள்ள பரப்புவெளியில் இங்கிருக்கும் இராணுவ உத்தியோகஸ்தர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கின்றனர். அவைகளுக்கு வடக்கில், கள்ளிக் கோட்டையிலுள்ள "காமன் வெல்த்" (Common-Wealth) நெசவுத் தொழிற்சாலையின் கிளை ஒன்று இருக்கின்றது. இங்கிருந்து வடக்கில் 3 மைல் தூரத்தில் சிறைச்சாலைக்கட்டிடமிருக்கின்றது. ஆதிகாலத்தில் இவ்வூரை ஆண்டிருந்த சுல்த்தான்களின் சந்ததியார் இன்னமும் அரக்கால்அரண்மனை என்னும் கட்டிடத்தில் வசித்து வருகின்றனர்.

இவ்வூரில் பிரயாணிகள் தங்குவதற்குப் பிரயாணிகள் விடுதி (Traveller's Bungalow) ஒன்றும், "சுவாமி மடம்" "பைராகி மடம்" என்னும் இரண்டு சத்திரங்களும் ரெயில்வேஸ்டேஷனுக்கு அருகிலேயே இருக்கின்றன. சுவாமி மடத்தில் மாணவர்கள் அனேகர் தங்கியிருப்பதால் பிரயாணிகளுக்கு எக்காலத்தும் இடம் கிடைப்பதருமை. பைராகிமடம் என்பது வடஇந்திய சாதுக்கள், தென்னிந்தியத்துறவிகள் முதலாயினோர் தங்குவதற்காக ஏற்பட்டது. அதிலிருக்கிற அறையில் குடும்பத்தோடு போவோரும் தங்கலாம். ஜலவசதியுண்டு.

சிலவருஷங்களுக்குமுன் யாம் பூவலஞ் செய்து வந்தபோது, இக்கட்டிடத்தில் தங்கியிருக்க நேர்ந்தது. அப்போது எமக்குக்கிட்டின நல்லாரிணக்கத்தின் நற்பயனை இன்றும் மறக்காது, ஈசனுக்கு நன்றி செலுத்துகின்றோம். எண்ணிறந்த ஆண்டுகளாகச் சாத்திரக்குப்பைகளைச் சீத்து வாணாளை வீணாளாக்கி அலைந்துழலும் எம்போலியருக்கு, அங்கிருந்த அடியார்களில் ஒருவர் ஒரு நிமிடம் பேசிய நன்மொழிகள் ஞானசாத்திரத்தைக் கசக்கிப்பிழிந்த இரசமாய்விளங்கி எம்மனத்தைத் தம்வயமாக்கின. அப்பெரியார்கள் தங்களிடமிருக்கிற கஞ்சாவையும், அரிசி பருப்பு முதலிய உணவுப்பொருள்களையும், முன்பின் கண்டறியாத மற்றவர்களுக்குப் பங்கிட்டுக்கொடுப்பதையும், அவர்கள் எல்லோரும் சேர்ந்து அனேக ஆண்டுகளாய்ப் பழகினவர்கள் போன்று அளவளாவுதலையும் பார்க்க, "அன்பிலார் எல்லாந் தமக்குரியர்,

அன்புடையார் என்பு முரியர் பிறர்க்கு" என்னும் தெய்வப்புலவர் திருவாக்கிற்கிணங்க, அவர்கள் எல்லோரும் அன்பே ஓருருவெடுத்துவந்த ஒரு குடும்பத்தினர்போல் காணப்பட்டார்கள். அவர்கள் இன்பத்தைப்பார்க்கிலும் வானுலகவின்பம் மேலானதாயிருக்குமானால் நாம் விரும்பலாம் என்று இகழத்தக்கதாயிருந்தது. இக்காலத்தில் கல்வியிலும் நாகரிகத்திலும் முதிர்ச்சியடைந்துவிட்டதாக மனப்பால் குடித்துக்கொண்டிருக்கின்ற நம்முள், அனேக குடும்பங்களில் சகோதரர்களுக்குள்ளும் தகப்பன் பிள்ளைகளுக்குள்ளும் ஏற்படுகின்ற சச்சரவுகளும் மனக்குறைகளும் கணக்கிலவாயிருக்க, தங்கள் தங்கள் வீடுவாசல்களையும் உற்றோர் பெற்றோரையும் விட்டு, இருக்கவிடமின்றி, கையிற்காசின்றி, ஊரூராய்ப் போய்க்கொண்டிருக்கும் இக்கூட்டத்தார் மற்றவர்களிடம் காட்டும் அன்பையும் வாஞ்சையையும் பார்க்குமளவில், படிப்பாலும் நாகரிகத்ாலும் நாம் கெட்டழிந்தோமென்றே நினைக்கவேண்டியிருக்கின்றது.

நம்முன்னிலையில் கஞ்சாகுடித்துக்கொண்டிருந்த ஒரு பெரியார், அப்போதுதான் அங்குவந்த மற்றொரு பெரியாரை மிக்க அன்போடு வரவேற்று, அவருக்குத் தம்மிடமிருந்த சிறிதளவு கஞ்சாவையும் கொடுத்துக் குடிக்கச்செய்தனர். அதைப் பார்த்த நாம், அவர்கள் மனநிலையை அறியும் வண்ணம், கஞ்சா கொடுத்தவரை விளித்து, "உம்மிடமிருந்த கஞ்சா முழுவதும் கொடுத்துவிட்டீரே; நாளையதினம் நீர் கஞ்சா குடிப்பதற்கு என் செய்வீர்?" என்று வினவினோம். அதற்கவர் மிக்கப் பொறுமையோடு, "எமக்கு இன்று கொடுத்த கடவுள் நாளையும் கொடுப்பார். இப்போது நாம் கொடுத்த கஞ்சா நம்வீட்டிலிருந்து கொண்டு வந்ததல்ல. வழியில் வந்தது வழியிற்போனால் வழியிற் கிடைக்கும். நாம் நமது ஊரைவிட்டகன்று அனேகமாதங்களாயின. இதுகாறும் ஒரு நாளாவது நாம் கஞ்சா குடியாதிருந்ததில்லை. யார் வழியாகவோ நமக்குக் கடவுள் கொடுத்துத்தான் வந்தார் அதே கடவுள் நாளையும் கொடுப்பார்." என்று கூறி நம்வாயைத்தாளிட்டுப் பூட்டிவிட்டனர். கருப்பைக்குண் முட்டைக்கும் கல்லினுட் டேரைக்கும் விருப்புற் றமுதளிக்கும் மெய்யனும், அத்தி முதலெறும்பீ ரானவுயி ரத்தனைக்கும் சித்த மகிழ்ந்தளிக்குந் தேசிகனுமான கருணையங்கடல், நம்மெல்லோரையும், எக்காலத்தும்,

எவ்விடத்தும், காக்கக் காத்திருக்கின்றான் என்பதையும், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதையும், அதற்குமுன் பெரியோர்கள் வாயினின்றும் புத்தகவாயிலாயும் அனேகமுறை கேட்டும் கற்றுமிருந்தும், அவ்வுண்மை அன்றுதான் பசுமரத் தாணிபோல் நம்மனத்திற் பதிந்தது. இவ்வுண்மைக்கு நிலையான சான்று இக்காலத்தும் மங்களூருக்கடுத்த கதிரி என்னும் குன்றில் வசிக்கும் தபோநிஷ்டரான மகான் *ஸ்ரீராமதாஸ்சுவாமிகளே.

கன்னியாகுமரியிலிருந்து கண்ணனூர் வரையில் மலையாள பாஷை வழங்குகின்றது. ஆனால் தமிழ்பேசக்கூடியவர்களும் அனேகர் உளர். கண்ணனூருக்கு வடக்கில் மங்களூர்வரையில் மலையாளமும் துளுவமும் (Tulu) கலந்து வழங்குகின்றன.

தளிப்பரம்பு (Taliparampa):— இது கண்ணனூருக்கு வடக்கில் 5 மைல் தூரத்திலுள்ள தளிப்பரம்பா ரோட் ஸ்டேஷனிலிருந்து கிழக்கில், சுமார் 15 மைல் தூரத்திலுள்ள ஓர் சிவஸ்தலம். தளிப்பரம்புத்தம்பிரான். அன்னபூரணியம்மை. இவ்வூருக்கருகில் திருச்சம்பரம் எனனும் ஓர் கிருஷ்ணக்ஷேத்திரம் இருக்கின்றது. அங்குள்ள கோவிலில் பால் அபிஷேகமும், நெற்பொரிநிவேதனமும் விசேஷம். இங்கு விதையில்லா மகிழமரம் ஒன்றிருக்கின்றது.

நீலேசுவரம்:— இது கண்ணனூரிலிருந்து மங்களூர் போகும் வழியிலுள்ள ஓர் சிற்றூர். இங்கு எழுந்தருளியிருக்கும் பகவதி யம்மனைத் தரிசித்தல் விசேஷம்.

காசரகாடு (Kasaragod):— இவ்வூர் நீலேசுவரமிருந்து மங்களூர் போகும்வழியில் இருக்கின்றது. இவ்வூரின் கீழ்பாகத்தில் சந்திரகிரியாற்றங்கரையில் பேட்னூர் (Bednore) அரசர்களால் கட்டப்பட்ட ஒரு சிறு கோட்டையும் மேல்பாகத்தில் இக்காரி (Ikkari) அரசருடைய கோட்டையும் இருக்கின்றது. இவ்வூரில் இருக்கும் ஸ்ரீமல்லிகார்ச்சுனர் ஆலயத்தில் மாசிமாதந்தோறும் திருவிழா நடைபெறுகின்றது.

---

*இம்மகானின் அற்புதமான சரித்திரத்தை மங்களூர் வாசியான திருவாளர் கணேசராவ் என்பவர், "கடவுளைத்தேடல்" (In Quest of God) என்னும் பேரோடு ஆங்கிலத்தில் பிரசுரித்துள்ளார். யாவரும் வாங்கி வாசித்தல் அவசியம்.

மங்களூர்:— தென்னிந்தியா இருப்புப்பாதையின் வட மேற்குக்கிளை இவ்வூரிற்றான் முடிவடைகிறது. உடுப்பி வரையில் ரயில்போடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடக்கின்றன. பட்டினம் சுத்தமாகவும் அழகாகவும் அமைந்திருக்கின்றது. வடக்கில் குர்ப்பூர் நதியும், தெற்கில் நேத்ராவதி நதியும், மேற்கில் உப்பங்கழியுமாக இவ்வூருக்கு மூன்று பக்கங்களிலும் ஜலம் சூழ்ந்திருக்கின்றது. உப்பங்கழியைக் கடந்துதான் கடற்கரைக்குச் செல்லல் வேண்டும். போவதற்குப் படகுகள் வாடகைக்குக் கிடைக்கும். கடற்கரையில் முட்செடிகள் நிறைந்திருப்பதால் உலாவுவதற்கேற்றதாயில்லை. உப்பங்கழிக்கருகில் பலவிடங்களில் மீன் நெய் காய்ச்சுகிறார்களாதலின் கடற்கரையில் கெட்டநாற்றம் வீசுகின்றது. இவ்வூரில் கடற்கரையிருந்தும் ஜனங்களுக்குப் பயன்படாதிருப்பது வருந்தத்தக்கதே.

இவ்வூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கருகில் ஸ்ரீமங்களதேவியம்மையின் பழமையான கோவில் இருக்கின்றது. அவ்வம்மை இவ்வூராருக்குக் குலதெய்வமென்றும் அவ்வம்மையின் பேர் பற்றியே இவ்வூருக்கு மங்களூர் எனப் பேர்வந்ததாகவும் சொல்லப்படுகின்றது. கோவில் மிகவும் ஜீரணமான நிலையிலிருக்கின்றது. தேவி, யார்மனதிற் புகுந்து தன் கோவிலைப் புதுப்பித்துக் கொள்ளுவாளோ தெரியவில்லை. இவ்வூரில் பார்க்கத்தகுந்த அனேக கட்டிடங்களிருப்பினும், அவைகளுள் ஸேயின்ட் ஆலோஷியஸ் கலாசாலை (St. Aloysius College), அரசாங்கக் கலாசாலை (The Government College), அநாதைக்குழந்தைகளை ஆதரிக்குமிடம் (The Orphanage), தேசீய பெண்பாடசாலை (The National Girl-School), இவைகள்தான் சிறந்தவை. வடஇந்தியாவில் பூனா பட்டினத்திலும், சிங்களநாட்டில் யாழ்ப்பாண நகரிலும், பெண்கல்வி மிகத்தீவிரமாய் விருத்தியடைவதுபோல், நம் தென்னிந்தியாவில் இவ்வூரில் பெண்கல்வி சிறந்தோங்கி வளர்ந்து வருகின்றது. பூனாவிலிருந்து அனேகம் பெண்மணிகள் இங்குவந்து உபாத்திமைத் தொழிலில் அமர்ந்திருக்கின்றனர். மற்றப்பட்டினங்களும் இப்பட்டினத்தைப் பின்பற்றி நடத்தல் அவசியம். பெண்கல்வியின்றி இந்நாட்டின் பேதைமை அகலாதென்பது திண்ணம்.

ஊருக்குக் கிழக்கில் 2 மைல் தூரத்திலுள்ள கதிரி (Kadiri) என்னுமிடத்தில் ஒரு சிறு குன்றும், அதன் அடிவாரத்தில் ஒரு சிவன்கோவிலும் இருக்கின்றது. சுவாமியின் பெயர் சுவாமிநாதர். சிவபிரானுக்கு இப்பெயர் வேறெக்கோவிலிலுமிருப்பதாகத் தெரியவில்லை. இக்கோவில் சோணாட்டுக் கோவில்கள் போல் அழகாகக் கட்டப்பட்டுள்ளது. இக்கோவிலுக்கு வடக்கில் ஜனங்கள் ஸ்நானம் செய்வதற்கு வசதியாகச் சில குண்டங்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர். இவைகளில் யாவரும் பேதமின்றிக் குளிக்கலாம். ஆனால், ஆண்களும் பெண்களும் கலந்துகொள்ளாமல் தனித்தனியாக ஸ்நானம் செய்யும்படி ஏற்பாடு செய்திருந்தால் நலமாயிருக்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | | | | |

1. 2. 3. 6. நெ. குண்டங்களில் யாவரும் குளிக்கலாம். 4 நெ. குண்டம், எண்ணெய் தேய்த்துக் குளிப்பவர்களுக்காக ஏற்பட்டது. 5 நெ. குண்டம், சவுக்காரம் போட்டுத் துணி துவைப்பதற்காக ஏற்பட்டது.

இவைகளுக்கருகிலுள்ள குன்றின்மேலிருந்து அருவி ஜலத்தைக் கொண்டுவந்து இரவில் இக்குண்டங்களில் நிரப்பி வைப்பதாகவும், மறுநாளிரவில் அவைகளின் ஜலத்தை முழுவதும் வடியவிட்டு, மறுபடியும் புதிய ஜலத்தை நிரப்பிவைக்கிறதாகவும் தெரிகிறது. நகரபரிபாலனசபையார் (Municipality) இத்தகைய ஸ்நானவசதிகள் மற்றெவ்வூரிலும் செய்திருப்பதாகத் தெரியவில்லை. இவைகளைத் தவிர, கோவிலுக்குக் கீழ்ப்பக்கத்தில் ஒரு சிறு மண்டபத்திலுள்ள கோமுகத்திலிருந்து ஜலம் வந்துகொண்டிருக்கின்றது. அதை விசேஷமான தீர்த்தமாகக் கொண்டாடுகின்றனர். மலையின்பேரிலும் ஓரிடத்தில் ஜனங்கள் ஸ்நானஞ் செய்யத்தக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர். மலைநாட்டாரும் கொங்குநாட்டாரும் காலை மாலை இருவேளைகளிலும் ஸ்நானம் செய்வதில் அனேகமாய்த் தவறுவதில்லை.

இக்குண்டங்களுக்கருகில் மலைமேல் ஏறிப்போக நல்ல பாதை இருக்கின்றது. அதன்வழியாக மேலே சென்றால், வழியில் ஒரு சிறு வளைபோன்ற குகை இருக்கின்றது. ஆதியில் இராமர் வனவாசம் செய்தகாலத்தில் காதூஷணாதிகளுடன் போர் புரிந்தபொழுது, சீதாதேவியை இக்குகைக்குள் வைத்திருந்தனரென்று

சொல்லப்படுகின்றது. இதில் சீதாதேவி ஒளிந்திருந்ததால் இதற்கு "சீதாகுப்த்" என்று பேரிட்டிருக்கின்றனர். ஆனால் இச்சம்பவம் நடந்தது வடஇந்தியாவிலுள்ள பஞ்சவடியிலாதலால் இக்கதை பொருத்தமாகத் தோற்றவில்லை இதற்குமேல் சற்று தூரத்தில் "பாண்டவகுப்ஹ" (பாண்டவர்குகை) எனப்படும் மற்றொரு குகை இருக்கின்றது. பாண்டவர்கள் இதனுள் நுழைந்து நேராகஅஸ்தினபுரம் போய்ச்சேர்ந்தனரென்று சொல்லப்படுகிறது. எதற்காக எக்காலத்தில் அவ்வாறு சென்றனர் என்று தெரியவில்லை. பாண்டவர் குகையைக் கடந்து சென்றால் "ஜோசிமடம்" எனப்படும் ஓர் மடம் இருக்கின்றது. அதில் ஒரு சாது இருந்துகொண்டு காசி விசுவநாதர் காலபைரவர் முதலிய விக்கிரகங்களை வைத்துப் பூசை செய்கின்றார். இம்மடத்தில் ஆதியில் பரசுராமர் யாகம் செய்ததாகச் சொல்லப்படுகின்ற அக்கினிகுண்டம் ஒன்று இருக்கின்றது. இரவிலும் பகலிலும் ஏராளமான கட்டைகளைப்போட்டு அதிலுள்ள தீயவியாமற் பாதுகாத்து வருக்கின்றனராதலின், பரசுராமர் வளர்த்த ஓமாக்கினி இக்காலத்தும் இருப்பதாகக் கருதப்படுகின்றது. இதிலும் விசேஷமான மற்றொரு அக்கினிகுண்டம் இமயமலையின் உச்சியிலுள்ள *த்ருஜுகிநாராயன் Trijugi-Narayan) என்னுமிடத்தில் இருக்கின்றது. அது பரமசிவனுக்கும் பர்வதராஜபுத்திரிக்கும் பாணிக்கிரஹணம் நடந்தகாலத்தில் வளர்த்த ஓமகுண்டமெனத் தெரிகின்றது. இமயமலையின் சிகரங்களில் பனிவந்து மூடுங்காலத்தில் இதற்க்குக்கீழுள்ள ஊர்கள் பனியால் மூடப்படினும், இத்தலம் மாத்திரம் பனியால் பாதிக்கப்படுவதில்லை என்றும், இதற்குக்கீழுள்ள ஊரார் பனிக்கஞ்சியோடினும், இவ்வூரார் மட்டும் ஊரைவிட்டுச் செல்வதில்லை என்றும், அக்காரணம்பற்றியே இவ்வோமகுண்டம் மூன்று யுகங்களாகப் போற்றப்பட்டு வருகின்றதென்றும் சொல்லப்படுகின்றது. மேலே சொல்லப்பட்ட ஜோசிமடத்திற்குச் சற்றுதூரத்தில் மகாத்மா காந்தியடிகளால் ஏற்படுத்தப்பட்ட ஓர் ஆசிரமம் இருக்கின்றது. அதில் மாணவர்களுக்காகவும் ஆசிரியர்களுக்காகவும் அநேக கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

*இத்தலம் ஹரித்துவாரமிருந்து திருக்கேதாரம் போகும்வழியில் கௌரிகுண்டத்தினருகில் இருக்கின்றது. இத்தலம் போவோர் ஹரித்துவாரத்திலிருந்து 132 மைல் தூரம் இமயமலைமீதேறிச் செல்லல்வேண்டும்.

மங்களூரில் தங்குவதற்குச் சத்திரங்களிருப்பதுந்தவிர, ரெயில்வே ஸ்டேஷனுக்கருகிலேயே தங்க இடவசதி செய்து கொடுக்கிற சாப்பாட்டுக்கடைகள் அனேகம் இருக்கின்றன. இவ்வூரிலிருந்து தலைக்காவேரி சுப்பிரமணியம் என்னும் மிகச் சிறந்த க்ஷேத்திரங்களுக்குப் போய்த் தரிசித்து மீளுதல் நலம்.

தலைக்காவேரி:— இத்தலம், கங்கைக்கும் மேலானதாகக் கருதப்படுகின்ற காவிரிநதியின் உற்பத்திஸ்தானம். எல்லா நாட்டிலும் பல்வகையானும் சிறந்ததாகக் கொண்டாடப்படுகிற சோழவளநாட்டின் பெருமை, இக்காவிரியாற் கிட்டியதன்றி வேறன்றென்பது, பிரத்தியட்சப் பிரமாணமாயும் அனேக சங்க நூல்களின் மூலமாயும் தெரியக்கிடக்கின்றது.

செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்கும்
கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் தனாது
கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை.

ஆணு விசும்பின் ஆகாய கங்கை
வேணவாத் தீர்த்த விளக்கு.

பாடல்சால் சிறப்பிற் பரதத் தோங்கிய
கோடாச் செங்கோற் சோழர்தங் குலக்கொடி
கோணிலை திரிந்து கோடை நீடினும்
தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை. (மணிமேகலை)

மாயிரு ஞாலத்து மன்னுயிர் காக்கும்
ஆயிரத் தோரெட் டரசுதலைக் கொண்ட
தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறை. (சிலப்பதிகாரம்)

சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாக
காவிரி புரக்கும் நாடு கிழவோனே. (பொருநராற்றுப்படை)

புனிறுதீர் குழவிக் கிலிற்று முலைபோலச்
சுரந்த காவிரி. (புறநானூறு)

மேலும், பத்திச்சுவை சொட்டச்சொட்ட திருத்தொண்டர் புராணம் பாடிய கவிவலவராய சேக்கிழார்பெருமானும் காவிரியின் பெருமையைப் பின்வரும் செய்யுட்களில் மிகவழகாக அமைத்துப்பாடியுள்ளார்.

ஆதிமா தவமுனி யகத்தி யன்றரு
பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி
மாதர்மண் மடந்தைபொன் மார்பிற் றூழ்ந்ததோர்
ஓதநீர் நித்திலத் தாம மொக்குமால்.

சையமால் வரைபயி றலைமை சான்றது
செய்யபூ மகட்குநற் செவிலி போன்றது
வையகம் பல்லுயிர் வளர்த்து நாடொறும்
உய்யவே சுரந்தளித் தூட்டு நீரது.

மாலினுந் திச்சுழி மலர்தன் மேல்வருஞ்
சால்பினுற் பல்லுயிர் தருதன் மாண்பினுற்
கோலநற் குண்டிகை தாங்குங் கொள்கையாற்
போலுநான் முகனையும் பொன்னி மாநதி.

திங்கள்சூ டியமுடிச் சிகரத் துச்சியிற்
பொங்குவெண் டலைநுரை பொருது போதலால்
எங்கணு யகன்முடி மிசைநின் றேயிழி
கங்கையாம் பொன்னியாங் கன்னி நீத்தமே.

வண்ணநீள் வரைதர வந்த மேன்மையால்
எண்ணில்பே ரறங்களும் வளர்க்கு மீகையால்
அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையி னொழுக்கம் போன்றது.

வேறு

வம்பு லாமலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை யெண்ணில் சிவாலயத்
தெம்பி ரானை யிறைஞ்சவி னீர்ம்பொன்னி
உம்பர் நாயகர்க் கன்பரு மொக்குமால்.

வாசநீர்குடை மங்கையர் கொங்கையிற்
பூசு குங்கும மும்புனை சாந்தமும்
வீசு தெண்டிரை மீதிழித் தோடுநீர்
தேசு டைத்தெனி னுந்தெளி வில்லதே.

மாவி ரைத்தெழுந் தார்ப்ப வரைதரு
பூவி ரித்த புதுமதுப் பொங்கிட
வாவி யிற்பொலி நாடு வளந்தரக்
காவி ரிப்புனல் கால்புரந் தோங்குமால்.

வேறு

அடல்விடையின் மேல்வருவார் அமுதுசெய்ய வஞ்சாதே
விடமளித்த தெனக்கருதி மேதினிக்கு வளநிறைத்தே
கடல்வயிறு நிறையாத காவிரி.

தாம் சிரமேற்றாங்கிய கங்கைக்கும், இத்தகைய பேரன்பு தம்மிடத்தில்லாதிருக்கக் கண்ட காலகாலர், எந்நன்றிகொல்லி னும் செய்ந்நன்றி கொல்லவெண்ணாதெனவறிந்து, காவிரிபாயுந் தலங்களையே பெரும்பாலும் தம்முறைவிடமாகக்கொண்டு, காவி ரியை மேன்மைப்படுத்தினர்போலும்.

காவிரிக் கரையிற் பிறந்து, காவிரி மருங்கில் வளர்ந்து, காவிரி நீரைப்பருகி, காவிரியுதவும் உணவைப் புசித்து, காவிரித் தலங்களிற் களிகொண்டிருக்கும், காவிரித்தாய் மக்கட்குக் காவிரி யின் பெருமையைப் பின்னும் கழறப்புகின், கருமானுலையிற் சூசி விற்பதுபோலாமன்றோ.

இத்தலத்துறையும் சிவபெருமான் பிரமகிரீசர். அம்பிகை பரமேஸ்வரி. இந்திரன் வேண்டுகோட்கிணங்கி விநாயகர் காகமாய் வந்து உருட்டிய குறுமுனிவன் மந்திரகலசத்தின் நீர், கவேரன் தவப்பயனாய்க் காவிரியாகிப் பெருகியோடிற்றெனத் தெரிகிறது.

*சுப்பிரமணியம்:— இது இந்நாட்டிலுள்ளவைகளுள் மிகச்சிறந்த சுப்பிரமணியக்ஷேத்திரம். தஞ்சாவூருக்கருகில் மாரி யம்மன் கோவில்கொண்டுறையும் காரணம்பற்றி, அவ்வூருக்கே மாரியம்மன்கோவில் என்னும் பேர் வழங்கிவருவதுபோல், இத்தலத்தில் சுரசேனாதிபதியாகிய சுப்பிரமணியமூர்த்தி எழுந் தருளியிருக்கும் காரணத்தால், இவ்வூருக்கு சுப்பிரமணியம் என் னும் காரணப்பெயர் அமைந்திருக்கின்றது. இப்பெருஞ்சிறப்பு முருகக்கடவுளின் மற்றெத்தலத்திற்கும் வாய்த்திருப்பதாகத் தெரியவில்லை. இது சர்ப்பராஜனுடைய வாசஸ்தானமாகக் கருதப் படுவதால், இவ்வூரில் ஏராளமான சர்ப்பங்கள் இருக்கின்றன வென்றும், முருகன் அவைகளுக்கு அபயமளித்திருக்கும் காரணத் தால், கருடன் அஞ்சி இவ்வூரெல்லைக்குள் வருவதில்லை என்றும், இங்குள்ளோரை எக்காலத்தும் சர்ப்பம் தீண்டினதில்லையென்றும்,

*குறிப்பு:— இந்த க்ஷேத்திரத்தைப்பற்றி உடுப்பி ஸ்தலவிவரத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

தவறி ஒருக்கால் தீண்டினலும் விஷமேறுமென்றும், இத்தலத் துறையும் அடியார்களின் எச்சிலைத் தொட்டவளவிலேயே குஷ்ட ரோகம் முதலிய மகாரோகங்களும் நிவர்த்தியாகின்றனவென்றும் சொல்லப்படுகின்றது. நம் தமிழ் நாட்டினில் அனேகர் உடுப்பி சுப்பிரமணியம் என்று கேள்விப்படுவதிலிருந்து உடுப்பி ஓர் சிறந்த சுப்பிரமணிய க்ஷேத்திரமென்றும், உடுப்பியில் உறையும் கடவுள் உமாசுதனை சுப்பிரமணியன் என்றும் எண்ணிக்கொண்டிருப்ப தாகத்தெரிகின்றது. ஆனல் உடுப்பியில் உறைபவன் கண்ணன். சுப்பிரமணியம் இத்தலத்தின்பேர். வட இந்தியாவின் மத்தியபாகத் திலுள்ள காசிக்ஷேத்திரத்தையும், தென்னிந்தியாவின் தென் கீழ்த்திசையிலுள்ள இராமேசுரத்தையும் ஒன்றாகச்சேர்த்து காசி இராமேசுரம் என்று சொல்லுவதுபோல், ஒன்றற்கொன்று நூறு மைல் தூரத்திலிருக்கும் இவ்விரண்டு தலங்களின் பேரையும் சேர்த்துச்சொல்லுவது இயல்பாயிருக்கின்றது. தவிர, சுப்பிர மணியம் என்று தனித்துச்சொன்னல் ஓரூரின் பேராகக்கொள்ளு வது அரிதாதலின், உடுப்பி — சுப்பிரமணியமென, ஊரைக்குறிக் கும் ஓர் அடைமொழியாக, அப்பக்கத்திருக்கும் மற்றொரு சிறந்த தலத்தின் பேரையும் சேர்த்துச்சொல்ல நேர்ந்ததுபோலும்.

முருகபிரானுடைய ஆறுபடை வீடுகளுள் ஒன்றான திருவேரகம் என்பது "மலைநாட்டகத்தோர் திருப்பதி" எனத் திருமுருகாற்றுப்படை உரையாசிரியர்களான பரிமேலழகரும் நச்சினர்க்கினியரும் கூறியிருப்பதைக்கொண்டு, இதைத் திருவேர கமென நினைப்பாருமுளர். மங்களூருக்கும் சுப்பிரமணியத்திற்கும் 30 மைல். இத்தலத்திற்குத் தலைச்சேரியிலிருந்து பாகமண்டலம் வழியாகவும், மைசூரிலிருந்து மெர்க்காரா (Mercara)வழியாகவும் வரலாம். எல்லா ஊர்களினின்றும் மோட்டார்கள் போகின்றன.

மங்களூரிலிருந்து உடுப்பிக்குப்போக இரண்டு சாலைகள் இருக்கின்றன. ஒன்று கடற்கரையோரமாக நேராய் உடுப்பிக்குப் போகின்றது. மற்றது உள்நாட்டுவழியாக மூடுபதிரி, கார்க்காலா முதலிய சமணக்ஷேத்திரங்களின் வழியாகச் சுற்றிக்கொண்டு போகின்றது. இரண்டாவது சாலை சுற்றாயினும், மோட்டார் கட்டணம் சற்று அதிகமாயினும், இம்மார்க்கம் போவதே நலம். மங்களூரில் துளுவபாஷை வழங்குகின்றது. இதைவிட்டு வடக் கில் சென்றவுடன் கன்னடம் ஆரம்பித்து விடுகின்றது.

மூடபெதிரி:— ஊர் சிறிதாயினும் இதிலிருக்கும் சமணர் கோவில் மிகப்பெரிதாகவும் அழகாகவும் அமைந்திருக்கின்றது. இக்கோவிலிலிருக்கிற விக்கிரகம் தங்கத்தினாற் செய்யப்பட்டு அதி சுந்தரமாக விளங்குகின்றது. இதைப்பார்த்தால் மாயவரத்திற் கருகிலுள்ள அட்டவீரட்டத்தலங்களுள் ஒன்றாகிய வழுவூரில் எழுந்தருளியிருக்கும், தாருகாவனத்து ரிஷிபத்தினிகளைக் கற்பழிக்க வந்த நிருவாண கோலத்தோடுள்ள பிட்சாடன மூர்த்தியே இங்கு வந்துவிட்டனரோவென ஐயுறத்தக்கதாயிருக்கின்றது. இந்துக்களுக்கு காசி ஹரித்துவாரமும், முகமதியர்களுக்கு மக்கா மதினாவும், எவ்வாறு சிறந்த க்ஷேத்திரங்களாக விளங்குகின்றனவோ, அவ்வாறே இவ்வூரும் கார்க்காலாவும், சமணர்களுக்கு மிகச்சிறந்த புண்ணிய க்ஷேத்திரங்களாக விளங்குகின்றன.

கார்க்காலா.— இவ்வூரில் ஒரு சிறு குன்றின்மேல் 42 அடி உயரமுள்ளதும் ஒரேகல்லால் செய்யப்பட்டதுமான ஒரு சமணவிக்கிரகம் நிற்கின்றது. இதற்குமேல் கோவிலாவது மண்டபமாவது இல்லையாகையால் அடிக்கின்ற காற்று, பெய்கின்ற மழை, காய்கின்ற வெய்யில் எல்லாம் இவ்விக்கிரகத்திற்கேயென நினைக்கும்படி, நனைந்து காய்ந்துகொண்டிருக்கின்றது. இவ்வளவு பெரிய விக்கிரகத்தை அக்கருங்கன்மலையில் எப்படி நாட்டினார்கள் என்பதை நினைக்க வியப்புமேலிடுகின்றது. அதை அம்மலையில் நாட்டிப் பொருத்தின இடமும் தெரியாமல் மிக நுட்பமாக வேலைசெய்திருக்கின்றனர். மைசூர் நாட்டில் இந்தியாவிலுள்ள விக்கிரகங்களிலெல்லாம் மிகப்பெரியதும், 60 அடி உயரமுள்ளதுமான ஒரு விக்கிரகம் இருப்பதாகவும், இங்கிருக்கும் சிலை அதற்கடுத்ததென்றும், இவைகளுக்கு 60 வருஷங்களுக்கொருமுறை தகுந்த சாரங்கள் கட்டி, வைரம் வைடூரியம் முதலிய நவரத்தினங்களாலும், தங்கம் வெள்ளி முதலிய பஞ்சலோகங்களாலும், நெல் கேழ்வரகு முதலிய நவதானியங்களாலும் அபிஷேகம் செய்யப்படுகின்றதென்றும், அச்சமயங்களில் இந்தியாவின் எல்லாப் பாகங்களிலுமிருந்து ஏராளமாள சமணர்கள் வந்து கூடுவதாகவும் சொல்லப்படுகின்றது. இம்மலைக்கருகில் ஒரு சிறு மலையின்மேலுள்ள சமணர்கோவிலில் சிறந்த வேலைப்பாடுள்ள மூன்று சமண விக்கிரகங்கள் இருக்கின்றன. இவைகள் கற்சிலை

களாயினும் பார்ப்பதற்கு மிக்க அழகானவை. இம்மலையடியில் இராமசமுத்திரம் என்னும் தீர்த்தம் இருக்கின்றது. ஸ்நான விசேஷம்.

---

## அத்தியாயம் 6.

—(o)—

*அருமைசேர் வாசுதேவன் அருட்பணி சார்தற்கிங்கு*
*உரியநற் றவமேதென்னில் உலகெலாம் நமக்குற்றாலும்*
*வருசுட ரவனுமிந்தும் வடக்கொடு தெற்கானாலும்*
*ஒருமொழி யேனும்பொய்யா துரைத்தலென் றறிதல்வேண்டும்.*
*(காந்தியடிகள் கற்பனை)*

உடுப்பி:— இப்புண்ணிய க்ஷேத்திரம் மங்களூருக்கு நேர் வடக்கிலும் கார்க்காலாவுக்கு வடமேற்கிலுமாக இருக்கின்றது. இரண்டு ஊர்களிலிருந்தும் மோட்டார்கள் போகின்றன. இதற்குத்துறைமுகம் மேற்கில் 4 மைல் தூரத்தில் கடற்கரையிலுள்ள மல்பி (Malpi) என்னும் சிற்றூர்.

### க்ஷேத்திரோற்பத்தி

ஸ்ரீய: பதியானவர் ரேணுகாஜமதக்கினி என்னும் ரிஷி தம்பதிகளுக்கு அனுக்கிரகம் செய்யவேண்டி பரசுராமராக அவதரித்தபோது, க்ஷத்திரியர்களை இருபத்தொரு தலைமுறை வரையில் கொன்று, அவர்களிடமிருந்து கைப்பற்றின நாடுகள் எல்லாவற்றையும் பிராமணர்களுக்குத் தானம் செய்துவிட்டு, தாம் தானம் செய்த பூமியில் வசித்தல் முறையன்றென்று கருதி, கடற்கரையிலுள்ள *ஸஹ்ய பருவதத்தின்மேலேறிக் கடலைநோக்கி ஓர் பாணமெய்ய, கடலரசனான வருணன் அஞ்சியோடி வந்து அஞ்சலிசெய்து ஆணையை எதிர்பார்த்து நிற்க, பரசுராமர் வருணனை நோக்கித் தாமிருந்து தவம் புரியவேண்டி, கோகர்ணத்திற்குத் தெற்கு, கன்னியாகுமரிக்கு வடக்கு, ஸஹ்ய பருவதத்திற்கு மேற்கு, மூன்று யோசனைதூரம் பூமியை விட்டகலவேண்டுமென்று கட்டளையிட, வருணனும் அவ்வாறே ஒதுங்கிச்சென்றனன்.

---

*இப்பருவதத்தைச் சையமால்வரையெனச் சேக்கிழார்நாயனார் திருத்தொண்டர்புராணம் திருநாட்டுச்சிறப்பு மூன்றாவது செய்யுளிற் குறிப்பிட்டுள்ளார். அச்செய்யுளைத் தலைக்காவேரி விவரத்திற் காண்க.

சக்கரவர்த்தி திருமகனார் இராவணனைக் கொன்று தம் மனைவியை மீட்க இலங்கைக்குச் செல்லவேண்டியிருந்தகாலத்தில், கடலிலணைகட்டுவதற்கு வேண்டிய சிறிதளவு பூமியைக் கேட்க ஏழுநாள் வரையில் புல்லணையிற்கிடந்து வேண்டினர் என்பதையும், பாசுராமர் தாம் ஒருவரிருந்து தவம்செய்வதற்குச் சுமார் 500 மைல் நீளமும் 50 மைல் அகலமும் உள்ள பூமியை விட்டுக்கொடுக்கும்படி வருணனை அம்புமுனையில் வருத்தி, அதிகாரத்தோடு ஆணையிட்டதையும் ஒப்பிட்டுப்பார்த்தால், அவதார கர்த்தா ஒருவரேயாயினும் குலம் வேறுபட்டதால் குணமும் வேறுபட்டதென நினைத்தல்வேண்டியிருக்கின்றது.

மேற்சொன்னவாறு பரசுராமரால் நிருமிக்கப்பட்ட பூமிக்குப் பாசுராமக்ஷேத்திரமெனும் பேர் வழங்கலாயிற்று இப்புனித பூமியானது குமாரதாரா (Kumaradhara) நேத்திராவதி, சுவர்ணநதி, பாபவிநாசினி, சக்ஷஷ்மதி, பயஸ்விணி, சுக்திமதி, கங்காவளி, சீதாநதி, இந்திராணிநதி முதலிய புண்ணியநதிகளும், வேதாசலம் விமானகிரி கிருஷ்ணகூடம் கஜகிரி முதலான பருவதங்களும், கர்நாடகம் தௌலவம் (துளுவம்) ஹவ்யகம் கேரளம் முதலிய தேசங்களும், உடுப்பி சுப்பிரமணியம் மங்களூர் திருச்சூர் ஜனார்த்தனம் அனந்தசயனம் முதலான திவ்விய க்ஷேத்திரங்களும், மத்வசரோவரம் (Madhva—Sarovar) சந்திரபுஷ்கரணி கபில தீர்த்தம் கண்ணுவதீர்த்தம் இந்திராணிதீர்த்தம் ஆமலகதீர்த்தம் தண்டதீர்த்தம் முதலிய புண்ணிய தீர்த்தங்களும் அடங்கியதும், க்ஷாமாதியுபத்திரவாகிதமானதும், பத்திமுத்திபுண்ணியம் இவைகளை அளிக்கவல்லதும், ஸத்தர்ம ஸதாசார ஸதாரோக்கிய சோபிதமுள்ளதுமான நூதன பூமியாக விளங்கிற்று.

## ரூப்யபீடம். அநந்தாசனம்.

இந்நூதன பூமியைப் பரிபாலிக்கும் பொருட்டு ஸ்ரீபார்க்கவர் தர்மசிந்தனையுள்ளவனும் தம்மிடம் பூரணபத்தியுள்ளவனுமான ராமபோஜன் என்பவனை அரசனாக நியமித்தார். அவனும் அந்நாட்டில் செங்கோல் வழுவாது அரசுபுரிந்து வந்தனன். சிறிது காலத்திற்குப்பிறகு அவன் அசுவமேதயாகம் செய்யக் கருதி, அதற்கு வேண்டிய பொருளைத் தனக்கு பாசுராமர் பூமியினின்று கொடுத்தருளுவாரென்ற திடபத்தியுடன் வேத

பிராமணர்களை வரவழைத்து, அவர்களைக் கொண்டு பூமியைச் சோதிக்க ஆரம்பித்தபோது, பூமிக்குள்ளிருந்த ஒரு பெருஞ்சர்ப்பம் அவ்விப்பிரர்களால் கையாளப்பட்ட ஆயுதங்களின் வாய்ப்பட்டிறந்தது. அதைக் கண்ணுற்ற அரசன் மிகவும் மனவருத்தமுற்று பரசுராமரை வழிபட, அவரும் அவன்முன் தோன்றி, அங்கிறந்தது உண்மையான சர்ப்பம் அன்றென்றும், அவன் யாகத்லைதக் கெடுக்க நினைத்திருந்த அசுரன் ஒருவன் சர்ப்பரூபமாய் வந்து மாண்டானென்றும், அதைக்கொன்றதால் அவனுக்கு சர்ப்பஹத்தி நேராதாயினும், உலகப்பழியை நீக்கிக்கொள்ளத் துலாபாரமேறி அவன் நிறையளவு தங்கத்தைப் பிராமணர்களுக்குத் தானஞ்செய்துவிட்டு, நான்கு திசைகளிலும் நான்கு சர்ப்ப தேவதைகளையும், நான்கு துர்க்கைகளையும் பிரதிஷ்டைசெய்து பூசித்துவருதல் வேண்டுமென்றும் கட்டளையிட்டுச் சென்றனர். அவ்வரசனும் அவ்வாறே தன் நிறையளவு தங்கத்தைப் பிராமணர்களுக்கீந்தனனென்றும், அவர்கள் அதை எற்றகாரணத்தால் அந்நாட்டுப் பிராமணர்களுக்குத் தேளலவர் என்றும், தன்னிறையளவு பொன்னீந்த காரணத்தால் அவ்வரசன் சந்ததியாருக்குத் துலாராஜர் என்றும், பேர் உண்டானதாகக் கருதப்படுகின்றது. இவ்வரசனல் பிரதிஷ்டை செய்யப்பட்ட சர்ப்பதேவாலயங்கள் இக்காலத்தில் முச்சில்கோடு, தாங்கோடு, மாங்கோடு, ஆரிதோடு என்னும் ஊர்களிலும், துர்க்கையாலயங்கள், *கடியாளி பைஹூரு (Bilur) கனர்ப்பாடு, புத்தூரு என்னும் ஊர்களிலும் இருக்கின்றன. இவ்விதமாக அவ்வரசன் அறியாமற் செய்த பாவத்தைப் பிராயச்சித்தத்தாற் போக்கினபிறகு, அசுவமேத யாகாதிகளை முறைப்படி முடித்து, தான் செய்த எல்லா நற்கருமங்களையும் பரசுராமருக்கு அர்ப்பணஞ்செய்துவிட்டு முன்போல் அரசாண்டிருந்தனன். அதை யறிந்த பரசுராமரும் அவ்வரசன்

*இவ்வூருக்கு கடேஹள்ளி என்னும் பேரும் வழங்குகின்றது. கன்னடத்தில் ஹள்ளியென்பது தமிழில் பள்ளி என்றும் ஊர் என்றும் பொருள்படும். அனேகமாய்த் தமிழில் "ப" என்னும் எழுத்துடன் ஆரம்பிக்கும் மொழிகள் கன்னடத்தில் "ஹ" என்னும் எழுத்துடன் ஆரம்பிப்பதைக் காணலாம். பசு = ஹசு; பால் = ஹாலு; புலி = ஹலி; பணம் = ஹண; பெண் = ஹெண்ணு; போ = ஹோகு; என்னும்மொழிகளை ஒப்பிட்டுப் பார்க்க.

பக்திக்கு மெச்சி அவனுக்கு சிவலிங்கரூபமாகச் சேவை சாதித்தனர் என்றும், அக்காரணம்பற்றி இவ்வூருக்கு ரூப்யபீடம் என்ற பேரும், சர்ப்பராஜனுகிய அனந்தனும் அவ்வாசனுல் பூசிக்கப்பட்டு இவ்வூரிலேயே வசித்து வந்த காரணம்பற்றி அனந்தாசனம் என்னும் பேரும், வழங்கலாயின என்றும் சொல்லப்படுகின்றது.

மேலும், *வேதாரணியக்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் வேதநாராயணமூர்த்தியைக் குறித்துத் தவம்புரிந்த பரத்துவாஜகுலோத்பவனுன ஓர் பிராமணனுக்கு அனுக்கிரகம் செய்ய வேண்டி, மகாவிஷ்ணுவானவர் இத்தலத்தில் அனந்தர்சனத்தில் இலிங்கரூபமாக ஆவிர்ப்பவித்தனர் என்றும், அதனுல் இத்தலத்திற்கு அனந்தேசுரம் என்னும் பெயருண்டானதாகவும் சொல்லப்படுகின்றது. காரணம் எதுவாயினும், மகாவிஷ்ணுவானவர் சிவலிங்கரூபமாகக் காட்சிகொடுத்தருளினது உண்மையென்று தெரிவதால், பகுக்கப்படாத ஓர் பொருளைப் பகுத்து வேற்றுமை பாராட்டல் வீணென்று வெளியாகின்றது.

## உடுப்பிநாமோற்பத்தி.

ஆதிகாலத்தில் சந்திரனுனவன் குருபத்தினியான தாரையைக் கற்பழித்த தோஷத்தாலும், தக்ஷப்பிரஜாபதியின் சாபத்தாலும் தன்கலைகளை இழந்து வருந்தி, இத்தலம் வந்து தவமியற்றித் தன்கலைகளை மறுபடியும் வளரப்பெற்ற காரணத்தால், உடுபன் (நட்சத்திரபதியான சந்திரன்) தவமியற்றிய க்ஷேத்திரம் உடுப்பி என்னும் பேர் பெற்றதாகச் சொல்லப்படுகின்றது. சந்திரன் (அப்ஜன்) இருந்து தவமியற்றிய காட்டிற்கு அப்ஜாரணியம் என்றும், அவனுல் நிருமிக்கப்பட்ட தீர்த்தத்திற்கு அப்ஜாரணிய தீர்த்தம் என்றும், சந்திரபுஷ்கரணி என்றும் பேர்வழங்கினதாகவும், இவ்வனம் ஊருக்கு மேற்கிலிருந்து, பிற்காலத்தில் ஊரோடு சேர்ந்து குடியிருப்பிடமாக மாறிவிட்டதாகவும் தெரிகிறது.

சுவர்ணகூடம். சுவர்ணநதி:— இத்தலத்தின் ஈசானிய திசையில் சுவர்ணகூடம் என்னும் குன்றிருக்கின்றது. இமயமலை

---

*குறிப்பு:— இத்தலம் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருமறைக்காடு என்னும் வேதாரணியமாயிருக்கலாம் என்று நம்புதற்கிடமில்லையாதலின், இது எந்த வேதாரணியமாயிருக்கக்கூடும் என்று விளங்கவில்லை.

யினின்று கங்கை பிரவகித்து வருவதுபோல், இக்குன்றினின்று பிரவகிக்கும் சுவர்ணநதியானது, இதனருகிலுள்ள ஸஹ்யாத்ரி என்னும் குன்றில் உற்பத்தியாகிவரும் சீதாநதியுடன் கலந்து, மேற்கு நோக்கி ஓடிக் கடலில் விழுகின்றது. இவ்விரு நதிகளும் கலக்குமிடமும், கலந்தபிறகு கடலில் விழுமிடமும், ஸ்நானத்திற்கு விசேஷமான இடங்களெனக் கருதப்படுகின்றது. மேலே சொல்லப்பட்ட இராமபோஜன் என்னும் அரசன் தான் அசுவமேதயாகம் செய்து முடித்தபிறகு, இச்சுவர்ணநதியில் அவபிருதஸ்நானம் செய்து ஏராளமான பொன்னைப் பிராமணர்களுக்கு வழங்கினதாகவும், அவர்கள் சுமக்கக்கூடியவரையில் எடுத்துக்கொண்டு மீந்ததை அம்மலைமீதே *விட்டுப்போனதாகவும், அதற்கறிகுறியாக இக்காலத்தும் அம்மலையில் தேடித்திரியும் ஏழை ஜனங்களுக்கு ஒருநாள் உணவுக்குவேண்டிய அளவு பொன் கிடைக்கிறதென்றும் சொல்லப்படுகின்றது.

இந்திராணிதீர்த்தம்:— அசுரரால் துரத்தப்பட்ட தேவேந்திரன் தன் குலகுருவான பிரகஸ்பதியின் ஆணையின்படி தன் பத்தினி இந்திராணியுடன் இத்தலம் வந்து, இங்குள்ள வேதாசலம் என்னும் குன்றின்மேலிருந்து தவம்புரிந்து, ஸ்ரீ அனந்தேசுவரர் அனுக்கிரகத்தால் தன் பூர்வபதவியை மீளவும் பெற்றான் என்றும், அவன் தவஞ்செய்தவிடத்தில் அவனால் நிருமிக்கப்பட்ட தீர்த்தம் இந்திராணி தீர்த்தமாக விளங்குவதாகவும் சொல்லப்படுகின்றது. இந்தத் தீர்த்தமானது ஊருக்கு நேர் கிழக்கில் சுமார் 2 மைல் தூரத்திலுள்ள வேதாசலம் என்னும் குன்றிலிருந்து ஒரு சிறு அருவியாக வந்து, அங்கிருக்கும் ஒரு சிறு குண்டத்தில் வீழ்ந்து, அதினின்றும் இந்திராணிநதி என்னும் பேருடன் வெளிப்படுகின்றது. இத்தீர்த்தத்தில் ஐப்பசி கார்த்திகை மாதங்களில் ஸ்நானஞ்செய்தல் விசேஷம். இத்தீர்த்தம் உற்பத்தியாகும் இடத்தில் அனுமார்கோவில் ஒன்றும், சசிதேவியின் கோவில் ஒன்றும் இருக்கின்றது. இவைகளுக்கருகில் யாத்ரீகர்கள் சமைத்துச்

---

*அனேக அரசர்கள் அந்தணர்கட்குத் தங்கள் பொக்கிஷங்களைத் திறந்துவிட்டுத் தாராளமாய்த் தானஞ்செய்தனரென்று அனேக புராணங்களில் சொல்லியிருப்பதைக் கற்றும் கேட்டும் இருக்கின்றோமேதவிர, கொடுத்த பொருளைப் பிராமணர்கள் எடுத்துச் செல்லாது விட்டுப்போனதைக் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை.

சாப்பிட வசதியான கொட்டகைகள் இருக்கின்றன. குளிர்ந்த சோலையும் பரிசுத்தமான ஜலமுமிருப்பதால், அவ்விடம்விட்டு ஊர்போக வருந்தாதாரிலர். இத்தீர்த்தத்திற்குப் போகவிரும்புவோர், ஊரின் தென்கீழ்மூலையிலிருந்து கிழக்கேபோகிற சாலை வழியாகச்சென்று, சற்றுதூரத்தில் அதிலிருந்து பிரிகின்ற வயற்பாதைவழியாகச் செல்லலாம்; அல்லது உடுப்பியிலிருந்து கார்க்காலா போகிற சாலைவழியாக ஒரு மைல் ஆறுபர்லாங்கு சென்று, அங்கிருந்து தெற்கேபோகிற காட்டுப்பாதைவழியாகப்போகலாம். இவைகளுள் முன்னதுதான் நேர்ப்பாதை.

பாபவிநாசினி. சம்புசைலம்:— முன் சொல்லப்பட்ட இராமபோஜனுடைய வம்சத்திற் பிறந்த மயூரவர்மன் என்னும் அரசன் தன் அரசாட்சியை உடுப்பியிலிருந்து அதற்குத் தெற்கில் 3 மைல் தூரத்திலிருக்கும் உத்யாவரம் (உதயபுரம்) என்னும் ஊருக்கு மாற்றிக்கொண்டுபோனதாகத் தெரிகின்றது. இவ்வூருக்கருகில் மகாபவித்திரமான பாபவிநாசினி நதியும், சக்ஷுஷ்மதி (Chakshushmati) நதியும், சம்புசைலமென்னும் மலையும் இருக்கின்றன. சம்புசைலம் என்னும் பேருக்கேற்ப அம்மலையின் உச்சியில் சம்புவின்கோவில் ஒன்று இருக்கின்றது. அடிவாரத்தில் காயத்திரி, சாவித்திரி, சரஸ்வதி தேவாலயங்கள் இருக்கின்றன.

விமானகிரி (குஞ்சாறு):— பரசுராமரானவர் பக்தாபீஷ்டதானசமர்த்தளான துர்க்காதேவியை ஒரு மலையின் சிகரத்தில் பிரதிஷ்டைசெய்தபோது, அவ்வுற்சவத்தைக்கண்டு களிக்கத்தேவலோகத்திலிருந்து எல்லாத் தேவர்களும் தங்கள் தங்கள் விமானங்களிலேறிக்கொண்டு வந்து, பார்க்கவரையும் துர்க்காம்பிகையையும் தரிசித்துவிட்டு, மீண்டும் தங்களிருப்பிடம் செல்லப்புறப்பட, அவ்விமானங்கள் இருந்தவிடம்விட்டகலாதிருந்ததைக் கண்ட தேவர்கள் பரசுராமரிடம் சென்றிரந்துவேண்ட, அவர் எல்லாத்தேவர்களுடைய விமானங்களும் வந்து தங்கியிருந்த காரணம்பற்றி, அம்மலைக்கு விமானகிரி என்னும் பெயரிட்டுத் தேவர்களுக்கு விடைகொடுத்தனுப்பினர். இவ்விமானகிரியில் பரசுராமரால் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிற துர்க்காதேவியை விதிப்படி பூசித்த எந்த சுமங்கிலியும் அமங்கிலியாகாள் என்பது

புராணப் பிரசித்தம். இத்தலம் இக்காலத்தில் குஞ்சாறு என்னும் பேருடன் ஸ்ரீ அதமாருமடாதிபதியின் விசாரணையில் இருந்து வருகின்றது. இம்மலைக்குப் போகவிரும்புவோர் உடுப்பியிலிருந்து மங்களூர் போகும் சாலையோடு சென்று, நான்காவது மைலி லுள்ள காட்பாடி என்னும் கிராமத்தின் கடைத்தெருவிலிருந்து பிரிந்து கிழக்கேபோகிற சாலைவழியாகச் செல்லல்வேண்டும். விமானகிரி காட்பாடியிலிருந்து 1½ மைல் தூரத்தில் இருக்கின்றது. தேவி மிக்கவரப்பிரசாதியெனக் கருதப்படுகின்றது. தெரிசித்தல் அவசியம்.

பாஜகக்ஷேத்திரம்:— பரசுராமரானவர் ஒருநாள் விமான கிரியின்மீது ஏறி நான்கு திசைகளிலும் சுற்றிப்பார்த்தகாலத்தில், கண்ணுக்கெட்டினமட்டில் ஒருதுளி ஜலமாவது காணப்பட வில்லை. நீர்சூழ்ந்த நிலவுலகமெனப் புகழ்பெற்ற பூவுலகில் எங்கும் நிலம், நீர், தீ, காற்று, வெளி எனப்படும் ஐந்து பூதங் களும் நிறைந்திருக்க, தாம் சிருஷ்டித்த இப்புத்துலகில்மட்டும் அப்பு என்னும் பூதம் தப்பியோடி ஒளிந்திருந்ததைக் கண்ட பரசுராமர், தாம் முற்காலத்தில் அம்புபோட்டு வருணனை வருத்தி, அவன் உறைவிடமாகக்கொண்டிருந்த இடத்திற் சிலபாகத்தைப் பெற்றுக்கொண்ட காரணத்தால், வருணன் மனக்கொதிப்புற்று அப்பாகத்தில் தன் வாசனையுமில்லாது விலகிக்கொண்டனனே வென எண்ணிச்சினந்து, விமானகிரியைத் தன் பாதத்தால் அழுத்த, அம்மலை பூமியில் அழுந்தி, தேவர்கள் விமானங்களோடு உலவத்தக்க உயரத்திலிருந்து இப்போதிருக்கும் சுமார் 300 அடி உயரத்திற்குத் தாழ்ந்ததென்றும், உடனே பார்க்கவர் கீழ்த்திசை யில் தன் கோடரியை எறிந்து, ஜனங்களின் பஞ்சமாபாதகங்களை யும் நீக்கக்கூடிய பரசு தீர்த்தத்தையும், தெற்கில் வில்லையூன்றி, போர்க்களத்தில் இறப்பவர்களை வீரசொர்க்கத்திற்கு அனுப்பக் கூடிய தனுத்தீர்த்தத்தையும், மேற்கில் கதையால் அடித்து, மானிடர்கள் தங்கள் சதகோடி ஜன்மங்களிலும் செய்த பாவங் களைப் போக்கவல்ல கதாதீர்த்தத்தையும், வடக்கில் பாணப்பிர யோகம்செய்து, பாதாளத்தில் சர்ப்பராஜனுடைய நகரத்திலிருந்த போகவதி என்னும் கங்கையை மேலே வரவழைத்ததனால் ஏற் பட்ட பாணதீர்த்தத்தையும், உண்டாக்கித் தம் நாட்டிலிருந்த நீர்க்குறையை நீக்கினரென்றும் சொல்லப்படுகின்றது. இந்நான்கு

புண்ணிய தீர்த்தங்களிலும் ஒரேநாளில் ஸ்நானஞ்செய்து துர்க்கா தேவியைத் தரிசித்தால், பூமியை வலம்வந்து கங்கை முதலிய எல்லாத்தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்வதாலுண்டாகும் பலன் கிடைக்குமென்று கருதப்படுகின்றது. இக்காரணம் பற்றியே இத்தலத்திற்குப் பாஜகக்ஷேத்திரம் என்று பேர்வந்ததாகத்தெரிகின்றது.

இப்புண்ணியதலந்தான் சமயாசாரியர்களுள் ஒருவரான ஸ்ரீமத்துவாசாரியார் அவதரித்த இடம். இம்மலையில் அப்பரமாசாரியருடைய பாதங்களும், அவரால் செய்யப்பட்ட அநேக பாலலீலைகளின் அடையாளங்களும், அவர் தம் தாயாருக்காக வரவழைத்த கங்கையும் இக்காலத்தும் இருக்கக்காணலாம். சுவாமிகளுக்குப் பூர்வாசிரமத்தில் வாசுதேவர் என்ற நாமம் இருந்தகாரணத்தால், தம் தாயாருடைய சந்நிதியிலிருக்கிற அக்கங்கைக்கு வாசுதேவதீர்த்தமெனப் பேர்வழங்குகின்றது. இவைகளைத்தவிர ஆசாரியசுவாமிகள் குழந்தையாயிருந்தபோது தலைகீழாக நட்ட மரமும் இருக்கின்றது. இத்தலத்திற்கு வரும்வழியிலுள்ள குன்றில், அவருடைய பாலியத்தில் அவரைக்கொல்ல வந்த மணிமந்தன் என்னும் சர்ப்பராஜனுடைய படத்தை மிதித்துக்கொன்ற அடையாளங்களைக் காணலாம் இத்தலம் விமான கிரிக்குக் கிழக்கில் சுமார் ஒருமைல் தூரத்தில் இருக்கின்றது. இது மிக்க அழகான கோவிலுடன் "படமேடம்" என்று பிரசித்தமாயிருந்து, தற்காலத்தில் ஸ்ரீகானூருமடாதிபதியின் விசாரணையில் இருக்கின்றது. இவ்வூரிலிருக்கும் ஆசாரியசுவாமிகளுடைய சுந்தரவிக்கிரகம் அவரிடம் பரமபக்தியோடிருந்த வாதிராஜதீர்த்த சுவாமிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகத் தெரிகின்றது. இவ்விடத்தில் அனந்தபத்மநாபர் ஆலயமும் இருக்கின்றது.

தண்டதீர்த்தம்:— ஆசாரியசுவாமிகள் தமக்குப் பூர்வாசிரமத்தில் வேதாப்பியாசம் செய்துவைத்த குருவிற்குத் தட்சிணாரூபமாக அவர் வமிசத்தாருக்குப் பயன்படும்படி இப்புண்ணிய தீர்த்தத்தை நிருமித்தனரெனச் சொல்லப்படுகின்றது. இதிலிருந்து இப்பக்கத்தில் ஜலம் கிடைப்பது எவ்வளவு அருமையென்று தெரிந்துகொள்ளலாம். இத்தீர்த்தம் மேற்கண்ட பாஜக க்ஷேத்திரத்திற்கு 2 மைல் தூரத்தில் இருக்கின்றது. உடுப்பியி

லிருந்து மங்களூர் போகும் சாலையில் மூன்றாவது மைலுக்கு நேர்கிழக்கில் அரைமைல் தூரத்தில் இருக்கின்றது.

ஒடபாண்டேசுவரம் (Odabhandeshwar):— இத்தலம் உடுப்பிக்கு மேற்கில் சுமார் 4 மைல் தூரத்தில் உள்ள மல்பி (Malpi) என்னும் துறைமுகத்திற்கு வடக்கில் சுமார் ஒருமைல் தூரத்தில் இருக்கின்றது. இவ்வூரில் ஸ்ரீமத்துவாச்சாரியசுவாமிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பலராமர்கோவிலும், அதற்கெதிரில் இராமபுஷ்கரணியென்ற ஒரு சிறு திருக்குளமும் இருக்கின்றது. இத்தலத்தில் சமுத்திரஸ்நானம் விசேஷம். சூரியோதயத்தில் இராமபுஷ்கரணியில் முழுகி, சமுத்திரஸ்நானம் செய்து, திலதர்ப்பண ஹிரணியசிரார்த்தாதிகளை முடித்துக்கொண்டு, உடுப்பிக்குப்போகும் வழியிலுள்ள கூடலூர் என்னும் சிற்றூரில் இருக்கின்ற மத்துவசரோவரத்தில் ஸ்நானஞ்செய்து, அங்கெழுந்தருளியிருக்கும் பெருமாளைச்சேவித்தவர்கள் தங்கள் முன்பிறப்புக்களில் செய்திருந்த பாவங்கள் எல்லாம் நசியப்பெற்று, துவாரகாபுரியில் கோமதி சங்கமத்தில் ஸ்நானம் செய்த பலனும், மற்றெல்லாப் புண்ணிய தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்த பலனும் அடைவார்களெனச் சொல்லப்படுகின்றது.

ஆனால், நம் தென்னாட்டிலுள்ள அழகர்கோவிலும் திருவேங்கடமும் போலவே இந்த பலராமர்கோவிலும் ஆதியில் சுப்பிரமணியராலயமாக இருந்ததாகவும், அதை மத்துவாச்சாரியார் பலராமர்கோவிலாக மாற்றினர் என்றும் சொல்லப்படுகின்றது. இதற்காதாரமாக, இக்கோவிலிலுள்ள மூலவிக்கிரகத்திற்கு ஒரு முகமிருப்பினும், உற்சவவிக்கிரகத்திற்கு ஆறுமுகங்கள் இருக்கின்றன. மகாவிஷ்ணுவுக்காவது அவருடைய அவதாரமான பலராமருக்காவது எக்காலத்திலாவது ஆறுமுகங்கள் இருந்ததாக மத்துவமதத்தினர் தக்க ஆதாரங்களைக்கொண்டு ஸ்தாபித்தாலொழிய, இதை பலராமர் கோவிலென்று சொல்ல முன்வருவது தங்கள் கையில் மாங்கனியை வைத்துக்கொண்டு, அதைப் பலாக்கனியென்று சொல்வதையொக்கும். தவிர, இக்கோவிலில் நடக்கும் உற்சவங்கள், இக்காலத்தும் முருகனுக்குகந்தனவாகிய கந்தர்சஷ்டி, கார்த்திகைத்திங்களின் கார்த்திகைநாள், பங்குனி உத்திரம் முதலிய காலங்களிற்றான் நடைபெறுகின்றன. முருகவே

ளாயினும் மகாவிஷ்ணுவாயினும், சிவபிரானுயினும், யாவரும் "நாம் வணங்குங் கடவுளாரே" என்று நினையாமல், சுப்பிரமணியர் கோவிலைத் திருமாலின் கோவிலாகவும், திருமாலின் கோவிலைத் *தியாகர் கோவிலாகவும், திருமாலின் கோவில்களிலேயே வடகலைக்கோவிலைத் தென்கலையாகவும், தென்கலைக்கோவிலை வடகலையாகவும் மாற்றப்புகுந்த பெரியார்களின் கருத்தை அறியக்கூடவில்லை.

இப்பலராமர் கோவிலின் வடக்குப் பிரகாரத்திலுள்ள கிணற்றின் அடியிலுள்ள கற்பாறையில், மாட்டுத்தண்ணீர்த் தொட்டிபோன்ற ஒரு சிறுபள்ளமிருக்கின்றது. அதில் ஒரு குடம் நிறையக்கூடியவளவு ஜலந்தான் ஊறுகின்றது. அந்நீரை இறைத்தெடுத்துவிட்டு, மறுபடியும் குடத்தைக் கிணற்றுக்குள் விடுவதற்குள் ஒரு குடம் ஜலம் ஊறிவிடுகின்றது. இறைக்காமலிருந்தாலும் ஒரு குடம் ஜலத்திற்கு மேல் ஊறுவதில்லை. இது எல்லாவிஷயத்திலும் திருச்செந்தூர் நாழிக்கிணற்றை ஒத்திருக்கின்றது. உடுப்பிக்கு வருவோர் இதைப் பார்ப்பதவசியம்.

## ஸ்ரீ மத்துவாசாரியார் ஜனனம்.

ஆதிகாலத்தில் பாத்துவாசமுனிவர் தம்மிடத்தில் ஸ்ரீ வாயுதேவரானவர் அவதரிக்கவேண்டுமென்ற அவாவுடன் தவஞ்செய்திருந்து, அத்தவப்பயன் கிட்டுமாறு இவ்வுடுப்பிக்ஷேத்திரத்தில் தௌலவகுலத்திற் பிரசித்தமான மத்யகேஹநட்டேந்தில்லாயி (Madhyageha Naddentillayee) என்னும் வம்சத்திற் பிறந்தனர். அவர் வேதவதியென்னும் கற்புக்கரசியை மணந்து இரண்டு ஆண்குழந்தைகளையும் ஒரு பெண்குழந்தையையும் பெற்றனர். தகுந்த வயதுவருவதற்குள் அவ்விரு ஆண்மக்களும் இறந்துவிடவே, அன்னைதந்தையர் இருவரும் துயரக்கடலிலாழ்ந்து, மிருகண்டு மகரிஷியானவர் எவ்விதம் சிவபெருமானை நோக்கித் தவம்புரிந்து மார்க்கண்டேயரைப் பெற்றனரோ, அவ்விதமே தாங்களும் நற்குண நல்லொழுக்கமுள்ள ஒரு புத்திரனைப் பெறவேண்டி, அனந்தேசுவரரை நோக்கித் தவம்புரிந்தனர். அதே

*குறிப்பு:—திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் தியாகப்பெருமானின் பீடத்திற்குப் பின்புறமிருக்கும் விமானம் மகாவிஷ்ணுவின் உறைவிடமெனக் கருதப்படுவதையறிக.

சமயத்தில் சனகாதிமுனிவர்கள் பாம்பரையில் பிறந்தவரான அச்சுதப்பிரேட்சதீர்த்தர் என்னும் பெரியார், தாம் அறிந்திருக்கும் உண்மைத் தத்துவங்களை உபதேசிக்கத்தக்க சீடனொருவன் வேண்டுமென அவ்வனந்தேசுவரரையே வழிப்பட்டிருந்தனர். இவ்விருவர்கள் மனோபீஷ்டத்தையும் பூர்த்திசெய்யவெண்ணின எம்பெருமான் தம் அம்சமான பிராணதேவரை வேதவதியம்மையின் கர்ப்பத்தில் அவதரிக்கும்படிக் கட்டளையிட, அவரும் அவ்வாணையைச் சிரமேற்கொண்டு, கலியுகாதி 4339ல் விளம்பி வருஷம் ஐப்பசி மாதம் சுக்கிலபட்சம் தசமியோடுகூடிய புதன்கிழமையன்று பாஜகக்ஷேத்திரத்தில் அவதரித்தனர். தாய்தந்தையர் அவரை வாசுதேவர் என்ற திருநாமமிட்டழைத்தனர். இவர் குழந்தைப் பருவத்திலேயே மிதமிஞ்சிய புத்திநுட்பத்துடன் விளங்கித் தம்முடைய உபநயனத்திற்குப் பின்பு முறைப்படி வேதாப்பியாசம் செய்து, மேற்சொல்லப்பட்ட அச்சுதப்பிரேட்ச சுவாமிகளிடம் சந்நியாசம் பெற்று, துவைதபாஷியங்களை இயற்றி, இமயமலையின் உச்சியிலிருக்கும் பதரிகாசிரமம் சென்று, அங்கிருந்த *வியாசமுனிவருக்குச் சீடராகி, அவர் ஆணையின்படி துவைதமதத்தை நிலைநாட்டினரென்று தெரிகிறது.

## உடுப்பியில் கிருஷ்ணப்பிரதிஷ்டை.

ஆதிகாலத்தில் கலியுகவாரம்பத்தில் பிருகுமகரிஷி முதலான தவசிரேஷ்டர்கள் எம்பெருமானிடம் சென்று, கலியின்

---

*பதரிகாசிரமத்திலிருந்து வசுதாரை என்னும் புண்ணியதீர்த்தத்திற்குப் போகும்பாதையில், கைலாசபர்வதத்திலுள்ள மானசசரோவரம் என்னும் தெய்வீகதீர்த்தத்தினின்று இழிந்துவருவதாகக் கருதப்படுகிற சரசுவதி என்னும் புண்ணியநதியானது விஷ்ணு கங்கையுடன் கலக்குமிடத்தில், வியாசரிருந்து வேதங்களை எழுதினதாகச் சொல்லப்படுகிற "வியாஸ குப்ஹ" (Byas Gupha) என்னும் பேருள்ள ஒரு குகையும், அதனருகில் வேதங்கள் கல்லாய்ச் சமைந்திருக்கிறதாகச் சொல்லப்படுகிற ஒரு சிறு கற்பாறையும் இருப்பதை இன்றும் காணலாம். இப்பாறையானது மெல்லிய பலகைகள்போன்ற கடப்பைக்கற்கள் ஒன்றன்மேலொன்றாக அடுக்கி வைத்ததனால் உண்டானதுபோல் தோற்றுகிறது. அவைகள் வேதங்களின் ஏடுகளெனக் கருதப்படுகின்றன. இதையும், சுவர்க்கபூமியெனக் கருதப்படும் இமயமலையின் மேலுள்ள இன்னம் அனேக அற்புதங்களையும், நேரிற் பார்ப்போர் கடும் நாஸ்திகராயினும் பரமாஸ்திகராய் மாறிவிடுவர் என்பதில் ஐயமில்லை. அவ்வற்புதங்கள் இன்னவென்பதை இப்புத்தகம் இரண்டாம்பாகத்தில் விரிவாய்க்காணலாம்.

கொடுமையினுல் தாங்கள் பூமியில் வசிக்கமுடியாதவர்களாய்த் தவிப்பதையுணர்த்தித் தங்களைக் காத்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, பக்தானுகூலரான வைகுண்டபதி தம் அடியார்கள் படும் கஷ்டத்தைப் பார்த்துச் சகியாதவராய், தாம் பார்க்கவ க்ஷேத்திரத்தில் கண்ணனுக வந்திருந்து ஜீவகோடிகளின் மனக்குறையை நீக்குவதாக வாக்களித்தனர். இஃதிற்றுக, துவாரகையில் தன் தேவிமார்களான ருக்மணி சத்தியபாமை யுடன் கண்ணபிரான் அரசுபுரிந்திருக்கும்போது, தேவகி யம்மையார் தம் அருமைத்திருமகனையணுகி, "குழ ாய்! அதிவினோதமான உன் பாலலீலைகளையெல்லாம் யசோதை ேவி யார் கண்ணுற்றனரேதவிர, யான் அவைகளில் ஒன்றை இ னும் பார்த்தானந்திக்கக்கூடாத பாவியாயினனே." என்று ேருந்தி யதைக் கண்ட குசேலரட்சகனுன கோபாலன், அதிசுந்தர மான பாலரூபங்கொண்டு, தன்தாய் கடைந்த தயிரை வாரிப் புசித்தும், உறியிலிருந்த பாற்பானைகளையுடைத்து அவைகளினின் றொழுகும் பாலைப்பருகியும், தெருவிலுள்ள மண்ணளைந்துண்டும், பல லீலாவினோதங்களை நடத்திக்காட்டித் தன் தாயை மகிழ்வித் தனன். இதையறிந்த ருக்மணிதேவியார், தமக்கும் சர்வலோகங் கட்கும் நாயகனுன எம்பெருமானுடன் ஏகாந்தத்திலிருந்தபோது தாம் எக்காலத்தும் இடையருது கண்டு களிக்கவேண்டி பால கிருஷ்ணமூர்த்திபோன்ற ஒரு விக்கிரகம் செய்து தந்தருளல் வேண்டுமென வேண்டிநிற்க, அவ்வம்மை வேண்டுதற்கிணங்கி, தேவகிநந்தனன் தேவதச்சனுன விசுவகருமாவை அழைத்து, தன் தேவியார் விருப்பத்தைப் பூர்த்திசெய்யும்படி கட்டளையிட் டனன். அவனும் அக்கட்டளைப்படி மத்துக்கோல், குழல் முதலிய மாயவிளையாட்டுக்கருவிகளைத் தாங்கிய திருக்கரங்களோடு அதிசுந்தரமான சாலக்கிராமச்சிலையொன்றை நிருமித்துக்கொடுத் தனன். அதைப்பெற்ற ருக்மணிதேவி முதலிய அஷ்டமஹிஷி களும் தங்கள் அந்தப்புரத்தில் வைத்துக்கொண்டு சர்வாராஜோப சாரத்துடன் ஆராதித்து வந்தனர். இறுதியில் கிருஷ்ணுவதார காரியங்கள் நடந்தேறி முடிந்தபின்பு, அருச்சுனன் அச்சிலையை எடுத்து ஓர் கோபிச்சந்தனக்கட்டியினுள்ளிட்டுப் பொதிந்து வைத்துச்சென்றனன். பிற்காலத்தில், தன் கப்பல் போதிய பார மின்றி மிதந்தோடக்கண்ட மைந்தனென்னும் வணிகன், அக்கட்

டியை எடுத்துத் தன் கப்பலிற்போட, அக்கப்பலானது, தாம் முன்னரே முனிகணங்களுக்குக் கொடுத்திருந்த வாக்கை நிறைவேற்றவெண்ணின வைகுண்டபதியின் கட்டளையாலும், தம் பக்தனைத் தேடியடையக்கருதிய பக்தவத்சலனுடைய விருப்பத்தினுலும், அதிவேகமாய் உடுப்பிக்குநேராக வந்துசேர்ந்தது. அதுவரையில் அதிவேகமாய்ச் சென்ற கப்பல், அங்குவந்ததும், ஒரு காரணமுமின்றி முன்னேக்கிச்செல்லாது தடைபட்டுநின்றுவிட்டது. இதன் மூலகாரணத்தையறியாத மைந்தன் மிக வருந்திப் படகேறிக் கரைசேர்ந்தனன்.

இதையெல்லாம் முன்னமே அறிந்திருந்த மத்துவாசாரியர், அன்று அதிகாலையில் எழுந்து, கடற்கரைசென்று, சமுத்திர ஸ்நானஞ்செய்து, நெடுங்காலமாகத் தன் தாய்தந்தையரைப் பிரிந்திருக்கும் குழவிபோன்று அதி ஆவலுடன் கண்ணன்வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தனர். கரைசேர்ந்த மைந்தன் ஆசாரிய சுவாமிகளையணுகி, "தவஞ்செய்துறையும் தருமசொரூபியே; என் கப்பல் காரணம் யாதுமின்றி கடலிற்செல்லாது தடைப்பட்டுநிற்கின்றது. இந்நிலையில் இன்னம் சிறிது நேரமிருந்தால், அலைகளின் கொந்தளிப்பால் கப்பல் மூழ்கிவிடும்போலிருக்கின்றது. அலைவாய்க்கரையில் ஆபத்சகாயராய் அமர்ந்திருக்கும் ஐய; அடியேனை எவ்விதத்தானும் காத்தருளல்வேண்டும்." என்றிரந்துவேண்ட, ஆசாரியசுவாமிகள் அவனுக்கு அனுக்கிரகஞ்செய்யும் மூலமாய், தாமும் அனுக்கிரகம்பெற விரும்பினவராய், தம் காவிக்கொடியை வீசிக் கப்பலையோடச்செய்தனர். அதைக்கண்ணுற்ற மைந்தன் அதியாச்சரியமடைந்து, அவர்பாதங்களிற் பன்முறையும் வீழ்ந்து வணங்கி, "வேதசொரூபியான விப்பிரோத்தமரே; மாதவனடிவணங்கும் மாதவமுனிவரே; என்னை இப்பெரும் விபத்தினின்றும் காத்தருளிய மகானுபாவரே; என் உடல் உயிர் பொருளாதிய எல்லாவற்றையும் உம்முடையதாக்கிக்கொண்டு, என்னை ஆண்டருளல்வேண்டும்." என்று துதிக்கவும், அவனைநோக்கி, "யானெனதென்னுஞ் செருக்கறுத்துப் பற்றற்ருன் பற்றினைப் பற்றவேண்டியிருக்கும் எமக்கு, நீ பற்ருேடு பெற்றிருக்கும் பொருள்கள் யாதினும் பற்றில்லை; உன்பற்றின்றி கப்பலுக்குப் பாரமாய் உருண்டுகிடக்கும் கோபிச்சந்தனக்கட்டியை எடுத்துவந்து கொடுத்துச்செல்." என்றுரைத்தனர். அவன் அவ்வாணைப்படித் தோணி

யேறிச்சென்று அக்கட்டியைக் கொண்டுவந்து அவரிடம் சேர்ப்பித்துவிட்டுச் சென்றனன். அவரும் அக்கட்டியை உடைத்து அதனுள்ளிருந்த கிருஷ்ணவிக்கிரகத்தை எடுத்துக்கொண்டு உடுப்பிக்குச் சென்றனர். செல்லும்வழியில் சற்றுநேரம் தங்கி இளைப்பாறினவிடம் இக்காலத்தில் ஆதியுடேப்பி என வழங்குகின்றது. உடுப்பிவந்து சேர்ந்ததும் அவ்விக்கிரகத்தைப் பிரதிஷ்டைசெய்து ஆலயம் அமைத்தனர் என்று தெரிகிறது. துவாரகாபதி துவாரகையினின்று வந்து தங்கியிருக்கும் காரணம்பற்றி இத்தலம் கலியுகத்துவாரகையாகக் கருதப்படுகின்றது.

## உடேப்பி அஷ்டமடஸ்தாபனம்.

உடுப்பியில் மேற்கூறியபடித் தம்மால் அதிபிரேமையோடு பிரதிஷ்டை செய்யப்பட்ட கண்ணபிரானுக்குப் பூசைநிவேதனங்கள் எக்காலத்தும் குறைவற நடத்திவரும் பொருட்டு மத்துவாசாரியர் தம்முடைய ஏகாந்தபக்தர்களும், வைகுந்தத்தில் துவாரபாலகர்களாயிருக்கும் ஜயவிஜயர்களுடைய அம்சங்களாய் பிறந்திருப்பவர்களுமான எட்டு சீடர்களை நியமித்தனர். மத்துவாசாரியர் அவருடைய பிரதமசீடர்களான விஷ்ணுதீர்த்தர் முதலியவர்களுடைய ஜீவிய காலத்திற்குப்பிறகு, மேலே சொன்ன எண்மரின் பாம்பரையில் உதித்தவர்களே ஆசாரியசுவாமிகளுடைய சங்கற்பத்தை அனுசரித்துப் பூசை முதலிய காரியங்களை நடத்திவந்தனர், பிற்காலத்தில் அதருமத்தைக்குறைக்கவும் தருமத்தை நிறைக்கவும் தோன்றியவரான வாதிராஜதீர்த்தசுவாமிகள் வாசுதேவனுக்குப் பக்தகோடிகளால் சமர்ப்பிக்கப்படும் எல்லா நிவேதனங்களையும் தங்கள் குருமூர்த்தியான ஆசாரியசுவாமிகள் மூலமாக அர்ப்பணஞ்செய்வதே முறையென்று கருதி, மத்துவாசாரியருடைய விக்கிரகமொன்றைக் கண்ணன் கோவிலின் வடக்குவாயிலண்டை பிரதிஷ்டைசெய்து, எல்லா நிவேதனப் பொருள்களையும் முதலில் அவரிடம் சேர்ப்பித்து, அதற்குப்பிறகு அவைகளைக் கண்ணனுக்கு நிவேதிக்கலாயினர். இவ்வழக்கத்தை இக்காலத்தும் பின்பற்றி நடத்திவருகின்றனர். மேற்சொன்ன எட்டு மடாதிபதிகளைத் தவிர, இன்னமும் அனேகர் கிரகஸ்தாசிரமத்தினின்று ஆசாரியசுவாமிகளிடம் சந்நியாசம் பெற்றனரென்றும், அவர்களில் முதன்மையானவர் பத்மநாபதீர்த்தரென்றும் தெரிகிறது.

உடுப்பியிலுள்ள எட்டுமடங்களின் பேர் முதலிய விவரங்கள்:-

| வரிசைத் தொ. | மடங்களின் பேர் | மடங்களின் ஸ்தாபனகர்த் தாக்கள் | ஆசாரிய சுவாமிகளால் கொடுக்கப்பட்ட விக்கிரகங் களின் பெயர் |
|---|---|---|---|
| 1 | பலிமாருமடம் | இரிஷிகேசதீர்த்தர் | ஸ்ரீராமர் |
| 2 | அதமாருமடம் | நரஹரிதீர்த்தர் | ஸ்ரீசதுர்ப்புஜ காளிங்க மர்த்தன கிருஷ்ணன் |
| 3 | கிருஷ்ணபுரமடம் | ஜனார்த்தனதீர்த்தர் | ஸ்ரீதுவிபுஜ காளிங்கமர்த் தன கிருஷ்ணன் |
| 4 | புத்திகேமடம் | உபேந்திரதீர்த்தர் | ஸ்ரீவிட்டல் மூர்த்தி |
| 5 | சீரூருமடம் | வாமனதீர்த்தர் | ஷை |
| 6 | சோதேமடம் | விஷ்ணுதீர்த்தர் | ஸ்ரீபூவராக மூர்த்தி |
| 7 | காணூருமடம் | இராமதீர்த்தர் | ஸ்ரீநரசிம்ம மூர்த்தி |
| 8 | பேஜாவரமடம் | அதோக்ஷஜதீர்த்தர் | ஸ்ரீவிட்டல் மூர்த்தி |

மேற்கண்ட எட்டு மடங்களையும் ஸ்தாபித்துக் கண்ணபிரானுக்குப் பூசை நிவேதனங்கள் யாதொரு குறைவின்றி நடக்கும்படி வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டு, பதரிகாசிரமம் சென்று அங்கெழுந்தருளியிருந்த வியாஸமுனிவரிடம் சீடராயிருந்து, அவரிடமிருந்து பெற்றுவந்த சாலக்கிராமச்சிலைகளில் ஒன்றை சுப்பிரமணிய க்ஷேத்திரத்திலும், மற்றொன்றை உடுப்பிக்கும் சுப்பிரமணியத்திற்கும் நடுவிலுள்ளதும், தற்காலத்தில் நட்டந்தாடி (Naddantadi) என்று வழங்குகிறதுமான மத்யவாட (Madhya-vata)என்னும் தலத்திலும், பிரதிஷ்டை செய்துவைத்து, ஆசாரிய சுவாமிகள், அதிகாலையில் உடுப்பியிலும், நடுப்பகலில் நட்டந்தாடியிலும், இரவில் சுப்பிரமணியத்திலும், மறுபடியும் மறுநாள் காலையில் சுப்பிரமணியத்திலும், பகலில் நட்டந்தாடியிலும், இரவில் உடுப்பியிலுமாக, எம்பெருமானைச் சேவித்துவந்தனரென்று சொல்லப்படுகின்றது.

சுப்பிரமணியத்தில் ஆசாரியசுவாமிகளுடைய சகோதரரும் சோதேமடஸ்தாபகருமான விஷ்ணுதீர்த்தசுவாமிகள் சுப்பிரமணிய

மடம் என்னும் பிரசித்தமான மடமொன்றை ஸ்தாபித்திருக்கின்றனர். நட்டந்தாடியில் கௌதம கமண்டல கஜாதீர்த்தங்களும், ஆசாரியசுவாமிகளாற் பிரதிஷ்டைசெய்யப்பட்ட வியாசசாலக்கிராமமும், அவர் சுப்பிரமணியம் போகும்மார்க்கத்தில் தங்கி சிரமபரிகாரஞ் செய்துகொள்வதற்காகக் கட்டப்பட்ட அழகிய மண்டபமும் இருக்கின்றன. இக்காலத்தும் இம்மண்டபத்தினருகில் தாழ்ந்த வகுப்பினர் போவதில்லை. இந்த க்ஷேத்திரமும் சோதேமடாதிபதியின் விசாரணையில் இருக்கின்றது.

கண்ணுவதீர்த்தம்:— இவ்வூர் உடுப்பிக்குத் தெற்கில் 44 மைல் தூரத்தில் இருக்கின்றது. இங்கு ஆசாரியசுவாமிகள் நான்கு மாதகாலம் தாமசித்திருந்ததாகத் தெரிகிறது. இத்தலத்தில் கண்ணுவதீர்த்தமென்னும் புண்ணியதீர்த்தம் இருப்பதுடன், இராமதீர்த்தம் என்னும் ஒருதீர்த்தமும் இருக்கின்றது. ஆதியில் ஆஞ்சனேயரானவர் தம்முடைய மூன்றாவது அவதாரத்தில் காட்சிகொடுப்பதாக விபீஷணனுக்கு வாக்களித்திருந்தபடி, இம் மத்துவாவதாரத்தில் அவனுக்கு இத்தலத்தில் தரிசனம் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. இவ்வூர் மடத்தின் கீழ்ப்புறமுள்ள அரசமரத்துமேடையின் நான்கு வாயில்களிலும், ஒவ்வொருவாயிலில் இரண்டிரண்டு பேராக, எட்டு மடாதிபதிகளுக்கும் ஆசாரிய சுவாமிகள் சந்நியாசம் கொடுத்ததாகத் தெரிகிறது. பேஜாவர மடாதிபதிகளுள் மிகப் பிரசித்திபெற்றவரான விஜயத்துவஜாசாரிய சுவாமிகள், இத்தலத்திற்கடுத்த கடலின் நடுவிலுள்ள பாறையின் மேலிருந்துகொண்டு, ஸ்ரீமத்பாகவதத்திற்கு உரையெழுதினரென்பதற்கறிகுறியாக, இக்காலத்தும் அப்பாறை அநேக கல்வெட்டு எழுத்துக்களுடன் கடலின் நடுவிலிருப்பதைக் காணலாம். இத்தலத்தில் மேற்சொன்ன விஜயத்துவாஜாசாரிய சுவாமிகள் அடங்கிய பிருந்தாவனமிருக்கின்றது. இத்தலம் பேஜாவர மடாதிபதியவர்களின் விசாரணையில் இருந்துவருகிறது. உடுப்பியில் நடப்பதுபோல் இவ்விடத்திலும் தினந்தோறும் பிராமணர்களுக்கு அன்னதானம் நடந்துவருகிறது.

கட்டுதில (Kattu Tila):— கண்ணுவதீர்த்தத்திலிருந்து கிழக்கில் 18 மைல் தூரத்தில் கட்டுதில (Kattu Tila) என்றும், சேதுதில (Setu Tila) என்றும் வழங்குகிற திவ்வியக்ஷேத்திரம்

இருக்கின்றது. இத்தலத்தில், ஆசாரியசுவாமிகளாற் பிரதிஷ்டை செய்யப்பட்டு, ருக்மணிசத்தியபாமாலங்கிருதாராகவும் கோகோபசேவித பார்சுவாராகவும் விளங் குகிற கண்ணபிரானை, இக்காலத்தில் பாலயதிகளான மடாதிபதிகளே பூசித்து வருகின்றன ரெனத்தெரிகின்றது. ஆசாரியசுவாமிகள் எழுதிய அபூர்வ கிரந்தங்களை தாம்பிரத்தகடுகளிற் பதித்து இத்தலத்தில் ஸ்தாபித்து வைத்தனரென்றும், இவ்விடத்தில் இருக்கிற கிணற்று ஜலம் இக்காலத்தும் தாம்பிரக்களிம்பு நாற்றத்தோடிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் அக்கிணற்றருகில் ஒருவரையும் போக விடுவதில்லை. கலிதோஷத்தினால் உலகத்தில் தத்துவஞானம் குறைந்தொழியுங்காலத்தில், விஷ்ணுதீர்த்தசுவாமிகள் அவதரித்து, ஆசாரியசுவாமிகளால் மறைத்துவைக்கப்பட்ட கிரந்தங்களை புனருத்தாரணஞ்செய்து, தத்துவஞானத்தைப் பரவச்செய்வாரென நம்பப்படுகின்றது.

மேலே சொல்லியிருக்கின்றபடி உடுப்பியிலுள்ள எட்டு மடாதிபதிகளுக்கு எட்டு மூர்த்திகளையும், பத்மநாபதீர்த்தசுவாமிகளுக்கு ஸ்ரீராமர் விக்கிரகத்தையும் கொடுத்த ஆசாரியசுவாமிகள், தாம் பதரிகாசிரமத்திலிருந்து கொண்டுவந்த எட்டு விக்கிரகங்களில் ஐந்தைக் கட்டுதிலத்திலும், ஒன்றை சுப்பிரமணியத்திலும், ஒன்றை கட்டந்தாடியிலும் ஸ்தாபித்துவிட்டு, எட்டாவது விக்கிரகத்தையும் ஷை பத்மநாபதீர்த்தருக்கே கொடுத்ததாகத் தெரிகின்றது.

இவைகளைத்தவிர ஆசாரியசுவாமிகள் அநேகவிடங்களிலுள்ள அநேகவம்சத்தாருக்கு அநேக திவ்யமங்கள விக்கிரகங்களைக் கொடுத்ததாகச்சொல்லிக்கொள்ளுகின்றனர். அவைகளுள் (1) காசர்கோடு (Kasaragod) தாலுகாவிலுள்ள காவுமடம் என்னும் ஊரிலிருந்த திரிவிக்கிரமாசாரியருக்குக் கொடுத்த இலட்சுமி நாராயணர் விக்கிரகமும், (2) சுப்பிரமணியத்திற் கருகிலுள்ள நேரன்கே (Neranke) என்னும் கிராமத்திலுள்ள ஏர்க்கே (Erke) மடத்திற்குக் கொடுத்த கேசவமூர்த்தியும், (3) இதற்குச்சமீபத்திலுள்ள பல்ப (Balpa) என்னும் ஊரில் வசித்த இடபாடி என்னும் வமிசத்தாருக்குக்கொடுத்த வாசுதேவமூர்த்தியும் முக்கியமானவை. இவைகளில் முதலாவதான காவுமடம் என்னும் ஊரில் திரிவிக்கிரமாசாரியரும், அவர்குமாரரான நாராயண பண்டி

தாசாரியரும் அடங்கியிருக்கும் பிருந்தாவனங்கள் இருக்கின்றன. அவர்கள் மடத்திற்குத் தெற்கில் ஆசாரியசுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்ட துவஜஸ்தம்பம் இருக்கின்றது. இதற்குத் தெற்கிலுள்ளது மத்திய கோளநாடென்றும், அந்நாட்டிற்கு வைஷ்ணவராவோர் போதல்கூடாதென்றும், ஆசாரியசுவாமிகள் கட்டளையிட்டிருக்கின்றனரென்று சொல்லிக்கொள்ளுகின்றனர். உத்தர மத்திய தட்சிண கோளங்களாகிய மூன்று நாடுகளும் பரசுராமரால் சிருஷ்டிக்கப்பட்டு, பார்க்கவக்ஷேத்திரமென விளங்கிவரும்போது, அவைகளில் பின்னிரண்டு நாடுகள்மட்டும் யாதுகாரணம்பற்றி வர்ஜிக்கப்பட்டனவென்று அறியக்கூடவில்லை

நம் பரத நாட்டில் எவ்வாறு, காசி, காஞ்சி (காஞ்சீபுரம்), அயோத்தி, அவந்திகை (உஜ்ஜயினிபுரம்), மாயை(ஹரித்துவாரம்), மதுரை (Muttra), துவாரகை ஆகிய சப்த மோட்சபுரிகளிருக்கின்றனவோ, அவ்வாறே, இப்பார்க்கவநாட்டிலும் உடுப்பி, சுப்பிரமணியம், கும்பாசி, துவஜேஸ்வரம் (கோடீஸ்வரம்), சங்கரநாராயணம், மூகாம்பி (Mokhambe), கோகர்ணம் ஆகிய ஏழு முத்தித்தலங்களிருக்கின்றன. இவைகள் எல்லாவற்றையும் முறைப்படி தரிசிப்போருக்கு முத்திகிடைப்பது திண்ணம். ஆனால் முன்சொன்ன சப்தபுரிகளில் வடஇந்தியாவில் ஆறும் தென்னிந்தியாவில் ஒன்றுமாக இருப்பதற்கு மாறாக, பின்சொன்ன ஏழுதலங்களுள் வடகன்னடத்தில் ஒன்றும் (கோகர்ணம்), தென்கன்னடத்தில் ஆறும் இருக்கின்றன.

## மத்துவாசாரியார் அந்தர்த்தானம்.

ஆசாரிய சுவாமிகள் அநந்தேஸ்வரத்தின் பக்கத்தில், கலியுகாதி 4418ம் ஆண்டு பிங்களவருஷம் மாகசுத்தம் நவமியன்று, தம் சீடர்களுக்குப் பாடம் கற்பித்துக்கொண்டிருந்தவர், திடீரென்று அவர்கள் கண்களுக்குப் புலப்படாமல் மறைந்துபோயினரென்றும், அதைக்கண்ட அச்சீடர்கள் பிரமிப்பும் வியப்பு மடைந்து, தங்கள் குருதேவருக்கு ஒருகோவில் கட்டி, அதில் அவர் பிரதிமையைப் பிரதிஷ்டைசெய்ய எத்தனித்ததாகவும், ஆசாரிய சுவாமிகள் அவர்களுள் ஒருவர் கனவிற்றோன்றி, "ஏ மூடர்களே! நம் தலையின்மேற் கல்லைப் போடவா யோசிக்கிறீர்கள். நாம் ஒரு காரணம்

பற்றி அதிருசியமாக இருந்து வருகின்ருேம். மற்ருேரியசுவாமி தில் ஸ்ரீ கிருஷ்ணபக்தரானவரும் நம் பரம்பரையிலுதித் நவமி மான ஓர் யதீந்திரரிடத்தில் தோன்றுவோம்.'' என்று தெரிவிச்சவ மறைய, அவர்கள் தாங்கள் செய்த ஏற்பாடுகளையொழித்தனர் களென்றும், இதுகாரணம்பற்றியே, ஆசாரியசுவாமிகள்கோவி லில் விக்கிரகமில்லாதிருக்கின்றதென்றும், அவர்கள் பிரதிஷ்டை செய்வதற்காகக் கொண்டுவந்த விக்கிரகத்தை அனந்தேசுவரர் கோவிலில் வைத்துவிட்டனர்களென்றும், அவ்விக்கிரகத்திற் கொருமுறை விதிப்படி வாயுஸ்தோத்திரத்துடன் அபிஷேகஞ் செய்வோர், தங்கள் ஜன்மஜன்மாந்தரம் வரையில் வைணவர்களா கப் பிறந்து கிருஷ்ணபக்தியில் முதிர்ச்சி யடைந்திருப்பார்களென் றும் சொல்லிக்கொள்ளுகின்றனர்.

கண்ணபிரான் நித்திய பூஜாவிதிகள்: - ஒவ்வொரு நாளும் அதிகாலையிலிருந்து மாலைவரையில் (1) நிர்மாலிய விசர்ஜனபூஜை, (2) உஷக்காலபூஜை, (3) பஞ்சாமிருதபூஜை, (4) உத்வர்த்தன (உத்வார்ச்சனை) பூஜை, (5) கலசதீர்த்தபூஜை, (6) அலங்கார பூஜை, (7) அவசரபூஜை, (8) மகாபூஜை, ஆகிய எட்டுவித பூஜை களும், இரவில் ஒரு பூஜையும் செய்கின்றனர். அந்தந்த பூஜை களுக்கேற்றனவாக, கடலைச்சுண்டல், பால், தயிர், வெண்ணெய், பாயசம், தோசை, வடை, அதிரசம், ஷட்ரசான்னத்தோடு கூடிய மகாநைவேத்தியம் முதலியவைகளை நிவேதனஞ்செய்து பக்த கோடிகளுக்கு விநியோகம் செய்கின்றனர். இவ்வூரிலுள்ளோர் எம்பெருமான் பிரசாதத்தை ஏக்கமற்றுண்டு, ஹரிகதாகாலட்சே பங்களைக் கேட்டு, பகவத்பாதாசாரியர்களைச் சேவித்துப் போம் வழியை நல்வழியாக்கிக்கொள்ள வழியுண்டு.

மேற்சொன்ன பூஜைகளுள் இரண்டாவதான உஷக்கால பூஜைக்குப் பிறகு கண்ணன் சந்நிதியில், சிரேஷ்டமான அங்க லட்சணங்களுள்ள ஓர் புனிற்றுவைக் கொணர்ந்து நிறுத்தி, அதை சாட்சாது காமதேனுவாகப் பாவித்து, கிருஷ்ண பிரசாதத்தை அதற்கிட்டு, தீபாராதனைகள் செய்து கோபூஜை செய்கின்றனர். ஐந்தாவதான கலசதீர்த்தபூஜைக்குப் பிறகு, ருக்மணி சத்திய பாமை முதலிய பட்டமகிஷிகள் அத்தியந்த பிரேமையோடு

தாசாரியரும்
றன. அ ஆராதித்து வந்த அழகிற் சிறந்த அவ்விக்கிரகத்தை, ஸ்தாபி விதமான விலையுயர்ந்த ஆடையாபரணாதிகளால் அலங் தெர்து, அதன் அழகுக்கோரழகுசெய்து, அலங்கார நைவேத்தி த்துடனும், சங்கம், பேரி முதலிய வாத்திய கோஷங்களுடனும், ஹரிநாமசங்கீர்த்தனங்களுடனும், அலங்கார பூஜை நடத்துகின்ற னர். அச்சமயத்திற் கண்ணனைக் காண்போர் கண்கள் தவஞ் செய்த கண்களே. அங்கு கூடியிருக்கும் பக்தகோடிகள் மெய்ம் மறந்து, பரவசராகி,

> கண்களெண் ணிலாத வேண்டுங் கண்ணனைக் காண வென்பார்
> பெண்களி லுயர நோற்றாள் பெண்ணருக் குமணி யென்பார்
> மண்களி கூர வந்த வருட்கண்டு வாழ்ந்தோ மென்பார்
> பண்களி னிறைந்த கீதம் பாடுவா ராடு வார்கள்.

அலங்காரபூஜையும் அவசரபூஜையும் முடிந்தபின்பு, ப்ரம்ஹஸூத்ர, விஷ்ணுஸஹஸ்ரநாம, கிருஷ்ணாஷ்டோத்தர ஸ்தோத்திராதிகளுடன் துளசிதள புஷ்பார்ச்சனைகள் செய்து, அனேகவித மங்களாரத்திகளுடன் மகாபூஜையைச் செய்து முடிக் கின்றனர். அதன்மேல், ஸ்ரீபிராணதேவர் சந்நிதியில் பிராணபூஜை யும், ஆசாரியசுவாமிகள் சந்நிதியில் ஆசாரிய பூஜையும், சிம்மாச னத்தெதிரில் வியாஸபூஜையும், பூர்வாசாரியர்களுடைய பிருந்தா வனபூஜையும் செய்யப்படுகின்றன. இத்தகைய பகற்பூஜைகளெல் லாம் முடிந்தபின்பு, தீவட்டி சேவையும், அர்த்தஜாமபூஜையும், இறுதியில் எம்பெருமான் பள்ளியறைக்குப் போகும் சமயத்தில் ஏகாந்தசேவைப் பூஜையும் முறைப்படி நடத்துகின்றனர். இவை கள் எல்லாவற்றையும் வரிசைக்கிரமமாகத் தரிசித்தல் விசேஷம்.

விசேஷோற்சவங்கள்:— உத்தான துவாதசி யன்று கண்ணன் கோவிலுக்கு எதிரிலிருக்கின்ற மத்துவசரோவரத்தில் தெப்போற்சவமும், அதன்பின்பு மகாரதோற்சவமும், இலட்ச தீபோற்சவமும் நடக்கின்றன. மார்கழிமாதத்தில் எல்லாக்கோ வில்களிலும் செய்வதுபோல், விசேஷ நிவேதனங்கள் செய்து ஆராதிப்பதுடன், அனேக பிராமணசுமங்கிலிகட்கு சந்தர்ப்பண மும் செய்கின்றனர். மகாசங்கிரமணத்திற்கு ஆறுதினங்களுக்கு முன் வார்ஷிகோற்சவம் ஆரம்பிக்கின்றது. சங்கிரமணதினம் மகோற்சவமும், அதற்கடுத்தநாள் சூர்ணோற்சவமும் நடந்தபிறகு,

கண்ணபிரான் மத்துவசரோவரத்தில் தீர்த்தம் சாதிக்கின்றூர். மாகசுத்த நவமியன்று அனந்தேஸ்வரத்திலுள்ள ஆசாரியசுவாமிகள் ஆலயத்தில் இரதோற்சவம் நடக்கின்றது. சைத்ரசுத்த நவமியன்று ஸ்ரீராமநவமி உற்சவமும், வசந்தருதுவில் வசந்தோற்சவமும், வைசாகசுத்தத்தில் இரதோற்சவமும், துவாதசியன்று மகாவசந்தாராதனையும், ஆவணிமாதத்தில் கிருஷ்ணஷ்டமி (கோகுலாஷ்டமி) உற்சவமும் நடக்கின்றன. ஷை கோகுலாஷ்டமிக்கடுத்த மறுநாள் கோபாலனுடைய பாலலீலைகளின் ஞாபகார்த்தமாய், அனேகர் அனேகவிதமான வேடங்கள் தரித்துவந்து ஜனங்களுக்குக் களிப்பூட்டுகின்றனர். இவைகளைத்தவிர, ஆஸ்வீஜசுத்தத்திலும், விஜயதசமியன்றும், உற்சவங்கள் நடக்கின்றன. இவ்வுற்சவகாலங்களில் பல்லாயிரக்கணக்கான பிராமணர்கட்கு எல்லா மடங்களிலும் சமாராதனை நடக்கின்றது.

பரியாயோற்சவம்:— மேலே சொல்லப்பட்ட எட்டு மடாதிபதிகளும், இரண்டு வருஷங்களுக் கொருவர் மாறிமாறி கண்ணனுடைய கோவிற்காரியங்களை மேற்பார்த்து வருவதாக முறையேற்பட்டிருக்கின்றது. ஆதலின் இரண்டு வருஷங்களுக்கொருமுறை வரிசைக்கிரமப்படி ஒருவர்பின்னொருவர் இராஜபட்டாபிஷேகம்போன்று மகாவைபவத்துடன் பரியாயவாசனத்தில் வைக்கப்படுகின்றனர். இவ்வுற்சவம் 20 நாள் வரையில் மிக்க விமரிசையாக நடந்து மகாசங்கிரமண சூர்ணோற்சவமான மூன்றும்நாள் முடிவடைகின்றது. அக்காலத்தில் ஊர்முழுவதும் வாத்திய கோஷங்களும், ஹரிகதா காலக்ஷேபங்களும் நிறைந்து அதி மங்களகரமாயிருக்கும்.

முத்திராதாரணம்:— இத்தலத்தில் பிரதிவருஷமும் ஆஷாடசுத்த ஏகாதசியன்று தப்த முத்திராதாரணம் நடக்கின்றது. அன்று நடக்கவேண்டிய மகாபூஜை கிரமப்படி நடந்தேறியபின்பு, மடாதிபதிகளுள் வயதுமுதிர்ந்தவர் முதலில் முத்திராதாரணம் செய்கின்றனர். அதன்மேல் எல்லா மடாதிபதிகளும் மற்ற ஜனங்களுக்கு சங்குசக்கர முத்திராதாரணம் செய்கின்றனர். இதற்காக அனேக மாத்துவர்கள் வந்து கூடுகின்றனர். இவ்வித முத்திராதாரணம் பரோடாவுக் கருகிலுள்ள தாக்கோர் (Da-khore) க்ஷேத்திரத்திலும், துவாரகையிலும் தினந்தோறும் நடக்

கின்றது. அங்குள்ள அர்ச்சகர்கட்குக் குறிப்பிட்ட தட்சிணை கொடுத்துவிட்டால், அவர்கள் யாத்ரீகர்கட்கு சங்குசக்கர முத்திரைகளைப் போட்டு விடுகின்றனர். அம்முத்திரைகளைப் போட்டுக்கொள்ளாதவர்கள் அத்தலங்கட்கு யாத்திரைசெய்தவர்களாகக் கணக்கிடப்படமாட்டார்களென்று அச்சுறுத்தப்படுகின்றனர்.

தேவாலயங்கள்:— உடுப்பியின் கீழவீதியில் சந்திரேஸ்வரர் ஆலயமும், அதற்கு மேற்கில் அனந்தேஸ்வரர் ஆலயமும், அவைகளைச் சுற்றி நான்கு இரதவீதிகளும், அவைகளில் மேற்கூறப்பட்ட எட்டுமடங்களும் அமைந்திருக்கின்றன. வடக்கு வீதியில் கண்ணன் கோவிலும், அதன் உள்வாயிலுக்கெதிரில் ஆசாரிய சுவாமிகள் சந்நிதியும், தென்மேற்கில் கருடபகவான் (பெரியதிருவடி) சந்நிதியும், வடமேற்கில் முக்கியபிராணதேவர் சந்நிதியும், வடகிழக்கில் சிம்மாசனமும் வியாசர் சந்நிதியும் இருக்கின்றன. இவ்வாலயத்தின் மேற்கிலுள்ள மண்டபத்திலிருந்து கண்ணனை எக்காலத்தும் தரிசிக்க அனுகூலமான ஒரு சிறுபலகணிவாயில் இருக்கின்றது. இவ்வூரின் தெற்குவீதியின் நடுப்பாகத்திலிருந்து தெற்கேபோகிற வீதிவழிச் சென்றால், ஓர் அழகான கொங்கணியர் ஆலயத்தைக்காணலாம். அதில் ஸ்ரீவேங்கடாசலபதி எழுந்தருளி சேவைசாதிக்கின்றனர்.

மத்துவசரோவரம்:— இது கண்ணன் கோவிலுக்குக்கிழக்கிலுள்ள திருக்குளம். இதில் அனந்தேசுவரர் கட்டளையின்படி, கங்கையானவள் எக்காலத்தும் பிரசன்னமாயிருப்பதுடன், தீனதயாளுவான தேவகி சுதனின் திருப்பாத தீர்த்தமும் வந்து கலப்பதால், இது மகாபவித்திரமான தீர்த்தமாகக் கருதப்படுகின்றது. ஆசாரியசுவாமிகள் தமது சீடர்களோடு கங்காயாத்திரை செய்யப்புறப்பட்டதை அறிந்த அவர் குருவானவர், கன்றுபிரி காராவைப் போன்று வருந்தி, தம்சீடரைச் சிறிது காலமும் பிரிந்திருக்கச் சகியாதவராய், ஸ்ரீஅனந்தேஸ்வரரைப் பிரார்த்தித்து அவரருளால் சாட்சாது பாகீரதியையே இம்மத்துவ சரோவரத்தில் வரவழைத்துத் தம் சீடரைக் கங்காஸ்நானம் செய்யும்படிக் கட்டளையிட, அவர் குருவாணையை மேற்கொண்டு, தம் சீடர்களோடு மத்துவசரோவரத்திலேயே கங்காஸ்நானத்தை முடித்துக்

கொண்டு, குருவைவிட்டுப் பிரியாதிருந்தனரென்றும், அதன் ஞாபகார்த்தமாகப் பிற்காலத்திலும் சிற்சில மடாதிபதிகளின் பரியாயோற்சவகாலங்களில், மத்துவசரோவரத்தில் கங்கைபிரவகித்தனளென்றும் சொல்லப்படுகின்றது. சென்ற இரக்தாட்சி வருஷம் ஆஷாடசுத்த சஷ்டியோடும், உத்திர நட்சத்திரத்தோடுங் கூடிய செவ்வாய்க்கிழமையன்று, அதமாருமடாதிபதியான ஸ்ரீ விபுதப்பிரியதீர்த்த சுவாமிகள் பரியாயவாசனமேறின சமயத்திலும், அதற்கு முந்தின அட்சய வருஷம் (1866) ஆஸ்வீஜ சுத்தம் திரையோதசி மங்களவாரம் கூடிய சுபதினத்தில், சீரூருமடாதிபதியான ஸ்ரீலட்சுமிவல்லபதீர்த்த சுவாமிகளின் பரியாயோற்சவ சமயத்திலும், மத்துவ சரோவரத்தில் கங்கை பிரவகித்துப்பொங்கி வழிந்தனளென்று, நேரிற்பார்த்த அனேக வயதுமுதிர்ந்த பெரியோர்கள் இன்னமும் சொல்லிக்கொண்டிருக்கின்றனர்.

யாத்ராவிதி:- யாத்ரீகர்கள் உடுப்பிக்கு வந்த முதல் நாளில் எம்பெருமானுடைய திருநாமங்களை சப்தத்தோடு பஜனை செய்துகொண்டு, நான்கு வீதிகளையும் வலமாகச்சுற்றிவந்து, கோபுரவாயிலடைந்து, பத்திரபுஷ்பாதிகளால் அருச்சித்து, தூளி தரிசனம் செய்துகொள்ளல்வேண்டும். அதன்மேல் சந்திரேஸ்வரையும் அனந்தேஸ்வரரையும் தரிசித்துக்கொண்டு, திரும்பி வந்து துவஜஸ்தம்பகருடனை வழிபட்டு, கண்ணனைச் சேவித்து, முறைப்படி பிராணதேவர், ஆசாரியசுவாமிகள், வியாசபகவான் முதலிய சந்நிதிகளைத் தரிசித்து, அக்காலத்தில் எம்பெருமானை அருச்சிக்கும் பெரும்பேற்றைப் பெற்றிருக்கும் யதீசுவரரை மடாதிபதி) நமஸ்கரித்து, அவரிடம் அனுக்ஞைபெற்று, செய்யவேண்டிய பிராயச்சித்தங்களைச் செய்து முடித்து, மத்துவசரோவரத்தில் ஸ்நானஞ்செய்து, க்ஷேத்திரோபவாஸம் செய்யவேண்டியது. மறுநாள் க்ஷேத்திர சிரார்த்தாதிகளான பிதுர்க்கடன்களைச் செய்து முடித்து, அவரவர்கள் சக்திக்கேற்றபடி ஏழைகளுக்கு அன்னமிட்டு, இல்வாழ்வான் ஓம்பற்குரியரான தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் என்னும் நால்வகைப்பட்டவர்களுள் முதன்மையராகச் சொல்லப்பட்டிருக்கின்ற பிதுர்க்களைத் திருப்தி செய்து வைக்கவேண்டியது. மூன்றாவது நாள் மனதில் யாதொரு வஞ்சனையும் கபடமுமின்றி, அவரவர்கள் சக்திக்கேற்பக் கண்ண

பிரானுக்கு *அபிஷேக அர்ச்சனாதிகளைச் செய்வித்து, ஆனந்தமாய்த்தரிசித்து, பக்தாபீஷ்டதாயகனான பரமாத்மாவிடம் அவரவர்களுக்குவேண்டிய பலபுருஷார்த்தங்களைப் பிரார்த்தித்துக் கொள்ளல்வேண்டும்.

இந்தத் திவ்விய க்ஷேத்திரத்தின் யாத்திரையையும் பூஜை நைவேத்தியங்களையும், கிரமப்படிச் செய்து முடிப்போருக்கு நூறு அசுவமேதயாகபலன் கிடைக்குமென்றும், இந்த க்ஷேத்திரத்திற்கு யாத்திரை செய்யப் புறப்படுவோரைத் தடுப்பவர்களும், செய்வோருக்குத் தீங்கிழைப்பவர்களும், இத்தலமான்மியத்தைக் குறைத்தாவது நிந்தித்தாவது கூறுவோர்களும், தங்கள் தங்கள் பிதுர்க்களுடனும் சந்ததிகளுடனும் ரௌரவாதி நரகங்களிலாழ்ந்துழன்று, இறுதியில் நீசயோனிகளிற் பிறப்பார்களென்றும் புராணங்கள் முறையிடுகின்றன.

இத்தலத்தில் யாத்ரீகர்கள் தங்குவதற்கு லோகல்பண்டு (Local Fund) சத்திரம் ஒன்றும், பிரயாணிகள்விடுதி (Travellers' Bungalow) ஒன்றும் அனேகமடங்களும் இருக்கின்றன. சத்திரத்திற்கு நாள் ஒன்றுக்கு நான்கணாவும், பங்களாவிற்கு 10 முதல் 15 அணா வரையிலும் வாடகை வாங்குகின்றனர். பிராமணர்களுக்கு மடங்கள்தான் வசதியானவை. மடங்களிற் சாப்பாடும் கோவிலிற் பிரசாதமும் எக்காலத்தும் கிடைக்கும். பிராமணசமாராதனை செய்வதற்காக, சுமார் 500 பேர்கள் வரையில் ஏககாலத்தில் சாப்பிடக்கூடிய கட்டிடங்கள் அனேகமிருக்கின்றன. இம்மடங்களில் மடாதிபதிகளின் உத்தரவின் பேரில் பிராமணரல்லாதார்க்கும் அன்னமளிக்கின்றனர்.

---

* அபிஷேக அர்ச்சனாதிகள் செய்வதற்குச் செலுத்தவேண்டிய கட்டணங்கள்:—

| | | |
|---|---|---|
| (1) | துளசி அர்ச்சனை:— | ரூ 6—0—0 |
| (2) | பாலபிஷேகம்:— | ரூ 12—0—0 |
| (3) | பஞ்சாமிருதாபிஷேகம்:— | ரூ 18—0—0 |
| (4) | மகா அபிஷேகம்:— | ரூ 30—0—0 |

மகாபூஜை; அதாவது ஒரு நாளில் வழக்கப்படி நடக்கும் எல்லாப் பூஜைகளும்:— ரூ 60—0—0.

கண்ணனுக்கு வசந்தருதுவில் வசந்தோற்சவம் நடக்கின்ற "வசந்தமஹால்" என்னும் வசந்தமண்டபத்திற்கருகில் ஒரு சர்ப்பதேவாலயம் இருக்கின்றது. முற்காலத்தில் வாதிராஜதீர்த்த சுவாமிகள் கிருஷ்ண தேவாலயத்திற்குத் தங்கத்தகடுகள் போட்டு அலங்கரிக்க நினைத்து, அத்திருப்பணிக்கு வேண்டிய தங்கத்தகடுகளைச் சேகரித்து, கர்ப்பக்கிரக விமானத்தின் தென்புறத்தில் ஒரு தகடுபோட்டவுடன், "இக்கலியுகத்தில் இக்காரியத்திற் பிரவர்த்திக்கவேண்டாம்." என்று எம்பெருமான் கட்டளையிட்டதாகவும், அக்கணமே சுவாமிகள் அத்தகடுகளையெல்லாம் பூமிக்குள்ளிட்டு, மேலே பாறைக்கற்களால் மூடி, அவ்விடத்தில் கிருஷ்ணதேவாலயத்தின் எண்ணிறந்த பசுக்களின் சம்ரக்ஷணார்த்தம், மேற்கூறிய சர்ப்பதேவாலயத்தைக் கட்டிப் பிரதிஷ்டைசெய்ததாகவும் சொல்லப்படுகின்றது. தங்கத்தகடுகளைப் புதைத்தவிடத்தின்மேல் சர்ப்பதேவாலயம் கட்டினதும், அதுவும் கோசம்ரக்ஷணார்த்தமாகக் கட்டினதாகச் சொல்லுவதும், யாதுகாரணம்பற்றியிருக்கலாமென்று யோசிக்குமிடத்து, சுவாமிகள் தாம் கிருஷ்ணதேவாலயத்திற்காகச் செய்த தகடுகளைத் தமக்குப் பின்வருவோர் தங்கள் சுயநலத்தைக்கருதி, மற்றெக்காரியத்திற்கும் உபயோகப்படுத்தாதிருக்கும்படி அவைகளைச் சர்ப்பராஜனிடம் ஒப்புவித்தாரெனக் கொள்ளல்வேண்டியிருக்கின்றது. தவிர, கோக்களைக் காப்பது கோபாலனுடைய தொழிலாதலின், அவருடன் எக்காலத்துமிருந்து, அவர்சேவைகளைச் செய்பவனான ஆதிசேஷனைக் கொண்டு அத்தொழிலை நடத்தச்செய்வது முறையாமென்று கருதியோ, அல்லது, அவர்கோக்களுக்கு மனிதர்களால் யாதொரு தீங்கும் நேரிடாதென்பது தெரியுமாதலால், விஷஜந்துக்களாலும் தீங்கொன்றும் நேராதிருக்கவெண்ணி, தங்கள் பொருள்கள் களவுபோகாதிருக்கும்படி, அவைகளைக் கள்வர்தலைவனிடமே ஒப்புவிப்பது வழக்காயிருத்தல்போல, அந்த கோக்களையும் சர்ப்பராஜனிடமே ஒப்புவிக்க நினைத்தோ, அவ்வாறு செய்தனரென்று கொள்ளலாம். இக்கோவிற் பசுக்களுக்கு வைக்கோல் புல் முதலியவைகளை வாங்கிப்போடுவோர், கண்ணனுக்கு மகாபூஜை செய்வித்த பலனைப் பெறுவரென்று கருதப்படுகின்றது.

வாசுதேவனுக்கு நித்திய பூஜைகளை நடத்தும் யதீந்திரருக்கு கோபிசந்தனம், காவிவஸ்திரம், குடை, கௌபீனம், கமண்

டலம், கிருஷ்ணாஜினம் (வெளிமான்றோல்), தண்டகாஷ்டம் முதலியவைகளைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து, அவரை வழி படுவோர் சாட்சாது எம்பெருமானுக்கே நித்தியபூஜைகளைச் செய்துவைத்த பலனைப் பெறுவர் என்பது புராணப்பிரசித்தம்.

இக்கோவிலில் பிரதிதினமும் தவறாமல் புராணப்பிரசங்க மாவது ஹரிகதாகாலக்ஷேபமாவது கன்னடபாஷையில் நடக்கின் றது. இங்கு கதைசெய்யும் பாகவதருக்குப் பின்பாட்டுக்காரர் யாருமிருப்பதில்லை. அவர் தாமாகவே பாடிக்கொண்டு கதைசெய் கின்றார். சுதிப்பெட்டி வைப்பதற்கு மாத்திரம் பாகவதருக்குப் பின்புறத்தில் ஒரு சிறு மேஜை போடப்படுகிறது. சுதிமீட்டு வோரும் நின்றுதானாக வேண்டும். மத்தளத்திற்குப் பதிலாகத் தபேலா என்னும் வாத்தியத்தை உபயோகிக்கின்றனர். அதை வாசிப்பவர் பாகவதருக்கு முன்புறத்தில் எல்லாரோடும் பூமியில் உட்காருகின்றார். மடாதிபதிகள்மட்டும் பலகைகளின்மேல் அமரு கின்றனர். நம்நாட்டில் நடப்பதைவிட இவ்வழக்கம் மிகச்சிறந்த தாயிருக்கின்றது. சுவாமிசந்நிதியிற்கூட சுவாமி கீழேயிருந்தாலும் மத்தளக்காரர் உயர்ந்தபலகை (Bench) போட்டுக்கொண்டு, அதன்மேல் உட்கார்ந்துகொள்ளுவதும், பின்பாட்டுக்காரர்கள் தங்கள் கால்களிலொன்றை அப்பலகையின்மீது தூக்கிவைத்துக் கொண்டு, மற்றொருகாலைமட்டும் பூமியில் வைத்தவர்களாய், தில்லை யம்பலத் திருநடனஞ்செய்து, அங்கிருப்போருக்கு சர்வாங்கக் காட்சியளித்து அருவருப்பையுண்டாக்குவதும், பாகவதராயினோர் தெரிந்தோ தெரியாமலோ பாதிப்பாட்டுகள்பாடி மற்றப்பாதியைப் பின்பாட்டுக்காரர்களிடம்விட்டு நிற்பதும், வர்ஜிக்கத்தக்க வழக் கங்களாகும்.

உடுப்பியிலிருந்து கடல்மார்க்கமாகவும் கரைவழியாகவும் கோகர்ணம் போகலாம். கடல்மார்க்கமாகப் போவோர் உடுப்பிக்கு 4 மைல் மேற்கிலுள்ள மல்பிக்குச் சென்று புகைக்கப்பலேறி தத்ரி (Tadri) என்னும் துறைமுகத்திலிறங்கி 3 மைல் மட்சாலை வழியாகப் போதல்வேண்டும். கரைவழியாகப் போவோர் வழி யிலுள்ள குந்தாபுரம் மூகாம்பி முதலிய க்ஷேத்திரங்களைத் தரி சித்துக்கொண்டு போகக்கூடுமாதலாலும், வாரத்திற்கு இருமுறை மட்டும் போகும் புகைக்கப்பலுக்காக ஒன்று அல்லது இரண்டு

நாட்கள் காத்திருக்க நேருமாதலாலும் கரைவழிப்போவதே நலம். இப்பக்கத்திலிருக்கும் தாழ்ந்த வகுப்பினர் கடலோரத்திற் கிடைக்கும் நத்தைகளைப் புசிக்கின்றனர். உடுப்பியிலிருந்து மல்பிக் குப் போகும் பாதையில் இந்நத்தைகளை ஏராளமாய்க் கூடை களில் வைத்துக்கொண்டு விற்பதைக்காணலாம். அவைகளைப் படிக்கணக்காய் அளந்து விற்கின்றனர். அவைகளினுள்ளி ருக்கும் மாமிசத்தைப் புசித்துவிட்டு மேலோடுகளைச் சுட்டுச் சுண்ணும்பாக்கி விடுகின்றனர். பம்பாய் ஸ்டீம் நாவிகேஷன் (Bombay Steam Navigation) கம்பெனியாரால் விடப்படும் புகைக்கப்பல்கள் வாரத்திற்கிருமுறை பம்பாய்க்கும் கள்ளிக் கோட்டைக்கும் போய் வந்துகொண்டிருக்கின்றன. வழியிலிருக் கும் முக்கிய துறைமுகங்களில் ஏற்றுமதி இறக்குமதிகளுக்காக நின்றுபோகின்றன.

மூகாம்பி:— இத்தலம் உடுப்பியின் வடக்கில் 18 மைல் தூரத்திலிருக்கின்றது. சங்கரர். உமாதேவி. நாராயணர். மகாலட் சுமி. பிரமதேவர். சரஸ்வதி. திரிமூர்த்திஸ்தலம். சரஸ்வதிக்கு நவராத்திரியில் சிறந்த உற்சவம் நடக்கின்றது. கோவிலின் நான்கு பக்கங்களிலும் நீர்சூழ்ந்திருக்கின்றது

குந்தாபுரம்:— இது மூகாம்பியின் வடக்கில் 5 மைலி லுள்ள ஓர் சிவஸ்தலம். உமாகாந்தர் உமாதேவி. சமுத்திரதீர்த்தம். விஷ்ணுதரிசனமும் விசேஷம்.

---

## அத்தியாயம் 7.

——(o)——

கரிமுத லுறவியீரய்க் கண்டிடு முயிரனைத்தும்
அரியதன் னுயிர்போலெண்ணி யன்புவைத் திருப்போமாகிற்
பரிவுட னுலகமூன்றும் பரவுறு மாபலீசற்
குரியதொண் டாவோநாமு முண்மையீ துண்மைதானே.

(காந்தியடிகள் கற்பனை.)

திருக்கோகர்ணம்:— பச்சிம காசியென மதிக்கப்படும் இந்தப் புண்ணியக்ஷேத்திரம் உடுப்பிக்கு வடக்கில் சுமார் 60மைல் தூரத்தில் இருக்கிறது. மகாபலேஸ்வரர். தாமிரகௌரி. கோகர்ண

நாயகி. கோடிதீர்த்தம் முதலிய அனேகதீர்த்தங்கள். *காயத்திரி நதி. சதசிருங்கபர்வதம், உமாமகேஸ்வரபர்வதம் முதலியன.

க்ஷேத்திரோற்பத்தி:— ஆதியில், இக்கலியுகவாரம்பத்தில் எல்லாவுலகங்களும் ஜலப்பிரளயமாகவிருந்தபோது, பிரமதேவர் தாம் மறுபடியும் ஜீவகோடிகளை சிருஷ்டிப்பதற்காகக் கடுந்தவம் புரிந்தனர். அத்தவப்பயனாய் அவர் நெற்றியிலிருந்து உருத்திரன் தோன்றினர். சிருஷ்டித்தொழில் செய்யும்படி பிரமதேவர் உருத்திரனைவேண்ட, அவரும் அதற்குடன்பட்டுப் பாதாளஞ்சென்று எல்லாப்பிராணிகளையும் சத்துவகுணமொன்றே நிறைந்துள்ள சிரஞ்சீவிகளாய் சிருஷ்டிக்கத்தொடங்கினர். அதைக்கண்ட பிரமதேவர் எல்லாஜீவர்களும் இறவாமலும் ஒரேகுணமுள்ளவர்களாகவும் இருப்பின் உலககாரியங்கள் சரிவர நடைபெறாவென்றுணர்ந்து, தாமே சிருஷ்டித்தொழிலைக் கைக்கொண்டு †முக்குணங்களும் கலந்துள்ள பிராணிகளை சிருஷ்டித்தார். பாதாளத்திலிருந்த பரமசிவன், தமக்கு மாறாக பிரமதேவர் சிருஷ்டித்தொழிலை நடத்துவதையறிந்து கோபங்கொண்டு, பூமியைப்பிளந்துகொண்டு வெளிவர எத்தனிக்க, பூதேவியானவள் அஞ்சி நடுங்கி ஆலவாயனடிபணிந்து, தன்னை வருத்தாமல் தன் காதின்வழியாக மேலே செல்லும்படி பிரார்த்திக்க, அவரும் அதற்குடன்பட்டு, பூதேவியின் காதுவழியாக வெளிவந்து இத்தலத்தில் தோன்றினர். அது காரணம் பற்றியே இத்தலத்திற்கு ‡கோகர்ணமென்ற பெயரும், இத்தலத்துறையும் சிவபெருமானுக்கு கோகர்ணேஸ்வரர் என்ற பெயரும் வழங்கலாயிற்று. இதைத்தவிர உருத்திரன் தோன்றின

---

*குறிப்பு:— இந்நதிக்குத் தாமிரநதியென்னும் பேரும் வழங்குகின்றது.

†குறிப்பு:— முக்குணங்களாவன:— (1) சத்துவம். (2) இராசதம் (ராஜஸம்). (3) தாமதம். சத்துவகுணங்களாவன:— அருள், தவம், பொறை, வாய்மை, மேன்மை, மோனம், ஐம்பொறியடக்கல் முதலியன. இராசதகுணங்களாவன:— மனவூக்கம், ஞானம், வீரம், தருமம், தானம், கல்வி, கேள்வி, ஆராய்ச்சி முதலியன. தாமதகுணங்களாவன:— பேருண்டி, நெடுந்துயில், சோம்பல், நீதிவழு, ஒழுக்கவழு, வஞ்சம், மறதி பொய், கோபம், காமம், களவு, கொலை முதலியன.

‡கோ=பூமி; கர்ணம்=காது.

தலமாதலின் இதற்கு உருத்திரயோனி என்னும் பேரும் வழங்குகின்றது. அவ்வாறு வெளிவந்த உருத்திரனனவர் பிரமதேவர் மேற் கோபங்கொண்டு, பிரமாதகணங்களை உற்பத்திசெய்து பிரமாவின் சிருஷ்டியை அழிக்கச்செய்ய, அதையறிந்த மகாவிஷ்ணுவானவர் உருத்திரனிடம் நெருங்கி, அவருடைய சம்ஹாரத்தொழிலை அப்போது செய்யாமல் யுகமுடிவில் வரும் பிரளய காலத்திற்கு வைத்துக்கொள்ளும்படிக்கும், அதுவரையில் இத்தலத்தில் ஒடுங்கியிருக்கும்படிக்கும் வேண்டிக்கொள்ள, அவரும் அதற்கிணங்கி இவ்விடத்திலேயே ஐக்கியமாய்விட்டனரென்றும், அதுகாரணம்பற்றி இத்தலத்திற்கு உருத்திரபூமி என்னும் பேர்வந்திருப்பதாகவும் தெரிகிறது. இத்தகைய சிறப்புவாய்ந்த உருத்திர பூமியில் தகனஞ்செய்யப்படுவதால், இத்தலத்திறப்போர் யாவரும் பிரளயகாலத்தில் தங்களுக்குக் கிட்டும் முடிவை உடனே அடைந்து, மறுபிறப்பின்றி சாயுஜ்யபதவியடைகின்றனரென்பது புராணப்பிரசித்தம். இக்காரணங்கொண்டே மற்றவிடங்களிலுள்ள இடுகாடுகளிலும் உருத்திரன்வசிப்பதாகவும், அவைகளுக்கும் உருத்திரபூமியென்னும் பேர் வந்திருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

அஃதற்றாக, உருத்திரனனவர் தாம் பிரளயகாலத்திற் செய்யவேண்டிய கடமையை நன்குணர்ந்தவராய்த் தம்முடையவும் மற்றிருமூர்த்திகளுடையவும் சத்துவங்களைக் கிரகித்து மூன்று கண்களும் மூன்று கொம்புகளுமுள்ள ஒரு தங்கமானைச்செய்து, அம்மானுடன் கைலைக்குச்சென்றார். அதையறிந்த தேவர்கள் அஞ்சி உருத்திரனிடம் சென்றிரக்க, அவர் மனமகிழ்ந்து அம்மானை அவர்களிடம் கொடுத்தார். அவர்களதனைப்பெற்று பிரமா விஷ்ணுவின் சத்துவங்களை அவரவர்களிடம் அளித்துவிட்டு, உருத்திராம்சத்தை உருத்திரனிடமே திருப்பிக்கொடுத்துவிட்டனர்கள். அதையவர் பிராணலிங்கமாகச் செய்துவைத்துக்கொண்டு பூசித்துவந்தார். முன்னொருகாலத்தில் அசுரர்களிடம் தோல்வியடைந்த தேவர்கள் உருத்திரனை யாசித்து அவ்வாத்மலிங்கத்தைப் பெற்று, அதன் பூசையால் அவர்கள் அசுரரைவென்று தங்கள் சுயேச்சையை அடைந்ததாகத் தெரிந்த இராவணன் கைலைக்குச் சென்று, சாமகானஞ் செய்து, சிவபெருமானை மகிழ்வித்து,

அவரிடமிருந்த பிராணலிங்கத்தைப் பெற்று தன்னூர்போவதை யறிந்த தேவர்கள், அவ்வாத்மலிங்கபூசையில்லாமலே தங்களைப் பலவிதத்திலும் வருத்தி ஏவல்கொண்டிருக்கும் இராவணன், அவ்விலிங்கத்தைத் தன்னூரிற் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டால், அவனை வெல்வதும் இலங்கையை அழிப்பதும் அசாத்திய மென்றறிந்து, மனங்கலங்கி, மகாவிஷ்ணுவையடைந்து தங்கள் குறைகளைச்சொல்லி முறையிட, இராவணன் உருத்திராத்மலிங்கத்தை இலங்கைக்குக் கொண்டுபோய்விட்டால், தாம் பிற்காலத்தில் எடுக்கவிருக்கும் இராமாவதாரத்தில் இராவணனைக் கொல்வதரிதென்றுணர்ந்த மகாவிஷ்ணுவானவர், தேவர்களை நோக்கி, அக்கொடிய அரக்கன் அச்சமயம் கோகர்ணக்ஷேத்திரத்திற்கருகில் போய்க்கொண்டிருப்பதாகவும், தாம் தம் சக்கரத்தைவிட்டு சூரியனைமறைத்து சூரியாஸ்தமனம்போல் தோற்றுவிப்பதாகவும், தேவர்கள் தவறினும், பிராமணர்கள் தவறினும், குறிப்பிட்ட காலங்களில் செய்யவேண்டிய நித்தியகர்மானுஷ்டானங்களை முறைப்படி செய்வதிற் சற்றேனுந்தவருத இராவணன், அவ்விலிங்கத்தைக் கையில்வைத்துக்கொண்டு சந்தியாவந்தனதிகளைச் செய்யான் என்றும், அச்சமயம் தேவர்களில் யாராவது அவன் முன் தோன்றி அவ்விலிங்கத்தை அவனிடமிருந்து பெற்று பூமியில் வைத்துவிட்டால், அது வைத்தவிடத்திலேயே வேரூன்றி விடுமென்றும், அக்காரியத்தைச் செய்யத்தகுந்தவர் சர்வவிக்கினங்களையும் நிவர்த்திக்கவல்ல விக்கினேஸ்வரரே என்றும், அவர் ஒருவரே தம் தந்தை கொடுத்தபொருளை மீண்டும்பெற உரிமையுள்ளவரென்றும் போதித்தனுப்பினர். அதைக்கேட்ட தேவர்கள் விநாயகரையணுகி வேண்ட, அவரும் அவர்கள் வேண்டுதற்கிசைந்து, ஒரு யௌவன பிராமண பிரமசாரியாய் இராவணன் முன் தோன்றினர். அச்சமயத்திற் சூரியாஸ்தமனமாகவே, இராவணன் அப்பார்ப்பனச் சிறுவனை விளித்து, அவனிடம் அவ்விலிங்கத்தை ஒப்புவித்துவிட்டுத் தான் தன் நித்தியகர்மங்களைச் செய்துமுடிக்க அருகிலிருந்த பித்ருஸ்தாலி என்னுமிடத்திற்குச் சென்றனன். மகாவிஷ்ணுவானவர் இராவணனுக்கு ஜலபாதைக்கு வரும்படி செய்ததாகவும், அக்காரணம்பற்றி இலிங்கத்தைக் கொடுத்துச் சென்றனன் என்றும் சொல்லுவாருமுளர். காரணம் எதுவாயினும் ஆகுக. விநாயகர் இலிங்கத்தைப்

பெற்றதும், தம்மாலிலிங்கத்தைத் தாங்கமுடியவில்லையென்றும், தாம் அவனை மும்முறை அழைப்பதாகவும், அவன் அதற்குள் வந்து இலிங்கத்தைப் பெற்றுக்கொள்ளானாகில், தாம் இலிங்கத்தைத் தரையில் வைத்துவிடப்போவதாயும் சொன்னதைக்கேட்ட இராவணன், தான் மூவுலகங்களையும் அடக்கியாண்டிருக்கும் இலங்காதிபதியாகிய இராவணேஸ்வரனென்றும், இலிங்கத்தைக் கீழேவைத்துவிட்டால் பார்ப்பனனுயிர் பரலோகஞ் சேருமென்றும் பயமுறுத்திச் சென்றனன். இலிங்கத்தை வாங்கிப் பூமியில் வைப்பதற்காகவே வாமனவுருவோடுவந்த விநாயகர், இராவணன் மறைந்ததும் அவனை மும்முறையழைத்துவிட்டு இலிங்கத்தைப் பூமியில் வைத்துவிட்டனர் அவ்விலிங்கம் சிவபிரான்கட்டளையின்படி சப்த பாதாளலோகங்களையும் ஊடுருவிச்சென்று சுயம்புலிங்கமாக மாறியொளிர்ந்தது. மீண்டுவந்த இராவணன் அதைக் கண்டு மிகச்சினங்கொண்டு, வலதுகை முட்டியினால் தன் முழு வலியுடன் கணபதியின் சிரசிற்குட்ட, அவர் அக்குட்டைத் தாங்கொணாதவராய், அதனாலுண்டாகிய வீக்கத்தோடு வருந்தினின்றார்.

சோமசுந்தரக்கடவுள் மதுரையிற் பிட்டுக்குமண்சுமந்து பாண்டியன் கையிற் பிரம்படிபட்டகாலத்து, எவ்வாறு "வானவர், மனிதர், நாகர், புள், விலங்கு, மாசுணஞ் சிதலெறும்பாதியான பல்சாமும், மலை, மரம், கொடி, புற்பூண்டாதியாமசரமும், உயிரிலோவியமும்" அடிபட்டதும் தவிர, ஊனடைகருவும்பட்டு அவ்வடித் தழும்போடுதித்தனவோ, அவ்வாறே கஜானனராகிய கணபதி இராவணன் கையிற்பட்டகுட்டு மூவேழுலகங்களிலுமுள்ள யானைகளெல்லாவற்றின் மத்தகங்களிலும் பட்டதென்று சொல்லப்படுகின்றது. அதனாலுண்டான வீக்கம் இக்காலத்தும் யானைகளின் மத்தகங்களில் நெற்றிப்புறத்திற்காணலாம்.

தோள்வலியில் தனக்குநிகரானவர் இம்மூவுலகிலும் இல்லையெனப் பூரணகருவமடைந்திருந்த இராவணன், அவ்விலிங்கத்தைப் பூமியினின்றும் பேர்த்தெடுப்பது தனக்கு ஒரு அற்ப காரியமென்றெண்ணி, அதைப்பற்றி இழுத்ததும், அது பசுமாட்டின் காதுபோற்றிருகித் தன் சுயரூபத்தைவிட்டுப் பசுவின் காதின் உருவத்தையடைந்ததேயொழிய, ஒரு அணுவளவாவது

தன்னிருப்பிடத்தைவிட்டு வெளிக்கிளம்பவில்லை. எல்லாம் சிவன் செயலென்றறியாத பிரதாபலங்கேஸ்வரன், பிரதாப விலங்கேஸ்வரனாக மாறி விலங்குகளுக்குள்ள மூர்க்ககுணத்தோடு எக்காலத்து மழியாத தன்பிரதாபத்திற்கோர் அழிவேற்பட்டதாகக் கருதித் தன் இருபதுகைகளாலும் இலிங்கத்தைப்பற்றித் தன்முழுபலத்தோடிழுக்க, தன் கைகள் இலிங்கத்தினின்றும் விடுபட்டவனுய், சுமார் 50 கெஜதூரத்திற்கப்பால் வாயாலும் மூக்காலும் இரத்தங் கக்கிக்கொண்டு போய்விழுந்தனன். அவன்விழுந்ததாகச் சொல்லப்படும் இடத்திலிருக்கின்ற கூபத்திலுள்ள ஜலம் அவன் வாயினுலும் மூக்கினுலும் கக்கின உதிரமெனக் கருதப்படுகிறது. இத்தலத்துள்ள எல்லாக்கூபங்களிலும் உள்ள ஜலம் தெளிந்தும் குளிர்ந்தும் குடிதண்ணீருக்குப் பயன்படத்தக்கதாயிருக்க, இவ்வொருகூபத்தின் ஜலம் மாத்திரம் பாசிபிடித்தும், துர்நாற்றத்தோடுகூடியும், பார்க்கவும் அருவருப்புள்ளதாகவும் இருப்பதை இன்றும் காணலாம். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்னும் ஆன்றோர்மொழி தன்மட்டிற் பயன்படாதொழிந்ததுமன்றி, தனக்குப்பெருத்த மானக்கேடும் உண்டானதைக்கண்ட இராவணன் அருகிலிருந்த சதசிருங்கபருவதத்தின் பலகுகைகளுளொன்றில் நுழைந்து இலங்கைக்குச் சென்றனன்.

இவ்விலிங்கஸ்தாபனம் ஈசுவரவருஷம், துலாமாதம், கார்த்திகசுத்தப்பிரதிபாதம், ஆதிவாரம் வியதிபாதயோகம், விசாகநட்சத்திரம் மீனலக்கினம் ஆகிய இவைகள்கூடிய சுபதினத்தில் நடந்ததாகத் தெரிவதால், பிரதிவருஷமும் கார்த்திக சுத்தத்தில் இத்தலம் வந்து, இவ்விலிங்கத்தின்மேல் ஒருதுளி ஜலமாவதுவிட்டு, ஒரு வில்வவிதழ்கொண்டாவது அருச்சித்தால், கைலையிலிருக்கும் சாட்சாது சிவபெருமானை அருச்சித்த பலன் கிட்டுமென்று புராணங்கள் முறையிடுகின்றன.

தம்மையண்டி வேண்டுவோர் வேண்டுவதை முன்பின் யோசியாது தந்தருளும் தருமசொரூபியான சிவபிரானுல் தானென்ற ஆணவம் தலைக்கேறித் திரிந்த தசக்கிரீவன் கைகளிற் சிக்க வைக்கப்பட்ட பிராணலிங்கமானது, தாங்கள் காலத்திற்செய்த சூழ்ச்சியால் கோகர்ணக்ஷேத்திரத்திலேயே ஸ்தாபனமானதைக்

கண்ட தேவர்கள், ஆனந்தக்கடலிலாழ்ந்து, விசுவகருமாவை மிகவும்பரிசுத்தமான கண்டகிநதிக்கனுப்பி, அந்நதியினின்று ஓர் உத்கிருஷ்டமான சலவைக்கற்பீடத்தை வரவழைத்து அமைத்தனரென்று சொல்லப்படுகின்றது. எல்லாத் தலங்களுக்கும் * பாணத்தையுதவும் கண்டகி இத்தலத்திற்குப் பீடத்தையுதவினளெனின், அப்பீடத்தமர்ந்திருக்கும் பாணத்தின் மகிமை அளவிடற் பாலதோ! தாம் பாதாளத்தினின்று வெளிவந்த தலத்திலேயே தம் பிராணலிங்கமும் ஆழ்ந்து வேரூன்றி அமர்ந்ததைக் கண்ட அடல்விடையேறும் அண்ணலும் களிப்பெய்தி, அதையே தம் உறைவிடமாகக் கொண்டனர் என்று சொல்லப்படுகின்றது.

மூவுலகங்களிலும் தன்னையொப்பாரும் மிக்காருமில்லையெனப் புகழ்படைத்த இராவணனுடைய திக்கோடுமூலகனைத்துஞ் செருக்கடைந்த புயவலியையும் பயன்படாமற்செய்த மகாபலமுள்ள மூர்த்தியாதலால், அவருக்கு அதுமுதல் மகாபலேஸ்வரர் என்ற பெயரும், அவன் கைகளாற்பற்றி ஈர்த்தபொழுது பசுவின்காதுபோற் சுருண்டு நீண்டமையால் †கோகர்ணேஸ்வரர் என்ற பேரும் உண்டாயிற்றென்று சொல்லப்படுகின்றது. இத்தலத்திற்குக் கோகர்ணம் என்ற பேருண்டானதற்கு இதுவே முதற்காரணமென்று சொல்லுவாருமுளர்.

ஏழுமாமரமுருவிக்கீழுலகமென்றிசைக்கும்
ஏழுமூடுபுக்குருவிப்பின்னுடனடுத்தியன்ற
ஏழிலாமையான்மீண்டவவ்விராகவன்பகழி

போன்று, இப்பூமியையும் இதற்குக்கீழுள்ள ‡ ஏழுலகங்களையும் ஒருநொடியில் ஊடுருவிச்சென்றதும், சர்வவல்லமையுமுள்ள சர்வேஸ்வரனை பரமசிவனுடைய பூரணசத்துவமுமடங்கியதுமான பிராணலிங்கத்தை, அதன் சுயரூபத்தினின்று மாற்றி, மாட்டின் காதுபோல் முறுக்கி நீட்டிவிட்ட அந்த இராவணனுடைய கைகளின் வலிமையைத் தனிப்படப்புகழ்தல் மிகையாமென்றஞ்சி விடப்பட்டது.

---

*பாணம் = இலிங்கபாணம். †கோ = பசு; கர்ணம் = காது.

‡கீழுலகங்கள் ஏழாவன:— (1) அதலம், (2) விதலம், (3) சுதலம், (4) தராதலம், (5) மகாதலம், (6) இரசாதலம், (7) பாதாளம்.

மேற்கூறியவண்ணம், தம் சத்துவமடங்கிய மான் கொம்பைத் தேவர்களிடமிருந்து பெற்ற பிரமதேவர் †அதைப்புஷ்கரத்திலும், அவ்வாறே தம்முடைய சத்துவத்தைப் பெற்ற மகாவிஷ்ணு அதை *சாலக்கிராமத்திலும் ஸ்தாபித்தனராதலின், இம்மூன்று க்ஷேத்திரங்களுமே மற்றெல்லாவற்றினும் மிகச்சிறந்த சித்திக்ஷேத்திரங்களாகக் கருதப்படுகின்றன இம்மூன்றிலும் கோகர்ணமே உத்தமோத்தமமான க்ஷேத்திரமென்றும், அதை நினைத்தவளவிலேயே பிரமஹத்தி முதலிய மகாபாதகங்களும் சூரியனைக்கண்ட பனிபோல் நசிக்கின்றனவென்றும் கூறப்படுகின்றது.

## சதசிருங்கபர்வதம்; கோடிதீர்த்தம்.

பர்வதங்களுக்கெல்லாம் அரசனான மேருமலையின் அனேக சிகரங்களுள் கைலாசபர்வதம், இந்திரநீலபர்வதம், சதசிருங்கபர்வதம் ஆகிய இம்மூன்றும் முறையே சிவபெருமான், மகாவிஷ்ணு, பிரமதேவர் ஆகிய திரிமூர்த்திகளுடைய இருப்பிடங்களாக இருந்துவந்தன. அவ்விதமிருக்குங்கால் ஓர்நாள் கருடன் துர்முகன் என்னும்சர்ப்பத்தைத் தன்மூக்காற் கொத்தியெடுத்து வந்து, அதைவைத்துப் புசிக்க சதசிருங்கபருவதத்தில் எது தகுந்த இடமென்று தேடிப்பார்த்திருக்கும்போது, ‡அந்நாகமானது தானாகவே கருடனின் மூக்கினின்று நழுவி ¶ அந்நாகத்தின் அனேக குகைகளுளொன்றில் நுழைந்து மறைந்துகொண்டது. கருடன் தன்னாலியன்றவளவு துர்முகனைத் தேடியுமகப்படாமையாற் கோபங்கொண்டு, அப்பர்வதத்தை அதில் வசித்துக்கொண்டிருந்த பிரமதேவருடனும், முனிகணங்களுடனும், அதிலுள்ள இரண்டு கோடி தீர்த்தங்களுடனும் தன் மூக்கினால் தூக்கிச் செல்லுகையில், பிரமதேவர் நிஷ்டைகலைந்து, தம்பர்வதத்தை கருடன் தூக்கிச்செல்வதையறிந்து, தம் தவவலியால் அப்பர்வதத்தையமுத்தவே, கருடன் தன் சுமையைத்தாங்கமுடியாமல்

---

†புஷ்கரம் என்பது வடஇந்தியாவில் அஜ்மீரபட்டினத்திற்கு வடமேற்கில் 7 மைல் தூரத்திலுள்ளதும், புஷ்கர்ராஜ் என்று பிரசித்திபெற்றதுமான ஓர் புண்ணியக்ஷேத்திரம். *சாலக்கிராமம் என்பது நேபாலதேசத்தில் கண்டகிநதிக்கரையிலுள்ள ஓர் திவ்வியக்ஷேத்திரம்.

‡நாகம்=சர்ப்பம். ¶நாகம்=மலை.

கீழே தவம் புரிந்துகொண்டிருந்த அகஸ்தியரை நோக்கித் தனக்குதவி செய்யும்படிவேண்ட அவரும் கருடனிடம் மனமிரங்கி, எல்லாம் சிவன் செயலென்றுணர்ந்து, அம்மலையைத் தம் கையிலேந்திக் கடலில்வைத்தார். பிரமதேவரும் தம் வாசஸ்தானமான சதசிருங்கபர்வதம் தம் முயற்சியின்றியே உருத்திரனுடைய ஜன்மஸ்தானமான கோகர்ணக்ஷேத்திரத்தினருகில் அமைந்ததைக் கண்டு களிப்புற்று, தம் கமண்டலத்தை அவ்விடமே வைத்துவிட்டு சத்தியலோகம் சென்றார். அம்மலையிலிருந்த இரண்டு கோடி தீர்த்தங்களுள் ஒருகோடி மேற்கு நோக்கியோடி காயத்திரிநதியாகி சமுத்திரத்திற்சேர, மற்றொருகோடி கீழ்பக்கமிழிந்து ஒன்றுசேர்ந்து கோடிதீர்த்தமென்னும் குளமாயிற்று. இத்தீர்த்தத்தின் தென்கரையில், அகஸ்தியர் ஆசிரமமும், அகஸ்திய தீர்த்தமும், அகஸ்தியராற் பிரதிஷ்டை செய்யப்பட்ட வாசுதேவராலயமும், அவைகளுக்கருகில் கருடதீர்த்தமும், கருட மண்டபமும் இருக்கின்றன. இம்மண்டபத்தில் காயத்திரி முதலிய மந்திரங்களை ஜெபித்தவர்கள் இஷ்டசித்திகளையெல்லாம் அடைவார்களெனக் கருதப்படுகின்றது.

## தாமிரகௌரி.

முன்னொரு காலத்தில் பிரமதேவர் நிஷ்டையிலிருந்தபோது, அவர் வலதுகையில் நதிரூபமான ஓர் பெண் தோன்றியதாகவும், அவர் அப்பெண்ணைப் பரமசிவனைத்தேடியடையும்படி சொன்னதாகவும், அப்பெண் பரமசிவனைத் தேடிக்கொண்டு இத்தலம் வந்து தவம் புரிந்திருந்ததாகவும், பரமசிவனும் அவள்முன் தோன்றி அவளை வைவாஹிகம் என்னும் பர்வதத்தில் மணம் புரிந்துகொண்டதாகவும் சொல்லப்படுகின்றது. அப்பெண் இத்தலம் வந்து தோன்றினவிடத்திற்குத் தாமிர பர்வதம் என்றும், அவள் நதிரூபமாக ஓடினமையால் அந்நதிக்குத் தாமிர நதி என்றும் பேர் வழங்குவதாகத்தெரிகிறது. அந்நதி இக்காலத்தில் மகாபலேஸ்வரர் சந்நிதிக்கெதிரில் ஓடிக் கடலிற் கலக்கின்றது. அவ்வம்மையாரும் தாமிரகௌரி என்னும் பேருடன் மகாபலேஸ்வரர் சந்நிதிக்கு வடகிழக்கு மூலையில் கிழக்கு நோக்கிக் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கின்றார்.

ஜீவன்முக்த க்ஷேத்திரமான காசியிலும் மற்ற வட இந்திய க்ஷேத்திரங்களிலும் செய்வதுபோல் இத்தலத்திலும் பிராமணர்களும் பிராமணரல்லாதார்களும், தாங்களே தங்கள் கைகளால் அபிஷேகம் அர்ச்சனை முதலியவைகளைச் செய்து ஈஸ்வரனை ஆராதிக்கலாம். இந்நல்வழக்கம் இத்தலத்திற்குன் முதன்முதலில் ஆரம்பிக்கின்றது. இத்தலம் சென்னை இராஜதானியின் வடமேற்குக்கோடியிலுள்ள தென்கன்னடம் ஜில்லாவிற்கு வடக்கிலும், பம்பாய் இராஜதானியின் தென்மேற்குக் கோடியிலும் உள்ளதான வடகன்னடம் (North Canara) ஜில்லாவில் இருக்கின்றது. ஆகலின் சென்னை இராஜதானியின் எல்லையைக்கடந்து பம்பாய் இராஜதானியின் எல்லையை மிதித்தவளவிலேயே இச்சுதந்திரம் எல்லாருக்கும் கிடைத்து, அர்ச்சகரைத்தேடும் அலுப்புத்தீர்ந்துவிடுகின்றது.

## தேவாலய தீர்த்தங்கள்.

இந்த க்ஷேத்திரத்தின் அமைப்பு மிகச்சிறந்தது. நம் இந்தியாவிலுள்ள காசி முதலியவைகளுள் எந்த க்ஷேத்திரத்திலும் இந்தக்ஷேத்திரத்திலுள்ள எல்லா விசேஷங்களும் ஒருங்கே அமைந்திருப்பதாகச் சொல்லமுடியாது. ஒரு புண்ணியக்ஷேத்திரத்திற்கு அத்தியாவசியமானவைகளான சமுத்திரம், நதி, சங்கமஸ்தானம், பர்வதம், தவஞ்செய்தற்கேற்ற குகைகள், ஸ்நான வசதிக்கேற்ற நீர்வீழ்ச்சிகள், தீர்த்தவிசேஷமான குளங்கள், தரிசனத்திற்கருகமான பரமபவித்திர மூர்த்தி, அம்மூர்த்தியை யாவரும் எக்காலத்தும் அருகிற்சென்று அவரவர்களே தங்கள் கைகளால் அருச்சித்தாராதிக்கக்கூடிய வசதி, உத்தராயண தட்சிணாயண நிபந்தனையின்றி எக்காலத்தும் பிதுர்க்கடன்களை முடிக்கத்தக்க பரிசுத்தமான இடம், இறப்போரைத் தகனஞ்செய்வதற்குரிய உருத்திரபூமி, ஆகிய இவைகள் எல்லாம் ஒரே இடத்தில் அமையப்பெற்றிருக்கும் க்ஷேத்திரம் இதைத்தவிர வேறில்லையென்று திண்ணமாய்ச் சொல்லலாம். இத்தலத்தில் உயிரோடிருக்கும் பிதுர்க்களுக்கும் சிரார்த்தாதிகளைச் செய்து முடிக்கலாமென்று புராணவாயிலாய்த் தெரிகின்றது. ஆகலின் இதை

இமயமலையின் உச்சியிலுள்ள *பிரமகபாலத்திற்கொத்த மிகச் சிறந்த க்ஷேத்திரமாகக் கருதல்வேண்டும்.

இவ்வூரின் மேல்பாகத்தில் மேற்குப்பார்த்த வாயிலுடன் மகாபலேஸ்வரர் கோவில் இருக்கின்றது. அதன் நடுவில் மகாபலேஸ்வரர் சந்நிதியும் அதற்கடுத்த வடக்கில் சண்டேசுரர் சந்நிதியும் இருக்கின்றன. நம் தமிழ்நாட்டுக்கோவில்களில் இருப்பது போலன்றி இக்கோவிலில் சண்டேசுரர் §இலிங்க ரூபமாய் விளங்குகின்றனர். மகாபலேஸ்வரர் சந்நிதியைவிட்டு வெளிப்பிரகாரம் சுற்றிவந்தால் முதலில் மேற்குநோக்கிய சந்நிதியுடன் ஆதிகோகர்ணேஸ்வரர் விளங்குகின்றனர். இவர்தான் மேற்கூறியபடி பிரளயாந்த காலத்திற் பாதாளத்தினின்று பூதேவியின் காதின் வழியாய்த் தோன்றினவர். இவர் கோவிலுக்குக் கிழக்கில் சாட்சேஸ்வரரின் கிழக்குப்பார்த்த சந்நிதியிருக்கின்றது. இவர் இத்தலம் வருவோருக்குச் சாட்சியென்றும் இவரைத் தரிசியாதோர் இத்தலம் வந்த பயனையடையார் என்றும் சொல்லப்படுகின்றது. வடகீழ் மூலையில் வீரபத்திரர் (க்ஷேத்திரபாலர்) சந்நிதியும், அதற்கரு

---

*குறிப்பு:— பிரமகபாலம் என்பது பதரிகாசிரமத்திலுள்ள பதரிநாதன் சந்நிதிக்குச் சுமார் 50 கெஜ தூரத்தில் விஷ்ணுகங்கையின் வலது கரையிலுள்ள ஓர் சிறு கற்பாறை. அது ஒரு மனிதனுடைய தலையோட்டைக் குப்புறக் கவிழ்த்து வைத்ததுபோன்ற தோற்றத்தோடமைந்திருக்கின்றது. ஆதிகாலத்திற் சிவபிரான் அத்தலம் வந்ததும், அவர் கையில் ஒட்டியிருந்த பிரமாவின் கபாலம் பதரிநாதன் திருவருளால் அவர் கையினின்று நழுவி அங்குவீழ்ந்ததாகக் கருதப்படுகின்றது. இத்தலம் சென்று பிதுர்க்கடன்களை முடித்தோர், பின்பு எக்காலத்தும் சிரார்த்தம் முதலியவைகளைச் செய்யவேண்டிய அவசியமில்லையெனச் சொல்லப்படுகின்றது.

§ குறிப்பு:— இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சண்டேசுரர் இலிங்கரூபமாயிருத்தலின், அவர் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவரானவரும், திருக்குடந்தைக்கும் திருப்பனந்தாளுக்கும் இடையிலுள்ள திருச்சேய்ஞலூரெனும் திவ்வியக்ஷேத்திரத்தில் விசாரசருமர் என்னும் திருநாமத்தோடு அவதரித்து, தம் சிவபூசையிற்குறுக்கிட்ட தம் பிதாவின் கால்களை மழுவாய் மாறின துரும்பால் வெட்டி வீழ்த்தி திருவாய்ப்பாடியில் முத்தியடைந்து, சண்டேசுரபதம் பெற்ற சண்டேசுர நாயனாரல்லர் என்றும், இத்தலம் கலியுகவாரம்பத்தில் உண்டான தலமாதலின் இவர் கைலையில் சிவகணங்கட்குத்தலைவராயுள்ள சண்டேசுரர் என்றும் கொள்ளல் வேண்டும்.

கில் தாமிரகௌரியம்மை சந்நிதியும் இருக்கின்றன. தென்கீழ் மூலையில் இராவணன் இரத்தங்கக்கிக்கொண்டு வீழ்ந்துகிடந்த குண்டமும், தென்மேற்கு மூலையில் தத்தாத்ரேயரின் சந்நிதியும் இருக்கின்றன. தெற்குக்கோபுரவாயிலின் வழியாக வெளியிற் சென்றால் மகாகணபதியின் சந்நிதியைக் காணலாம். சர்வேஸ்வர னுடைய ஆத்மலிங்கத்தை இத்தலத்திற்ரூபிக்க இவரே காரண பூதராயிருந்தமைபற்றி, இத்தலம் வருவோர் முதலில் இவரைப் பூசித்துவிட்டுத்தான் மகாபலேஸ்வரர் சந்நிதிக்குப் போகவேண்டு மென்ற விதியேற்பட்டிருக்கின்றது. இராவணன் கையாற் குட்டுண்ட விநாயகர் வருந்தி நின்றதைக்கண்ட சிவபிரான் மனம் பொறுது அவர்முன் தோன்றி, அவரே இத்தலத்தின் முதற் கடவுளாய் விளங்குவரென்றும், அவரை முதலிற் பூசித்தவர்கள் தான் தம்மைப்பூசிக்க அருகராவார்கள் என்றும், தேற்றினதாக வும், அக்காரணம்பற்றியே இவ்வழக்கம் இக்காலத்தில் நடந்து வருவதாகவும் தெரிகிறது.

மகாபலேஸ்வரர் கோவிலுக்குத் தென்கீழ்த்திசையில் சுமார் கால்மைல் தூரத்தில் கோடி தீர்த்தமென்னும் குளமும் நடுவில் கோடீஸ்வரர் ஆலயமும் இருக்கின்றன. கோடிதீர்த்தத் திற்குப் போகும் வழியில் நாகநாதர் கோவிலும், அதற்கெதிரில் நாகதீர்த்தமுமிருக்கின்றன. நாகநாதர் ஆலயத்தில் நூற்றுக்கணக் கான நாகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன.

மகாபலேஸ்வரர் கோவிலிலிருந்து மேற்குநோக்கிச் சென் றால் உத்தரதட்சிணவாகினியாய் வரும் தாமிரநதியைக்கடந்து கடற்கரைபோகலாம். நதியும் மேற்கேதிரும்பி பச்சிமவாகினி யாகக் கடலில் சங்கமமாகின்றது. சங்கமஸ்நானம் மிக்கவிசே ஷம். அதற்கு நேர்தெற்கில் சதசிருங்க பர்வதமும், அதன் அடி வாரத்தில் இராமர்கோவிலும், அக்கோவிலுக்கெதிரில் இராம குண்டமென்னும் புண்ணியதீர்த்தமும் இருக்கின்றன. அக் குண்டத்தில் இராமதீர்த்தம் இலட்சுமணதீர்த்தம் என்னும் இரண்டு அருவிகள் மலையினின்று வீழ்கின்றன. அக்குண்டத் தைச் சுற்றிலும் "இராமபோளம்" என்னும் பேருள்ள கோபி சந்தனம்போன்ற சிறுகற்கள் கிடைக்கின்றன. அக்குண்டத்தில் ஸ்நானம் செய்வோர் அக்கற்களைப் பொறுக்கிச் சந்தனமிழைப்பது

போல் ஜலம்விட்டிழைத்து திருநீற்றுக்குப்பதிலாக நெற்றியிலும் சரீரத்திலும் பூசிக்கொள்ளுகின்றனர். ஆகலின் இத்தலத்தில் இராமர் கிருபையும் ஈஸ்வரனருளும் ஒன்றுசேர்ந்து இராம போளரூபமாகக் கிடைக்கிறதென்பதற்கு இதுவோர் சான்றாகும். இராமர் கோவிலிலிருக்கின்ற இராமலட்சுமண ஜானகியின் மூர்த்தங்கள் மிக்க அழகானவை.

இராமர் கோவிலுக்குக் கிழக்கில் தாமிரநதி கடலிற் சங்கமமாகிற விடத்தருகில் மலையின்மீதேறிப்போகும் பாதையிருக்கின்றது. அப்பாதைவழியாக ஏறிச்சென்றால், மலையினுச்சிக்குப் போவதற்கிடையில் பாதைக்குக் கிழக்கில் பிரமேஸ்வரர் ஆலயமும், சாயேஸ்வரர் (Chayeshwar) ஆலயமும் இருக்கின்றன. மலையினுச்சியில் இருக்கும் கோமுகம் என்னும் குகைக்கெதிரிலிருக்கிற சிறு துவாரம்போன்ற பள்ளத்தை, பிரமதேவர் விட்டுப்போன கமண்டலத்திலிருந்துண்டான தீர்த்தமென்று சொல்லுகின்றனர். இம்மலைக்கடுத்த தென்புறமுள்ள மலையினுச்சியில் உமாமகேஸ்வரர் ஆலயம் இருக்கின்றது. இம்மலையிலிருந்தே பார்க்கலாம். அம்மலையின் அடிவாரத்தில் உமாமகேஸ்வர தீர்த்தமிருக்கின்றது. அது மலையிலிருந்திழிந்துவரும் ஓர் சிற்றருவி. ஸ்நானவிசேஷம். இவைகளெல்லாவற்றினும் சிறந்ததான ஜடாயு தீர்த்தம் சதசிருங்க பர்வதத்தின் மேற்பக்கத்தில் சமுத்திரத்தையொட்டியிருக்கின்றது. இதற்குப்போவது மிகக்கஷ்டம். மலையிலிருந்து சமுத்திரமட்டத்திற்குச் செங்குத்தாய்க் கீழேயிறங்கி, சமுத்திரப்பக்கமிருந்து சுமார் 50 அடி ஆழமும் 2 அடி அகலமுமுள்ள ஒரு மலைப்பிளவினுட் செல்லல்வேண்டும். ஏககாலத்தில் ஒருவருக்குமேல் போகமுடியாது. ஸ்திரீகள் போவது கஷ்டம். இவ்விதமாக சுமார் 10 கெஜம் உள்ளே சென்றால், அங்குள்ள ஓர் சிறுமேடையில் ஒரு அழகான சிவலிங்கமிருக்கின்றது. அதற்கிருபுறமுமுள்ள செங்குத்தான சலவைக்கற்சுவர்போன்ற மலைப்பிளவிலிருந்து ஜலம் எக்காலத்தும் அவ்விலிங்கத்தின்மேல் சிறு சிறு துளிகளாக விழுந்துகொண்டிருக்கின்றது. அதை ஆழ்ந்து நோக்கில் தேவர்களே பக்கங்களில் மறைந்து நின்றுகொண்டு அபிஷேகஞ்செய்கின்றார்களோவென நினைக்கவேண்டியிருக்கின்றது. அவ்வித தெய்விக அபிஷேகஜலம் ஒரு சிறு அருவியாகி ஓடிக் கடலிற் கலக்கின்றது. அவ்வருவியே ஜடாயு

தீர்த்தமென்பது. இத்தகைய தனிமையான இடத்தில் ஒரு பெரியார் மடங்கட்டிக்கொண்டு இருந்துவருகிறார். அவர் வயது முதிர்ந்து பழுத்தபழமாய், திருநீறுபூசி எக்காலத்தும் சிவநாம ஸ்மரணை செய்துகொண்டிருப்பதைப்பார்ப்போர்,

மொய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ
அத்தகைய மூப்பெனு மதன்படிவ மேயோ
மெய்த்தநெறி வைதிகம் விளைந்தமுத லேயோ
இத்தகைய வேடமென வையமது சொல்வர்

என்பதிற்சற்றேனும் ஐயமில்லை.

இம்மலையின்மேல் மங்குஸ்தான் மரங்கள் ஏராளமாய் இருக்கின்றன. மங்குஸ்தான் பழங்கள் பர்மா மலேயா முதலிய அக்கரை நாடுகளிலிருந்து அபூர்வமாய் வருவதால் விலையதிகமா யிருப்பதோடுங்கூட நம் நாட்டில் எக்காலத்தும் கிடைப்பதில்லை. ஆனால் இவ்வூரார் இப்பழங்களை உண்ணக்கூடியவையென்றே கருதவில்லை. அம்மரங்களையும் மலையிலுள்ள மற்ற காட்டுமரங்களைப்போலவே பாவிக்கின்றனர். அவைகளின் பிஞ்சுகளும் காய்களும் மாவடுக்கள் மாங்காய்கள்போல உப்பிற்போட்டு உபயோகித்தால் *நாவிற்கு உருசியாயிருக்கின்றன. இதையும் இவ்வூரார் அறியவில்லை.

## உற்சவபூஜாவிதிகள்.

மகாபலேஸ்வரர் கோவிலிற் காலந்தவறாமல் பூசைநடக்கின்றது. அபிஷேக அர்ச்சனைகளான பின்பு தீபாராதனை செய்கின்றனரே தவிர, நம்நாட்டைப்போல் கற்பூரம் கொளுத்துவதில்லை. யாத்ரீகர்கள் யாராவது கற்பூரம் கொண்டுபோனால் உபயோகிக்கின்றனர். ஈசனைத் தரிசித்து வணங்குவதிலும் அவன் கோவிலை வலம்வருவதுதான் மிகச்சிறந்ததெனக்கருதுகின்றனர். இத்தலத்தில் மகாசிவராத்திரி காலத்தில் பெருந்திருவிழா நடக்கின்றது. சிவராத்திரி தினத்தோடு முடிவடைகின்றது. இந்தியாவின் எல்லாப்பக்கங்களினின்றும் ஏராளமான ஜனங்கள் வந்து

---

*குறிப்பு:— நாம் இத்தலம் சென்றிருந்தபோது மங்குஸ்தான் காய்களை உப்பிற்போட்டு உபயோகித்ததைக்கண்ட இவ்வூரார் நம்மைக் காட்டிலுள்ள காய்களைத்தின்னும் காட்டுமனிதரென நினைத்தனர்.

கூடுகின்றார்கள். அமாவாசைதோறும் இரதோற்சவம் நடக்கின்றது. தேர் கோவிலுக்குக் கிழக்கிலுள்ள கடைத்தெருவில் அலங்கரித்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அர்ச்சகர்களுள் ஒருவர் உற்சவ மூர்த்தியைத் தோளிற்கொண்டுசென்று தேரின்மீது வைக்கின்றனர். பிறகு தேர் அத்தெருவில் சுமார் 50 கெஜ தூரத்திலுள்ள ஸ்ரீ வேங்கடாசலபதி கோவில்வரையிற் போய்த் திரும்பிவிடுகின்றது. அக்காலத்தும் தேர் திரும்புவதில்லை. சில அர்ச்சகர்கள் தேரின் மேலேறி சுவாமியையெடுத்து முகத்தை மேற்குப்பக்கமாகத் திருப்பிவைத்துவிடுகின்றனர். தேரைப் போனவழியே இழுத்துவந்துவிடுகின்றனர். இவ்வூர் மேளத்திற்குத் தவில் அடிப்பதில்லை. தவிலுக்குப்பதிலாக கொந்தள வாத்தியத்தை வாசிக்கின்றனர், ஒத்தும் ஊதுவதில்லை. அதற்குப் பதிலாக எப்பக்கத்திலும் எவ்வூரிலுமில்லாத ஓர் புதுமையான வாத்தியத்தை உபயோகிக்கின்றனர். ஒரு சிறு தாம்பாளம் போன்ற பித்தளைத்தகட்டின் நடுவில் தோலிட்டு, அதை ஒருவன் தலையின் முன்பக்கத்திற் கட்டிக்கொண்டு, இருகைகளாலும் இரண்டு சிறு குச்சிகளை வைத்துக்கொண்டு, பெருமாள் மாட்டுக்காரன் செய்வதுபோல் ஒருபக்கத்தில் ஒரு குச்சால் தட்டியும் மற்றப்பக்கத்தில் மற்றக்குச்சால் இழுத்தும் வாசிக்கின்றான். அதன் ஒலி நம் நாட்டில் மேளக்கச்சேரிகளில் ஊதும் சங்கின் நாதம்போலிருக்கின்றது. தேர் மிகச்சிறிதானதால் அதன்மேல் அர்ச்சகர்களில் ஒருவரைத்தவிர வேறுயாரும் ஏறுவதில்லை. தேரோட்டம் மாதந்தோறும் நடப்பதால் அதிக ஜனங்கள் கூடுவதில்லை. சுவாமி தரிசனத்திற்கு வரும் ஜனங்களே தேரை இழுத்துவிடுகின்றனர். இக்கோவிலில் எல்லாவித அபிஷேகங்களும் செய்யலாம். குறைந்தபடித்தரம் ஐந்துரூபாய்.

## கோடிலிங்கார்ச்சனை.

இத்தலத்தில் மிகவும் ஒழுங்காகவும் பத்திசிரத்தையோடும் கோடிலிங்கார்ச்சனை செய்கின்றனர். யாத்ரீகர்களில் யாராவது 15 ரூபாய்க்குக் குறையாமற் கொடுத்தால், இப்பக்கத்துப் பிராமணர்கள் அதைப் பெற்றுக் கொண்டு மேற்கூறப்பட்ட இராமபோளத்துண்டுகளைக் கொண்டுவந்து, ஜலம்விட்டரைத்து மாவாக்கி, அம்மாவைக்கொண்டு சிறுலிங்கங்களாக உருட்டி,

அனேக பலகைகளின்மேல் பெரிய இலிங்கரூபமாகவும், கண்ணன் விநாயகர் அனுமார் முதலிய மூர்த்திகளின் ரூபமாகவும் சேர்த்துப் பரப்பிவைக்கின்றனர். இவ்விதமாகச் சிறு இலிங்கங்கள் ஒருகோடியாமளவும் செய்துவைத்து, அப்பூசைக்குரிய மந்திரங்களுடனும் பலவித நிவேதனங்களுடனும் பூசைசெய்கின்றனர். பூசைமுடிந்தபிறகு, அங்குவந்திருப்பவர்களுக்கு ஜாதி முதலிய எவ்வித வேற்றுமையும் பாராட்டாது விநியோகம் செய்கின்றனர். இந்நற்பழக்கமும் இத்தலத்திலிருந்தே ஆரம்பித்து விடுகின்றது. யாத்ரீகர்கள் கொடுப்பது குறைவாயினும் நிறைவாயினும், செம்பாயினும் வெள்ளியாயினும், இவ்வூரிலுள்ள பிராமணர்கள் முகத்தைச்சுளிக்காமலேற்றுக்கொண்டு *திருப்தியடைகின்றனர். அவர்கள் செய்தற்குரிய காரியங்களையும் குறைவறச்செய்து முடிக்கின்றனர். பூசை முடிந்தபிறகு அவ்விலிங்கங்களையெல்லாம் ஒன்றுசேர்த்து தாமிரநதி சங்கமத்திற்சேர்த்து விடுகின்றனர்.

## ஆடையாபரணாதிகள்.

இப்பக்கங்களிலுள்ள ஸ்திரீகள் எல்லாரும் மிகவும் நாகரீகமாக உடுத்திக்கொள்ளுவதனால் பிராமண ஸ்திரீகளுக்கும் மற்றவர்களுக்கும் வேற்றுமை தெரிவதில்லை. இவ்வித நாகரிக உடைமங்களூரிலேயே ஆரம்பித்துவிடுகின்றது. அதற்கு முழுதும் மாறாகப் புருஷர்கள் மிகவும் குறைந்த உடையை உடுக்கின்றனர். இவர்களைப்பார்த்தவளவில், காந்தியடிகள் இவர்களைப்பார்த்துத் தான் குறைந்த உடையுடுப்பது உசிதமெனக் கொண்டாடத் தொடங்கினரோவென ஐயுறவேண்டியிருக்கின்றது. வேதியர்கள் நான்குமுழநீளமும் ஒன்றரை அல்லது இரண்டுமுழ அகலமுமுள்ள மெல்லிய நார்மடிபோன்ற ஒருடையை உடுக்கின்றார்கள். கச்சம்போட்டுவிட்டால் முழங்காலுக்குக்கீழ் மூடுவதில்லை. பிராமணரல்லாதார் அந்த நான்குமுழத்துண்டையும் உடுப்பதில்லை. கீழே கோவணமும், மேலே அங்கவஸ்திரமும், தலையிற்பாகையுந் தான் அவர்களுக்குப் பூரண உடை. தேர், திருவிழா, கலியாணம் முதலிய விசேஷங்களுக்குப் போயினும் அதே உடைதான்.

* குறிப்பு:— இராமர் கொடுத்த கொடையானும் திருப்தியடையாத வேதியர்கள் திருப்தியடைவதை இத்தலமொழிய வேறெங்கும் கண்டிலம். இக்காரணம்பற்றியும் இதை மிகச்சிறந்த தலமாகக் கொள்ளல் வேண்டும்.

நவீன நாகரீகத்தில் மிகச்சிறந்தோரென நினைத்துக்கொண்டிருப்போரும், வெளியிற்சொல்லித் திரிவோரும், பிறந்தமேனிக்குத் திரும்புவதே (Back to Nature) பெருத்தநாகரீகமெனக்கருதும் இக்காலத்தில் இவ்வுடையை இகழ்வது அழகன்றென அஞ்சி விடப்பட்டது. இப்பக்கங்களில் பொருளாளர்கள் வீட்டில் கூட்டல், மெழுகல், பாத்திரங்கள் தேய்த்தல் முதலிய ஊழியங்களைச் செய்கிற ஒருவிதத் தாழ்ந்தவகுப்பைச்சேர்ந்த பெண்கள் கருவைமணியென வழங்கும் கருமணியின் கோவைகளை ஏராளமாய்த்திரட்டித் தங்கள் கழுத்திலணிந்துகொள்ளுகின்றனர். இக்கோவைத்திரளானது, அடிவாழைமரத்தளவு திரட்சியாகவும், இருபக்கமும் தோட்பட்டைகள் வரையில் மூடிக்கொண்டும், வயிற்றில் நாபிவரையில் தொங்கிக்கொண்டும் இருக்கின்றது. இக்கரும் பெருஞ்சுமையை ஏன் சுமக்கின்றனரென்று அவர்களைத்தான் கேட்கவேண்டும். இப்பக்கங்களிற் புஷ்பங்கள் கிடைப்பதருமையாதலால், எல்லாவிதக் காட்டுப்புஷ்பங்களையும், எல்லா நிறக் காட்டுப்பழங்களையும், ஸ்திரீகள் சிகையில் தரித்துக்கொள்ளுகின்றனர் நன்றாய்ப் பழுத்துச் சிவந்த மிளகாய்ப்பழங்களை வரிசையாகக் கோத்து அணிவதுதான் சிறந்த பூச்சூட்டல் எனக் கருதுகின்றனர்.

## பிராமணர் வரவேற்பு.

எல்லாப்பெரிய க்ஷேத்திரங்களிற் செய்வதுபோலவே இவ்வூரிலுள்ள "குருலிங்" என்னும் பட்டப்பெயர் புனைந்த பிராமணர்கள் அநேகர் கப்பற்பாதையில் கப்பல்வரையில்வந்தும், மோட்டார்ப்பாதையில் ஹநோவர் முகாம்பி என்னுமூர்கள் வரையில் வந்தும் யாத்ரீகர்களை மிக்க அன்புடனும் முகமலர்ச்சியுடனும் எதிர்கொண்டழைத்துச் செல்லுகின்றனர். அவர்கள் யாத்ரீகர்களை அழைத்துச்சென்று, தங்குவதற்கு இடவசதிகள் செய்துகொடுத்துக் கூடவேஇருந்து கோவிலிற் பூசை முதலியவைகளைச் செய்வித்து, சிரார்த்ததாதி பிதுர்க்கடன்களைமுடித்து, அவர்கள் கொடுப்பதை மனங்கோணாது பெற்று வழியனுப்புகின்றனர். கயை, காசி, பிரயாகை முதலிய தலங்களிலுள்ள "கயாவாலர்" "கங்காபுத்திரர்" "பிரயாக்வாலர்" என்னும் பிராமணர்களோ, யாத்ரீகர்களை முதலில் மிகவும் உபசாரஞ்செய்து வரவேற்று, அவர்கள் தங்கள் வலைகளிற் சிக்கியபின்னர், அவர்களிடமிருக்கும்

பொருளைச் சிறிது சிறிதாக அட்டை இரத்தமுறிஞ்சுவதுபோல் உறிஞ்சிவிடுகின்றனர். ஆகையால் இத்தலத்திலுள்ள பிராமணர்களை நம்பிப் போகும் யாத்ரீகர்கள் மற்றதலங்களில் துன்புறுவது போல் துன்புறுவதில்லை. பிராமணர்களும் காலாகாலங்களிற் சரிவர ஸ்நானசந்தியாவந்தனுதிகளைச் செய்து முடித்துக்கொண்டு, நிஷ்டர்களாகவும் சீலர்களாகவும் இருக்கின்றனர்.

கோகர்ணம்விட்டுப் புறப்பட்டுத் திரும்பவும் தத்ரி துறைமுகஞ்சென்று புகைக்கப்பலேறி மார்மகோவா என்னும் போர்த்துகல் தேசத்தாரின் முக்கியபட்டினம் சேர்ந்து புகைவண்டியேறலாம். சாலைமார்க்கமாக அன்கோலா (Ankola) என்னும் பட்டினம் வழியாக ஹூப்ளி சென்றும் ரயிலேறலாம். மார்மகோவா வழிபோனுல் போர்த்துகல் அரசாங்கத்தாரின் தீர்வை அதிகாரிகளால் (Customs Officers) சிறிது துன்பம் நேருமாதலால் ஹூப்ளிமார்க்கம் போவதே நலம். கோகர்ணத்திற்கும் ஹூப்ளிக்கும் சுமார் 100 மைல் தூரமிருக்கின்றது.

ஹூப்ளி:— இது பம்பாய் இராஜதானியின் பல ஜில்லாக்களுள் ஒன்றின் தலைநகர். இது நம் தென்னுட்டுப் பட்டினங்களில் மதுரைபோன்று, வானத்தையளாவும் மாடமாளிகைகள் கூட கோபுரங்கள் நிறைந்துள்ள அனேக விசாலமான வீதிகளோடு கூடியும், வாணிபச்செல்வம் வளர்ந்தோங்கியும், பருத்திநூற்சாலைகளும் நெசவுச்சாலைகளும் மிகுந்தும், உள்ள ஒரு பெரும்பட்டினம். திருவிளையாடற்புராணம் பாடிய சுத்தசைவராகிய பரஞ்சோதிமாமுனிவர்,

திங்களைச் சுண்ணஞ் செய்து சேறுசெய் தூட்டி யன்ன
பொங்குவெண் மாடப் பந்தி புண்ணியம் பூசந் தொண்டர்
தங்கண்மெய் வேடந் தன்னைத் தரித்தன சாலக் கண்கொண்
டங்கணன் விழவு காண்பா னடைந்தென மிடைந்த வன்றே.

வேறு

நாள்களுங்குளிர்திங்களுஞாயிறுமேனைக்
கோள்களுங்குளிர்விசும்பொரீஇக்குடிபுகுந்தாங்கு
வாள்கிடந்திராப்பகலொளிமழுக்கலால்வணிக
ராள்கலம்பகர்பீடிகைதரக்கநாடனைய.

என்று வருணித்த அழகான நகரவருணனை முழுதும் இந்நகருக்குப் பொருந்துமென்றுரைக்கில் சற்றும் மிகையாகாது

இப்பக்கங்களிற் பிரசித்திபெற்ற சித்தாரூடசுவாமி (Siddharudaswami)களின் மடம் இந்நகரின் தென்மேற்குப்பக்கத்தில் எல்லாப்பூர், அன்கோலா (Ankola) போகும் சாலையில் 2 மைல் தூரத்தில் இருக்கின்றது. இதிலிருந்த சுவாமிகள் மிகவும் வயது சென்றவராகவும் பெரிய மகானாகவும் காணப்பட்டார். தென்னாட்டுப் பெருந்தலங்களில் எவ்வாறு திருவிழாக்காலங்களில் சுவாமியை அலங்கரித்துத் தேர்மீதும், சப்பரங்களின்மீதும், பல்லக்குளிலும் வைத்து ஊர்வலஞ்சுற்றிவருகின்றனரோ, அவ்வாறே இந்நகரில் இந்த சுவாமிகளையே வைத்துப் பத்து நாள் திருவிழா நடத்திவந்தனர். தென்னாட்டில் சுவாமி பவனிவரும்போது எங்ஙனம் வீட்டுக்குவீடு தேங்காயுடைத்துப் பூசிக்கின்றனரோ அங்ஙனமே இவரையும் பூசித்தனர். தவிர, இந்த சுவாமிகள், பண்டையகாலத்திலிருந்த அரசர்கள் கொடுத்த ஏராளமான சொத்துக்களைக்கொண்டு மடாதிபதியானவரன்று. இவர் இவ்வூருக்குச் சுமார் 40 வருஷங்களுக்குமுன் ஒரு ஏழைப்பரதேசியாக வந்து ஒரு வீட்டுவெளித்திண்ணையில் படுத்திருந்ததாகவும், அச்சமயத்தில் அவ்வீட்டிலுள்ள ஒரு ஸ்திரீ தன்னை நீண்டகாலமாய்ப் பீடித்திருந்த வயிற்று வலியால் மிகவும் வருந்தினதாகவும், சுவாமிகள் தம் பையிலிருந்த திருநீறெடுத்தளித்து அணியச் சொன்னதாகவும், அத்திருநீறணிந்த நிமிடமே, எம்மருந்தாலும் தீராதிருந்த அக்கொடும் பிணி நீங்கிவிட்டதாகவும், அந்நாள்முதல் அவ்வீட்டார் இவரைப்போற்றிப் பணிந்து வழிபட்டு வந்ததாகவும், அதே மாதிரியாக இவ்வூரில் இவர் அநேக அதிசயங்களைச் செய்து இவ்வூரார் மனதைக் கவர்ந்துகொண்ட காரணம்பற்றி, அனேகர் அனேகமாயிரம் ரூபாய்களைச் செலவழித்து மடங்கட்டி வைத்திருப்பதாகவும் தெரிகின்றது. இக்காலத்தில் இம்மடத்தையும் இம்மடத்திற்கருகிலுள்ள பலகட்டிடங்களையும் பார்த்தால் ஒரு பெரிய அரசரின் அரண்மனைபோல் தோற்றுகின்றது. இப்பக்கங்களிலுள்ள எல்லாரும் வீடுதவறாமல் இம்மகான் படத்தை வைத்துப் பூசிக்கின்றனர்.

இவ்வூரிலுள்ள எருமை மாடுகள் மிகப்பெரியவை. கொம்புகளில்லாவிடில் சிறு யானைக்குட்டிகளெனவே நினைக்கவேண்டியிருக்கும். மாடுகள் பெரியவைகளாயிருந்தும், அவைகளின் கொம்புகள் அளவுக்கு மிஞ்சி நீண்டிருக்கின்றன. மாடுகள் நம்

நாட்டெருமைகளைவிட 2 அல்லது 3 பங்கு நீண்டும் பருத்து மிருந்தும், அவைகளின் கொம்புகள் 4 அல்லது 5 பங்கு நீண்டிருக்கின்றன. அம்மாடுகளின் கொம்புகள் சுமார் 1½ அல்லது 2 கெஜத்திற்குக் குறையாமல் நீண்டும், பின்புறம் சப்பைகளைத் தொட்டுக்கொண்டும் இருக்கின்றன. சிலமாடுகளின் கொம்புகள் பின்புறமாக வளைந்து வளராமல் பக்கத்தில் நேர்கோணமாக (Right-Angle) வளர்ந்து மாடுகள் நடக்கும் இடத்திலிந்து சுமார் 2 கெஜம்வரையில் அடைத்துக்கொண்டுபோகின்றன. அம்மாதிரி எருமைகளில் 4 எருமைகள் ஒரே வரிசையில் நடந்தால், தெருவில் வண்டிகள் முதலியன போவது கஷ்டம்.

பிரயாணிகள் தங்குவதற்கு ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து சுமார் அரைமைல் தூரத்தில் முனிசிபல் சத்திரம் ஒன்று இருக்கின்றது. வாடகை சிறிது கொடுக்கும்படி நேரிடினும் தங்குவதற்கு வசதியானது. ஆனால் ஜலகஷ்டம் அதிகம் சத்திரத்தருகில் குழாய்கள் வைக்கப்பட்டிருந்தும் குறிப்பிட்ட காலங்கள் தவிர மறறக் காலங்களில் குழாய்களில் ஜலம் வருவதில்லையாதலின், குழாயில் ஜலமில்லாத காலத்தில் வரும் பிரயாணிகள் படும் கஷ்டம் அதிகம். அச்சத்திரத்தின் தோட்டத்திற்குள் ஒரு கிணறு வெட்டிவைத்தல் அவசியம். ஜலவசதியின்றி சத்திரமிருப்பது பயனற்றதென அந்நகர் பரிபாலனசபையார் அறியார் போலும். இச்சத்திரத்தைத்தவிர, மேற்கூறிய சித்தாரூடசுவாமிகளின் மடத்திற்கருகில் பிரயாணிகள் தங்குவதற்கு வசதியான அநேக கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளுக்கெதிரில் நல்ல பரிசுத்தமான ஜலத்தோடுகூடிய குளம் ஒன்று இருக்கின்றது. ஜலம் கிடைக்காத இப்பெரும் பட்டினத்திற்கருகில் ஜலம் நிறைந்த தடாகத்தோடும், செழித்து வளர்ந்த மரங்கள், கொடிகள் நிறைந்த சோலைகளோடும், இம்மடம் அமைந்திருப்பது பெரும்பாலைவனத்தின் நடுவில் ஒரு லீலைவனம் இருப்பதுபோல் தோன்றுகிறது. இவ்வூரில் கன்னடமும் மகாராஷ்டிரமும் கலந்து பேசுகின்றனர். இதைக் கன்னடத்திற்கு வடக்கெல்லையாகவும் மகாராஷ்டிரத்திற்குத் தெற்கெல்லையாகவும் சொல்லலாம்.

இவ்வூரில் ரயிலேறி லோண்டா (Londa) என்னும் ஜங்ஷனில் வண்டிமாற்றி வடக்குநோக்கிப் போகும் கிளைப்

பாதை வழியாக மகாராஷ்டிர தேசத்திலுள்ள கோலாப்பூர் (கரவீரம்), நரஸோபாச்சிவாடி (Narasobachiwadi), ஸாத்தாரா முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு, பூனா பட்டினம் போகலாம். ஆனால் அவ்வழியாகச் செல்வதற்குமுன் மேற்கு நோக்கிப்போகும் பாதைவழியாகச் சென்று, அங்குள்ள தூத்சாகர் (Dudhsagar) என்னும் பெரும் நீர்வீழ்ச்சியையும், மார்மகோவா என்னும் போர்த்துகல் நாட்டாரின் இந்தியத் தலைநகரையும், பார்த்துத் திரும்புதல் நலம். ஹூப்ளிக்கும் லோண்டாவுக்கும் இடையிலுள்ள தார்வார் (Dharwar), அல்னுவர் (Alnawar) என்னும் பட்டினங்களைப் பார்க்கவிரும்புவோர் இறங்கிப் பார்க்கலாம். அல்னுவரில் மாட்டுக்கொம்பு, மான்கொம்பு முதலிய கொம்புகளால் சீப்பு, சிமிழ், அரிவாட்பிடி, கத்திப்பிடி, குடைப்பிடி, ஊன்றுகோற்பிடி (Handles for walking Sticks), ஊன்றுகோல் (Walking Sticks), ஆகிய சாமான்கள் மிக அழகாகவும் நேர்த்தியாகவும் செய்து, கூடியவளவு குறைந்த விலைக்கு விற்கின்றனர்.

தூத்சாகர் (Dudhsagar):— இது இந்தியாவிலுள்ள அரும் பெரும் நீர்வீழ்ச்சிகளுள் ஒன்று. மைசூர் நாட்டிலுள்ள ஷிமோகா (Shimoga) என்னும் பட்டினத்திலிருந்து சுமார் 64 மைல் தூரத்திலுள்ளதும், சுமார் 830 அடி உயரத்திலிருந்து வீழ்வதுமான, "கேர்சப்பா" (Gersappa) நீர்வீழ்ச்சி ஒன்றையே இதைவிட உயரத்திலும் அளவிலும் பெரிதாகச் சொல்லலாம். இது லோண்டாவிலிருந்து மார்மகோவா போகும் வழியிலுள்ளதும், இந்நீர்வீழ்ச்சியைப் பார்ப்பதற்காகவே புதிதாக ஏற்படுத்தப் பட்டிருப்பதுமான, தூத்சாகர் (Dudhsagar) என்னும் ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கில் சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் இருப்புப்பாதையையொட்டி இருக்கின்றது. ரெயில்வே ஸ்டேஷனுக்கும் இந்நீர் வீழ்ச்சிக்கும் இடையிலுள்ள ஒரு பெரிய மலையைக் குடைந்து இருப்புப் பாதை போட்டிருக்கின்றனர். இக்குகைப் பாதை (Tunnel) சுமார் 50 கெஜம் நீளமிருக்கலாம்.

இந்நீர்வீழ்ச்சி சுமார் 350 அல்லது 400 அடி உயரமிருக்கலாம். எல்லா மலைகளிலுமுள்ள சுனை நீரைப்போலவே சுத்தமாகவும் தெளிவாகவுமுள்ள இவ்வருவியின் நீர், கண்பார்

வைக்குக் கறுப்பாகத் தோற்றவேண்டியிருக்க, மிக்க உயரத்திலிருந்து விழும் காரணத்தால் நுரைமிகுந்து வெண்மையாக மாறி, அப்போது கறந்த பால்போற் காணப்படுகின்றது. அது காரணம்பற்றியே இதற்கு * தூத்சாகர் (பால்சமுத்திரம்) என்னும் பேர் வந்திருக்கிறதுபோல் தோற்றுகிறது. நல்ல மழை காலங்களில் நீர் அதிகமாக விழுவதால் அதிலிருந்து எழும்பும் நீர்த்திவலைகள் பக்கத்திற் போகும் வண்டித்தொடர்களையும் அவைகளிலுள்ள பிரயாணிகளையும் நனைத்துவிடாதிருக்கவேண்டி, இருப்புப்பாதைக்கும் நீர்வீழ்ச்சிக்கும் இடையில் ஒரு உயர்ந்த சுவர் எழுப்பி இருக்கின்றனர். காட்சி கண்ணைப்பறிக்கின்றது. மேட்டுப்பாளையமிருந்து உதகமண்டலம் போகும்பாதையிலும், செங்கோட்டையிலிருந்து கொல்லம் போகும் பாதையிலும், இலங்கைத்தீவில், கொளும்பிலிருந்து காங்கேசன்றுறை போகும் பாதையில் உள்ள போல்கவேலா (Polghawela) என்னும் ஜங்ஷனிற் பிரிந்து கண்டிக்குப் போகிற பாதையிலும் உள்ள அருமையான காட்சிகளுக்கு ஈடாகச் சொல்லலாம். செங்கோட்டையிலிருந்து கொல்லம் போவதுபோலவே, இவ்விடத்திலும் இருப்புப்பாதை மேற்குத்தொடர்ச்சி மலையை ஊடுருவிச் செல்லுகின்றது.

இம்மலையிலுள்ள குரங்குகள் காடிகளைப்போலக் கறுத்து நீண்டு அடர்ந்த உரோமங்களை உடைத்தாயிருக்கின்றன. அவைகளின் வால்களும் நீண்டு, உருண்டு, திரண்டு, மாணவர்கள் கடுதாசியிற் கோடுபோடுவதற்கு உபயோகிக்கின்ற கருங்காலித்தடிகள் (Black Rulers) போல் இருக்கின்றன. அவைகளின் நீளம் சுமார் ஒரு கெஜத்திற்குக் குறைவில்லை. இம்மலை வாலிசுக்கிரீவர்கள் இருந்த கிஷ்கிந்தை (Hampi)க்கருகிலிருப்பதால் இத்தகைய பெருங்குரங்குகள் இருக்கின்றன போலும். கிஷ்கிந்தையிலிருக்கும் குரங்குகள் இவைகளைவிட உருவத்திற் பெரியனவாகவும், வலிமையிலும் தோற்றத்திலும் சிறந்தனவாகவும் இருக்கின்றன. இவ்வூர் "மலேரியா" (Malaria) என்னும் ஜுரத்தை உண்டாக்கக்கூடிய விஷக்காற்றையுடையதாகச் சொல்லப்படுகிற

---

* குறிப்பு:— மகாராஷ்டிர பாஷையில் தூத் (Dudh)=பால்; சாகர்=சமுத்திரம்.

படியால், இங்கு இரவில் தங்குவதும், இவ்வருவியில் ஸ்நானம் செய்வதும் உசிதமன்று. இவ்வூரில் தங்குவதற்கு இடமில்லை. சாப்பாட்டிற்கு வழியில்லை. இவ்வருவியைப் பார்க்க விரும்பிப் போவோர், தகுந்த ஏற்பாட்டுடன் சென்று, பார்த்துத் திரும்பி விடுதல் நலம்.

மார்மகோவா:— இது இப்பக்கத்திலுள்ள முக்கிய துறை முகப்பட்டினங்களுள் ஒன்று. இவ்வூரிலிருந்து 7 மைல்தூரத்திலுள்ள பஞ்சிம் (Paujim) என்னும் போர்த்துகல் அரசாங்கத்தாரின் தலைநகரும், 10 மைல் தூரத்திலுள்ள பழையகோவா (Old Goa) என்னும் புராதன பட்டினமும் பார்க்கத்தக்கவை. பஞ்சிம் என்பது ஒரு அழகான சிறு பட்டினம். இதில் இந்துக்கள் அதிகமாக இருக்கின்றனர். இந்துக்கள் கோவில்களும் இருக்கின்றன. பழைய கோவாவில் கிறிஸ்துவர்கள் அதிகம். அனேக பழமையான கிறிஸ்துவக்கோவில்கள் இருக்கின்றன. அவைகளுள் காதீட்ரல் (The Cathedral) ஸேயின்ட் காஜெட்டா (St. Cajetta) பான் ஜீஸஸ் (Bon Jesus) ஆகிய மூன்றும் சிறந்தவை. பான் ஜீஸஸ் (Bon Jesus) என்னும் கோவிலில் கிறிஸ்துவர்களுள் பெரிய மகானுய்க்கருதப்படுகிற ஸேயின்ட் பிரான்ஸிஸ் ஜேவியர் (St. Francis Zavier) என்னும் பெரியாரின் பிரேதத்தை வெள்ளிச்சவப்பெட்டியில் (Silver Coffin) வைத்துப் போற்றிவருகின்றனர். இம்மகான் சுமார் 300 வருஷங்களுக்குமுன் மலாக்காவில் இறந்ததாகவும், அவர் சவத்தை அங்கிருந்தெடுத்துவந்து இக்கோவிலில் வைத்திருப்பதாகவும், அச்சவம் இதுவரையிலும் சற்றும் கெடாமலும் துர்நாற்றம் வீசாமலும் இருக்கிறதாகவும் சொல்லப்படுகின்றது. இதைப் பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை திறந்துவைக்கின்றனர். அக்காலத்தில் இந்தியாவின் எல்லாப்பாகங்களிலிருந்தும் ரோமன் கதோலிக் (Roman Catholics) கிறிஸ்துவர்கள் திரள் திரளாய் வந்து தரிசித்துவிட்டுப் போகின்றனர். இங்கு இச்சவமிருப்பது போலவே, இலங்கைத்தீவிலுள்ள கண்டியில் முற்காலத்தில் அங்கு அரசாண்டிருந்த அரசர்களின் அரண்மனையின் ஓர்பாகத்தில், கௌதம புத்தருடைய பற்களில் ஒன்றிருக்கின்றது. அதை அங்குள்ள புத்தர்கள் மிக்க பயபத்தியுடன் பூசித்துவருகின்றனர். "யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம்

பொன்." என்னும் பழமொழிக்கிணங்க, உண்மையிற் சித்தி யடைந்தவர்கள், எத்தேசத்தினராயினும் எம்மதத்தினராயினும், உடலோடிருப்பினும் போற்றத்தக்கவர்களே; உடல் துறந்திருப் பினும் போற்றத்தக்கவர்களே.

வெளியூர்களிலிருந்து போர்த்துகல் அரசாங்கத்தாரின் எல்லைக்குள் நுழைந்து திரும்புவோரிடம் ஆள் ஒன்றுக்குப் பன் னிரண்டணுவீதம் ஆள்வரி (Poll-Tax) வசூலிக்கின்றனர். இக் கெட்டவழக்கம் இவ்வரசாங்கத்திற்றான் இருந்துவருகின்றது. தவிர, இவ்வூர் வரும் வழியிலுள்ள க்யாஸில்ராக் (Castle Rock) என்னும் ரெயில்வே ஸ்டேஷனில் பிரயாணிகளையும் அவர்கள் சாமான்களையும் சோதித்து, தீர்வை போடுதற்குரிய வஸ்துக்கள் ஏதேனுமிருந்தால் அவைகளுக்குத் தீர்வை வசூலிக்கின்றனர்.

மார்மகோவாவைப் பார்த்தபின்பு, மீண்டும் ரயிலேறி லோண்டா சென்று வடக்குநோக்கிப் போகும் பாதைவழியாகக் கோலாப்பூர் செல்லவேண்டும். கோலாப்பூர் போவோர் மிராஜ் (Miraj) என்னும் ஜங்ஷனில் வண்டிமாற்றவேண்டும். லோண்டாவுக்கும் மிராஜுக்கும் இடையிலுள்ள கோக்காக்ரோட் (Gokak Road) என்னும் ஸ்டேஷனிலிறங்கி, அங்கிருந்து 3 மைல் தூரத்திலுள்ள கோக்காக் என்னும ஊரையும் அதிலுள்ள பெரிய பருத்திநூற்சாலையையும் பார்த்துச் செல்லலாம.

கோக்காக் (Gokak):—இவ்வூரிலுள்ள "கோக்காக் மில்ஸ் லிமிடெட்" (The Gokak Mills Ltd.) என்னும் பேருள்ள பருத்திநூற்சாலை திருநெல்வேலி ஜில்லா பாபநாசத்திலுள்ள "பாபநாசம் மில்ஸ் லிமிடெட்" (The Papanasam Mills Ltd.) என்னும் நூற்சாலையைவிட மிகப்பெரியது. இவ்வூருக்கு வடக் கில் ஓடுகிற ஆறு இவ்வூருக்கருகில் வந்ததும் திடீரென ஒடிந்து விழுவதுபோல் சுமார் 200 அடி ஆழமுள்ள பள்ளத்தில் செங்குத் தாய் விழுகின்றது அவ்வாற்றின் நீரை இரண்டு குழாய்களின் வழியாய்க் கீழே கொண்டுபோய், அதன் உதவியால் மின்சார சக்தியை உண்டாக்கி, அதைக்கொண்டு நூற்சாலையை நடத்து கின்றனர். அவ்வாற்றங்கரையில் ஓர் பழமையான சிவன்கோவில் இருக்கின்றது அதில் உபயோகித்திருக்கும் கற்களில் அருமை

யான சிற்பவேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. பிரயாணிகள் அக்கோவிலுக்கருகிலுள்ள மண்டபங்களுள் ஒன்றில் தங்கலாம். ஆனால் உஷ்ணகாலத்தில் உஷ்ணம் அதிகம். குளிர் காலத்தில் குளிர் அதிகம். இரவில் தங்கும்படி போவது உசிதமன்று. ஆற்றின் அக்கரையிலிருந்து கூலியாட்கள் ஆற்றைக்கடந்து வருவதற்காக ஆற்றின் குறுக்கே ஒரு பெரிய தொங்குபாலம் (Suspension Bridge) போடப்பட்டிருக்கின்றது. ஸ்டேஷனிலிருந்து இவ்வூர் வருவதற்கு ஒற்றைக்குதிரைவண்டிகளும் இரட்டைக்குதிரைவண்டிகளும் வாடகைக்குக் கிடைக்கின்றன. நம் நாட்டில் மாடுகளைப் பூட்டுவது போலவே, இப்பக்கங்களில் குதிரைகளை நுகத்தடிவைத்துப் பூட்டுகின்றனர். பார்க்க விந்தையாயிருக்கின்றது.

இவ்வூரிலிருந்து மீண்டும் கோக்காக்ரோட் (Gokak Road) ஸ்டேஷன் சென்று ரயிலேறி, மிராஜ் (Miraj) ஜங்ஷனில் வண்டிமாற்றி, கோலாப்பூர் போகும் வண்டியேறி அவ்வழியிலுள்ள முதல் ஸ்டேஷனான ஷிரோல் ரோட் (Shirol Road) ஸ்டேஷனிலிறங்கி, அங்கிருந்து 10 மைல் தூரத்திலுள்ள நரஸோபாச்சிவாடி (Narasobachiwadi) என்னும் திவ்விய க்ஷேத்திரம் செல்லல்வேண்டும். போகிறவழியில் ஸ்டேஷனிலிருந்து 6 மைல் தூரத்திலுள்ள ஷிரோல் பட்டினத்தில் வேண்டுமானால் தங்கிப் பார்த்துச் செல்லலாம். ஆனால் அங்கு பார்க்கவேண்டியது ஒன்றுமில்லை.

* நரஸோபாச்சிவாடி (Narasobachiwadi):— இத்தலத்திற்கு "வாடி" என்றும் "வாடிநரஸிம்ஹ" என்றும் நாமங்கள் வழங்குகின்றன. இவ்வருமையான க்ஷேத்திரம், ஐந்து சிற்றாறுகள் சேர்ந்து உண்டான காரணத்தால் பஞ்சகங்கா என்னும் பெயர் பூண்ட புண்ணியநதி வந்து கிருஷ்ணா நதியிற் கலக்குமிடத்தில் இருக்கின்றது. தவிர, எம்பெருமானுடைய திருநாமத்தையே தன் நாமமாகக் கொண்ட தனிச்சிறப்புப்பெற்றதும், பீமா

* குறிப்பு:—நரஸோபாச்சிவாடி என்னும் மகாராஷ்டிர மொழியைத் தமிழில் மொழிபெயர்த்தால், நரஸிம்மனார் என்றும், நரசிம்மனாகிய நம் அப்பனுடைய உறைவிடம் என்றும் பொருள்படும். தமிழிலும் "வாடி" என்னும் மொழி "தங்குமிடம்" என்று பொருள்படுதல் காண்க.

என்னும் சந்திரபாகா, துங்கா, பத்திரா என்னும் இரண்டு நதிகள் சேர்ந்துண்டான துங்கபத்திரா, முதலிய புண்ணிய நதிகள் தன்னிடம் வந்து ஐக்கியமாகிற பெரும்பேற்றைப் பெற்றதுமான கிருஷ்ணாநதியானது, இவ்வூருக்குச் சற்று தூரத்திற்றான் உற்பத்தியாகின்றது. த்ரியம்பகேஸ்வரம், நாசிக் (Nasik), பஞ்சவடி முதலிய க்ஷேத்திரங்கள் எவ்வாறு விருத்தகங்கையெனப் புகழப்படும் கோதாவிரிநதி உற்பத்தியாகும் இடத்திற்கருகில் அமைந்திருக்கின்றனவோ, அவ்வாறே இப்புண்ணிய க்ஷேத்திரமும் கிருஷ்ணாநதி உற்பத்திஸ்தானத்திற்கருகில் அமைந்திருக்கின்றது.

"உதிருகின்றசிற்றுண்டிகொண்டொலிபுனற்சடைமேன்
மதுரைநாயகன்மண்சுமந்திட்டமாநதியின்
முதிருமுத்தமிழ்விரகனதேடெனமொய்ம்மீ
னெதிர்புகுந்திடப்போவதுக்ருஷ்ணவெனுமியாறு,

சீலமேதகுபகீரதன்வேண்டலுஞ்சிவன்றன்
கோலவார்சடைக்கங்கையம்புனலினைக்குன்றின்
மேலைநாள்விடவந்தென,"

அருகில் இருக்கும் மேற்குத்தொடர்ச்சிமலையில் உற்பத்தியாகி, இத்தலத்தைச் சுற்றிக்கொண்டு, நாகாபரணம்போல் வளைந்தோடும் அற்புதக்காட்சியைக் கண்டு ஆனந்தித்தல் அவசியம். தவிர, இவ்வாற்றின் மணலில் நுண்ணிய அப்ரேகத்தூள்கள் (Minute pieces of Mica) அதிகமாகக் கலந்திருப்பதால் அவைகளும், மேலே வருணித்துள்ளபடி கூட்டங்கூட்டமாய் ஆற்றோட்டத்தில் எதிர்நோக்கிச்செல்லும் வெண்ணிற மீன்களும் சேர்ந்து, ஸ்படிகம்போல் தெளிந்தோடும் ஜலத்தில் மின்னுவதைப் பார்த்தால், நட்சத்திரமண்டலமே வானத்தைவிட்டிழிந்து இவ்வாற்றுக்குள் வந்து புகுந்துகொண்டதோவென ஐயுறத்தக்கதாயிருக்கின்றது.

ஆற்றிலிறங்கி ஸ்நானம்செய்ய அழகான கருங்கற்படிகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஸ்ரீதத்தாத்ரேயரின் ஆலயமும் ஆற்றோரத்திலேயே அமைந்திருக்கின்றது. ஆலயம் மிகச்சிறியது. இவ்வாலயத்தில் யாதொரு சிலையாவது விக்கிரகமாவது இல்லை. ஸ்ரீதத்தாத்ரேயருடைய திருப்பாதங்களெனக் கருதப்படும் தங்கத்திறைற் செய்யப்பட்ட இரண்டு பாதங்களிருக்கின்றன. எல்லா

அபிஷேக அர்ச்சனைகளும் அவ்விருபாதங்களுக்குத்தான் நடக்கின்றன. யாத்திரைக்காரர்கள் செய்யும் பொருளுதவிக்குத் தக்கபடி, இவ்வூர் வேதியர்கள் ஜெபம், ஹோமம் முதலியவைகளைச் செய்து ஸ்ரீதத்தாத்ரேயரைத் திருப்திசெய்துவைக்கின்றனர். இவ்வாலயத்திற்கருகில் விட்டோபா (பாண்டுரங்கன்), மகாதேவர் (சிவபிரான்), நரசிம்மமூர்த்தி சந்நிதிகளிருக்கின்றன. இவ்வாலயங்கள் எல்லாம் பஞ்சகங்காநதியானது கிருஷ்ணுவில் சங்கமமாகிற முனையில் கட்டப்பட்டிருக்கின்றன.

இத்தலத்தில் கிருஷ்ணுநதி உத்தரதட்சிண வாகினியாய் ஓடுகின்றது. அனேகமாய் எல்லாப் புண்ணிய க்ஷேத்திரங்களிலும் நதிகள் வடக்கிலிருந்து தெற்குநோக்கி ஓடுவதைக் காணலாம். எல்லாவற்றிலும் சிறந்ததும், ஜீவன்முக்த க்ஷேத்திரமெனப் புகழ்பெற்றதுமான காசிக்ஷேத்திரம் மட்டும், கங்கை தெற்கிலிருந்து வடக்குநோக்கிப்போகும் தனிச்சிறப்பைப் பெற்றிருக்கின்றது.

## குருந்த்வாட் (Kurundwad).

நரஸோபாச்சிவாடிக்கு அரைமைல் தெற்கில் குருந்த்வாட் என்னும் சிறுபட்டினம் இருக்கின்றது. இப்பட்டினமும் கிருஷ்ணுவின் வலதுகரையில், நேர்த்தியான ஸ்நானகட்டத்தோடும், அதன்மேலுள்ள அழகான ஸ்ரீதத்தாத்ரேயர் கோவிலோடும் அமைந்திருக்கின்றது. இங்குள்ள கோவிலில் ஸ்ரீதத்தாத்ரேயருடைய விக்கிரகம் இருக்கின்றது. பட்டினத்தின் நடுவிலுள்ள இராமர்கோவில் மிகவும் பளபளப்பான சலவைக்கற்களாற் கட்டப்பட்டு, அதிவிசித்திரமான மரவேலையுள்ள முன்மண்டபத்தோடு, நகருக்கு நடுநாயகமாக விளங்குகின்றது. இக்கோவிலிலுள்ள இராமர், இலட்சுமணர், ஜானகி விக்கிரகங்கள் தூவெண்மையான சலவைக்கல்லினுற் செய்யப்பட்டு, கறுத்தபுருவங்களோடும் சிவந்தஉதடுகளோடும் அழகான சிறு குழந்தைகள் போல் காணப்படுகின்றன.

இவ்வூரில் வியாழக்கிழமைதோறும் பெரியசந்தை கூடுகின்றது. அதில் ஏராளமான கால்நடைகள் விற்பனைக்கு வருகின்றன. நல்ல மகாராஷ்டிரதேசக் குதிரைகளும், எவ்வளவு பாரமாயினும் இலட்சியப்படுத்தாது ஈர்த்துச்செல்லக்கூடிய

பெரிய வண்டிமாடுகளும், ரிஷபங்களாக உபயோகப்படுத்து வதற்குத் தகுந்த பெருங்காளைகளும், சரசமானவிலைக்குக் கிடைக் கின்றன. இப்பட்டினம் குருந்த்வாட் என்னுமோர் சிறு நாட் டின் தலைநகர். இந்நாட்டரசர் இவ்வூரின் நடுவில் கட்டப்பட் டுள்ள ஓர் அழகான அரண்மனையில் வசிக்கின்றார்.

இத்தலம் (நாஸோபாச்சிவாடி) வருவோரை, பட் (Bhat) என்னும் பட்டப்பெயர் பூண்ட வைதிகப் பிராமணர்கள், ரெயில்வே ஸ்டேஷன்வரையில் வந்து எதிர்கொண்டழைத்துச் சென்று, அவர்களுக்கு வேண்டிய எல்லாவசதிகளையும் செய்து கொடுக்கின்றனர். இத்தகைய புண்ணிய க்ஷேத்திரங்களில் வைதீகத்தொழில் செய்து பிழைக்கும் வேதியர்களின் பட்டப் பெயர்கள் ஊருக்கு ஊர் வேறுபடுவதைக் காணலாம். அவர் கள் கேரளநாட்டில் "போற்றி" என்றும், பட்டர் என்றும், கன் னடதேசத்திலேயே உடுப்பியில் "ஆச்சாரி" என்றும், "தீர்த்தர்" என்றும், கோகர்ணத்தில் "குருலிங்" என்றும், மகாராஷ்டிர தேசத்திலேயே நாஸோபாச்சிவாடியில் "பட்" (Bhat) என்றும், கோலாப்பூர், ஜோதிபா (Jotiba) வில் "குரு" என்றும், பூனா விலும் அதற்கருகிலுள்ள ஊர்களிலும் "தேவ்" (Deo) என்றும், பண்டாபுரத்தில் "படவே" (Bhadave) என்றும், வடஇந்தியா வில் ஜப்பல்பூருக்கு (Jubbulpore) அருகிலுள்ள * "கோவாரி காட்" (Gowarighat) என்னும் நர்மதாதீரத்திலுள்ள புண்ணிய க்ஷேத்திரத்தில் "பட்லு" (Bhatlu) என்றும், * பிரயாகையில் "பிரயாக்வாலா" (Prayagwala) என்றும், * காசியில் "கங்கா புத்திரர்" என்றும், * கயாவில் 'கயாவாலா' (Gayawala) என்றும், * ஜகந்நாதம், * ஹரித்துவாரம், * அயோத்தியா, * துவாரகை, * வடமதுரை, * பிருந்தாவனம், * கோகுலம், * குருக்ஷேத்திரம், * நைமிசாரணியம், [தேவேந்திரனுக்கு வஜ்ராயுதத்திற்காகத் தம் முதுகெலும்பை உதவிய ததீசி முனிவருடைய வேண்டுதற் கிணங்கி, பரமசிவன் கட்டளையிட்டபடி இவ்விந்தியாவிலுள்ள எல்லாப் புண்ணிய தீர்த்தங்களும் வந்து ஒன்றுசேர்ந்து கலந் திருக்கும் காரணம்பற்றி] *மிஸ்ரிக் என்னும் சிறப்புப்பெயர் பூண்ட

---

* குறிப்பு:— மேற்கண்ட புண்ணிய க்ஷேத்திரங்களின் விவரங்களை, இப்புத்தகத்தின் இரண்டாம் பாகத்திலும் மற்றப்பாகங்களிலும் காண்க.

புண்ணிய க்ஷேத்திரம், [சிவசக்தியான ஜகதம்பிகையானவள் இந்தியா முழுவதையும் இரட்சிக்கக் கங்கணங் கட்டிக்கொண்டு விந்தியாவாசினி என்னும் திருநாமத்தோடு எழுந்தருளியிருக்கும் பெரும்பேறு பெற்றுள்ள] மிர்ஜாபூர் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களில் "பண்டா" (Panda) என்றும், பதரிகாசிரமத்தில் க்ஷேத்ரோபாத்தியாயர் என்றும் அழைக்கப்படுகின்றனர். நம் தென்னாட்டிலும் 'ஐயர்,' 'சாஸ்திரி,' 'தீட்சதர்,' 'கனபாடி,' 'ஜடாவல்லபர்,' 'சோமயாஜி,' 'உபாத்தியாயர்,' 'சர்மா,' 'ஐயங்கார்,' 'ஆச்சாரி,' 'பட்டர்,' 'பாகவதர்,' முதலிய அனேக நாமங்களிருப்பதைக் காணலாம் ஆனால் நம் தென்னாட்டில் சாஸ்திரம் படித்தவர்களும் படியாதவர்களும், வேதாத்தியயனம் செய்வோர்களும் வேதம் என்னும் மொழியையும் காதினாற்கேளாதவர்களும், உபாத்தியாயம் செய்வோர்களும் உபாத்தியாயத்தின் வாசனையையும் அறியாதவர்களும், வைதிகத்தொழில் செய்வோர்களும் ஆங்கிலம்படித்து நவீன நாகரீகத்தை அனுசரிப்போர்களும், ஹரிகதாகாலட்சேபம் செய்வோர்களும் சங்கீதமே இன்னதென்று அறியாதவர்களும், வேற்றுமையின்றித் தங்கள் தங்களுக்கு இஷ்டமான பெயர்களை வைத்துக்கொண்டிருப்பதைக் காணலாம். வடஇந்தியாவில் வைதீகர்களையும் கோவிற்பூசை செய்வோர்களையும் தவிர, மற்றவர்கள் சாதாரணமாய் மேற்சொல்லிய நாமங்களைப் புனைந்துகொள்ளுவதில்லை.

இவ்வூரில் யாத்திரைக்காரர்கள் தங்குவதற்கு வசதியான அனேக சத்திரங்களும் தர்மசாலைகளும் இருக்கின்றன. குருந்த்வாட் ஸ்நானகட்டத்தில் அந்நாட்டரசர் ஒரு பெரிய தர்மசாலை கட்டியுள்ளார். அதில் எத்தனை குடும்பத்தாராயினும் யாதொரு இடுக்கணுமின்றி தாராளமாய்த் தங்கியிருக்கலாம். கிருஷ்ணா நதியையொட்டி இருப்பதால் ஸ்நானம் முதலியவிஷயங்களுக்கு அதிசௌகரியமானது.

ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து இத்தலம் வருவதற்கு வாடகை வண்டிகளும் மோட்டார் வண்டிகளும் ஏராளமாய்க் கிடைக்கின்றன இத்தலத்தைத் தரிசித்தபின்பு மீண்டும் ஷிரோல்ரோட் (Shirol Road) ஸ்டேஷனில் ரயிலேறி கோலாப்பூர் என்று வழங்கும் கரவீரக்ஷேத்திரம் போதல்வேண்டும்.

## அத்தியாயம் 8.

---

### சிவசத்தியாய அம்பாள் பவானி வணக்கம்.

சுரும்புமூரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி யுத்தரியத் தொடித்தோள் போற்றி, கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப் பால்சுரந்த கலசம் போற்றி, இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட பவானியெனு மெம்பி ராட்டி, அரும்புமிள நகைபோற்றி யாரணநூ புரஞ்சிலம்பு மடிகள் போற்றி.

**வேறு.**

அண்டங்க ளெல்லா மணுவாக வணுக்க ளெல்லாம்
அண்டங்க ளாகப் பெரிதாய்ச் சிறி தாயினனும்
அண்டங்க ளுள்ளும் புறம்புங் கரி யாயினனும்
அண்டங்க ளீன்றவம் பாடுணை யென்ப ரறிந்தநல்லோர்.

**வேறு.**

செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மானிட மரபின் மேவியே
யறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
விறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம்.

சோலாப்பூர் (கரவீரபுரம்):— இத்தலம் கோலாப்பூர் நாட்டின் தலைநகர். இது ஓர் அழகான பெரும்பட்டினம். இந்நாட்டரசர் அப்பட்டினத்திலேயே மிக்க அழகான ஓர் அரண்மனையில் வசிக்கின்றனர். அவர், சென்ற 17-வது நூற்றாண்டில் பூனாவுக் கடுத்த சிவ்கட் (Shivghirh) என்னும் குன்றின்மேலுள்ள கோட்டையில் ஷஹாஜிபோன்ஸ்லே என்பவருக்கும், அவர் மனைவியான கற்புக்கரசியும் மகா தீர வீர மாதுசிரோமணியுமாகிய ஜிஜாபாயம்மைக்கும் பிறந்து, வீர சூர தைரிய சிகாமணியாய் வளர்ந்து, அக்காலத்தில் டில்லிபட்டினத்தில் அரசாண்டிருந்த மொகலாய சக்கரவர்த்தியான அவுரங்கசீபைப் பலவிதத்தாலும் வருத்தி, மகாராஷ்டிர அரசாட்சியை நம் பாரதநாட்டில் நிலைநாட்டின இராஜ சிம்ஹமான ஆதிசிவாஜி மகாராஜாவின் சந்ததி

யில் உதித்தவர். சிவாஜி மகாராஜாவின் மாற்றுந்தாய் வயிற்றிற் பிறந்தவரான வெங்கோஜி போன்ஸ்லே என்பவர்தான் நம் தமிழ் நாட்டிற்கு நடுநாயகமாய் விளங்கும் தஞ்சைமாநகரில் மகாராஷ்டிர அரசாட்சியை நிலைநாட்டினவர். ஆதலின் இவ்விரு குடும்பத்தினரும் ஒருவருக்கொருவர் தாயாதிகளாவார்கள். இந்நாடு, நீர்வளம் நிலவளத்திற் குறைவின்றி, எப்பக்கத்திலும் சோலைகளும், வெற்றிலைக்கொடிக்கால்களும், நெற்கழனிகளும் நிறையப் பெற்று, காண்போர் கண்களுக்கு அதியற்புதமான காட்சியை அளிக்கின்றது. பட்டினமும், உன்னதமான கூடகோபுரங்களோடும், அழகான மாடமாளிகைகளோடும், விசாலமான தெருக்களோடும் விளங்குகின்றது. இந்நாட்டையும் நகரையும் நேரிற் காண்போர்க்கு, சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் மிக அழகாக வரைந்துள்ள திருநாட்டுச்சிறப்பும், பரஞ்சோதிமாமுனிவர் திருவிளையாடற்புராணத்தில் அதிசிறப்பாகப் புகழ்ந்துள்ள நகரச்சிறப்பும் இந்நாட்டிற்கும் நகருக்குமே முழுவதும் பொருந்துமெனத் தோற்றுமென்பதிற் சற்றேனும் ஐயமில்லை.

கரும்படு களம ராலைக் கமழ்நறும் புகையோ மாதர்
சுரும்பெழ வகிலா விட்ட தூபமோ யூப வேள்விப்
பெரும்பெயர்ச் சாலை தோறும் பிறங்கிய புகையோ வானின்
வருங்கரு முகிலோ சூழ்வ மாடமுங் காவு மெங்கும்.

நாளிகே ரஞ்செ ருந்தி நருமலர் நரந்த மெங்கும்
கோளிசா லந்த மாலங் குளிமலர்க் குரவ மெங்கும்
தாளிரும் போந்து சந்து தண்மலர் நாக மெங்கும்
நீளிலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்க மெங்கும்.

மங்கல வினைக ளெங்கு மணஞ்செய்கம் பலைக ளெங்கும்
பங்கய வதன மெங்குந் தண்டளிர் நறவ மெங்கும்
பொங்கொளிக் கலன்க ளெங்கும் புதுமலர்ப் பந்த ரெங்குஞ்
செங்கயற் பழன மெங்குந் திருமக ளுறையு ளெங்கும்.

பண்டரு விபஞ்சி யெங்கும் பாதசெம் பஞ்சி யெங்கும்
வண்டறை குழல்க ளெங்கும் வளரிசைக் குழல்க ளெங்கும்
தொண்டர்த மிருக்கை யெங்குஞ் சொல்லுவ திருக்கை யெங்கும்
தண்டலை பலவு மெங்குந் தாதகி யலவு மெங்கும்.

மாடுபோ தகங்க ளெங்கும் வண்டுபோ தகங்க ளெங்கும்
பாடுமம் மனைக ளெங்கும் பயிலுமம் மனைக ளெங்கும்
நீடுகே தனங்க ளெங்கு நிதிநிகே தனங்க ளெங்கும்
தோடுசூழ் மாலை யெங்குந் துணைவர்சூழ் மாலை யெங்கும்.

வீதிகள் விழவி னார்ப்பும் விரும்பினர் விருந்தி னார்ப்பும்
சாதிக ணெறியிற் றப்பா தனயரு மனையிற் றப்பா
நீதிய புள்ளு மாவு நிலத்திருப் புள்ளு மாவு
மோதிய வெழுத்தா மஞ்சு முறுபிணி வாத்தா மஞ்சும்.

(திருத்தொண்டர் புராணம்)

தேசவீர் நீல மாடஞ் செம்மணிச் சென்னி மாடங்
காசறு கனக மாடஞ் சந்திர காந்த மாட
மாசற விளங்கு மின்ன மாட நீண் மாலைகூடற்
பாசிழை மடந்தை பூண்ட பன்மணிக் கோவை யன்ன

விரையகன் கதுப்பி னல்லார் வீங்கிள கொங்கை போழ்ந்த
வரையகன் மார்ப மன்றி வடுப்படார் தமக் கன்பில்லார்
உரையகன் மாண வாற்ற லொழுகுவார் பலகை யொள்வாட்
கரையகல் விஞ்சை வீரர் கணம்பயில் காட்சித் தெங்கும்.

மின்னவா ளன்ன வீசி வீங்குகார் தம்மிற் போர்மூண்
டென்னவான் மருப்பு நீட்டி யெதிரெதிர் புதையக் குத்தி
யன்னவா னென்ன வாய்விட் டதுவெனச் செந்நீர் சோரப்
பொன்னவா மகன்ற மார்பர் பொருகளி றூட்டு வார்கள்.

தாண்டுவா ருளமுந் தங்கள் பின்னிடத் துவக்குண் டூர்ந்துத்
தாண்டுமா னொற்றை யாழித் தேரினுந் தள்ளித் துள்ளப்
பாண்டில் வாய்ப் பசும்பொன்றேயப் பார்மகண் முதுகு கீண்டு
சேண்டிசை போய் மடங்கச் செல்வத்தேர் நடாத்து வார்கள்.

மைந்தர்தந் நெருக்கிற் சிந்து கலவையு மகளிர் கொங்கைச்
சந்தமுங் கூந்தல் சோர்ந்த தாமமுஞ் சிவிறி வீசு
சிந்துரப் பொடியு நாறத் தேனொடு மெழுந்து செந்தூள்
அந்தர வயிறு தூர்ப்ப வடுபரி நடாத்து வார்கள்.

தம்முயிர்க் கிரங்கா ராகித் தருக்கொடு மான மீர்ப்பத்
தெம்முனை யெதிர்த்தா ராற்றுஞ் செருவெனக் குருதி செங்கேழ்க்
கொய்ம்மலர்க் குடுமிச் சேவல் கோழிளந் தகர்போர் மூட்டி
வெம்முனை நோக்கி நிற்பார் வேறவற் றூறு நோக்கார்.

பெண்முத்த மனைய பேதைச் சிறுமியர் பெருநீர் வைகை
வெண்முத்த மிழைத்த சிற்றில் சிதைபட வெகுண்டு நோக்கிக்
கண்முத்தஞ் சிதறச் சிந்துங் கதிர்முத்த மாலை தட்பத்
தெண்முத்தி னகைத்துச் செல்வச் சிறூர்கடே ருருட்டு வார்கள்.

(திருவிளையாடற் புராணம்.)

இந்நகரிலிருக்கும் (1) இராஜதானிக்கலாசாலை (The Provincial College), 2) ஆல்பர்ட் எட்வர்ட் வைத்தியசாலை (The Albert Edward Hospital), (3) இந்நாட்டு மன்னரின் பழைய அரண்மனை, (4) புதிய அரண்மனை, (5) நகரசபை (The Town Hall), (6) தொழிற்கல்விச்சாலை (The Technical School), (7) ரங்காலா, கலம்பா ஏரிகள் (The Rankala and The Kalamba Lakes), இவைகள் பார்க்கத்தக்கவை. இப்பெரும் ஏரிகளின் உயர்ந்த கரைகள் மாலை நேரங்களில் உலாவுதற்குக் கடற்கரை போல் உதவுகின்றன.

க்ஷேத்திரமான்மியம்.

முன்னொரு காலத்தில் நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், பூர்வமீமாம்சம், உத்தரமீமாம்சம், ஆயுர்வேதம், சோதிடம், தர்ம அர்த்த மந்திர சாஸ்திரங்கள் முதலியவைகளை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்திருந்த மார்க்கண்டேய முனிவரானவர் தம்முடைய ஜன்மத்தை ஈடேற்றி முத்தியடையும் வழியைத்தேட எண்ணி, தாமிருந்து எல்லாம்வல்ல ஈஸ்வரனைக் குறித்துத் தவமியற்றுவதற்கு இப்பாரதகண்டத்தில் எது மேலான தலமென்று நாரத முனிவரை வினவ, நாரதர் பின்வருமாறு சொல்லலுற்றனர்.

ஆதிகாலத்தில் மகாலட்சுமி தான் வசித்துவரும் கரவீர க்ஷேத்திரந்தான் உயர்ந்ததென்றும், பரமசிவன் தாமிருந்து தாரக மந்திரோபதேசம் செய்துவரும் காசிக்ஷேத்திரந்தான் உயர்ந்ததென்றும், ஒருவருக்கொருவர் வாதித்துக்கொண்டிருந்தனர். அதை உணர்ந்த மகாவிஷ்ணுவானவர், தாமொரு தராசு கொணர்ந்து, அதன் ஒருதட்டில் கரவீரத்தையும், மற்றொரு தட்டில் காசியையும் வைத்துத் தூக்க, கரவீரமிருந்த தட்டு தாழ்ந்து, காசியிருந்த தட்டு உயர்ந்தது. அதைக் கண்ணுற்ற பரமசிவன் வியப்புற்று, மகாவிஷ்ணுவை நோக்கி அதன் காரணத்தை வினவ, மகாவிஷ்ணுவானவர், காசிக்ஷேத்திரம் முத்தி

ஒன்றைமட்டும் அளிக்குமென்றும், காவீரம் புத்தி, முத்தி இரண்டையும் அளிக்கவல்லதென்றும், அதுகாரணம்பற்றி காவீரம் காசியைவிட மேலான க்ஷேத்திரமென்றும் சொல்லி,

"வாராண ஸ்யாதிகம் க்ஷேத்ரம் காவீரம் புரம் மஹத்."

"அயோத்யா மதுரா மாயா காசி காஞ்சி அவந்திகா
புரீத்வாரவதீ சைவ ஸப்தைதா மோட்ச மாத்ரதா
காவீரம் * விரூ பாட்சம் ஸ்ரீசைலம் பாண்டு ரங்ககம்
ஸ்ரீரங்கம் சேது பந்தம்ச புக்தி முக்தி ப்ரதானிஷட்."

என்னும் புராணப் பிரசித்தமான சுலோகங்களை எடுத்துக்காட்டினர். அதைச் செவியுற்ற பரமசிவனுனவர் உடனே தம் கணங்களெல்லாவற்றையும் அழைத்துக்கொண்டு காவீரம் வந்து சேர்ந்தனர். பரமசிவன் காசியைவிட்டு அகன்றதைக் கண்ட மணிகர்ணிகை கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களும் அவரைப் பின்பற்றிச் செல்லலாயின. கங்கையானவள் பஞ்சகங்கா என்னும் நாமத்துடன் காவீரத்திற்குப் பத்து மைல் தூரத்தில் வசித்துவருகின்றனள். பரமசிவனும் கங்கையும் காசியைவிட்டகன்று காவீரம் சென்றடைந்ததைக் கேள்வியுற்ற பிரயாகை முதலிய தீர்த்தங்களும், பாண்டுரங்கர் முதலிய தேவர்களும், தூர்வாசர் நாரதர் முதலிய மகரிஷிகளும், காவீரம் போய்ச் சேர்ந்தார்கள். ஜயந்திநதியும் கோமதிநதியும் சேருகிற இடத்தில் துவாரகாபுரி நிர்மாணமாயிற்று. இவ்விடத்தில் நாரதரும்; தட்சிணத்தில் தூர்வாசரும், அகஸ்தியரும்; வாயுதிக்கில் சோமேஸ்வரருகில் பராசரரும்; விசாலதீர்த்தத்தினருகில் வேதவியாசரும்; மற்றும் இத்தலத்தைச் சுற்றி முப்பத்துமுக்கோடி தேவர்களும், வசிஷ்டாதி நாற்பத்தெண்ணுயிரம் ரிஷிகளும் வசிப்பதாகப் புராணப் பிரசித்தம்.

## அகஸ்தியர் காசியைவிட்டுக் கரவீரஞ்சென்றது.

முன்னெருகாலத்தில் அகஸ்தியர் தீர்த்தயாத்திரை செய்துவருங்கால், வழியில் சுத்யும்னமுனிவர் பத்மாசனம்போட்டு ஸ்ரீவைகுண்டபதியைத் தியானம் செய்துகொண்டிருந்ததைக் கண்ணுற்றனர். ஆனல் சுத்யும்னமுனிவர் தம்மிருகண்களையும்

* குறிப்பு:— விரூபாட்சம் என்பது, பல்லாரிக்கருகிலுள்ள ஹம்பி க்ஷேத்திரம்.

மூடினவராய் ஆழ்ந்த நிஷ்டையில் இருந்தமையால் அகஸ்தியர் வரவை அறிந்திலர். தாம் வலிய அவர் ஆசிரமம் வந்தும் தம்மைத் தக்கப்படி வரவேற்காது வாளாவிருந்த சுத்யும்னர் தம்முடைய மகிமையை அறியாது தம்மை அவமதித்தனரென நினைத்துக் கோபங்கொண்டு, மதயானையைப் போல் மதோன் மத்தராயிருந்த சுத்யும்னர் $ மதயானையாய்ப் போகக்கடவது என்று சபித்தனர். இதை அறிந்த பரம பாகவத சிரேஷ்டரான சுத்யும்னர், பக்தவத்சலனான பரந்தாமனைப் பலவாறு துதித்து, தாம் மனம் வாக்கு காயம் என்னும் திரிகரணங்களில் ஒன்றினாலாயினும், யாதொரு அபராதமும் செய்யாதிருக்க, பகுத்தறிவில்லாததும், சர்வாபீஷ்டதாயகனான புருஷோத்தமனை ஒருமுறையேனும் நினைத்து பக்திசெலுத்தத் தகுதியற்றதுமான மிருகயோனியிற் பிறக்கும்படியான கொடுஞ்சாபம் தமக்கு வந்து நேர்ந்ததே என்றும், தாம் யானையான காலத்தும் சர்வலோக இரட்சகனான ஸ்ரீமந்நாராயணனுடைய திருப்பாத கமலங்கள் எக்காலத்தும் எக்காரணம்பற்றியும் தம் மனதைவிட்டு அகலாதிருக்கும்படி அருள்புரியவேண்டுமென்றும், இரந்துவேண்டினர். அலைகடற்றுயின்றோனான ஆதிமூலமும் அவரிடம் இரக்கங்கொண்டு "அவ்வாறேயாகுக" என்று அனுக்கிரகித்துவிட்டு, அகஸ்தியர் தாம் எந்நாளும் காசிக்ஷேத்திரத்திலிருந்து, காசி விஸ்வநாதருடைய அனுக்கிரகம் பெற்று வருவதனாலுண்டாய தவச்செருக்கால், அவருக்கு அருட்செய்து வரும், பரமசிவனே தம்முடைய திருநாமமான தாரக மந்திரத்தை உபதேசித்து ஜீவகோடிகளை உய்விக்கின்றனர் என்பதை முற்றிலும் மறந்து, முன்பின் சற்றும் யோசியாது அனாவசியமாகத் தம் பக்தனைச் சபித்த காரணத்தால் அவரை எவ்வகையினாலாவது காசியினின்றும் வெளியேற்றக் கருதி, அத்தகைய காரியங்களை எளிதிற் செய்துமுடிக்க வல்லவரான நாரதரை வரவழைத்து, அவரிடம் தமது எண்ணத்தை வெளியிட்டு, அதை எவ்விதமாகவாவது நிறைவேற்றிவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். நாரதரும் வைகுண்டபதியின் கட்டளையைச் சிரமேற்கொண்டவராய்

---

$ குறிப்பு:— இந்த சுத்யும்ன முனிவர்தான் பிற்காலத்தில் கஜேந்திரனாகப் பிறந்து முதலையாற் பிடிபட்டு, ஆதிமூலமே என்றழைத்து, ஆதிகேசவப் பெருமானிடம் முத்திபெற்றவர்.

அதை எவ்வாறு முடித்துவைப்பதென்ற ஆழ்ந்தயோசனையுடன் பவதாபசிவராணியும் இபபாதகண்டத்திலுள்ள திவ்வியக்ஷேத்திரங்களுக்கு ‡ பாணோபகாரணியுமான நர்மதை நதி உற்பத்தியாகும் விந்தியமலையை நோக்கிச் சென்றனர். அவர் வரவைக் கண்ணுற்ற விந்தியபர்வதம் அதி பரபரப்புடன் அவரை வரவேற்று ஆசனம் கொடுத்து அமரச்செய்து, தான் மேரு திரிகூடம் ஸ்ரீசைலம், சஹ்யாத்ரி முதலிய பர்வதங்களை விட அனேக விஷயங்களில் உயர்ந்தவனென்றும், இப்பாதகண்டத்தைத் தான் ஒருவனே நடுநாயகமாக நின்று தாங்கி நிற்பதாகவும், தான் ஒருவன் இல்லாவிடில் இப்பூவுலகமே மேற்சொல்லிய பர்வதங்களோடு இருக்குமிடம் தெரியாது கடலில் விழுந்து ஆழ்ந்திருக்கக்கூடும் என்றும், பெருமை பாராட்டியதைக் கண்ட நாரதர், தாம் தேடிப் போன தெய்வம் தெருவில் வந்தது போலவும், கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோலவும் நினைத்து மகிழ்ந்து, "ஏ! விந்தியபர்வதமே! நீ சொல்லுவது முழுவதும் ஒப்பத்தக்கதே நீ ஒருவனில்லாவிடில் பூதேவி உயிர்வாழ்வதேது! பூதேவியின்றி மேரு முதலிய பர்வதங்களைக் காண்பவர் யார்? விந்தியமின்றி இந்தியா ஏது! பூதேவியென்பாள் உன் பெயரைவைத்துக்கொண்டன்றோ உயிர் வாழ்ந்திருக்கின்றனள். ஆயினும் மேருபர்வதமானது தான் பொன்மலையென்றும், தன்னிடம் கங்கை பிறந்து பூமிக்குவருகின்றனள் என்றும், தன்னையே பரமசிவன் உறைவிடமாகக் கொண்டிருக்கின்றனர் என்றும், தனக்குப் பார்வதி மகளாகப்பிறந்தனள் என்றும், தான் எல்லாப் பர்வதங்களைவிட மேலானவன் என்றும், தனக்கே பர்வதராஜன் என்ற பேர்

---

‡ குறிப்பு:— பம்பாயிலிருந்து அலஹபாத் (Allahabad) போகும் பெரிய இந்திய தீபகற்ப இருப்புப்பாதை (The Great Indian Peninsula Railway) யில் உள்ள **காண்ட்வா** (Khandwa)) என்னும் ஜங்ஷனிலிருந்து, உஜ்ஜயின் பட்டினம் போகும் **பம்பாய் பரோடா மத்திய இந்திய இருப்புப்பாதை** (The Bombay Baroda and Central India Railway) யின் கிளைப்பாதையிலுள்ள **மோர்ட்டக்கா** (Mortakka) என்னும் ஸ்டேஷனிலிருந்து சுமார் ஏழுமைல் தூரத்தில் உள்ளதும், துவாதச ஜோதிலிங்க க்ஷேத்திரங்களுள் ஒன்றுமான **ஓங்காரம்** என்னும் திவ்விய க்ஷேத்திர எல்லையில், நர்மதை நதியிலிருந்து சிவலிங்க பாணங்கள் கிடைக்கின்றன என்பதை அறிக. இந்த க்ஷேத்திரத்தைப்பற்றிய முழு விபரத்தை இப்புத்தகத்தின் இரண்டாம் பாகத்தில் விரிவாய்க் காணலாம்.

கிடைத்திருக்கின்றதென்றும், தன்னையே சூரிய சந்திரர்கள் வலம் வருகின்றார்கள் என்றும் பலவாறு பிதற்றிக் கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த யான், அதை உன்னிடம் சொல்லுவது தகுதியோ அன்றோவென யோசித்து வருங்கால், என்னை அறியாமலே இப்பக்கம் வரும்படியாகவும், உன்னிடம் அளவற்ற அன்போடுகூடிய உபசாரணைகள் பெறும்படியாகவும் நேர்ந்தது. நீ என்னிடம் உண்மையான அன்புடையோனாகலின் உன்னிடத்தில் நடந்ததை ஒளிக்க என் மனம் இடங்கொடுக்கவில்லை. ஆயினும் நீ அம்மேருவை ஒரு பொருட்டாக எண்ணுவாய் என்று நான் நினைக்கவில்லை.'' என்றுசொல்லிக்கொண்டே தம் வீணையுடன் ஆகாயவீதியிற் சென்றனர். அவ்வார்த்தைகளைக் கேட்ட விந்திய பர்வதமானது மனம்பொறாது ஆகாய வீதியிற் சென்ற நாரதரை மறுபடியும் அழைத்துவரச் செல்ல முயல்வதுபோல் வானத்தை அளாவி ஓங்கி வளரத் தொடங்கிற்று.

இஃதிற்றாக, வழக்கம்போல் கதிரவன் கீழ்த்திசையில் உதித்து மேற்றிசையை நோக்கிச் செல்லுங்கால், வழியில் வானத்தையொட்டி வளர்ந்திருந்த விந்தியமலையைக் கடந்து செல்லப் போதியதிறமையற்றவனாய் நின்றுவிட்டனன். சூரியன் மேற் செல்லாது ஓரே இடத்தில் நின்றுவிடவே, பூமியில் சூரியோதயம் அஸ்தமனம் இன்றி ஒரு பாகத்திற் சூரிய வெப்பம் தாக்க, மற்றொரு பக்கம் இருள் நிறைந்துகிடக்க பூலோகவாசிகளும், தேவலோகவாசிகளும் பரிதபித்தனர். இதையறிந்த நாரதரானவர் தமக்கு நல்ல சமயம் வாய்த்ததென மகிழ்ந்து, பாம்பின் விஷத்தைப் பாம்பைக்கொண்டே பரிகரிப்பதுபோல், ஒரு கர்வியின் செருக்கை மற்றொரு கர்வியைக்கொண்டு அடக்கவேண்டுமென்று கருதினவராய், மகாவிஷ்ணுவிடம் சென்று எல்லாத்தேவர்களையும் அழைத்து அகஸ்தியரிடம் சென்று தங்களுக்குண்டாயிருக்கும் இடையூற்றை நிவர்த்திக்கவேண்டுமென்று முறையிடும்படி கட்டளையிடச் செய்தனர். அவர்களும் அவ்வாறே சென்று வேண்ட அகஸ்தியர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கித் தம் தர்மபத்தினி லோபாமுத்திரையுடன் தெற்குநோக்கிச் சென்றனர்.

அகஸ்தியர் தன்னை நோக்கி வருவதைக் கண்ட விந்திய பர்வதமானது அகஸ்தியரிடம் தன் வலி செல்லாதென்று உணர்

ந்து தன் முன் வடிவத்தையடைந்து அகஸ்தியருக்குப் போக வழிவிட, அகஸ்தியர் அதை நோக்கிக் குறுநகை புரிந்து *தாம் ஒரு அவசரகாரியநிமித்தம் தெற்கே செல்வதாகவும், தாம் திரும்பவும் வடக்கே செல்லுமளவும் அவ்வாறே இருத்தல்வேண்டுமென்றும், கட்டளையிட்டுச்சென்றனர். அங்ஙனம் சென்றவர் தாம் மீண்டும் காசிக்குச் சென்றால், விந்தியம் முன்போல வளர்ந்து சூரியனைத் தடுத்துத் தேவர்களை உபத்திரவிக்கக்கூடுமென நினைத்து, தெற்கில் காசிக்கு நிகரான க்ஷேத்திரம் எதுவென்று நினைத்துப் பார்த்துத் தயங்கியிருக்குமளவில், முற்காலத்தில் மகாலட்சுமிக்கும் பரமசிவனுக்கும் நடந்த வாக்குவாதத்தையும், அதை மகாவிஷ்ணு தீர்த்துவிட்டதையும் நினைத்துக் களிகொண்டவராய் இக்கரவீரத்திற்கு வந்து சேர்ந்தனர்.

## பராசரமுனிவர் கரவீரம் சேர்ந்தது.

பராசரமுனிவர் நைமிசாரணியத்தில் தவம் செய்துகொண்டிருந்த காலத்தில் மகாவிஷ்ணு, பரமசிவன், மகாலட்சுமி இவர்கள் முன்னிலையில் காசியைவிடக் கரவீரமே உயர்ந்ததெனத் தீர்மா

*குறிப்பு:— ஆதிகாலத்தில் பார்வதி தேவியானவர் மலையரயன் மகளாகப் பிறந்து இமயமலையின்மேலுள்ள **திருக்கேதாரம்** என்னும் புண்ணியக்ஷேத்திரத்திற்கு சுமார் 10 மைல் தூரத்தில் மந்தாகினி நதியின் வலதுகரையில் அமைந்திருக்கும் **கௌரிகுண்டம்** என்னும் பரம பவித்திரமான க்ஷேத்திரத்தில் கடுந்தவம் புரிந்துகொண்டிருந்ததைக் கண்ணுற்ற கைலாசபதியானவர் தமது தேவியின் வியோகத்தைச் சகிக்கமாட்டாதவராய் அவரை **திரிஜுகிநாராயணம்** என்னும் குன்றிற்கு அழைத்துச் சென்று அங்கு மணம்புரிந்துகொண்டகாலத்தில் அத்திருமணத் திருவிழாவைக் கண்டு ஆனந்திக்க ஸ்ரீமந்நாராயணன் பிரமதேவர் முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் முதலிய எல்லாரும் தங்கள் தங்கள் மனைவிமக்கள் சகிதமாய் அங்குவந்து கூடவே, பூமியின் வடபாகம் தாழ்ந்து தென்பாகம் உயர்ந்ததைகண்ட சிவபிரான் தேவசிற்பியான (Divine Engineer) விசுவகர்மாவின் யோசனையின் பேரில் அகஸ்தியரைத் தென்திசைக்கனுப்பியதாகவும், அக்காலத்தில் வழியில் உயர்ந்து வளர்ந்திருந்த விந்தியபர்வதத்தின் செருக்கை யடக்கி வந்தனர் என்றும் புராணக்கதை இருப்பதையும் அறிக. மேற்சொல்லிய திருக்கேதாரம், கௌரிகுண்டம், திரிஜுகிநாராயணம் என்னும் புண்ணியதலங்களின் விவரங்களை இப்புத்தகத்தின் இரண்டாம் பாகத்தில் விரிவாய்க்காணலாம்.

ணிக்கப்பட்டதைத் தம் ஞானதிருஷ்டியால் அறிந்து பின்வருமாறு யோசிக்கலாயினர்:— கலியுகம் ஆரம்பிக்கும் காலம் நெருங்கிவிட்டது. அதில் ஜனங்களுக்கு ஆயுள் குறைவதுடன் ஞானம் வித்தை, சத்தியம் முதலிய எல்லா நற்குணங்களும் குறைந்துவிடும். வேத சாஸ்திரங்கள் ஆயிரக்கணக்காயிருக்கின்றமையால் கலியுக ஜீவர்களுக்கு அவைகளைப் படித்துத் தெரிந்துகொள்ள ஆயுளும் இராது; போதிய ஞானமும் இராது புராண இதிகாசங்களை எழுதவல்லவர் யார் இருக்கப்போகின்றனர். அவைகளை முறையோடு எழுதி வெளியிட வல்லவர் மகாவிஷ்ணு ஒருவரேயாதலின், அந்த வைகுண்டபதியின் அம்சமாக ஒருபிள்ளையைப் பெறுவதற்கு வழிதேடவேண்டும். அவர் தவத்தினால் அல்லது மற்ற எவ்விதத்தாலும் கட்டுப்படத்தக்கவர் அன்று. ஆதலின் அவரை நோக்கித் தவமியற்ற அருகமான புண்ணியதலம் கரவீரமே என்று தமக்குள் முடிவுசெய்துகொண்டு, தம் பத்தினி சத்தியவதி சகிதமாக நைமிசாரணியம்விட்டுப் புறப்பட்டுக் கரவீரம் வந்துசேர்ந்தனர்.

பிறகு, காவீரத்திற்கு வாயுதிக்கில் முறையே பிரமா, விஷ்ணு, சிவன் ஆகிய திரிமூர்த்திகளுடைய அம்சங்களான கும்பி பத்ரா சிவா என்னும் மூன்று நதிகளும் ஒருங்கே வந்து கலக்கின்ற காரணம்பற்றி, பிரயாகை என்னும் பேர் பெற்றிருக்கும் புண்ணியதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அதன் கரையில் உள்ளதும் ஆதியில் வாலகில்ய மகரிஷியானவர் தவம்புரிந்துகொண்டிருந்ததுமான ஆசிரமத்தில் தமது சிரார்த்தாதி பிதுர்க்கடன்களை முடித்துக்கொண்டு மகாலட்சுமியைச் சேவித்து அவ்வம்மையார் உத்தரவின்படி மேற்கில் தமது பர்ணசாலையை நிருமித்துக்கொண்டு பாராசரலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து, பாராசரதீர்த்தத்தை ஸ்தாபித்து, சிலகாலம் வசித்து வந்தனர். அதன் பிறகு, வாயு திக்கிலுள்ள பிரமகிரியை அடைந்து அங்கு பிரமதேவரால் உற்பத்திசெய்யப்பட்டிருந்த பிரமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த சோமேஸ்வரரைப் புருஷசூக்த ருத்திராதி மந்திரங்களால் சோடசோபசார பூசைசெய்துகொண்டு மகாவிஷ்ணுவை நோக்கித் தவம் செய்திருந்தனர்.

இவ்வாறு பராசரர் அனேகம் ஆயிரம் வருஷம் கோடையிற் பஞ்சாக்கினி மத்தியிலும் குளிர்காலத்தில் ஜலத்தின் மத்தியிலும் இருந்து, தம்முடைய பிராணனை மஸ்தகத்தில்வைத்துக் கொடுந்தவம்புரிந்தனர். அவருடைய தவவலிமையினுல் அவருடைய சிரசினின்றும் கிளம்பிய அக்கினியானது மூன்று உலகங்களையும் எரிக்கத்தொடங்கிற்று. அதைக் கண்ட தேவேந்திரன் தன்னுடைய இந்திரபதவிக்கு ஏதாவது ஆபத்து நேருமோ என்று அஞ்சி எவ்வகையானும் அம்மகரிஷியின் தவத்தைக் கெடுக்கக் கருதி, மன்மதனை வரவழைத்து "ஏ மன்மதா! காவீரத்தில் பராசரரிஷி செய்யும் கடுமையான தவத்தைப் பார்த்தனையா? அவர் இவ்விதமாக இன்னமும் சிறிதுகாலம் தவம்செய்வாராயின் நம்முடைய தேவலோகமே அழிந்துவிடும் என்பதற்குச் சற்றேனும் ஐயமில்லை. தேவர்களுக்கு முனிகணங்களால் யாதாயினும் தீங்கு ஏற்பட்டால் அத்தகைய தீங்கை நிவர்த்திப்பதற்காகவே பிரமதேவர் உன்னை சிருஷ்டி செய்திருக்கிறர். ஆகலின் நீ இக்கணமே காவீரம் சென்று எவ்வகையான சூழ்ச்சியினுலாவது அவர் தவத்தைக் கெடுத்து வந்து சேரவேண்டும். எனக்கு இருப்பது இரண்டே ஆயுதங்கள். ஒன்று வஜ்ஜிராயுதம்; மற்ருென்று நீ. முனீந்திரர்களிடத்தில் வஜ்ஜிராயுதம் பயன்படாது. ஆகையால் நீதான் அதற்குத் தகுந்தவன்." என்று வேண்டிக்கொண்டனன். தேவர்களுக்கெல்லாம் அதிபதியான இந்திரனும் தன்னிடம் வந்து இரங்கி வேண்டும்படி நேர்ந்துவிட்டதன்ருே என நினைத்துச் செருக்கடைந்த மன்மதன் தன்பாணங்களாற் பரமசிவனையும் மனம் கலங்கச்செய்த தனக்கு அப்பராசரர் ஒரு நிகரில்லையென்றும், தனக்கு உதவிக்காக அப்ஸரஸ்திரீகளையும் வசந்தனையும் அனுப்பினுல் தேவேந்திரன் நினைத்த காரியத்தைத் தான் ஒரு கணத்தில் செய்து முடிப்பதாகவும் வாக்குறுதி கூறினன். தேவேந்திரனும் தன்சபையில் நர்த்தனம்செய்பவர்களும் அழகில் ஒப்பற்றவர்களுமான அரம்பை ஊர்வசி முதலிய அப்ஸரஸ்திரீகளையும் வசந்தனையும் மன்மதனுடன் போய் வரும்படி கட்டளையிட்டனன். மன்மதன் தனக்குக் கிடைத்த பக்கபலத்தோடு பராசரர் தவம் செய்துகொண்டிருந்த பிரமகிரி வந்து சேர்ந்தனன். அங்கு ஸ்படிகம்போன்று குளிர்ந்தஜலம் நிறைந்த தடாகங்களும், பலவித புஷ்பங்களோடு விளங்கும் விருட்சங்களும் நிறைந்திருந்த

சோலைகளிருந்தன. அச்சோலைகளினிடையில் குயில் முதலிய அனேக பட்சிகள் இனிய குரலோடு பாடிக்கொண்டும் மயில் முதலிய பட்சிகள் ஆனந்தமாய் ஆடிக்கொண்டும் இருந்தன. தவிர, அங்கிருந்த பட்சிகளும் மிருகங்களும் தங்கள் தங்கள் பிறவிப் பகைமை நீங்கி ஒன்று சேர்ந்து கூடிக் குலாவி விளையாடியும், யானைகள் தங்கள் துதிக்கைகளால் சிங்கங்களுக்குண்டான தினவை ஆற்றிக்கொண்டும், நகுலங்கள் சர்ப்பங்களின் பணங்களின்மேல் ஏறிக்குதித்துக்கொண்டும், பசுவும் புலியும் ஓர் துறையில் நீரருந்திக்கொண்டும், "ஓடும் மீன் ஓடி ஒரு மீன்வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு." என்னும் ஆன்றோர் மொழியும் பொய்க்கும்படி, ஓடும் மீன்கள் ஓடுவதையும் வரும் மீன்கள் தங்கள் முன் வந்தாலும் தங்கள் மூக்குகளின்மேலும் சிறகுகளின்மேலும் துள்ளிக்குதித்து விளையாடுவதையும், கொக்குகள்பார்த்து ஆனந்தித்துக்கொண்டிருப்பதையும் கண்ட மன்மதன் பிரமித்து நின்று, இத்தகைய அதிசயமான சக்திவாய்ந்த முனிவரைத் தான் எவ்வாறு கெடுப்பது என்ற எண்ணத்தோடு பராசரர் இருக்குமிடம் நோக்கிச்சென்றனன்.

மன்மதனானவன் பராசரர் இருந்த இடத்தை நெருங்கி அவர்மேல் தன்னுடைய உன்மத்தம், மதனம், மோகனம், சந்தாபம் என்னும் நால்வகைப் பாணங்களையும் எய்துபார்த்தனன். அவைகள் எல்லாம் பராசரர் தவவலியாலும், அவரிருந்து தவம் செய்த புண்ணிய க்ஷேத்திரத்தின் மகிமையாலும் பயனற்றவாயின. இறுதியில் மன்மதன் மனவருத்தமுற்று ஆதிகாலத்தில் தான் பரமசிவன்பேரில் ஏவின வசீகரணம் என்னும் கொடுமையான பாணத்தை ஏவவே, அது பராசரர் நெஞ்சில் தைத்து அவரைப் பலவாறு துன்புறுத்தி மதிமயக்குவதை உணர்ந்த திரிகால ஞானியான அம்முனிவர் கண்விழித்துப் பார்த்தனர். அவர் கோபாக்கினிக்கு இலக்காக நேருமேயென அஞ்சி அரம்பைதவிர மற்றெல்லோரும் அங்கிருந்த சோலைகளினிடையில் மறைந்துகொண்டனர். தனிமையாய் நின்ற அரம்பையானவள் அங்கு வந்த காரணத்தை நன்கு அறிந்துகொண்ட அம்முனிவர் அவளைநோக்கி, "நீ உன் ஊழ்வினைப்பயனாக, அனேக ஆடவர்கள் நிறைந்திருக்கும் அரங்கங்களில் நாணமின்றித் தலையாட்டிக் கண்காட்டிக் கைநீட்டி நாட்டியம் புரிந்து உயிர் வாழ்ந்துழல்

வதை மறந்தனைபோலும். எய்தவனைவிட்டு அம்பை நோவதிற் பயனென் எனநினைத்து உன்னைச் சபியாதுவிடுத்தனன். நீ இக்கணமே என் ஆசிரமம்விட்டு அகல்வாயாக." என்று கட்டளை யிட்டனர். பராசரர் முனிந்துகூறிய மொழிகளைக் கேட்ட அரம்பையானவள் குறுநகைபுரிந்து, "ஏ மா தவமுனிவரே! உமது தவம் முழுவதும் அவமாயினதையும், உமது திரிகாலஞானத்தைக் கொண்டு ஒருகாலத்தையும் அறிய இயலாமற்போனதையும் கண்டு நான் மிகவருந்துகின்றேன். 'மானம் படவரின் வாழாமை முன்னினிதே.' என உம்மைப்போன்றபெரியார் ஒருவர் சொல்லி யிருப்பதை மனத்திற்கொண்டு நீர் சொனனதைப்போல் என் மானத்தைவிட்டு இந்திரசபையில் நடித்து உயிர்வாழ்வதைவிட உம்மை இணக்கி உம்முடன் கூடிச்சுகித்திருப்பது; தவறினல் உம்முடைய சாபத்தை ஏற்று உயிர்விடுவது; என்ற தீர்மானத்து டன் இங்கு நான் வந்திருப்பதை நீர் அறியாமற் போனது எங்ஙனம்?" என்று விடையளித்து அசையாது நின்றனள். அவள் மனவுறுதியை யுணர்ந்த பராசரர் தாம் அவளைச் சபித்தால் தம் தவத்திற்குப் பங்கம் நேரிடுமென நினைத்துத் தம் பத்தினி யான சத்தியவதியை அழைத்து அப்பெண்பேயை அவ்விடம் விட்டு அகற்றும்படிக் கட்டளையிட்டனர். அவ்வம்மையார் தம் பதியின் ஆணையைச் சிரமேற்கொண்டு அரம்பை நின்றவிடத்தை நோக்கினர். அங்கு நிகழ்ந்ததை யறிந்த அரம்பையும் அவள் துணைவர்களும் கற்பிற்கணிகலமான சத்திவதியம்மையாரின் சாபத்திற்கு அஞ்சி ஓடியொளியத் தொடங்கினர். அதைக்கண்ட பராசரர் மனம் பொருது அவர்கள் தமது தவத்தைக் கெடுக்க வந்தவர்கள் என்பதையும் நினையாது தம் ஆசிரமத்திற்கு வந்தவர் கள் யாராயினும் அதிதியுபசாரனை பெறுமற் செல்வது தமது இல் வாழ்க்கைக் கிழுக்காகுமென்று கருதி, இருந்தோம்பி இல்வாழ் வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற்பொருட்டாத லின், அத்தகைய விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மருந் தெனினும் வேண்டற்பாற்றன்றென மதித்துத் தம்மனைவியை விளித்து மன்மதன் முதலியவர்களை அழைத்துத் தக்கபடி உப சரித்து விருந்திட்டனுப்பும்படி பணித்தனர். அதையறிந்த மன் மதாதி தேவர்கள் வெட்கித் தலைகுனிந்து, பராசரர் ஆசிரமத்தை யணுகி அவரையும் அவர் தருமபத்தினியான சத்தியவதியையும்

வலம் வந்து நமஸ்கரித்து அவர்கள் மேற்கொண்ட காரியம் இனிதேமுடியும் என்று பன்முறை வாழ்த்தினர். அவர்கள் தலைவனான மன்மதன் அவரை நோக்கி "ஏ முனிசிரேஷ்டரே! இது காறும் என்னைவென்றவர் பரமசிவன் ஒருவரே. அவரும் தம் கோபத்திற்கிடங்கொடுத்து என்னை எரித்தனர். நீரோ உம்முடைய கோபத்தை அடக்கிக்கொண்டு உமது காரியத்தை முடித்துக் கொண்டீர். 'குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி கண மேயுங் காத்தலரிது.' என்பதை நன்றாயுணர்ந்திருந்தும் நாங்கள் உம்மிடம் விளையாடத் துணிந்தோம். ஆனால் நீரோ 'தன்னைத் தான் காக்கிற் சினங்காக்க.' என்னும் ஆன்றோர் மொழியைக் கடைப்பிடித்தவராய்க் குன்றின் மேலிட்ட விளக்காக ஒளிர்ந்து விளங்கினீர். ஆதலின் உமது குலத்திலுதித்தோரையும் உமது நாமத்தைச் சொல்வோரையும் நீர் உறைவிடமாகக்கொண்ட இக்காவீபத்தில் உறைவோரையும் நான் இனி எக்காலத்தும் பீடிப் பதில்லை. இத்தலத்திலுறைபவர்கள் யாவரும் குணசீலர்களாக வும் நிஷ்டர்களாகவுமிருந்து புத்தி முத்தி இரண்டும் பெற்றுப் பேரின்பமெய்துவர் என்பதில் ஐயமில்லை." என்று பன்முறை யும் வாழ்த்திச் சென்றனன்.

இங்ஙனம் தேவர்களால் நேர்ந்த இடையூறு நீங்கினதும் பராசரர் திரும்பவும் மகாவிஷ்ணுவை நோக்கிக் கடுந்தவம் புரிந் தனர். அத்தவத்தினலாய அக்கினியானது பாதாளம் வரையிற் சென்று தாக்கி நாகலோகவாசிகளை வருத்த, அவர்கள் பராசரர் ஆசிரமத்தில் உள்ள குண்டங்களில் இருந்த ஜலம் முழுவதையும் பூமியின் வழியாகவே பாதாளத்திற்கு இழுத்துக்கொண்டனர். பராசரர் அதிகாலையில் எழுந்து தம் ஸ்நான சந்தியாவந்தனுதிகளை முடிக்க தீர்த்தக்கரைக்குச் சென்றபோது, அதில் ஒருதுளி ஜலமா வதின்றி முழுதும் உலர்ந்திருந்ததைக் கண்டு மனம்பொறாராய்த் தம் ஞானதிருஷ்டியினல் நடந்ததை உணர்ந்து, கருடமந்தி ரத்தை ஜபித்து ஒரு தருப்பைப்புல்லை எடுத்துப்போட்டனர். அந்த தருப்பைப்புல்லானது நாகலோகம் சென்று அனேக கருடர் கள் உருக்கொண்டு நாகங்களைக் கொல்லத்தொடங்கிற்று. அதை யறிந்த நாகங்கள் அஞ்சி நடுநடுங்கி ஓடோடியும் வந்து பராசரரை வணங்கித் தாங்கள் அறியாமையாற் செய்த பிழையைப் பொறுக்

கும்படி வேண்ட பாராசரும் அவைகளின் வேண்டுதற்கிசைந்து தாம் கருடமந்திரோச்சாடனம் செய்து அனுப்பிய தருப்பைப் புல்லை மீண்டும் தம்மிடம் வரவழைத்துக்கொண்டு, நாகங்கள் எல்லாவற்றையும் அவ்விடத்திலேயே தங்கியிருக்கும்படியும், அத்தலத்துறைவோருக்கு நாகங்களால் உண்டாகும் துன்பங்கள் ஒன்றும் நேராதிருக்கும்படியும் வரமளித்தனர். அக்காரணம் பற்றி அவ்விடத்திற்குப் "பன்னகாலயம்" என்ற நாமமும் உண்டாயிற்று என்று தெரிகிறது.

இவ்விதமாகத் தம் தவத்திற்குண்டான அனேக இடையூறுகளையும் நிவர்த்தித்துக்கொண்டு மறுபடியும் மகாவிஷ்ணுவைக் குறித்து முன்போலக் கடுந்தவம்புரியத் தொடங்கினர் அவர் தவத்திற்கிரங்கி மகாலட்சுமி தேவியார் பிரசன்னமாகி அவரை நோக்கி அவருக்கு வேண்டிய வரத்தைக் கேட்டுக்கொள்ளும்படியாகச் சொல்லினர். பாராசரர் கண்விழித்துப் பார்த்துத் தம்முன் மகாலட்சுமி பிரசன்னமாகியிருப்பதைக்கண்டு, முன் மன்மதன் முதலானவர்கள் வந்து தம்முடைய தவத்தைக் கெடுக்க முயன்றதுபோல், மகாலட்சுமியும் இவ்வுலகில் அனுபவித்தற்குரிய செல்வம் முதலிய போகபோக்கியங்களை அளித்துத் தம் தவத்தைக் கெடுக்க வந்திருக்கின்றனளோவென ஐயமுற்று அவர் மகாலட்சுமியை நோக்கி, "நான் மகாவிஷ்ணுவைக்குறித்துத் தவம் புரிந்தேனேயன்றி உன்னைக்குறித்தன்றே. அங்ஙனமிருக்க நீயும் மற்ற சாமானியத் தேவர்களைப்போல் என் தவத்தைக் கெடுக்க முயன்ற காரணம் என்ன? உன்னிடத்திற் பெறவேண்டுவது எனக்கு யாதொன்றுமில்லை. நீ வந்தவழியைப் பார்த்துச் செல்லலாம்." என்று கூறிவிட்டுத் திரும்பவும் தாம் தவஞ்செய்யத் தொடங்கினர். அம்முனிவர் மொழிந்த கடுமொழிகளைக்கேட்ட இலட்சுமிதேவியானவர் யாழினும் குழலினும் இனிதாகக் கருதப்படுகிற மழலைச் சொற்களினால் தம் குழந்தைகள் தம்மைத் திட்டுவதைக்கேட்டு மனமகிழ்ந்திருக்கும் தாய்தந்தையர்களைப்போல், பேருவகைகொண்டு, புன்னகைபுரிந்து, ஜீவகாருண்ணியம் நிறைந்தவராய், மெய்வருத்தம் பாராது, பசிநோக்காது, கண்டுஞ்சாது, இவ்வுலகில் உள்ள ஜீவகோடிகளை உய்விக்கும்பொருட்டுக் கடுந்தவம்புரியும் அம்முனிவர் தாம் மகாவிஷ்ணுவின் அம்சம் என்பதைச்சற்றும் அறியாதுதம்மை அவமதித்ததையும் பொருட்

படுத்தாது, தாம் எவ்வகையானும் அவர் மனோபீஷ்டத்தை முடித்துவைக்கக் கருதித் தாமே ஒரு நொடியில் மகாவிஷ்ணுவின் உருவத்தோடு அவர் முன்தோன்றி மறுபடியும் அவரை அழைத்து, அவருக்கு வேண்டிய வரங்களைக் கேட்கும்படி ஆக்ஞாபித்தனர். பாராசார் கண்விழித்துப்பார்த்து தம் முன் மகாவிஷ்ணுவானவர் கருடாரூடராய் சங்கு சக்கர கதா பத்மதாரியாய் நிற்பதைக்கண்டு அளவற்ற ஆனந்தங்கொண்டு அவரை அனேக முறை வலம்வந்து நமஸ்கரித்து,

"காராய வண்ண மணிவண்ண கண்ண கனசங்கு சக்ர தரனீள்
சீராய தூய மலர்வாய நேய சீராம ராம னெனவே
தாராய வாழ்வு தருநெஞ்சு சூழ்க தாமோ தாராய நமவோம்
நாராய ணாய நமவாம னாய நமகேச வாய நமவே."

எனப் பலவாறு துதித்து; வாய்குழற, நாத்தடுமாற "ஏ பரந்தாமா! ஜகத்ரட்சகா! பரமகருணாநிதியே! என் தவம் இன்றே ஈடேறிற்று. என் ஜன்மமும் சாபல்லியமாயிற்று. கலியுகத்தில் இந்நிலவுலகிற் பிறந்துழன்றிறக்கும் ஜீவகோடிகள் வேதவேதாங்கங்களை எளிதிற்கற்றுணர்ந்து உய்யுமாறு, அவைகளைத் தக்கவாறு வகுத்து, புராண இதிகாச ரூபங்களாகச் செய்தளிக்கவல்லதும் தங்களுடைய பூர்ணாம்சமானதுமான ஓர் குழந்தை எனக்குப் பிறக்கும்படி அருள்புரியவேண்டும்." என வேண்டி நின்றனர். மகாவிஷ்ணுவும் அவர் வேண்டுகற்கிணங்கி "அவ்வாறேயாகுக." என்று கூறிவிட்டு, மறுபடியும் அம்முனிவரை நோக்கி "நாமும் மகாலட்சுமியும் ஒன்றென்பதை நீர் அறியாமற்போனதெங்ஙனம்? அவ்வறியாமையாலேயே உம்முடைய தவத்திற்கு அநேகவிதமான இடையூறுகள் நேர்ந்ததுமன்றி, உம்முடைய தவப்பயனும் விரைவிற் கிட்டாது உம்முடைய மனைவி உம்மைவிட்டு நீங்கி மறுபிறப்பெய்திய பின்னர்க் கிட்டும். இனியாவது சத்தியின்றிச் சிவமில்லை என்பதுபோல் திருவின்றி நாமில்லை; நாமின்றித் திருவில்லை என்றுணர்ந்துகொள்ளும்." என்று உரைத்துக்கொண்டிருந்தவண்ணமே தாம் மகாலட்சுமியின் உருவத்தைத் தாங்கிநின்றனர். அதைக் கண்ணுற்ற பாராசார் தம் அறியாமையைப் பெரிதும் நொந்துகொண்டு பன்முறையும் அவ்விலக்குமிதேவியின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி,

அநாத்யா நந்தரூபாம் த்வாம் ஜனனீம் ஸர்வதேஹினம்.
ஸ்ரீவிஷ்ணுரூபிணீம் வந்தே மஹாலக்ஷ்மீம் பரேஸ்வரீம்
நாமஜாத்யாதிரூபேண ஸ்திதாம் த்வாம் பரமேஸ்வரீம்
ஸ்ரீவிஷ்ணுரூபிணீம் வந்தே மஹாலக்ஷ்மீம் பரேஸ்வரீம்.

நமஸ்தேஸ்து மஹாமாயே ஸ்ரீபீ(ட்)டே ஸுரபூஜிதே
சங்கசக்ர கதாஹஸ்தே மஹாலக்ஷ்மி நமோஸ்துதே.
ஸித்திபுத்தி ப்ரதேதேவி புக்திமுக்தி ப்ரதாயினி
மந்த்ரமூர்த்தி ஸதானந்தே மஹாலக்ஷ்மி நமோஸ்துதே.

நமஸ்தே கருடாரூடே கோலாஸுர பயங்கரீ
கௌமாரி வைஷ்ணவி ப்ராம்ஹி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே.
ஸ்வேதாம் பரதரேதேவி ரதனுபாண பூஷிதே
ஜகத்ப்ரியே ஜகன்மாயே மஹாலக்ஷ்மி நமோஸ்துதே.

ஸ்தூலஸூக்ஷ்மே மஹாரௌத்ரே மஹாசாந்தே மஹோதயே
மஹாபாப ஹரேதேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே.
பத்மாஸன ஸ்திதேதேவி பரப்ரம்ஹ ஸ்வரூபிணீ
பத்மஹஸ்தே ஜகத்பூஜ்யே மஹாலக்ஷ்மி நமோஸ்துதே.

ஸர்வேசே ஸர்வவரதே ஸர்வதுக்ஹ விநாசினீ
ஸர்வாதௌத ஹரேதேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே.
ஆத்யாந்த ரஹிதேதேவி ஹ்யாதிசக்தே ஸ்வகோசரே
யோகினி யோகஸம்ப்ஹூதே மஹாகாளி நமோஸ்துதே.

என்றும்

உலகம் புரக்கும் பெருமான்ற னுளத்தும் புயத்து மமர்ந்தருளி
யுவகை யளிக்கும் பேரின்ப வுருவே யெல்லா முடையாளே
திலகஞ் செறிவா ணுதற்கரும்பே தேனே கனிந்த செழுங்கனியே
தெவிட்டா தன்ப ருளத்துள்ளே தித்தித் தெழுமோர் தெள்ளமுதே.

மலகஞ் சுகத்தேற் கருளளித்த வாழ்வே யென்கண் மணியேயென்
வருத்தந் தவிர்க்க வருங்குருவாம் வடிவே ஞான மணிவிளக்கே
கலகந்தரம்போற் கருணைபொழி தடங்கட் டிருவே கருணைதிகுந்
தாயேசரணஞ் சரணமிது தருணங்கருணை தருவாயே.

என்றும் பலவாறு துதித்துக்கொண்டாடினர்.

## வியாஸ ஜனனம்.

மேற்சொல்லிய சம்பவம் நிகழ்ந்த சிலகாலத்திற்குப் பிறகு ஓர் நாள் அதிகாலையில் பாராசராானவர் தம் பத்தினிசகிதமாக பத்ரா நதியில் ஸ்நானஞ்செய்யப்போயினர். பாராசரர் தம் ஸ்நான சந்தியாவந்தன காயத்ரி ஜபதபாதிகளை முடித்துக்கொண்டு தமது ஆசிரமத்திற்கேகினர். சத்தியவதியம்மையார் தம் கணவருடைய வஸ்திரமுதலியவைகளைத் தோய்த்து வைத்துவிட்டுத் தாம் ஸ்நானம் செய்துகொண்டிருந்தனர். அச்சமயத்தில் அவ்விடத்தில் பளிங்குபோல் தெளிந்தோடும் பத்ரா நதியின் ஜலத்தில் சில மீன்கள் ஒன்ருேடொன்று கூடி விளையாடிக் கிரீடித்துக்கொண்டிருந்தன. சத்தியவதியம்மையார் அம்மீன்கள் நடாத்தும் சுரத லீலாவிநோதங்களைப் பார்த்துக்கொண்டிருந்தமையால் தமது ஆசிரமம் செல்வதிற் சிறிது காலந்தாழ்ந்தது. அதையறிந்த பாராசரர் தம்மனைவியை விளித்து "நீ எனக்குச்செய்யவேண்டிய தொண்டுகளை மறந்து மீன்களின் விளையாட்டைப் பெரிதாக நினைத்துப் பார்த்திருந்தமையால் நீயும் அம்மீன்களுள் ஒன்றின் உதரத்திற் பிறக்கக்கடவை." என்று சபித்தனர். அந்தக்கடுமையான சாபத்தைக்கேட்ட சத்தியவதியம்மையார் கருடனுடைய சத்தம் கேட்ட நாகம்போல் நடுநடுங்கிப் பயந்து தம் கணவரை வழிபட்டு வணங்கி, "அடியாள் மனம் வாக்குக் காயம் இவைகளில் ஒன்றிளுலேனும் தங்களுக்கு அபசாரம் செய்தவளல்ல. செய்ய நினைத்தவளுமல்ல. ஏதோ என் அறியாமையினுற் சற்று காலந்தாழ்ந்து வந்ததற்கு இது அளவுக்கு மிஞ்சின கடுந்தண்டனையாகும். இதுகாறும் தமக்கு வாழ்க்கைத் துணைநலனுக விருந்து காலங்கழித்துவிட்டு இப்போது மீனுகப்பிறந்து உயிர்வாழ்வது எங்ஙனம்? அடியேன் பேரில் கருணைகூர்ந்து காத்தருளல் வேண்டும்." என வேண்டி நின்றனள். அவ்வுரையைக்கேட்ட பாராசரர் தம் சினத்தையாற்றிக்கொண்டு தம்மனைவியின்மேல் இரக்கங்கொண்டு, "நீ மீன்வயிற்றிற் பிறப்பினும் மானிடரூபமாகவே பிறப்பாய்." என்று கூறினர். அதைக்கேட்ட சத்தியவதியம்மையார் "அவ்வாருயின் உமக்குப்பிறக்கவிருக்கும் விஷ்ணுவின் அம்சமான குழந்தை என் வயிற்றிற் பிறக்கட்டும்." என வேண்டினள். அவ்வேண்டுகோளைக் கேட்ட அம்முனிவர் "அவ்வாறேயாகுக." என்று கூறித் தம் தவத்தில் அமர்ந்தனர்.

பிறகு சத்தியவதியம்மையார் * பாரத்துவாஜ மகரிஷியின் வீரியத்தை எடுத்து விழுங்கின மீன் வயிற்றிற் கருத்தரித்ததும், அம்மீனை ஒரு செம்படவன் பிடித்துப்போய் அரியுங்காலத்தில் அதன் வயிற்றிலிருந்து வெளிப்பட்ட பெண்ணை வளர்த்துவந்ததும், அவள் மச்சத்தின் உதரத்திலிருந்து வந்த காரணத்தைப் பற்றி "மச்சோதரி" என்றும், அவள் சரீரத்தில் மீன் நாற்றம் நிறைந்திருந்ததால் "மச்சகந்தி" என்றும் அழைக்கப்பட்டதும், அப்பெண் கன்னிப்பருவம் அடைந்ததும் தன் தகப்பனுக்குதவியாக ஓடம் செலுத்திக்கொண்டிருந்ததும், அந்நாளில் ஓர் நாள் பாராசரர் அவ்வோடத்தில் ஏறிப்போகுங்கால் அவளைக் கண்டு மோகித்துக் கூடிக்கலந்ததும், அதன் காரணமாக வியாஸர் பிறந்ததும், பிறகு அம்மச்சகந்தியானவள் பாராசரர் அருளினால் தன் மீன் நாற்றம் நீங்கப்பெற்று சுகுமாரியானதும், சந்திரவம்சம் விருத்தியடைவதன் பொருட்டு சந்தனுராஜன் பிற்காலத்தில் அவளை மணந்ததும், புராணவாயிலாய்த் தெரிந்த விஷயங்களே.

வேதங்களையும் புராணங்களையும் வகுத்தவரும், வேதாந்த சூத்திரங்களைச்செய்தவரும், மகாவிஷ்ணுவின் அம்சமானவரும் விநாயகரைக்கொண்டு மகாபாரதத்தை எழுதுவித்தவருமான வேதவியாஸருக்கு ஜன்மஸ்தானமான இக்காவீரத்திற் கிணையான ஸ்தலம் இப்பரதநாட்டில் வேறில்லை என்று நாரதர் மார்க்கண்டேயருக்குச் சொல்லி முடித்தனர்.

இத்தலத்திலும் அதைச்சுற்றிலும் உள்ள தீர்த்தங்களும் அவைகள் இருப்பிடமும்:—

(1) பிரமேசலிங்கம். பிரமேசதீர்த்தம். பன்ஹாள் என்னுமிடத்தில் இருக்கிறது.

(2) கிருஷ்ணேஸ்வரர். கிருஷ்ணேசதீர்த்தம். ஊருக்குத் தெற்கில் ஒரு மைல் தூரத்திலிருக்கிறது.

(3) கோபாலேஸ்வரர். கோமத்வதிதீர்த்தம் (விஷ்ணு பங்கஜ நதி). ஊருக்குத் தெற்கில் 5 மைல் தூரத்திலிருக்கிறது.

* குறிப்பு:— உபரிசரவசுவின் வீரியம் என்று சொல்வாரும் உளர்.

(4) பாராசரலிங்கம். பாராசர தீர்த்தம். (5) சத்தியவதி லிங்கம். சத்தியவதி தீர்த்தம். இவை இரண்டும் கோபாலேஸ்வரர் ஆலயத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் இருக்கின்றன.

(6) நாகேசர். நாகதீர்த்தம். பிரமேசர் ஆலயத்தின் தெற்கில் இருக்கிறது. இத்தீர்த்த ஸ்நானத்தினால் குஷ்டரோகம் தீருகிறதாகச் சொல்லப்படுகிறது.

(7) சித்தேஸ்வரர். சித்தேசதீர்த்தம். கோமதிநதிக்கும் பிரமேசருக்கும் தெற்கில் இருக்கிறது. இவ்விடத்தில் பாராசரர் சித்தி பெற்றமையால் தெரிசனமும், ஸ்நானமும் மிக்க விசேஷம்.

(8) நரஸிம்மர். நரஸிம்மதீர்த்தம் சித்தேஸ்வரர் ஆலயத்தினருகில் இருக்கிறது.

(9) சோமேசர் சோமேச தீர்த்தம். சித்தேஸ்வரர் ஆலயத்திற்கு ஈசானியத்தில் இரண்டு மைல் தூரத்திலிருக்கிறது.

(10) ஊர்வசி தீர்த்தம். (11) மதனேஸ்வரர். மதன குண்டம். இவைகள் சோமேசருக்கு மேற்கில் இருக்கின்றன.

(12) வஸந்தேஸ்வரர். வஸந்தகுண்டம். மதனகுண்டத்திற்கு மேற்கில் இருக்கிறது.

(13) ஸ்தம்பேஸ்வரர். ஸ்தம்பகுண்டம். வஸந்தகுண்டத்திற்கு மேற்கில் 2 மைல் தூரத்தில் இருக்கிறது. பிரமதேவர் யாகஞ்செய்தபொழுது யாகஸ்தம்பம் நாட்டிய விடம்.

(14) வரதேஸ்வரர். வரதீர்த்தம். வஸந்தகுண்டத்திற்கு மேற்கில் இருக்கிறது.

(15) கந்தர்வேஸ்வரர். கந்தர்வகுண்டம். வரதேஸ்வரர் ஆலயத்திற்கு மேற்கில் இருக்கிறது.

(16) தேவேஸ்வரர். தேவதீர்த்தம். நாகேசருக்குத் தெற்கில் இருக்கிறது. எல்லாத்தேவர்களும் ஸ்தாபித்த இலிங்கம்.

(17) வியாக்கிரேஸ்வரர். வியாக்கிரகுண்டம் சோமேசர் ஆலயத்தினின்று 6 மைல் தூரத்தில் இருக்கின்றது. பாராசர முனிவருடைய சீடர்களுள் ஒருவரான வியாக்கிர முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

(18) அசுவலாயனலிங்கம். அசுவலாயனவாபி. பிரமகிரியின் அடிவாரத்தில் கீழ்புறத்தில் இருக்கிறது.

(19) சிலாதீர்த்தம். பாராசரர் ஆசிரமத்தின் அருகில் உள்ள மார்க்கண்டேயர் ஆசிரமத்தில் இருக்கிறது.

(20) சித்தசாதகாசிரமம். மார்க்கண்டேயர் ஆசிரமத்தின் அருகில் இருக்கிறது

(21) வாலகில்யகணுசிரமம். சித்தசாதகாசிரமத்தின் அருகில் இருக்கிறது.

(22) சுகாசிரமம். *பிரயாகைக்கு வாயுதிக்கில் ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது.

(23) மனுவாசிரமம். வடபிரயாகையிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் மலையின்மேல் இருக்கின்றது. இது சுவாயம்பு மனுவானவர் தவஞ்செய்து ஞானியானவிடம். இவ்விடத்திற்றான் தர்மசாஸ்திரம் இயற்றப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

(24 கபிலதீர்த்தம். பிரயாகைக்குத் தெற்கிலும் சுக்கிலதீர்த்தத்திற்கு வடக்கிலும் ஆற்றின் மத்தியில் இருக்கின்றது.

(25) ருஷ்யஸ்ருங்காசிரமம். ருஷ்யஸ்ருங்கதீர்த்தம். கரவீரத்திற்கு வாயுதிக்கில் உத்தரேஸ்வராருக்கருகில் இருக்கிறது.

(26) சுக்கிலேஸ்வரர். சுக்கிலதீர்த்தம் கபிலதீர்த்தத்திற்குத் தெற்கில் பஞ்சகங்கா நதிக்கருகில் இருக்கின்றது.

(27) பைரவதீர்த்தம். சுக்கில தீர்த்தத்திற்குக் கிழக்கில் இருக்கின்றது.

(28) விசாலதீர்த்தம். பைரவதீர்த்தத்திற்குக் கிழக்கில் இருக்கிறது. போகவதி நதியானது பஞ்சகங்கையிற் சேருமிடம். இதில் ஒரு வேளை ஸ்நானம் செய்தால் கங்கையில் ஒரு வருஷம் ஸ்நானம் செய்த பலன் கிடைக்கும்.

(29) வியாஸதீர்த்தம். விசாலதீர்த்தத்தின் அருகில் இருக்கின்றது

(30) கசியபதீர்த்தம். வியாஸதீர்த்தத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் இருக்கின்றது.

---

*குறிப்பு:— இது அலஹாபாத் பிரயாகையல்ல. கோமதி ஜயந்தி நதிகள் சேருமிடம்.

(31) காலவதீர்த்தம்.
(32) கர்க்கதீர்த்தம்.
(33) வாசிஷ்டதீர்த்தம்.
(34) அருந்ததிதீர்த்தம்.
(35) விசுவாமித்திரதீர்த்தம்.
(36) அகஸ்தியதீர்த்தம்.

} இவ்வாறும் கசியபதீர்த்தத்தின் அருகில் சிகலி கிராம எல்லையில் இருக்கின்றன.

(37) மயூரேஸ்வரர் மயூரதீர்த்தம். மயூரி நதியானது பஞ்சகங்கையிற் சேருமிடத்தில் இருக்கின்றது இதைத்தரிசித்த மாத்திரத்தில் உத்தம ஜன்மம் கிடைக்கும் என்பது புராணப் பிரசித்தம்.

(38) தாரகேஸ்வரர். தாரக தீர்த்தம். (39) அசுவமேததீர்த்தம். (40) சர்வேஸ்வரர். சர்வதீர்த்தம். இவைகள் பஞ்சகங்கா நதியிலும் அதன் தீரத்திலும் இருக்கின்றன.

(41) ஜீவந்தி பஞ்சகங்கா சங்கமம். (சக்கரதீர்த்தம்) இதன் மகிமை பிரயாகையின் மகிமையை ஒத்திருக்கின்றது.

(42) ரேணுகாதேவி. ரவிவார்பேட் என்னுமிடத்தில் பிரசித்தமாயுள்ள ஆலயம்.

(43) காலராத்திரி. ரேணுகாதேவி கோவிலுக்கு எதிரில் இருக்கின்றது.

(44) சாட்சிவிநாயகர். ரவிவார்பேட் என்னுமிடத்திலுள்ள குளத்தங்கரையில் இருக்கின்றது.

(45) புஷ்கரேஸ்வரர் (கோடீஸ்வரலிங்கம்). கோடிதீர்த்தம். ஊருக்குக்கிழக்கில் ஒரு மைல் தூரத்தில் இருக்கின்றது.

(46) மலாபகர்ஷணேஸ்வரர். கோடிதீர்த்தத்திற்கு மேற்கில் இருக்கின்றது.

(47) ஸ்ரீலிங்கேஸ்வரர். விஹிரதீர்த்தம். துவாரகாபேட் என்னுமிடத்தில் கோமதி நதியின் கரையில் இருக்கின்றது.

(48) முரலிதர் கோபாலகிருஷ்ணன். கோமதிநதி விஹிரதீர்த்தத்தின் அருகில் ஒரு ஓட்டுவில்லை வீடுபோன்ற கோவில். ஷை கோவிலின் சுவரில் மகாவிஷ்ணு, மகாலட்சுமி, கருடபகவான், நாரதர் ஆகிய நான்கு மூர்த்திகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

(49) நரஸிம்மமூர்த்தி. நரஸிம்மதீர்த்தம். மங்கள்வார்பேட் என்னுமிடத்திலுள்ள குளத்தங்கரையில் இருக்கின்றன. இந்தக் கோவிலில் இராஜேந்திரலட்சுமி, நாகம், ஹனுமார், பிரஹ்லாதேஸ்வரர் ஆகிய நான்கு மூர்த்திகளும் இருக்கின்றன. இந்தத்தீர்த்தத்தின் தென்கரையிற்றான் முற்காலத்தில் மகாவிஷ்ணுவானவர் காசியையும் காவீரத்தையும் தராசிலிட்டுத் தூக்கினதாகச் சொல்லப்படுகின்றது.

(50) அரங்கபைரவர். அரங்கதீர்த்தம். பத்மாளே என்னும் ஊருக்குப் போகும் வழியில் இருக்கின்றது.

(51) அனுகாமினு. கமண்டலதீர்த்தம். ஊருக்கு மேற்கில் "காய்கவாட்" (Gaekwar) என்பவரின் தோட்டத்தில் ஈசானிய பாகத்தில் இருக்கின்றது.

(52) சங்கமேஸ்வரர். சஞ்சீவினி மயூரி சங்கமம். உத்தரேஸ்வரர் ஆலயத்திற்கு மேற்கில் ஊரையொட்டி இருக்கின்றது.

(53) ஸ்ருங்கேஸ்வரர் பஞ்சகங்காவின் கரையில் இருக்கின்றது. இவ்விடத்தில் தற்காலத்தில் கோசாயிகளின் மடம் இருக்கின்றது.

(54) அகஸ்தீஸவரர். லோபாமுத்திரேஸ்வரர். ஊருக்கு வாயு திக்கில் அகஸ்தியராலும் அவர் மனைவி லோபாமுத்திரா தேவியாராலும் பிரதிஷ்டை செய்யப்பட்ட இலிங்கங்கள்.

(55) *மயூரசுவாமி. இவர் ஆலயம் பஞ்சு கங்காவின் கரையில் வைஷ்ணவ ஸ்நான கட்டத்தருகில் இருக்கின்றது.

(56) தாரகேஸ்வரர். சத்ரபதி சிவாஜிமகாராஜாவின் கோவிலின் அருகில் உள்ள ஆற்றங்கரையில் இருக்கின்றது.

இவைகளைத்தவிர (1) வராகிதேவி (2) காமாக்ஷிதேவி (3) தசாசுவமேதேஸ்வரர் (4) சர்வேஸ்வரர் (5) சக்ரேஸ்வரர் (6) பல்குலேஸ்வரர் (7) ஸ்ரீதேஹேலிவிநாயகர் (8) குண்டலேஸ்

*குறிப்பு:—நம் தென்னாட்டில் கந்தர், முருகர், வேலர், சுப்பிரமணியர், ஷண்முகம், ஆறுமுகம் என்னும் பல நாமங்களோடு விளங்கும் குமாரக்கடவுள் இந்நாட்டில் **மயூரசுவாமி** என்றும் **கார்த்திக் சுவாமி** என்றும் விளங்குகின்றனர்.

வரர் (9) பவானி (10) புதேஸ்வரர் (11) போகேஸ்வரர் (12) முக்தேஸ்வரர் (13) கனகேஸ்வரர் (14) கபோதேஸ்வரர் (15) த்ரியம்பகேஸ்வரர் (16) அப்ஸரேஸ்வரர் (17) கோரம்பேஸ்வரர் (18) குக்குடேஸ்வரர் (19) நந்தீஸ்வரர் (20) பிரஹஸ்பதீஸ்வரர் (21) சுக்கிரேஸ்வரர் (22) பலேஸ்வரர் (23) அதிபலேஸ்வரர் (24) காயத்ரேஸ்வரர் (25) ஹரிஹரேஸ்வரர் (26) தத்தபாதுகா (தத்தாத்திரேயருடைய பாதங்கள்) (27) மஹாகாளி (28) மஹாஸரஸ்வதி (29) காலர் (30) வேதாளேஸ்வரர் முதலானமூர்த்திகளும் இருக்கின்றன. அவைகளைத் தரிசிக்க விரும்புவோர் அவைகளிருக்கும் இடத்தை அவ்விடம் இருப்போரைக் கேட்டுத்தெரிந்துகொள்ளலாம்.

மேலே சொல்லப்பட்ட மூர்த்திகளையும் தீர்த்தங்களையும் நோக்குங்கால் இப்பரதநாட்டின்கண் உள்ள எல்லா ஸ்தலங்களிலுமுள்ள மூர்த்திகளும் தீர்த்தங்களும் இவ்வரும் பெருந்தலத்திலும் அதனருகிலும் ஒருங்கே அமைந்திருக்கின்றனவென்பது தெளிவாய் விளங்கும். இவ்வாறு கணக்கற்ற மூர்த்திகளையும் தீர்த்தங்களையும் ரிஷியாசிரமங்களையும் தன்னிடம் அமையப்பெற்றிருக்கின்ற தலத்தின் மகிமையை இச்சிறுபுத்தகத்தில் எழுதவியலாதென்பது சொல்லாமலே விளங்கும்.

மேலும், இத்தலத்தில் பிரதான மூர்த்தியாகக் கோவில் கொண்டெழுந்தருளி எல்லா ஜீவகோடிகளுடைய பிரமஹத்தியாதி பாவங்களான பஞ்சுமூட்டைகளைத் தம் கடைக்கண் பார்வையான தீப்பொறியாற் சுட்டெரித்துக்கொண்டிருக்கின்ற நமதன்னை மஹாலக்ஷ்மியின் கோவில் இப்பெரும் பட்டினத்திற்கு நடுநாயகமாக விளங்கிக்கொண்டிருக்கின்றது. அவ்வம்மையை இவ்வூரிலுள்ளோர் "அம்பாபவானி" என்னும் திருநாமத்தால் அழைக்கின்றனர். இவ்வம்மையின் கோவில் கீழண்டை கோபுர வாயிலுக்கு எதிரில், சத்தியநாராயணர் சந்நிதி இருக்கின்றது. அதிலிருந்து பிரதட்சணமாகக் கோவிலைச் சுற்றிவந்தால், முறையே (1) விஷ்ணுமந்திரம், (2) கோகர்ணேஸ்வரர், (3) இலட்சுமிநாராயணர், (4) கண்டோபா, (5) அதிபலேஸ்வரர், (6) இராதாகிருஷ்ணன், (7) கௌரிசங்கரர், (8) சனீஸ்வரர், (9) முரலிதரர், (10) காலபைரவர், (11) சிம்ஹவாஹினி, (12) துளஜாபவானி, (13) சங்கர்பார்வதி, (14) மஹாலட்சுமி, (15) சூரிய

நாராயணர், (16) சந்திரன், (17) மஹாகணபதி, (18) மஹாஸரஸ்வதி, (19) மஹாகாளி, (20) தத்தாத்திரேயர், (21) பரதர், (22) சத்ருக்கனர், (23) அகஸ்தியர், (24) லோபாமுத்திராதேவி, (25) ஜோதிபா, (26) காசிவிஸ்வேஸ்வரர், (27) நவக்கிரகங்கள், (28) விட்டோபா, (29) இரக்குமாபாயி, (30) பஞ்சகங்காதேவிகள் ஐந்து அம்மன்விக்கிரகங்கள், (31) பிந்துமாதவர், (32) தண்டபாணி, (33) கார்த்திக்சுவாமி (சுப்பிரமணியர்), (34) மகாவிஷ்ணுவின் தசாவதாரங்கள், (35) ஸ்ரீராமர், இலட்சுமணர், ஜானகி, (36) ஹனுமார் ஆகிய இத்தனை சந்நிதிகளையும் தரிசிக்கலாம். இவைகளுக்கு நடுநாயகமாக விளங்குவது மகாலட்சுமி சந்நிதி. இவ்வம்மைக்கு வலதுபுறத்தில் மகாஸரஸ்வதியும் இடதுபுறத்தில் மகாகாளியும் இருக்கின்றனர். கோவிலுக்கு வடக்கிலுள்ள காசிவிஸ்வநாதர் ஆலயத்திற்கெதிரில் கங்கை மணிகர்ணிகை என்று சொல்லப்படுகிற இரண்டு சிறு கூபங்களிருக்கின்றன.

இவ்வூரிலுள்ளவர்களும் இவ்வூருக்கு வருபவர்களும் மாலை நேரத்தை வேடிக்கையாகக் கழிப்பதற்கு, இவ்வூர் கலெக்டர் கச்சேரிக்கருகில் ஒரு சிறு பூந்தோட்டம் (Park) இருக்கின்றது. இதைத் தவிர இப்பட்டினத்திற்கு மேற்கில் இருக்கின்ற பெரிய குளத்தைச் சுற்றிலும் நல்ல நிழலுள்ள சாலைபோடப்பட்டிருக்கின்றது. இது இவ்வூருக்குக் கடற்கரையோரமாகப் பாவிக்கப்படுகின்றது. இப்பட்டினத்தில் பெரிய மார்க்கட்டும் கடைத்தெருக்களும் இருக்கின்றன. எல்லாச் சாமான்களும் கிடைக்கின்றன. இவ்வூரில் பிரயாணிகள் தங்குவதற்கு அனேக தர்மசாலைகள் இருக்கின்றன. ஆனால் அவைகள் வடஇந்தியாவிலுள்ள மற்ற க்ஷேத்திரங்களில் உள்ளவைகளைப்போல் அவ்வளவு சௌகரியமானவையல்ல. இத்தலத்தை நாடிவருவோர் ஒருவாரம், பத்துநாள் தங்கியிருந்து இவ்வூரில் அமையப்பெற்றிருக்கின்ற அனேக தீர்த்தங்களிலாடி, மூர்த்திகளைத் தரிசித்துச் செல்ல வசதியான இடங்கள் குறைவுதான். இப்பெருங்குறையை இந்நாட்டை அரசாள்கிற ஆதிசிவாஜி மகாராஜா அவர்கள் வம்சத்திய அரசர் கூடியசீக்கிரத்தில் நீக்கிவைப்பார் என்று நம்பப்படுகின்றது ஸ்ரீ அம்பாபவானியம்மை அவர் மனதிற் புகுந்து தம்மை நாடி வரும் பக்தகோடிகள் தங்குவதற்கு இடமின்றி வருந்தாது செய்துவைப்பார் என்பதில் ஐயமில்லை.

## ஜோதிபாமலை. (Jotiba Hill).

இத்தலம் (கோலாப்பூர்) வருவோர் இத்தலத் தெல்லையிலிருந்து சுமார் 10 மைல் தூரத்தில் இருக்கும் சிறு குன்றின் மீது எழுந்தருளியுள்ள ஸ்ரீஜோதிபா என்னும் மூர்த்தியைத் தரிசித்தல் அவசியம். இம்மலைக்குப் போக நல்லவண்டிகள் கிடைக்கின்றன. முழுப்பாதையும் கடுமையான ஏற்றமாயிருந்தபோதிலும் இப்பக்கத்திலுள்ள எருதுகள் பெரியனவாகவும் வலிமையுள்ளனவாகவும் இருப்பதால் அவ்வேற்றத்தைச் சற்றும் பொருட்படுத்தாது வண்டிகளை இழுத்துச் செல்லுகின்றன. வண்டிப்பாதை சுமார் 10 மைல் தூரமிருப்பினும் வழி நடப்போர் நடந்து செல்வதற்குத் தக்க குறுக்கு வழிகள் அனேகம் இருக்கின்றன. அவைகளின் வழியே சென்றால் மூன்று அல்லது நான்கு மைல் தூரம் வரையில் குறைபலாம். ஆனால் மலைகளில் ஏறிப்போய்ப் பழக்கமில்லாதவர்கள் ஏறுவது கஷ்டம்.

இப்பக்கத்தில் நம் நாட்டு விவசாயிகள் கற்கவேண்டிய சில விஷயங்கள் உள. நம் தென்னாட்டில், அதிலும் நம் தஞ்சை ஜில்லாவிலுள்ள விவசாயிகள், "ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டின் நீள்வினையா னீளுங் குடி. குடிசெய்வார்க் கில்லை பருவம். குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம் மடிதற்றுத்தான் முந்துறும்." என்னும் தெய்வப்புலமைத் திருவள்ளுவரின் அருண்மொழிகளை அறவே மறந்து, தங்கள் தங்கள் நிலங்களுக்குக் காலாகாலங்களிற் போதிய எருத்தழைபோடாமல், வீட்டுத்திண்ணைகளிற் சாய்ந்திருந்துகொண்டு, "ஆனிமாதமாகியும் ஆற்றில் ஜலம்வரவில்லையே! மேமாதமாகியும் மேல் காற்றைக் காணேமே! ஜுன் மாதமாகியும் சூடு தணியவில்லையே." என்றும், "தங்களுடைய நாட்டின் மேன்மண்ணையெல்லாம் வண்டலாகத் திரட்டிப் பார்சல் செய்து காவிரியென்னும் தபாற்காரன் மூலமாக நமக்கு எப்போதும் அனுப்பிக்கொண்டிருப்பதாக ஒப்பந்தம் செய்திருந்த குடகு மைசூர் நாட்டினரும் தாங்கள் செய்திருந்த ஒப்பந்தத்தையும் மறந்து ஆங்காங்கு கண்ணம்பாடி, மேட்டூர் முதலிய இடங்களிற் பெருத்த அணைகளைக் கட்டிக் காவிரிவண்டலைக் கவர்ந்து கொண்டார்களே! இது என்ன அக்கிரமம்! இந்த அக்கிரமம் நடக்கும் வரையில் நாமேன் நம் நிலங்களை உழுது பயிரிடவேண்டும். அரசாங்கத்தாருக்கு அவசர

மனுக்கள் எழுதிப் போட்டுத் தபாற்பெட்டிகளை நிறைத்துவிடு வோம். அவைகளினாலும் வழி பிறக்காவிடில் வஜா கேட்போம்." என்றும் வீண்பேச்சுக்கள் பேசி காலங்கழிக்காமல், அவரவர்கள் நிலங்களில் பெருந்துரவுகள் வெட்டி அவைகளுக்குத் தகுந்த கபிலேயேற்றங்கள்போட்டு நெற்றியின் வியர்வை நிலத்தில் விழும் படி ஜலமிறைத்து வருஷம் 365 நாட்களும் வேளாண்மைத் தொழில்செய்யும் இந்நாட்டினரின் வேளாண்மை மிகச்சிறந்ததே. தவிர, இப்பக்கங்களில் கபிலேயேற்றங்களுக்கு மூன்று அல்லது நான்கு ஜோடி மாடுகளுக்குக் குறையாமற் போடுகிறார்கள். அவைகளும் நம் தென்னாட்டு மாடுகளைப்போல் இரண்டு பங்குக் குக் குறையாமல் உள்ள அளவு பெரிதான மாடுகளாக இருக் கின்றன. அத்தனைபெரிய மாடுகளாக 8 மாடுகளை ஒரு கபிலே யேற்றத்திற்கு உபயோகிக்கின்றனர் என்றால் அவர்கள் ஒன்று மறியாத பேதைகளாக இருத்தல்வேண்டுமென்று சிலர் நினைத்து விடலாம். ஆனால் அப்படியன்று. அவர்கள் உபயோகிக்கும் ஏற்றச்சால்கள் நம்நாட்டில் உபயோகிக்கப்படும் சால்களைவிட மூன்று அல்லது நான்கு பங்கு ஏற்றமாகவே இருப்பதுடன், ஏககாலத்தில் இரண்டு சால்களை உபயோகிக்கின்றனர். ஒருசால் கீழே போகவும் மற்றது மேலே வரவுமாக இருக்கின்றது. ஆகவே நம் நாட்டில் ஒருசால் ஜலம் மேலே வந்து சேரும் நேரத்தில், அதைப்போன்ற ஆறு அல்லது எட்டுசால்கள் அள வுள்ள ஜலம் மேலேவந்து சேருகின்றது. இத்தனை ஜலமும் வாய்க்கால் வழியாக ஓடும்போது பார்த்தால், நம் நாட்டிற் காவிரி போன்ற ஆறுகளிலிருந்து பிரிந்தோடிவரும் வாய்க்கால்களாகத் தோற்றுகின்றனவே தவிர, மனிதர்கள் கபிலேயேற்றத்தினால் இறைத்து வருகிற ஜலமாகக் காணப்படவில்லை. இவ்வாறு அதிக அளவுள்ள ஜலம் அதிவேகமாகப் போய்ப்பாய்வதால் வாய்க்கால் களிற் சோர்ந்து நஷ்டமாகிற ஜலம் மிகக்குறைவு. மேலும், அத்தகைய பெரிய வாய்க்கால்களின் இருகரைகளிலும், மஞ் சள் கரணை முதலிய பயிர்களைப்போட்டிருப்பதால், "நெல்லுக் கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கு மாங்கே பொசி யுமாம்." என்னும் ஆன்றோர் மொழியும் பொய்க்கும்படி, இவர் களிறைக்கும் நீர் புல்லுக்குப்பொசிந்து வீண்போகாமல் நெற் போன்ற பயிர்களுக்கே உபயோகப்படுகின்றது.

மேற்சொல்லியவாறே, இப்பக்கங்களில் நிலங்களை உழுப வர்களும், நம்நாடுகளில் 'மேற்கத்திமாடுகள்,' 'வடக்கத்திமாடுகள்' "ஒட்டன்கைமாடுகள்," "மைசூர்மாடுகள்," "பூரணிமாடுகள்," என்று பெருமையாகச் சொல்லிக்கொள்ளுகின்ற மாடுகளை, அளவிலும், திடகாத்திரத்திலும் இலேசாய் வெல்லக்கூடிய மாடுகளாக 3 அல்லது 4 ஜோடி மாடுகளை ஒரு ஏரிற் பூட்டி உழுகின்றனர். கலப்பைகளோ பெரிய இருப்புக் கலப்பைகளாகவும், ஆழமாக உழக்கூடியவைகளாகவும் இருக்கின்றன. அவைகளுள் ஒன்றை வண்டியில் ஏற்றிவைத்தால் நம் நாட்டு மாடுகள் அதை இழுக்குமோவென்பது சந்தேகந்தான். அத்தகைய கனத்த பெரிய இருப்புக் கலப்பைகளைக்கொண்டு உழுவதனால் பூமியில் உழவு சுமார் இரண்டு அடிக்குக் குறையாமல் அழுந்திப்போவதுடன் ஒரு நிறைந்த பலமுள்ள மனிதன் புரட்டமுடியாத பெருங்கட்டிகளாகப் போகின்றன. எல்லாவகையினும் சிறந்த இவ்வேளாண்மையைப் பார்ப்பவர்கள் நம் நாட்டில் நடைபெறும் வேளாண்மையும் ஒரு வேளாண்மையா என்று நினைக்கும்படியிருக்கும். நம்நாட்டு வேளாண்மையையும் இந்நாட்டு வேளாண்மையையும் ஒப்பிடுவது, கவியரசரான கம்பரால் உவமிக்கப்பட்ட குழந்தைகளின் மணல்வீடுகளையும், பிறகவியில் அதே கவியரசராற் புகழ்ந்து கூறப்பட்டுள்ள "திங்களுங் கரிதெனவெண்மை தீற்றிய சங்கவெண் சுதையுடைத் தவள மாளிகைகளையும்" ஒப்பிடுவது போலிருக்கும் என்பதிற் சற்றேனும் ஐயமில்லை. மேற்சொல்லியபடி பெரிய மாடுகளாக எட்டுமாடுகளால் ஈர்க்கப்பட்டும் அப்பெருங்கலப்பைகள் பூமியில் மிதந்து ஓடாது அவைகளைத் தக்க பலத்தோடு பூமியில் அழுத்திப் பிடித்து உழும் வலிமையுள்ள மகாராஷ்டிர வீரர்களின் உதவியைக் கொண்டன்றோ ஆதிசிவாஜியானவர் இவ்விந்தியா முழுவதையும் ஒருகுடைக்கீழ்க் கொண்டு வந்தது. அத்தகைய வீரர்கள் இக்காலத்தும் உளர் என்பதும், தங்களைக்கூட்டிவைத்து நடத்துவோரின்றி வேளாண்மையிற் காலங்கழிக்கின்றனர் என்பதும் சொல்லாமலே விளங்கும்.

எவ்வகையானும் சிறந்த காவிரநாட்டையும் அங்கு நடந்துவரும் சீரிய வேளாண்மையையும் பார்த்துக்கொண்டே மலைமீது சென்றால், அம்மலையின் உச்சியில் சுமார் 300 வீடுகளடங்கிய ஜோதிபா என்னும் சிற்றூர் இருப்பதைக் காணலாம். அங்

கிருப்போர் எல்லோரும் ஸ்ரீஜோதிபாவைப் பூசித்துப் பிழைக்கும் பிராமணர்களே. அவர்களுக்குக் குரு என்னும் பட்டப்பெயர் வழங்கிவருகின்றது. நம்நாட்டில் கோவிற்பூசை செய்வோர் "நாராயணகுருக்கள்," "கோவிந்தகுருக்கள்" என்றழைக்கப்படு வதுபோல் இவர்கள் "நாராயணகுரு" "கோவிந்தகுரு" என்று அழைக்கப்படுகின்றனர்.

ஆனால் நம் நாட்டுக்குருக்கள்களுக்கும் இந்நாட்டுக் குருக் களுக்கும் வேற்றுமை அதிகமுண்டு. தங்களைத்தேடிவரும் கட்சிக்காரர்களின் சொத்துக்களைத் தங்கள் சொத்துக்களாக்கிக் கொள்ளும் திறமையில் நிகரற்ற வக்கீல்களிற் சிலர் எவ்வாறு தங்களுக்குக் கூலிகொடுக்கும் எஜமானர்களான கட்சிக்காரர் களைத் தங்கள் வேலைக்காரர்களாகக் கருதி, தங்கள் உடைகளையும் புத்தகங்களையும், வெற்றிலைப்பாக்கு அல்லது சுருட்டுப்பெட்டி களையும், சிற்சில சமயங்களில் மதுபானப் புட்டிகளையும் அவர்கள் தலையிற் சுமத்தி அழைத்துச்சென்று, எந்த நியாயஸ்தலத்தில் எந்த நியாயாதிபதியிடம் வாதிப்பதற்காகத் தாங்கள் ஊதியம பெற்றனர்களோ அவர்களிருக்குமிடம் சென்றதும், தங்கள் கட்சிக்காரர்களை வெளியில் நிறுத்திவிட்டுத் தாங்கள் மாத்திரம உட்சென்று, தாங்கள் எந்த விஷயத்தைப்பற்றி வாதிப்பதாக வாக்களித்து ஊதியம் பெற்றனர்களோ, அந்த விஷயத்தைப் பற்றியோ, அல்லது தங்களுடைய வேறு கட்சிக்காரர்களுடைய விஷயத்தைப்பற்றியோ, அல்லது வேறு வேடிக்கை விஷயங் களைப்பற்றியோ, அல்லது அதே விஷயத்தைப்பற்றிப் பேசினும், தெரிந்தோ தெரியாமலோ தங்கள் கட்சிக்காரர்களுக்குச் சாதக மாகவோ பாதகமாகவோ பேசி முடித்துவிட்டு, வெளியில்வந்து "எல்லாம் மிகச்சாமர்த்தியமாக வாதித்துவிட்டோம். நியாயாதிபதி முழு மூடமாகவந்து அமைந்திருக்கிறபடியால் உங்கள் கட்சியின் வாதத்தை அவருக்குப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைக்குப் பாடம் போதிப்பதுபோல் அதிகக்கஷ்டப்பட்டுச் சட்டநியாயஙகளை எடுத் துச் சொல்லநேர்ந்தது. இப்போது பயமில்லை. நியாயாதிபதி உங்கள் பட்சமாகவே தீர்ப்பு எழுதுவார். அப்படியொருக்கால் சட்டம் தெரியாமல் உங்களுக்கு விரோதமாகத் தீர்ப்பு எழுதி விடினும் அப்பீல் கோர்ட்டில் அவரைச் சும்மா விடுவதில்லை."

என்று பன்முறையும் சொல்லி நடித்து, காப்பிச்செலவிற்கும், பொடிக்கும், திரும்ப வீட்டுக்குப்போக வண்டிச் சத்தத்திற்கும் காசுகேட்டு வாங்குகின்றனரோ, அவ்வாறே நம் நாட்டுக்குருக்கள் களும், தாங்கள் யாரிடம் கைநீட்டிக் காசுவாங்கிப் பிழைக்க நினைத்திருக்கின்றனர்களோ, அவர்களைத்தங்களுக்கு எத்தனையோ படித் தாழ்ந்தவர்களாகக் கருதி, அவர்களை வெளியில் நிறுத்தி விட்டுத் தாங்கள் மாத்திரம் உட்சென்று, தங்களை நாடிவந்தவர் களுக்காக அருச்சனை செய்வதற்குரிய ஈஸ்வர நாமங்களையோ, அல்லது தங்கள் தங்கள் வீட்டில் அருமையாக வளர்ந்துவரும் மனைவிமக்களின் நாமங்களையோ சொல்லி, அஷ்டோத்தரசத (108) நாம அருச்சனை செய்வதாக வாக்களித்து தட்சணை பெற் றிருந்தும், பத்துப் பன்னிரண்டு நாமங்களைச் சொல்லிமுடித்து இறுதியில் "கர்ப்பூர நீராஞ்சனம் ஸமர்ப்பயாமி." என்று உரக்கக் கூறிமுடித்துவிட்டு வெளியில் வந்து, "எல்லாம் வல்ல ஈசனிடம் நாம் உங்களுக்காக மிக்க மன்றாடியிருக்கின்றோம். அவர் உங்க ளுக்கு எல்லாவித யோகங்களையும் போகங்களையும் அளிப்பர் என்பதில் ஐயமில்லை.'' என்று சொல்லித் தங்கள் தட்சணை மிகக் குறைவாயிருந்தது என்றும், தங்களைத் திருப்திசெய்துவைத்தா லொழிய ஈஸ்வரன் திருப்தியடையமாட்டான் என்றும் வம்பு வளர்ப்பதைப் பார்த்திருக்கலாம். ஆனால் இவ்வூரிலிருக்கும் அந் தணர்களோ தங்களை நாடிவரும் யாத்ரீகர்கள் தங்களுக்குச் சிறிதே கொடுப்பினும் அதைப்பெரிதாக எண்ணி, தங்களுக்குத் தட்சணை கொடுப்பவர்களைத் தங்கள் எஜமானர்களாகக் கருதி, அவர்களை மிக்க மரியாதையுடன் கோவிலுக்கு அழைத்துச் சென்று, அவர்களை ஈஸ்வரனிடம் முன்னிட்டு அவர்கள் கைப்பட எல்லாப்பூசைகளையும் செய்வித்து, அவர்களைத் திருப்திசெய்து வைப்பதே தங்களுடைய முழுமுதற்கடமையாக நினைப்பவர்கள்.

இவ்வூராரைப்போலன்றித் தாம் ஒருவராயிருப்பினும் பன் மைப்பொருள்படுகின்ற 'குருக்கள்' என்னும் சொல்லைத் தமக்குப் பட்டப்பெயராக வகித்திருக்கும் நம் நாட்டுக்குருக்கள்கள் மேற் சொல்லியவாறு செய்வது ஒரு விந்தையாகாது.

இவ்வூரிலிருக்கும் 300 வீட்டாரும் அந்த ஜோதிபா வையே நம்பியிருப்பவர்களாதலாலும், இம்மலைக்குவரும் யாத்

திரைக்காரர்கள் மிகக் குறைவாயிருப்பதாலும், அவர்கள் மிகுந்த ஏழைகளாகவும், நாகரீகம் என்பதே எட்டிப்பாராத கிராமங்களிலுள்ள கூலிவேலைக்காரர்களைப்போலவும் இருக்கின்றார்கள். அவர்களில் ஆண்களைப் பார்க்கிலும் பெண்கள்தான் மிகக் கேவலமாக இருக்கின்றனர். ஆண்பிள்ளைகள் போட்டிருக்கிற பூணூலைக் கொண்டு, அவர்கள மூன்றாவது குலமான வைசியாகளாகவாவது இருக்கவேண்டும் என்று நினைக்க இடங்கொடுக்கின்றது. ஆனால் பெண்பிள்ளைகளோ நம் நாட்டில் ஆதிதிராவிடர்கள் என்று சொல்லிக்கொள்ளுகின்ற ஜாதியாரைச் சேர்ந்த பெண் பிள்ளைகளை விட மிகக்கேவலமாக இருக்கின்றார்கள். ஆயினும் அவர்களிடம் அமைந்திருக்கும் குணங்கள் மிக்க விசேஷமானவைகளாகக் காணப்படுகின்றன. "அந்தண ரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுக லான்" என்னும் அருள் நிறைந்த அற்புதவாக்கியம் இவர்கட்கே முழுதும் பொருந்தும் என்பதில் ஐயமில்லை. இவர்களிருக்கும் நிலைமையைக்கொண்டு நம் நாட்டில் வாழ்ந்துவந்த அந்தணர் என்போர் அனைவரும் நவீன நாகரீகமென்னும் கொடிய விஷப்பூண்டின் இரசத்தைப் பருகி, மண், பெண், பொன் என்னும் மூவிதப் பேராசையால் தூண்டப்பட்டுத் தாங்கள் செய்தற்குரிய நற்கருமங்களை விட்டு, துர்க்கருமங்களைக் கடைப்பிடித்தொழுகிக் கெட்டழிவதற்குமுன் எப்படியிருந்திருப்பார்கள் என்று ஒருவாறு நிதானித்துக்கொள்ளலாம்.

இவர்களிடம் யாத்திரைக்காரர்கள் ஒரு ரூபாயைக் கொடுத்துவிட்டால், அதை ஒரு பவுனாகக்கருதி, ஈஸ்வரனுக்கு வேண்டிய நைவேத்தியங்கள் உள்படக், கோவிலுக்கு வேண்டிய எல்லாச் சாமான்களையும் சேகரித்துவிடுகின்றனர். யாத்திரைக்காரர்கள் அவர்களிடம் உணவுகொள்ள விரும்பினால் அவர்கள் வேண்டியதைச் செய்தளிக்கத் தயாராய் இருக்கின்றனர். நம் நாட்டைப்போல், தேங்காய், பழம், வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல், புளியோஹோரை, தயிரன்னம் முதலிய நைவேத்தியங்கள் இங்கு கிடையா. இவ்விடத்தில் போளி, பேடா முதலிய பட்சணங்களே கிடைக்கும். இவைகளைக் கொண்டுபோய் சுவாமியின் முன்வைத்துக் கொஞ்சம் "குலால்" என்னும் சிவப்புத்

தூளைத் தூவிவிடுகின்றனர். இந்த குலாலைத்தான் இவ்விடத்தில் விபூதிக்குப் பதிலாகக் கொடுக்கின்றனர்.

இக்கோவிலில் ஸ்ரீஜோதிபா அல்லது கேதாரலிங்கம், அவர் தாயார், விஸ்வேஸ்வரர் மூர்த்திகர், ஹனுமார் முதலியோரின் சந்நிதிகள் இருக்கின்றன. இத்தலத்தில் நாம் முக்கியமாய்த் தெரிந்து கொள்ளவேண்டியது என்னவெனில், ஆதிமத்யாந்தரகிதரான ஈஸ்வரனுக்கும் ஒரு தாயாரிருக்கின்றனர் என்பதே. நம் நாட்டில் நாம் புராணங்கள் வாயிலாகவோ, கோவில்களிற் பிரத்தியட்சப் பிரமாணமாகவோ, ஈஸ்வரனுக்கு மனைவி மக்கள் மருமக்கள் தங்கை மைத்துனர் மைத்துனருக்குக் குழந்தைகள், ஆகிய எல்லா உறவினர்களும் இருப்பதாகக் கேட்டிருக்கின்றோமே தவிர, அவருக்குத் தாய் தந்தையர் இருப்பதாகக் கேட்டதுமில்லை; கண்டதுமில்லை. மனைவிமக்கள் இருக்கும்போது ஏன் தாய் தந்தையர் இருக்கக்கூடாது என்னும் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு இச்சிறு புத்தகம் இடந்தராதென்று அஞ்சிவிடப்பட்டது. ஈஸ்வரனுக்குத் தாய் தந்தையர் இருப்பதாக ஒப்புக்கொண்டால், அவர்களைப் பெற்றோர் யார் என்ற கேள்வி உடனே பிறக்குமாதலின், அத்தகைய அனாவசியமான கேள்விகளைக் கேட்காமலிருப்பதும், எல்லாவற்றிற்கும் ஆதியானதும், தனக்கோர் பிறப்பிடம் இல்லாததுமான பரப்பிரமமே கடவுள் என்று ஒப்புக்கொள்ளுவதுமே ஆஸ்திகர்களின் இலட்சணம்.

எது எவ்விதமாயினும் ஆகுக. இம்மலையின்மேல் இருக்கும் கோவிலில் ஈஸ்வரனுடைய தாயாரின் சந்நிதி இருக்கக் காண்கின்றோம். இவ்வாறே ஈஸ்வரனுக்குத் தகப்பனார் இருக்கும் தலத்தை யாராவது தரிசித்திருப்பரேல் அறிவிப்பார்கள் என்று நம்பப்படுகின்றது. இந்த ஜோதிபாவானவர் குவாலியர் (Gwalior) தேசமன்னரான ஸிந்தியா (Scindia) மகாராஜா அவர்களுடைய குலதெய்வமாகக் கருதப்படுகின்றார்.

இக்கோவிலுக்குத் தென்கிழக்கில் ஸ்ரீ ஜோதிபாவின் தமக்கை ஹேமாபாயி (Hema Bai) அம்மையின் ஆலயமிருக்கின்றது. முற்காலத்தில் ஹேமாபாயியானவர் தம் சகோதரர்

ஜோதிபாவுக்கு விவாகம் செய்துவைக்க நினைத்து, அவருக்காகப் பெண் தேடப் புறப்பட்டதாகவும், அதையறிந்த ஜோதிபாவானவர் தம் தமக்கையை அழைத்து "நிறம், உருவம், அழகு, குணம் ஆகிய எல்லாவற்றினும் உனக்குச் சமானமான ஒரு பெண் பார்த்துவா." என்று கூற, அதைக்கேட்ட ஹேமாபாயியம்மையார் அதை ஓர் அவதூறான சொல்லாக மதித்துக் கோபித்துக் கொண்டு தாம் தம் மாளிகையினுட் சென்று தங்கி விட்டதாகவும் சொல்லப்படுகின்றது. அதன் ஞாபகார்த்தமாக இக்காலத்தும் ஒவ்வொரு வருஷம் சித்திரைமாதத்தில், தம் தமக்கையின் கோபத்தைத் தணிவித்துச் சமாதானம் செய்து வருவதற்காக ஜோதிபாவானவர் புறப்பட்டு ஹேமாபாயியின் ஆலயத்திற்குச்செல்வதாகவும், அச்சமயத்தில் ஹேமாபாயியம்மையின் கோவிற் கதவுகள் தாமாகவே அடைபட்டுவிடுகின்றன என்றும், இத்தனை காலங்கடந்தும் தம் தமக்கையின் கோபம் தணிந்தபாடில்லையே யென நினைத்து மனமுடைந்து ஜோதிபாவானவர் வந்தவழியே திரும்பித் தம் கோவிலுக்குச் சென்றுவிடுகின்றனர் என்றும் சொல்லிக்கொள்ளுகின்றனர். இவ்வூரில் இவ்வுற்சவம் வெகு விமரிசையாக நடப்பதாகவும், அதைக் கண்டானந்திக்க அநேகம் ஆயிரம் ஜனங்கள் வந்து கூடுவதாகவும் தெரிகின்றது. இங்கு இரண்டு குளங்களிருந்தும் ஜலம் பாசிபிடித்து ஸ்நானபானத்திற்கு அருகமற்றதாயிருக்கின்றது. கோலாப்பூரிலிருந்து வரும் சாலை இவ்வூருக்குள் நுழைகின்ற இடத்தில் உள்ள குளத்தின் நடுவில் ஒரு ஊற்றும், ஹேமாபாயி கோவிலின் எதிரில் ஒரு ஊற்றும் இருக்கின்றது. இவ்வூற்றுகளிரண்டும் கடுங்கோடையிலும் வற்றாமல் அமுதம்போன்ற ஜலத்தை அளித்துக்கொண்டிருக்கின்றன. என்னே கடவுளின் கிருபை! எங்குபார்க்கினும் வறண்டுகிடக்கும் இக்கற்பாறையின்மேல் இத்தகைய அருமையான ஊற்றுக்கள் இல்லாவிடின் இங்கிருக்கும் ஜனங்கள் உயிர் வாழ்வதெங்ஙனம்! ஆனால் வெளியிலிருந்து வருவோர் இவ்வூற்றுக்களின் நீரில் ஸ்நானம் செய்தாலாவது காய்ச்சாமற் குடித்தாலாவது நளிர்ஜுரம் வருவதாகச் சொல்லப்படுகின்றது. ஆதலின் யாத்திரைக்காரர்கள் அதிஜாக்கிரதையாக இருத்தல் அவசியம். ஸ்ரீஜோதிபாவை தரிசித்தான பிறகு மீண்டும் கோலாப்பூர் சென்று ரயிலேறி ஸாத்தாரா (Satara) செல்லல்வேண்டும்.

## அத்தியாயம் 9

——(o)——

### ஸ்ரீராமர் வணக்கம்.

வான்வண்ணக் கருமுகிலே மழையே நீல
மணிவண்ணக் கொழுஞ்சுடரே மருந்தே வானத்
தேன்வண்ணச் செழுஞ்சுவையே இராம நாமத்
தெய்வமே நின்புகழைத் தெளிந்தே யோதா
வூன்வண்ணப் புலவாய ரிடத்தே சென்றுங்
குழைக்கினறேன் செய்வகையொன் றுணரே னந்தோ
கான்வண்ணக் குடும்பத்திற் கிலக்கா யென்னைக்
காட்டினையே யென்னைநின் கருணை யீதோ.

மண்ணுளா ரின்றவர்தம் வாழ்வு வேண்டேன்
மற்றவர்போற் பற்றடைந்து மாள வேண்டேன்
விண்ணுளா ரின்றவொரு மேன்மை வேண்டேன்
வித்தகநின் றிருவருளே வேண்டி நின்றேன்
புண்ணுளா ரின்றமன முடையேன் செய்த
பொய்யனைத்துந் திருவுளத்தே பொறுப்பா யன்றிக்
கண்ணுளா சுடர்க்கமலக் கண்ணா வென்னைக்
கைவிடிலென் செய்வேனே கடைய னேனே.

### வேறு

தண்ணமர் மதியே சாந்தந் தழைத்த சத்துவனே போற்றி
வண்ணமா மணியே போற்றி மணிவண்ணத் தேவா போற்றி
அண்ணலே ஸாத்தாராவில் அமர்ந்தருள் ஆதி போற்றி
விண்ணவர் முதல்வா போற்றி வீரராகவனே போற்றி.

### ஸாத்தாரா (Satara).

இது பம்பாய் இராசதானியின் அநேக ஜில்லாக்களுள் ஒன்றின் தலைநகர். இப்பட்டினத்திற்குப் போகவிரும்புவோர் கோலாப்பூரில் ரயிலேறி வந்தவழியே திரும்பி மிராஜ் ஜங்ஷன் சேர்ந்து அங்கு வண்டிமாற்றி வடக்கு நோக்கிப் போகும் வண்டியில் உட்கார்ந்துச் செல்லல்வேண்டும். ரயிலேறாமலே கோலாப்பூர் பட்டினத்திலிருந்து *வாடகை மோட்டார் வண்டிகளுள் ஒன்றில்

*குறிப்பு:— இக்காலத்தில் நடக்கும் மோட்டார் விபத்துகளைப் பார்க்கில், கூடியவரையில் மோட்டார் வண்டிகளிற் பிரயாணம் செய்தலைக் குறைத்துக்கொள்ளுவதே நலம்.

ஏறி நேராக ஸாத்தாரா போகலாம். ரயிலிற்போனல் மிராஜிலிருந்து சுமார் 70 மைல் தூரத்தில் உள்ள ஸாத்தாராரோட் (Satara Road) என்னும் ஸ்டேஷனில் இறங்கி மேற்கில் சுமார் 10 மைல் தூரம் சென்றால் ஸாத்தாரா பட்டினம் போய்ச்சேரலாம். ரெயில்வே ஸ்டேஷனில் எக்காலத்திலும் ஏராளமான வாடகைமோட்டார் வண்டிகள் கிடைக்கின்றன. இப்பட்டினத்தில் பெரிய மார்க்கெட் (Market) ஒன்றும் எல்லாவித சாமான்களும் எளிதிற் கிடைக்கக் கூடிய அனேகக் கடைத்தெருக்களும் இருக்கின்றன. கடைத்தெருக்களுக்கு மேற்கிலும் அங்கிருக்கும் புராதன அரண்மனைக்கட்டிடத்திற்குக் கிழக்கிலும் சுமார் 50 கெஜசதுரமுள்ள அரண்மனைச்சவுக் (The Palace Chowk) என்று சொல்லப்படுகிற காலி நிலம் இருக்கின்றது. ரெயில்வேஸ்டேஷனிலிருந்து வரும் மோட்டார் வண்டிகளும் ரெயில்வேஸ்டேஷனுக்குப் போகும் மோட்டார் வண்டிகளும் இந்தக் காலிநிலத்திற்றான் நிற்கின்றன. இதற்கடுத்த தென்புறத்தில் ஒரு சிறு தர்மசாலை இருக்கின்றது. ஆனல் அதில் அறைகள் முதலியன இல்லாமல் முழுவதும் திறந்த வெளியாய் இருக்கின்றதால் குடும்பத்தோடு போவோர் தங்குவதற்கு அது அவ்வளவு வசதியானதல்ல. அதற்குச் சற்று மேற்கிலுள்ள விட்டோபாவின் கோவிலுக்கருகில் இருக்கின்ற தர்மசாலை சுத்தமாகவும் ஒரு தனி அறையோடும் இருப்பதால் அதில் தங்கிக்கொள்வதே நலம். ஊருக்குத் தென்புறத்திலுள்ள மலையடிவாரத்தில் அனேகம் தர்மசாலைகள் இருப்பினும் அவைகள் ஊருக்கு வெளியில் இருப்பதால் கடைச்சாமான்கள் வாங்குவதற்கும் மற்ற விஷயங்களுக்கும் வசதியானவையல்ல.

பட்டினத்திற்கு நேர் தெற்கிலுள்ள மலையின் உச்சியில் ஒரு சிறு அழகான கோட்டை கட்டப்பட்டிருக்கின்றது. அரண்மனைச் சவுக்கிலிருந்து பிரிந்து தெற்கே போகிற தெரு வழியேபோனல் கோட்டைக்குப் போகிற வழி தென்படுகின்றது. அதன் வழியாக மலையின்மீதேறிப்போனல் கோட்டைவாசற்படியிற் கொண்டுபோய் விடுகின்றது. நடக்கமுடியாதவர்கள் வண்டி வைத்துக்கொண்டு போவதற்கு வண்டிப்பாதை வேறு இருக்கின்றது. அது அதிகமாகச்சுற்றிவருவதால் நடந்து போவதற்கு இதுதான் சரியான பாதை அந்தக் கோட்டைக்குள்

சென்று பார்ப்பதற்கு இவ்வூர் மராமத்து இலாக்கா (The Public Works Department) அதிகாரியிடம் உத்தரவு பெற்றுக் கொள்ளல்வேண்டும். அக்கோட்டைக்குள் ஹனுமார்கோவில் ஈஸ்வரன்கோவில் பராசக்திகோவில் ஆகிய மூன்று கோவில்களும், உத்தியோகஸ்தர்கள் முதலியோர் தங்கக்கூடிய பொதுக்கட்டிடம் (The Travellers Bungalow) ஒன்றும் இருக்கின்றன. கோட்டை விசாலமானதாக இருக்கின்றது. இந்தக் கோட்டை ஆதி சிவாஜி மகாராஜா அவர்களாற் கட்டப்பட்டதென்றும், அதிற் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் அம்பிகையானவள் அவரோடு நேருக்கு நேராகப் பேசிக்கொண்டிருந்த தெய்வமென்றும் சொல்லிக்கொள்ளுகின்றனர். இதற்கடுத்த மேற்புறத்திலுள்ள குன்றினின்றுதான் பட்டினத்திற்குக் குழாய்கள் வழியாகக் குடிதண்ணீர்க் கொண்டுபோகின்றனர்.

ஆதிகாலத்தில் இப்பட்டினத்தில் இருந்து அரசாண்ட மகாராஷ்டிர மன்னரின் மாண்பு பொருந்திய அரண்மனை இப்பட்டினத்திற்கு நடுநாயகமாக விளங்குகின்றது. மதுரைப்பட்டினத்திலுள்ள திருமலைநாயக்கர் மஹாலில் எவ்வாறு எல்லாக் கச்சேரிகளும் வைக்கப்பட்டிருக்கின்றனவோ, அவ்வாறே இவ்வழகிய அரண்மனையிலும் ஜில்லாகோர்ட்டு முதலிய எல்லா கச்சேரிகளும் வைக்கப்பட்டுள்ளன. இவ்வரண்மனையின் நடுப்பாகத்தில் தஞ்சாவூர் அரண்மனையில் உள்ள மகாராஜசபை போன்ற ஒரு விசாலமான சபைக்கூடம் இருக்கின்றது. இத்தகைய விசாலமான அத்தாணிமண்டபங்கள் பண்டைக்காலத்தரசர்களின் அரண்மனைகள் எல்லாவற்றிலும் தவறாமல் இருப்பதை ஆழ்ந்து நோக்கில், அம்மன்னர்கள் தங்கள் குடிபடைகட்குக் காட்சிக்கினியர்களாகவும், ஏழைகள் முறையிடுதலை எளிதிற்கேட்பவர்களாகவும் இருந்தனர் என்பது தெள்ளிதிற் புலப்படுகின்றது.

## ஸஜ்ஜன்கட் (Sajjanghad).

ஸாத்தாராவிலிருந்து தென்மேற்கில் சுமார் 7 மைல் தூரத்தில் ஸஜ்ஜன்கட் என்னும் புண்ணிய க்ஷேத்திரம் இருக்கின்றது. இத்தலத்திற்றான் மகாராஷ்டிரதேசத்திலிருந்து புகழ்பெற்றவரும் ஆதிசிவாஜிமகாராஜா அவர்களுடைய குருநாதருமான ஸ்ரீஸமர்த்த

*இராமதாஸ் சுவாமிகள் என்னும் மகான் வசித்துவந்து ஸ்ரீராமரை இடைவிடாது பூசித்து முக்திபெற்றது. இத்தலம் ஓர் அழகிய சிறு குன்றின்மேல் இருக்கின்றது. இவ்வூரைச் சுற்றிலும் ஒரு அழகான கோட்டை கட்டப்பட்டிருக்கின்றது. இப்பக்கங்களில் அனேகமாய் கோட்டைகளில்லாக் குன்றுகளில்லை. இக்கோட்டைகள் எல்லாம் ஆதி சிவாஜிமகாராஜா அவர்களால் தாமிருக்குமிடம் முகமதியர்களுக்குத் தெரியாமலிருக்கும்வண்ணம் மறைவிடங்களாகக் கட்டப்பட்டனவென்று தெரிகிறது. தாம் ஒருவருடைய வாழ்நாளைக்குள் முகம்மதிய சக்கரவர்த்தியாலும், அவரால் ஏவப்பட்டுவந்த முகம்மதிய படைத்தலைவர்களாலும், பீஜாபூர், கோல்கோண்டா, ஹைதராபாத் முதலிய பட்டினங்களிலிருந்து அரசாண்டுவந்த முகமதியச் சிற்றரசர்களாலும், அடிக்கடி ஏற்பட்டு வந்த தீங்குகளையும் இடையூறுகளையும் பொருட்படுத்தாது, தம் தேசத்தாரான மகாராஷ்டிர வீரர்களுக்குள் ஏற்பட்ட சச்சரவுகளையும் மனக்குறைகளையும் தீர்த்துக்கொண்டு, இங்குள்ள குன்றுகளின் உச்சியில் கணக்கற்ற கற்கோட்டைகளைக் கட்டின

*குறிப்பு:— சென்னை இராஜதானியில் கோதாவரி நதி தீரத்தில் உள்ள **பத்ராசலம்** என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் வசித்து, ஹைதராபாத் நவாபின் ஆளுகையில் தாசில்தார் உத்தியோகம்செய்து, தம்மால் வசூலிக்கப்பட்ட கிஸ்திப்பணங்களையெல்லாம் ஸ்ரீராமார்ப்பணஞ்செய்து, கிஸ்திப்பணம் அனுப்பத் தவக்கப்பட்ட காரணம்பற்றி நவாபின் உத்தரவின்படி சிறைவாசஞ்செய்து, இறுதியில் ஸ்ரீராமலட்சுமணர்கள் சேவகர்கள் உருவந்தாங்கி நவாபிடம சென்று அவருக்குச்சேரவேண்டியிருந்த பணத்தைச் செலுத்தி சிறையினின்று மீட்டு வெளியிற்கொண்டுவரப்பட்ட **கோபண்ணா** என்னும் இராமதாஸ் சுவாமிகளினின்று வேற்றுமைப்படுத்துவதற்காகவே இம்மகானை **ஸ்மார்த்த இராமதாஸ் சுவாமிகள்** என்னும் திருநாமமிட்டழைக்கின்றனர் என்று தெரிகின்றது. ஆனால் இருவரும் ஸ்ரீரகுவீரனிடத்தில் அளவற்ற பிரேமையோடு பக்தி செலுத்தி முத்தியடைந்தவர்கள் என்பதில் ஐயமில்லை. ஒருவர் ஆந்திரதேசத்தவர். மற்றவர் மகாராஷ்டிரதேசத்தவர். ஒருவர் கீழ்சமுத்திரக்கரையில் நதிதீரத்தில் இருந்தவர். மற்றவர் மேல்சமுத்திரக்கரையில் குன்றின் மேலிருந்தவர். நாடு யாதாயினும், ஊர் யாதாயினும், மொழி யாதாயினும் நாட்டினுள்ளிருப்பினும், காட்டினுள்ளிருப்பினும், மன்றத்திலிருப்பினும், குன்றத்திலிருப்பினும், அரசராயினும் ஆண்டியாயினும், "வேண்டுதல் வேண்டாமை யிலான் அடி சேர்ந்தார்க்கியாண்டு மிடும்பை யில." என்பதற்கு இவ்விருமகான்களே தக்க சான்றாவர்.

அஞ்சா நெஞ்சுபடைத்தவரும், முனைமுகத்து மாற்றலர்சாய வினை முகத்து வீறெய்தியவருமான ஆதிசிவாஜிமகாராஜாவின் ஆட்சித் திறனைப் புகழாதிருக்கவியலுமோ!

ஸமர்த்த இராமதாஸ் சுவாமிகள் என்னும் இம்மகான் பம்பாய் இராஜதானியைச் சேர்ந்த ஸாத்தாரா ஜில்லாவிலுள்ள ஜாம்ப (Jamba) என்னும் சிற்றூரில் சூரியாஜிபன்த் (Suryaji-Pant) என்னும் விப்பிரோத்தமருக்கு அவர் செய்துவந்த இராம உபாஸனையினாலும் சூரிய ஆராதனையினாலும் மாருதியின் அவதாரமாகப் பிறந்தவர். இவருக்கு முன் பிறந்தவருக்கு கங்காதர பன்த் என்றும் இவருக்கு நாராயணபன்த் என்றும் நாமமிட்டழைத்தன. இவருடைய ஏழாவது வயதிலேயே இவர் தந்தை காலஞ்சென்றுவிட்டனர் இவருடைய பன்னிரண்டாவது வயதில் இவருக்கு மணம்புரிவிக்க இவருடைய சுற்றத்தார் ஏற்பாடு செய்ததைக்கண்ட சுவாமிகள், சுத்தப்பிரமசாரியான வரும் இராமபக்தர்களிற் சிறந்தவருமான ஆஞ்சனேயருடைய அம்சமாதலின், திருமணதினத்தன்று ஒருவருக்கும் தெரியாமல் ஓடியொளிந்தனர். பிறகு பஞ்சவடி க்ஷேத்திரத்திற்குச் சென்று 12 வருஷம் இராமதியானத்தில் ஈடுபட்டிருந்து, மற்றொரு 12 வருஷகாலம் இப்பரத கண்டம் முழுவதும் தீர்த்தயாத்திரை செய்து திரும்பி, சாப்ஹள் (Chaphal) என்னுமிடத்தில் இராமர் கோவிலும் பஜனைமடமும் கட்டிக்கொண்டு, இராமதியானத்திலும், இராமபஜனையிலும் காலங்கழித்துவந்தனர். இவ்விதமாக இருந்துவந்த காலத்திற்றான் ஆதிசிவாஜி மகாராஜா இவரைத் தேடிவந்து வணங்கி வழிபட்டு உபதேசம் பெற்றனர் என்று தெரிகிறது.

ஓரூரிலும் நிரந்தரமாய்த் தங்காமல் வனத்திலும் வனாந்திரங்களிலும் திரிந்துகொண்டிருந்த தமது குருவையண்டி, சிவாஜி மகாராஜாவானவர் தாம் எப்போதும் அவரைத்தரிசிக்கும் பாக்கியம் பெறவேண்டி, அவரை அழைத்துவந்து இக்குன்றின் அடிவாரத்திலுள்ள பரேல் (Parel) என்னும் கிராமத்திலிருக்கச்செய்து இக்குன்றின்மேல் இப்போதிருக்கும் அழகிய கோட்டையைக் கட்டி முடித்து, அதில் வசிக்கும்படிச் செய்தனர் என்று தெரிகிறது. இம்மகான் இக்குன்றின்மேல் வந்து தங்கிய பின்னர்

இவரைக்கண்டு தரிசிக்கவெண்ணி கணக்கற்ற ஸாதுக்களும் மகான்களும் அங்கு வந்து தங்கலாயினர். அதுகாரணம் பற்றியே இக்குன்றிற்கு *ஸஜ்ஜன்கட் என்னும் அழகிய பெயருண்டாயிற்றென்று தெரிகின்றது. இவ்விதமாகத் தமது சீடர்களின் கூட்டம் அதிகரிக்கவே தமது சவரட்சணைக்காக சிவாஜி மகாராஜரால் விடப்பட்டிருந்த கிராமங்களின் வருமானம் தம்முடையவும் தம்மையண்டி வந்திருப்பவர்களுடையவும் செலவிற்குப்போதாமை கண்டு, சுவாமிகள் ஒருநாள் தம் சீடர்களோடு ஸாத்தாராசென்று தெருக்களில் பஜனைசெய்து பிக்ஷை வாங்கிக்கொண்டிருந்ததை யறிந்த சிவாஜி மகாராஜாவானவர், தம்முடைய மந்திரி முதலியோர் தம்மிடம் இதைப்பற்றித் தெரிவிக்காமலிருந்ததற்காக மிகவும் வருந்தி, தாம் அதுவரையிற் சேர்த்திருந்த நாடுகள் முழுவதையும் சுவாமிகளுக்கு தத்தம் செய்துவிட்டதாக ஒரு சீட்டில் எழுதி முத்திரையிட்டு, அதைத்தாமே எடுத்துச்சென்று சுவாமிகளின் பையிலிட்டு அவர் திருப்பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். அதைக் கண்ட சுவாமிகள் அச்சீட்டையெடுத்துத் தம் சீடர்களுள் ஒருவரிடம் கொடுத்துப் படிக்கச்செய்து, அதில் எழுதியிருந்ததைக்கேட்டு வியப்புற்று சிவாஜிமகாராஜரைப் பார்த்து, "அப்பனே சிவாஜி! நீ உன் நாடு நகரங்கள் எல்லாவற்றையும் எமக்களித்துவிட்டனையே. நீ உன் வாழ்நாள் முழுவதும் என்செய்வாய்?" என்று கேட்டருளினர். அதைக் கேட்ட மகாராஜாவானவர் சற்றும் மனந்தளராது "ஹே! சுவாமின்! நானும் தங்களுடைய சீடர்களுள் ஒருவனாகவிருந்து உயிர்வாழ்வேன். இத்தகைய பெரும பேறு அடியேற்குங் கிட்டுமோவென ஆவல்கொண்டிருந்தேன். துறந்தார் பெருமையைத் துணைக்கூறப்புகுவது வையத்திறந்தாரை யெண்ணிக் கொண்டற்றன்றோ." என்று பணிவாய்க் கூறினர். மகாராஜாவின் மனத்தூய்மைபொருந்திய மறுமொழியைக் கேட்ட சுவாமிகள் மகிழ்வெய்தி, "சிவபக்தியில் மிகுந்து சிவனடியார்களைப் பணிந்து சிவநாமத்தையே பூண்டொழுகும் சிவாஜிச் செம்மலே! நீ சொல்வது தர்மமாகுமா. நீ சுத்த க்ஷத்திரிய வீரனாதலின் க்ஷத்திரிய தர்மத்தை அனுசரிக்க வேண்

*குறிப்பு:— ஸஜ்ஜன்கட் என்னும் மகாராஷ்டிர மொழியைத் தமிழில் மொழிபெயர்த்தால், ஸத்ஜனர் அல்லது நல்ல மனிதர்கள் இருக்குமிடம் என்று பொருள்படும்.

டாமா. உன்னை நம்பி எத்தனையோகோடி ஜனங்கள் காத்திருக்கின்றனரே. மிலேச்சர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் இப் பாதகண்டத்தை அவர்கள் பிடிப்பினின்றும் மீட்டு நமது ஜனங்களுக்கு சுயேச்சையளிக்கவேண்டாமா. கிருஷ்ணபரமாத்மாவானவர் அர்ச்சுனனுக்குச் செய்த கீதோபதேசத்தை மறந்தனையோ. உன்னைப் போன்ற சுத்தவீரர்களில்லாவிடின் எம்மைப்போன்ற துறவிகள் உயிர்வாழ்வதெங்ஙனம். துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வானென்றே துணை அறத்தாற்றினில் வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவதெவன்? வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படுவானன்றோ. நீ இதுகாறும் பாடுபட்டு இந்நாடுகளைச் சேர்த்திராவிடின் நீ நமக்கிவ்வரிய பிட்சையை எவ்வாறிட்டிருப்பாய். ஜனகன் அம்பரீஷன் யுதிஷ்டிரன் இவர்கள் எல்லாரும் அரசாண்டிருந்த வண்ணமே பேறு பெற்றனர் என்பது புராணப் பிரசித்தமன்றோ. தமக்கு மாறுபட்டவரை யெல்லாம் தம் சாபத் தீயினாற் சுட்டெரித்து வந்த தூர்வாசரின் கோபச்சாபம் அம்பரீஷனிடத்திற் செல்லாது முனை மழுங்கி முறிந்து வீழ்ந்ததுமன்றித் தாமே அவனைச் சரணடைய நேர்ந்ததன்றோ இத்துணைச் சிறந்த இல்வாழ்க்கையை விட்டுத் துறவைநாடுவதேன்?" என்று பலவாறு உபதேசித்துவிட்டுச் சென்றனர். மேற்சொல்லிய சிறு சம்பவத்திலிருந்து மகாராஜா அவர்களுடைய தீவிர பக்தி, வைராக்கியம், ஔதாரியம் முதலிய மேம்பாடான குணங்களும், சுவாமிகளுடைய உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காக்குந் திறனும் நன்கு வெளியாகின்றன.

இக்குன்றின்மேல் ஏறிப்போவதற்கு சுமார் ஒரு மைல் வரையில் நடக்கவேண்டியிருக்கின்றது. இங்கிருக்கும் கோட்டை சிறிதாயினும் மிக அழகாகவும், உறுதியாகவும் கட்டப்பட்டிருக்கின்றது. அதற்குள் இரண்டு நீர்ச்சுனைகளும் இரண்டு கோவில்களும், சுமார் 40—50 மறையவர்களின் வீடுகளும் இருக்கின்றன. ஊருக்கு நடுவில் இருக்கின்ற கோவிலில் இராமதாஸ் சுவாமிகள் ஸ்தூலசரீரத்தோடிருந்தபோது வைத்துப் பூஜை செய்து வந்த இராமர் விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்திருக்கின்றனர். அம்மூர்த்திக்கு அபிஷேகஞ்செய்யும் ஸ்ரீபாததீர்த்தமானது எக்காலத்தும் தமது சிரசில் வீழ்ந்து கொண்டிருக்க

வேண்டும் என்ற எண்ணத்துடன் அக்கோவிலின் கர்ப்பக்கிரகத்தின்கீழ் பலையில் குடைந்தெடுக்கப்பட்டிருக்கும் ஓர் சிறு அறையில் சுவாமிகள் அடங்கியிருக்கின்றனர். இக்காலத்தும் அவ்வபிஷேக ஜலமானது சுவாமிகளின் சமாதியின்பேரில் இடைவிடாது வீழ்ந்து கொண்டிருக்கின்றது. இங்கிருக்கும் நீர்ச்சுனைகளில் கோவிலுக்கு எதிரிலிருப்பதைக் குடி தண்ணீருக்காகவும், கோவிலுக்கு வடபுறமாக இருப்பதை ஸ்நானத்திற்காகவும் உபயோகிக்கின்றனர். இவ்வூரிலிருக்கும் வேதியர்களும் தாங்கள் செய்தற்குரிய ஸ்நான சந்தியாவந்தனாதி நித்திய கர்மானுஷ்டானங்களைச் சரிவரச் செய்து முடித்துக்கொண்டு, பேராசையென்னும் பிசாசின் உபத்திரவத்திற்குட்படாமல், சுசீலர்களாகவும் சுகுண சம்பன்னர்களாகவும் இருந்துவருகின்றனர். இராமனடிகளை இடைவிடாது பணிவோர் இவ்வாறிருப்பது இயற்கையேயாமன்றோ! இத்தலம் வருவோர்கட்கு இங்கிருக்கும் மறையவர்களே ஜாதி குல வேற்றுமையின்றித் தங்கள் தங்கள் இல்லங்களிலிருக்க இடங்கொடுத்துதவுகின்றனர். இவ்வூரிலிருக்கும் மற்றொரு கோவிலில் சுவாமிகளின் தமக்கையார் அடங்கியிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. சுவாமிகளின் சமாதியிருக்குமிடம் பூமிக்குள்ளிருப்பதால் எக்காலத்தும் மிகக் குளிர்ச்சியாக இருப்பதுடன், இவ்வுலகப் பற்றை அறவே ஒழித்து நிஷ்டையில் இருப்பதற்கேற்ற இடமாக இருக்கின்றது. சுவாமிகளுடைய திருப்பாத சேவையும் ஸ்ரீஇராம தெரிசனமும் செய்துகொண்டு மீண்டும் ஸாத்தாரா பட்டினம் வழியாகச்சென்று ஸாத்தாரா ரோட் ஸ்டேஷனில் ரயிலேறவேண்டும்.

மஹாபலேஸ்வரம். பாஞ்ச்கனி. (Mahabaleshwar. Panchgani):— மஹாபலேஸ்வரம், பாஞ்ச்கனி என்னும் இவ்விரண்டு ஊர்களும் பம்பாய் அரசாங்கத்தாருக்கும் பம்பாய் இராஜதானியில் வசிப்பவர்களுக்கும் கோடைக்கால வாசஸ்தலங்களாக உபயோகப்படுகின்றன. இவ்வூர்களுக்குப் போகவிரும்புவோர் ஸாத்தாராரோட் ஸ்டேஷனுக்கடுத்த வத்தார் (Wathar) ஸ்டேஷனில் இறங்கிச் செல்லல்வேண்டும். பாஞ்ச்கனி ரெயில்வேஸ்டேஷனிலிருந்து சுமார் 29 மைல் தூரத்திலும் மஹாபலேஸ்வரம் ஸ்டேஷனிலிருந்து சுமார் 40 மைல் தூரத்திலும் இருக்கின்றது. இரண்டு ஊர்களுக்கும் வாடகை மோட்டார் வண்டிகள் ஏராள

பாய்க் கிடைக்கின்றன. ஸாத்தாரா பட்டினத்திலிருந்து நேரா கப்போவதாயிருந்தாலும் மோட்டார் வண்டிகள் அகப்படும். இவ்விரண்டு ஊர்களிலும் பிரயாணிகள் தங்குவதற்கு வேண்டிய பங்களாக்களும் ஹோட்டல்களும் இருக்கின்றன. வாடகை யில்லாது தங்குவதற்குக் கட்டிடங்கள் கிடைப்பது அருமை.

ஜெஜூரி (Jejuri):— இத்தலம் போகவிரும்புவோர் ஸாத்தாரா ரோட் ஸ்டேஷனிலோ வத்தார் ஸ்ஷ்டேஷனிலோ ரயிலேறி ஸாத்தாரா ரோட்டிற்கும் பூனாவுக்கும் இடையிலுள்ள ஜெஜூரி என்னும் ரெயில்வே ஸ்டேஷனில் இறங்கிச் செல்லல் வேண்டும். இந்த ஸ்டேஷன் ஸாத்தாரா ரோட் ஸ்டேஷனிலிருந்து சுமார் 50 மைல் தூரத்தில் இருக்கின்றது. ஊர் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து சுமார் அரை மைல் தூரம் மேற்கில் இருக்கின்றது. இப்பக்கங்களில் திருடர்கள் பயம் அதிகமானபடியால் இராக்காலங்களில் இவ்வூர்வரும் வண்டிகளில் வந்திறங்குவது உசிதமன்று. ஸ்டேஷனிலிருந்து ஊருக்குள் போவதற்கு இராக்காலங்களில் வண்டிகள் கிடைப்பது கஷ்டம்.

இது மகாராஷ்டிரர்களுள் அனேகருக்குக் குலதெய்வமான ஸ்ரீகண்டோபா (Khandoba)வின் முக்கிய க்ஷேத்திரம். இவருடையகோவிலும் ஸ்ரீ ஜோதிபாவின் கோவிலைப்போலவே இவ்வூரின் நடுவிலிருக்கும் சிறு குன்றின்மேல் வெகு அழகாகக் கட்டப்பட்டுள்ளது. இவரைப் பரமசிவனுடைய அவதாரமான ஓர் அரசனாகச் சொல்லப்படுகின்றது. அனேகமாக இவர் தம்முடைய வேட்டைநாய் தம்மைப் பின் தொடர்ந்துவரத் தாமும் தம் மனைவியும் குதிரையின் மேலேறிப் போகிற அவசரத்திலேயே காணப்படுகின்றார். இக்கோவிலிலும் அதே அவசரத்திற்றான் சிலை செய்துவைக்கப்பட்டிருக்கின்றது. 'குழந்தையற்றவர்கள் இவரைப் பிரார்த்தித்துக்கொண்டால் குழந்தைகள் பிறப்பதாகவும் அவர்களுள் முதற்குழந்தை ஆணாயின் அதை "ஸ்ரீகண்டோபாவின் நாய்" என்ற நாமத்துடன் ஊரில் யதேச்சையாய்ச் சுற்றிக்கொண்டிருக்கும்படி விட்டுவிடுகின்றனர். அப்படி விடப்பட்ட குழந்தைகள் வயது முதிர்ந்தவுடன் கோவிற்காளைகள் போன்று யாரும் அடக்குவாரின்றிச் சுற்றித்திரிகின்றனர். முதற் குழந்தை பெண்குழந்தையாகப் பிறந்திடின் அக்குழந்தைக்குத்

தக்க வயது வரும்வரையில் வளர்த்து, வயது வந்தவுடன் சரீரத்தில் சூட்டுமுத்திரைகள் போட்டு ஸ்ரீ கண்டோபாவுக்கு மணஞ்செய்வித்து விட்டுவிடுகின்றனர். இக்கெட்டவழக்கம் கூடிய சீக்கிரத்தில் இல்லாது போகும்படி ஸ்ரீ கண்டோபா ஜனங்களுடைய மனதிற் புகுந்து, அவர்களைத் திருத்தி நல்வழியிற் கொண்டுவருவாராக.

இங்கிருக்கும் கண்டோபாவானவர் வடஇந்தியாவில் உள்ள இண்டோர் (Indore) நாட்டின் அரசர்களான ஹோல்கார் (Holkar) வம்சத்தினருக்குக் குலதெய்வமாகக் கருதப்படுகின்றார். முற்காலத்தில் இண்டோர் நாட்டில்

கடுஞ்சினத்த கொல்களிறுங் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரு நெஞ்சுடைய புகன்மறவருமெனை
நான்குடன் மாண்ட தாயினு மாண்ட
அறநெறி முதற்றே யரசின் கொற்றம்
நமரெனக் கோல்கோடாது பிறரெனக் குணங்கொல்லாது
ஞாயி றன்ன வெந்திற லாண்மையும்
திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையு மிகுந்து,

அனிந்திதை யமுதின் சாயற் சமலினி யணங்குங் காதல்
கனிந்தபார் மகளி ராய்வந் தடைப்பைபொற் களாஞ்சி யேந்த
வினந்திரி பதுமக் கோயி லிருவரு மனைய ராகிப்
புனைந்த வெண் கவரிக் கற்றை யிருபுடை புரட்டி வீச,

அரசிறை கொள்ளுஞ் செம்பொ னத்தாணி யிருக்கையெய்தி
நிரைசெறி மடங்கலாறு முடங்கின நிமிர்ந்து தாங்க
விரைசெறி மலர்மீப் பெய்த வியன்மணித் தவிசின் மேவித்
திரைசெறி யமுதிற் செய்த பாவைபோற் சிறந்து,

மனுநீதி தவறாமலும், சிவபத்தியிற் குறையாமலும், போர்முனையிற் புறங்கொடாமலும் அரசாண்டுவந்த அஹல்யாபாயி (Ahaliya Bai) என்னும் மன்னர்குல திலக மாதுசிரோன்மணியால் இவ்வூரின் மேற்பாகத்திற் கட்டப்பட்டுள்ள சிவன்கோயிலும், வெட்டப்பட்டுள்ள திருக்குளமும் இவ்வூருக்கு அணிசெய்து விளங்குகின்றன. அவ்வம்மையே இக்கண்டோபாவின் கோவிலையும் செவ்வனே திருப்பணிசெய்து இவ்வூருக்கு வரும் யாத்ரீகர்கள் தங்கிப்போவதற்கு அரசமாளிகை போன்ற ஒரு

பெரியதர்மசாலையும் கட்டியுள்ளார். இவ்வூருக்கு நேர் கிழக்கில் ஆதி ஜெஜூரி என்னும் சிற்றூர் இருக்கின்றது. அவ்வூரில் இருந்த கண்டோபாவை இவ்வூருக்குக் கொண்டுவந்து, இவ்வழகிய குன்றின்மேல் கோவில் கட்டிப் பிரதிஷ்டைசெய்தவரும் அவ்வம்மையே யாவர் என்று சொல்லுவாருமுளர்.

இவ்வம்மையாரின் அனேக வீர தீரச் செயல்களைக் கேட்டபின்னரும், ஆதி சிவாஜி மகாராஜா அவர்கள் அன்னையான ஜிஜாபாயி அம்மையார் தாம் கர்ப்பிணியாயிருந்த காலத்தும் தம்முடைய கணவருக்குப் போர்த்துணையாக முன்வந்து, தம்மையீன்றவரும் தம்மை இளம்பருவத்தில் போர்த்தொழிலிற் பழக்குவித்தவருமான ஜாதவராவையே எதிர்த்த பராக்கிரமச் செயலைக் கேட்டுத் தெரிந்த பின்னரும், இக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகண்டோபாவானவர் தம் மனைவியோடு குதிரையேறிச் செல்லும் அவசரத்தில் காட்சிகொடுப்பதைப் பார்த்தபின்னரும், நம் இந்திய மாதர்கள் அடுப்பூதிக் காலங்கழிப்பதையே தங்களுடைய பிரதானத் தொழிலாகக் கருதியிருப்பது நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு அறிகுறியன்று.

## பூனாபட்டினம் (Poona City).

ஜெஜூரி கண்டோபாவைத் தரிசித்தபின்னர் மீண்டும் ரயிலேறிப் பூனாபட்டினம் செல்லல்வேண்டும். ஜெஜூரியிலிருந்து பூனா ஸ்டேஷன் சுமார் 40 மைல் தூரத்தில் இருக்கின்றது. இப்பட்டினமானது பம்பாய் இராஜதானியின் தலைநகராய பம்பாய்க்கு இரண்டாவதாகச் சொல்லலாம். ஆனால் படிப்பிலும் நாகரீகத்திலும், நடை உடை பாவனைகளிலும், இப்பட்டினம் பம்பாய்க்குச் சற்றேனும் தாழ்ந்ததன்று. இந்நகரவாசிகள் ஆழ்ந்த கல்வியறிவிலும், உலகியலுணர்ச்சியிலும் முதிர்ந்தும்,

"உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே.
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்.
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்

மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்.
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்,
மேற்பா லொருவனு மவன்கட் படுமே."

என்னும் அற்புதமான அனுபவப் பொருளை நன்குணர்ந்தும் இருக்கின்றனர். இப்பட்டினத்தில் நாள் முழுவதும் சுற்றினாலும் படியாத ஸ்திரீ புருஷர்களைக் காண்பதரிது. இவ்வூர் ஸ்திரீகள் உடுப்பது சேலையேயாயினும், அவர்கள் அதைக் கச்சம்போட்டே கட்டினும், மிக அழகாகவும் நாகரீகமாகவும் உடுத்திக்கொள்ளு கின்றனர். விலையுயர்ந்த ஆடையாபரணாதிகள் இல்லாவிடினும், அவர்கள் நாகரீகமாக கணைக்கால் தெரியாமல் உடுத்திக்கொண்டு, கையில் புத்தகங்களோடும் தக்ஷிகளோடும் அன்னப்பேடுகளைப் போல் திரள்திரளாகப் போவதைப் பார்ப்போர் மனம் கல்லாயினும் கனிந்துருகும் என்பதில் ஐயமில்லை. இப்பட்டினம் இயற்கையாகவே வெகுஅழகாக அமைந்திருக்கின்றதுடன் நம் தென்னாட்டில் உள்ள பங்களூர் பட்டினத்தைப் போன்று, எக்காலத்திலும் சீதோஷ்ணம் சமமாகவிருக்கும் பெரும்பேறு பெற்றது.

இவ்வூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கருகில் முரார்ஜிகோகுல் தாஸ் (Murarjee Gokhuldas) என்னும் சீமானால் கட்டப்பட்ட பெரிய தர்மசாலை ஒன்று இருக்கின்றது. அது இரண்டு பெரும் பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மேற்பாகத்தில், வடஇந்திய சாதுக்களும், தென்னிந்திய ஆண்டி பரதேசிகளும் தங்குகின்றனர். நடுவில் ஒரு பெரிய முற்றமும் சுற்றிலும் விசாலமான தாழ்வாரங்களும் இருப்பதால் ஏககாலத்தில் சுமார் 200 பேர்களுக்குக் குறையாமல் தாராளமாய்த் தங்கியிருக்கலாம். முற்றத்தின் நடுவில் பெரிய கிணறு கட்டி அதினின்று ஜலமெடுத்து ஸ்நானம் முதலிய காரியங்களை முடித்துக்கொள்ளவேண்டிய வசதிகள் செய்திருக்கின்றனர். கீழண்டை பாகமும் பெரிதாகவும், உப்பரிகையோடு கூடியும் இருக்கின்றது. இதில் குடும்பத்தோடு வருபவர்கள் தனித் தனியாகத் தங்கியிருக்கத் தக்க அனேக அறைகள் இருக்கின்றன. கீழ் அறைகள் ஒவ்வொன்றிலும் ஓர் அடுப்பு, ஓர் வாளி (Bucket ஓர் விளக்கு, ஓர் செம்பு இருக்கின்றன. மேல் அறை

கள் சற்றுப் பெரிதாகவும் கட்டில் நாற்காலி மேஜையோடும் இருக்கின்றன. இவ்வறைகளில் தங்குவோர் முறையே 5 அல்லது 10 ரூபாய் முன்பணம் கட்டல் வேண்டும். அவர்கள் சத்திரத்தை விட்டுப் போகும்போது, அவர்கள் தங்கியிருந்த அறைகளிலுள்ள சாமான்கள் சரியாயிருக்கின்றனவா என்று சரிபார்த்துக் கொண்டு, சத்திரத்தின் மானேஜர் பிரயாணிகளிடம் பெற்றிருக்கும் முன்பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுகின்றார். இந்தச் சத்திரத்தில் தண்ணீர்க்குழாய்களும், மலசலபாதைக்குப்போகக் கக்கூஸ்களும் அமைந்திருப்பதால், பிரயாணிகளுக்கு எவ்விதமான கஷ்டமும் தோற்றுகிறதில்லை. சத்திரத்தின் மானேஜரும் காவற்காரனும் எக்காலத்திலும் சத்திரத்திலேயே இருப்பதால் பிரயாணிகள் எந்நேரத்தில் வந்தாலும் ஒருவிதக் கஷ்டமுமின்றித் தங்கலாம். இந்த சத்திரத்தில் மூன்றுநாளைக்கு மேல் தங்கவேண்டுமானால் சத்திரத்தின் சொந்தக்காரரிடமிருந்து உத்தரவு பெற்றுக் கொள்ளல்வேண்டும்.

இப்பட்டினம் மூலா (The Mula) என்னும் நதியின் தென்கரையில் அது மூத்தா (The Mutha) என்னும் நதியுடன் கலக்குமிடத்திற்குச் சற்று மேற்கில் இருக்கின்றது. இப்பெரும் பட்டினம் 22 பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றதென்றும், அவைகளுள் 6 பாகங்களுக்கு வியாழக்கிழமை தவிர மற்றக்கிழமைகளின் பேரையே இட்டிருக்கின்றனரென்றும் தெரிகிறது. அதாவது ஆதித்வார்பேட் (Aditvarpet ஞாயிற்றுக்கிழமைப்பேட்டை), சோம்வார்பேட் (Somvarpet சோமவாரப்பேட்டை), மங்கள்வார்பேட் (Mangalvarpet மங்களவாரப்பேட்டை) என்பதாகப் பேர் கொடுத்திருக்கின்றனர். இவ்வழக்கம் மகாராஷ்டிரதேசத்திலுள்ள அனேக பெரும்பட்டினங்களில் இருப்பதாகத்தெரிகின்றது. கோலாப்பூரிலும் ஷோலாப்பூரிலும் இவ்விதப்பேட்டைகள் இருப்பதைக்காணலாம். இவைகளுள் சனிவார்பேட் என்னும் பாகத்தில் இப்பட்டினத்தில் முற்காலத்தில் அரசாண்டிருந்த அரசர்களின் பழமையான அரண்மனை இருக்கின்றது. இதற்கு *சனிவார் வாடா என்னும் பெயரிட்டிருக்கின்றனர். இவ்வரண்மனையைத் தவிர இப்பட்டினத்திற் பார்க்கவேண்டிய பெருங்கட்டிடங்கள்

*குறிப்பு:— சனிவார் = சனிக்கிழமை; வாடா = அரண்மனை.

பலவுள. அவையாவன:— (1) நகரசபைக்கூடம் (The Council-Hall), (2) தட்சிணக்கல்லூரி (The Deccan College), (3) மராமத்து இலாக்கா கல்விச்சாலை (The Civil Engineering College), (4) பொக்கிஷச்சாலை (The Finance Building), (5) ஸஸூன் வைத்தியச் சாலை (The Sassoon Hospital), (6) தபாலாபீசு (The post Office), இவைகளைத் தவிர, காந்தியடிகள் இருமுறை தனக்குள் வசிக்கப்பெற்ற பெரும்பேற்றையுடையதாய எர்ரவாடா சிறைச்சாலை (The Yerrawada Central Jail), ரெயில்வேஸ்டேஷனிலிருந்து நான்குமைல் தூரத்தில் உள்ள கணேஷ்கிண்ட் என்னும் இடத்திலுள்ள கவர்னர் தங்கும் மாளிகை (The Government House), அதனருகில் இருக்கும் பூந்தோட்டம் (The Botanical Gardens), துப்பாக்கிமருந்து, தோட்டாக்கள் செய்யுமிடம் (The Gun Powder works and the Small Arms-Ammunition Factory), ஊருக்குப் பத்து மைல் தூரத்தில் இருக்கிற தண்ணீர்க்குழாய்கள் வைத்து வேலை செய்யுமிடம் (The Karakwasla waterworks)இவைகளும் பார்க்கத்தக்கவை. ஊருக்குத் தென்மேற்கு மூலையில் இருக்கும் பார்வதி என்னும் அழகியகுன்றின்மேல் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் உமாதேவியைத் தரிசித்தல் அவசியம். அக்குன்றின் அடிவாரத்தில் இருக்கும் ஹீராபாக் (Hira Bagh) என்னும் தோட்டமும், அதன் நடுவில் இருப்பதும் இப்போது நகரசபை (The Town Hall) யாக உபயோகப்படுவதுமான அழகிய மாளிகையும் பார்க்கத்தகுந்தவை. ஊருக்கு வடகீழ்மூலையில் ஆற்றுக்கு வடகரையில் உள்ள ஓர் அழகிய சிறுகுன்றின்மேல் ஸர் விட்டல்தாஸ் தாக்கர்ஸே (Sir Vittal Das Thackersay) என்பவர் கட்டியுள்ள சிறந்த மாளிகையையும், அதற்கருகில் கட்டியிருக்கும் கோவிலையும் பார்த்துவருதல் அவசியம். கோவிலின் கர்ப்பக்கிரகத்தில் தேவியின் விக்கிரகமும், அதற்கு எதிரில் ஸ்ரீதத்தாத்திரேயரின் சிலையும் இருக்கின்றது. இந்த தத்தாத்திரேயரின் சிலை தூவெண்மையான சலவைக்கல்லினாற் செய்யப்பட்டு மிகஅழகாக அமைந்திருக்கின்றது. இவ்வளவு சுந்தரமான கற்சிலை வேறு எங்கும் இருப்பதாகச் சொல்லமுடியாது. மூலா மூத்தா நதிகளின் அழகிய கரைகளும், அவைகளுக்கருகிலுள்ள பூங்காக்களும், நீர்வீழ்ச்சிகளும், விசித்திரமான பாலமும் பார்க்கத்தகுந்தவை.

ஊருக்கு 10 மைல் தூரத்திலுள்ள சிங்கூர் கோட்டையும் 20 மைல் தூரத்திலுள்ள புரண்டர் கோட்டையும் கோடைக்கால வாசஸ்தலங்களாக உபயோகப்படுகின்றன.

பூனாவிலிருந்துகொண்டு ஆலந்தி, தேஹு (Debu) என்னும் புண்ணியக்ஷேத்திரங்களுக்குப் போய்த்தரிசித்து மீளுதல் அவசியம்.

ஆலந்தி (Alandi):— இதை அலங்காவதியென்றும் சொல்லுகின்றனர். முற்காலத்தில் இவ்வூரில் வசித்துவந்த ஸீதோபந்த் (Seeto Pant) என்னும் விப்பிரோத்தமரின் புதல்வியான ரக்குமாபாயி அம்மைக்கும் அவளைப் பண்டரீநாதன் கட்டளையின்படி மணந்த விட்டோபாசாது என்பவருக்கும். விட்டோபாசாதுவின் தவவலிமையாலும், ரக்குமாபாயியின் கற்பின் மகிமையாலும். விட்டோபாவின் குருநாதரான ஸ்ரீபாதசுவாமிகளின் அனுக்கிரகத்தாலும், முறையே பரமசிவன், மகாவிஷ்ணு, பிரமதேவர், ஆதிசக்தி ஆகிய இவர்களுடைய அம்சங்களாகப் பிறந்த நிவிர்த்தி தேவ், ஞான்தேவ், சோபான் தேவ், முக்தாபாயி என்னும் குழந்தைகளில் இரண்டாவதான ஞான்தேவ் சுவாமிகள் இருந்து பண்டரீநாதனை பஜித்து முத்திபெற்ற தலம். ஞான்தேவ்சுவாமிகளின் தந்தையான விட்டோபா என்பவர் முதலிற் சன்னியாசியாயிருந்து தம்முடைய குருவான ஸ்ரீபாதசுவாமிகளின் ஆணைப்படி இல்லறம் நடாத்திக் குழந்தைகளைப்பெற்ற காரணத்தால், அவர் பிராமணஜாதியினின்றும் தள்ளப்படவேண்டும் என்றும், பிராமணர்களோடு சமபந்தியிலிருந்து சாப்பிட அருகமற்றவரென்றும் வாதித்த வேதியர்களை அவ்வூர் அரசன் முன்னிலையில், சக்கிலியன் வீட்டில் வளர்ந்த அருந்ததியை மணந்த வசிஷ்டரும், செம்படவப்பெண்ணான மச்சகந்தியின் கர்ப்பத்திற் பிறந்த வேதவியாஸரும், கிராதனாயிருந்த வால்மீகரும், வலைஞனுக்கு மாணாக்கனாகியவன் எச்சிலையுண்ட நாரதரும், பிராமணர்களானதுமன்றி பிரமரிஷிகளாகவில்லையா என்று தர்க்கித்தும், அப்படியும் வழிக்கு வாராத பிராமணர்களும், அவர்களுடைய ஆசாரியரும் கூடியிருந்த சமயத்தில், தண்ணீர் நிறைந்த தோற்பைகளைச் சுமந்து போகும் எருமைக்கடாவைக்கொண்டு பிரமஞானத்தால் ஒருவன் பிராமணனாகிறானேதவிர பிறப்பினால் பிராமணனாகமாட்டான் என்று

பொருள்படும் வேதத்திலுள்ள நுட்பங்களை எடுத்தோதச்செய்தும், சிரார்த்ததினத்தன்று பிராமணர்கள் உண்ணவருவதற்கு மறுத்த காரணத்தால் மனம்வருந்தியிருந்த ஆசாரியர் வீட்டில் பிதுர்க்களையே நேரில் வரவழைத்து உண்ணச்செய்தும், இன்னமும் அனேக அற்புதங்களைச் செய்தும் விளங்கின *ஞான்தேவ் சுவாமிகள் பிறந்துவளர்ந்து முக்திபெற்ற தலமாதலின் இப்புண்ணியதலத்தை தக் கண்டவளவிலேயே ஜீவகோடிகளுடைய பிதுர்ஹத்தியாதி மகாபாதகங்களும சூரியனைக்கண்ட பனிபோற் சொல்லாதோடுகின்றன என்பது புராணப்பிரசித்தம். இத்தலமும் இதிலிருக்கும் அழகிய பாண்டுரங்கன் கோவிலும் இராமர்கோவிலும் சுவாமிகளின் சமாதியும் இந்திராயணி என்னும் புண்ணியநதியின் இடதுகரையில் இருக்கின்றன. இந்நதி ஜீவநதியாதலின் எப்போதும் ஜலம் ஓடுகின்றது. ஜலவசதி அதிகம்.

இவ்வூர் பூனாவிலிருந்து 13 மைல் தூரத்தில் இருக்கின்றது. இவ்வூர் வருவதற்கு பூனா நகரத்திலுள்ள சனிவார் வாடா என்னும் அரண்மனையின் அருகிலிருந்து மோட்டார் வண்டிகள் புறப்படுகின்றன. இவ்வரண்மனை பூனா ஸ்டேஷனிலிருந்து சுமார் 2 மைல் தூரமிருக்கும்.

இத்தலம் போகவிரும்புவோரிற் சிலர் பூனாவிலிருந்து ஜெஜுரி அல்லது ஸாத்தாராவுக்குப் போகும் இருப்புப்பாதை மார்க்கத்தில் பூனாவிலிருந்து நான்காவது ஸ்டேஷனான ஆலந்தி என்னும் ஊரையே இத்தலமாகக் கருதிச் சென்று ஏமாந்து போகின்றனர். இவ்விதமாக நினைத்துப்போகும் யாத்ரீகர்களை ஏமாற்றித் தங்கள் வீடுகளுக்கு அழைத்துச்சென்று அவர்களிடமுள்ள பொருள்களைக் களவாடிக் கொண்டிருந்த குடும்பத்தார் அனேகர் இருந்த காரணம்பற்றி, அதை இப்பக்கங்களில் §சோர் ஆலந்தி (திருட்டு ஆலந்தி) என்றும், இப்புண்ணிய தலத்தை தேவ்ஆலந்தி (திருவாலந்தி) என்றும் சொல்லுகின்றனர். சோர் ஆலந்தி பூனாவிற்குத் தெற்கிலும், தேவ்ஆலந்தி பூனாவுக்கு வடக்

*குறிப்பு:— இவரை ஞானேஸ்வரர் என்றும் சொல்லுவார்கள். தேவ் என்னும் மகாராஷ்டிரமொழி ஈஸ்வரன் என்று பொருள்படும்.

§குறிப்பு:— சோர் = திருடர் அல்லது திருட்டு.

கிலும் இருக்கின்றது. ஆகையால் ரெயில்வே கால நிர்ணய அட்டவணை (Railway Time Table)யைப் பார்த்து இத்தலத்தின் பேரைப் படித்து அங்கே போய்த் துன்புறுதிருத்தல் அவசியம். இத்தலத்தில் யாத்ரீகர்கள் தங்குவதற்கு அனேக தர்ம சாலைகள் இருக்கின்றன. இடவசதிக்குக் குறைவில்லை.

தேஹூ (Dehu):-- இப்புண்ணிய தலமும் மேற்சொன்ன இந்திராயணி நதியின் வலது கரையில் இருக்கின்றது. இத்தலம் போவோர் பூனாவிலிருந்து பம்பாய்க்குப் போகும் இருப்புப்பாதையில் உள்ளதும், பூனாவிலிருந்து நான்காவது ஸ்டேஷனுமான ஷேலார்வாடி (Shelarwadi) என்னும் ஸ்டேஷனில் இறங்கி வடகிழக்கில் 3 மைல் தூரம் போகவேண்டும். ஊர் சிற்றூராகவும் ஸ்டேஷன் சிறு ஸ்டேஷனாகவும் இருப்பதால் இராக்காலங்களில் வண்டிகள் கிடைப்பதும் அருமை. வழி தெரிந்து போவதும் கஷ்டம். ஆதலின் காலை வண்டியிற் சென்று தரிசித்துவிட்டு மாலைவண்டியில் திரும்பிவிடுதல் நலம். இத்தலம் உத்தவாம்சரான ஸ்ரீநாம்தேவ் சுவாமிகளுடைய அவதாரமானவரும், ஸ்ரீபண்டரீநாதன் பக்தியில் முதிர்ந்து அவருடன் நேரில் பேசும் பாக்கியத்தைப் பெற்று ஸ்தூல தேகத்துடன் வைகுண்டம் சென்றவருமான பரம பாகவத சிகாமணியாகிய ஸ்ரீதுக்காராம் சுவாமிகள் பிறந்து வாழ்ந்த பெறும்பேறு பெற்றதாயதால் இதைத் தரிசித்தல் அவசியம்.

முற்காலத்தில் பண்டரீபுரத்தில் வசித்து வந்தவரும் ஹரி பக்தியிற் சிறந்தவருமான தாம்ஸேட்டி என்னும் தையற்காரருடைய குழந்தையில்லாக் குறையைத் தீர்ப்பதற்காக, பக்தவத்ஸலனை பாண்டுரங்கனிட்ட ஆணையின்படி ஸ்ரீ உத்தவரானவர் குழந்தைவடிவாக சந்திரபாகா நதியில் ஸ்நானம் செய்துகொண்டிருந்த தாம்ஸேட்டியின்முன் மிதந்து வா, அவர் அக்குழந்தையை வாரியெடுத்து மார்போடணைத்துச் சென்று தம் மனைவியிடமீந்து நாம்தேவ் என்னும் நாமகரணஞ்செய்து வளர்த்து வந்தனர். அவர் பாலிய வயதிலேயே பாண்டுரங்கனுக்கு அன்னமூட்டியும், அவர் ஊட்டின அன்னத்தைத் தானுண்டும் அவர், கொடுத்துதவிய பொருளைக்கொண்டு ஓர் சீமானுடைய மகளை மணந்தும், பாண்டுரங்கன் பலமுறையும் தம் வீட்டிற் கொண்டு

வந்து சேர்த்த பொருளைக்கொண்டு தானதர்மங்கள் செய்தும், பாண்டுரங்கனே கூலியாளாய் வந்து தமக்குப் போட்டுக்கொடுத்த பந்தலிற் குடியிருந்தும், மற்றும் அனேக விதமான அற்புதங்களைச் செய்தும் வாழ்ந்துவருநாளில், தாம் பகவான்பேரில் நூறு கோடி சுலோகங்கள் செய்யவேண்டுமென்று ஆசைப்பட்டு பாண்டுரங்கனை வேண்ட, அவர் கட்டளையின்படி தம் நாவில் வந்திருந்த வாக்தேவியின் அருளினால் தொண்ணூற்று நான்கு கோடி நாற்பதுலட்சம் (944,000,000) சுலோகங்களைச் சொல்லி முடிவதற்குள் இவ்வுலகவாசம் அசங்கியமாகத் தோன்றி பகவானுடைய திருவடிநீழலிற்சேர்ந்து, அவரைத் தரிசிக்கவரும் பக்த கோடிகளின் பாததூளி தம் சிரசிற் படியும்படி, அவர்பாதாரவிந்தங்களின் அடியில் அடங்கியிருக்கவேண்டுமென்ற அவாவினால் தூண்டப்பட்டு, பாண்டுரங்கனைப் பிரார்த்திக்க, அவரும் அவரெண்ணத்தைப் பூர்த்திசெய்ய விரும்பி, "நீ மறுபடியும் *தேவநகரத்தில் துக்காராம் என்னும் சாதுவாய்ப் பிறந்து உன் கோரிக்கையை ஈடேற்றிக் கொள்வாயாக." எனத் திருவாய்மலர்ந்தருளியபடி அவதரித்த மகானான ஸ்ரீ துக்காராம் சுவாமிகள் மீதியிருந்த ஐந்துகோடி அறுபதுலட்சம் (56,000,000) சுலோகங்களையும் அபங்கங்களாகச் செய்து முடித்தனர் என்று தெரிகின்றது.

இதைத்தவிர, நான்காம் வருணமென்று சொல்லப்படுகிற சூத்திர ஜாதியிற் பிறந்த துக்காராமுக்கு இவ்வளவு மகிமையா என்று பொறாமைகொண்டிருந்த பிராமணன் முன்னிலையில் ஸ்ரீபாண்டுரங்கனையும் விநாயகரையும் தம்மோடு சமபந்தியில் உண்ணும்படிச் செய்து அவர் பொறாமையைத் தீர்த்தும், பித்தளைச்செம்பைத் தங்கச்செம்பாக்கி வித்வானுக்கீந்தும், ஸ்ரீபாண்டுரங்கனுக்குச் சீட்டெழுதியனுப்பித் தாமிருக்குமிடத்திற்கு வரவழைத்தும், வேதசாஸ்திர விற்பன்னர்களாயிருக்கின்றோமென்று செருக்கடைந்திருந்த வேதியர்களின் கர்வத்தையடக்கியும், இன்னமும் பற்பல விநோதங்களைச் செய்தும் காலங் கழித்துவந்தார்.

---

*குறிப்பு:- தேஹு என்னும் ஊருக்கு தேவநகரம் என்னும் பேரும் வழங்கிவருகின்றது.

இவருடைய ஹரிகதா காலட்சேபத்தைக் கேட்க அக்காலத்தில் மகாராஷ்டிர தேசத்தை அரசாண்டுவந்த சிவாஜி மகாராஜாவானவர், இவர் வீட்டிற்குத் தினந்தோறும் வந்துகொண்டிருந்ததாகவும், அதையறிந்த டில்லி சக்கரவர்த்தியாய அவுரங்கசீபானவர் அவரைப் பிடிக்க இரண்டாயிரம் துருக்கர்களடங்கிய ஓர் சேனையை அனுப்பியதாகவும், அவர்கள் வந்து துக்காராம் சுவாமிகளின் வீட்டைச் சூழ்ந்துகொண்டு, அங்கிருந்தவர்களைக் கைது செய்ய எத்தனித்ததாகவும், அதையறிந்த ஜனங்கள் வெருண்டு கலைபவே, துக்காராம் சுவாமிகள் பாண்டுரங்கனுடைய நாமசங்கீர்த்தனம் செய்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் யாதொரு தீங்கும் நேராதென்று சொல்லிக் கையமர்த்தியதாகவும், அதே சமயத்தில் *ஸ்ரீபாண்டுரங்கனானவர் சிவாஜி மகாராஜாவின் வேடம் பூண்டு ஓர் குதிரையின் மீதேறிக்கொண்டு அவ்வீரர்கள்முன் ஓடியதாகவும், சிவாஜி மகாராஜாவே தப்பியோடுகிறார் என்று நினைத்த துருக்கவீரர்கள் அனைவரும் அவரைப்பின் தொடர்ந்து சென்று ஏமாந்துபோனார்களென்றும், அவர்கள் அவ்வாறு சென்றமையால் அங்கு கூடியிருந்த ஜனங்களுக்கும் அவர்களோடிருந்த சிவாஜி மகாராஜாவிற்கும் யாதொரு தீங்கும் நேரவில்லையென்றும் சொல்லப்படுகின்றது.

மற்றொரு சமயத்தில் துக்காராம் சுவாமிகளை அழைத்து வந்து தம்மோடு வைத்துக்கொண்டு அவரிடம் உபதேசம் பெறவெண்ணின சிவாஜி மகாராஜாவானவர் தண்டிகை முதலிய வாகனங்களோடு தமது மந்திரி முதலியவர்களை அனுப்பி, துக்காராம் சுவாமிகளை அழைத்துவரும்படிச்சொல்லியதாகவும், அவர்கள் சென்று துக்காராம் சுவாமிகளிடம் மகாராஜாவின் விருப்பத்தைத் தெரிவிக்க, அவர் "துறவிக்கு வேந்தனும் துரும்பு." என்னும் பழமொழிக்கிணங்க தாம் சதாகாலமும் பகவந்நாமஸ்மரணையைச் செய்துகொண்டு பிச்சையெடுத்துண்பவர் என்றும், மகாராஜாவிடத்திற் சென்றிருந்தால் தமது கைங்கரியத்திற்குக் குறைவுண்டாகும் என்றும், மகாராஜாவுக்குத் தமக்கும் மேலான குருநா

*குறிப்பு:— சிவாஜி மகாராஜாவின் உண்மைச் சேவகர்களிலொருவன் தன்னுயிர் கொடுத்தாவது மகாராஜாவின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு அவ்விதம் செய்தான் என்று சொல்லுவாரும் உளர்.

தன் ஒருவர் கூடியசீக்கிரத்திற் கிடைப்பார் என்றும் சொல்லி யனுப்பிவிட்டு இருந்துவிட்டனரென்றும், சுவாமிகளின் அனுக் கிரகத்தின்படியே மகாராஜாவுக்கு ஸமர்த்த இராமதாஸ் சுவாமி கள் குருவாய்க் கிடைத்தனர் என்றும் தெரிகின்றது.

இத்தகைய மகானிருந்து காலங்கழித்த தலத்தையும், அவருக்காக அவ்வூரிலேயே கோவில்கொண்டெழுந்தருளியிருக் கும் பாண்டுரங்கனையும், அதே கோவிலில் உள்ள ஸ்ரீராமர் சந்நிதியையும், துக்காராம் சுவாமிகளின் சந்நிதியையும், தரிசித் தல் அவசியம். சுவாமிகள் உயிர் வாழ்ந்திருந்த காலத்தில் அவர் குடியிருந்ததாகச் சொல்லப்படுகிற வீட்டில் இக்காலத்திலும் பாண்டுரங்க பஜனை நடந்துவருகின்றது. அவ்வீட்டின் எல்லையை மிதித்தவளவிலேயே இவ்வுலக வாழ்வு மறைந்து மனம் நிம்மதி யடைகிறது.

இத்தலம் வரும் யாத்ரீகர்கள் தங்கக்கூடிய தர்மசாலைகள் பலவில்லாவிடினும் இவ்வூர் வாசிகள் துக்காராம் சுவாமிகளைப் போலவே குணசீலர்களாகவும், சாந்தகுணமுடையவர்களாகவும், பிறரிடத்தில் தயை தாட்சணியமுள்ளவர்களாகவும் இருப்பதால் மனங்கோணாது யாத்ரீகர்களுக்கு வேண்டிய உதவி புரிகின்றனர். சிறிது கொடுப்பினும் பெரிதாக நினைத்துப்போற்றுகின்றனர்.

சாதாரணமாக இந்தியாவை வலம் வருவதாக நினைத்துப் போவோர் பூனாவிலிருந்து வடக்கு நோக்கி பம்பாய் செல்வதே முறையாயினும், உலகப்பிரசித்தி பெற்றதும், மகாராஷ்டிர தேசத் தாராலும் மற்றவர்களாலும் பூலோக வைகுண்டமெனப் புகழப் படுவதும், சந்திரபாகா நதிக்கரையிலிருப்பதும், ஜெயதேவ், நாம் தேவ், நிவிர்த்திதேவ், ஞான்தேவ், ஏகநாத், துக்காராம், நிம்பராஜன் கானுபாத்ரா, சக்குபாயி, முக்தாபாயி, முதலிய அனேக பக்தர் களுக்குப் பிரத்தியட்சமாகக் காட்சியளித்தும், அவர்களுடன் நேரிற் பேசியும், அவர்கள் சமர்ப்பித்த நைவேத்தியங்களை உண் டும், இக்காலத்தும், தம்மிடம் உண்மையான பக்தியோடும் ஏகாக்கிர சிந்தையோடும், தம்மை நாடிவரும் பக்தகோடிகளுக்கு சேவை சாதிக்கக் கங்கணங்கட்டிக்கொண்டு இருக்கும் ராஹி ரக்குமாபாயி சமேத பாண்டுரங்கன் கோவில் கொண்டெழுந்

தருளியிருக்கும் பண்டரீபுர க்ஷேத்திரத்தைத் தரிசியாமற் போவது கோவிலுக்குச் சென்று ஈஸ்வரனைச் சேவியாமலும், புண்ணிய தீர்த்தங்களுக்குப் போய் அவைகளில் ஸ்நானம் செய்யாமலும் திரும்புவது போலாமாதலின், சற்றே தெற்குநோக்கிச் சென்று பண்டரீபுர யாத்திரையையும் முடித்துக்கொண்டு மேற் செல்லுதல் முறையாமென்று கருதி அத்தலத்தையும் இந்த பூபிரதட்சண யாத்திரையிற்சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கின்றது.

## அத்தியாயம் 10

—(o)—

வாடினேன்வாடி வருந்தினேன்மனத்தாற் பெருந்துயரிடும்பையிற்பிறந்து
கூடினேன்கூடி யிளையவர் தம்மோ டவர்தரும் கலவியே கருதி
ஓடினேனோடி யுய்வதோர் பொருளானுணர்வெனும்பெரும்பதந்தெரிந்து
நாடினேனாடி நான்கண்டு கொண்டேன் நாராயணா வென்னும் நாமம்.

அண்டர்களு முனிவர்களு மடியர்தாமு
அரனயனும் யோகிகளு மகிலந்தன்னில்
எண்டிசையு ளதியர்களு மிறைஞ்சியேத்தும்
எம்பெருமா னின்னடிக்கு ஏழையானுன்
தொண்டர்கள்தந் திருவடிக்குத் தொண்டுசெய்யத்
தூயனே கருணைவைத் தருளுமிந்த
பண்டரியில் பக்தர்க்காய் வந்தமர்ந்த
பாண்டுரங்கா நின்பதத்திற் கபயந்தானே.

வந்தனங் கோவிந்தா வந்தனம் வைகுந்தா வந்தனம் நந்தநந்தா
வந்தனம் முசுகுந்த வரதா பராத்பரா வந்தனம் ஸ்ரீமுகுந்தா
வந்தனம் பவரோக வைத்யனே ஹரிஹரீ வந்தனங் கமலநேத்ரா
வந்தனம் நரஹரீ வந்தனம் முரஹரீ வந்துஎன் வினைப்பரிகரி.

### பண்டரீபுரம் (Pandharpur).

அண்டர்கள் புகழும் பண்டரீபுரம் என்னும் இந்தப் புண்ணிய க்ஷேத்திரம் போக விரும்புவோர் பூனா ஜங்ஷனில் பெரிய இருப்புப்பாதையில் சென்னைக்குப் போகும் வண்டியில் ஏறிப் பூனாவிலிருந்து சுமார் 115 மைல் தூரத்திலும், சென்னையிலிருந்து 560 மைல் தூரத்திலும் உள்ள குர்துவாடி (Kurdwadi) ஜங்ஷனில் இறங்கி வண்டிமாற்றி "பார்ஸி லைட் ரயில்வே"

(The Barsi Light Railway) என்னும் சிறு வண்டித்தொடரில் ஏறிச் செல்லல்வேண்டும். குர்துவாடிக்கும் பண்டரீபுரத்திற்கும் சுமார் 32 மைல் தூரம் இருக்கின்றது இடையில் 6 ஸ்டேஷன்கள் உள. வண்டித்தொடரானது பண்டரீபுரம் ஸ்டேஷனை நெருங்கும்போதே பண்டரீபுரக் காட்சிகள் புகைப்படக்காட்சியில் (Cinema) தெரிவது போல் ஜனங்களுடைய கண்களுக்கு ஒவ்வொன்றாய்ப் புலப்படுகின்றன முதன் முதலில் புண்ணிய நதியான சந்திரபாகாவும் அதன்மேல் புதிதாகக் கட்டப்பட்டிருக்கின்ற பாலமும் தென்படுகின்றன. இப்பாலமானது வில்லிங்டன் பிரபுவானவர் (Lord Willingdon) பம்பாயில் கவர்னராகவிருந்த காலத்தில் கட்டப்பட்டு அவருடைய பேருடன் 1915-ளுவத்தில் திறந்து வைக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இந்தப்பாலங் கட்டுவதற்குமுன் வண்டித்தொடர் ஆற்றின் கீழ்கரையிலேயே நின்றுபோயிருந்ததாகவும், ரயிலில்வரும் ஜனங்கள் கோடைகாலங்களில் வண்டிகளிலும் மாரி காலங்களில் தோணிகளிலும் ஏறி ஆற்றைக் கடந்து சென்று கொண்டிருந்தார்கள் என்றும், அக்கஷ்டம் இப்பாலம் கட்டியதால் நிவர்த்தியாயிற்று என்றும் சொல்லப்படுகின்றது. பண்டரீநாதனைத் தரிசிக்க வரும் யாத்ரீகர்கள் பண்டரீபுரத்தின் எல்லையை மிதித்தவளவிலேயே ஸ்ரீபண்டரீநாதனிடமுள்ள அளவுகடந்த பத்திமேலீட்டினால் மெய்ம்மறந்து புளகாங்கிதர்களாகி எல்லாரும் சேர்ந்து ஏககாலத்தில் ஒரேசப்தமாய் "ஜய! ஜய! புண்டலீகவரத!" "ஹரிவிட்டல்!" என்று வாய்விட்டலறிப் போடுகிற சப்தத்தினால் காது செவிடுபடுகின்றது. இப்புண்ணிய க்ஷேத்திரத்திற்கு வருவோர் எங்குபோவது, எங்கு தங்குவது, என்னசெய்வது என்ற கவலை கொள்ளவேண்டிய அவசியமே இல்லை. இவ்வூரில் வசிக்கும் க்ஷேத்திரோபாத்தியாயர்களான "படவே" என்னும் நாமமுள்ள பிராமணர்கள் அனேகர் ஒவ்வொரு வண்டிக்கும் தவறாமல் ஸ்டேஷனில் வந்து காத்திருந்து, யாத்திரைக்காரர்களை மிக்க மரியாதையுடன் அழைத்துச் சென்று, அவர்கள் தங்கியிருப்பதற்குத் தங்கள் தங்கள் இல்லங்களிலேயே இடங்கொடுத்து, அவர்களுக்கு ஆகவேண்டிய எல்லாவசதிகளையும் செய்துகொடுக்கின்றனர். யாத்திரைக்காரர்கள் தங்குவதற்கு இவ்வூரில் கணக்கற்ற மடங்களும் தர்மசாலைகளும் இருக்கின்றன. ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து ஊருக்குப்

போகும் சாலையிலேயே அனேக தர்மசாலைகள் கட்டப்பட்டுள்ளன. அவைகளை முதன்முதற் பார்ப்போர் அரசர்களின் அரண்மனைகளோ, ஸ்ரீமான்களின் மாளிகைகளோ என நினைத்து, அவைகளின் உள்ளே புகவும் கூசுவர் என்பதில் ஐயமில்லை. இவைகளிற் றங்கும் யாத்ரீகர்களுக்கு ஜலவசதி காற்றுவசதி முதலிய வசதிகளில் ஒன்றிலேனும் குறைவில்லை.

இக்கலத்தின் முக்கிய தீர்த்தமான பீமா என்னும் ஜீவநதியானது இந்த க்ஷேத்திரத்தின் கீழ்பாரிசத்தில் உத்தர தட்சிணவாகினியாய் ஓடிப் பரம பவித்திரமான கிருஷ்ணைநதியிற் கலக்கின்றது.

வேதமே முதல் யாவையு முணர்கினு மேலாம்
ஆதிவானவன் கறைமிடற் றிறையென வறியாப்
பேதைமாக்கட முணர்வென வலைந்து பேர்கின்ற
சீதநீரெலாந் தெளிதலின் றுயது சிறிதும்.

இவ்வாறு கலங்கி வெண்மையான நிறத்தோடுள்ள பீமாவின் வெள்ளமானது நீலமேக சாமளவண்ணனான எம்பெருமான் திருமேனிபோன்ற கருநீலநிறத்தோடு பிரவகித்துவரும் கிருஷ்ணநதியுடன் கலக்குமிடத்தை நோக்கில்,

தெழித்த மால் கரியினங்கட மெயிற்றினுற் சிதையக்
கிழித்தபேரிறால் சொரிந்ததேன் கிரியுள வெல்லாங்
கொழித்துவந்துற வணைதரும் பீமியின் கொள்கை
சுழித்தநீர்க் கங்கை யமுனையைக் கலந்தெனத் தோன்றும்.

ஆதிகாலத்தில் பூமியே தேராகவும், சூரிய சந்திரர்கள் தேர்க்கால்களாகவும், சூரியகிரி சந்திரகிரி பர்வதங்கள் அச்சுகளாகவும், தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் ஆகிய நான்கு புருஷார்த்தங்களும் ஸ்தம்பங்களாகவும், நான்கு வேதங்களும் குதிரைகளாகவும், சாஸ்திரங்கள் குதிரைகளுக்குப் போடும் கடிவாளக்கயிறுகளாகவும், புராணங்கள் கடிவாளங்களாகவும், மேருமலை வில்லாகவும், இந்திரன் நாணாகவும், மகாவிஷ்ணு அம்பாகவும், பிரமதேவர் தேர்ப்பாகனாகவும் இருக்க, இத்தகைய ஒப்பற்ற பக்கபலத்தோடு, பரமசிவன் திரிபுர ஸம்ஹாரம் செய்தபோது,

அவர் சரீரத்தினின்றுண்டான வேர்வை ஜலமானது ஒரு நதியாகப் பெருகி அதிவேகமாகவும் கோரமான சப்தத்துடனும் ஓடிவந்ததைக் கண்ட ஈஸ்வரன் அதை "பீமா" என்னும் பெயரிட்டழைத்தனர் என்றும், அந்நதியின் அடங்காப் பிரவாகத்தைக் கண்ட பண்டரீபுர வாசிகள் அஞ்சி நடுங்கி ஓடோடியும் போய் க்ஷேத்திர பாலரான காலபைரவ மூர்த்தியைச் சரணடைந்தனர் என்றும், பைரவ மூர்த்தியானவர் தம்மைச் சரணமடைந்தவர்களுக்கு அபயமளித்துத் தமது தண்டத்தைக் கையிலேந்திக் கொண்டு பீமாவை நோக்கிச் சென்றனர் என்றும், அவர் கோபாவேசத்துடன் வருவதைக் கண்ட பீமாவானவள் பயந்து ஸ்ரீபாண்டுரங்கனைச் சரணடைந்தனள் என்றும், அவர் அவளைத் தேற்றி, "நீ சற்றேனும் அஞ்சவேண்டாம். நம் சந்நிதியில் எக்காலத்திலும் சாவதானமாக ஓடிக்கொண்டிருந்து நம்மை நாடி வரும் பக்தகோடிகளின் பாவங்களைப் போக்கிக்கொண்டிரு. உன்னிடத்தில் கோமதி, ஸரஸ்வதி, நர்மதை, தப்தி, கங்கை யமுனை, கோதாவிரி, காவிரி முதலிய புண்ணிய நதிகள் எல்லாம் ஐக்கியமாயிருக்கும். நீ எல்லாவற்றிற்கும் சிரேஷ்டமான புண்ணிய தீர்த்தமாக விளங்குவாய்." என்று வரங்கொடுத்தருளினர் என்றும் புராணவாயிலாய்த் தெரிகின்றது. இது காரணம் பற்றியே மற்றவிடங்களில் அதிவேகமாக ஓடிவரும் பீமா நதியானது, எவ்வாறு கங்கை காசிபட்டினத்தருகில் விஸ்வேஸ்வரர் சந்நிதியில் தன்னுடைய கோபத்தையும் வேகத்தையும் அடக்கிக்கொண்டு அந்தர்வாஹினியாக அதாவது உள்ளோட்டமாக ஓடிக்கொண்டிருக்கின்றதோ, அவ்வாறே பண்டரீபுர எல்லைக்கு வந்தவுடன் தன்னுடைய கோரசப்தத்தையும் வேகத்தையும் அடக்கிக்கொண்டு, ஸ்ரீபாண்டுரங்கன் சந்நிதியில் மிகவும் சாந்தமாக ஓடிக்கொண்டிருக்கின்றதாகச் சொல்லப்படுகின்றது.

முற்காலத்தில் குருபத்தினியைச் சேர்ந்த தோஷத்திற்காக பிரகஸ்பதியால் சபிக்கப்பெற்ற சந்திரனானவன் இந்த பீமா நதியில் ஸ்நானஞ்செய்து தன்னுடைய சாபத்தை நிவர்த்தி செய்துகொண்ட காரணம்பற்றி இந்நதிக்கு இந்த க்ஷேத்திர எல்லையில் சந்திரபாகா (Chandrabhaga, என்னும் அழகான பேர் வந்திருப்பதாகத் தெரிகிறது.

## தீர்த்தங்களின் விவரம்.

(1) பஞ்சகங்கா:— இது ஊருக்கு வடக்கில் சுமார் 3மைல் தூரத்தில் இருக்கின்றது. இவ்விடத்தில் துங்கா, காந்தி, சுஞ, சதி, ப்ருங்காரி, என்னும் ஐந்து நதிகளும் ஓடுகின்றன. இவ்விடத்தில் சூரியனுக்கு சாவர்ணை என்னும் மனைவியிடத்தில் பிறந்த சாவர்ணி என்னும் எட்டாவது மனுவால் ஒரு சுவர்ணலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. இவ்விடம் பார்வைக்கு வெகு இரமணீயமாகவும் வாசத்திற்குச் சுகமானதாகவும் இருக்கின்றது. இவ்வைந்து புண்ணியநதிகளிலும் ஸ்நானம் செய்து ஈஸ்வரனைப் பூசித்தல் மிக்கவிசேஷம். வைசாகசுத்தம் திருதியையும் மகாசிவாராத்திரியும் இவ்விடத்தில் ஸ்நானஞ்செய்ய விசேஷமான தினங்களாகக் கருதப்படுகின்றன.

(2) மாண்டவியதீர்த்தம்:— இது ஊருக்கு ஈசானியதிக்கில் இருக்கின்றது. இது முற்காலத்தில் மாண்டவிய மகரிஷியானவர் தவம்புரிந்து முத்திபெற்ற விடமாகக் கருதப்படுகின்றது.

(3) பிரமதீர்த்தம்:— இவ்விடத்தில் பிரமதேவர் 30 அசுவமேதயாகங்கள் செய்தனரென்றும், இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வோர் அசுவமேதயாகம் செய்த பலனை அடைகின்றனர் என்றும் சொல்லப்படுகின்றது. இது மாண்டவிய தீர்த்தத்திற்குத் தெற்கில் இருக்கின்றது.

(4) கலசதீர்த்தம்:— இது பிரமதீர்த்தத்திற்கருகில் இருக்கின்றது. இவ்விடத்தில் பிரமதேவர் கலசஸ்தாபனஞ்செய்து யாகஞ்செய்ததாகச் சொல்லிக்கொள்ளுகின்றனர்.

(5) பித்ருதீர்த்தம்:— இது கலசதீர்த்தத்திலிருந்து சுமார் 50 கெஜதூரத்தில் இருக்கின்றது. இது ஸ்ரீராமரானவர் தமது தகப்பனுருடைய கருமத்தைச் செய்த விடமாதலால், இவ்விடத்தில் பித்ருகர்மங்கள் செய்வது கயாவில் செய்வதைவிட விசேஷமாகக் கருதப்படுகின்றது. இந்தத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து இங்கெழுந்தருளியிருக்கும் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியைத் தரிசித்தல் விசேஷம்.

(6) சக்கரதீர்த்தம்:— இது பித்ரு தீர்த்தத்தின் அருகில் இருக்கின்றது. முற்காலத்தில் இட்சவாகு வம்சத்திலுதித்தவனும்

மாந்தாதாவின் புதல்வனும் விஷ்ணுபக்தியிற் சிறந்தவனுமான அம்பரீஷ சக்கரவர்த்திக்காக மகாவிஷ்ணுவின் சக்கரம் துர்வாச முனிவரைத் துரத்த, அவர் திரிமூர்த்திகள் உள்பட எல்லாத் தேவர்களிடத்தும் சென்றும் பயன்படாமை கண்டு, காகாசுரன் இராமபாணத்திற்கஞ்சி ஈரேழு பதினான்கு உலகங்களுக்கும் ஓடித் தப்பமுயன்றும் பயன்படாது இறுதியில் ஸ்ரீராமனையே சரண்புகுந்து தன்கண்களில் ஒன்றை இராமபாணத்திற்கிலக்காக்கி உயிர்பிழைத்ததுபோல், துர்வாசரும் அம்பரீஷனையே சரண்புகுந்ததாகவும், அவன் அச்சக்கரத்தை விளித்து முனிவரை வருத்தாமல் பூமிக்குள் ஐக்கியமாகும்படிக் கட்டளையிட்டதாகவும், அவன் கட்டளையை மறுக்கவியலாது அச்சக்கரம் இந்த சக்கர தீர்த்தத்தில் ஐக்கியமாய்விட்டதாகவும், அதற்கடையாளமாக இக்காலத்தும் இத்தீர்த்தத்திலிருந்து சக்கர சொரூபமான கற்சிலைகள் கிடைக்கின்றன என்றும் சொல்லப்படுகின்றது.

(7) வியாஸதீர்த்தம்:— இது வியாஸநாராயணர் சந்நிதிக்கெதிரில் சந்திரபாகாநதியிலேயே இருக்கின்றது. இது வியாஸர் தவம்புரிந்து முத்தியடைந்த விடமாகக் கருதப்படுகின்றது.

(8) இலட்சுமிதீர்த்தம்:— இது வியாஸதீர்த்தத்திற்கருகில் இருக்கின்றது. இவ்விடத்தில் முற்காலத்தில் மகாலட்சுமி தவம்புரிந்து மகாவிஷ்ணுவை அடைந்தனர் என்று தெரிகிறது.

(9) தீர்த்தபஞ்சகம்:— இது இலட்சுமி தீர்த்தத்தின் அருகில் இருக்கின்றது. இவ்விடத்தில் 30 கெஜ சதுரத்திற்குள் (1) சங்கதீர்த்தம் (2) சக்கரதீர்த்தம் (3) கதாதீர்த்தம் (4) பத்மதீர்த்தம் (5) கோபிகாதீர்த்தம் ஆகிய 5 புண்ணியதீர்த்தங்களும் அமைந்திருப்பதால் ஸ்நானவிசேஷம்.

(10) புண்டலீகதீர்த்தம்:— இது ஸ்ரீ புண்டலீகவரதருடைய சந்நிதியில் இருக்கின்றது. இப்புண்ணிய தீர்த்தத்தில் ஸ்ரீ பாண்டுரங்கன் எக்காலத்திலும் வசிப்பதால் ஸ்நானம் மிக்க விசேஷம்.

(11) முக்தகேசிதீர்த்தம்:— இது ஸ்ரீ புண்டலீகர்கோவிலிலிருந்து புஷ்பாவதி சங்கமம் வரையில் வியாபிக்கின்றது. இதில் பிதுர்க்களுடைய அஸ்திகளைப் போட்டால் மூன்று மாதங்களுக்

குள் அவைகள் நீற்றுக்கற்களாக மாறிவிடுகின்றனவென்பதை இக்காலத்தும் பிரத்தியட்சமாய்க் காணலாம். ஜேஷ்டசுத்தம் அஷ்டமியன்று ஸ்நானவிசேஷம்.

(12) சங்கமதீர்த்தம்:— இது புஷ்பாவதி நதியானது சந்திரபாகாவிற் சேருமிடம். வைசாகசுத்தம் திருதியை, பாத்ருபதசுத்தம் ஏகாதசி ஆகிய இரண்டுதினங்களிலும் ஸ்நானவிசேஷம்.

## சந்திரபாகா நதியிலுள்ள ஸ்நானகட்டங்கள்.

(1) கிருஷ்ணஜிகட்டம்:— இது ஊருக்கு வடக்கில் தேவஸ்தானம் கச்சேரியின் அருகில் இருக்கின்றது.

(2) உத்தவகட்டம்:— இது கமிட்டி கச்சேரியின் தெற்கில் இருக்கின்றது.

(3) ஹரிதாஸர்கட்டம். (4) *கும்பார்காட் (Kumbar-Ghat):— இவை இரண்டும் உத்தவகட்டத்திற்குத் தெற்கிலும், பண்டரீநாதன் சந்நிதிக்கு எதிரிலுள்ள மஹாத்துவார கட்டத்திற்கு வடக்கிலும் இருக்கின்றன.

(5) மஹாத்துவாரகட்டம்:— இது ஸ்ரீ பாண்டுரங்கன் கோவிலுக்கெதிரில் இருப்பதால் ஜனங்கள் ஸ்நானஞ்செய்வதற்கும், அங்குக் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் புண்டலீகவாதரைத் தரிசனம் செய்வதற்கும் வசதியாயிருக்கின்றது.

(6) காஸ்ரா கட்டம்:— இது மஹாத்துவார கட்டத்திற்குத் தெற்கில் இருக்கின்றது.

(7) சந்திரபாகா கட்டம்:— இது பட்டினத்தின் தெற்கு வீதிக்கு நேர் கிழக்கில் இருக்கின்றது. ஸ்தல பிரதட்சணம் செய்வோர் ஆற்றிலிருந்து மேலேறிப் போக இந்த கட்டம் உபயோகப்படுகின்றது.

(8) தத்தாசாரிய கட்டம்:— இது சந்திரபாகா கட்டத்திற்குத் தெற்கில் இருக்கின்றது.

(9) கோபால்நாயக்கர் கட்டம்:— இது ஊரின் தெற்குக் கடைசியில் கோபால்பூருக்கருகில் இருக்கின்றது.

---

*குறிப்பு:— கும்பார்காட் என்பது தமிழில் குயவர்கட்டம் என்று பொருள்படும்.

இவைகளைத் தவிர கிருஷ்ணஜி கட்டத்திற்கும் உத்தவ கட்டத்திற்கும் இடையில் ஒரு கட்டமும், கும்பார்காட் (Ghat) டிற்கும் மகாத்துவார கட்டத்திற்கும் நடுவில் ஒரு கட்டமும் இருந்து பூமிக்குள் மறைந்துபோயினவென்று தெரிகிறது.

## ஸ்ரீ பண்டரிநாதன் கோவில்.

இத்திருக்கோவில் பட்டினத்தின் நடுவில் ஓர் உன்னத மான இடத்திற் கட்டப்பட்டிருக்கின்றது. இது சுற்றுப் பிரகா ரங்களுள்பட கிழக்கு மேற்கில் சுமார் 350 அடி நீளமும், தெற்கு வடக்கில் 170 அடி அகலமும் உள்ளது. இதற்குக் கிழக்கில் மூன்று, தெற்கில் ஒன்று, மேற்கில் ஒன்று, வடக்கில் மூன்று ஆக எட்டு வாயில்கள் இருக்கின்றன. அவைகளுள் கீழ்புறத்தில் சந்நிதிக்கெதிரிலுள்ள பெரிய வாயில் வழியாகத்தான் ஜனங்கள் அதிகமாக உள்ளே போகின்றனர். இதற்கு நாமதேவர்வாயில் என்று பேரிடப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீ பாண்டுரங்கனிடம் தாங்கள் செலுத்திவந்த பத்தியின் முதிர்ச்சியினால் முத்திபெற்றவர்களும், பண்டரிநாதனான ஸ்ரீ விட் டோபாவுடன் நேரில் வார்த்தையாடக்கூடிய பெரும்பேறு பெற்றவர்களுமான பரமபாகவத சிகாமணிகளுள் ஒருவரான *ஸ்ரீ நாம்தேவ் சுவாமிகளின் அந்திய காலத்தில் பகவான் அவர் முன் தோன்றி, "உமக்கென்னவேண்டும்?" என்று கேட்டதாக வும், அவர் தம்முன் தோன்றிநின்ற பரமாத்மாவைப் பலவித மாகத் துதித்துப்பணிந்து, "அடியேன் எக்காலத்தும் உம்முடைய பாதாரவிந்தத்திலேயே இருக்கவேண்டும். உம்முடைய தரிசனத் திற்கு வருகிற பக்தகோடிகளின் பாததூளியானது எக்காலத் தும் என் சிரசின்மேற் படியவேண்டும். ஆதலின் உமது திருக் கோவிலின் பிரதமவாயிலான கீழக்கோபுர வாயிலின் படிகளில் அடியிலிருக்கும் படி அதாவது முதற்படியின் கீழ் நான் அடங்கி இருக்கும்படி கிருபைசெய்யவேண்டும்." என வேண்டிநின்றனர் என்றும், ஸ்ரீ பாண்டுரங்கரும் தம்முடைய பக்தனை விட்டகல மனம் பொறாதவராய் "அவ்வாறேயாகுக." என்றருளி மறைந் தனர் என்றும், ஸ்ரீ நாம்தேவ் சுவாமிகளும் ஆனந்தமேலீட்டால்

---

*குறிப்பு:— ஸ்ரீ நாம்தேவ் சுவாமிகளின் சரித்திரம் தேஹு ஸ்தல விவரத்திற்காண்க.

பாண்டுரங்கனைப் பன்முறையும் வலம்வந்து கீழக்கோபுரவாயிலின் முன்வந்து அடங்கினரென்றும், அங்கு அப்போதுண்டாய அசரீரிவாக்கின்படி அவரை அவருடைய சிஷர்கள் அங்கேயே அடக்கஞ்செய்தனர் என்றும் சொல்லப்படுகின்றது. வைகுண்ட பதவியாயினும் மிக எளிதிற் பெறக்கூடிய சுவாமிகள், பரமாத்மாவின் தரிசனத்திற்கு வரக்கூடிய பக்தகோடிகளின் பாததூளி தம்முடைய சிரசிற்படும்படியான பாக்கியம் தமக்குக் கிடைத்தல் வேண்டும் என்றும், அதையே வைகுண்ட பதவியைவிட மேலானதென்றும் நினைத்துக் கேட்டனர் என்றால், அவருடைய பக்தி முதிர்ச்சியை என்னென்று நினைப்பது! என்னென்று சொல்வது!! என்னென்று எழுதுவது!!!

இது காரணம் பற்றியே இவ்வாயிலுக்கு "நாமதேவர் வாயில்" என்னும் பெயர் வந்திருப்பதாகத் தெரிகிறது. இவ்வாயிலின் பக்கத்தில் ஸ்ரீ நாம்தேவ் சுவாமிகளின் சிலையொன்று செய்துவைக்கப்பட்டிருக்கின்றது. இக்காலத்தில் இதையறிந்த பக்தர்கள் அப்படிக்குச் சந்தன புஷ்பாதிகளை சமர்ப்பித்து பூஜை செய்கின்றார்களே தவிர, யாரும் அதன்மேற் கால்வைத் தேறுவதில்லை. இவ்வரிய தலத்திற்கு யாத்திரை வருவோர் இதையறிந்து நடத்தல் அவசியம். இப் படிக்கட்டினருகில் ஆதி திராவிடர் என்றிப்போது சொல்லப்படும் பஞ்சம குலத்திற்பிறந்தும், தம்முடைய பக்திமுதிர்ச்சியினால் ஸ்ரீ பாண்டுரங்கனைத் தமதில்லத்திற்கழைத்து அன்னமளித்துவந்தவரான சோகாமேள சுவாமிகள் அடங்கியிருப்பதாகச் சொல்லிக்கொள்ளுகின்றனர்.

இப்படிகளைக்கடந்து உள்ளே சென்றால் முக்திமண்டபம் இருக்கின்றது. இம்மண்டபத்திற்கு இருபக்கங்களிலும் 6 அறைகள் இருக்கின்றன. அவைகள் யாத்திரைக்காக வரும் பக்தர்கள் தங்க உபயோகப்படுகின்றன. இம்மண்டபத்தின் மேற்பாகத்தில் நகாரா (பேரிகை) அடிக்கும் இடம் இருக்கின்றது. அதற்குப் போகும் வழி மண்டபத்தின் வடபக்கத்தில் இருக்கின்றது.

இம்மண்டபத்தைக் கடந்து சென்றால் சுமார் 120 அடி நீளமும் 60 அடி அகலமும் உள்ள ஒரு கூடமும், அதற்கருகில் மாவேலைப்பாடுள்ள ஓர் மண்டபமும் இருக்கின்றது. இவைகளில்

தினந்தோறும் வேதாத்தியயனம் நடப்பதுடன் சாதுர்மாஸ புண்ணியகாலத்திலும் மற்ற விசேஷதினங்களிலும் பஜனைகள் நடக்கின்றன.

இதற்கு வலதுபுறத்தில் இத்தலத்திலிருந்து பிரக்கியாதி பெற்ற பிரஹ்லாதபாவாபடவே அவர்களின் *சமாதியும் கான்யா ஹரிதாஸ் சுவாமிகளின் *சமாதியும் இருக்கின்றன.

இம்மண்டபத்திற்கப்பால் மாவேலையாற் செய்யப்பட்ட சபாமண்டபம் ஒன்றிருக்கின்றது. அதில் ஸ்ரீ விட்டோபாவின் சந்நிதிக்கெதிரில் பெரிய திருவடி (கருடாழ்வார்)யின் ஆலயமும், அதற்குத்தெற்கில் சிறியதிருவடி (ஆஞ்சநேயர்)யின் ஆலயமும் இருக்கின்றன. இதைத்தவிர இராமபக்தியிற் சிறந்தவரான ஸ்ரீ ஸமர்த்த இராமதாஸ் சுவாமிகளாற் பிரதிஷ்டை செய்யப்பட்ட பெரிய ஹனுமார் விக்கிரகம் ஒன்றிருக்கின்றது. இம்மண்டபம் வரையில் யாத்ரீகர்கள் தங்கள் தங்கள் நாமங்களைப் பூமியிற் செதுக்கி வைத்திருக்கின்றனர். ஸ்ரீ பாண்டுரங்கனைத் தரிசிக்க வரும் பக்தகோடிகளின் பாததூளி தங்களுடைய நாமங்களின் மேற் படிவதினாலாவது, தாங்கள் நற்கதியடைய மார்க்கமுண்டாகுமோவென நினைத்து இவ்விதம் செய்கிறார்களென நினைக்க வேண்டியிருக்கின்றது.

இம்மண்டபத்திலிருந்து உள்ளே செல்வதற்கு மூன்று வாயில்கள் இருக்கின்றன. அவைகளில் நடுவில் உள்ள வாயிலின் இருபுறத்திலும் ஜயன் விஜயன் என்னும் துவாரபாலகர்களுடைய பிம்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்குப் பக்கத்தில் ஒருபுறம் விநாயகரும் மற்றப்புறத்தில் ஸாஸ்வதியும் பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கின்றனர்.

இவ்வாயிலைக்கடந்து உள்ளே சென்றால் 16கால் மண்டபமிருக்கின்றது. நம் தென்னாட்டில் நூற்றெட்டுக்கால் மண்டபங்களும் ஆயிரக்கால் மண்டபங்களும் கணக்கற்றனவாக விருக்கின்

*குறிப்பு:— நம் தென்னாட்டில் எத்தகைய மகான்களாயினும் கோவிலின் உட்புறத்தில் சமாதிபெற இடங்கொடார்கள். இக்கோவிலில் இம்மகான்களின் சமாதிகள் இருப்பதால் கோவிலின் மகிமை அதிகரித்திருக்கின்றதே தவிர குறைந்தபாடில்லை.

றனவாதலின், 16கால் மண்டபத்தை ஒரு பெரிய மண்டபமாக எடுத்துச்சொல்வதைப்பற்றி வியப்புண்டாகலாம். உண்மையிலும் அது பெரிய மண்டபமன்று. ஆனால் வடஇந்தியாவில் 4 அல்லது 6 கால்களுக்கு மேலுள்ள மண்டபங்கள் கோவில்களிற் காணப் படுவது அரிதாதலின், இம்மண்டபத்தை இப்பக்கங்களில் மிகப் பெரிதாகவே நினைக்கின்றனர். இம்மண்டபம் சுமார் 45 அடி நீளமும் 40 அடி அகலமும்தான் இருக்கின்றது. இப்பதினாறு கம்பங்களில் இரண்டாவது வரிசையில் உள்ள இரண்டாவது கம்பமானது தங்கவேலை செய்த வெள்ளித்தகட்டினால் மூடப் பட்டு, கருடஸ்தம்பம் என்னும் நாமத்துடன் விளங்குகின் றது. யாத்ரீகர்கள் இக்கம்பத்தை சாட்சாது கேசவனாகவே பாவித்து, அதை ஆலிங்கனம் செய்துகொள்ளுகின்றனர். இந்த மண்டபத்திற்குத் தென்புறத்தில் இரண்டு வாயில்களும், வடபுறத் தில் மூன்று வாயில்களும் இருக்கின்றன. இவைகளைத்தவிர கோவிலினுள்ளே போவதற்கு மேற்புறத்தில் ஒரு வாயில் இருக் கின்றது. அதை வெள்ளி வாயில் (Silver gate) என்று சொல்லு கின்றனர். இது முற்காலத்தில் மிகச்சிறிபதாகவும் முழுவதும் வெள்ளித்தகட்டினால் மூடப்பட்டும் இருந்ததாகத் தெரிகிறது. *இப்போது அதில் வெள்ளியினால் பூவேலை செய்யப்பட்டதோடு இருக்கின்றது.

இம்மண்டபத்தையும் கடந்து உட்சென்றால் நான்கு கால் மண்டபமிருக்கின்றது. இம்மண்டபத்தின் தென்புறத்தில் யானைவாயிலும் வடபுறத்தில் ஸ்ரீ விட்டோபாவின் பள்ளியறை யும் இருக்கின்றன. இதையும் கடந்து உள்ளே சென்றால் கமான் (வளைவு) என்னும் பேருள்ள ஒரு சதுரமான மண்டபம் இருக் கின்றது.

இம்மண்டபத்திலிருந்து கர்ப்பக்கிரகம் போவதற்காக ஏற்பட்ட வாயில் 3 அடி உயரமே இருப்பதால் அங்குப்போவோர்

---

*குறிப்பு:— நம் தென்னாட்டில் அனேகம் கோவில்களில் வெள்ளி, தங்க வாகனங்களும், விக்கிரகங்களும் இருந்தவை மறைந்துபோய் அவைகள் இருந்தவிடத்தில் வெள்ளி, தங்கமுலாம் பூசப்பட்டவை தோன்றியிருப்பதுபோலவே, இக்கோவிலில் இருந்த வெள்ளித்தகடும் மறைந்துவிட்டதுபோலும். ஆயினும் இப்பக்கங்களில் அத்தகைய சூதுகள் மிகக்குறைவென்றே சொல்லல் வேண்டும்.

வணங்கி ஒடுங்கித் தலைகுனிந்து செல்லுதல் அவசியமாக ஏற்படு கின்றது. அந்த கர்ப்பக்கிரகம் எட்டு சதுர அடி விஸ்தீரணமே இருப்பதால், ஏககாலத்தில் 3, 4 பேர்களுக்கு மேலிருப்பது கஷ்டம். இதில் மேற்புறச் சுவற்றோரத்தில் ஸ்ரீ விட்டோபா வானவர் வெள்ளியினாற் செய்யப்பட்ட செங்கல்லின்மேல் நின்று கொண்டு, தம்மை நாடிவரும் பக்தகோடிகளுக்கு புன்முறுவ லுடன் கூடிய முகத்தோடு சேவைசாதித்து அருள்புரிகின்றார். இம்மூர்த்திக்கு இருபுறத்திலும் அர்ச்சகர்கள் இருப்பதற்காக இரண்டு சிறு மேடைகள் இருக்கின்றன. இம்மூர்த்தி 3½ அடி உயரம் இருக்கின்றது.

இம்மூர்த்தியின் சிரசில் சிவலிங்கம் இருக்கின்றது. முற் காலத்தில் செல்வம் மிகுந்த சீமானாகிய வர்த்தகர் ஒருவருக்குக் குழந்தையில்லாக் குறையினால் தமக்குப் புத்திரப்பேறளிக்கும்படி பாண்டுரங்கனைத் தினந்தோறும் வேண்டி வழிபட்டு வந்ததாக வும், அவர் கிருபையால் தமக்கு மகவுண்டாயின் பகவானுக்கு ஓர் தங்க அரைஞாண் செய்து பூட்டுவதாய் உறுதிசெய்து கொண்டனர் என்றும், அவ்வாறே அவருக்கோர் ஆண்மகவு பிறந்தவுடன் அவர் தம் வாக்கை நிறைவேற்ற பண்டரீபுரம் வந்து அங்குளளோரைக் கேட்டு, அவ்வூரிலுள்ள சிவபக்தியிற் சிறந்த நரஹரி *ஸோனார் என்னும் தங்கவேலைக்காரரே அவ்வணி செய்வதில் திறமைவாய்ந்தவரெனத் தெரிந்துகொண்டு, அவரிடம் சென்று ஆண்டவன் அரையிலிடுவதற்கு ஓர் அரைஞாண் செய்து தரும்படிக் கேட்டதாகவும், அவர் விழிப்பிலும் தூக்கத்திலும் கனவிலும் நனவிலும் பரமசிவனையன்றி வேறு ஒரு தெய்வத் தையும் நினையாதவராதலின், தாம் ஒரு நாளும் பாண்டுரங்கனைப் பார்த்ததில்லையென்றும், பாண்டுரங்கனுடைய அரையின் அள வையும் தமக்குண்டான கூலியையும் கொடுப்பின் தாம் அரை ஞாண் செய்துகொடுப்பதாக ஒப்புக்கொண்டனர் என்றும், அவ்வர்த்தகர் கோவிலுக்குச்சென்று பண்டரிநாதனுடைய இடையின் அளவை ஒரு தங்கக்கம்பியினால் அளந்துவந்து, அக் கம்பியை நரஹரிஸோனாரிடம் கொடுத்ததாகவும், அவர் அந்த

*குறிப்பு:— ஸோனார் என்னும் மகாராஷ்டிர மொழிக்கு பத்தர் என்று பொருள்.

அளவுக்குச் சரியாக அரைஞாண் செய்துகொடுக்க, வர்த்தகர் அதை வாங்கிச்சென்று பகவான் இடையிற் பூட்டினபோது அதன் சுற்றளவு சற்றே குறைந்தமைகண்டு, குறைந்த அளவை அதிஜாக்கிரதையாய் அளந்துகொண்டுபோய்க் கொடுத்து, அந்த அளவுக்கு அரைஞாணை நீட்டிக்கொடுக்கும்படிச் சொல்லி வாங்கி வந்து பகவான் அரையிற் பூட்டினபோது, அது முன் எவ்வளவு குறைந்ததோ அவ்வளவே அதிக நீளமாக இருந்ததைக்கண்டு, மீண்டும் பத்தரிடம் சென்று குறைத்துக்கொண்டுவந்து பூட்ட முன்னளவே குறைந்ததாகவும், இவ்வாறாக, குறைத்தால் இடையளவிற்குக் குறைந்துபோவதையும் நீட்டினால் இடையளவிற்கு மேல் நீண்டுபோவதையும் கண்டு மனம் வருந்தி, நரஹரிஸோனாரிடம் சென்று அவரே பாண்டுரங்கன் சந்நிதிக்கு வந்து அவர் இடையளவை எடுத்து அரைஞாணை அதற்குத் தக்கபடி நீட்டியோ குறைத்தோ பூட்டும்படி கேட்டுக்கொள்ள, அவர் தாம் பண்டரீபுரவாசியாயிருந்தும் பாண்டுரங்கன் கோவிலின் விமானத்தையாவது அதன் மேலுள்ள சிகரத்தையாவது பார்த்ததில்லையென்றும், தமக்கு ஸ்ரீ மல்லிகார்ச்சுனரே வழிபடும் தெய்வமென்றும், தாம் பாண்டுரங்கன் கோவிலுக்குள் வரவியலாதென்றும் மறுத்துவிட்டதாகவும், அதைக்கண்ட வர்த்தகர் இத்தகைய விஷ்ணுத்துரோகியும் இவ்வுலகில், அதிலும் இப்புண்ணிய க்ஷேத்திரமான பண்டரீபுரத்தில் இருப்பது விந்தையினும் விந்தையே என நினைத்து, மீண்டும் அப்பொற்கொல்லரை விளித்து "நீர் பாண்டுரங்கனைப் பாரா வண்ணம் உமது கண்களைக் கட்டிக்கொண்டுவந்து கரங்களால் தடவி அளவெடுத்துக்கொண்டு அணி செய்துகொடும்." என வேண்டினதாகவும், அதற்கிசைந்த நரஹரிஸோனார் கண்கட்டுடன் ஆலயத்தினுட்சென்று பண்டரிநாதனுடைய இடையளவெடுக்கத் தம்கைகளைப் பின்புறம் நீட்டியதாகவும், அவருடைய அருமையான ஆலிங்கனத்தை அடையப்பெற்ற பண்டரிநாதன் அளவற்ற ஆனந்தங்கொண்டு, தாமே சிவவேடம்பூண்டு, ஜடாமகுடதாரியாய், ஐந்து முகங்களும் தசபுஜங்களும் உடையவராய், இடையில் புலித்தோலணிந்தவராய், பன்னகபூஷணராய், தமது திருக்கரங்களில் மான் மழு முதலிய சிவச்சின்னங்களை ஏந்தினவராய், நரஹரிஸோனாரின் கைகளுக்குப் புலப்பட்டதாகவும், அவர் தாமணைத்த விக்கிரகம் பரமசிவ விக்

கிரகமாயிருந்ததை உணர்ந்து வியப்புற்று, "இங்கிருப்பவர் நாம் வணங்குங் கடவுளார் அன்றோ!" என்று சொல்லிக்கொண்டே தம் கண்களிற் கட்டியிருந்த உடையைத் தள்ளிவிட்டுப் பார்க்க, அத்தருணத்தில் அவர் கண்களுக்கு அங்கிருந்த மூர்த்தி, சங்கு சக்கர கதாபத்மதாரியாய், கழுத்தில் வனவனசமாலைகளை அணிந்தவராய், பீதாம்பரதாரியாய்த் தமது திருமார்பிலிலங்கும் இலட்சுசமேதராய் நின்ற மகாவிஷ்ணுவாயிருந்ததையும், அவர் சிரசின் மேல் தாம் வணங்கும் கடவுளாய சிவலிங்கமிருந்ததையும் கண்டு, தமது கண்களை இறுகமூடிக்கொண்டு முன்போல் தம்மிருகரங்களாலும் தடவிப்பார்க்க மறுபடியும் பரமசிவனுடைய உருவம் தமது கைகளிற்படவே, தமது அஞ்ஞானமகல மெய்ஞ்ஞானம் பெற்று அரியும் அரனும ஒன்றென உணர்ந்து "ஹே! சதாசிவா! ஹே! கேசவா! மகாதேவா! வாசுதேவா! வைகுண்டவாசா! ருத்திரபூமிநேசா! பக்தபரேசா! அத்துவைதவேஷா!" என அவ்விருமூர்த்திகளுடைய திருநாமங்களையும் மாறி மாறிச் சொல்லித் துதித்து, அவர்களுடைய அத்துவைதத் தன்மையை அதுவரையில் தாம் உணராதிருந்தமைக்காக மனம்நொந்து, பாண்டுரங்கனைப் பன்முறையும் பணிந்து சென்றதாகவும், அவர்செய்து பூட்டின அரைஞாண் இக்காலத்தும் ஸ்ரீ விட்டோபாவின் இடையிலிருப்பதாகவும், நரஹரிஸோனருக்கு அன்று சிவலிங்கத்தைத் தம் சிரசிற்றாங்கிக் காட்சிகொடுத்தபடியே இன்றும் ஸ்ரீ விட்டோபாவானவர் தலையாலே பலி தேருந்தலைவனைத் தம் தலையிலே தாங்கி நின்றவண்ணம் சேவைசாதிக்கின்றனர் என்றும் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீ பாண்டுரங்கனைத் தவிர வேறு தெய்வத்தை மனதில் நினையாது, கண்ணினாற் காணாது, வாயினால் துதியாது, வீரவைஷ்ணவ சிகாமணியாய் இருந்து வந்த ஸ்ரீ நாம்தேவ் சுவாமிகள், ஓர் நாள் ஸ்ரீ மல்லிகார்ச்சுனர் சந்நிதிக்கருகில் ஸ்ரீ பாண்டுரங்கனின் திருநாமங்களைச் சொல்லி பஜனை செய்துகொண்டிருந்ததாகவும், அன்று மகா சிவராத்திரிதினமாதலால் பார்வதிமணாளனை ஆராதிக்க வந்த சிவபக்தர்களிற் சிலர், அவரை நோக்கி, சிவன் கோவிலுக்கருகில் விஷ்ணு நாமங்களைச் சொல்லித் தங்கள் சிவபூஜையைக் கெடுக்காமல் சற்றே விலகிப்போம்படி வேண்டியதாகவும், அவரும் அதற்கிணங்கி அக்கோவிலின் பின்புறத்திற் சென்று

தும் பஜனையை நடத்திக்கொண்டிருக்க, அச்சமயத்தில் விஷ்ணு நாமங்களைப் பழித்த வேதியர்களைப் புறக்கணிக்கவும், ஸ்ரீ நாம் தேவ் சுவாமிகளின் விட்டல் பஜனையைக் கேட்கவும் நினைத்து, கிழக்கு முகமாயிருந்த பரமசிவன் மேற்கு முகமாய்த் திரும்பியதாகவும் சொல்லப்படுகின்றது.

இவ்விரு சம்பவங்களிலிருந்து விஷ்ணுவும் சிவனும் வேறல்லர் என்றும், விஷ்ணுவை நினைந்து சிவனை இகழ்வதும், சிவனை நினைந்து விஷ்ணுவை இகழ்வதும் தவறென்றும் காதலாமலகமாய்த் தெரிகின்றது. முன்சொன்ன காவீர க்ஷேத்திர மான்மியத்தில் மகாவிஷ்ணுவும் மகாலட்சுமியும் வேறல்லர் என்று புலப்படுத்தப்பட்டது. பரமசிவனை உமாபதியென்று உணராமல் உமை வேறு சிவன் வேறு என்று எண்ணின பிருங்கி மகரிஷியின் தப்பெண்ணத்தை மாற்றுவதற்காகத் தாமும் தேவியும் ஒன்றாகி உமையொருபாகராய்க் காட்சியருளிய திருவிளையாடலினின்று சத்தியும் சிவனும் வேறல்லர் என்று வெளியாகின்றது. மேலும் விஷ்ணுவானவர் தம் நாபிக்கமலத்தில் பிரமதேவரைத் தாங்கியிருப்பதைக்கொண்டு திருமால் வேறு அயன் வேறு என்று நினைத்தல் தவறு என்று தெரிகின்றது. பிரமதேவர் தம் நாவிற் குடிகொண்டுள்ள கலைமகள் மூலமாய்த் தம் சிருஷ்டித் தொழிலையும் மற்றத் தொழில்களையும் நடாத்துவதிலிருந்து, வாணியும் அவர் கேள்வனும் வேறல்லர் என்று கொள்ளல்வேண்டியிருக்கின்றது. ஆகவே, ஆக்கல் அழித்தல் காத்தல் என்னும் முத்தொழில்களையும் மேற்கொண்டு நடாத்தும் மும்மூர்த்திகள், அவர்களின் இணைபிரியா நாயகிகளாகக் கருதப்படும் திரு உமை நாமகள் ஆகிய மூன்று சத்தி சொரூபங்கள் ஆக எல்லாரும், ஆதிமத்யாந்தரகிதராயும், சர்வவியாபகராயும், சர்வாந்தர்யாமியாயும், சர்வேஸ்வரனும் விளங்குகின்ற ஓரே பரப்பிரம சொரூபத்தின் பல தோற்றங்களே (Manifestations) யாவர் என்றும், அவர் ஒருவரே நமக்குப் பல உருவங்களோடு சேவைசாதித்தருள்கின்றார் என்றும் உய்த்துணர்ந்துகொள்ளல் அவசியம்.

உருவ ராகியு மருவின ராகியு முருவரு வினராயும்
ஒருவ ரேயுளார் கடவுள்கண் டறிமினோ உலகுளீ ருணர்வின்றி
இருவ ராமென்று மூவரே யாமென்று மியலுமை வர்களென்றும்
எருவ ராயுரைத் துழல்வதென் னுடற்குயி ரிரண்டுமூன் றெனலாமே.

சில வருடங்களுக்குமுன்னர் ஸ்ரீ பாண்டுரங்கனைத் தரிசிக்க வருவோர் அப்பரமாத்மாவின் திருப்பாதகமலங்களை அதியார்வத்துடன் ஆலிங்கனம் செய்து சென்றுகொண்டிருந்தனர் என்றும், அக்காலத்தில் தரிசனத்திற்காக வந்த ஒரு வடஇந்திய சாதுவானவர் எக்காரணம்பற்றியோ பகவானுடைய பாதங்களைத் தாம் மறைத்துக் கொண்டுவந்திருந்த *கல்வினால் மோதி மூர்த்திக்கே ஆபத்து வரும்படிச் செய்ததைக்கண்ட அர்ச்சகர்கள் அவரை வெளியேற்றிவிட்டனர் என்றும், அது முதல் யாரும் அம்மூர்த்தியின் திருப்பாதங்களைக் கட்டியணைக்க முடியாமற் செய்து விட்டனர் என்றும், இக்காலத்தும் தரிசனத்திற்காக வரும் வடஇந்திய சாதுக்களை வெளிவாயிலிலேயே சோதித்து உள்ளே விடுகின்றனர் என்றும் சொல்லப்படுகின்றது.

ஸ்ரீ விட்டோபாவைத் தரிசித்து விட்டு 16 கால் மண்டபத்தின் தென்புறத்திலுள்ள வாயிலின் வழியாகத் தெற்குப் பிரகாரத்திற்குச் சென்றால், அங்கு ஓர் விசாலமான மண்டபம் இருப்பதைக் காணலாம். அம்மண்டபத்தின் அருகில் ஒரு பெரிய விருட்சம் இருக்கின்றது. அதை இவ்வூரில் தரட்டி விருட்சம் என்று சொல்லுகின்றனர்.

---

*குறிப்பு:— துக்காராம் சுவாமிகள் இடைவிடாது இரவும் பகலும் பாண்டுரங்கன் திருப்பாத கமலங்களைத் தம் மனதிற் பதித்து பஜித்துக் கொண்டிருந்து, இல்லறவிஷயங்களைச் சற்றேனும் கவனியாதிருந்தமையாற் சோற்றுக்கு வழியற்று, பசிப்பிணியால் வருந்தி நொந்த சுவாமிகளின் மனைவியானவர் தம் மந்த மதியால், அத்திருப்பாதங்களைத் தாம் கல்வினால் நசுக்கிச் சிதைத்துவிட்டால், தம் கணவர் அவைகளை நினைப்பதைவிட்டு இல்லறக் காரியங்களைச் செவ்வனே நடாத்துவார் என்ற மூட நினைவு கொண்டு, பாண்டுரங்கன் திருவடிகளைப் பின்னப்படுத்துவதற்காக ஒரு பெருங்கல்லைச் சுமந்துகொண்டு கோவிலுக்குச் சென்றதாகவும், அதைக் கண்ட ருக்மணி தேவியார் அவ்வம்மையைத் தேற்றி அவருக்கு வேண்டிய திரவியத்தைக் கொடுத்தனுப்பினர் என்றும், அதையறிந்த சுவாமிகள் தம்மனைவி மூடமதியால், ருக்மணி பிராட்டியை நேரிற் காணும் பாக்கியத்தைப் பெற்றும் பேரின்ப முத்தியைப் பெறாது, அனர்த்தத்திற்கு ஏதுவாகி சீக்கிரத்தில் அழியும் பொருளைக் கைக்கொண்டதற்காக மனம் வருந்தி, அவர் கொண்டுவந்த திரவியம் அனைத்தையும் ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு, முன்போல் ஹரிநாம ஸ்மரணையில் ஆழ்ந்திருந்தனர் என்று சொல்லப்படும் சரித்திரத்தை ஒப்பிடுக.

இந்தத் தாட்டி விருட்சத்தின் வரலாறு பின்வருமாறு சொல்லப்படுகின்றது. பண்டரீபுரத்தருகில் உள்ள மங்கல்வேடே என்னும் சிற்றூரிலிருந்துவந்த கானுபாத்ரா என்னும் ஓர் அழகிய பெண்மணி ஸ்ரீ பாண்டுரங்கனிடத்தில் விசேஷ பக்திசெலுத்தி வந்ததாகவும், அப்பக்கத்தில் அரசாண்டுவந்த முகமதிய அரசன் ஒருவன் அப்பெண்மணியின் அழகில் ஈடுபட்டு மதிமயங்கி, அவளை எவ்விதமாகவாவது தன்வயமாக்கிக் கொள்ளக் கருதித் தன் சேவகர்களை அனுப்பி அவளை அழைத்துவரும்படிக் கட்டளையிட்டதாகவும், சேவகர்கள் வந்தவுடன் அவர்கள் கருத்தையுணர்ந்த கானுபாத்ரா தன் மானத்தை இழப்பதைவிட உயிரையிழப்பதே மேலென்று கருதி, தான் சதமென்று நம்பியிருந்த ஸ்ரீ பாண்டுரங்கனிடம் தனக்கு நேர்ந்துள்ள விபத்தைத் தெரிவித்துவிட்டு உயிரை விடுவதாகத் தீர்மானித்துக்கொண்டு, தன்னை அழைத்துச்செல்ல வந்த சேவகர்களிடம் தான் நவாபின் அந்தப்புரத்திற் சேர்ந்துவிட்டால் ஸ்ரீ பாண்டுரங்கனைத் தரிசிக்க முடியாதாகையால் கடைசியாக ஒருமுறை ஸ்ரீ பண்டரீநாதனைத் தரிசித்துவிட்டு, அவர்களுடன் வருவதாகச் சொல்லிவிட்டுக் கோவிலுக்குட்சென்று, ஸ்ரீ விட்டோபாவிடம் தன் மானத்தைக் காப்பாற்றும்படிப் பிரார்த்தித்துக்கொண்டதாகவும், பக்தவத்ஸலரான பரமாத்மாவானவர் அவள் திடபக்திக்கு மெச்சி அவளைத் தம்முள் *ஐக்கியம் செய்துகொண்டதாகவும், உயிரற்ற அப்பெண்ணின் உடலைப் புதைத்தவிடத்தில் இம்மரம் உண்டாயிற்று என்றும், அதுகாரணம் பற்றியே அம்மரத்தருகில் இருக்கும் வாயிலுக்குக் கானுபாத்ரா வாயிலெனப் பேர் வந்திருக்கிறதாகவும் சொல்லப்படுகின்றது.

மேற்சொன்ன மரத்தருகில் ஸ்ரீ வேங்கடாசலபதியின் சந்நிதி இருக்கின்றது. இம்மூர்த்தியானது பரமபவித்திரமான கண்டகிநதியிற் கிடைத்த சாலக்கிராமத்தினாற் செய்யப்பட்டிருக்கின்றது. தமது நான்கு கைகளிலும் சங்கு சக்கர கதா பத்மத்

---

*குறிப்பு:— ஸ்ரீ பாண்டுரங்கன் கானுபாத்ராவைத் தம் தொடையில் ஐக்கியம் செய்து கொண்டதற்கு அடையாளமாக பகவான் தொடையில் இக்காலத்தும் அக்கன்னிகையின் வடுவிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அக்கன்னிகையின் பேர் கற்பகவல்லி என்றும் சில சரித்திரங்களிற் காணப்படுகின்றது.

தோடு சேவைசாதிப்பதைத் தரிசித்தல் அவசியம். இதற்குச் சற்று மேற்கில் மஹாலட்சுமியின் கோவிலும், அதற்குப் பின்புறத்தில் இராமேஸ்வரர் சந்நிதியும், அதற்கு வடக்கில் சூரியன், விநாயகர், கண்டோபா, நாகோபா, இவர்களின் சந்நிதிகளும் இருக்கின்றன.

வடக்குப் பிரகாரத்தில் மேற்பாகத்தில் ஸ்ரீருக்குமணி தேவியின் ஆலயமும், அதற்குத் தெற்கில் சத்தியபாமையின் அம்சமான ராஹியம்மையின் சந்நிதியும், அதற்கருகில் நவக்கிரகச் சிலை ஒன்றும் இருக்கின்றது

ஸ்ரீருக்மணிதேவியின் சந்நிதிக்கெதிரில் *சுவர்ணபிம்பள் என்னும் பேர் கொண்ட அரசமரம் ஒன்று இருக்கின்றது. அதன் கீழ்நின்று தேவியைத் தரிசிப்பது மிக்க விசேஷமாகக் கருதப் படுகின்றது. இம்மரத்திற்குக் கிழக்கில் ஏழு அறைகள் தெற்கு நோக்கி இருக்கின்றன. அவைகளில் முதல் ஆறு அறைகளிலும் முறையே (1) காசிவிஸ்வநாதர் (2) இராமலட்சுமணர் (3) காலபைரவர் (4) மகாதேவர் (5) தத்தாத்திரேயர் (6) நரஸோபா ஆகிய இவர்களின் விக்கிரகங்கள் இருக்கின்றன. ஏழாவது அறை காலியாக இருக்கின்றது.

இச்சந்நிதிகளுக்கெதிரிலுள்ள சுவரில் மகாராஷ்டிர பாஷையில் "எண்பத்துநான்கு" என்று பொருள் படும் "சௌர்யா ஐன்ஸி" Chowrya Ainsi) தேவியின் சிலை ஒன்று அமைக்கப் பட்டிருக்கின்றது. அச்சிலையின் பேரில் தம்முடைய முதுகைத் தேய்ப்பவர் இலட்சத்து எண்பத்து நான்கு ஆயிரம் ஜன்மங்களிலிருந்து விமுக்தம் அடைகின்றனர் என்று கருதப்படுகின்றது. எதற்காக முதுகைத் தேய்க்கவேண்டும் என்று விசாரித்தறிய முடியவில்லை. இந்த தேவியின் அனுக்கிரகம் பெற்றுக் கொண்டு 16 கால் மண்டபத்தினுள் நுழைந்து, அங்குவைக்கப் பட்டிருக்கும் ஸ்ரீ பாண்டுரங்கனின் பாதுகைகளைத் தரிசித்துக் கொண்டு வெளியிற் போகலாம். (1) நான்குகால் மண்டபத்திலுள்ள ரங்கசிலை (2) கருடஸ்தம்பம் (3) முத்திமண்டபத்திலிருக்கும் கணபதிக்கருகில் உள்ள இடம், ஆகிய இம்மூன்று இடங்

*குறிப்பு:— சுவர்ண பிம்பள் = தங்க அரசு.

களிலுமிருந்து பாண்டுரங்கனைத் தரிசித்தல் மிக்க விசேஷமாகக் கருதப்படுகின்றது.

## ஸ்ரீ விட்டோபாவின் பூஜோபசாரவிதிகள்.

இக்கோவிலின் எல்லாக்காரியங்களையும் நிர்வகித்து நடத்துபவர்களுக்கு "படவே" என்று பெயர். நம் தென்னாட்டுக் கோவில்களுக்குப் பஞ்சாயத்தார்கள் அல்லது டிரஸ்டிகள் (Trustees) செய்துவரும் காரியங்களை எல்லாம் இவர்கள் செய்துவருகின்றனர். ஆனால் பஞ்சாயத்தார்களைப்போல் இவர்கள் யாராலும் நியமிக்கப்படுவதில்லை. வம்சபரம்பரையாக இக்கோவிலின் காரியங்களைச் செய்துவரும் பாத்தியமுடையவர்கள். இவர்கள் 8) வீட்டார் இருக்கின்றார்கள். இவர்களைத்தவிர, (1) "புஜாரி" (Pujari), (2) "பேணரி" (Benari), (3) "பரிசாரகர்", (4) "ஹரிதாஸர்", (5) "டிங்கரே" (Dingare), (6) "டாங்கே" (Donge), (7) "திவட்டே" (Divatte), என்னும் ஏழு வகுப்பினர்கள் இருக்கின்றனர். இவர்களில் புஜாரி என்போர் பகவானுக்கு வேண்டிய அபிஷேக அலங்காரங்களையும் தூபதீப நைவேத்தியங்களையும் செய்துமுடிப்பவர்கள். பேணரி என்போர் பகவான் சந்நிதியில் வேதபாராயணம் செய்பவர்கள். பரிசாரகர் என்போர் பகவான் அபிஷேகத்திற்காகத் தீர்த்தம் கொண்டுவருவோர். ஹரிதாஸர்கள் சந்நிதியிற் பஞ்சபதி சொல்பவர்கள். டிங்கரே என்போர் பகவானுக்கு அபிஷேக அலங்காராதிகள் முடிந்தபிறகு கண்ணாடி காண்பிப்பவர்கள். இவர்களே ஸேஜாரத்தி என்னும் பூஜை சமயத்தில் பகவான் பள்ளியறைக்குப் போவதற்காக நடைபாவாடை விரிப்பவர்கள். டாங்கே என்போர் கட்டியக்காரர்களைப்போல் தங்க வெள்ளித்தடிகளைத் தாங்கி நிற்போர். திவட்டே என்போர் தீவட்டி பிடிப்பவர்கள். இவர்களைத் தவிர "உத்பாதர்" என்னும் குடும்பத்தினர் ஸ்ரீருக்மணிதேவியின் கோவிலில் பூஜை செய்பவர்கள். உத்பாதர்கள் மாத்திரம் ருக்வேத பிராமணர்கள். மற்றவர்கள் எல்லாரும் யஜுர்வேதிகள்.

சாதாரண தினங்களில் நாள் ஒன்றுக்கு ஆறுகாலம் பூஜை நடக்கின்றது. அவையாவன:— (1) காக்கடாரத்தி. (2) பஞ்சாமிர்தஸ்நானபூஜை. (3) மத்தியானபூஜை. (4) திரு

தீபப் பிரகார பூஜை. (5) தூபாரத்தி. (6) ஸேஜாரத்தி. காக்கடா ரத்தி என்பது அதிகாலேயில் 4 மணிக்கு மேல் 5 மணிக்குள் நடக்கின்ற பூஜை. இது ஸ்ரீ பாண்டுரங்கன் ஏகாந்தமாக சேவை சாதிக்கின்ற சமயமாதலால் தரிசனம் மிக்க விசேஷம். தவறக் கூடாது. படவேக்கள் வந்து கதவைத்திறந்ததும் பேணரிகள் ஸ்தோத்திரம் செய்கின்ருர்கள். புஜாரிகள் எம்பெருமானின் கமலப் பொற்பாதங்களேப் பாலிஞற்கழுவி, புதுச்சந்தனத் திலக மிட்டு, பூமாலேகள் சூட்டி அலங்கரித்து ஆரத்திசெய்கிருர்கள்.

இதன்பிறகு பஞ்சாமிர்த ஸ்நானபூஜை ஆரம்பிக்கின்றது. பகவான் பேரில் சாத்தியிருக்கின்ற வஸ்திரம் புஷ்பம் முதலியவை களேக் களேந்தபிறகு, உஷ்ணோதகத்திஞல் அபிஷேகம் செய்து, அதன்பிறகு தயிர் அபிஷேகம் நடத்தி, எம்பெருமான் வாயில் வெண்ணெய் ஊட்டுகின்றனர், வாய்நிறைய வெண்ணெய்யோடு நவநீத சோரஞக அளிக்கும் தரிசனம் கண்ணுடையோர் காணும லிருக்கவொண்ணுக் காட்சியாகும். அதன்பிறகு தேன், சர்க் கரை, பால் இவைகளால் அபிஷேகம் செய்து, அதன்பின், சுத்த ஜலத்திஞல் அபிஷேகம் செய்கின்றனர். இத்தகைய பஞ்சாமிர் தாபிஷேகம் நடந்தேறின பிறகு, பகவானுக்கு அரையில் வஸ் திரம் உடுத்தி, மேலே சட்டை போட்டு, தலேயில் அழகான பாகை கட்டிப்பூமாலேகளால் அலங்கரிக்கின்றனர். இச்சமயத்தில் டிங்கரே வகுப்பைச் சேர்ந்தவர்கள் பகவானுக்குக் கண்ணுடி காண்பிக் கின்றனர். அதன் பிறகு தூப தீப நைவேத்தியங்களேச் செய்து காலேப் பூஜையை முடிக்கின்றனர். அச்சமயத்தில் ஸ்நானஞ் செய்து மடியோடு வந்திருப்பவர்கள் பகவானருகிற் சென்று சேவிக்கலாம். மற்றவர்கள் வெளியில் நின்று தரிசிக்கவேண்டி யது. உள்ளே செல்லல் கூடாது.

நம் தென்னுட்டில் பிராமணர்கள் ஸ்நானம் செய்யாமலும் பல் துலக்காமலும் வந்திருப்பினும் அவர்கள் உள்ளே செல்லலாம் என்றும், அதிகாலேயில் ஸ்நானஞ்செய்து பரிசுத்தமாய் வந்திருப் பினும் பிராமணரல்லாதார் உள்ளே செல்லலாகாது என்றும் நடந்து வரும் வழக்கம் இங்கு கிடையாது, ஸ்நானஞ்செய்து மடியோடு வந்திருந்தால் யாவராயினும் உட்செல்லலாம். ஸ்நானம்

செய்யாது வந்திருப்பின் பிராமணர்களாயினும், படவேக்களாயினும் உட்செல்லலாகாது.

காலை 9 மணி முதல் பகல் 1மணி வரையில் பக்தகோடிகள் அநேகவிதமான நைவேத்தியங்களோடு திரள் திரளாக வந்து ஸ்ரீ பாண்டுரங்கனைத் தரிசிக்கின்றனர். இத்தலத்தில் எந்நாளும் திருநாளே. ஒருநாளும் கூட்டம் குறைவதில்லை. தாங்கள் கொண்டு வந்திருக்கும் நைவேத்தியங்களை பகவானுக்கு அர்ப்பணஞ் செய்துவிட்டு, அவருடைய திருப்பாத கமலங்களில் தங்கள் சிரங்களை வைத்து வணங்கவேண்டியது முறை. அப்படிச் செய்யாதவர்களுடைய நிவேதனங்களை பகவான் ஏற்றுக்கொள்வதில்லை என்று கருதப்படுகின்றது. காலை 9 மணிக்குமேல் பகவான் தரிசனத்திற்கு வருவோர் ஸ்நானம் செய்திருக்கவேண்டும் என்ற நிபந்தனையில்லை. யாவராயினும் உட்சென்று தரிசிக்கலாம்.

முற்காலத்தில் ஹரிபக்தியிற் சிறந்தவரும் ஸ்ரீபாண்டுரங்கன் தம்மோடு நேரிற் பேசும் பெரும் பாக்கியத்தைப் பெற்றிருந்தவருமான தர்மசிந்துகர்பாபா என்னும் வேதியர் தினந்தோறும் தமதில்லத்திலிருந்து ஸ்ரீபாண்டுரங்கனுக்கு மகாநைவேத்தியஞ் செய்து அனுப்பிக்கொண்டிருந்தனர். அப்படியிருக்க ஓர் நாள் அவர் வீட்டிலிருந்து நைவேத்தியம் கொண்டுவந்த பரிசாரகப் பிராமணன், தான் மிகவும் நியமத்தோடு ஸ்நானஞ்செய்து மடிவேஷ்டியுடன் வந்திருக்க, மற்றவர்கள் சட்டையோடும், தலைப்பாகையோடும் சென்று ஸ்பரிசித்து வருகிற பகவானண்டை தான் போவது தகுதியன்றென நினைத்து வெளியில் நின்றபடியே நைவேத்தியத்தைக் காட்டிவிட்டு வீடு சென்றனன். வழக்கம் போல் அன்று மாலையில் ஸ்ரீபாண்டுரங்கனைத் தரிசிக்கவந்த பாபாவானவர், ஸ்ரீபண்டரிநாதனுடைய முகத்தில் எப்போதும் காணப்படுகிற புன்முறுவலும், தேஜஸூம் காணப்படாமல் முகம் வாடியிருப்பதைக் கண்டு, அதன் காரணம் என்னவென்று ஸ்ரீபாண்டுரங்கனையே வினவினர். அதற்கு எம்பெருமான் அளவற்ற கருணையோடு, "நம்மை நாடிவரும் பக்தகோடிகளை நாம் ஸ்பரிசிக்கின்றோம் என்ற காரணத்தால் உன்னுடைய பரிசாரகன், நம்மிடம் நெருங்கி வருவதற்கு மனமின்றி வெளியில் நின்றபடியே திரும்பி விட்டான். ஆகலின் தோட்டக்காரன் உத்தரவு கொடுப்பினும்

சீட்டைப் பொறுக்கி உத்தரவு கொடுக்கவில்லை என்னும் பழமொழிக்கிணங்க, நீ தயவோடு எமக்கன்னமளித்தும் உன் பரிசாரகன் தயவின்மையால் நாம் இன்று பட்டினி கிடக்கின்றோம்.'' என்று திருவாய் மலர்ந்தருளினர். அதைக் கேட்ட பாபாவானவர் திடுக்கிட்டு, மனங்கொதித்து, உடனே தம் வீடு சென்று வேறு நைவேத்தியம் தளிகைசெய்து, தாமே சுமந்து சென்று ஸ்ரீபாண்டுரங்கனுக்கு சமர்ப்பித்தனர் என்று சொல்லிக்கொள்ளுகின்றனர். இச்சம்பவத்தை நேரிற்கண்ட விருத்தர்களிற் சிலர் இப்போதும் இருப்பதாகத் தெரிகிறது.

தம்மை நாடிவரும் பக்த ஜனங்களின் எவ்வித அழுக்கையும் பாவத்தையும் சூரியன் இருளை நீக்குவதுபோற் பரிகரிக்க வல்ல எம்பெருமானுக்கு எக்காரணம் பற்றியும் ஓர் குறைவுண்டாகுமோ? எல்லாம் வல்ல கடவுளிடத்தில் ஓர் வகுப்பார் செல்வதால் கடவுளுக்குத் தோஷமுண்டாகிறதென்று சொல்வது கடவுளே ஒப்பத்தக்க கோட்பாடன்று என்பது இச்சிறு சம்பவத்திலிருந்து நன்கு விளங்குகின்றது. மேலும் பிணியாளர்களுக்கு வைத்தியர் வேண்டுமேயன்றி திடகாத்திரர்களுக்கு வைத்தியம் எதற்காக? பலவித நோயாற் பீடிக்கப்பட்டு வருந்தும் பிணியாளர்கள் வைத்தியரிடத்திற் செல்லலாகாதென்றும், அப்படிச் செல்லுவதால் வைத்தியருக்கு நோயுண்டாகுமென்றும் சொல்லுவாருளரேல் அவர்கள் மதியீனர்களன்றோ!

மாலை 3 மணி சுமாருக்கு மறுபடியும் புதிதாக அபிஷேக அலங்காராதிகளைச் செய்து மத்தியான பூஜை நடத்துகின்றனர். தீபமேற்றும் சமயத்தில் †தூபாரத்தி †தீபாரத்தி முதலிய ஆரத்திகளைச் செய்கின்றனர். அச்சமயத்தில் அங்கு நிறைந்திருக்கும் பக்தகோடிகள் ''ஜய! ஜய!! ராமக்ருஷ்ண ஹரி.'' என்னும் தசாட்சர மந்திரத்தை உரக்கச் சொல்லி கோஷிக்கின்றனர்.

இறுதியாக இரவு 10 மணி சுமாருக்கு ஸேஜாரத்தி நடக்கின்றது. இதைத் தரிசித்தல் அவசியம். ஸ்ரீபாண்டுரங்கனுடைய பள்ளியறையைத் திறந்து அதிற் போட்டிருக்கும் கட்டில்

†குறிப்பு:— ஆரத்தி என்பது பகவான் முன்னிலையில் தீபங்களைச் சுற்றி தோஷங்கழிப்பது.

மெத்தை நிண்டு தலையணைகளைத் தட்டி உதறிப் போட்டு பள்ளி யறையைத் தயாரிக்கின்றனர். அதன் பிறகு கர்ப்பக் கிரகத்தி னின்று பள்ளியறை வாயில் வரையில் ஜலம் தெளித்து சுத்தம் செய்து சுமார் இரண்டடி அகலமுள்ள நடை பாவாடையை விரிக்கின்றனர். அதில் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் அடிச்சுவடு களும் கோக்களின் குளம்புச் சுவடுகளும் சித்திரிக்கப்பட்டிருக் கின்றன. பிறகு பகவானுக்குப் புதிய அபிஷேக அலங்காராதி களைச் செய்து சோடசோபசாரங்களைச் செய்கின்றனர். இச் சமயத்தில் டாங்கே என்னும் வகுப்பினர் பொன் வெள்ளித் தடி களைத் தாங்கினவர்களாய்க் கட்டியங் கூறிக்கொண்டு நிற்கின் றனர். திவட்டே என்போர் தங்க வெள்ளிப் பிடிகளோடுள்ள கைத்தீவட்டிகளைப் பிடிக்கின்றனர். பேஞரி வகுப்பினர் வேதாத் தியயனம் செய்கின்றனர். கடைசியில் எம்பெருமான் பள்ளி யறைக்கு ஏகினதாகக் கருதப்படுகின்றது. பிறகு அந்நடை பாவாடையைச் சுருட்டி அதில் எம்பெருமான் தம் திருவடிகளை வைத்து நடந்துபோயினர் என்ற பாவனையால், அதை அங்குள்ள யாத்ரீகர்களின் சிரசின் மேல் வைக்கின்றனர். அவர்களும் அதை மிகுந்த பயபக்தியோடு சிரசின்மேலேற்று வணங்குகின்றனர்.

எம்பெருமானுக்கு எந்த நேரத்தில் எவ்விதமாகப் பூஜைகள் நடக்கின்றனவோ அதே நேரத்தில் அதே விதமாக ருக்மணிதேவியாருக்கும் பூஜைகள் நடக்கின்றன. புதன் சனிக் கிழமைகளில் எம்பெருமானுக்கும், செவ்வாய் வெள்ளிக்கிழமை களில் தேவியாருக்கும் தைலக்காப்பிடுகின்றனர். ஏகாதசி தினங்களில் ஸேஜாரத்தி கிடையாது. அதாவது பகவான் அத் தினங்களில் பள்ளியறைக்குப் போவதில்லை. பகவானுக்கு கோகு லாஷ்டமியிலும், தேவியாருக்கு நவராத்திரியிலும் உற்சவங்கள் நடக்கின்றன. ஆடிமாத ஏகாதசியும் கார்த்திகைமாத ஏகாதசி யும் மிக்க விசேஷமான தினங்களாகக் கருதப்படுகின்றன.

## ஸ்தல பிரதட்சணம் செய்யும் வழி.

ஸ்ரீ பாண்டுரங்கனைத் தரிசித்தான பின்பு கோயிலினின்று புறப்பட்டு, சந்நிதித் தெருவின் வழியாகக் கிழக்கே சென்று, மஹாத்துவார கட்டத்தின் வழியாகச் சந்திரபாகா நதியிலிறங்கி,

அங்கு கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் புண்டலீக வரதரை வலம் வந்து, தெற்கிலுள்ள சந்திரபாகா கட்டத்தின் வழியாக மேலேறி, தத்தாத்திரேயருடையவும், மகாதேவருடையவும் தரிசனம் செய்துகொண்டு மேற்கே திரும்பி, தெற்கு வீதியிலுள்ள *காளாமாருதியையும், கிருஷ்ணஜிபாபாவின் சமாதியையும் தரிசித்துக்கொண்டு, வடக்கே திரும்பி பைடன்கர் (Paitankar) என்பவருடைய அரண்மனைவரையிற் சென்று, கிழக்கே திரும்பி உத்தவ கட்டத்தின் வழியாகச் சந்திரபாகா நதியில் இறங்கி ஸ்ரீ புண்டலீகர் சந்நிதி போய்ச்சேர்ந்தால் பிரதட்சணம் முடிவடைகின்றது.

## பிரதட்சண மார்க்க தேவாலயங்கள்.

(1) காலபைரவர்:—ஸ்ரீபாண்டுரங்கன் ஆலயத்திலிருந்து ஸ்ரீ நாம்தேவ் சுவாமிகளின் படிவழியாகக் கீழே இறங்கினால் சந்நிதித் தெருவின் வடசரகில் 4, 5 கடைகளுக்கப்பால் இவர் ஆலயம் இருக்கின்றது. இவருக்கு க்ஷேத்திரபாலர் என்றும் பெயர் வழங்குகின்றது. முன் சொல்லியபடி பீமாவை அடக்கச் சென்றவர் இவரே. இவர் அருகில் ஜோகேஸ்வரி தேவி இருக்கின்றார்.

(2) மஹாகணபதி:—காலபைரவர் கோவிலுக்குக் கிழக்கில் அதே பக்கத்தில் இவர் ஆலயம் இருக்கின்றது. இதில் ஸரஸ்வதியின் சந்நிதியும் இருக்கின்றது.

(3) சாகம்பரிதேவி:— மஹாகணபதியின் கோவிலுக்குக் கிழக்கில் இவ்வம்மையின் ஆலயம் இருக்கின்றது. இதே கோவிலில் வனசங்கரிதேவியின் சந்நிதியும் இருக்கின்றது.

(4) மல்லிகார்ச்சுனர்:—சாகம்பரிதேவியின் கோவிலுக்குக் கிழக்கிலுள்ள ஒரு கடைக்குக் கிழக்கில் இவர் ஆலயம் இருக்கின்றது. இதில் சோமேஸ்வரர் சந்நிதியும் இருக்கின்றது. இந்தக் கோவில் ஸ்ரீ பாண்டுரங்கன் கோவிலுக்கும் முந்தியதாகச் சொல்லப்படுகின்றது. இக்கோவிலில் சித்திரை, ஆவணி, கார்த்திகை மாதங்களிலும், மஹாசிவராத்திரியிலும் உற்சவங்கள் நடக்கின்றன.

---

*குறிப்பு:—காளாமாருதி = கறுப்பு ஆஞ்சனேயர்.

(5) *தாம்படாமாருதி:—இவர் கோவில் மல்லிகார்ச்சுனர் கோவிலுக்குக் கிழக்கில் இருக்கின்றது. இவரைத் தரிசித்தால் ஏககாலத்தில் 11 ஆஞ்சனேயர்களைத் தரிசித்த பலன் கிடைக்கும் என்று சொல்லப்படுகின்றது. எவ்விதமெனில் கோவிலுக்கு முன்புறமிருக்கின்ற தூண்களில் 8 ஆஞ்சனேயமூர்த்திகளும் பக்கச் சுவரில் இரண்டு மூர்த்திகளும் இருக்கின்றன. இம்மூர்த்திக்கு எக்காலமும் செந்தூரம் கலந்த குழம்பினால் அபிஷேகம் நடக்கின்றது.

(6) ஸ்ரீராமர்:—சந்நிதித்தெருவோடு நேராகக் கிழக்கே சென்றால் வடசாரியில் இண்டோர் (Indore) மகாராஜாவின் அரண்மனையில் இக்கோவில் இருக்கின்றது. இக்கோவில் அந்நாட்டை ஆண்டிருந்த அஹலியாபாய் (Ahalia Bai) மகாராணியால் கட்டப்பட்டதென்று சொல்லப்படுகின்றது.

(7) முரலிதர் (Muralidhar):—இவர் கோவில் அதே வீதியில் சற்றுக் கிழக்கில் தென்சாரியில் ஆற்றையொட்டி இருக்கின்றது. இது பாய்ஜாபாய் (Baija Bai) மகாராணியால் கட்டப்பட்டதென்று தெரிகிறது. இக்கோயில் மிகவும் அழகாகக் கட்டப்பட்டிருக்கின்றது. முரலிதர் (வேணுகோபாலன்) மூர்த்திக்கு இருபக்கத்திலும் ருக்மணி சத்தியபாமையின் மூர்த்தங்கள் இருப்பதுடன், அவைகளுக்கருகில் அக்கோயிலைக்கட்டின பாய்ஜாபாய் மகாராணியின் சிலை ஒன்றும் இருக்கின்றது. இக்கோயிலில் கோகுலாஷ்டமியிலும், விஜயதசமியிலும் உற்சவங்கள் நடக்கின்றன.

(8) மகாதேவர்:—இந்த சிவாலயம் மேற்சொன்ன முரலிதர் கோவிலுக்கு அருகில் இருக்கின்றது. மகாசிவராத்திரியன்று உற்சவம் நடக்கின்றது.

(9) ஸ்ரீபுண்டலீகர்:—இவர் ஆலயம் ஸ்ரீ பாண்டுரங்கன் சந்நிதிக்கு நேராக சந்திரபாகாநதியின் மத்தியில் கட்டப்பட்டிருக்கின்றது. ஆற்றில் வெள்ளம் வரும் காலங்களில் இக்கோயில் ஜலத்தினிடையில் இருக்கும் என்றும், தோணியேறிச் சென்று பூஜை செய்து வருவார்கள் என்றும் சொல்லப்படுகின்றது. புண்டலீகருடைய சரித்திரம் பின்வருமாறு கூறப்பட்டிருக்கின்றது.

*குறிப்பு:—தாம்படாமாருதி = சிகப்பு மாருதி.

முற்காலத்தில் பண்டரீபுரத்தில் ஜானுதேவர் என்னும் பிராமணோத்தமர் சுகுண சம்பன்னராய் வேதசாஸ்திர விற்பன்னராய் ஹரிபக்தியில் மிகுந்தவராய்க் கற்புக்கரசியான தம் தர்ம பத்தினி சத்தியா தேவியுடன் இல்லறத்தைச் செவ்வனே நடாத்திக் காலங்கழித்து வந்தனர். அவருக்கு எல்லாச் சம்பத்தும் நிறைந்திருந்தும் பெறுமவற்றுள் பெரும்பேருய மக்கட்பேறின்றி மனம்வருந்தி,

"படைப்புப் பலபடைத்துப் பலரோடு முண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசின் மெய்ப்பட விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்
பயக்குற வில்லைதாம் வாழு நாளே."

என்றபடி "நம் வாணாளெல்லாம் வீணாளாய்ப் போயினவே." என அழுது புலம்பிப் பண்டரீநாதனைத் தினந்தோறும் திரிகரண சுத்தியாய்த் தொழுது வணங்கி வந்தனர். இறுதியில் பக்தர்கள் முகம் பார்த்துப் பாதுகாக்கும் பாண்டுரங்கன் கிருபையினால் அவருக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது அக்குழந்தைக்கு புண்டலீகன் என்னும் நாமமிட்டு மிகச் செல்வமாய் வளர்த்து வந்தனர். புண்டலீகரும் இளம்பிராயத்தில் பெருத்த துஷ்டராயும் தாய்தந்தை சொற்கேளாத தான்றோன்றிக் குறுகுறும்பராய் இருந்துவந்தார். அவர் அப்படியிருந்தும் அவருக்குக் தக்க பருவத்தில் ஓர் கன்னிகையைத் தேடி மணஞ்செய்து வைத்தனர். புண்டலீகருக்கு விவாகமானவுடன், தம் மனைவியைத் தம் குலதெய்வமாக எண்ணி அவள் சொற்படி நடந்து வந்ததுமன்றித் தம் தாய் தந்தையரை முன்னிலும் அதிகமாகப் புறக்கணித்து அவர்கள் வயிற்றுக்கு அன்னமும், உடுத்திக்கொள்ள வஸ்திரமும் கொடாது வருத்தி வந்தார். பரமசாதுக்களான ஜானுதேவரும் சத்தியாதேவியும் தங்கள் மகனிடத்தும் மருமகளிடத்தும் கேளாத சொற்களைக் கேட்டும், படாதபாடுபட்டும்,

நான்படும் பாடு சிவனே யுலகர் நவிலும் பஞ்சு
தான்படு மோசொல்லத் தான்படு மோவெண்ணத் தான்படுமோ
கான்படு கண்ணியின் மான்படு மாறு கலங்கினின்றேன்
ஏன்படு கின்றனை யென்றிரங் காயென்னி லென்செய்வனே.

என்று அழுதவண்ணமாய்க் கண்ணீருங் கம்பலேயுமாய் இரவும் பகலும் பண்டரீநாதனைத் துதித்தவண்ணம் காலங்கழித்தனர்.

இவர்கள் இப்படி வருந்திக்கொண்டிருக்க அவ்வூரார் எல்லோரும் காசி யாத்திரைக்குப் புறப்பட்டனர். புண்டலீகரும் தம் மனைவியுடன் *குதிரையிலேறிக்கொண்டு ஊராருடன் யாத்திரைக்குப் புறப்பட்டுப் போயினர். அவருடைய தாய் தந்தையரோ வயது சென்றவர்களாயிருந்தும் வாகனங்களை யமைத்துக் கொள்ளப் போதிய பணமின்றிக் கால் நடையாகச் சென்றனர். இவர்கள் எல்லோரும் காசி க்ஷேத்திரத்திற்கருகிலுள்ள குக்குட முனிவர் ஆசிரமத்தில் ஓர் நாள் இரவு தங்கும்படி நேர்ந்தது இவர்களுள் புண்டலீகர் மாலைப்பொழுதே சயனித்துக்கொண்டவராதலின் அதிகாலையில் தூக்கம் கலைந்து எழுந்து வெளியில் வந்தனர். அச்சமயத்தில் பார்ப்போர் பிரமிக்கத்தக்க வனப்போடு கூடிய மூன்று யுவதிகள் மிகவும் அழுக்கடைந்த ஆடையோடு மகாபரிசுத்தமான குக்குட முனிவருடைய ஆசிரமம் புக்கனர். தேவமாதர்களுக்கு இணையான அச்சுந்தரவனிதைகள் அந்த அகாலத்தில் மாசுபடிந்த ஆடையுடன் அந்த ஆசிரமத்தினுட் புகவேண்டிய காரணம் என்னவென்றும், அவர்கள் யாராயிருக்கக்கூடும் என்றும் யோசித்துக்கொண்டிருந்த புண்டலீகர் முன்னிலையில், அம்மாதர்கள் மூவரும் அவ்வாசிரமத்திற்கெதிரில் சாணந்தெளித்து, ஆசிரமம் முழுவதும் கூட்டி மெழுகிச் சுத்தம் செய்துவிட்டு, திவ்விய ஆடையாபரணாலங்கிருத பூஷிதைகளாய் ஆசிரமத்தைவிட்டு வெளிப்போந்தனர். அதைக் கண்ணுற்றிருந்த புண்டலீகர் வியப்புற்று அவர்களை விளித்து, "ஏ! பெண்களே! நீங்கள் யார்? இவ்வதிகாலை நேரத்தில் நீங்கள் இவ்விதமலின ஆடையுடன் இங்குவந்து இவ்வாசிரமத்திலுள்ள இழிதொழில்களைச் செய்யவேண்டிய காரணம் என்ன? திடீரென்று இத்தகைய விலையுயர்ந்த உடையணியாதிகள் உங்களுக்கு எங்கிருந்து கிடைத்தன? இந்த திவ்விய தேஜசு எவ்விதம் உண்டா

*குறிப்பு:—புண்டலீகர் தம் இளமனைவியிடம் உளமுருகினவராய், அவரை நடக்கவிடாது அதியன்போடு தம் தோளின்மேற் சுமந்து சென்றனர் என்றும், தம் வயது முதிர்ந்த தாய் தந்தையர் தலையின்மேல் மூட்டை முடிச்சுகளைச் சுமத்தி வழிநடக்கச்செய்து பழிகொண்டனர் என்றும் சொல்லுவாருமுளர்.

யிற்று?" என்று வினவினர். அவர்கள் அந்த மகாபாபியோடு வார்த்தையாடவும் மனமற்றவர்களாய் விரைந்து நடக்கலாயினர். அதைக்கண்ட புண்டலீகர் அதிவேகமாக ஓடி அவர்களுள் ஒருவரின் கால்களைப் பற்றிக்கொண்டு, தம் மீது கருணைகூர்ந்து, தாம் வினவின வினாக்களுக்கு விடையளித்துச் செல்லும்படி வேண்டினர். அவர்கள் மனமிரங்கி "*நாங்கள் மூவரும் கங்கை, யமுனை, ஸரஸ்வதி என்னும் புண்ணிய நதிகள். உன்னைப்போன்ற மகா பாதகர்கள் எங்களிடம் வந்து மூழ்குவதால் அவர்களுடைய பிரமஹத்தியாதி தோஷங்களை யெல்லாம் எங்களிடம் தொலைத்து விட்டுப் புனிதர்களாகத் திருப்புகின்றனர். நாங்கள் அந்தப் பாவங்களை ஏற்றுக்கொண்டு, நீ முதலிற்கண்ட மலின ஸ்திதி யடைகின்றோம். பிரதிதினமும் அதிகாலையில் இங்குவந்து இந்தப் புண்ணிய சீலரான குக்குட முனிவருடைய ஆசிரமத்திலுள்ள குற்றேவல்களைச் செய்து, அவருடைய தவவலிமையால் நாங்கள் எங்கள் மாசுமறுக்களை யொழித்து சுயரூபமடைந்து மீள்கின்றோம்." என்று பகர்ந்தனர். அம்மொழிகளைக் கேட்ட புண்டலீகர் பன்முறையும் அவர்கள் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, தமக்கும் ஓர் நல்வழி காட்டும்படி வேண்டினர். அவர்கள் அவரைப் பார்த்து "நீயும் இந்த மாதவரிடத்திற் சென்றிருந்தால் அவர் உனக்கு வேண்டியதைச் செய்வர்." என்று சொல்லிவிட்டு மறைந்துபோயினர். கங்கை, யமுனை, ஸரஸ்வதி ஆகிய இவர்களுடைய தரிசனமாத்திரத்தாலேயே புனிதராய்விட்ட புண்டலீகர் உடனே முனிவர் ஆசிரமஞ்சென்று, அவரைப் பன்முறையும் வலம் வந்து வணங்கி வழிபட்டுத் தம் வரலாற்றை வெளியிட்டனர். அதைக் கேட்ட முனிபுங்கவர் "ஏ! புண்டலீகா! நீ நாடொப்பன செய்யாமலும், தேசத்தோடொத்து வாழாமலும், வாலிபத்திமிறினாற் பெற்ற தாய் தந்தையரைப் பேணாமலும், உற்ற உறவினரைக்கண்டு நாணாமலும், உன் மனைவியின் அடிமையாக உயிர்வாழ்கின்றனை. உன் முகத்தில் விழிப்பதும் பெருத்த பாதகத்திற் கிடமாகும். தாய் தந்தையரைப் புறக்கணித்த உனக்கு கங்கா ஸ்நானத்தினால் என்ன பலன் கிட்டப்

---

*குறிப்பு:—கங்கை, யமுனை, ஸரஸ்வதி, நர்மதை, கோதாவிரி ஆகிய பஞ்ச கன்னிகைகளும் ஐந்து பெண்களாக வந்தனர் என்று கூறும் புராணீகரும் உளர்.

போகின்றது. நான் என் அன்னையையும் பிதாவையும் முன்னறி தெய்வங்களாகக் கருதிக் கொண்டாடி வருவதனால், இப்பாத கண்டத்திலுள்ள தீர்த்தங்களில் எல்லாம் மேன்மையான கங்கை, யமுனை, ஸரஸ்வதி ஆகிய மூன்று புண்ணிய நதிகளும் என்னிருப்பிடந்தேடி வந்து, என் குடிசையிலுள்ள குற்றேவல்களைக் குறைவறச் செய்து முடித்துப்போகின்றனர். நான் வேறு ஒரு தவமும் செய்தவனல்லன். அருகிலிருக்கும் காசியை எட்டிப் பார்த்தவனுமல்லன்." என்று கூறினார். அம்முனிவர் செய்த ஞானோபதேசம் புண்டலீகருடைய மனமாகிய பச்சை மாத்தில் அறையப்பெற்ற கூர்மையான இரும்பாணியாயிற்று. உடனே புண்டலீகர் தம் மனைவியையும் உடன்கொண்டு, தம் தாய் தந்தையரிடம் சென்று அவர்களை வணங்கித் தாம் அதுவரையிற் செய்த அபசாரங்களை மன்னிக்கும்படி வேண்ட, "பெற்ற மனம் பித்து." என்பதற்கிணங்க தங்கள் புதல்வன் செய்த கொடுமைகளையும் மறந்து அவரை அன்போடேற்று மனமகிழ்ந்தனர். பிறகு தம் வாகனத்தைத் தாய் தந்தையருக் குதவி, தாமும் தம் மனைவியும் அவர்களுக்கு வேண்டிய ஊழியங்களைச் செய்துகொண்டு பின் சென்று, கங்கா யாத்திரையை முடித்துக்கொண்டு மீண்டும் பண்டரீபுரம் வந்துத் தம் தாய் தந்தையரையே தெய்வமாகப் போற்றிப் பணிந்து, அவர்களுடைய கட்டளைகளைச் சிரமேற்கொண்டு ஒழுகி வந்தனர். இந்த பரமபக்தனிடம் கருணைகொண்ட வைகுண்டபதி ஒருநாள் இவர் மனைக்கேகினர். அவரைக்கண்ட புண்டலீகர் அதிக ஆனந்தங்கொண்டாராயினும் அச்சமயத்தில் தாம் தம்முடைய தாய் தந்தையருடைய கைங்கரியத்தில் ஈடுபட்டிருந்தமையால் அதை விட்டுவர மனமின்றி, முற்காலத்தில் *விருத்திராசுரனு

*குறிப்பு:—ஆதிகாலத்தில் விருத்திரன் என்னும் அசுரன் தேவேந்திரனைக் கொல்ல நினைத்துப் பாதாள லோகஞ் சென்று கடுந்தவம் புரிந்ததாகவும், அதையறிந்த இந்திரன் தன்னுடைய வஜ்ஜிராயுதத்தால் அவ்வசுரனுடைய தலையை அறுத்துத் தள்ளியதாகவும், அவ்வசுரன் தான் தவமியற்றிக்கொண்டிருந்த காலத்தில் தன்னைக் கொன்ற தோஷத்தினால் இந்திரனைச் செங்கல்லாய்ப் போகும்படி சபித்தனன் என்றும், அவ்விந்திரன் மஹாவிஷ்ணுவைத் துதித்துத் தான் செங்கல்லாயினும் அவருடைய பாதங்களின் கீழிருக்கும் பேறளிக்கவேண்டுமென்று வேண்டியதாகவும் அதற்கிணங்க வைகுண்டபதியானவர் தாம் ஸ்ரீ பாண்டுரங்கனாய் வந்து புண்டலீகாசிரமத்தில் அவ்வரத்தைப் பூர்த்தி செய்தனர் என்றும் புராணவாயிலாய்த் தெரிகிறது.

டைய சாபத்தால் செங்கல்லாய் மாறிக்கிடந்த இந்திரனாகிய செங்கல்லை எடுத்துப்போட்டு அதன்மேல் நிற்கும்படியாகவும், தாம் தம் தாய் தந்தையருக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்து முடித்து வருவதாகவும் சொல்லி வேண்டினர். பக்தி யெனும் பாசத்தால் எளிதிற் கட்டுப்படும் பக்தவத்ஸலனான பரந்தாமன் தம்மிரு கைகளையும் தம்மிடையில் வைத்துக்கொண்டு புண்டலீகர் செய்யும் மாதுர் பிதுர் சேவைகளை மனமகிழ்ச்சியுடன் பார்த்திருந்தனர். புண்டலீகரும் தம்மைப் பெற்றோரான இரு முதுகுரவர்களுக்கும் செய்யவேண்டிய ஊழியங்களைக் குறைவறச் செய்து முடித்து, அவர்கள் உத்தரவின்படி பகவானை நோக்கிப் பன்முறையும் வணங்கித் துதித்து, அப்போது நின்றபடியே நின்று அவரை நாடி வரும் பக்தகோடிகளுக்கு சேவை சாதித்தருளல்வேண்டுமென வேண்டினவராய்ப் பகவானைப் பார்த்த வண்ணமே சமாதி நிஷ்டை சேர்ந்து, தம்மை மறந்து தேகஸ்மரணை துறந்து பாண்டுரங்கன் திருப்பாதகமலங்களில் ஐக்கியமாயினர். பகவானும் தம் பக்தன் கேட்டுக்கொண்டபடி இக்காலத்தும் ஒற்றைச் செங்கல்லின்மேல் நின்று பக்த கோடிகளுக்கு அருள் புரிகின்றார்.

பண்டரீபுரத்தில் தங்கியிருப்பதால் பாண்டுரங்கன் என்றும், "*வீட்" என்னும் *செங்கல்லின்மேல் நிற்பதால் விட்டோபா என்றும், புண்டலீகருக்காக வைகுண்டத்தைவிட்டு பூலோகத்தில் வந்து தங்கியிருப்பதால் புண்டலீகவரதர் என்றும் பகவானுக்கு நாமங்கள் ஏற்பட்டுள்ளன.

(10) சந்திரபாகா:— இக்கோவில் சந்திரபாகா கட்டத்தின் மேல் இருக்கின்றது. இதற்கு அருகில் இரண்டு சிறு சிவன் கோவில்கள் இருக்கின்றன.

(11) ஸ்ரீதத்தாத்திரேயர்:— இக்கோவில் தத்தாசாரிய கட்டத்தின்மேல் இருக்கின்றது. இது கூடிய வரையில் பெரியகோவிலாக இருப்பதனால், இதில் யாத்ரீகர்கள் தங்குவதற்குப் போது

---

*குறிப்பு:— வீட் என்னும் மகாராஷ்டிரமொழிக்குச் செங்கல் என்று பொருள். உபா என்னும் வார்த்தைக்கு நிற்றல் என்று பொருள். வீட் + உபா = விட்டோபா.

மான இடம் இருக்கின்றது. ஸ்ரீதத்தாத்திரேயரின் மூர்த்தி 5 அடி உயரத்தில் சாலக்கிராமத்தினாற் செய்யப்பட்டு அதிசுந்தரமாக விளங்குகின்றது.

(12) ஸ்ரீவடேஸ்வர் மகாதேவ் (Vateshwar Mahadeo):- இக்கோவில் கோமுட்டிச் செட்டிகளாற் கட்டப்பட்டு ஸ்ரீதத்தாத்திரேயர் கோவிலுக்கு அருகில் இருக்கின்றது. மகாசிவராத்திரியன்று உற்சவம் நடக்கின்றது.

(13) பேரிமகாதேவ்:— இக்கோவில், மேற்சொன்ன வடேஸ்வரர் கோவிலைவிட்டு மேற்கே போகிற தெருவோடு சென்றால், அந்தத் தெருவின் தென்சாரில் இருக்கின்றது. இதை ஸ்ரீபத்ரேஸ்வர் மகாதேவ் (Bhadreshwar Mahadeo) கோவில் என்றும் சொல்லுகின்றனர்.

(14) காளாமாருதி (கறுப்புஹனுமார்):— இவர்கோவில் அதே தெருவில் சற்று மேற்கில் இருக்கின்றது. இக்கோவிலில் உள்ள ஹனுமார் விக்கிரகம் கறுப்பு மருந்தினாற் செய்யப்பட்டு சுத்தக் கறுப்பாக இருப்பதால், இம்மூர்த்திக்கு இப்பேருண்டாயிற்று என்று தெரிகிறது. இத்தலம் வருவோர் இவரைத் தரிசித்தல் அவசியம். இக்கோவிலின் வடமேற்கில் ஸ்ரீகிருஷ்ணஜி பாபா என்னும் மகானின் சமாதி இருக்கின்றது.

(15) சோப்ஹாளா (Chophala):— இக்கோவில் மேலவீதியில் மேற்குமுகமாக இருக்கின்றது. இதில் "விஷ்ணுபஞ்சாயத்தன்" என்று வடஇந்தியாவில் பிரசித்தியாகச் சொல்லப்படுகின்ற மூர்த்திகள் இருக்கின்றன. அவையாவன:— (1) நடுவில் மகாவிஷ்ணு; வலதுபாரிசத்தில் (2) விநாயகர் (3) சூரியன்; இடதுபாரிசத்தில் (4) மகாலட்சுமி (5) சிவலிங்கம்.

(16) ஸ்ரீதத்தாத்திரேயர்:— இவ்வாலயம் ஹரிதாஸர் கட்டத்தில் உள்ள அரசமரத்தின்கீழ் இருக்கின்றது. இதில் ஸ்ரீதத்தாத்திரேயருடைய பாதங்கள் மாத்திரம் இருக்கின்றன. இங்கு நாஸோபாச்சிவாடியில் நடக்கும் முறைப்படி பூஜை நடக்கின்றது.

(17) கோபால்பூர் (கோபாலபுரம்):— பண்டரீபுரத்திற்குத் தெற்கில் சந்திரபாகாநதியின் மேல்கரையில் கோபால்பூர் என்னும் சிற்றூர் இருக்கின்றது. இவ்வூரில் சுமார் 20, 25 வீடுகளும் அவைகளின் நடுவில் கோபாலகிருஷ்ணன் கோவிலும் இருக்கின்றன. இக்கோவிலில் கிருஷ்ணபரமாத்மா புல்லாங்குழல் ஊதின வண்ணமாய் திவ்விய தரிசனம் கொடுக்கின்றார். ஈசானியத்தில் ஒரு விநாயகர் கோவிலும், அதில் யசோதையம்மையார் தயிர் கடைந்ததாகச் சொல்லப்படுகிற ஒரு மத்தும் இருக்கின்றது. அவ்விடத்தில் இக்காலத்திலும் சில ஸ்திரீகள் இருந்துக்கொண்டு, அங்கு வரும் யாத்ரீகர்களைக்கொண்டு அம்மத்தைக் கடையச் செய்து, அதற்கு அனுகுணமாக இனிய கீதங்கள்பாடிக் களிக்க வைத்து, அதற்குப் பரிசாகக் காலணாமுதல் என்ன கொடுப்பினும் பெற்றுக்கொள்ளுகின்றனர். அம்மாதிரியாகவே கோவிலின் வடக்குக் கோபுரவாயிலுக்கு அருகில் ஒரு சிறு தொட்டிலைக் கட்டிவைத்துக்கொண்டு, அதில் ஓர் அழகிய கிருஷ்ணவிக்கிரகத்தைக் கிடத்தி, யாத்திரைக்காரர்களை விட்டு அந்தத் தொட்டிலை யாட்டச் செய்து, அதற்குரிய லாலீ பாட்டுகள் பாடி அங்கிருக்கும் ஸ்திரீகள் பரிசுபெறுகிறார்கள்.

இக்கோவிலுக்கருகில் யசோதையம்மைக்கும் சட்டுவாபாயியம்மைக்கும் தனிக்கோவில்கள் இருக்கின்றன. இவைகளைத் தவிர பூமிமட்டத்திற்குக்கீழ் ஒரு அழகான கோவில் அமைத்து, அதில் ஸ்ரீ புண்டலீகரையும் அவரைப் பெற்றோரான ஜானுதேவர் சத்தியாதேவியையும் பிரதிஷ்டை செய்திருக்கின்றனர்.

ஆதிகாலத்தில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா துவாரகையில் இருந்தபோது, ஒரு நாள் இராதையைத் தம் மடியில் உட்கார வைத்துக்கொண்டு உல்லாசமாக இருந்ததாகவும், அந்நேரத்தில் அங்குவந்த ருக்மணிதேவியைப் பார்த்தும் அவர்கள் இணைபிரியாதிருந்ததைக் கண்டு மனம்பொறுதவராய், ருக்மணிதேவியானவர் சினங்கொண்டு, அவ்விடம் விட்டேகி, துவாரகையைத் துறந்து, கால்நடையாய்த்திரிந்து இக்கோபால்பூர் வந்துசேர்ந்து, இது தம் மனதுக்கிசைந்த இடமாக இருந்ததைக்கண்டு, இங்கேயே தங்கிவிட்டதாகவும், அதையறிந்த கிருஷ்ணபரமாத்மாவும்

சம் தேவியின் வியோகத்தைச் சகிக்கமாட்டாதவராய், ருக்மணி தேவியைத் தேடிக்கொண்டு கோபால்பூருக்கு வந்துசேர்ந்ததாக வும், அவர் சென்றதையறிந்த யசோதை நந்தகோபன் முதலிய எல்லா கோபாலர்களும், கோவர்த்தனகிரியும், கங்கை யமுனை முதலிய புண்ணியநதிகளும், அவரைப் பின்தொடர்ந்து இவ்வூ ருக்கு வந்துசேர்ந்ததாகவும், அவ்வாறு வந்த கங்கை சந்திரபாகா நதியாகவும், யமுனை புஷ்பாவதியாகவும் மாறி இவ்வூருக்கருகிற் சேர்ந்து ஓடுகிறதாகவும், கோவர்த்தனகிரியானது இவ்வூருக்கு ஓர் மாலைபோன்று சுற்றி வளைந்துகொண்டதாகவும் புராணவாயி லாய்த் தெரிகிறது. இவ்வற்புதக் காட்சிகளை இக்காலத்தும் பிரத்தியட்சமாய்க் காணலாம். பிறகு கோபாலகிருஷ்ணனுனவர் ருக்மணிதேவியைக் கண்டு அவரைத்தேற்றிக் கோபத்தை மாற்றி, எல்லாரும் இதே ஊரில் ஆனந்தமாகக் கூடிவசித்ததாகவும், அக்காலத்தில் கண்ணன் கோபாலர்கள் அனைவருக்கும் ஒரு விருந்து செய்ததாகவும், அதற்கறிகுறியாக இக்காலத்தும் ஆடி கார்த்திகை மாதங்களில் பெரிய விருந்துகள் நடக்கின்றன வென்றும் சொல்லப்படுகின்றது. இதுகாரணம்பற்றியே இங்கு வரும் யாத்திரைக்காரர்கள் சிறிதளவு சிற்றுண்டியாவது கொண்டு வந்து புசிப்பது மிக்க விசேஷமெனக் கருதுகின்றனர்.

இவ்வூர்க்கோவில் பெரிதாகவும் அழகாகவும் இருப்பது டன், சந்நிதிக்கெதிரில் சந்திரபாகாநதியில் அழகான படிக்கட்டு களோடுகூடிய ஓர் ஸ்நானகட்டம் அமைந்திருக்கின்றது இத் தகைய ஸ்நானகட்டம் பண்டரீபுரத்திலும் இல்லை.

(18) விஷ்ணுபதம்:— கோபால்பூருக்குச் சற்றுவடக்கில் ஆற்றின் நடுவிற் கட்டியிருக்கின்ற மண்டபந்தான் விஷ்ணுபதம் என்று சொல்லப்படுவது. இம்மண்டபத்திலேயே இரண்டு பாதங்கள் ஓரிடத்தில் சமனாகவைக்கப்பட்டும், மற்றோரிடத்தில் ஒன்று முன்னும் ஒன்று பின்னுமாக வைக்கப்பட்டும் இருக் கின்றன. இவைகளுக்கருகில் மனிதர்கள் சாப்பிடும் வட்டில் போன்ற ஒரு சிறு பள்ளம் இருக்கின்றது. இப்பள்ளத்தில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா மாடுமேய்த்தகாலத்தில் தாம் கொண்டு வந்திருந்த கட்டமுதைத் தம் நேயர்களான கோபாலர்களுடன் கூடி உண்டதாகச் சொல்லப்படுகின்றது. இரண்டும் சமனாக

இருக்கும் பாதங்கள் மகாவிஷ்ணுவின் பாதங்கள் என்றும், ஒன்றன் பின் ஒன்ருக இருப்பவை கிருஷ்ணபரமாத்மாவின் பாதங்கள் என்றும் சொல்லிக்கொள்ளுகின்றனர்.

ஆதிகாலத்தில் சிவபிரான் கோபாக்கினியினின்றும் கயன் என்னும் அசுரன் உண்டானுன் என்றும், அவன் பரமசிவனைக் குறித்துக் கடுந்தவம்புரிந்ததாகவும், அதைக் கண்ட தேவர்கள் அஞ்சி நடுங்கி மகாவிஷ்ணுவிடம் சென்று முறையிட்டதாகவும் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்தையே தம் தொழிலாகக் கொண்டிருக்கிற எம்பெருமான், தம்மிடம் வந்து சரண்புகுந்த தேவர்களுக்கு அபயமளித்து, அவர்களையும் அழைத்துக்கொண்டு கயாசுரனிடம் சென்றதாகவும், தம்மைக் கண்டதும் பன்முறையும் துதித்து வணங்கித் தன்சரீரம் தேவர்கள், பிராமணர்கள் கோக்களுடைய சரீரங்களை விடப் பரிசுத்தமானதாக இருத்தல் வேண்டும் என்று பிரார்த்தித்து நின்ற கயாசுரன் பக்திக்குக் கட்டுப்பட்டவராய், அவன் கேட்டவரத்தைக் கொடுத்துச் சென்றனர் என்றும், அவ்வரத்தின் மகிமையால் அவனைத் தரிசித்த பெரும்பாவிகளும் புண்ணியலோகம் சென்று அடைந்ததைக்கண்ட தேவர்கள் பொருமைகொண்டு, திரும்பவும் மகாவிஷ்ணுவிடம் சென்று முறையிட்டதாகவும், கருணாநிதியாகிய புருஷோத்தமன் 'திருச்செற்றுத் தீயுழி யுய்த்துவிடும் அழுக்காறெனும் பெரும்பாவி' இத்தேவர்களையும் விட்டபாடில்லையே என மனம்வருந்தி, "ஒறுத்தார்க் கொரு நாளை யின்பம்; பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்." என நன்குணர்ந்தவராய், கயாசுரனுடைய பக்திவைராக்கியத்தை உலகிற்குக் காட்ட எண்ணியவராய், மீண்டும் கயாசுரனிடம் சென்று தேவர்களுக்கு யாகம்செய்வதற்குத் தக்கஇடம் வேறுகிடைக்காமையால் அவன் சரீரத்தையே யாகசாலையாக உதவும்படிக் கேட்க, அவன் அதற்கும் இசைந்து பூமியிற் படுத்துக்கொண்டதாகவும், அவன் சரீரத்தின்பேரில் தேவர்கள் யாகஞ்செய்யும் காரணத்தை முன்னிட்டுத் தீவளர்த்து அக்கினிதேவனையேவி அவனைச் சுட்டெரித்துவிடும்படி வேண்டியதாகவும், அவர் தம் பிரபாவத்தைக் காட்டத் தொடங்கியவளவில் அக்கயாசுரன் தன் மலைபோன்ற பெருஞ்சரீரத்தைச் சற்று அசைத்ததாகவும், அவ்வதிர்ச்சியினுல்

அவன் மீதிருந்த தேவர்கள் எல்லோரும் ஒருவர் மேல் ஒருவர் வீழ்ந்து கைகால் முதலிய அவயவங்கள் ஒடிந்தவர்களாய் மகா விஷ்ணுவை நோக்கித் தங்களை அவ்விபத்தினின்றும் காப்பாற்றும் படி பிரார்த்தித்ததாகவும், அவர் இப்புண்ணியபூமியில் உள்ள மகாமேரு முதலிய பர்வதங்களையும், கங்கை முதலிய நதிகளையும், *புஷ்கரம் *பிரபாஸம் முதலிய தீர்த்தங்களையும் காசி முதலிய பட்டினங்களையும், அவ்வசுரன் சரீரத்தின்மேல் வந்து தங்கியிருந்து அழுத்தும்படி இட்ட கட்டளையின்படி, அவைகள் எல்லாம் ஒருங்குகூடிவந்து வாசஞ்செய்த காரணத்தால், அவன் சரீரம் ஆடாது தலைமட்டும் ஆடினதைக் கண்ட தேவர்கள் மறுபடியும் மகாவிஷ்ணுவைச் சரணடைந்ததாகவும், அவர் தாமே வந்து அவன்மேல் நின்றதாகவும், அது தெரிந்த அவ்வசுரன், "ஓ! புருஷோத்தமா! அடியேன் இன்றுதான் கிருதார்த்தனுயினேன். பரமபாகவதர்களான மகரிஷிகளும் முனீந்திரர்களும் எத்தனை கோடிவருடங்கள் தவம்புரியினும் காணக்கிடையாத உம்து திருவடிகள் உம்மோடு தாமே வலியவந்து என்மீதுறையப் பெற்ற பாக்கியம் இத்தேவர்களுக்குத் தலைவனுன தேவேந்திரனுக்கும் கிட்டுமோ! 'தன்வினை தன்னைச்சுடும் ஊர்வினை ஓட்டைச் சுடும்' என்ற பழமொழிக்கிணங்க எனக்குக் கேடுவிளைவிக்கச் சூழ்ச்சிசெய்த தேவர்கள் உம்மை என்னிடம் ஒப்படைத்துவிட்டு யாகந்தான் செய்யட்டும்; யக்ஞந்தான் செய்யட்டும்; என்ன பயனடையப்போகின்றனர். சந்திரனில்லாவானம் போன்ற விஷ்ணுவில்லா விஷ்ணுலோகத்தையடையட்டும். 'இன்னு செய்தாரை பொறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்து விடல்' என்னும் அருள்வாக்குக்கிணங்க நான் அவர்களுக்கு வேண்டிய உதவியே செய்துவந்தேனுதலின் எனக்கு இப்பாக்கியம் கிடைத்தது." என்று சொல்லி தேவர்களை வெட்கும்படிச் செய்துவிட்டுத் தான் பரமானந்த யோக நித்திரை செய்ததாகவும் புராண வாயிலாய்த் தெரிகிறது இது காரணம்பற்றியே இவ்விஷ்ணுபதம் பிதுர்க்கடன்களை முடிப்பதற்கு மிக்க விசேஷமான இடமாகக் கருதப்படுகின்றது.

---

*குறிப்பு:— இப்புண்ணிய தீர்த்தங்களைப் பற்றிய முழுவிவரங்களையும் இப்புத்தகம் இரண்டாம்பாகத்திற் காணலாம்.

அதேகாலத்தில் சந்திரபாகாநதியும், புஷ்பாவநிநதியும் சேருகிறவிடத்தருகில் சங்கமன் என்னும் பேர்கொண்ட அசுரன் கொலைமேற் கொண்டாரிற் கொடியனும், எக்காலும் அல்லவையே செய்யும் கொடுங்கோல்வேந்தனும், அவன் கோற்கீழ்ப்பட்ட குடிகள் "முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி ஒல்லாது வானம்பெயல்." என்னும் தெய்வப்புலவர் திருவாக்கிற்கிணங்க, ஆபயன்குன்றி, அறுதொழிலோர் நூன் மறந்து, வானம்மறுத்து, வளங்குறுகி, விளைவஃகிப் பிழைப்புக்கு வழியும் உதாரத்திற்கூணுமின்றி வருந்தியலைவதைக்கண்ட வாசுதேவன், அவனைப் போருக்கழைத்துக் கொல்லமுயன்றபோது, அவன் அவருக்கஞ்சியோடி ஓர் பெரும்பாறைக்குள் நுழைந்து ஒளிந்துகொண்டதாகவும், அதையறிந்த கோபாலகிருஷ்ணன் அக்கல்லின்மேல் ஏறிநின்று வேணுகானம் செய்தபடியே அவ்வசுரனை நசுக்கிக் கொன்றதாகவும் கூறப்படுகின்றது. அப்படி நின்ற கண்ணனுடைய திருப்பாதங்களே மேற்சொல்லிய மண்டபத்தில் முன்பின்னாகவிருக்கும் பாதங்களெனக் கருதப்படுகின்றன.

(19) பஞ்சமுக ஹனுமார்:— இவர் கோவில் பண்டரீபுரமிருந்து கோபால்பூர் போகிற சாலைக்கருகில் இருக்கின்றது. இது மிக அழகான மூர்த்தி. இம்மாதிரியான ஐந்துமுக ஹனுமார் தென்னாட்டில் தட்சிண துவாரகையெனப் பிரசித்தி பெற்று விளங்கும் இராஜமன்னார்குடியில், அடியார்கள் உய்யும் பொருட்டுக் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் இராஜகோபாலப்பெருமானுக்கு ஓர் வாகனமாக உபயோகப்படுகின்றதைத்தவிர, வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. தவிர மன்னார்குடியிலுள்ள வாகனத்திற்குப் பேர் ஐந்துமுக ஹனுமார் என்று ஏற்பட்டிருப்பினும், அவ்வைந்து முகங்களில் நடுமுகம் மாத்திரம் ஹனுமார்முகமாயிருக்க மற்ற நான்கு முகங்களும் வராகம் யாளி முதலிய வேறு மிருகங்களின் முகங்களாக இருக்கின்றன. இத்தகைய ஓர் வாகனம் மகாவிஷ்ணுவுக்கு எக்காலத்தில் ஏற்பட்டதென்று விளங்கவில்லை. ஆனால் இத்தலத்திலுள்ள ஐந்து முகஹனுமாருக்கு ஏற்பட்டுள்ள ஐந்துமுகங்களும் ஹனுமார் முகங்களாகவே இருக்கின்றன. அவைகளில் நடுமுகம் மாத்திரம் சற்றுப் பெரிதாகவும் மற்றவை அதைவிடச் சிறியன

வாயும் ஒரே அளவுள்ளவையாயும் இருக்கின்றன. இவ்வாறு ஐந்துமுகங்கள் ஹனுமாருக்கு எக்காலத்தில் எக்காரணத்தாற் கிடைத்தனவென்றும் விளங்கவில்லை.

சொல்வன்மை, சொற்சாதுரியம், சந்தவின்பம், அர்த்த புஷ்டி முதலியவைகளையும், சிங்காரம், சோகம், வீரம் முதலிய நவரசங்களையும் அவ்வவ்விடங்களுக்கேற்ப அமைத்துத் தமிழிலேயுள்ள இலக்கியங்களையெல்லாம் எளிதில் வென்று, தமிழ்த்தாய் மக்கள் அனைவரையும் வசிகரித்திருக்கும் பெருஞ்சிறப்பினையும் பெருமதிப்பினையுமுடைய பெருங்காப்பியமான இராமாயணத்தை விருத்தப்பாக்களாற் பாடிமுடித்து "விருத்தமெனும் ஒண்பா விற்குபர்கம்பன்" என்னும் அதிமேம்பாடான கீர்த்தியும், தமிழுலகில் எக்காலத்தும் பொன்றாப்புகழும் பெற்ற கவியரசரான கம்பநாட்டாழ்வாரும் தமது காவியத்தொடக்கத்தில் ஹனுமாரைத் துதிசெய்யுங்கால் "அஞ்சிலேயொன்று பெற்றான்" என்று அருமையாகப் பாடியுள்ளாரே தவிர ‡"ஒன்றிலே அஞ்சுபெற்றான்" என்று பாடினாரில்லை.

(20) புலேஸ்வர் (Bhuleshwar):— இவ்வாலயம் பஞ்சமுக ஹனுமார் கோவிலுக்கருகில் தனிமையானதும் மிக்கவனப்புள்ளதுமான ஓர் இரமணியமான இடத்தில் இருக்கின்றது. இம்மூர்த்தி இவ்விந்தியாவிலுள்ள *12 ஜோதிலிங்கங்களுள் ஒன்றான நாகநாதராகக் கருதப்படுகின்றது. இக்கோவிலிற்றான் கோராகும்பார் என்னும் பரமபாகவத சிகாமணியின் குருநாதரான வீசோபகேசசுவாமிகள் தங்கியிருந்ததாகத் தெரிகின்றது.

மேலே சொன்னவைகளைத் தவிர ஊருக்கு மேற்கில் ரெயில்வே ஸ்டேஷனுக்கருகில் ஓர் அழகிய குளத்தின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள பத்மாவதிதேவியின் கோவிலும், அதற்கு வடக்கிலும அருகிலும் உள்ள வேதவியாஸர், அம்பாபாய்தேவி, இலக்குமாபாய்தேவி, ஹேமாபாய்தேவி, ஜோதிபா இவர்கள் ஆலயங்களும் சந்திரபாகாநதியிலுள்ள கும்பாராகாட் என்னும் ஸ்நான

‡ குறிப்பு:—ஒருமனிதனுக்கோ விலங்கிற்கோ ஒன்றேயிருக்கவேண்டிய முகத்தில் ஐந்து பெற்றவன்.

*குறிப்பு:— 12 ஜோதிலிங்கங்களின் விவரம் இப்புத்தகம் 3வது பக்கத்தின் அடியிற்காண்க.

கட்டத்தருகில் இருக்கும் "இராமவிஜயம்" "ஹரிவிஜயம்" என்னும் அபூர்வ கிரந்தங்களின் ஆசிரியரான ஸ்ரீதாசஸ்வாமிகளின் சமாதியும், நகரேஸ்வர், த்ரியம்பகேஸ்வர், கோட்டேஸ்வர் (Koteshwar) ஆகிய மூர்த்திகளின் ஆலயங்களும் தரிசிக்கத் தக்கவை.

ஸ்ரீபாண்டுரங்கனுடைய கோவிலுக்குச் சற்றுமேற்கில் உள்ள ஓர் சிறு ஆலயத்தில் தம்பக்கத்தில் நிற்கும் இரக்குமா பாய் தேவியுடன் ஸ்ரீபாண்டுரங்கன் அடியார்கட்கு அருட்சேவை அளிக்கின்றார். இவ்விடத்தில் முற்காலத்தில் இரமாபாய் என்னும் ஓர் ஏழைவிதவை குடியிருந்துகொண்டு, நாடோறும் தவறாமல் நல்ல பரிசுத்தமான மோரிற் கரைத்த கோதுமை மாவை ஸ்ரீபாண்டுரங்கனுக்குக் கொண்டுபோய் நிவேதனம் செய்து வந்ததாகவும், ஆதிகாலத்தில் குசேலமுனிவரானவர் தம் தர்மபத்தினியான சுசீலாதேவியால் தயாரித்துக்கொடுக்கப்பட்ட அவலைத் தம் கிழிந்த பழைய கந்தையிற் கட்டிக் கொண்டுபோய்க் கொடுத்தபோது, எவ்வாறு கண்ணபிரான் அதிஆவலோடும் அளவுகடந்த அன்போடும் வாங்கி உண்டனரோ, அவ்வாறே இந்த விதவையால் அர்ப்பணஞ்செய்யப்பட்ட கோதுமைமாவை யும் பண்டரீநாதன் தமக்கு நிவேதனமாகும் பஞ்சாமிர்த போகான்னங்களைவிடப் பதின்மடங்கு உருசியுள்ளதாகக் கருதிப் புசித்து வந்தனர் என்றும், ஒருநாள் அவ்விதவை வயது முதிர்ச்சி யால் தள்ளாமை மேலிட்டு வழக்கம்போல் கோவிலுக்குப் போக முடியாமல் தன் வீட்டிலேயே தங்கிவிட்டதாகவும், அன்று அம்மோரிட்ட மா தமக்குக் கிட்டாமையால் மனம் வருந்தி, தம் பத்தினி சகிதமாகத் தாமே அவள் வீடுதேடிச் சென்று, அம் மாவை வாங்கியுண்டு, அவ்வீட்டிலேயே தங்கியிருந்ததாகவும் சொல்லப்படுகின்றது. இக்காரணம்பற்றியே அம்மூர்த்திக்கு "*தாக்காபிட்யாவிட்டோபா" என்னும் திருநாமம் வழங்குகின் றது.

ஆகவே ஸ்ரீபாண்டுரங்கனானவர் பக்தவத்ஸலராய்த் தம் பக்தகோடிகளின் சர்வாபீஷ்டங்களையும் சித்திபெறச்செய்தும்,

---

*குறிப்பு:— தாக்காபிட்யா விட்டோபா என்னும் மகாராஷ்டிர மொழிக்கு மோர்கலந்த மாவுண்ட விட்டோபா என்று பொருள்.

பல்வித லீலைகளை நடாத்தியும், எழுந்தருளியிராநின்ற இப் புண்ணிய க்ஷேத்திரத்தில் எங்குபார்க்கினும், எங்குபோயினும் ஆலயங்களே நிறைந்திருக்கின்றன.

முன்னொருகாலத்தில், வேதாந்த சூத்திரத்திற்கு வல்லபீயம் என்னும் வியாக்கியானம் செய்தவரான ஸ்ரீ வல்லபாசாரிய சுவாமிகள் தம் சீடர்கள் புடைசூழ ஸ்ரீ பாண்டுரங்கன் தரிசனத்திற்காக வந்ததாகவும், அச்சமயத்தில் சந்திரபாகாநதி அளவு கடந்த பிரவாகத்தோடு, இருகரையும் தெரியாமல் சமுத்திராகாரமாய் இருந்ததைக்கண்டு அதைக் கடக்கமுடியாமல் கீழ்க்கரையிலேயே தங்கியிருந்ததாகவும், அதையறிந்த பக்தர்கட்கெளியனான பண்டரிநாதன் தமது பக்தருடைய மனக்குறையை நீக்கக்கருதித் தாமே அவர்முன் எழுந்தருளி சேவைசாதித்ததாகவும் சொல்லப்படுகின்றது. அவரிருந்து பாண்டுரங்கனை தரிசித்த இடத்தில் ஒரு பெருங்கட்டிடம் இருப்பதோடு, அதில் அழகிய இராதாகிருஷ்ண விக்கிரகங்களும் இருக்கின்றன. அது யாத்திரைக்காரர்கள் தங்கியிருப்பதற்கு மிக்க வசதியான இடம். ஊருக்கு வருவதாயிருந்தால் ஆற்றைக் கடக்கவேண்டியதாக நேருவதால் அதில் அதிகமாக யாரும் தங்குவதில்லை. ஆனால் அக்கட்டிடம் பாண்டுரங்கன் சந்நிதிக்கு நேராக அமைந்திருப்பதால் அங்கிருந்தே பகவானை தரிசித்தல்கூடும்.

## அநாதபாலாசிரமம் (The Foundling Home).

இது ஒரு முனிசிபல் பட்டினம். இங்கு தாலூகா கச்சேரியும், சிவில் கிரிமினல் கோர்ட்டுகளும், போலீஸ் ஸ்டேஷனும், தந்தித் தபாலாபீசுகளும், முனிசிபல்வைத்தியசாலையும் இருக்கின்றன. இவைகளைத் தவிர, இவ்வூரில் அநாதப்பிள்ளைகளைப் போற்றும் இடம் (The orphanage) ஒன்றும், "அநாதபாலாசிரமம்" என்னும் பேருள்ள அநாதக் குழந்தைகளை எடுத்து வளர்க்கும் இடம் (The Foundling Home) ஒன்றும் இருக்கின்றது. இவைகளில் முதலாவது, தாய் தந்தையரும் போற்றுவாருமின்றி திக்கற்றிருக்கின்ற பிள்ளைகளையும், யாத்ரீகர்களோடு வந்து சிதறுண்டு தங்கிப்போகும் பிள்ளைகளையும், பிள்ளைகள் அதிகமாக விருந்து அவர்கள் எல்லோருக்கும் உணவளிக்கப் போதிய வருவாயின்றி வருந்துவோர் தாமாகவே யாத்திரை வருகிற

காரணத்தை முன்னிட்டுத் தம் பிள்ளைகளை அழைத்துவந்து இவ்வூரில் விட்டகன்றுவிடுவதால் பேணுவோரற்றுத் திரியும் பிள்ளைகளையும், ஒன்றுசேர்த்து வளர்க்கும் சாலை. இது போன்ற சாலைகள் (Orphanages) இவ்விந்தியாவில் அனேக பட்டினங் களில் இருக்கின்றனவெனத் தெரிகின்றது.

ஆனால் இரண்டாவது சொல்லப்பட்ட அநாதபாலாசிரமம் போன்ற ஆசிரமங்கள் (Institutions) வேறெங்கும் இருப்ப தாகத் தெரியவில்லை. இது தருமவைத்தியசாலை போன்ற ஒரு பெருங்கட்டிடம். இதில் அனேகம் செவிலித்தாய்மார்கள் (Nurses) இருக்கின்றனர். இதன் வாயிலுக்கருகில் ஓர் மறை வான இடத்தில் பண்டைக்காலத்தில் குடிபடைகள் தங்கள் தங்கள் குறைகளை அரசர்களுக்கு எளிதில் தெரிவித்துக்கொள் ளும்வண்ணம், அம்மன்னர்கள் வசிக்கும் அரண்மனைகளின் ஆசாரவாயில்களிற் கட்டித் தொங்கின ஆராய்ச்சிமணிகள் போன்ற ஓர் சிறுமணி தொங்குகின்றது. யாரேனும் அம்மணியிற் கட்டித்தொங்கும் கயிற்றைப் பிடித்திழுத்து அம்மணியை அசைத்தால் ஒரு பிரம்புத்தொட்டில் கீழே இறக்கப்படுகின்றது. யாவராயினும் ஒருவருக்கும் தெரியாமல் அதில் தங்கள் குழந் தையை வளர்த்திவிட்டுப் போய்விடலாம். குழந்தைக்குரியவர்கள் சென்றபின்பு அக்குழந்தையை விட்டுப்போனவர்கள் யார் என்று விசாரித்தறியாமலே, அதை எடுத்து ஆசிரமத்திற் சேர்த்துக் கொண்டு அதைத் தக்கபடி பரிபாலித்து வளர்த்துவருகின்றனர். இவ்வாறு பிறருக்குத் தெரியாமல் தங்கள் குழந்தைகளை விட்டுப் போவோர் பெரும்பாலும் காமவேதனையைச் சகிக்கமுடியாமல் கெட்டவழிகளிற் பிரவேசித்து கர்ப்பவதிகளாகிப் பிரசவிக்கும் விதவைகளே. குழந்தையற்றவர்கள் தாங்கள் இவ்வாசிரமத்தி னின்று பெறும் குழந்தைகளை ஓர் குறையுமின்றி வளர்க்கத் தகுந்த சக்தியுள்ளவர்கள் என்று இவ்வாசிரம அதிகாரிகளுக்குத் திருப்தியுண்டாகும்படித் தகுந்த அத்தாட்சி கொடுத்துத் தங்களு க்கு வேண்டிய குழந்தைகளை இதினின்றும் பெற்றுப் போகலாம்.

அனேக புண்ணிய நதிகளையும் தீர்த்தங்களையும், திவ்விய க்ஷேத்திரங்களையும் உடைத்தாய இப்பரதகண்டத்தின்கண் தங்கள் முற்பிறப்புகளிற் செய்த நல்வினைப்பயனாகப் பிறந்திருக் கும் நம்மிற் பலர், தம் பால்மணமாறாக் குழவிகளைக் கல்லினும்

கூடியமனத்தினராய்க் கடிமணம் செய்வித்தலும், அக்குழந்தைகள் அத்திருமணத்தின் நறுமணத்தை நுகராமுன்னரே தம் பதிகளையிழந்து கதியற்ற இளங்கைம்பெண்களாகிவிடுதலும், அக்கைம்பெண்கள் தக்க பருவமடைந்தபின்னர் நறுமலரொன்றும் சூடத்தகாதவர்களாயினும் இராமபாணத்தினும் கொடிய காமபாணமலர்களைச் சூடப்பெற்று, நரகவேதனையினும் கொடிய விரகவேதனைக்குள்ளாகி, அதைத் தாளவும், "மானங்கெடவரின் வாழாமை முன்னினிதே" என்னும் ஆன்றோர் மொழியின்படி மாளவும் இயலாமல், பிறகு தங்களுக்கு நேரும் மானக்கேட்டையும் உணராது, தகாதவழிகளில் இறங்கி கருப்பெறுதலும், அவ்வாறு பெற்ற கரு உருப்பெறுமுன் அதைப் பலவகையினும் சிதைக்கமுயலுதலும், "முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்" என்னும் ஆன்றோர் மொழி இவர்கள்பால்மட்டும் உண்மைப்பொருளிற் பயன்படாது சொல்லளவிற்பயன்பட்டு அவர்கள் மெய்யை வருத்திக் குழந்தைகளான கூலியைத்தருதலும், இறுதியில் தங்கள் உயிரையோ தங்கள் அருமந்த சிசுக்களின் உயிரையோ மாய்த்தலும், நாம் பலவிடங்களிலும் கண்டும் கேட்டும் இருக்கின்றோம். இத்தகைய கொடுமைகள் நேராதிருக்கும் பொருட்டே மேற்கூறிய அநாதபாலாசிரமம் இத்தலவாசிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதெனத் தெரிகிறது. மற்றுமுள்ள பெரும்பட்டினங்களிலும் நகரபரிபாலன சபையார்களாவது (The Municipal Councils), அரசாங்கத்தார்களாவது, ஆங்காங்குள்ள தர்மசிந்தனையுள்ள சீமான்களாவது, இவ்வரிய பெரிய செயலைப் பின்பற்றி இத்தகைய ஆசிரமங்களை ஸ்தாபித்தல் அவசியம் என்பது சொல்லாமலே விளங்கும்.

இக்கொடுமைகளைப் பார்த்தும் கேட்டும் இருக்கும் நம்மனோரிற் சிலர் தற்காலத்தில் அனுஷ்டானத்திற்கு வந்திருக்கும் பாலியவிவாகத் தடைச் சட்டத்தையும், இனி அமுலுக்கு வர இருக்கும் விதவாவிவாகச் சட்டத்தையும் மறுக்கப்புகுவதும், குறைகூறி நிந்திப்பதும் வியப்பினும் வியப்பே. அவர்கள் செய்யும் தூஷணைக்கு ஆதாரமாகச் சிலர் வேதசாஸ்திரங்களைப் படிக்கின்றனர். வேறுசிலர் ஒருவர் சூடின மலரைச் சூடுவாருண்டோ என்றும், ஒருவர் புசித்த பழத்தைப் புசிப்பாருண்டோ என்றும் கேலி செய்கின்றனர். வேதசாஸ்திரங்களை ஆதாரமாகக்கொள்ளும்

விப்பிரர்கள், நாதனற்ற அநாதைகளாய் அலக்கணுற்றிருக்கும் இவ்வபலைகள் விஷயத்தில் மட்டும் கனவிலும் கையாடுதலின்றித் துருப்பிடித்துக் கிடக்கும், வேதாஸ்திரங்களைப் பிரயோகம் செய்கின்றனரேதவிர, கடற்பிரயாணம், மதுபானம், புலாலுண்ணல், பரதாரகமனம், ஆதிதிராவிடர்கள் அழகாய்ப் பாகஞ்செய்து அளிக்கும் ஹோட்டல் (Hotel) சிற்றுண்டி கொள்ளல், பொய் பேசுதல், வாங்கின கடன் இல்லையெனல், நம்பிக்கை மோசம் செய்தல், களவாடல், பிறர் கையெழுத்திடல் (Forgery), ஏழைகட்கின்னுசெயல் முதலிய மகாபாதகங்களை மனந்துணிந்து செய்யும் ஆடவர்களிடம் பிரயோகிப்பதில்லை. ஒருக்கால் அப்படிப் பிரயோகிப்பினும், அவ்வஸ்திரங்கள் முனைமழுங்கி முறிந்து விழுந்து விடுகின்றன. அதிலும் மேற்சொல்லிய பாதகர்கள் பெருத்த சீமான்களாகவாவது உயர்ந்த உத்தியோகத்திலிருப்பவர்களாகவாவது இருந்திடின், அதே வேதசாஸ்திர விற்பன்னர்கள், அவர்கள்பால் சாஸ்திராஸ்திரங்கள் தொடுப்பதை விடுத்து, ஸ்தோத்திராஸ்திரங்களை எடுத்து மாலைகளாகச் சூட்டிவிடுகின்றனர்.

முற்காலத்தில் தம்மையும் தம்மைத் துணையாக அழைத்துச் சென்ற விஸ்வாமித்திர முனிவரையும், குரங்கு வாழைப்பழம் தின்பதுபோல் கொன்றுத் தின்று ஏப்பமிடும் எண்ணத்தோடு தம்முன் தோன்றி ஆரவாரம் செய்து நின்ற தாடகையென்னும் கொடிய அரக்கியானவள் "மேகமவையிற்றுகவிழித்து, புழுங்காமாகவரையற்றுகவுதைத்து, மதித்திண் பாகமெனு முற்றெயிற துக்கி, அயில்பற்று ஆகமுறவுய்த்தெறிவெனென்றெதிரழன்று" நின்று, தங்கள் "உயிர்க்கே துண்ணெனும் வினைத்தொழில் தொடங்கியுளளேனும்," அவளைக் கொன்று தீர்ப்பது அண்ணல் முனிவரது கருத்தெனினும்," ஸ்ரீ ராமபிரானாகிய பெருந்தகை அவ்வாக்கியைப் "பெண்ணென மனத்திடை நினைந்து," அவள் ஆவியை உண்ணென வடிக்கணை தொடுக்காதிருந்தனர் என்று தாங்களே மோட்சகாவியம் எனப் புகழும் இராமாயண வாயிலாய்த் தெரிந்திருந்தும், இவ்வேத சாஸ்திர பாரங்கதர்கள் தங்களுக்கு ஓர் தீங்கும் செய்யா ஏழைக் கைம்பெண்களிடத்து மட்டும் தங்கள் கூரிய பாணங்களை ஏன் தொடுக்கின்றனர் என்பது விளங்கவில்லை.

ஒவ்வோர் சட்டத்திற்கும் விலக்குண்டு (Every rule has an exception) என்னும் பொது விதிக்கிணங்க, வேதங்களையும் வேதாங்கங்களையும் முறைப்படி வகுத்தவரும் விஷ்ணுவம் சமானவருமான வேதவியாசரே, தன் புத்திரர்களுக்குப் புத்திரில்லாத காரணத்தால் தன் சந்ததி அழிந்துபோக நேரிட்டதே என்ற வருத்தங்கொண்டிருந்த தம் தாயின் ஆணையைத் தலைமேற்கொண்டு, விதவைகளான தம் சகோதரர்கள் சித்திராங்கதன் விசித்திரவீரியன் மனைவிகளான அம்பாலிகை அம்பிகை இவர்கள் இருவரையும் மணந்து, பாண்டு திருதராஷ்டிரன் என்னும் இரண்டு புத்திரர்களைப் பெற்று, சந்திரவம்சத்தை நிலைநாட்டினர் என்பதையும், அதற்கும் தேவரநியாயம் என்றோர் நியாயமிருப்பதாக சாஸ்திரங்கள் முறையிடுவதையும் தெரிந்திருந்தும், மறைந்து கிடக்கும் மறை மொழிகளை இக்கைம் பெண்கள் விஷயத்தில் மட்டும் அம்பலத்திற்குக் கொண்டுவருவது தர்மமாகாது.

அது போலவே பழம் மலர் இவைகளை உதகரிப்பவர்கள் விலையுயர்ந்த ஆபரணாதிகள், வீடுவாசல்கள், வாகனாதிகள் முதலியவைகளைப் பிறர் உபயோகித்தவை என்னும் காரணம்பற்றி வெறுத்து விலக்குவதில்லை. ஒருவர் அணிந்த மோதிரத்தை அணியாருண்டோ, ஒருவர் ஏறிய குதிரையில் ஏறுவாருண்டோ என்று தள்ளுவதில்லை. ஆனால் ஒருவர் உண்டதினால் எச்சிலாய் விடுகின்ற பழமும், ஒருவர் சூடுவதால் வாடிப்போகின்ற மலரும் அணிமணிகளுக்கும், வாகனங்களுக்கும் ஈடாகுமோ என்று வாதிக்க முன்வரினும், எச்சிலான பழங்களையும் வாடிப்போன மலர்களையும் மாத்திரம் ஒதுக்கலாகுமே தவிர, ஒருவர் கைப்பட்ட காரணத்தை முன்னிட்டே அப்பழம் தின்பதற்குரியதல்லவென்றும், ஒருவர் தம் கையால் தொட்டகாரணத்தால்மட்டும் மற்றவர் அம்மலரைச் சூடத்தகாதென்றும் சாதிப்பது பொருந்துமோ? தங்கள் கணவர்கள் இன்னார் என்றும், புருஷசுகம் இன்னதென்றும் அறியா இளங்கைம்பெண்களை (Virgin widows) மணப்பதை இகழ்வதற்கு இடமுண்டோ?

மேலும் வேறு சிலர் நம் இந்தியாவில் ஜனத்தொகைக் கணக்கின்படி (Census) ஆண்களைவிட பெண்கள் மிகுந்திருக்கின்றனர் என்றும், புருஷர்கள் விதவைகளை மறுமணம் புரிந்தால், திருமணமாகாமலே சில பெண்கள் சாமளவும் கன்னியா

கவே இருந்து சாம்படி நேரிடும் என்றும், ஒரு முறை மணந்து மறுமுறை மணக்க முடியாதிருப்பது கொடுமையாயின், ஒரு முறையேனும் மணக்க வியலாமற்போவது கொடுமையினும் கொடுமையன்றோ என்றும் கூறுகின்றனர். பெண்கள் அதிகமாயிருப்பது நம் நாட்டில் மட்டா இதர நாடுகளிலுமா என்பதையும், அந்நாடுகளில் ஸ்திரீகள் கலியாணத்திற்கென் செய்கின்றனர் என்பதையும் ஆய்ந்துணராது இத்தகைய வாதங்கூற முன்வருவது முறையன்று. தவிர, நாம் இக்கொடுங்கொள்கையை அனுஷ்டித்துக் கைம்பெண்களை ஒதுக்கிவைப்பதனுலேயே ஈஸ்வரசிருஷ்டியில் பெண்கள் அதிகமாகப் பிறக்கின்றார்கள் என்று நினைத்து, இக்கொடிய வழக்கத்தை மாற்றி ஸ்திரீகளும் நம்மைப்போல் ஈரைந்து மாதமிருந்து பிறந்தவர்களென மதித்து, நாம் மறுமணம் செய்து கொள்வதுபோல் அவர்களையும் மறுமணஞ்செய்து கொள்ள அநுமதித்தால், வேண்டுவார் வேண்டுவதை ஈவானாகிய எல்லாம்வல்ல இறைவன் நம்மீது கருணைகொண்டு தமது சிருஷ்டியைச் செவ்வனே நடாத்தி ஆண்களுக்குத் தகுந்த பெண்களை சிருஷ்டிப்பான் என்று நாம் ஏன் எதிர்பார்க்கலாகாது.

இவ்வூரைச் சுற்றிலும் நல்ல கரிசல் நிலமாகவும் கோதுமை, சோளம், கம்பு முதலிய புஞ்சை தானியங்களும் பருத்தியும் பயிரிடுவதற்கேற்ற நிலமாகவும் இருக்கின்றது. இப்பக்கங்களில் மழை காலாகாலங்களிற் பெய்யாததால் வேளாண்மை தடைப்படுகின்றது. இவ்வூரைச்சுற்றிலும் கருவேல்மரங்களே அதிகம். இதையறிந்தே பண்டரிபுரத்திற்கடுத்த ஸ்டேஷனுக்கு *பாபூல்காவ்ம் (Babulgaon) என்ற காரணப் பெயரிட்டிருக்கின்றனர் போலும். பூஸ்திதியிலும் அவ்வூரைச்சுற்றி கருவேல் மரங்களே நிறைந்திருக்கின்றன.

ஸ்ரீபாண்டுரங்கனுடைய தரிசனத்தோடு இப்புத்தகத்தின் முதற்பாகம் முடிவடைகின்றது

இளையகன் மான்மியத்தை யெழுதினோர் வியந்தோர் கற்றோர்
அனையது தன்னைச் சொல்வோர்க் கரும்பொருள் கொடுத்துக்
கனைகடற் புவியின் மீதே காவலர்க் கரசாய் வாழ்ந்து [கேட்போர்
வினையம தறுத்து மேலாம் விண்ணவன் பதத்தைச் சேர்வார்.

ஸ்ரீபாண்டுரங்கப்பரப்ரஹ்மணே நம:

சுபம்.

---

*குறிப்பு:—பாபூல்=கருவேல்மரம்; காவ்ம் (Gaon)=ஊர்.

# ஸ்தல விவர அட்டவணை.


| ஸ்தலங்களின் பெயர் | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அம்பலப்புழை | 63 |
| அம்பாசமுத்திரம் | 37 |
| அயோத்தி | 112 |
| அல்னாவர் | 141 |
| அவந்திகை | 112 |
| அழகர்கோவில் | 22 |
| அனந்தசயனம் | 55 |
| அனந்தாசனம் | 96 |
| அன்கோலா | 138 |
| **ஆ** | |
| ஆதியுடுப்பி | 108 |
| ஆராட்டுப்புழை | 78 |
| ஆரிதோடு | 97 |
| ஆரியன்காவு | 61 |
| ஆலந்தி | 197 |
| ஆலப்புழை | 61 |
| ஆல்வாய் | 72 |
| ஆழ்வார் திருநகரி | 34 |
| ஆனைமலை | 22 |
| **இ** | |
| இடைக்காடு | 83 |
| இராதாபுரம் | 49 |
| இராமநாதபுரம் | 17 |
| இராமேஸ்வரம் | 3 |
| **உ** | |
| உடுப்பி | 95 |
| உத்தரகோசமங்கை | 17 |
| உத்யாவரம் (உதயபுரம்) | 100 |
| உப்பிலியப்பன்கோவில் | 28 |
| உப்பூர் | 5 |
| **ஊ** | |
| ஊர்க்காடு | 38 |
| **எ** | |
| எட்டயபுரம் | 30 |
| எர்ணாகுளம் | 65 |
| **ஏ** | |
| ஏர்க்கே | 111 |

| ஸ்தலங்களின் பெயர் | பக்கம் | ஸ்தலங்களின் பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| **ஒ** | | கார்க்காலா | 94 |
| ஒடபாண்டேசுவரம் | 103 | காலடி | 73 |
| **ஓ** | | காவுமடம் | 111 |
| ஓங்காரம் | 156 | காளையார்கோவில் | 17 |
| ஓட்டப்பிடாரம் | 31 | கியாவில்நாக் | 144 |
| **க** | | கிஷ்கிந்தை | 142 |
| கடியாளி | 97 | கூஞ்சாறு | 100 |
| கட்டுதிலை | 110 | குணசேகரம் | 27 |
| கண்ணனூர் | 83 | குந்தாபுரம் | 121 |
| கண்ணுவதீர்த்தம் | 110 | கும்பாசி | 112 |
| கண்ணைப்பதி | 43 | குருந்த்வாட் | 147 |
| கதிரி | 88 | குருவாயூர் | 79 |
| கரவீரபுரம் | 150 | குன்றக்குடி | 32 |
| கரிவலம்வந்தநல்லூர் | 43 | கூடலூர் | 103 |
| கழுகுமலை | 29 | கூடல்மாணிக்கம் | 75 |
| கள்ளிக்கோட்டை | 82 | கோச்சி | 66 |
| கனர்ப்பாடு | 97 | கொடுங்கோளூர் | 71 |
| கன்னியாகுமரி | 50 | கொல்லம் | 59 |
| காசரகாடு | 86 | கோகர்ணம் | 121 |
| காசி | 51& 112 | கோக்காக் | 141 |
| காஞ்சீபுரம் | 112 | கோடியக்கரை | 52 |

| ஸ்தலங்களின் பெயர் | பக்கம் | ஸ்தலங்களின் பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| கோடிலிங்கபுரம் | 71 | சுவாமிமலை | 32 |
| கோடீஸ்வரம் | 112 | சுவீந்திரம் | 55 |
| கோட்டயம் | 70 | சேரன்மாதேவி | 37 |
| கோட்டைபுரம் | 70 | சோலை மலை | 22 |
| கோதண்டராமசுவாமி கோவில் | 11 | **த** | |
| கோலாப்பூர் | 150 | தங்கச்சிமடம் | 6 |
| கோவிற் பட்டி | 28 | தங்கசேரி | 60 |
| கோழிக்கோடு | 82 | தண்டதீர்த்தம் | 102 |
| கௌரி குண்டம் | 158 | தத்ரி | 120 |
| | | தர்ப்பை சயனம் | 12 |
| **ச** | | தலைக்காவேரி | 90 |
| சங்கர நயினார்கோவில் | 29 | தலைச்சேரி | 83 |
| சங்கரநாராயணம் | 112 | தளிப்பரம்பு | 86 |
| சத்தம் பரம்பா | 83 | தனுக்கோடி | 11 |
| சம்புசைலம் | 100 | தாக்கோர் (Dakhore) | 80, 112 |
| சாப்ஹல் (Chaphal) | 187 | தாங்கோடு | 97 |
| சாலக்கிராமம் | 44 | தார்வார் | 141 |
| சிக்கல் | 32 | தாணிக்கூடம் | 78 |
| சுசீந்திரம் | 55 | தான்தோன்றிமலை | 28 |
| சுப்பிரமணியம் | 92, 109 | திரிஜுகிநாராயணம் | 89, 158 |
| சுவர்ணகூடம் | 98 | திரியம்பகேஸ்வரம் | 146 |

| ஸ்தலங்களின் பெயர் | பக்கம் | ஸ்தலங்களின் பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| திருக்கடவூர் | 60 | திருத்தணிகை | 32 |
| திருக்கரிவலம்வந்தநல்லூர் | 43 | திருத்தண்காலூர் | 27 |
| திருக்களக்காடு | 37 | திருத்தொலை வில்லி மங்கலம் | 34 |
| திருக்காசிபேச்சுரம் | 37 | திருநெல்வேலி | 35 |
| திருக்காந்தீச்சுரம் | 34 | திருப்பணக்குடி | 49 |
| திருக்கானப்பேர் | 17 | திருப்பதி | 44 |
| திருக்குருகூர் | 34 | திருப்பரங்குன்றம் | 24 |
| திருக்குழந்தை | 34 | திருப்பாலக்குடி | 5 |
| திருக்குறுங்குடி | 45 | திருப்பாவநாசம் | 39 |
| திருக்குற்றாலம் | 40 | திருப்பிறையாறு | 73 |
| திருக்கேதாரம் | 158 | திருப்புத்தூர் | 26 |
| திருக்கைலாயபுரம் | 35 | திருப்புல்லாணி | 13 |
| திருக்கோடிக்குழகர் | 52 | திருப்புளிங்குடி | 34 |
| திருக்கோட்டியூர் | 17 | திருப்பூவணம்(திருபுவனம் | 17 |
| திருக்கோட்டீச்சுரம் | 38 | திருமங்கைபுரம் | 28 |
| திருக்கோளூர் | 34 | திருமயிலாடி | 32 |
| திருச்சம்பரம் | 86 | திருமாலிருஞ்சோலை | 32 |
| திருச்சூர் | 76 | திருமூலநகரம் | 88 |
| திருச்செந்தூர் | 31 | திருமெய்யம் | 17 |
| திருச்சேய்ஞலூர் | 131 | திருவஞ்சைக்களம் | 70 |
| திருச்சேரன்மாதேவி | 37 | திருவனந்தபுரம் | 55 |

| ஸ்தலங்களின் பெயர் | பக்கம் | ஸ்தலங்களின் பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| திருவள்ளியூர் | 49 | நத்தம் | 34 |
| திருவாடானை | 17 | நரஸோபாச்சிவாடி | 145 |
| திருவாய்ப்பாடி | 131 | நாங்கூனேரி | 43 |
| திருவாலவாய் | 18 | நாசிக் | 146 |
| திருவாவினன்குடி | 32 | நாராயணபுரி | 47 |
| திருவிஜயமாநகரம் | 47 | நிலம்பூர் | 83 |
| திருவிராதாபுரம் | 49 | நீலேசுவரம் | 86 |
| திருவேங்கடம் | 44 | நேரன்கே | 111 |
| திருவேந்திபுரம் | 28 | நைமிசாரணியம் | 44 |
| துவஜேஸ்வரம் | 112 | **ப** | |
| துவாரகை | 112, 80 | பகவதிபுரம் | 61 |
| தூத்சாகர் (Dudhsagar) | 141 | பஞ்சிம் | 143 |
| தூத்துக்குடி | 31 | பசுமலை | 22 |
| தென்காசி | 40 | பணக்குடி | 49 |
| தென்திருப்பேரை | 34 | பண்டரிபுரம் | 203 |
| தேவநகரம் | 200 | பதரியாசிரமம் | 44 |
| தேவி பட்டினம் | 5 | பத்ராசலம் | 186 |
| தேஹூ (Dehu) | 199 | பரேல் | 187 |
| தோத்தாத்திரி | 43 | பல்ப | 111 |
| **ந** | | பழமுதிர்சோலை | 23 |
| நட்டந்தாடி | 109 | பறியாமருந்துப்பட்டி | 43 |

| ஸ்தலங்களின் பெயர் | பக்கம் | ஸ்தலங்களின் பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| பாஞ்சாலங்குறிச்சி | 31 | மங்களூர் | 87 |
| பாஞ்ச்கனி | 190 | மண்டபம் | 6 |
| பாம்பன் | 6 | மதுரா (Muttra) | 112 |
| பாவநாசம் | 39 | மதுரை (Madura) | 18 |
| பாளையங்கோட்டை | 36 | மத்தன்சேரி | 66 |
| பாஜகக்ஷேத்திரம் | 101 | மத்யவாட | 109 |
| பிரம கபாலம் | 131 | மயிலம் | 32 |
| பிரமபுரி | 47 | மலையாட்டூர் | 75 |
| புட்கரம் | 44 | மல்பி | 103, 120 |
| புதுப்பாடி | 83 | மாங்கோடு | 97 |
| புத்தூரு | 97 | மாஞ்சேரி | 83 |
| புனலூர் | 61 | மாயை | 112 |
| புஷ்பகிரி (புஷ்பக்குன்று) | 79 | மாரியம்மன்கோவில் | 92 |
| பூஜபட்டினம் | 193 | மார்மகோவா | 143 |
| பேரக்கபாத் (Ferokka-bad) | 83 | முச்சில்கோடு | 97 |
| பெராக் (Ferok) | 83 | முண்டன்றுறை | 40 |
| பெருங்குளம் | 34 | மூகாம்பி | 112, 121 |
| பைலூரு (Biluru) | 97 | மூடுபதிரி | 94 |
| **ம** | | மூலங்கடவு | 60 |
| | | மூவாற்றுப்புழை | 73 |
| மகாபலேசுவரம் | 190 | மேப்பாடி | 83 |

| ஸ்தலங்களின் பெயர் | பக்கம் | ஸ்தலங்களின் பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| மேலப்பாளையம் | 38 | **ஸ** | |
| **ய** | | ஸஜ்ஜன்கட் | 185 |
| யூதநகரம் | 66 | ஸாத்தாரா | 183 |
| **ர** | | **ஷ** | |
| ரூப்யபீடம் | 96 | ஷிமோகா | 141 |
| **வ** | | ஷிரோல் | 145 |
| வரகுணமங்கை | 34 | **ஜ** | |
| வழூவூர் | 94 | ஜனார்த்தனம் | 58 |
| வள்ளியூர் | 49 | ஜாம்ப | 187 |
| வாடி நரஸிம்ஹ | 145 | ஜேஜூரி | 191 |
| வானமாமலை | 43 | ஜோதிபாமலை | 175 |
| விமானகிரி | 100 | **ஸ்ரீ** | |
| விருதுநகர் | 26 | ஸ்ரீமுஷ்ணம் | 44 |
| விளாத்திகுளம் | 30 | ஸ்ரீரங்கம் | 44 |
| விஜயநாராயணம் | 47 | ஸ்ரீவரமங்கை | 43 |
| வீராகவபுரம் | 36 | ஸ்ரீவில்லிபுத்தூர் | 27 |
| வைக்கம் | 64 | ஸ்ரீவைகுண்டம் | 34 |
| **ஹ** | | | |
| ஹம்பி (Hampi) | 142 | | |
| ஹூப்ளி | 138 | | |


TANJO

பாரதி பிரஸ், மன்னார்குடி.